பெருங்காப்பியச் சிற்றிலக்கியப்

பெருந்தமிழ்

(மூன்றாம் பொதுநிலைப் பத்துநாள்
கருத்தாய்வரங்கக் கட்டுரைகள்)

பொதுப் பதிப்பாசிரியர் :
பேராசிரியர், டாக்டர் ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப்.மானிடவியல், அரசியல் & ஆட்சியியல்.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி :
தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1975

பெருங்காப்பியச் சிற்றிலக்கியப்

பெருந்தமிழ்

(மூன்றாம் பொதுநிலைப் பத்துநாள் கருத்தாய்வரங்கக் கட்டுரைகள்)

பொதுப் பதிப்பாசிரியர் :
பேராசிரியர், டாக்டர் ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம் லிட்., பிஎச்.டி.,
டிப்.மானிடவியல், அரசியல் & ஆட்சியியல்.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி :

தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1975

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
வெளியீடு : 37.

முதற் பதிப்பு—சனவரி 1975.

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 17/-

இரத்தினம் அச்சகம்,
சென்னை-1.

PERUNTHAMIZH

(The Third Ten Days' Seminar Papers)

General Editor :

Dr. N. SANJEEVI, M.A., M. Litt., Ph.D.,

Dip. in Anth., & Pol. and Pub. Admn.,

Professor and Head of the Department of Tamil,

University of Madras.

UNIVERSITY OF MADRAS

1975

Madras University Tamil Department
Publication—37
First Edition—Jan. 1975.

© University of Madras.

Price: Rs. 17/-

Rathnam Press, Madras-1.

துணைவேந்தரின் அணிந்துரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினரால் 1972-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற 'பத்துநாள் பொதுநிலைக் கருத்தரங்கு' என்ற வரிசையில் மூன்றாவது கருத்தரங்கு 'பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்' என்ற தலைப்பில் 1974-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

இத் தொகுப்பில் 'புவியினுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து' நிற்கும் காப்பியத்தைத் தந்த கம்பரும், 'கோவையுலா அந்தாதிக்கு'ப் பெயர் பெற்ற ஒட்டக்கூத்தரும், பரணிக்கோர் புலவராம் சயங்கொண்டாரும், 'பல்கலைக் குரிசில்' பவணந்தியாரும், தேம்பாவணி தந்த வீரமாமுனிவரும், செந்தமிழ்ப் பனுவலாம் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவரும் உலாவருகின்றனர். சித்தர்களைப் பற்றியும் தமிழிசை நாடக வரலாறு பற்றியும் நடைபெற்ற ஆய்வுகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

இக் கருத்தரங்கிலும் ஆசிரியப் பெருமக்கள், ஆராய்ச்சி மாணவர்கள், அறிஞர்கள் பலரும் நம் தமிழ் இலக்கியங்களை அகழ்ந்து, ஆய்ந்து, புதுக்கோணங்களில் அவற்றின் கருத்துகளை எடுத்தியம்பி விவாதித்திருக்கின்றனர்; விளக்கம் கண்டிருக்கின்றனர். எப்பொருளை யார் யார் வாய்க் கேட்டாலும் அப்பொருளின்கண் பொதிந்துள்ள மெய்ப் பொருளைக் காணல் வேண்டும் என்னும் தமிழர் மரபையொட்டியே இத் தகைய கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன. படிப்போர் உள்ளத்தில் இந்நூலில் கூறப்பட்ட கருத்துகளுக்கு மாறாக வேறு கருத்துகள் எழுந்தாலும் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு அவை துணை புரிவன என்ற அளவில் அவையும் வரவேற்கத் தக்கவையே. தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்றவை நம் தமிழ் இலக்கியங்கள். அவற்றை மேலும் மேலும் தோண்டினால் புதுநீர் சுரக்கும்; இன்பம் பயக்கும். ஒவ்வொருவரும் தம் அறிவேற நோக்கிச் சிந்திக்கத் தூண்டுவதே இத் தகைய கருத்தரங்குகளின் குறிக்கோள். இதனை நிறைவேற்றி வருகிறது பல்கலைக்கழகத் தமிழ்த்துறை.

இந்நூலை உருவாக்கித் தமிழுக்குக் காலத்திற்கேற்ற புதியதோர் அணியை அணிவிப்பதில் பங்குபெற்ற தமிழ்த்துறை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் என் பாராட்டுக்கு உரியவர்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம்
20—1—75.

(ஒ-ம்) நெ. து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர்

பொருளடக்கம்

1. கம்பன் — 1
—திரு. கு. இராசவேலு

2. வில்லிபுத்தூரர் — 24
—டாக்டர் மு. கோவிந்தசாமி

3. ஒட்டக்கூத்தர் — 47
—டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

4. சயங்கொண்டார் — 107
—திரு. க. ப. அறவாணன்

5. சித்தர்கள் — 127
—திரு. இரா. மாணிக்கவாசகம்

6. பவணந்தியார் — 170
—பேராசிரியர் மா. நன்னன்

7. நிகண்டுகள் — 190
—பண்டித வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி

8. தமிழ்இசை–நாடக வரலாறு — 229
—டாக்டர் இரா. குமரவேலன்

9. வீரமாமுனிவர் — 295
—டாக்டர் வி. மீ. ஞானப்பிரகாசம்

10. உமறுப் புலவர் — 314
—பேராசிரியர் சி. நயினார் முகம்மது

இணைப்புகள்:—

ஒன்று: வினாவிடைகள் — 351

இரண்டு: கருத்தரங்க விவரக் குறிப்பு — 433

மூன்று: தலைமையுரை — 439

நான்கு: சிறப்புக் குறிப்புரைகள் — 441

ஐந்து: கருத்தரங்கத் தலைவர்களின் தன் வரலாற்றுக் குறிப்புரைகள் — 463

ஆறு: கருத்தரங்கக் கட்டுரையாளர்களின் தன் வாழ்க்கைக் குறிப்புகள் — 472

வாழ்த்துகள்

GOVERNMENT OF TAMILNADU

TRUTH ALONE TRIUMPHS

RAJ BHAVAN
Madras-22,
5th February 1974.

MESSAGE

I offer my best wishes for the success of the 3rd Podhunilai Seminar under the auspices of the Department of Tamil of the University of Madras.

(Sd.)
K. K. SHAH
Governor of Tamil Nadu.

Dr. Rajah Sir Muthiah Chettiar
of CHETTINAD

Chettinad House
Raja Annamalaipuram,
MADRAS-28.

6-2-1974

தமிழ்த்துறை,
சென்னைப்பல்கலைக்கழகம்,
சென்னை-5.

அன்புடையீர்,

சென்னைப் பல்கலைக்கழகம் நூற்றாண்டு விழாக் கட்டடத்தில் 9-2-74 முதல் 18-2-74 வரை நடக்கவிருக்கும் பத்துநாள் கருத்தரங்கு அழைப்பு கிடைத்தது. நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அவ்வப்போது இது போன்று கருத்தரங்குகள் நடாத்தி வருவதை நான் மிகவும் பாராட்டுகின்றேன். தமிழ் பலதுறைகளில் பரவவும், பெரும்புலவர்கள், பேராசிரியர்கள் கவிஞர்கள் ஒன்றுகூடித் தங்கள், தங்கள் கருத்துகளை வெளிப்படையாய்த் தெரிவிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மதிப்பிற்குரிய தாமரைத்திரு. சுந்தரவடிவேலு அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி நூல் வெளியிடவிருக்கும் தொடக்கவிழாவும் கருத்தரங்குகளும் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒ-ம்) மு. அ. முத்தையா செட்டியார்.

மதுரைப் பல்கலைக்கழகம்

மு. வரதராசன்
துணைவேந்தர்

பல்கலைநகர்,
பல்கலைக்கழகக் கட்டடம்
மதுரை-21.
6—2—1974.

அன்புடையீர்,

இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள் குறித்து நடைபெறும் கருத்தரங்கு பயனுள்ளதாகும். கருத்தரங்கு வெற்றி பெறுக என நல்வாழ்த்து கூறுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒ-ம்)........................
(மு. வரதராசன்)

டாக்டர் ந. சஞ்சீவி,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை—5.

திருவருள் திரு
தெய்வசிகாமணி அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி.

இராமநாதபுரம் மாவட்டம்
நாள் : 21—2—1974

அன்பிற் சிறந்த நமது டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் மூன்றாவது பொதுநிலைப் பத்து நாள் கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

இக் கருத்தரங்கம் மிக்க பயனுள்ள வகையில் அமைக்கப் பெற்றுள்ளது. ஏற்றுக்கொண்ட பொருளைத் துறையும் முறையும் தெரிந்து நுட்பத்துடன் விளக்கும் ஆற்றல் படைத்தவர்கள் கட்டுரையாளர்கள். தலைமை வகிப்போரும், வரவேற்பாளர்களும் கட்டுரையாளர் தம் கருத்துக்களை எடுத்தும், தொடுத்தும் விளக்கிக் காட்டும் அறிவுநலம் சான்றவர்கள். இந்தக் கருத்தரங்கு தமிழ்மொழிக்கு அணிசேர்க்கும் கருத்தரங்கு என்பதில் ஐயமின்று.

கருத்தரங்கை உருவாக்கிய தமிழ்த்துறையினருக்கும், இதனை ஊக்குவிக்கின்ற பல்கலைக்கழகத்தினருக்கும் உளம் நிறைந்த நன்றி; பாராட்டு.

கருத்தரங்கு இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

(ஓ-ம்)................

(அடிகளார்)

பெறுநர் :

‘நூலறிபுலவர்’ டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

திருவள்ளுவர் மடம்

(திருக்குறள் பீடம்)

குருகுலம்,
மதுராந்தகம்,
4—2—74.

திருவருள்!

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு அறிவிப்புக் கிடைத்து உள்ளம் ஊக்கமுற்றது. தக்கோர் கலந்துகொள்வது மகிழ்வு! பத்து நாட்கள் இனிய தமிழ் விருந்து; பத்து நூற்றாண்டுகளின் காட்சி! நல்ல திட்டம்; சிறந்த நடை முறை; தங்கள் நற்றொண்டுடன் வெல்க!

உற்று நோக்குவோம், ஒப்பு நோக்குவோம், ஆய்வு செய்வோம்!

அன்புள்ள,

(ஒ-ம்) அழகரடிகள்.

சென்னைப் பல்கலைக்கழகத்
தமிழ்த்துறைத் தலைவரவர்கள்,
சென்னை.

G. R. DAMODARAN COIMBATORE 641004
B.Sc. (Engg), C. Engg., FIEE (Lond.),
FI Nuc E (Lond.), FIE (India)

DATE: பிப்ரவரி 5, 1974.

அன்புமிகு பேராசிரியர் டாக்டர் திரு. ந. சஞ்சீவி அவர்கட்கு,

வணக்கம். கருத்தரங்கு அழைப்பிதழ் பெற்றேன். மகிழ்ச்சி. நன்றி. நம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, கற்று ஆய்ந்த அறிஞர்களைக் கொண்டு நடத்திவரும் பொதுநிலைக் கருத்தரங்குகள் பலர்க்கும் பயன்படும் வகையில் அமையுமாக! நம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் வெளியிடும் நூல்கள் நல்ல கருத்துக்களை நாட்டுக்கு நல்குவனவாகுக!

தமிழ்த்துறையினரின் நல்ல முயற்சிகள் வளர்வதாக! வணக்கம்.

அன்புள்ள,

(ஒ-ம்) ஜி. ஆர். தாமோதரன்.

பெறுநர்:

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600005.

N. MAHALINGAM, B.SC., M.I.E. *"SAKTHI NILAYAM"*
49, St. Mary's Road,
MADRAS-18.
12—2—74

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அன்போடனுப்பிய கருத்தரங்க அழைப்பிதழ் வரப்பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தேன். பல்கலைக்கழகத் தமிழ்த் துறை கருத்தரங்குகளை அருமையாக நடத்தி நூல் வெளியீடுகளைச் செய்து வருவது நல்ல பணியாகும். சங்ககாலத் தமிழ் போலவே இடைக்காலத் தமிழின் இயல்புகளை அறிந்து போற்ற இவ்வாராய்ச்சிகள் பெருந்துணை செய்யுமென நம்புகிறேன். கருத்தரங்கம் இனிது நிறைவேற என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

(ஒ-ம்) **நா. மகாலிங்கம்.**

டாக்டர் திரு. ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

தலைவர்,
தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600005.

Dr. Sp. SHANMUGANATHAN,
B. Sc. (Hons.), M.Sc., Ph. D., F. I. C. S.,
PRINCIPAL
PACHAIYAPPA'S COLLEGE,
MADRAS-600030
Date: 8-2-1974.

பேரன்புள்ள டாக்டர் சஞ்சீவி,

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நடத்தும் மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு விழா அழைப்பிற்கு மிக்க நன்றி. இவ் மூன்றாவது பொதுநிலைப்பத்துநாள் கருத்தரங்கு விழா இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவனை மனம், மெய், மொழிகளால் வேண்டுகின்றேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒ-ம்) **சுப. சண்முகநாதன்**

பெறுநர் :
டாக்டர் ந. சஞ்சீவி
பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600005.

Sri Avinashilingam Home Science College for Women

Tmt. RAJAMMAL P. DEVADAS
M.A., M.Sc., Ph.D. (Ohio State)
PRINCIPAL

Sri Avinashilingam Home
Science College P.O.,
COIMBATORE-641011.

பேராசிரியர் திரு. ந. சஞ்சீவி, எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

பேரன்புடையீர்,

வணக்கம். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க நன்றி.

இடைக்காலத் தமிழின் இலக்கிய, இலக்கண இயல்புகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு, இன்றைய தேவைக்கு விருந்தாக அமையுமென்ற நம்பிக்கையுடையேன்.

பழமைப் பொலிவும், செழிப்பும் கண்டு பெருமகிழ்வு கொண்டு ஏந்திப் புகழும் அதே போழ்தில், இந்நாளைய நமது படைப்புக்கள் எந்நாளும் நின்று நிலவிப் புகழ் கொண்டாடும் வகையில் அமைந்துசிறக்க எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அன்புள்ள,

(ஒ-ம்) இராசம்மாள் பா. தேவதாஸ்

N. KANDASWAMY PILLAI

Palliagraharam,
THANJAVUR-3. Date : 7th Feb. 74.

My dear Professor Dr. Sanjeevi,

I thank you for your kind invitation for the Seminar. I am very happy the Tamil Department under your Head and leadership is making very good progress and heartily congratulate you.

Yours sincerely,
(Sd.) (N. KANDASWAMY)

BOOK PRODUCTION SCHEME (U. G. C. FINANCED)
DIALECT SURVEY DEPT. OF LINGUISTICS
UNIVERSITY OF KERALA

PRINCIPAL INVESTIGATOR :
Prof. V. I. SUBRAMANIAM.

KARIYAVATTAM P.O.
TRIVANDRUM
S. INDIA
6-2-1974.

அன்புமிகு நண்ப,

தங்கள் மூன்றாவது கருத்தரங்கிற்குரிய அழைப்பு.

கலியாண விடு போல் பல நல்ல நிகழ்ச்சிகளுக்குரிய கலைக் கழகமாகத் தமிழ்த்துறை திகழ்க.

இங்ஙனம்
அன்பன்
(ஒ-ம்) வி. ஐ. சுப்பிரமணியம்

To,
Prof. N. SANJIVI,
Head of the Dept. of Tamil,
Madras University,
Chepauk,
Madras-5.

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

C. I. T. Campus, Adyar, Madras-600020

பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்

முதன்மை அலுவல் ஆட்சியர்,

அன்புநிறை டாக்டர் சஞ்சீவி அவர்களுக்கு,

வணக்கம். மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு குறித்து அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. நன்றி.

இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகளை ஆராய்ந்து பிழிவை மக்களுக்கு அச்சில் தர இருப்பது மிகப் பயனுடைய தாகும். இந்த நல்ல நாளில் முன்னைய கருத்தரங்குகளில் ஆராயப்பட்ட செய்திகள் அச்சு வடிவில் பலருக்கும் பயன்படுமாறு வெளியிடுவது மேனமேலும் உண்மைகளைக் காண வழிகோலும் என்று நம்புகிறேன்.

கருத்தரங்கு சிறப்பாக நடைபெற என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

(ஒ-ம்) கா. மீனாட்சிசுந்தரம்

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

Dr. S. V. SUBRAMANIAN, M.A., Ph. D.

READER AND HEAD OF THE DEPARTMENT
OF TAMIL, UNIVERSITY OF KERALA.

KARIYAVATTAM P.O.
TRIVANDRUM
6-2-1974.

பெறுநர்,

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

பேரன்புடையீர்,

வணக்கம்.

மூன்றாவது பொதுநிலைக் கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைத்து மகிழ்ந்தேன்.

தங்கள் தமிழ்த்தொண்டு மேன்மேலும் வளர இறையை வேண்டுகிறேன்.

அன்பன்,

(ஒ-ம்) ச. வே. சுப்பிரமணியன்

நாமக்கல்,

4-2-74.

பு. பா. இராச இராசேசுவரி, எம்.ஏ., எம். லிட்.,

முதல்வர், க. க. அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,

நாமக்கல்.

அன்புள்ள பேராசிரியர் அவர்கட்கு,

வணக்கம். நலம். நலன் விழைவு. தாங்கள் நடத்தும் 3-வது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு அழைப்பிதழ் பெற்றேன். பல நல்ல அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பல்வேறு இலக்கண இலக்கியங்களைப் பற்றி ஆராய்வது மகிழ்வதற்குரியது. இதுபோன்ற கருத்தரங்குகளால் மாணவச் சமுதாயம் பயன் பெறும் என்ற நம்பிக்கை பெரிதும் உடையேன்.

கருத்தரங்கு சிறக்க என் வாழ்த்துக்கள்.

இங்ஙனம்,

(ஒ-ம்) பு. பா. இராச இராசேசுவரி

டாக்டர் ந.சஞ்சீவி எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர் — தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

கருத்தரங்கக் கட்டுரைகள்

1

கம்பன்

திரு. கு. இராசவேலு

எண்ணத்தின் இசைவடிவமே கவிதை என்று அழைக்கப்படுகிறது. அது மொழி என்னும் இசையின் வாயிலாக மற்றவர்களுக்கு இசைக்கப்படுகிறது. 'சாட்ஃபீல்டு' (Chatfield) என்னும் அறிஞன் கவிதைக்கு இவ்வாறு இலக்கணம் கூறியுள்ளான். ஆண்ட்ரி என்னும் மற்றொரு அறிஞன் 'துன்பமெனும் காரிகையின் உடன் பிறந்தவளே கவிதை' என்று சாற்றியுள்ளான். இப்புலவர்களின் சொற்களுக் கிணங்க எல்லாக் கவிதைகளும், காவியங்களும், பெருங்காவியங்களும் அமைந்துள்ளன.

மிக உயர்ந்த கவிதை — மாபெரும் காவியம் என்று 'ஹோமர் எழுதிய இலியட்டை மேனுட்டுத் திறனாய்வாளர்கள் பெரிதும் போற்றிப் புகழுகின்றனர். இதற்கு அடுத்தபடியாக வர்ஜில், மில்டன், தாந்தே முதலிய புலவர்கள் புனைந்துள்ள காப்பியங்களைச் சிறப்பித்துப் பேசுகின்றனர். இடைக்காலத்தில் தோன்றிய 'ஷேக்ஸ்பியர்' தம்முடைய ஒப்பற்ற நாடகங்களின் மூலம் 'உலகப் பெருங் கவி' என்ற புகழை ஈட்டியுள்ளான். ஹோமரைப் பற்றிப் பேசும் போது, அவனைக் 'கவிஞர்களின் அரசன்' (Prince of poets) என்று கூறும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகிறது.

ஹோமரின் காவியங்களை மொழிபெயர்த்த 'ஜார்ஜ் சேப்மன்' எல்லாவித நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஹோமரின் நூல்கள்தான முதலும் முதன்மையும் வாய்ந்தவை (Of all books extent in all kinds, Homer is the first and best) என்று கூறுகிறான். அவன், இன்னும் ஒரு படி மேலே சென்று "எல்லாக் கலைகளும் ஹோமரின் வாயிலாகவே உய்த்து உணர்வதாய் உள்ளது, உறுதிப்படுத்துவதாய் உள்ளது, விளக்கம் கொடுப்பதாயும் அமைந்துள்ளது" என்று கூறுகிறான். மொத்தத்தில் கலைகளுக்கு நாம் கொடுக்கும் சிறப்பை ஹோமர் என்னும் பெருங்கவிஞனுக்கு மேலை நாட்டினர் கொடுக்கின்றனர். சிற்சில நாடுகளில் ஹோமரைத் தெய்வத்தோடு ஒருங்கு வைத்தும் வழிபடுகின்றனர்.

ஹோமரின் மகா காவியத்தை 'சார்ஜ் சேப்மன்' மிக இனிமையாக மொழிபெயர்த்துள்ளான். அவனுடைய மொழிபெயர்ப்பையும் ஆங்கிலேயர்கள் மூலநூலைப் பாராட்டுவது போன்றே சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

"Thou Ghost of Homer, 't were no fault to call
His the translation, thine the original,
Did we now know 't was done by thee so well
Thou makest Homer Homer's self excel"

என்ற ஷெப்பர்டு என்னும் அறிஞன் சேப்மெனின் மொழிபெயர்ப்பு நூலையே மூலநூலாக்கிப் பரவசமடைகிருன்.

இவ்வாறே எழிலாடும் நாடகங்களை இயற்றியுள்ள ஷேக்ஸ்பியரின பெருமையும் பேசப்படுகிறது.

"Indian empire will go, at any rate some day,
but this Shakespeare does not go,
he lasts for ever with us;
we cannot give up Shakespeare".

"இந்திய சாம்ராஜ்யம் என்ருவது ஒருநாள் நம்மிடமிருந்து சென்றுவிடும். ஆனுல், இந்த ஷேக்ஸ்பியர் நம்மைவிட்டுச் செல்லான். நம்மோடு அவன் என்றும் சிரஞ்சீவியாய் நிற்பான். நாம் அவனை இழக்க முடியாது" என்று கார்லைல் ஷேக்ஸ்பியரைச் சிறப்பித்துள்ளான். ஆங்கிலேயர்களின் சாம்ராஜ்யத்திலிருந்து அவர்களுடைய வாழ்வுக்கு வளமூட்டிய இந்தியாவை இழப்பினும் ஷேக்ஸ்பியரை இழககமாட்டோம் என்று பெருமிதத்தோடு கூறும் அவன் சொற்கள் நம்முடைய சிந்தனையைத் திறககும் திறவுகோலாக உள்ளது. மேலை நாட்டினர் எவ்வாறு தங்களுடைய பெரும் புலவர்களை வானளாவும் அளவிற்குப் போற்றிப் புகழுகின்றனர் என்னும் உண்மையை இவற்ருல் நாம் நன்கு அறியலாம்.

பெருங்காப்பியம் என்று பேசும்போது அதற்கான பொருள் எங்கிருந்தோ கவிஞரின் கற்பனையில் கதுமெனத் தோன்றி, காவியமாய் மலர்நது விரிகிறது என்று யாரும் எண்ண வேண்டாம். பெருங்காப்பியத்திற்கு வேண்டிய கருப்பொருள் அவனுடைய சமுதாயத்திலேயே நடமாடிக் கொண்டிருக்கும். மக்களின் உரையாடல்களிலே அது உயிரோடு உலவிக் கொண்டிருக்கும். புலவன் அதை உணர்ந்து அப்பொருளைப் பெருங்காப்பியமாக உருவாக்குகிருன்.

காப்பியங்களை வரலாற்றுக் காப்பியம் (Authentic epic) என்றும் இலக்கியக் காப்பியம் (Literary epic) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று 'Abercrombie' என்னும் அறிஞன் கூறியுள்ளான். இவை இரண்டில் மிக உயர்ந்தது எது? மிகத் தாழ்ந்தது எது? என்று சொல்ல முடியாது. காப்பியத்தைச் சமைக்கும் கவிஞனின் திறமையைப் பொறுத்தும், அவனுடைய கற்பனை வளத்திற்கு ஏற்பவும், அவன் கையாளும் காவியப் பொருளின் திண்மையை ஒத்தும் ஒரு காப்பியத்திற்கு உயர்வும் தாழ்வும் கற்பிக்கப்படுகின்றன.

ஹோமரின் இலியட், ஒடிசி, வால்மீகியின் இராமாயணம் இவை வரலாற்றுக் காப்பியங்கள். வர்ஜில் எழுதிய ஈனிட், மில்டனின் இழந்த சொர்க்கம், மீண்ட சொர்க்கம், கம்பனின் இராமாயணம் முதலியவை இலக்கியக் காப்பியங்கள் என்று சொல்லப்படுகின்றன. வரலாற்றுக் காப்பியம் பாடும்போது, புலவன், அவன் காலத்தே உள்ள சமுதாயப் பழக்க வழக்கங்களை உள்ளவாறே சுவைபடச் சொல்லிப் போவான். வரலாற்றுக் காப்பிய ஆசிரியன், அவன் காலத்தில் நடந்த வரலாற்றைத் தன்னுடைய கவிதைக்கு ஏற்ற பொருளாகவும் தேர்ந்தெடுக்கலாம் அல்லது ஒரு வரலாற்று நிகழ்ச்சி உயிரோடு மக்களிடையே நிலவுகின்ற காலத்தில் அவன் வாழ்ந்தவனாகவும் இருக்கலாம்.

வரலாற்றுக் காப்பியம் முதன் முதலாக எழுதப்படுவது இல்லை. அது செவி வழியாக இசைக்கப்பட்டுக் கேட்கப்படுகிறது. அப்பால் அது எழுதப்படுகிறது. வால்மீகி இராமாயணமும் ஹோமரின் இலியடும், சங்க இலக்கியப் பாடல்களும் இவ்வரிசையைச் சார்ந்தவை. இதிலே கூறியது கூறல் குற்றம் இல்லை. ஆனால் இலக்கியக் காப்பியம் எழுதப்படுவது இங்கே கூறியது கூறல் குற்றமாகும். பலர் நினைப்பதைப் போன்று பொற்காலம் பெருங்காப்பியத்தை ஈன்றெடுக்கும் தாயாக இருக்க முடியாது. பொற்காலத்தின் ஒளி குன்றியபோதுதான் பழைய காலத்தை நினைவுகூரும் வகையில், பெருங்காப்பியங்கள் தோன்றும் என்று 'பௌரா' என்னும் பேரறிஞன் கூறியுள்ளான்.

குடியாட்சிக் காலத்தில் பெரும்பாலும் பெருங்காப்பியம் தோன்றுவது இல்லை. இங்கே அனைவரும் சமம். உயர்வு தாழ்வு இல்லை. எல்லோரும் இங்கே மன்னர்கள். எனவே தலைவன் இல்லை, பெரு வீரன் இல்லை. அதனால் வீர வழிபாடும் இல்லை. வீரம்

செறிந்த காலத்தில்தான் பெருங்காப்பியம் பூத்து, மலர்ந்து மணம் வீசும். ஆனால், எல்லா விதிகளுக்கும் ஒரு விலக்கு இருப்பதைப் போன்று இதற்கும் விலக்கு உண்டு. ஜேம்ஸ் ஜாய்ஸ் (James Joyce) எழுதிய யுலிசிஸ், காசன் சாக்கி (Kazan Saki) எழுதிய யுலிசிஸ்-எ-சீக்வெல் (Ulysis a sequal) முதலிய பெருங்காப்பியங்கள் குடியாட்சிக் காலத்தில் தோன்றியவை. நம்முடைய நாட்டு அறிஞர்கள், அரவிந்தர் எழுதிய சாவித்திரியையும் இவ்வகையிலே சேர்ப்பார்கள்.

ஹோமரின் காப்பியங்கள் வெறும் சினத்தையும் காதலையுமே பாடுகின்றன. ஆனால், நம்நாட்டுப் பெருங்காப்பியங்களோ ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. பெருங்காப்பியத்தில் வானவத்தன்மை (Super natural machinery) பெரிதும் கலந்திருக்கும். ஒரு காப்பியத்திற்கு இவ் வானவத்தன்மை பெரும் கவர்ச்சியை அளிக்கும் என்பது 'டிரைடன்' என்னும் அறிஞனின் கருத்தாகும்.

கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டத்தைத் தாங்கிய புலவர் கம்பனைத் தவிர வேறு யாருமே தமிழ்நாட்டில் இல்லை. மேலை நாட்டவர்கள் ஹோமரைப் 'புலவர்களின் அரசன்' என்றுதான் பாராட்டியுள்ளனர். ஆனால், நம்முடைய நாட்டுக் கவிஞர்களோ, 'கவிச்சக்கரவர்த்தி' என்று கம்பனை ஏற்றிப் போற்றியுள்ளனர். இப்போற்றுதலுக்கு அவன் எல்லா வகையாலும் மிகமிகப் பொருத்தமானவன்.

நம்முடைய நாட்டு அறிஞர்கள், வால்மீகி ராமாயணத்தை மூல நூல் என்று கூறுவார்கள். கம்ப ராமாயணத்தை வழிநூல் என்று கூறுவார்கள். உண்மையை நாம் ஆராய்ந்தால், வால்மீகி ராமாயணத்தை மூலநூல், என்று முழுக்க முழுக்கக் கூறமுடியாது. ஹோமரின் காலததிலே மக்களிடையே வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்த பாடல்களைத் திரட்டித்தான் ஹோமர் தன்னுடைய காவியங்களைப் புனைந்தான். எனவே, ஹோமர் எழுதிய காப்பியங்கள் அவனுடைய கனிந்த கற்பனையிலிருந்து முதன்முதலாகத் தோன்றியவை என்று கூற முடியாது. இதை மேலை நாட்டு அறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். உலகப் பெருங்கவி என்று போற்றப்படும் ஷேக்ஸ்பியரும் தன்னுடைய நாடகங்களுக்கான கதைகளைப் பெரும்பாலும் பிறரிடமிருந்தே பெற்றுள்ளான். ஆனால் தன் கைவண்ணத்தால் மற்றையோர் புகழையெல்லாம் தன் புகழாக்கிக் கொண்டான்.

"Prince of Borrowers" 'இரவல் வேந்தன்' என்று வேடிக்கையாக ஷேக்ஸ்பியரைக் கூறுவதும் உண்டு என்பதை அறிஞர் அறிவர்.

இவ்வாறே வால்மீகி ராமாயணத்திற்கு ஏற்ற கருப்பொருளை அளித்தவர்கள் பிரம்மனும் நாரதரும்தான். இந்த உண்மை வால்மீகி ராமாயணத்திலே பேசப்படுகிறது. இக்கதைப் பொருளை நிலைக்களனாக வைத்தே வால்மீகி தம்முடைய ராமாயணத்தை நெஞ்சை அள்ளும் வகையில் கற்பனைத்திறன் அனைத்தையும் காட்டி எழுதியுள்ளார். வால்மீகியின் கதையமைப்பைக் கம்பனும் தன்னுடைய காவியத்திற்கு ஏற்ற கருப்பொருளாக எடுத்துக் கொண்டுள்ளான். ஆனால், எத்தனை இடங்களில் அவன் வால்மீகியிடமிருந்து மாறுபட்டும் தழுவியும் புதிய கற்பனைகளைச் சேர்த்தும் தன்னுடைய பெருங்காப்பியத்தை இயற்றியுள்ளான் ? இவ்வுண்மையைக் காலஞ்சென்ற வ. வே. சு. அய்யர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

It is not easy to convince the literary world at this late hour of day that there is, unsuspected by the greater part of it, a Tamil poet who is worthy to take rank with the greatest names in literature. It is, however, my purpose in this book to make an attempt to prove that in the RAMAYANA of KAMBAN the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad and the Aenid, the Paradise Lost and the Mahabharata, but with its original itself, namely the Ramayana of Valmiki. This is not the language of mere patriotic enthusiasm. It is an opinion that has grown slowly with years and after deep and careful study.

வால்மீகி ராமாயணம் 21 ஆயிரத்துப் பதினெட்டு சுலோகங்களால் ஆக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு சுலோகமும் இரண்டடி எல்லை உடையது. கம்பன் யாத்த ராமாயணம் 10 ஆயிரத்து 569 செய்யுள்களைத் தன்னகத்தே தாங்கி மிளிர்கின்றது. ஒவ்வொரு செய்யுளும் நான்கு அடி எல்லை கொண்டது. உலகப் பெருங்காப்பியம் என்று மேலை நாட்டவர்களால் போற்றப்படும் இலியட்டைப் போன்று மூன்று மடங்கு பெரியது கம்பன் செய்த காப்பியம். கம்பன் புனைந்த யுத்த காண்டம் மட்டும் 'இலியடின்' அளவிற்கு ஒப்பாக உள்ளது. மூன்று காப்பியங்களையும் — வால்மீகியையும், கம்பனையும், ஹோமரையும் காய்தல் உவத்தல் அகற்றிப் படிக்கும் எந்த

அறிஞனும் இவர்களின் கற்பனைத் திறனுக்காகவும், காவியச் சிறப்பிற்காகவும் இவர்கள் மூவரையும் ஒரே அரியாசனத்தில் அமர்த்துவான் என்பதில் தினையளவும் ஐயமில்லை.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இராமாயணத்தைப் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் கையாளப்படுகின்றன. அகநானூற்றில் இராமனைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று கூறப்பட்டுள்ளது. தலைமகன் மன்றல் நேர்ந்ததைத் தலைவிக்குச் சொல்லும் தோழியின் கூற்றுக இது அமைந்துள்ளது.

துறைவனோடு நமக்குள்ள நட்பை, அலர்வாய்ப் பெண்டிர், ஊரில் பலரும் அறியும் வண்ணம் முன்பெல்லாம் பரக்கப் பேசினர். இப்போது தலைவன் வரவு மலிந்தமையால் அது, வெற்றிவேலையுடைய பாண்டியரது மிகப் பழமையான திருவணைக்கரையில் உள்ள கனை கடலின் துறைமுற்றத்தில், வெல்லும் போரினில் வல்ல இராமன் திருமறையை ஆய்தற் பொருட்டாகப் பல விழுதுகளைக் கொண்ட ஆலமரத்திலே உள்ள பறவைகளின் ஒலியை இல்லையாகச் செய்ததைப் போன்று நம்மைத் தூற்றிய இந்த ஆராவாரமுடைய ஊரின் ஒலியும் அடங்கிப்போய்விட்டது'' என்று மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன்மள்ளனார் பாடியுள்ளார்.

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

தமிழ்நாட்டின் பெருமையைப் பாரதியார்,

"கம்பன் பிறந்த தமிழ்நாடு – உயர்
கல்வி சிறந்த தமிழ்நாடு"

என்று களிப்புமிகப் பாடியுள்ளார். இப்பாடலை அணி செய்யும் வகையில் இவ்வகப் பாட்டு அமைந்துள்ளது.

எல்லாக் கலைகளின் தோற்றத்திற்கும் ஊற்றுக உள்ள இராமன் தண்டமிழ் நாட்டு அறிஞர்களோடு மறைப்பொருள் குறித்து வாதம் செய்தான். அவர்களுடன் இடையீடின்றி மறையை இனிது ஆய்வதற்காக ஆலமரத்தின் மீதமர்ந்திருந்த பறவைகளின் ஒலியை அடக்கினான் என்றால் அது நமக்கெல்லாம் எவ்வளவு பெருமை

யைத் தரும் நிகழ்ச்சி! நமக்கு மாண்பைத் தரும் இவ்வரும் பெரும் பாடலின் கருத்து ஏனோ இராமாயணத்தில் இடம் பெறவில்லை. அகநானூற்றிலாவது இடம் பெற்றதே, அதுவே சாலும். அதற்காக மதுரைக் கடுவன் மள்ளனாருக்கு நாம் நன்றி கூறுவோமாக.

கம்பனின் பெருமையை அவனுடைய தொடக்கச் செய்யுளே நன்கு எடுத்துக் காட்டும். அறம், நெறி பிறழா ஒழுக்கம், நட்பு, மெய்ம்மை, வாய்மை, கற்பு, வீரம், உண்மைக் காதல் இவையே கம்பனின் மூலக் கருத்தாக உள்ளது. கம்பனின் காப்பியத்திலே தனி மனிதனின் ஒழுக்கமும் ஒன்றாக இணைக்கப்படுகிறது. கம்பன் வள்ளுவரின் கவிதை மகனாகத் திகழுகிறான். (Kamban is the poetical son of Valluvar). தனிமனிதனுக்குரிய நெறிகளை — கோட்பாடுகளை அரசியலுக்கும் ஏற்றி, கம்பன் தன்னுடைய காவியத்தை அமைத்திருப்பதைப் போன்று வேறு எந்தக் கவிஞனும் இவ்வளவு விரிவாக அமைக்கவில்லையென்றே கூறலாம். இதற்கு அடிப்படைக் காரணம், சங்க இலக்கியப் பாடல்களும் வள்ளுவனின் பொதுமறையும், இவற்றில் அவன் கண்ட புலமையுந்தான், வானவீதியிலே சிறகடித்துப் பறப்பதற்கு ஏற்ற இரு சிறகுகளாக அவனுக்கு அமைந்துள்ளன. "கல்வியிற் பெரியவன் கம்பன்" என்பதை எடுத்துக்காட்ட அவனுடைய ராமாயணத்தின் ஒரு படலம் போதும், ஏன் - ஒரு பாட்டே போதும். இராமாயணத்தை அவன் தொடங்கும் பொழுதே ஒழுக்கத்திற்கு மிக உயர்வு கொடுத்துத் தொடங்குகிறான் :

"ஆசலம்புரி யைம்பொறி வாளியுங்
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்புனை யாற்றணி கூறுவோம்"

என்பது அவனுடைய முதற்பாட்டு. கோசல நாட்டை அணி செய்யும் ஆற்றைப் பற்றிக் கூறும் கம்பன், அந்நாட்டின் ஆண்கள், ஐம்பொறியை அடக்கி நேரிய வழியிலே சென்றார்கள். பெண்கள் நெறி தவறாது வாழ்ந்தார்கள் என்று கூறி மேலே கதை சொல்லத் தொடங்குகின்றான். இதிலிருந்து கம்பன் அறத்தை மட்டுமே வற்புறுத்தும் சமயக் கவிஞனாக விளங்குகின்றான் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அவனுடைய கவிதை மிக உயர்ந்த கவிதை. அது கவிதைக்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கிறது. அவனுடைய கற்பனை விண்ணையும் மண்ணையும் இணைக்கும் அற்புத ஆற்றல் வாய்ந்தது. அவன் கைப்பட்ட சொற்கள்

புடமிட்ட பொன்னைப் போல் ஒளிவீசுகின்றன. புதுமலர் போல் நறுமணம் கமழ்கின்றன. இன்பத் தமிழை அவன் அமுதத் தமிழாக ஆக்கியுள்ளான். சங்ககாலத் தமிழ், இளங்கோவின் சிலம்பால் புது வனப்பை எய்தியது. அவ்வனப்பு கம்பனின் தமிழால் நாளும் புதியதொரு வண்ணமும் வடிவமும் பெற்றுப் பொற்கோலம் காட்டி நிற்கிறது.

கோதாவரி ஆற்றை விளக்கும் வாயிலாக உயர்ந்த கவிதைக்கு ஒப்பற்ற ஓர் இலக்கணத்தை வகுத்துக் காட்டியுள்ளான் கம்பன் :

" புவியினுக் கணியா யான்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார். "

கவிதை, உலகிற்கு அணிகலனாக விளங்க வேண்டும். உயர்ந்த பொருளை உடையதாக இருத்தல் வேண்டும். அறிவினால் உணர்ந்து பாராட்டத்தக்கதாக அமைய வேண்டும். அகத்துறைகள் தாங்கி மிளிர வேண்டும். ஐந்திணை நெறி அணிய வேண்டும். தெளிந்த பொருளோடு இனிதான ஓட்டத்தை உடையதாய் இருக்க வேண்டும். இவ்வாறான சான்றோர்களின் கவிதையைப் போல் கோதாவரியின் பூம்புனலும் ஓடிச் செல்வதை வீரர் கண்டனராம். வானத்து நிலவைப் போல் வையத்து மலரைப் போல் அவனுடைய கவிதைகள் மிளிர்கின்றன. படிப்பவர் கருத்தையும் அறிவையும் பிணைக்கும் வகையிலே அவை அமைந்துள்ளன. அவனுடைய தன்னேரிலாத ஆற்றலை எடுத்துக் காட்டுவதற்கு இராமனும், இராவணனும், இந்திரஜித்தும் எழில் ஓவியமாக அமைந்து நிற்கின்றார்கள்.

ஆராய்ச்சி அறிஞர்கள் கம்பராமாயணத்தில் முத்தமிழும் களிநடம் புரிவதைக் காண்பார்கள். பற்பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் நாடகப் பாங்கிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

ஆரணிய காண்டம். இராமனும் இலக்குவனும் சீதையும் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியின் கரையிலே தங்கியிருக்கின்றனர். தண்டகாரணியத்தில் தருக்கித் திரியும் சூர்ப்பணகை இராமனைக் காண்கிறாள். ஆடவர் பெண்மையை அவாவும் அவனுடைய சுந்தரத் தோளினைக் கண்டு காதல் கொள்ளுகிறாள்.

அழகுத் தெய்வமாக விளங்கும் கார்மேனி வண்ணனைத் தன்னுடைய காதல் உணர்வுகள் மட்டும் ஈர்க்காது — தன்பால் சேர்க்காது என்று உணர்கிருள். அவனைப் போலவே ஈடற்ற எழிற்கோலம் பூண உறுதி கொள்கிருள். தான் கற்ற கல்வியின் வண்மையால் கண்டவர் காமுறும் வண்ணம் ஓர் அழகிய பாவையாக உரு மாறுகிருள். அஞ்சன வண்ணனின் தாமரைக் கண்ணெதிரே எழிலெல்லாம் பூத்த இளமங்கையாக வருகின்ருள். அவள் நடந்து வரும் நளினத்தைக் கம்பர் எங்ஙனம் நாடகப் பாணியிலே காட்டுகின்ருர் பாருங்கள் :—

'' பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென வண்ணமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். ''

அவளுடைய அடிகள் தாமரை மலரைப் போன்ற சிறிய அடிகள். நிறத்திலே செம்பஞ்சும் மென்மையிலே தளிரும் ஈடாகா வண்ணம் அவளுடைய தாமரை போன்ற சிறிய அடிகள் சிவந்து மென்மையாய் உள்ளன. அழகிய சொற்களையுடைய இளமையான மயிலைப் போன்ற சாயலுடன் அன்னப்பெடை போன்று, ஒல்கி நடந்து வருகின்ருள். அவ்வாறு நடக்கும்போது அவளுடைய உடல் வஞ்சிக் கொடி போன்று தளர்கிறது. இவ்வாருன எழிற் கோலத்துடன் நஞ்சு போன்ற வஞ்சனையுடையவளான சூர்ப்பணகை வருகின்ருள் என்று கூறுகின்ருர். இப்பாட்டில்தான் எத்தனை சொல்லழகு ; எத்தனை பொருளழகு; படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேன்கவிதை.

அவளுடைய தளர்நடையின் வரவை அவர் மேலும் விளக்குகின்ருர். காற் சிலம்பும் மேகலையும் ஆரங்களும் ஒலிக்கும் இன்னேசையோடு, அவள் கூந்தலிற் சூடிய மலர்களில் ஒலிக்கின்ற வண்டுகள் செய்யும் ஆரவார ஓசையும், ஒரு பெண் வருகின்ருள் என்பதை இராமனுக்குத் தெரிவித்ததாம். இக்கருத்தை —

'' நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னக்
கோமகனு மத்திசை குறித்தெதிர் விழித்தான். ''

இவ்விரண்டு இனிய பாடல்களின் மூலம் அழகுப் பெண்ணின் வண்ண வடிவத்தை கவிதை வனப்பெலாம் கதிர்சொறியும் வண்

ணம் ஆக்கியுள்ளார். இவளின் பேரழகைக் கண்ட இராமனே பெரும் அதிசயத்தில் மூழ்கித் தவிக்கிருன்.

"A thing of beauty is a joy for ever"

என்னும் மொழிக்கோர் எடுத்துக்காட்டாக இராமன் நிற்கிருன். அவளுடைய ஒப்பற்ற எழிற் கோலம் அவனுடைய உள்ளத்திலே பெரு மதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆண்டில் இளைய அவளை ஒரு மையில் அழைப்பதற்கே அவன் மனம் தயங்குகிறது. "யார் இவர்? இவரிடத்தில் தங்கிய பேரழகுக்கு ஓர் எல்லையுண்டோ! ஆபரணங் களை அணிந்த மகளிருள் இவளுககு ஒப்பாவார் யார்?" என்று உள் ளத்திலே ஓர்கின்ருன்.

" ஆருழைய டங்குமழ கிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைந்தான்."

இராமனின் வியப்பையும் அவனுடைய மரியாதை விளியையும் வெளிப்படுத்துவதன் மூலம் சூர்ப்பணகையின் அழகிற்கு மேலும் அழ கூட்டி அணிசெய்து விட்டார். இதற்கு மேலும் ஒரு பெண்ணின் வனப்பை ஒரு கவிஞன் எவ்வாறு வர்ணிக்க முடியும்!

" தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையோர் புண்ணிய மதன்ருே
ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்ருன்
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள்."

இராமனின் வினுவிற்கு அவள் தரும் விடை நம்முடைய உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொள்ளுகிறது. வீறுசேர் பிறந்த குடியின் பெருமையை பீடுயர் நடையுடன் அவள் விளக்குகின்ருள். பெரு மிதம், மாண்பு, விறல், வீரம், வீறு முதலிய பண்புகள் அவளுடைய விடை கூறும் பாட்டிலே மிளிர்கின்றன :—

" பூவிலோன் புதல்வன் மைந்தன் பாவைமுப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனுன செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி மலையெடுத் துலகமூன் றுங்
காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னியென்ருள்."

இராவணனின் தங்கை என்று மட்டும் அவள் கூறவில்லை. குல முறையையே அவள் இங்கு கொண்டு வருகிருள். பிரம்மாவின் மகன் புலஸ்தியன். புலஸ்தியனுடைய மகன் விஸ்ரவசு. அந்த

விஸ்ரவசுவினுடைய மகள் நான். என்னுடைய ஒரு தமையன் முப் புரங்களை எரித்த சிவனுக்கு நண்பன். மற்றோர் அண்ணன் எட்டுத் திக்கையும் வென்றவன். வெள்ளி மலையை அள்ளி எடுத்தவன். உலகம் மூன்றிற்கும் காவலன். அன்னவன் பின் பிறந்தவள் நான். என் பெயர் காமவல்லி. நான் இன்னும் கன்னியே என்று கூறு கின்றாள்.

இப்பாட்டின் அழகை மற்றுமொரு முறை படித்துப் பார்த்தால் கம்பனின் கவிமாண்பைத் தெரிவிக்க வேறொரு பாடல் தேவையில்லை என்று அனைவர்க்கும் புலனாகும். இவ்வாறு பெருமிதமும் தருக்கும் கொண்ட வஞ்சகியின் எண்ணத்தை இராமன் உணர்கின்றான். பார்ப்பனப் பெண்ணாகிய உன்னை க்ஷத்திரிய மகனான நான் மணப்ப தெப்படி என்று கேட்கின்றான். "என்னுடைய தந்தைதான் ஆரண மறையோன். அவனுடைய தாய் க்ஷத்திரிய மரபிலே வந்தவள். என்னை நீ மணம் செய்து கொள்ளலாம்" என்று கூறுகின்றாள். அரக்க குலப் பெண்ணை மனிதர் மணப்பது இயலாத செயல் என்று கூறுகிறான் இராகவன். அதற்கும் அவள் பதில் சொல்லுகின்றாள். தேவர்களை வணங்கி, பழிக்கப்படும் அரக்கப் பிறப்பை நான் நீங்கி விட்டேன் என்று கூறுகின்றாள். வேதம் கற்ற சூர்ப்பணகையின் அறிவு நம்மைத் திகைக்க வைக்கிறது.

இங்ஙனம் கொண்டல் வண்ணன் இராகவனும், தொண்டைக் கனிவாய் சூர்ப்பணகையும் உரையாடிக் கொண்டிருக்கும் வேளை யில் சீதை பர்ணசாலையிலிருந்து இராமனை நோக்கி வருகின்றாள். வள்ளலை நோக்கி வரும் சீதையின் அழகை, கம்பர் எங்ஙனம் வரு ணிக்கப்போகிறார்? தன்னுடைய கற்பனைத் திறமை அனைத்தையும் கூட்டி அவர் ஏற்கெனவே சூர்ப்பணகையை வருணித்து விட்டாரே என்று நாம் மலைக்கிறோம். சீதையை வருணிக்கும்போது கம்பன் உறுதியாக, சூர்ப்பணகையின் வருணனைக்குத் தோற்று விடுவாரோ என்று நாம் ஏங்குகிறோம் ஆனால் கம்பனின் மாபெரும் புலமை இங்குதான் வெளிப்படுகிறது. அந்த வருணனையை விஞ்சும் வகை யிலே சீதையின் அழகோவியம் தீட்டிக் காட்டப்படுகிறது.

"விண்ணிடை யிம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க்கெல்லாம்
கண்ணிடை யொளியின் பாங்கர்க் கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணினட யரசி தேவர் பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் வந்தாள்"

விண்ணுலகத்தைப் பொன்னுலகம் என்று கூறுவது மரபு. அங்கே உள்ள அனைத்தும் பொன் மயமானவை. கோடிக் கதிரவன் கூடி எரித்தாலன்ன ஒளியோடு அவ்விண்ணகர் எப்போதும் ஒளியோடு திகழும் என்று அதனை வருணித்து உள்ளனர். அங்கு வாழும் வானவர்களோ இமையா நாட்டம் உடையவர்கள். இவ்வாறே நாக லோகமும் பன்மணிக்குவையினால் ஒளிபடைத்த நன்னாடு.

பெண்களுக்கெல்லாம் அரசி என்று போற்றப்படுபவளும், பூமியிலிருந்து ரத்தினத்தால் ஆன வஞ்சிக் கொடி ஒன்று வெளிவருவது போன்றும், வானுலகில் வாழ்ந்து வரும் பிரம்மன் முதலிய தேவர்களும், நாகலோகத்தில் வாழுகின்ற நாகர்களும் இவ்வுலகத்து மாந்தர்களும் கண்டவுடனே தங்கள் கண்கள் கூசும்படியான பேரொளியோடு, நறுமணம் கமழும் இலைக் குடிசையிலிருந்து திருமகளன்ன சீதை அண்ணல் இராமனை நோக்கி வருகின்றாள் என்று கூறுகின்றார். சீதையின் உடலிலிருந்து தோன்றிய வான் சுடர் வெள்ளத்தை, சூர்ப்பணகை நன்கு பார்க்கிறாள். இராமனும் திகைக்குமாறு வந்த அவ்வழகி, சீதையின் வரம்பிலா வடிவழகை உற்றுப் பார்த்து,

அரவிந்த மலருள் நீங்கி யடியிணை படியிற் றோயத்
திருவிங்கு வருவாள் கொல்லோ வென்றகந் திகைத்து நின்றாள்.

திருமகள் செந்தாமரை மலரினின்றும் நீங்கி, தனது தாமரை அடிகள் நிலத்தில் தோய இம்மண்ணில் நடந்து வருவாளோ என்று அச் சூர்ப்பணகை உள்ளம் திகைத்து நிற்கின்றாள். கண்களைத் துடைத்து விட்டு மீண்டும் மீண்டும் பார்க்கிறாள். பண்புற நெடிது நோக்குகிறாள். இவள் அழகிற்கு எல்லையே இல்லையென்று முடிவு கூறுகிறாள்

கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக்கென்றா லென்படும் பிறருக்கென்றாள்.

இவளைப் பார்த்த, பெண்ணாய்ப் பிறந்த எனக்கே கண்கள் வேறு பொருளில் செல்ல வில்லையே! உள்ளமும் பிற பொருளை நாட வில்லையே! என் நிலையே இவ்வாறானால் ஆடவர் நிலை என்படுமோ என்று அதிசயிக்கின்றார்.

இச்சமயத்தில் சூர்ப்பணகையை வர்ணித்த இரு பாடல்களையும் சீதையை வர்ணித்த இரு பாடல்களையும் நாம் ஒப்பிட்டுக் காண வேண்டும். அப்போதுதான் கம்பன் வெறும் கவிஞன் அல்ல. அவன் மாபெரும் உலகக் கவிஞன் என்பதை நம்மால் உணரமுடியும்.

சூர்ப்பணகையின் அழகை வருணிக்கும் போது நாம், நாள்தோறும் நாட்டிலும், வீட்டிலும் காட்டிலும் காண்கின்ற பொது அழகை, தன் சொற்களின் திறமையினுலும்—கற்பனையின் வளத்தினுலும் நம் உள் ளத்தை அள்ளுமாறு விவரிக்கின்ருர். பஞ்சு போன்ற பாதம், தளிர் போன்ற மென்மை, மயில் போன்ற சாயல், அன்னம் போன்ற நடை, இவை எல்லாம் நாம் நாளும் அன்ருடம் காணும் மகளிரிடத்திலே தோன்றும் அழகு. இதிலே தனிச் சிறப்பு ஏதுமில்லே.

ஆனுல் சீதையின் வனப்பை வர்ணிக்கும் கம்பனே சீதையின் உடலிலே ஒளிரும் தெய்வீக ஒளியை நம் கண் முன்னர் முதலில் காட்டுகின்ருர். அவள் மேனியிலிருந்து சுடர் விட்டுப் பரவிய ஒளியைத்தான் சூர்ப்பணகையும் முதலில் காண்கிருள். பின்னர்தான் அவளுடைய வரம்பிலா மேனியழகிலே ஈடுபடுகிருள். இராமன்பால், அவள் கொண்ட தண்டாக் காமம், சீதையைக் கண்டவுடனே மறைந்து விடுகிறது. சீதையின் திருவொளியிலே அவளுடைய பெருங்காமம் எரிந்து போய் விடுகிறது. பெண்ணுய்ப் பிறந்த என்னு டைய கண்ணேயும் கருத்தையும் இவளழகு சிறைப்படுத்தி விட் டதே! என் நிலேயே இவ்வாருனல் ஆடவர் நிலே என்னவோ? அரவிந்த மலருள் நீங்கித் திருமகள் தன் மலரடிகள் நிலத்தில் தோய நடந்து வருகிருளோ! என்று காமவல்லியாம் கன்னி அதிசயிக் கிருள். இதுதான் கம்பனின் வெற்றி.

சீதையின் பேரொளி வீசும் தெய்வீக வடிவழகைக் கண்டு சூர்ப் பணகை உள்ளம் சோர்ந்து விடவில்லே. இத்தனே பேரழகு படைத்த இவள் அவனுடைய மனேவியாயின் இவளேக் காட்டிற்குக் கூட்டி வர மாட்டான். இவளும் என்னேப் போல் இடையில் வந்தவளாகவே இருத்தல் வேண்டும் என்று எண்ணுகிருள். இராமனேப் பார்த்து, "சீரியோய்! இவள் மாயம் வல்ல வஞ்சனே அரக்கி, நெஞ்சம் தெளிவு இல்லாதவள். இவள் உள்ளமும் மெய்யது அன்று. ஊனுகர் வாழ்க் கையை உடையவள். இவளேக் கண்டு நான் பெரிதும் அஞ்சுகிறேன். அருகில் வரவொட்டாமல் இவளேத் தடுப்பாயாக" என்று கூறு கிருள். நகைச் சுவைக்கு ஏற்ற ஒரு நிகழ்ச்சியாக இது அமைந்து இருக்கிறது.

ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
வேயிடை தோளி ஞளும் வீரனேச் சேரும் வேலே
நீயிடை வந்த தென்னே நிருதர்தம் பாவை யென்ணுக்
காயெரி யனேய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்.

சூர்ப்பணகையின் சினத்துடன் கூடிய அச்சுறுத்தலைக் கண்டு அமுதின் வந்த அருந்ததிக் கற்பினுள், தன் கொழுநனைத் தழுவிக் கொள்ளுகின்றுள். ஆனால் சூர்ப்பணகை அதைக் கண்டு மேலும் கொதித்தெழுகிறுள். "அப்பாற்போ" என்று அதட்டுகிறுள்.

"என்னை அடைவதற்காகப் பூவிலும் புனலிலும் பொருப்பிலும் வாழும் முப்பெரும் மூர்த்திகளும் மன்மதனும் தவம் செய்கின்றுர்கள். ஆனால் நீயோ என்னை இகழுகின்றுயே!" என்று இராமனை வினவுகின்றுள். அவளுடைய மனநிலையைக் கண்ட இராமன் "தீயாரைக் காண்பதும் தீது. தீயாரோடு உரையாடுவதும் தீமையையே விளைக்கும்" என்று எண்ணி, தன் ஆருயிர் சீதையுடன் பர்ண சாலைக்குள் செல்லுகின்றுன்.

இச்சமயத்தில் சூரியன் மேற்குத் திக்கிலே சென்று மறைந்து விட்டான். வானம் செக்கச் சிவந்து காட்சியளித்தது, என்று கூறி நாடகமாகத் தொடங்கிய சூர்ப்பணகையின் காட்சியை நாடக மாகவே முடிக்கிறுன் கம்பநாடன். மேலே நடந்தது என்ன? என்பதை அறிய வேண்டுமேல் கதிரவன் மீண்டும் தோன்றிய பின்னர், நாளைதான் நாம் அறிய முடியும்.

தன்னுடைய சொற்களை வைத்தே அவன் இந்திர ஜால வித்தைகளை நம் கண்முன்னர் இழைத்துக் காட்டுகின்றுன். தன்னேரில்லாத மந்திரக் கவிஞன் அவன்.

இனி அவன் வீரத்தை வர்ணிக்கும் விறலைக் காண்போம். ஹோமருடைய பெருமை யெல்லாம் அவன் வீரத்தை வெகு விரிவாகப் பாடியுள்ளான் என்பதேயாகும். அவனுக்கு இணையாக வீரத்தைச் சிறப்பித்துப் பாடிய புலவர்கள் அவனுக்கு முன்னுமிலலை. பின்னுமில்லை என்று பேசப்படுகிறது. நான் ஏற்கெனவே கம்பனின் யுத்தகாண்டம், ஹோமரின் இலியட்டுக்கு, பரப்பிலும் நீட்சியிலும் இணையானது என்று கூறியுள்ளேன். யுத்த காண்டத்தில் கம்பன் இடியாய் முழங்குகிறுன்; ஆர்க்கும் கடலாய்க் கொதித்தெழுகிறுன்; பெரும் புயலாய் மோதுகிறுன்; கனலாய் எரிக்கின்றுன்; புன்லாய் அழிக்கின்றுன். ஆனால் அவனுடைய வீர வர்ணனையை இக்குறுகிய காலத்தில் இங்கு நான் சொல்ல விரும்ப வில்லை. ஆரணிய காண்டத்திலேயே இரண்டு படலங்களின் வாயிலாக வீரக் கம்பனை விளக்கிக் காட்ட விழைகிறேன்.

மையலால் அறிவிழந்த சூர்ப்பணகை தையலாம் ஜானகியை அப்புறப்படுத்தி விட்டால், இராமனை அடையலாம் என்று தப்புக் கணக்கு இடுகிருள். அவள் மீது பாய்கிருள். அம்முயற்சியில் தோல்வியுற்று இலக்குவனுல் மூக்கறுபட்டு மானக் குலேவுறுகிருள். காய்கதிர் சினத்துடன்

காற்றினிலும் கனலினிலுங் கடியானைக்
கொடியானைக் கரனை யுங்கள், கூற்றுவனை யிப்பொழுதே
கொணர்கின்றே னென்று சலங் கொண்டு

போகின்ருள்.

குருதி வெள்ளம் ஆருக ஓட, வாய் விட்டு அரற்றியவாறே ஓடிச் சென்று இராவணனுக்குத் தம்பி முறையும், சூர்ப்பணகைக் குப் பாதுகாவலாயுள்ள கரனின் காலடியிலே விழுகின்ருள். தனக்கு நேர்ந்த பரிபவத்தைச் சொல்லி உள்ளம் நைகின்ருள். அவளைக் கண்ட கரன் ஏழுலகும் எரிந்துக, கோபக் கனலுகப் பொங்குகின் ருன். நிகழ்ந்ததை அறிந்து,

"கழிந்து போயினர் மானிட ரென்னுங்கால்
அழிந்ததோ விவ்வரும்பழி யென்னுமால்"

என்று ஏங்குகிருன்.

தன்னுடைய தங்கையை அவமானப்படுத்திய மானிடர்களை அழித்து விட்டதாகவே அவனுடைய ஆணவம் எண்ணுகிறது. அவர்களைக் கொன்று குவித்து விட்டாலும் இப்பெரும் பழி அதோடு நீங்கிவிடுமா என்று ஏங்குகிருன். "வருக தேர்" எனறு முழங்கு கிருன். அவனுடைய போர்க்கோலத்தைக் கண்ட பதினன்கு வீரர்கள் இராமனேடு பொரும் பணியைத் தங்களிடத்திலே விட்டு விடுமாறு வேண்டுகின்றனர். "வானவர்கள் மீது போர்த்தொடுக்கும் நீ, இம்மண்ணவர்கள் மீது சீறிச் செல்வது நின் புகழுக்கு அடுக் குமோ ? இது இழுக்கில்லையா ?" என்று கேட்கின்றனர்.

"நன்று சொல்லினிர், நானிச் சிறுர்கண்மேல்
சென்று போர்செயிற் றேவர் சிரிப்பரால்"

எனவே நீங்களே சென்று அவர்களை வென்றி மீளுதிர். அம்மெல் லியலாளையும் உடன் கொண்டு வருவீர் என்று அவ்வீரர்களை ஏவு கின்ருன். ஆர்த்துச் சென்ற அப்பதினன்கு வீரர்களும் படுகளத் தில் இராமனுல் அழிக்கப்படுகின்றனர். சூர்ப்பணகை மீண்டும்

ஓடிவந்து உற்றதைக் கரனுக்கு உணர்த்துகிருள். முன்னர், "வருக தேர்" என்று கூறிய கரனின் வாய், இப்போது, "போரில் வல்ல அரக்கர் படையை அழையுங்கள்" என்று கூவுகிறது; பெரும்படை திரளுகிறது; நில மகளின் முதுகு நெளியும் வண்ணம் அப்படை நடந்து சென்று இராமனை அடைகிறது. மீண்டும் பெரும்போர் நிகழுகிறது. இராமஞல் படை அழிக்கப்படுகிறது. எங்கு நோக்கினும் குருதி வெள்ளம் ஆறுபோல் பெருகி ஓடுகின்றது. தலையிழந்த உடல்கள் நிறைந்து கிடக்கின்றன. நாயும் பேயும் போர்க்களத்தை ஊட்டுப் பிறையாக்கிக் களிக்கின்றன.

அரக்கர் படைக்கு ஏற்பட்ட பெருந்தோல்வியை, திரிசிரா என்னும் சேனைத் தலைவன் கண்டு உள்ளம் குமுறுகிருன். கம்பனின் போர்க்கள வருணனையை இங்கு தான் நாம் காணவேண்டும். திரிசிரா சிறந்த வீரன். அவனினும் சிறந்த பெருவீரன் தூடணன். அவனினும் உயர்ந்த மாபெரும் வீரன் கரண். இம்மூன்று மாவீரர்களிடம் இராமன் போர் புரிகின்ருன். இம்மூவரின் திறமைக்கேற்ப எங்ஙனம் போரின் வருணனையை ஒன்றையொன்று விஞ்சும் வகையிலே வருணித்துக் காட்டுகிருன் என்பதைக் காண்போம். தன்னுடைய படை வீரர்களின் இறந்துபட்ட உடலும் அவர்களின் உடலிலிருந்து ஓடும் குருதி ஆறும் திரிசிராவின் தேரை மேலே ஓட்ட முடியாமல் தடுத்து நிறுத்துகின்றன. அதுகண்ட திரிசிரா பொங்கி எழுகிருன்.

"தாழ்ந்திலன் முத்தலைத் தலைவன் சோரியின்
ஆழ்ந்தே ரம்பரத் தோட்டி யார்க்கின்ருன்"

தேரைச் செலுத்த முடியவில்லையே என்று உள்ளம் தளராமல், தான் கற்ற மந்திரக் கல்வியின் தந்திர வலிமையால் தேரை ஆகாயத்திலே ஓட்டி இராமனைப் பார்த்து ஆர்க்கின்ருன். மேகம் மழை பெய்வதைப் போன்று அம்புகளைத் தூவிச் சத்தியத்தின் திருவுருவாய் நிற்கும் இராமனின் உடலையே மறைத்து விடுகின்ருன். அதுகண்ட இராமன் அவ்வம்புகள் அனைத்தையும் அழித்து ஓர் வாளியால் அவனுடைய அழகிய தேரை அழித்து தேர்ப்பாகனின் ஆவியையும் நீக்குகின்ருன். மற்ருெரு அம்பினுல் அவனுடைய இரண்டு தலைகளையும் கொய்து தள்ளுகின்ருன். ஆயினும் என்ன? திரிசிரா மனம் தளரவில்லை. அவனுடைய நிலையைக் கம்பன் எப்படி வருணிக்கிருன் என்று பாருங்கள்.

" தேரழிந் தவ்வழித் திரிசி ராவெனும்
பேரழிந் ததனினு மறம்பி ழைத்திலன்
வாரழிந் துமிழ்சிலை வான நாட்டுழிக்
காரிழிந் தாலெனக் கணைகள் சிந்தினான் "

ஒரு தலையுடன் காளமேகம் பெய்வதைப் போன்று அம்புகளை இராமன் மேல் அள்ளிச் சொரிந்தானும் திரிசிரன்.

இவ்வீரக் கோலத்தைக் கண்ட எழிற்கோல இராமன் தன்னுடைய பாராட்டைத் தெரிவிக்கின்றான். " ஏற்றிய நுதலினன் " என்று கம்பன் திரிசிராவின் வீரத்தை இராமன் சொல்லால் வியக்காமல், நுதலால் பாராட்டினான் என்று வருணிக்கிறார். அவ்வாறு வியந்த வீரன் மாற்றரும் பகழி ஒன்றால் அவனுடைய வில்லையும் முறித்து வீழ்த்துகிறான்.

" வில்லி ழந்தன னென்னினும் விழித்தவாண் முகத்தான்
எல்லி ழந்தில னிழந்திலன் வெங்கத மிடிக்குஞ்
சொல்லி ழந்திலன் றோள்வலி யிழந்திலன் சொரியுங்
கல்வி ழந்தில னிழந்திலன் கறங்கெனத் திரிதல். "

சிறிதும் சளைக்காத திரிசிரா தன்னுடைய மாயையின் வலிமையால் 200 வீரர்கள் போர் செய்வதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகின்றான். அதைக் கண்ட காகுத்தன் இரண்டு அம்புகளால் அவனுடைய இரண்டு தோள்களையும் இரண்டு தாள்களையும் துணிக்கின்றான்.

அரக்கனின் மதம், இரண்டு தலைகள் அறுபட்ட பின்னரும், கால்களும் கைகளும் துணிக்கப்பட்ட பின்னரும் ஓயவில்லை. இராமனை விழுங்கும் எண்ணத்தோடு குகைபோன்ற தன் வாயைத் திறந்தவாறே ஓடிவருகின்றான். இராமன் அவனுடைய எஞ்சிய ஒரு தலையையும் துணித்து அவனுடைய உடலை உயிரற்ற பிணமாக்குகின்றான்.

அடுத்து இராமன் இவனினும் வீரம் செறிந்த தூடணனோடு போர் புரிகின்றான். திரிசிரா என்னும் சிகரம், மண்ணில் விழுந்தவுடன் அவனுடைய எஞ்சிநின்ற சேனை வீரர்கள் உயிர் பிழைக்க ஓடுகின்றனர். அவர்களைத் தூடணன் வீரமொழி பேசி, தடுத்து நிறுத்துகிறான். " சற்று நேரம் நின்று என்னுடைய நெடுஞ்சிலையின் வலியைக் காணுங்கள் " என்று நேராகச் சென்று இராமனைத் தாக்கினான். அதுகண்டு தேவர்கள் திகைத்தனர். திரிசிராவை

விட, தூடணன் மிக்க வலியன் என்பதைக் கம்பன் எப்படிக் காட்டு கின்ருன் என்பதைப் பாருங்கள்:

" நேராசென்று தாக்கின ஃ, தேவரும் மருள் கொண்டுதிகைத்தார்
நன்று காத்தியென் றிராமனு மெதிர்செல நடந்தான் "

என்று கூறுகின்ருன்.

ஓடுகின்ற படையைத் தடுத்து நிறுத்திய தூடணன் ஆற்றலை இராமன் பாராட்டிக் கூறுகின்ருன். "நன்று காத்தியென்று ராம னும் எதிர் செல நடந்தான்." திரிசிராவுடன் போர் செய்யும்போது இராமன் அவன் எதிர் முன்னேக்கிச் சென்று போர் செய்யவில்லை. நின்ற இடத்திலேயே அவனேடு போரிட்டு அவனை வென்ருன். ஆனல், தூடணனுடன் போர் செய்யும்போது முன்னே நடந்து சென்று போர் புரிகின்ருன். இவ்வரியிலும் தூடணனின் வன்மை யைக் காட்டுகின்ருன். இருவருக்கும் பெரும் போர் நடந்தது. திரிசிராவின் தேருக்கு ஏற்பட்ட நிலையே தூடணனின் தேருக்கும் ஏற்படுகிறது. தேர் அங்குமிங்கும் நகரமுடியவில்லை. தூடணன் திரிசிராவைப் போல் மந்திரத்தின் உதவியை நாடவில்லை. தன் ஆற்றலின் துணைகொண்டு ரத்தச் சேற்றின் மீதும் பிணமலையின் மீதும் தேரைச் செலுத்துகின்ருன். அவ்வாறு ஓடும் அவனுடைய தேர் சுறங்கு போற் சுழல்கின்றது. குருதிப் பள்ளத்தில் இறங்கியும் பிணமேட்டின்மீது ஏறியும் அது அல்லற்பட்டு ஆடி வருகிறது. இவ் வாறு ஆண்மையுடன் தேரை அரிதில் செலுத்தி, இராமன் அம்பின் முன்னே வந்து நிற்கின்ருன். தூடணன் பிணங்களின் மீது தேரைச் செலுத்தி வந்து நின்ற வீரக் கோலத்தை இராகவன் காணுகின்ருன். "நன்றுநன்று நின் நிலையென வருளிறை நயந்தான்." காகுத்தன் இவ்வாறு அவனைப் பாராட்டிக் கொண்டிருக்கும்போதே மூன்று அம்புகளை அவ்வெய்யவன் எய்தான். அவ்வம்புகள் இராமனின் நெற்றியில் கட்டியுள்ள வீரப்பட்டத்தின் மேல், தேவர்களும் அஞ்சு மாறு தாக்கின. மீண்டும் சீதையின் கேள்வன் அவனைப் பாராட்டு கின்ருன். "எய்த காலமும் வலியும் நன்று" என்று மீண்டும் பாராட்டுகின்ருன். இம்முறை அவனுடைய செந்தாமரை முகத்திலே சிறியதோர் முறுவல் பூக்கின்றது.

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத் தூர்வது அஃதொப்ப தில் "

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க வள்ளல் இராமனின் குறுநகை காட்சி அளிக்கிறது. கடுங்கணை ஒன்றைத் தேர்ந்து தூடணனின் குதிரைகள் பூட்டிய தேரைப் பொடியாக்குகின்ருன். கொடியவன் வில்லையும் கூறுபடுத்துகின்ருன். மார்பில் அவன்

பூட்டியிருந்த கவசத்தையும் அறுத்துத் தள்ளுகின்ருன். இதுவே இராமனின் புன்சிரிபபுச் செய்யும் வீரம்.

இன்னும் அருங்கணை ஒன்றை எடுத்து "நீ வல்லையேல் இதைக் காத்துக்கொள்" என்று ஏவுகின்ருன். அப்பகழியால், தூடணன், தலை சிந்திக் கீழே சாய்கின்ருன். அதுகண்டு தேவர்கள் ஆர்க்கின் ருர்கள். முனிவர்கள் இறும்பூதடைந்து ஆரவாரிக்கின்ருர்கள்.

தன் தம்பியின் தலை அற்றதை அண்ணன் கரன் அறிகின்ருன். எமனும் அஞ்சும்படி நாற்படைகளையும் இராமனைச் சுற்றி அமைக் கினருன். அப் படை வீரர்கள் இராமனுடன் கொடும்போர் செய் கின்றனர். எனினும, இராகவனின் கடுங்கணைக்கு முன்னே நிற்க மாட்டாது, அவர்கள் அனைவரும கொடுங்கூற்றுவனின வாயிலே வீழ்கின்றனர். சுற்றிலும குருதிக் குழம்பு, பிணமலை இவற்றின் நடுவே நெடுங்கடலினிடையே வானளாவ நிற்கும் மந்திர மலையைப் போன்று தனியனுகக் கரன் நிற்கின்ருன். அவனுடைய சிவந்த கண் கள் எரியைச் சிந்துகினறன. இரத்த வெளளததிலே, புகையும் நெஞ்சினனுய்க் கொதிததெழுகினருன. கடலில் விரைந்து செல் லுகின்ற ஒரு மரக்கலம் போனறு தன்னுடைய தேரைப் பிணக்குவி யிலின் மீது எளிதாக ஓட்டி வருகினருன் எனறு கூறி எடுதத எடுப்பிலேயே கரனின் வீர வலிமையை நமக்கு எடுததுக காட்டுகின் ருன் கம்பன். கரனின் வலிய ஆற்றலை உணர்ந்த இராமனும் கொ டிய அம்புகளை ஆராய்ந்து எடுததுக்கொண்டு அவன் முன்னே சென்ருன். தேரை ஓட்டி வந்து கொண்டிருக்கும்பொழுதே இரா மனை நோக்கி நெருப்பைப போல் கொடுமையும், காற்றைப் போல் விரைவும் வாய்ந்த ஆயிரம் அமபுகளை அரக்கர் தலைவனுன கரன் இராமன் மீது சொரிகின்ருன். இராமனும் அதே தன்மை வாய்ந்த ஆயிரம் அம்புகளால் அவனுடைய கூரிய அம்புகளை அறுத்து வீழ்த்துகிருன்.

சிறிதும் காலந்தாழ்த்தாது இமைப் பொழுதில் ஊழிக்காலத்தில் அழிக்கும் தீயைப் போல ஊடுருவிச் செலலவல்ல ஒனபது அம்பு களை இராமன் கரன் மேல் தொடுத்தான். கட்டமைந்த வில்லையு டைய கரனும் நெருப்புச் சுவாலை சூழ்ந்த ஒன்பது அம்புகளால் அவற்றை மாற்றினுன. இராமனின் வில்லாண்மையை உணர்ந்த கரன மாயப்போர் செய்து இராமனை மாள்விப்பதே தகுதி என நினைத்து, பகழி மாரியால் இராமனின் உடலை மறைததான். அதைக் கண்ட அமராகள் உள்ளம் நடுங்கி, ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

இராமனும் உதட்டைப் பற்களால் கடித்த வண்ணம் வெகுண்டான். ‘இவனுடைய உயிரை வலிமை வாய்ந்த ஓர் அம்பினுல் முடிப்பேன்’ என்று எண்ணி தன்னுடைய வில்லே, தோளே அளாவும்படி வலிய இழுத்தான். அப்போது அந்த வில் இடி முழக்கத்தைப் போன்ற ஓசையோடு இரு கூருய் ஒடிந்தது.

வெஞ்சிலே இராமனுக்கு வேருேர் வில் இல்லாமையை மனத்தில் எண்ணி எம்முடைய வலிமை ஒழிந்ததோ என்று தேவர்கள் நடுக்கமடைந்தார்கள்.

என்னு மாத்திரத் தேந்திய கார்முகஞ்
சின்ன மென்றுநீ தனிமையுஞ் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மன் மரபினுற்
பின்னு றத்தன் பெருங்கர நீட்டினுன்.

இராமன் சிறிதும் தளரவில்லே. தன்னுடைய வில் ஒடிபட்டது என்பதையும், தான் தன்னந்தனியே அடுகளத்தில் வெஞ்சின அரக்கன் எதிரில் நிற்கும் தன்மையையும் சிறிதும் கவலேப்படாதவனுய் பழைய குறிப்பின்படி தன்னுடைய தடக் கையைப் பின்னே நீட்டினுன். அவனுடைய குறிப்பை உணர்ந்த வருணன், முன்பு இராமனுல் அவனிடம் கொடுக்கப்பட்ட திருமாலின் வில்லே இராமனிடத்திலே ஒப்படைத்தான். அவன் பெற்ற வில்லேக் கையில் பிடித்து நாணேற்றிய பொழுது, அறம் திறம்பிய மாந்தர்களுக்கெல்லாம் இடத்தோள் துடித்தன. இடக்கண்ணும் துடித்தன. நூறு அம்புகளே நாணிற் கூட்டி எமனும் அஞ்சும்படி இராமன் ஏவினுன். அவை கரனின் தேரை நுண்ணிய பொடிகளாக்கின. தேரை இழந்த கரன் இறையளவும் உள்ளங் கலங்காமல் வானத்திலே எழும்பி இராமனுடைய புயத்திலே அம்புகளே மாரிபோல் தூவினுன். தசரத இராமனும் கடுங்கணே ஒன்ருல் இடைவிடாது அம்பைச் சொரிகின்ற அவனுடைய பருத்த தோள்களேப் பார்மிசை வீழ்த்தினுன். வலக்கை அறுபட்ட வீரன் இடக்கையால் உலக்கை ஒன்றைக் கைப்பற்றி வானத்திலே தோன்றும் இடியென வீசினுன். அதனே இராமனும் அம்பு ஒன்றினுல் அப்புறப் படுத்தினுன். கடுமையான நஞ்சையுடைய கொடிய பாம்பு, பற்களே இழந்தபின் சீறி வருவதைப் போன்ற கரனும் மராமரம் ஒன்றைக் கையால் ஏந்தி வந்தான். இராமனும் ஒப்பற்ற ஒரு கணேயை அவன் மீது ஏவினுன். அது கரனின் தலேயைத் தறித்து வீழ்த்தியது. மாயையில் வல்ல இராவணனின் வலக்கரம் போன்ற கரன் நெடுமரமென மண்ணில் சாய்ந்தான். வானவர் வழக்கம்போல் அவனது வெற்றியைக் கண்டு ஆடினர்; பாடினர். தூ மலர் மாரி தூவி வாழ்த்தினர். இராமனும் பொலிவுற்ற

முகத்தோடு தன் தம்பியும் துணேவியும் இருக்கும் இடம் நாடி விரைந்து செல்லுகின்ருன்.

விண்ணி னீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனே்த் தம்பியு மன்னமும்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினர்.

அடுகளத்தில் இராமன் மீது படிந்த குருதிக் கறைகளும் குப்பைத் துகள்களும் நீங்கும் வண்ணம் தங்கள் கண்ணீர் மழையால் தம்பியும் தாமரைத் திருவும் அவனுடைய பாதம் பணிந்தனர் என்று கூறி இவ்வீரக் காட்சியை முடிக்கிருன் கம்பன்.

மூன்று பெரும் அரக்கர்களோடு இராமன் போரிட்ட தனி ஆண் மையைக் கம்பன் வேறுபாடு தோன்ற இப்படலத்தில் விளக்கிக் காட்டியுள்ளார். முதன்முதலாகத் திரிசிரா என்னும் தோன்றலுடன் போர் புரியும்போது இராமன் நின்ற இடத்தை விட்டுப் பெயரவில்லே. வீரம் செறிந்த திரிசிராவின் ஆண்மைப் போரையும் மாயப் போரை யும் நின்ற நிலேயிலிருந்தே முறியடித்தான். சேனேத் தலேவனை திரிசிரா வின் வில்லும் வேறுபல எறிபடைகளும் அண்ணல் இராமனே ஏதும் செய்யவில்லே. இபபோரில் மூவரிலும் வீரத்திலும் குறைந்த வனுக வருணிக்கப்படும் அவன் ஆற்றலேயே, கம்பன் எடுத்துக் காட்டியுள்ளான். ஆண்மைப் போரில் மற்ற இருவரைக் காட்டிலும் திரிசிராவின் வீரம் சற்றே குறைந்திருந்தது. அவனுடைய போரே மாற்றலர் கண்டு வியக்கும்படி அமைந்துள்ளது என்ருல் மற்ற இருவரின் தனி ஆண்மையைச் சொற்கொண்டு விளக்க வேண்டிய தில்லே. ''ஏற்றிய நுதலால்'' அவனே வியந்ததோடு இராமனி டத்திலிருந்து அவன் எவ்வகையான வாய்மொழிப் பாராட்டையும் பெறவில்லே.

அடுத்து, கரனின் தம்பியான தூடணன் வருகின்ருன். அவன் தேரோட்டி வரும் விதத்தைக் கண்டே இராமன் வியப்பெய்து கின்ருன். வியப்புடன் அவனேப் பாராட்டுகின்ருன். அத்துடன் நில்லாமல் அத் தூடணன் வரும் வரைக்கும் காத்திருக்காமல் அவன் வரும்போதே அவனேடு போராட வேண்டிவரும் என்று எண்ணி முன்னே செல்கிருன். தூடணன் வீரத்தையும் பகைவர்களே நுனித் தறியும் இராமனின் பண்பையும் இராமன் தூடணனே நோக்கி எதிர் சென்ற தன்மையே இனிது விளக்கும். பிணமலேகளின் மீது தேரை ஓட்டிவந்த தூடணனேக் கண்டு ''நன்று நன்று'' என்று விமலன் பாராட்டுகின்ருன். அவ்வொரு கணத்திற்குள் வெய்யவன் பகழி

மூன்றை எய்கின்றான். அவை இராமனின் நெற்றியைத் தாக்கு கிறது. ''எய்த காலமும் வலியும் நன்று'' என்று அதையும் இராமன் நயந்து பாராட்டுகிறான. இவ்வாறு இராமனால் மும்முறை பாராட்டப் படும் சிறப்பைத் தூடணன் பெறுகின்றான்.

இறுதியாக அனைவருக்கும் தலைவனாயுள்ள கரன் வருகின்றான். அவனைப்பற்றித் தாடகை கூறும்பொழுது ''காற்றினிலுங் கனவி லுங் கடியானைக் கொடியானைக் கரனையுங்கள் கூற்றுவனை'' என்று அறிமுகப்படுத்துகின்றாள். ''வெங்கரப் பெயரோன வெகுண்டான் விடைச் சங்கரற்குந் தடுப்பருந் தன்மையான்'' என்று அவன் வலி பின்னும் பேசப்படுகிறது இவ்வாறு சிவனுக்கும் அரிய திறல் மிக்க கரன், கடலில் செல்லும் நாவாய் போல் தன்னுடைய தேரை ஓட்டிய வண்ணமே கணைமாரி பொழிகின்றான். இராமன் வாயைத் திறப்பதற்கே இடமில்லாது ஆயிரம் அம்புகளை அள்ளி வீசுகின்றான். இராமனும் கரன் வருவதற்கு முன்பே கடுமையும், கொடுமையும் வாய்ந்த கணைகள் பலவற்றை அம்பருத் தூணியிலிருந்து தேர்ந் தெடுத்துக் கொள்கின்றான். இராமனின் ஆயத்தநிலை, கரனின் வீரம் திரிசிராவுக்கும் தூடணனுக்கும் மேம்பட்டது என்பதை நன்கு வலியுறுத்தும். ஆயிரம் கணைகளை அறுத்து மேலும் அவன் அம்பு தொடுககா வண்ணம் விரைந்து ஒன்பது கணைகளை எய்கின்றான் இராமன். அவற்றைக் கரனும் அறுத்தெறிகின்றான். இராமனின் வன்மையை கரன் அறிந்து கொள்கின்றான். ''நான் இச்சிறுார்மேல் சென்றுபோர் செயின் தேவர் சிரிப்பரால்'' என்று வீறாப்புடன் அவன் சொன்ன ஏளனச் சொற்கள் இன்று பொய்யாய்ப் போய் விட்டன என்பதை உணருகின்றான். இராமனுடன் விற்போர் செய்து வெல்ல முடியாது எனபதை ஓர்கிறான். மாயப் போரிலே இறங்குகின்றான். இராமனுடைய உருவம் முழுவதையும் மேலே நினறு அம்பு மழையால் மறைத்து விடுகின்றான். அவனுடைய அம்பின் திண்மையைக் கண்ட இராமன தன்னுடைய ஆற்றல் எல்லாம் ஒருங்குசேர வில்லைத் தோள்வரை இழுக்கின்றான். அவனைத் தாககி வருத்துவதற்கு அந்த அளவிற்கு வில் வளைய வேண்டியுள்ளது. ஆனால் இராமனின ஆற்றலை அந்த வில்லால் ஏற்க இயலவில்லை. ஏந்திய கார்முகம் ஒடிநது விடுகிறது. ஆனால், இராமனே தான் ஏந்திய ''கார்முகஞ் சினன மென்றுந், தனிமையுஞ் சிந்தியான், மன்னர் மன்னவன் செம்மன் மரபினாற் பின்னுறத் தன் பெருங்கர நீட்டினான்'' அவன் நீட்டிய கையில் வருணன் திருமாலின் வில்லைத் தருகிறான். பெரும் புகழ் படைத்த திருமாலின் வில்லால் தான் கரனை அழிக்க முடிகிறது.

இம் மூன்று போர்களையும் கம்பன் எங்ஙனம் வேறுபாடு காட்டி வருணித்திருக்கின்றான் என்பதை என்னால் ஓரளவிற்குத்தான் எடுத்துக் காட்ட முடிந்திருக்கிறது. உண்மையில் அவன் ஆற்றல் முழுவதையும் அறிய வேண்டுமானால் மூலத்தைப் படித்துத்தான் உணர முடியும். கம்பனின் போர்க்கள வருணனை கரன் வதைப் படலத்திலே தொடங்குகிறது ஆனால் அது தன் வளர்ச்சியை முற்றும் அடையவில்லை. அதனுடைய முழு வளர்ச்சியும் யுத்த காண்டத்தில்தான் முதிர்ச்சி அடைகிறது. எனினும் கரன் வதைப் படலம் ஒன்றே ஹோமருக்கும், மில்டனுக்கும் கம்பன் இணையானவன் என்பதை நிரூபிக்கப் போதுமானது.

உலக இலக்கியங்களோடு ஒருங்கு வைத்துப் போற்றும் பெருமை வாய்ந்தது கம்ப ராமாயணம். உலகப் பெருங்கவிஞர்களான ஹோமர், வர்ஜில், மில்டன், தாந்தே, வால்மீகி முதலியவர்களோடு சரியாசனத்தில் அமரும் அருந்திறல் வாய்ந்தவன் கம்பன். ஹோமரின் வீர வருணனை — மில்டனின் புராணக் குறிப்புகள் — ஷேக்ஸ்பியரின் பாத்திர அமைப்பு முதலிய பெருங்கவிஞர்களின் சிறப்புகளெல்லாம் கம்பன் ஒருவனிடத்திலே குவிந்து நிற்கின்றன. அவனுடைய சொல் வளததைப் பாராட்டும் வாயிலாகத்தான் அவனைப்பற்றிப் பற்பல கதைகள் தமிழ்நாட்டிலே விளங்கி வருகின்றன. அரிய செயல் ஒன்றைக் கூறும்போது 'இது என்ன கம்ப சூத்திரமோ' என்று கூறும் வழக்காறு இன்றும் தமிழகத்தில் உயிரோடு உலவி வருகிறது. காளியின் அருளால் கவிதை பாடும் அருளைப் பெற்றான் கம்பன் என்று கூறுவதும் அவனுடைய எல்லையில்லாக் கவிதைப் பண்பை எடுத்துக்கூற ஏலாத நிலையில் விளைந்ததே ஆகும். குழலினிது, யாழினிது, குழவிகளின் மழலை இனிது, காதலியரின் கொஞ்சும் மொழி இனிது என்றெல்லாம் நாம் பாடிப் பரவசமடைகிறோம். இவர்களின் அனைவரின் இன்பச் சொற்களையும் கம்பனின் காவியத்தைப் படிப்பதன் மூலம் நாம் ஒருங்கே அடையலாம்.

ஆரணிய காண்டத்தில் இரண்டு படலங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கம்பனின் வளத்தை நான் கூறமுயன்றேன். நான் எடுத்துக்காட்டியுள்ள கவிகளைவிடப் பொருளாழமும், சொல் இனிமையும் கொண்ட பாக்கள் ஏராளமாக இருக்கின்றன. சொற்களைத் திறம்படக் கையாளுபவனே உலகத்தின் தலை சிறந்த மந்திரவாதி "The Greatest magician of the Master of words" என்னும் ஆங்கிலப் பொன்மொழிக் கிணங்க நம் அருங்கவிஞன் கம்பன் திகழுகிறான்.

2

வில்லிபுத்தூரர்

டாக்டர் மு. கோவிந்தசாமி

வில்லிபாரதம் எனவழங்கும் இதிகாசத்தை இயற்றிய தமிழ்ப் பெருங்கவி வில்லிபுத்தூரர் ஆவார். முதலாழ்வார் மூவரும் கூடி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத தமிழ்நாட்டிலே, திருமால் மதமென்னும் வைணவ மதத்தைப் பரப்பி நிலைநாட்டிய ஆழ்வார் ஆச்சாரியர் வழியில் வந்தவராகக் கருதப்படுபவர் வில்லியாழ்வார். அதனாலேயே இவரையும் கம்பரையும் 'ஆழ்வார்' எனத் தமிழ் அறிஞர் பாராட்டலாயினர். இவ் வகையில் இவர் ஒரு சிறந்த கவியாகவும் ஒரு சிறந்த வைணவராகவும் விளங்குகிறார். தமிழில் தொடர்நிலைச் செய்யுள் அல்லது பெருங்காப்பியம் என்ற செய்யுள் வகையில் இதனைச் சேர்க்கலாம். சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை ஆகியவற்றைப் பாடி இளங்கோவும் திருத்தக்க தேவரும் சீத்தலைச் சாத்தனாரும் சமணபௌத்த சமயங்களுக்கு எவ்வளவு தொண்டு செய்தனரோ அவ்வளவு வில்லிபுத்தூரர் பாரதம் பாடி வைணவத்திற்குச் செய்திருக்கிறார். பைந்துழாய் முடிப் பரமனைப் பலகவித்துறையும் சிந்தையான் மொழிந்தவன். இவர் திருமுனைப்பாடிநாடு, நடுநாடு, சேதிநாடு எனவெல்லாம் வழங்கும் வெண்ணை நாட்டில் சனியூரில் தோன்றியவர். வீரராகவர் என்ற வைணவர் இவர் தந்தையாவர். திருக்கோவலூர் திருவதிகைப் பகுதியே சனியூர் இருந்த இடமாதல் வேண்டும். அருச்சுனன் யாத்திரை செய்த இடங்களாகத் திருவண்ணுமலை, திருக்கோவலூர், திருவதிகை, திருவயிந்திரபுரம் ஆகியவற்றைத் தனித்துக் குறிப்பிடுவதிலிருந்து இவரதூர்ப் பகுதி இதுவேயெனக் கருத இடமிருக்கின்றது. இவரதிடுகுறிப்பெயர் வில்லிபுத்தூரன் என்பதேயாகும். சிதம்பரம், திருவரங்கம், மதுரை யென்பனபோலச் சிறந்த தலத்தின் பெயரை இவர் இட்டு வழங்கப்பெற்றிருககக வேண்டும்.

வில்லிபுத்தூர் ஆண்டாளுக்கும் பெரியாழ்வாருக்குமுரிய இடமாகும். 'சனியூர் அருள்பெறு வில்லிபுத்தூரன்' எனவே பாயிரம் பகர்வதால் இவர் பெயரிலும் ஊர்ப்பெயரிலும் கருத்து வேறுபாட்டிற்கிடமில்லை. அப்படியாயின் பாயிரம் அதனைப் பகர்ந்திருக்கும். வில்லிபுத்தூரி லிருந்து சனிநகர் வந்தவர், இயற்பெயர் தெரியவில்லை எனச் சிலர் ஐயுறுவர். திருமுனைப்பாடி பழையநாடு, பெண்ணையே கொண்டு போகம் உய்த்திடுமால் எனப் பாயிரம் பகர்வதால் பெண்ணையாற்றங் கரையில் 'வெண்ணெயே கமழும்' திருவெண்ணெய் நல்லூரை யடுத்துச் சனிநகர் இருந்திருக்கக்கூடும். ஏனெனில் திருமுனைப் பாடி நாட்டைக் கடில நதியும் வளமுறுத்துகின்றது.

செஞ்சடைக் கடவுளைப்பாடி யாவரும் மதித்தோர், மூவரில் இருவர் பிறந்தநாடிந்த நல்நாடு என வரந்தருவார் முனைப்பாடி நாட்டைப் புகழ்கிறார். மூவரில் சம்பந்தர் அடுத்த காவிரி நாட்டில் முனைப்பாடி நாட்டையடுத்துக் காழிப் பகுதியில் பிறந்தார். இவ் விரண்டு நாடுகளும் சிறந்த வைணவரும் சைவரும் தோன்றும் பேறுபெற்றவை.

இங்கேயே கம்பரும் வில்லியும் தோன்றினர். மற்றும் வைணவ ஆச்சாரியர்கள் தோன்றிய வைணவப் பரம்பரையில் வீரராகவாச் சாரியார் குடும்பத்தில் தோன்றினார் வில்லிபுத்தூரர்.

பாரத நாட்டிலும் தமிழ் நாட்டிலும் இராமாயணமும் பாரதமும் நாராயணனின் ஏற்றங் கூறியெழுந்த பழம் பெருங் கதைகள். 'மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால்' வில்லி தம் பாரதத்தை விரித்துரைக்க இசைந்ததாகத் தெரிகின்றது. அப் பகுதியையாண்ட வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்ற புரவலன் சூழ்தமிழன் என வரந்தருவாரால் பாராட்டப்பெறுபவன். பிறந்ததிசைக்கிசை நிற்பப்பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர் தங்கள் சிறந்தசெவிக்கமுதமெனத் தமிழ் மொழியின் விருத்தத்தால் செய்க என்றான். இது பாயிரம். கம்பருக்குப் புரவலர் பலர். வில்லிக்கு ஒருவன், ஆட்கொண்ட நாயகன். தமிழ் வளர்த்த வள்ளலார் பரம்பரையில் வந்தமையால் வில்லியைப் போற்றித் தமிழ் மொழியைப் பாடச் சொன்னான். இவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள். தமக்கிசை நிற்பதுபற்றிக் கவலாமல் 'பிறந்த திசைக்கு (தமிழ் நாட்டுக்கு, முனைப்பாடி நாட்டுக்கு) இசைவேண்டு மென விழைந்தனர். தன்உடல் நிற்பதைவிட நாடு நீண்டகாலம் நிலைத்து நிற்கும். எனவே அதற்குப் புகழுண்டாக நினைத்தனர்.

ஔவைக்கு நெடுமானஞ்சி நெல்லிக்கனி யீந்ததும் இக் கருத்துப் பற்றியேயாகும்.

வில்லிபுத்தூராருக்கும் அவர்தம் தம்பிக்கும் பாகப் பிரிவினையில் தாயாதித் தகராறெழுந்ததாகவும், அதனைத் தீர்த்துவைக்கு முகமாக ஆட்கொண்டான் அவரைப் பாரதம் பாடச் சொன்னதாகவும், பாடியதும் அக் கதையின் மூலம் வில்லியின் மனம் அமைதி யடைந்து விட்டதாகவும் செய்தி ஒன்று உள்ளது. வில்லியின் பிள்ளை தம் பாயிரத்தில் இதனைப் பற்றியொன்றும் குறிப்பிடவில்லை. எனினும் இவ்வாறொரு நிகழ்ச்சி நிகழ்ந்திருக்கலாம். ஆனால் பாரதத்தை வில் லியும் அவர் தம்பியும் பாடியதாகவும் வரந்தருவாரும் ஒரு பகுதி (கடைசி 8 பருவங்கள்) பாடியதாகவும் சில கதைகள் வழங்குகின் றன. அவை ஒப்புக்கொள்ளற்குரியனவல்ல. வரந்தருவார் அவ்வா றுயின் குறிப்பிடத் தவறியிரார். நல்லாப்பிள்ளை பாரதத்தில் முருகப் பிள்ளை பாடல்கள் கலந்திருப்பதனைப் பரம்பரை கூறியே வந்துள்ளது. வரந்தருவார் பாயிரத்தைப் பார்க்கையில் அவர்க்குத் தந்தையை யொப்பப்பாடும் ஆற்றல் இருந்திருப்பினும் அவர் பாடியது பற்றிக் கூறவில்லை. அம்பிகாபதியின் புலமை, கோவையின் மூலம் வெளிப் பட்ட மாதிரி இங்கொன்றும் வெளிப்படவில்லை.

வில்லியின் காலம்

வரபதி ஆட்கொண்டானை இரட்டையர் பாடியுள்ளனர். கி.பி. 1331 — 1383 காலத்தவரான இராசநாராயணசம்பு என்பானை யும் அவர்கள் பாடியுள்ளனர். எனவே வில்லி கி.பி. 14-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியினராவர். கி.பி. 15-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் இலங்கிய அருணகிரியார் காலத்திலும இவர் இலங்கியிருந்தால் 15ஆம் நூற்றுண்டிலும் அவர் இருந்திருக் கிறுர். கி.பி 13ஆம் நூற்றுண்டுக் கலவெட்டுகளில் குறிக்கப் பெறும் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் ஆட்சிகொண்ட காங்கேயன் ஒருவன் குறிககபபெறுகிருன். அவன் 14ஆம் நூற்றுண்டிலும் ஆணடிருநதால் அவனே வக்கபாகை ஆடகொணடாஞகலாம். (இதனுலும வில்லியின் காலம உறுதிப்படுகின்றது). இவ்வாட் கொணடானும் கொங்கர்பிரான் எனக கூறப்படுகின்ருன்.

அருணகிரியின் தொடர்பு வில்லிக்கிருந்திருக்கக் கூடுமெனவே தோன்றுகிறது. 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இல்லை குறும்பி யளவாக்காதை எட்டினமட்டிலறுப்பதற்கோ வில்லியில்லை' யென்பு

தோர் தனிப்பாடல் உள்ளது. தவருகப் பாடித் திரியும் தரங்கெட்ட புலவர்களை வாதிட்டுத் தோற்கடித்து அவர்கள் காதையறுத்து ஒறுப்பதென்பது வில்லிக்கொரு பழக்கமென இதனுல் தெரிகினறது. ‘காதைஅறுத்துக் கொள்கிறேன்’ என்பதோர் பழமொழியும் உள்ளது. அஃது எக்காலத்துத் தொடங்கியதோ தெரியவில்லை. 13-14 ஆம் நூற்ருண்டுகளில் மகம்மதியர்கள் தமிழகத்திற்குள் வந்துவிட்டமையைக் கோயிலொழுகு முதலிய இலககியங்கள் குறிக்கும். மொழி பெயர் தேயத்தவர் சிலரும் தமிழ் நாட்டவர் போலாகியிருக்க வேண்டும். இத் தாக்குதல்களால் தமிழின் தரம் குறைநதுவிடாமலும் அழிந்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. அத்தகு தமிழ்த் தூய்மையைக் காக்க ஏற்பட்ட போராட்டங்களே குட்டுதலும், வெட்டுதலும், காதறுத்தலும் ஆகலாம். மற்றும் விலலி விட்டுக் கொடாதவியல்பினரா யிருநதிருககக்கூடும் என்பது தம் தம்பியுடன் கொண்ட தகராறே அறிவிககும். மற்றும் யாாக்கும் விட்டுக் கொடாத தாழாத புலமையுமவர்ககிருந்துளளது மூவேந்தரிடமும் பரிசும் காணமும் அவர் பெற்றவராவர். ‘மன்னர் மூவரும் வழங்கிய வரிசையால் உயர்ந்தோன், முத்தமிழ்ப் பாவலர் எவரும் பின்னர் வந்தொரு வடிவு கொண்டனர் எனப் பிறந்தோன்’ எனப் பாயிரம் பேசுகின்றது. அனந்தன் என்ற புலவனை தோற்கடித்துக் காதையறுக்கச் செல்கையில் யான் அனநதன் (பாம்பு) காது கேளாது என அவன் கெஞ்சுகையில், விலலி விட்டு விட்டதாகக் கதை. இக் கதையொன்றிருப்பதால்தான் காதறுக்கும் கதையைப் பொய்யெனத் தள்ளிவிடற்கில்லை. அவரே அருணகிரியிடம் அகப் பட்டுக்கொண்டார். வில்லி சந்தத்தில் மன்னன், அருணகிரி அதனில் வேந்தன் (சக்கரவர்த்தி), அவரது தந்தனத்தானுப் (கந்தரந்தாதி 54-ஆம் பாடல், நிதத்தித்த) பாட்டிற்குப் பொருள சொல்ல வில்லியால் இயலவில்லை. அருணகிரி அவரைப் பொறுத்தருளியதாகக் கதை.

வரந்தருவார் என்ற அழகிய பெயருடையவர் வில்லிபின் மகன். அவர் தந்த விலலி பாரதப் பாயிரத்தில் அவன் மைந்தன் என்றே கூறிக் கொள்கிருர். கம்பர்க் கம்பிகாபதி போல வில்லிக்கும் சிறந்த மகனுக இவரானுர். அம்பிகாபதி போலத் தனி நூலொன்றும் பாடவில்லை. பாடிய பாயிரப் பாடல் (23-ஆகும்). அனைத்தும் ஒப் பற்றவை. எளிய இனிய நடையில் திராட்சாபாகமாக அமைந்தவை. என்றும் உள்ளத்திலிருக்கும் தொடர்கள் பலவற்றையுடையவை. வில்லியின் 4000-ககு மேல் 2000 பாடியதாகக் கூறுவதனை அறிஞர் ஒப்புக் கொள்ளவில்லை. பொருப்பிலே பிறந்து, மூவரும் நெருக்கி

மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நல்நாடு, பிறந்த திசைக் கிசை நிற்ப, சிறந்த செவிக்கமுதமெனத் தமிழ் மொழியின் விருத் தத்தால், செருக்காக அவர் மைந்தன் இப்பதிகம் செப்பினனே என்பன அவற்றுள் சில வரிகள். செருக்காக அவர் மைந்தன் என் கையில் தந்தையின் மேன்மையும் தன்னம்பிக்கையும் அங்குத் துளிக் கின்றன.

வியாசரும் வில்லியும் :

ஆங்கிலத்தில் வி (V) என்றால் விக்டரி (வெற்றி) என்பர். இருவர் பெயர்களும் 'வி' என்ற எழுத்தில் தொடங்குகின்றன. இது கொண்டு, இருவரும் வெற்றிபெறத் தம் நூல்களை இயற்றிமுடித் தனர் என நகைச்சுவைபடக் கூறலாம். 18 பருவங்களாக வியாசர் தம் பாரதத்தை வகுத்தார். 1. ஆதி 2. சபா 3. ஆரணிய 4. விராட 5. உத்யோக 6. பீஷ்ம 7. துரோண 8 கர்ண 9. சல்லிய 10. சௌப்திக 11. ஸ்திரீ 12. சாந்தி 13. அனு சாசன் 14. அசுவமேத 15. ஆசிரமவாச 16. மௌசல 17. மகா பிரதானிக 18. சுவர்க்காரோகண — பர்வங்கள் என அவை அழைக்கப்பெறுகின்றன. இவற்றுள் 11 முதல் எட்டுப் பருவங்களை வில்லி விட்டு விட்டுப் பத்துப் பத்துப் பருவங்களே எடுத்துக் கொண் டார். வியாசர் வேதங்களைத் தொகுத்தவர், பிராமணங்கள் பிரம்ம சூத்திரம் முதலியவற்றுடன் தொடர்புடையவர். பாரதக் கதைக் காலத்திலேயே வாழ்ந்தவர், பாண்டு திரிதராட்டிரன் ஆகியோர்க் குத் தந்தை. வால்மீகியும் இராமாயணம் நடந்த காலத்தில் இருந்த வர். ஆனால் வில்லி அவ்வாறல்லர். நீண்டநாள் பிந்தியவர். ஆனால் தூய்மையும் புலமையும் உடையவர். முதலில் வியாசபாரதம் 8800 சுலோகங்களாகவும் பின்னர் 24000 ஆகவும் இப்போது இலட்சத் திற்கு மேலாகவும் இருப்பதாகக் கூறுவர். இவ் வளர்ச்சி கி.மு. 4 முதல் கி.பி. 4 என 10 நூற்றாண்டுகளில் ஏற்பட்டதென்பர். 8800 சுலோகமென்பது சுமார் 4400 நான்கு வரிப் பாடல்கட்கொப்பாகும். அதனையே வில்லி முதன் முதலில் சுமார் 4350 பாடல்களாகத் தம் பாரதத்தை இயற்றினர். நல்லாப் பிள்ளையும் முருகப்பிள்ளையும் சேர்ந்து சுமார் 12000 பாடல்களில் அதனைச் செய்தனர். வியாச பாரதம் 24000 ஆக வளர்ந்தது போலாகும். மூன்று கட்டங்களில் வியாசபாரதமும் இன்றைய நிலையுற்றதெனில் நல்லாப்பிள்ளை பாரதமும் வில்லிப்பாடல்களையுள்ளடக்கி மூன்று கட்டங்களிலேயே உருவாகியிருக்கின்றது. 19-வது பகுதியாகப் பிற்காலத்தில் அரி வம்சம் என்றொரு நூல் பாரதத்தில இணைந்தது. பகவத்கீதை

யென்பது தனியானதொரு நூலென்றும் அது கி.பி.யில் பாணன் காலத்தில் பாரதத்துடன் இணைக்கப்பெற்றதெனவும் மாக்டனல் என்ற பேராசிரியர் கூறுகிறார்.

பல ஆசிரியர்கள் முதலில் மற்றப் பகுதிகள் (பருவங்கள்) மாதிரி சுருங்கிய அளவில் பகவத்கீதை இருந்ததெனவும் பிற்காலத்தே பாரதம் வளர்ந்த மாதிரி 700 சுலோகங்களாக உருவெடுத்ததென வும் கருதுவர்.

அகத்திய பட்டரது பாலபாரதம் என ஒன்றிருந்தது. அதனைப் பின்பற்றியே வில்லி தம் பாரதத்தை யெழுதினார் என்பது ஒரு வழக்கு, ஓரளவு அதனையொப்புக் கொள்வோரும் ஓரளவு அதனை மறுப்போரும் என அறிஞர் இரு பிரிவினராவர்.

இரண்டனுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கோபால கிருஷ்ணமாச்சாரியார் தம் பாரதப் பதிப்புரையில் விவரித்துள்ளார். இருக்காதி மறை மொழிந்தோன் இயம்பிய பெருங்கதையைச் சுருக் காகப் புராணமுறை சொல்லுக எனவே வில்லியைக் கேட்டுக் கொண்டுள்ளனர். எனவே வியாதன் உரைத்ததையே சுருக்கமாகப் பத்துப் பருவத்தில் வில்லி எழுதியிருக்கிறார். பாலபாரதக் குறிப்பு பாயிரத்தொன்றுமில்லை. பால பாரதம் 20 சருக்கங்களால் இயன் றிருக்க வில்லி 46 சருக்கங்களைக் கொண்டிருக்கிறார். பால பாரதத் தின் முதல் ஆறு சருக்கங்களுடன் ஒற்றுமையும் போகப்போக வேற்றுமையும் கொண்டது வில்லி பாரதம் என அறிஞர் கூறுவர். அவர் கதைச் சுருக்கத்திற்கு அதனைத் தழுவியிருக்கலாம் என்பர்.

மற்றும் வில்லிக்குமுன் ஆசிரியப் பாவில் இயன்ற பெருந் தேவ னார் பாரதம் இருந்தது. வெண்பாவால் இயன்ற (தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திய கி.பி. எட்டாம் நூற்றாண்டைய) பாரதம் (சுமார் 12000 வெண்பாக்களில்) இயன்றதாகக் கூறுவர். இப்போது சுமார் 800 பாடல்களே கிடைக்கின்றன. ஆசிரியத்தாலியன்றது. சில பாடல்களாகத் தொல்காப்பிய, யாப்பருங்கல வீரசோழிய உரை யாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பெறுகின்றது. ஆசிரியப்பா பாரதம் கி. பி. ஆறும் நூற்றாண்டினதாகலாம். இவையிரண்டும் எவ்வாறு வழக்கு வீழ்ந்தன, மறைந்தன,குறைந்தன எனத் தெரிய விலலை. மற்றும் பல்லவர்கள் 7-8-9 நூற்றாண்டுகளில் பல ஊர் களிலும் பாரதம் சொல்வதற்காக நிவந்தம் விட்ட செய்தி நிரம்பக் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றன. ஆசிரியப்பாவும் வெண்

பாவும் விருத்தப்பாப்போலப் பாடிச் செல்வதற்கு இசையாமல் போய்விட்டனவா? அதனாற்றான் சொல்லவும் கேட்கவும் கூடியதாக 'விருத்தத்தால் புராணமுறை சொல்லும்' என வில்லியைக் கேட்டிருக்கிறார்கள். தமிழில வேண்டாமென வடமொழி வியாசபாரதக் கதையையே பல்லவர் காலத்தில் விரும்பினார்களெனில் 8-9 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்க்கு நல்ல தமிழ்ப் பற்றிருந்துள்ளது. அல்லது டாக்டர் சாமிநாதய்யர் கதையில் சொல்லும 'டிஙகினானே' பாரதம் சொல்லிவந்தார்களா தெரியவில்லை. ஏற்றப்பாட்டு, முதலிய பாடுகிறவர்கள் பஞ்சபாண்டவர் வனவாசம் என வழங்கும் பாடல்களைப் போலப் பாடுவதே அது. பீமன் கீசகனைத் தாக்க 'மரத்தைப் பிடுங்கினானே' என்பது உடுக்கையடித்துப் பாரதம் சொல்லுகிறவர்கள், கதைப்போக்கில் மரத்தைப்பி டிங்கினானே டிங்கினானே எனப் பலமுறை சொன்னதையே சொல்லுவார்கள். இது திரௌபதியம்மன் கோயில்களில் ஆண்டுத் திருவிழாக் காலங்களில் பாரதப் பூசாரிகள் எனப்படுவோர் கூறும் பாரதம். வில்லிக்குப்பின் அரங்கநாதக் கவிராயர் என்பவர் 2500 பாடல்களில் பாரதமொன்றைப் பாடினார். அவரே முதலில் வில்லிபுத்தூராருக்கு ஆழ்வார் எனப் பட்டம் (தம் பாரதப் பாடல் பாயிரத்தில) கொடுத்தவராகலாம். பழைய காஞ்சிப் புராண ஆசிரியர் 'மாவிந்தம்' என்ற பாரதமொன்றைப் பாடினார். இவையெல்லாம் வழக்கொழிந்தன. தெள்ளாறெறிந்த நந்திப் பல்லவன் பாரதம் கூட மறைந்துவிட்டிருக்கினறது. ஆனால் இன்றுவரை வில்லிபாரதம் கோயில்களில் சொல்லபபட்டு வருகின்றது. வில்லிக்கு முன்னிலையில் பாரதத்தைப் பாரதமாகப் பாடிய நல்லாப்பிள்ளையும் மங்கிவிட்டனர்.

பாரதமும் இராமாயணமும் :

பாரத நாட்டின் பழங்கதையாகலின் பாரதம் எனப் பெயர் வந்தது என்பது ஒரு கருத்து. பரதர் என்றதோர் இனத்தவர், அவர் வழியினர் பாண்டவரும் கௌரவரும் எனவே அவர் கதை பாரதமாயிற்றென்பதொன்று. நகைச்சுவையாகக் கூறுவன, பார் அதப் பட்டது பற்றிய போர்ப்பாடல்; பா-ரதம் ரதம் (போர்) பற்றிய பாடல்; ரதம்-ரசம் இனிமை எனவே ரசமான பாடல்களையுடையது எனப் பலவாகும். இராமாயணக் கதையைவிடப் பாரதக்கதை பழங்காலத்திலிருந்து அனைவருள்ளத்தையும் அசைத்துவந்துள்ளது. நாள்தோறும் நாட்டு வாழ்வில நிகழும், நிகழவேண்டிய நினைக்க வேண்டிய ஒழுக்கங்களும் செயல்களும் அதனில பேசப்பெறுகின்றன. ஆசிரியரிடம் கல்வி பயிலல், அஙகேற்படும் போட்டி, உடன்பயில்வோரிடம் பிறங்

தோரிடம் செய்யும் சூழ்ச்சிகள், அவருடனேயே கூடிவாழ வேண்டிய கட்டாயம், அவருடன செய்யும் சண்டைகள், சொத்துப் (பொருள்) பிரிவினை ஆகியவை அன்றுடம் நாட்டின் ஏதோவோரிடத்தில் நிகழக்கூடியனவாகும். அவற்றின் தீர்வுக்கு ஓரளவு வழி சொல்லக் கூடியது பாரதக் கதை. எனவே பண்டும் பாண்டியர் தம் அருஞ்செயலாகப் மாபாரதம் தமிழ்ப்படுத்தியும் மதுராபுரிச் சங்கம் வைத்தும், எனச் சங்கம் வைத்துப் பாரதத்தைத் தமிழ்ப்படுத்தியதைக் கூறிக் கொள்ளுகின்றனர். இதுவே ஆசிரியப்பாவிலியன்ற பெருந்தேவனூர் பாரதம். சங்கப் பாடல்களிலும் பாரதக் குறிப்பு வருகின்றது. பாரதப் போரில் சேரன் பெருஞ்சோறளித்திருக்கிறுன். அவன் புறநானூற்றுப் பாடலில் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் எனப் புகழப்படுகிருன். மூவேந்தரும் போரில் பாண்டவர்க்குத் துணையாகியுள்ளனர். 18 நாள் போர் வருணனைகளில் பலவிடங்களில் சோழ பாண்டியர் கௌரவரை எதிர்த்து வென்றமையும் போரில் அவர்கள் வீழ்ந்தமையும் பேசப்படுகின்றன. கலித்தொகை 52 ஆம் பாடலில் 'மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத்திடுவான் போற் கூர்நுதி மடுத்ததன் திறஞ்சாடி முரண்தீர்ந்த நீண் மருப்பெழில யானை' எனத் துரியோதனை வீமன் தொடையில் அடித்துக் கொன்ற செய்தி குறிககப் பெறுகின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனூர் எனவே ஒருவர் இருந்திருக்கிறுர். தொகைநூல்களைத் தொகுத்தும் அவற்றுள் பலவற்றிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியும் அவர் செய்த பணி போற்றற்குரியதாகும். பாண்டியன் பெண்ணை அருச்சுனன் தீர்த்த யாத்திரையில் மணந்திருக்கிறுன். அவ்வகையில் தமிழகத்திற்குப் பாணடவர் மருகராய் விட்டனர். பாண்டவர் தந்தை பெயராகிய பாண்டு என்பதிலிருநதே பாண்டியர் என்பது பிறந்தது என்ற அளவிற்கு அறிஞர் சென்றுவிட்டனர். இங்ஙனம் பாண்டியர் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்புடையவராயிருநதமையாற்றுன் பாரதம் தமிழக வாழ்க்கையுடன் மிகவும் ஒட்டிவிட்டிருக்கின்றது. பிற்காலததில பஞ்சபாணடவர் வனவாசம் போனற எளிய (புகழேந்தி) பாடல்கள் பெருகின.

இராமாயணத்தைப் பொறுத்த வரையில் தலைச்சங்கப் புலவரொருவர் (கி.மு. வில்) வானமீகியார் எனற பெயரில் இருந்திருக்கிறுர். தொகை நூல்களில் ஓரிரு குறிப்புகள் வருகின்றன.

சீதையும் பாஞ்சாலியும் கற்புடையவர்கள். பாஞ்சாலியின் கற்பு பாரதத்தில் பெரிதாகப் புகழபபடுகின்றது. 'இவளே கற்பினுக்கும் மரபினுககும் தெய்வம்' (சூது-249) என வில்லி வாயாரப்

பாராட்டுகின்றூர். இருவர் கற்பிலும் பாஞ்சாலியின் கற்பு எவ்வாறே தமிழருக்குப் பிடித்துவிட்டது. எனவே பாரதக் கதையையும் இலக்கியத்தையும் பண்டுமுதலே போற்றியும் வளர்த்தும் வந்துள்ளனர். ஊர்தோறும் திரௌபதியம்மன் கோயில்கள் எழுந்துள்ளன. இவ்வுணர்ச்சிதான் வில்லிபாரதம் போன்றன தோன்றற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டும்.

தொடர்பு :

இராமாயணத்திற்கும் பாரதத்திற்கும் இலக்கியத்தில் மட்டுமின்றிக் கதை நிகழ்ச்சியிலேயே தொடர்பு இருந்ததென்பதனை நம்ப வேண்டும் போலுள்ளது. அருச்சுனன் பாசுபதம் பெற்றபின் (ஆரணியபருவம்) முண்டகச் சருக்கத்தில் வீமன் திரௌபதியின் விழைவுக்கிணங்கத் தாமரை மலருக்காக அளகையை நோக்கிச் செல்லுகையில் அநுமனைக் காண்கிருன். இருவரும் வாயுபுத்திரர் எனவறிந்து மகிழ்ச்சியும் மரியாதையும் காட்டுகின்றனர். வீமன் இராமன் பெருமையை முன்பே அறிந்திருக்கிருன். அளகை செல்லும் வழியை அனுமன் கூறியனுப்புகிருன். இதுகொண்டு இவ்விரு கதை நிகழ்ச்சிகளில் காலத்தை அறிஞர் காண முற்படுகினறனர். இராமாயணம் முந்தியதென்பதனை அனுமனுடைய மூத்த தன்மையால் அறியலாமென்பர் அவர். அவன் சிரஞ்சீவியாகலின் நீண்ட காலம் வாழ்ந்தபின் வீமனைக் கண்டுமிருக்கலாம். எனினும் சில தலைமுறைகளுக்குள் (100—150) ஆண்டுகளில் இராமாயண பாரத நிகழ்ச்சிகள் நடந்திருக்கும். ஆரியர் பஞ்சநதிப் பகுதியைக் கடந்தே கங்கைப் பகுதிக்கும் குடியேறினர். எனவே பஞ்ச நதிப் பகுதியாகிய பாஞ்சாலமும் பாரதமும் முன்னதாக வேண்டும். கங்கைக்குரிய இராமாயணம் பிந்தியதென்பர். எப்படியும் 100 ஆண்டுகட்குட்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அதிகம் வேறுபாடு கொள்ள வேண்டியதில்லை.

மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் எனக் கூறுகிறோம். அதே போல இவ்விரு இதிகாசங்களுககும் கூருவிட்டாலும் இரண்டும் கதையுட்கோளாலும், வில்லியின் கற்பனையாலும் ஓரளவு தொடர்புடையவாகக் காணபபெறுகின்றன. நேரான பாத்திரத் தொடர்பு முற்கூறியாங்கு அனுமனுக்கும் வீமனுக்கும் ஏற்பட்டுள்ளது. வியாசபாரதத்தில் இராமாயணக் கதையையே ஒரு பகுதியாகக் கூறியுள்ளதாக அறிகிறோம். மற்றும் வில்லி உவமைமுகத்தாலும் கதையாலும் அடிக்கடி இராமாயண

நினைவைக் கொண்டு வருகிறார். பிறன்மனை நயக்கும் கட்டம் ஒன்று பாரதத்தில் வருகின்றது. அங்கு இராமாயணத்தில் அவ்வாறொழுகிய அரக்கன்பட்ட பாட்டினையெடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். அருச்சுனன் தீர்த்த யாத்திரையில் தமிழகத்தைச் சுற்றும்பொழுது இராமன் கடந்த சேதுப்பகுதியைக் கடந்தான் என வில்லி கற்பனை செய்கிறார். இடும்பைக்குப் பீமன், இராமனை வற்புறுத்திய சூர்ப்பணகைக் கதையையே நினைவூட்டுகிறான். பீமன், அனுமனின் ஆற்றலுடையனெனக் குந்தி பகாசுரனைப் பற்றிப் பேசுகையில் கூறுகிறாள். முண்டகச் சருக்கக் கடவுள் வாழ்த்தில் இராமன் அகலிகை சாபம் நீக்கியதைப் பாராட்டுகிறார். சடாசுரன் பாஞ்சாலியைத் தூக்கிச் செல்லுகையில் இராவணன் கதையை நகுல சகாதேவர் எடுத்துரைக்கின்றனர்.

இங்ஙனம் அரக்கரை யழித்தல், பிறன் மனை நயத்தல், மாய மானைத் தொடர்தல், அரக்கர் மானுடரை மணக்க விழைதல் ஆகிய கட்டங்களும், தவம் போர் ஆகியவைபற்றிய கட்டங்களும் இராமாயண பாரதங்கள் பலவகைகளில் ஓரேயடிப்படையையும் குறிக்கோள்களையும் கொண்டவையென எடுத்துக் காட்டுவனவாகும்.

மானுடம் வென்றது

இராமாயண பாரதங்களுக்கு ஒரு பொதுவான குறிக்கோள் உள்ளது. மனிதனை வெல்லச் செய்வதுதான் அது. மனிதனை மனிதருட்சிறந்தவனாகத், தேவனாக ஆக்குவதுவாகும். மானுடம் வென்றதம்மா என இராமாயணத்தில் அரக்கன் கூறுகிறான். அங்கு அரக்கத் தன்மையை மானுடம் வென்றது. பாரதத்தில் மானிடம் மானிடத்தன்மையையும் வென்று தேவத்தன்மையடைந்தது. நரனை நாராயணனாக்குவது பற்றிப் பலவிடங்களில் வில்லி பேசுகிறார். பகவத்கீதையின் உட்கோளும் அதுவேயாகும். அர்ச்சுனன், நரன், கண்ணன், நாராயணன், இவர்கள், முன்பு இராமலக்குவராக இருந்தனராம். நரனும் நாராயணனும் ஒருவரே. நரனும் நாராயணனுமாக மாற்றுவதற்காக நாராயணன் நரனாகவும் உருவெடுக்கிறான். விசயனிடம் நரனும் நாரணனுமானோம் என முதற்போரில் கண்ணன் கூறுகிறான். இங்ஙனம் மனிதவினத்தை உயர்நிலையடையச் செய்யவே பாரதங்கள் நடந்தன, பாரதங்கள் எழுதப் பெற்றன. தமிழில் சிறந்த காப்பியங்கள் எழுந்தமையும் இதற்காகவேயாம். சீவகனும் கோவலனும் அருச்சுனர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறந்த வீரர்கள் கலைஞர்கள்

மெய்ஞ்ஞானிகள், தவசிகள் (துறவிகள்), பல பெண்களை மணந்தும் ஒழுக்கமுடையவர்களாகப் போற்றப் பெற்றவர்கள், தியாகிகள் (தமக்கென, வாழாப் பிறர்க்குரியாளர்), வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெற்றவர்கள்; வலவனேவா வானவூர்தி யெய்தியவர்கள். நிலவரை நீள்புகழாற்றிப் புத்தேளுலகு புலவரைப் (தேவரைப்) போற்றுமல் இவர்களைப் போற்றுமாறு விளங்கியவர்கள். சிறந்த போர் வீரனாக விருந்தமை அவன் ஞானத்திற்குத் தடையாகவில்லை. இங்ஙனம் வாழ்வின் எப்பகுதியிலுள்ளோரும் இறைத்தன்மையையும் அருளையும் அடையலாம் எனக் காட்டுவதே பாரதம். வாழ்க்கை ஒரு போர்க்களம் போராட்டம் (Life Struggle), அதனின்றெழுவது பகவத்கீதை. அதன் அடிபபடைத் தத்துவம் நரனை நாராயணனுக்குவதாம். இடும்பன், இடும்பி வீமனை விரும்புவதைப் பற்றி எள்ளுவதில்லை, 'பேதை மானுடன் பேசுகிற்பதே' என்கிருன். நெஞ்சில் ஈரமும் நீதியும் குடிபுகா நிருதர் என இராட்சச கணத்தைப் பற்றிப் பேசுகிருர் (காண்டவ 23). அங்கு ஈரத்தையும் நீதியையும் குடியேறச் செய்வது மானுடம் அருச்சுனனைப் பற்றிச் சிவனே, நரன எனும் நாமமும் படைத்தோன் எனகிருர் (அ. தவநிலை. 75). அருச்சுனனை மனிதன் என இகழவேண்டாமென இந்திரன் அவனை யானை மீதேற்றி நகர் வலம் விடுககிருன். மறத்தொடு வஞ்சம் மானம் நன்றுவன வளர்தல் நாளும் அறத்தொடு பகைக்கும் நெஞ்சர் அரககராம் (முண்டக-87). அருள் இலா அரக்கர், (93) அருளின் மாறுதலைப் பெயர்க்கும் மறுவின் பாலையென்ற சிறுபாணுற்றுப்படை, கொடியவர்கள் அருளுக்கு மாறு நெறியினர் எனகின்றது.

நாராயணனை நராயணன் என்றே கம்பன் ஓராமல்சொன்ன உறுதியால் எனத் தமிழ்ப் பாடல் ஒன்று உள்ளது. அங்கு கம்பன் ஓராமல் சொல்லவில்லை, ஓர்ந்தே சொல்லியிருககிருன். நரனே நாராயணன் என்பதை மானுடம் வென்றதம்மா என்றவிடங்களில் நன்கு உணர்த்தியவன். உணர்ந்தவன கம்பன் எனவே தான் அவ்வாறவன் பாடினுன். அது செய்யுள் விகாரமென்பர். வழுக்கி வீழினும் நின்திருப்பெயரே சொல்லுவதுபோலப் பெரும்புலவர்கள் செயயுள் விகாரமாக ஒன்றெழுதினும் அஃதோர் பொருளழகினை யுடையதாக அமைந்து விடுகின்றது.

பகவத்கீதை

முதற்போரில் உற்றுர் உறவினர்களைக் கண்டு அவர்களுடன் போரிட விரும்புவதுபற்றி மயங்கிவிட, அவனைப் போர் அறம்

அரசியலறம் ஆகியவற்றைக் கூறித் தெளிவித்துப் போரிடச் செய்தான் கண்ணன். இவ்வுபதேசப் பகுதியே பகவத்கீதையென வழங்குகிறது. வில்லி காலத்தில் பகவதகீதை நூல் உருவாகி விட்டது. அதனைக் குறித்து ஒரு பகுதியாக முதற்போர்ச் சருக்கத்தில் வில்லி இணைத்திருக்கலாம். அவ்வாறு செய்யாமையால் பகவத்கீதை பாரதப் பகுதியென ஒப்புதற்கில்லை. மாக்டனெல் கூறுமாறு அது கி பி யில் பாணன் காலத்திற்குள் பாரதத்துடன் இணைந்திருக்க வேண்டும்.

கண்ணன் தன்னிலை அவற்குக் காட்டித் தத்துவம் தெளிவித்தலைப் பற்றி ஆறு பாடல்கள் பாடியுள்ளார். நான்கு புருடார்த்தங்களைப் பற்றிப் பகவத்கீதை பேச அர்ச்சுனன் அறம் பொருள் இன்பமாகிய மூன்றனை (தமிழ் மரபுப்படி) யுரைத்து இறைநெறிப்பயனை எனக்கறிவித்தாயென அருச்சுனன் கூறுகிறான். மாயையில் உயிர் கட்டுண்டிருத்தலையும் அறிவாகிய இறையை அறியவும் அணுகவும் முடியாதபடி அது தடுத்தலையும் உற்றார் உறவினரிடம் வைகும் பாசம் மாயையின் செயல் எனவும் கூறுகிறார் ஆசிரியர். பொறி புலன்களையும் முக்குணங்களையும் அறுபகைகளையும் கடக்கும்போது அறிவன் தோன்றுகிறான். அவனை அறிந்த அறிஞன் அவன பாலில நெய்போல உலகில் கலந்திருப்பதனை யுணாகிறன. ஐம்பெரும் பூதவுடலில் இறைவன் ஞானியாய் நடத்துகின்றான். அந்நிலையில் உலகில் பகையுமில்லை நட்புமில்லை. இது விலலியின் கண்ணன் கூறியதாகக் கொண்ட தத்துவம். பகவத கீதையின பற்றற்ற பணி போன்ற உட்கோள்கள் இங்குணர்த்தப் பெறவில்லை.

பகவத்கீதையைப் பற்றி அறிஞர் கூறுவன :— பகவத்கீதை உபநிடதசாரம். பிரவிருத்தி நிவிருததி மார்ககம், கர்ம (பக்தி) ஞானயோகங்களால் இறைவனையடையலாம்.

தத்துவம் இதம் புருடார்த்தமெனக் கீதையை முப்பிரிவாக ஆக்குவர். ஆன்மா அழியாததெனப் பற்றற்றுப் பணிசெய். அதனால் இருள்சேர் இருவினை நீங்கும். எல்லா ஆன்மாவும் சமம். அவதாரம் உலகம் உய்யும் பொருட்டாகும்.

பகவான் உயிர் அந்தர்யாமி என வறிந்தவன் ஞானி. அவனன்பு அளவற்றது. அபிமானத்தை விட்டு அவனிடம் மனஞ் செலுத்துபவன் பக்தன்.

அருளால் முக்குணத்தினீங்க வேண்டும். அசுரப் பிறப்பினீங்கி தெய்வப் பிறப்பையடையலாம். கன்மங்களைப் பகவானுக்கர்ப்பணம் செய்ய வேண்டும். கீதையின் 700 சுலோகக்கருத்தைக் கண்ணனும் விசயனும் போர்முனையில் விவாதித்திருக்கலாமென ஆசிரியர் பலர் கருதுவர். ஓரிரு சிறுகருத்துக்களைப் பிற்காலத்தில் விரித்துப் பெயர் கொடுத்திருக்கலாம். பாரதம் வளர்ந்ததோடு கீதையும் வளர்ந்துள்ளது.

வியாக்யானம் :

ஆழ்வார்களும் அவர்களைவிட வியாக்யான ஆசிரியர்களும் பாரத நிகழ்ச்சிகளைப் பாடியும் தத்துவப் பொருள் விளக்கியும் மிகவாக இன்புற்றுள்ளனர். அவற்றுள்ளும் கீதாசாரியனுகப் பார்த்த சாரதியாகக் கண்ணனைப் பாடியின்புற்றதுதான் மிகுதி. 'கோல் கையிற் கொண்டு பார்த்தன் தேர்முன் நின்ருனை' (2-3-1) எனத் திருமங்கை மன்னர் பாராட்டுகிருர்.

'ரதியைச் சீறினுல் சாரதியையிறே அழியச் செய்வது, அவனைப் பின்னேயிட்டுத் தன்னை அம்புக்கிலக்காககி நின்றவனை' என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.

(2-3-5) 'வன்துணை பஞ்ச பாண்டவர்க்காகி தூது சென்று' ஆஸ்ரிதரான பாண்டவர்க்காக அவர்கள் வாயில் சொல்லி விட்ட வார்த்தையை அங்கே சென்று சொல்வது இங்கே வந்தறிப்பதாம். இப்படி ஆஸ்ரித விஷயத்தில் தாழ நினற நிலையில்தானே துணையென்னுமிடத்தில்'' எனவும்,

(2-3-6) 'எந்தமக்குரிமை செய்யெனத் தரியா தெம்பெருமான் அருளென்ன' ஆண்பிள்ளைகளான பர்த்தாக்கள் ஸங்நிஹிதராயிருக்க துரஸ்தனுன கிருஷ்ணன் பேரைச் சொல்லுவானென்-பட்டரைக் கேட்க' பர்த்தாவைக் கையைப் பிடித்துப் போகா நின்ருன் இடறினுல் அம்மேயெனக் கடவதுகாண்' எனவும்,

வியாக்யானம் செய்தின்புறுகின்றனர். இங்ஙனம் கண்ணனைத் தியாகி (உயிரன்பன்) யாகவும் அம்மையாகவும் எளியோனுகவும் காட்டித் தத்துவங்கூறுவதில் வைணவப் பிரபந்த வியாக்யானக் காரர்களுக்கு அளப்பற்ற மகிழ்ச்சி. ஒரு இடத்தில் கண்ணனைத் தட்டுமாற்றியனுபவிக்கிருர் ஆழ்வார் என்றெழுதுவர். திருமாலை அரசனுக இராமனுகக் கூறியனுபவித்துவிட்டு மாற்றி இடையனுகக்

கண்ணுகக் கொண்டு அனுபவிக்கிருர் என்பதாம். வியாக்யான காலத்திற்குள் வில்லிபுத்தூரரும் விளங்கியிருக்கிருர்.

குறட் கருத்துக்கள் :

இலக்கியங்களில் குறள்களை எடுத்தாளுவதென்பது நூலுக்கும் ஆசிரியனுக்கும் மேன்மையைத் தருவதாகும். குறள் எல்லாப் பொருளையும் எளிமையும் தெளிவும்பட எடுததுரைத்தலால் அவற்றை எடுத்தாளுதல் தம் நூலுக்கும் ஏற்றந்தருமென்பதைப் புலவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். கம்பர் சுமார் 1200 இடங்களுக்கு மேல் குறளை எடுத்தாண்டோ கருத்தைக் குறித்தோ சென்றிருக்கிருர். வில்லியும் பலவிடங்களில் குறளை எடுததுக் குறித்துள்ளார்.

வாரணுவதச் சருக்கத்தில் (118) அரக்குமாளிகையைப் பற்றிப் பாண்டவா ஐயுறுகின்றனர். 'தொழுத கையுள்ளும் படையுள சூழ்ச்சியும் பெரிதால' என்கின்றனர். அது 'தொழுத கையுள்ளும் படையொடுங்கும்' என்ற குறளை அப்படியே யெடுத்தாண்டதாகும்.

புரோசனனைத் தம் மாளிகையில் துயிலச் செய்த பாண்டவர் பாந்தளோடு ஒரு மனைவயிற் பயில்பவர்போலப் பயின்றனராம். 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடுடனுறைந் தற்று' என்ற குறள் அப்படியே அமைந்த இடம் இதுவாகும்.

'பகதத்தன்' தனக்குத்தானே நிகர் என்னத்தருக்கொடு நின்ருன். (8-5-44) தனக்குவமையில்லாதான் என்ற குறளை இங்கு ஒப்பிடலாம்.

மற்றும் என்முன் நமன் வரினும் பிளப்பல், என்கிருன் விசயன் 5-61. இதனைக் கூற்றுடன்று மேல்வரினும் கூடிஎதிர் நிற்கும் ஆற்றலதுவே படை — என்ற குறளுடன் இணைத்துப் பார்க்க.

3. *பார் அகத்தினும் தன் நாமம் பரப்பிய பார்த்தன் (5-67)*
   நிலவரை நீள்புகழ் ஆற்றின். (குறள்)

4. *நன்றறிவார் வீற்றிருக்கும் நான்மாடக்கூடல் (7-21)*
   நன்றறிவாரிற் கயவர் திருவுடையர் —

இங்குச் சான்ருேரை நன்றறிவார் என இருவரும் வழங்குகின்றனர்.

5. *பேசுதற்கரிய பெரியவர் நினைக்கின் யார்கொலோ*
   பிழைத்திடாதவரே (9-55)

உவந்தாரை யாக்கலும், எண்ணின் தவத்தான் வரும் (குறள்)

6. கல்நாட்டும்படியாக இருவோரும் பொருதறிதும் (10-128)
பலர் என்னை முன்னின்று கல்நின்றவர் (குறள்)

7. முனைவரு கூர்முள் வேலை முளையிலே களையினல்லால்
நனிவர வயிர்த்தபோது நவியமும் மடியுமன்றே 11-10
இளைதாக முள்மரம் கொல்க (குறள்)

8. மதிமருள் இயற்கைத்தாகும் மாவெஞ்சூது (11-28)
அருள்கெடுத் தல்லல் உழப்பிக்கும் சூது (குறள்)

9. தேறலார் தமைத் தேறனுந் தேறினர்த் தேறலாமையும் 11-71
தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறலும் (குறள்)

10. வசையறும் புகழ்த்துணைவர் 11-72
வசையொழிய வாழ்வாரே வாழ்வார் (குறள்)

11. யாதொரு கருமமேனும் எண்ணியே துணிக என்றும் 11-265
எண்ணித் துணிக கருமம் (குறள்)

12. தீயினால் சுட்ட செம்புண் ஆறும் அத்தீயின் தீய
வாயினால் சுட்ட மாற்றம் மாறுமோ வடுவே யன்றோ 11-266
தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு (குறள்)

13. வடுமனம் கொடு வஞ்சகம் செய்பவர் கெடுவர் 12-14
தீயவை தீய பயத்தலால் (குறள்)
தீயவை செய்தார் கெடுதல் ,,

14. கண்ணுக்கு புனைமணிப்பூண் கண்ணோட்டம் 12-43
கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் (குறள்)

15. பண்ணுடை எழாலின் இன்னிசை வழியே பாடுவார் (12-63)
பண் என்னும் பாடற் கியைபின்றேல் (குறள்)

16. பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வாரே 12-95
பெற்றம் புலியின்தோல் போர்த்து மேய்ந்தற்று (குறள்)

17. இந்திரன் இதயம் போன்றுளாள் 12-143
நெஞ்சத்தார் காதலவராக (குறள்)

18 தொடங்கியான் புரிதீவினை என்னையே சுடுவதல்லது 16-10
முற்பகல் செய்தான்......தன்கேடு பிற்பகல கண்டுவிடும்

19. *ஒன்று உதவி செய்யினும் அவ்வுதவி மறவாமல்*
பின்றை அவர்செய் பிழைபொறுத்திடுவர் 23-6
அவர் செய்த ஒன்று நன்றுள்ளக் கெடும் (குறள்)

என இப் பாரதப் பாடல்களையும் குறள் ஒப்புமைகளையும் நோக்கின் ஆசிரியர் வள்ளுவரை நினைவு கொண்டே இப் பகுதிகளையெழுதி யிருக்கிறார் என்பது தெளியும்.

கவித்திறன் :

வான்மீகியினின்றும் வேறுபட்டுத் தமிழ் நெறிக்கேற்பக் கம்பன் காவியம் செய்தது பற்றிக கூறுவர். வில்லியும் வியாசரி னின்றும் வேறுபட்டுப் பலவிடங்களை அழகும் நயமும்படச் செய்தி ருக்கிறார் எனத் தெரிகின்றது. ஆனல் அதனை இன்னும் அத்தனை அறிஞர் ஆராய வில்லை.

விருத்தமெனும் ஒண்பாவிற்குயர் கம்பன் என்பது ஒரு பாராட்டு. கம்பற்கிரண்டாவதாக விருத்தத்தில் நிற்பவர் வில்லி யேயாவர். விருத்தப்பாவில் இவர்கள் காலம்வரை ஏராளமாக இலக்கியங்கள் இயன்றிருந்தன. பெருக்கதைகளை விரிவாகச் சொல்லுவதற்கு விருத்தப் பாக்கள்தாம் தகுதியுடையன. அததுடன் செம்மையான இசையும் தாளக் கட்டும் உடையது சந்தப் பாடல். அருணகிரிக்கடுத்துச் சநதத்தில் நிற்பவரும் விலலியே யாவர். படிக்காசு சந்தத்தில் பேர் பெற்றாலும் அவர்கட்கு ஊக்கமும் வழிகாட்டியுமானவர்கள் அருணகிரியும் வில்லியுமேயாவர். எண் சுருக்கத்திற் கெடுத்துக் காட்டியவர் வில்லி.

வில்லியின் மற்றொரு சிறப்பு கம்பனைப்போல் போர் வருணனை களை ஆயிரக்கணக்கான பாடல்களில் செய்ததாகும். மற்றப் பகுதிகளை எவ்வளவோ சுருக்கிய அவர் ஏனோ இத்தனை விரிவாகப் போரைப் பாடினார்? போர்ப் பாடல்கள் சந்தத்திற்கு மிகவும் உகந் தனவாகலாம். படைக்கலஞ் செலுத்தலையும் போர் வகைகளையும் திரும்பத் திரும்ப வாராமல் இவ்வளவு பாடுவதென்பது இதன்முன் தமிழிலில்லை. இவரிருவர்க்கும் எவ்வாறு கைவந்ததோ தெரிய வில்லை. காற்பங்குக்கு மேல் இவ்வகைப் பாடல்கள்.

வில்லிக்குச் சொல்லும் குறை, அவர் நாட்டுப் படலம் நகரப் படலம் சொல்லவில்லை என்பது. 4000 பாடல்களும் அவையடக்க மும் பாடியவர் இதனை ஏன் பாடவில்லையோ தெரியவில்லை. இடை

யிடையே பருவ காலம், நாடு, நகர வருணனைகளைச் சுருக்கமாகச் சிலவிடங்களிற் செய்கிறார். இவர் யாரைப் பின்பற்றினாரோ அவர்கள் இவற்றைச் செய்யவில்லையோ, தெரியவில்லை.

அருச்சுனன் தமிழ்நாட்டில் நடுநாட்டில் யாத்திரை செய்தது, பாண்டியன் மகளை மணந்தது, பாஞ்சாலி தன்னைத் தோற்று என்னைத் தோற்றனனோ என அவையில் வாதிடுதல், சகாதேவன் கண்ணனிடம் தனியே பேசுகையில் பாரதம் முடிய வழி சொல்லுதல், கண்ணன் போர்க்களத்தில் கண்ணனுக்குக் கொடையளித்தல், ஆகிய கட்டங்களையோ அன்றி அவற்றைப் பற்றிய வருணனை களையோ வில்லி வியாசரினின்றும் வேறுபட்டுச் செய்த கற்பனை களாக அறிஞர் கருதுகின்றனர்.

தன் நாட்டுப் பற்றின் காரணமாகக் கற்றார் தொழும் அருணா சலமும், மெய்ஆய அதிகைத் திருவீரட்டமும், நேமிர்கையாளன் அகீந்திரபுரமும் கண்டு அருச்சுனன் தென்னாட்டில் திருமுனைப்பாடிப் பகுதியில் யாத்திரை செய்தது பற்றிக் கூறுவது வில்லியின் சொந்த மாகும்.

பாண்டியன் மகளை மணந்ததனை வியாசர் குறிப்பாகச் சொல்லி யிருக்கலாம். சூதினைத், தமிழ்நாட்டு நிகழ்ச்சியாதலின் வில்லி விரிவாகக் கூறியிருக்கலாம்.

'என்னைத் தோற்று மனுநெறிகூர் இசையோன் தன்னைத் தோற்றனனோ, தன்னைத் தோற்று தனது மனந்தளர்வால் என்னைத் தோற்றனனோ' என்ற பாஞ்சாலியின் கேள்வியும் பின்னைத் தோற்ற பொருள் கவரப்பெறுமோ நினைக்கப் பெறுதெனறாள் எனற வாதமும், பொல்லா வசையே புகழ் பூணப் புலலன்புகல இசற்கொன்றும் சொல்லாதிருந்த பேரவையைத தொழுதாள் அழுதாள் ...... எல்லா நெறியும் உணர்ந்தவருக்கு இதுவோ மண்ணின் இயல்பு என்றாள், என்பதுவும் புதுவதாகவே அமைந்திருக்கக்கூடும்.

சிந்தித்தபடி நீயும் சென்றால் என் ஒழிந்தாலென் செறிந்த நூறு
மைந்தர்க்குள் முயல்வன் நிலம் வழங்காமல் இருந்தாலென் வழங்கினாலென்
அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத் தெரியுமோ ஆதிமூர்த்தி

என்ற பாடல் சகாதேவனின் ஞானத்தையும்,

பார் ஆளக் கண்ணன் இகல் பார்த்தனை முன்கொன்றணங்கின்
காரார் குழல் களைந்து காலில் தளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மாபாரதம் என்றான்.

என்பது அவனது ஆழ்ந்த சூழ்த்திறனையும் காட்டுகின்றன.

ஆவியோ நிலையிற் கலங்கிய தாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவம் தன்னில் வந்திலையால்
' ஏழ்எழுபிறப்பும், இல்லையென்றிரப்போர்க்கு
இல்லையென்றுரையா இதயம் நீ அளித்தருள் '

இக்கட்டங்களை நோக்கின் 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்ற குறளும் புறநானூற்றில குமணனது உரையும் நினைவுக்கு வருகினறன. தமிழ் இலக்கியங்களில் தோய்ந்த வில்லியின் சொந்தக் கற்பனைகளாகத்தான் இவை யாவும் இருக்க வேண்டும்.

இவர் காலத்தில் அருணகிரி, காளமேகம் முதலானோர் விளங்கினர். இவரனைவரும் சைவ வைணவச் சமரச நோக்கினை நாட்டிலும் இலககியததிலும் கண்டவர்கள். முதலாழ்வார் முதலியோரும் இந்நிலையை நாட்டில் உருவாக்கினர். வில்லி, பாரதத்தில் செய்த பெருநதொண்டு சைவ வைணவ ஒருமைப்பாட்டு மனப் பான்மையை வளர்த்ததாம். வள்ளுவரையும் இளங்கோவையும் எச்சமயததினர் என அறியவியலாதது போலக் கம்பரும் வில்லியும் வைணவரா சைவரா என அறிய முடிவதிலலை. இராமனென்னும் செம்மைசேர் நாமததிலும் சமயததிலும் அடிமனப் பற்று இருப்பினும் மற்ற சிவனை அவர்கள பாராட்டி வழிபடத் தவறியதில்லை. வில்லி நீடாழி உலகத்துக் கணபதி வணககஞ் செயகிறார். அருச்சுனன் தவததில் அவர் சிவனது ஏற்றத்தை எடுத்துரைக்கிறார்.

ஆக்குமாறயனும், காக்குமாறு செங்கண் நிறை கருணையம் கடலாம், வீக குமாறரனும் எனத் தொடக்கப் பாடலிலேயே கூறுகிறார்.

மதனனும் கலை முருகனும் எனும்படி வளர்ந்தான் என முருகனை உவமை முகத்தான் பாடுகிறார். முருகனைப் பலவிடங்களில் பாராட்டு கிறார் வில்லி. 'மகிழ் இடும்பையும் வெந்திறல் வீமனும் விழைந்து

வள்ளியும் கந்தனும் எனப் பெரும் காதல் கூரவே,' இது அருண கிரியின் முருக பக்திக் காலம்.

விதியினை விதிக்கும் செங்கமல நாபி முகில் சேவடி துதிப்போம் என்பது சருக்க முதற் கடவுள் வாழ்த்து. ஒவ்வொரு சருக்கத் தொடக்கத்தும் திருமாலை வணங்குவதும் கடவுள் வாழ்த்துப் பாடுவதும் இவர் சமயத்தையும் வியாசரின் வேறுபட்ட இலக்கிய நெறியையும் காட்டலாம். இவர் திருமாலைப் பாடும் பாடல்கள் ஆழ்வார்களின் பாடல்களோடு ஒப்ப நிற்கின்றனவாதலாற்றான் இவர்க்கும் 'ஆழ்வார்' என்ற பட்டம் வந்ததாகலாம்.

சந்தத்திற்கு வில்லியின் பல பாடல் வரிசைகள் இசைந்து நிற்கின்றன. போர்ப் பாடல்கள் மட்டுமன்றி மற்றப் பாடல்களும்,

'பெருஞ்சுழிப் படக் கரைபுரண்டெழப்
பெருகும் யாறுபின் பிறழ் கலங்கல்போய்
அருஞ்சுவைப்படும் தெளிவினோடு சென்
றுழிவேலைவாய் அணையுமாறென'
'அடைய அன்று உம்பர் பதிகுடி புகப்பொருது தனது
அணிகொள் சங்கப் பவள இதழின் வைத்தருளுதலும்
உடையும் அண்டம் திசைகள செவிடு பட்டும் அமரர்
உலகு பொன்றும் பணிகள் பிலமும் முற்றுற இடியும்

என்றிவ்வாறே ஓசையும் தாளமும் ஒத்துச் செல்வதைக் காணலாம்.

புலவன் திறமை உவமைகளை வெளிக்கொணருவதிலும் உவமைகளைக் கையாளுவதிலும் கணிக்கப்படுவதியற்கை.

உடம்பு பெற்றது ஓர் இருள்முகத்திலே ஓர் இரண்டு
வெஞ்சுடர் உதிக்கவும்
நெடும்பிறைக் கொழுந்து ஓர் இரண்டு வால்
நிலவெறிக்கவும் நின்ற நீர்மையான்—இவன்
(இடும்ப) அரக்கன்.

'புலிதனக்கு இருவிடக்கை நின்றதொரு பூனைதின்னுமது
போல'
'மலர்பூவொன்றைத் தேன்வரித்தென்ன வந்து திரண்டது
குமரர்சேனை'
'கயிலையென்னும் மலைவருத்தமுற எடுத்தநிருதன் என்ன'
யான் பயந்த, கடல்பிறவா அமுதமென்றான்'

இது சிலப்பதிகாரத்தை (அலையிடைப் பிறவா அமுதை) நினைப்பிக்கும்

'ஒற்றை அன்றில் போல் மெய்ம்மலிந்து'
'ஒன்றில்காலை அன்றில் போல்'

இது குறுந்தொகையை நினைவூட்டும்.

புனையோவியம்போல் இருந்தாரை

சங்கப்பாடலில் வரும், இஃது அதற்கெதிரானது. புனையா ஓவியம் பற்றிச்

'நீறுபட்டிலங்கும் மெய்ந்நிலவொளியால் நெஞ்சினில்
இருளினை அகற்றி'

இது தவம்.

'உருத்திரன் மானுட வுருவம் கொண்டது அன்றேல்
வரத்திவன் மானுடன் அல்லன்'

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கொற்றவை சீற்ற நிலையுடன் ஒப்பிடலாகும்.

'அவுணன் பேருரங் கீண்ட பெண்ணுமல்லள்'
'பரக்கும் பெரும்புண்ணியமும் பாவமும்
பரஞ்சோதியும் பொங்கு மா மாயையும் போலவே'
'முருங்கின் நாண்மலரும் கருத்திடச் சிவக்கும்
மொய் அழல் பெய்செழுங் கண்ணன்'
'தூதுளங்கனிவாய்'

இவ்வுவமைகள் புதியவும் கற்பனையழகு சொட்டுபவையுமாகும்.

பிறப்பு வளர்ப்பெல்லாம் சொல்லி நூலைத் தொடங்குபவர் நாட்டு நகரச் சிறப்புப் பாடவில்லை. அத்துடன் போருக்குப் பின் பாண்டவர் இறுதி முதலியவற்றை விவரியாமல் சட்டென இக்கால நாவல்கள் போல முடித்து விடுகிறார். இவ்வளவு பாடுபட்ட கண்ணனுக்கு ஒரு காபி பாராட்டொன்றும் செயயாமல், வாண வேடிக்கை செய்து விழாவெடுக்காமல் இனி ஊழி வாழ்திர் என, வினையகற்றும் பசுந்துளவோன் துவரைநகர்த் திசைநோக்கி மீண்டான் என்பது அரசியல் தத்திரம்பட (Diplomatic) என்பார்கள், அது போலிருக்கிறது. இன்னும் பல பக்கங்கள் எழுதவிருக்கும் தேர்வு எழுதும் பையன் திடீரென மணியடித்ததும் முடிப்பது போலிருக்கின்றது வில்லி பாரத முடிவு. பெருஞ்சோர்வினாலும் யாவரையுமிழந்த துயரத்தினாலும் இவ்வாறு முடிந்ததுபோலும்.

நெஞ்சையள்ளும பாடல் வரிகள் பல வில்லியிடம் உள்ளன.

'காண்பவர் ஆண்மைதேய காமவேள் கலகம் செய்தார்'
'உண்மைக்கிவனே வலிக்கிவனே உறவுக்கிவனே உரைக்கிவனே திண்மைக்கிவனே நெறிக்கிவனே தேசுக்கிவனே சிலைக்கிவனே வண்மைக்கிவனே

கண்ணன்'

'அருளுடை அறத்தின் வாழ்வாம் அங்நகர் இல்லமெங்கும்'
'கச்சின் கண் அடங்காத கனதனமும்'
'தங்கள் கடல் தன் முத்தைக் கண்முத்தால் நீக்கும்'
'பாராமல் நகையாமல் பாடாமல் ஆடாமல் பாதச்செங்கை சேராமல் முகராமல் வழங்காமல் இகழாமல் செவ்வாய் ஊறல் நேராமல்'

பெண்கள் பூக்கொய்கிறார்கள்.

'கொக்கின்மேல் குயில்கள் கூவும் குளிர்பொழில் குறியும் சொன்னாள்'

தித்திக்கும் கருத்துக்கள் சில வருமாறு :

'குறைவில் பொலிவினள் விரதநெறியினள் குழுவு நிதியினள்,

இஃதோர் பெண்ணின் வருணனை, பெண்ணலமெல்லாம் கனிந்தது.

நேசமான அருள் அன்னையைத் தொழுது தம்முனைத் தொழுது நெஞ்சுறத்
தேசிநேடினை யார்தொழ மகிழ்ச்சியொடு
தழுவினான் முறைமை திகழவே —

பரதன் பிரிந்த இராமனைக் காணும் காட்சியில் 'வந்தெதிரே தொழுதானை' என்ற பாடலுடன் இதனை ஒப்பிட்டின்புற வேண்டும்.

12-13-ஆம் நூற்றாண்டுகளில் சாரங்கதேவரின் இசை நூல் வந்து விட்டது. 'சரிகமபதநி' பாடல் தண்டு தைவரு செங்கையான் எனப்புதிய சுரப்பெயர்களைத் தருகிறார். 'கந்தருவ முறைமையினால் கடவுளர்க்கும் கிடையாத காமம் துய்த்தார்' எனக் களவியல் காந்தருவத்தை அழகுறச் செய்கிறார்.

'மாதவன் தேரில் மழைக்காலத்து வாசவற்கு விழா அமர்வான் வந்தகாலை'

இங்கு இந்திரவிழாவைப் பற்றிக் கூறுகிறார்.

பொன் மழை பொழியும் கொங்கர் பூபதியெனத் தன்னைப் புரந்து ஆட்கொண்டானை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

'பிறர் பெரும் தாரம் வெளவி அந்தரத்தில் பெயர்வது
பெருமையோ பித்தா

இது பிறன்மனை நயத்தலைக் கடிந்தது.

தருமதேவதை திருவருளால் என வள்ளுவரும் சிலப்பதிகாரமும் கூறும் அறக் கடவுளை எடுத்துக் காட்டுகிறார்.

'பிதாவினும் கருணை மிக்கானென அண்ணன் அன்பினைப் புகழ்கிறார்.'

வில்லியின் தமிழ்ப் பற்றினை,

'பொருங்காப்பியந்தன்னைத் தென்சொலால் உரை செய்தலின்
சான்றோர்கள உரைபயிற்ற தமிழ்கள் மூன்றும் கொண்டாடிட
தங்கள் தமிழ்க்குழல் இசையை'
'அறம் பொருள் இன்பம் முற்றும் தூயவர் இதயமென்ன'
'அந்தமும் ஆதியுமற்றவனுக்கு அந்
செந்தமிழ் செய்து திரட்டினரைப்போல்'

என்னும் வரிகளில் காணலாம்.

பாரத முழுவதும் அரசியல், அது பற்றிய கோட்பாடுகளில் அருமையைக் குறிக்கும் வரிகள் பலவுள.

'இகன்றவர்ச் செற்று இனியோர்க்கினிமை செய்து
அகன்ற ஞாலம் இவன் வழியாகுவாய்'
'அசைவிலா அறத்தின் மைந்தன்'
துன்பம் பயம் மிடி நோய்பகை சோரம் கொலை யெய்தாது
இன்பம் பொருள் அறன் யாவையும் இயல்பாதலில எய்தி'
'கருமம் நீதி சீர் கல்விமந் திரம்
பெருமை ஆண்மை தாள்பீடு நீடுபேர்
தருமம் யாவையும்நும் தன்மையாதலால்
அருமையின்றியே அரசு செலலுமே'
'அன்பு இறந்தேனும் நீதியழிய நீ நடத்தினால்
என்பிறந்து முடியுமண்ணில் எண்ணில் காலம்'
'யாவும் தீமையின் கவர்தலுற்றாய்.'
'மரம்தரு வலியுமன்று மணம்தரு வாழ்வுமன்று
நிறம்தரு புகழுமன்று நெறிதரு மதியுமன்றே'
'மன்னவர். தீத்தொழில் புரிஞரைத் தெண்டியாரெனின்
நீதியும் செல்வமும் நிலைபெறும் கொலோ'
இரவலர் இளையவர் ஏத்தும் நாவலர்
விரவிய தூதுவர் விருத்தர் வேதியர்
அரிவையர் வெஞ்சமர் அஞ்சுவோர் பெருங்
குரவர் என்றிவர்களைக் கோறல் பாவமே'

பெண்களைப் பற்றி வில்லி சொல்வன :

' அவள் அருகெய்தி, யாவர்செய்
புண்ணியம் நீயெனப் புகழ்ந்து போற்றினள் '
' எனதுயிர் அரசு வாழ்வு என்ப யாவையும்
நினது நின் ஏவலின் நிற்பள் '
' — மடவார் அலதுயாவர் இன்ப
நல்வாழ்வு தேசு புகழ் யாவும் நடத்துகிற்பார் '
' யாழின் மென்மொழி எங்கள் நாயகி அவனுக்கு
ஊழின் அன்புடை மன்றலுக் குரியள் '
' இல் எனப்பட்டாள் இல்லாள் அன்றே '
' இவளே கற்பினுக்கும் மரபினுக்கும் தெய்வம் '
' இல்லறத்தினுக்கு உரியது எது — எண்ணுடை இல்லாள்,
' கண்ணின் நின் உருக் காணினும் மற்றவள்
கன்னம் இன்புறக் கட்டுரை கேட்கினும், வண்ணமா மகளே
உயிர் நிற்கும் '

இங்ஙனம் எவ்வகையிலும் கவித்திறன் மிகமிகவுடைய வில்லி பாரதத்தைப் பொருளாலும் பாவமைப்பாலும் சிந்தாமணியுடன்தான் ஒப்பிடற்கியலும். பாரதமாம் பெருங்கதை என்பது பாயிரம். கொங்குவேளிர் பாடியதும் பெருங்கதை. கொங்குவேள் மாக்கதையும் கேளோம், குறளணுகோம் எங்கெழிலென் ஞாயிறெமக்கு என்ப தோர் தனிப்பாடல உளளது. பெருஙகதை கேட்பவர்க்கும் பொழுது போவதும் சூரியன் தோன றுவதும் தெரியாதென்பது பாடற் கருத்து. பாரதமாம் பெருங்கதையையும் அப்பெருங்கதையுடன் சேர்க்கலாம் போலும். பாரதக் கூததும் பாரத பூசாரிப் பாட்டும் விடிய விடியக் கேட்பது நாட்டுப்புற மககள் வழககு. எனவே விலலிபாரதமும், கம்பராமாயணம் சிலப்பதிகாரம் சிந்தாமணி பெரியபுராணம் ஆகியவற்றிற்கடுத்து வைத்தெணணத் தக்கதாகலாம்.

3

ஒட்டக்கூத்தர்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று போற்றப் படும் காலங்கள் இரண்டாகும். ஒன்று சங்க காலம்; பிறிதொன்று பிற்காலச் சோழர் காலமாகும். சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் நல்ல இலக்கியச் செல்வத்தினைப் பெற்று வாழ்ந்தனர் என்பது பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய பழந்தமிழ் இலககியங்களால் தெரியவருகின்றது.

"நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்." [1]

"குழைகொண்டு கோழி யெறியும் வாழ்க்கைய
ரென்றவழி, கோழி யெறிவாரென்று ணராற்பால
தன்று ; ஒன்றுனும் முட்டில் செல்வத்தாரென்றவாறு." [2]

"சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்." [3]

முதலான சங்க இலக்கியத் தொடர்களும், உரையாசிரியர்தம் விளக்கமும் மக்களின் வளமான செல்வ வாழ்வினைப் புலப்படுத்து வனவாகும்.

அடுத்து,

"நிலநாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலனுடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை" [4]

---

1. பட்டினப்பாலை, 22-25.
2. நன்னூல் நூற்பா, 407, மயிலைநாதருரை.
3. அகநானூறு, 149; 7-10.
4. கலித்தொகை, பாலைக்கலி, 34; 17-20.

என்ற கலித்தொகைத் தொடர்கள் கொண்டு பண்டைத்தமிழ்ப் பெருமக்கள் தமிழ்க் கவிதைக் காதல் கொண்டு நின்ற வேட்கைத் திறத்தினை வெளிப்படையாக அறியலாம்.

இச் சங்க காலத்தினை யடுத்துவந்த களப்பிரர் காலத்தில் தமிழிலக்கிய வளர்ச்சி தடைப்பட்டது. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்களும் கலைகளும் பரவிச் செழித்தன. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தஞ்சையைச் சுற்றியிருந்த பகுதிகளை ஆண்ட முத்தரையர்களிடமிருந்து விசயாலய சோழன் ஆட்சியைக் கைப்பற்றிப் பிற்காலச் சோழர் பேரரசுக்குத் தோற்றுவாய் செய்தான். பின்னர் வந்த பராந்தக சோழன், ஆதித்த கரிகாலன் முதலான அரசர்களால் மேலும் விரிவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பேரரசு, முதலாம் இராச ராசன் காலததில் உயர் நிலை பெற்றது. அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் கங்கை வரையிலும் சோழர் வெற்றிக்கொடி பறந்தது. முதலாம் இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்ட, தனயனோ தன் வடநாட்டு வெற்றியினைப் பாராட்டும் வகையில் கங்கை கண்ட சோழபுரத்தை நிர்மாணித்தான். இவர்களுக்கும் பின்னால் வந்த விக்கிரமசோழன், இரண்டாம் குலோததுங்கன், இரண்டாம் இராசராசன் முதலிய மனனர்கள் காலத்தில் ஆட்சிச் சிறப்பும், இலககிய மேம்பாடும் சீரிய இடம் பெற்று விளங்கின.

சோழ மன்னர்கள் வீரமும் வெற்றித் திறனும் வாய்ந் திருந்ததோடு, சமயம், இலககியம், கலைகள் முதலியனவற்றின் வளர்ச்சியில பெரிதும் அககறை காட்டினார்கள். இவர்கள் ஆட்சியின் எல்லை வடக்கிலும், தெற்கிலும், தூரக் கிழக்கு நாடு களிலும் பரவின. சாவகத் தீவோடு இவாகள் கொண்ட நட்புறவும், வாணிபத் தொடர்பும், கலைததொடர்பும் இனறும் ஓரளவு விளங்கக் காணலாம். சீன நாட்டிற்கொரு தூதுககுழு சோழ மன்னர்கள் காலத்தில் சென்றது. சோழ மனனர்கள் தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் போற்றினர். 'புலவர் பாடும் புகழுடையோ'ராக விளங்கினர். மனனர் சிலர் இலக்கியப் படைப்பாளர்களாகவும் சிறந்திருந்தனர். கலைகள் களிநடம் புரிந்த காலம் இக்காலம் எனலாம். சோழ மன்னர்களின் கட்டடக் கலைச்சிறப்பினைத் தஞ்சையில் கி. பி. 1012 ஆம் ஆண்டில் முதலாம் இராசராச சோழனால் கட்டப்பெற்ற பிரகதீசுவரர் கோயிலில காணலாம். வான ளாவிய கோபுரங்களுடன் பெரிய திருக்கோயில்கள் சோழர் திருப் பணியின் விளைவே எனலாம். தமிழ் இசை இவர்கள் காலத்தில்

உயர்நிலை பெற்றிருந்தது. சோழ மன்னரான கண்டராதித்தரே திருவிசைப்பாவில் சில பாடல்களைப் பாடியிருக்கக் காணலாம். தேவாரப் பாடல்களை நாடோறும் திருக்கோயில்களில் முறையாக ஓதி வருவதற்குச் சோழமன்னர்கள் செய்திருந்த விரிவான ஏற்பாட்டினைக் கோயில் கல்வெட்டுகளில் காணலாம். தேவார ஓதுவார்கள் தம் இசைத் தொண்டிற்குப் பெற்ற மானியங்களைத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. முதலாம் இராசேந்திர சோழன் நலிந்துகொண்டு வந்த நாடகக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தான். 'இராசராச நாடகம்' என்னும் நாடகம் அவன் காலத்தில் முதன்முதலாகத் தஞ்சை பெரிய கோயிலில் அரங்கேற்றுவிக்கப் பெற்றது. திருநாறையூர் நம்பியாண்டார் நம்பி சைவப் பெருமக்கள் பாடிய பாடல்களைத் தொகுத்துத் திருமுறைகளாக வகுத்தார். வைணவப் பிரபந்த உரையாசிரியர்கள் தோன்றித் தம் புலமை நலந்தோன்ற வியாக்கியான உரைகள் வகுத்தனர். பௌத்த, சைன சமயப் பெரியோர்கள் தமிழ் இலக்கிய இலக்கணத் தொண்டில் தலைப்பட்டனர். இவ்வாறுகப் பிற்காலச் சோழர் காலம் ஆட்சிச் சிறப்பாலும், இலக்கியப் படைப்பாலும், கலை மேம்பாட்டினாலும் சிறந்து விளங்கியது. கலிங்கத்துப் பரணி இவ் இலக்கிய காலத்தினைப் பின்வருமாறு சுட்டுகினறது.

'கலையினொடுங் கவிவாணர் கவியினொடும்
இசையினொடுங் காதலில்
நிலையினொடு மனுநீதி நெறியினொடும்
மறையினொடும் பொழுதுபோக்கி' 5

இக் காலச் சிறப்பினை வரலாற்றுப் பேரறிஞர் திரு க. அ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் 'சோழர் காலம் தமிழர் பண்பாட்டின் பொற்காலம்' எனறு போற்றுகின்ருர்.[6] தமிழ் இலககியத் திறனாய்வாளராம் திரு ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இக்காலப் பகுதியினைப் பின்வருமாறு குறிபபிடுகினருர் :

'சமய எழுச்சியின் பயனாய்த் தமிழரிடம் சமுதாய உணர்ச்சி ஓங்கியது. ஆட்சி முறைகளும் திட்டங்களும் அபிவிருத்தி அடைநதன. சமுதாய வாழ்வு சுதந்திரத்துடன் இயங்கியது.

---

5. கலிங்கத்துப்பரணி, தாழிசை, 264.
6. The age of imperial Cholas (850-1200) was the golden age of Tamil culture, and it was naturally marked by the widespread practice and patronage of literature - A History of South India. p. 357.

சத்திரங்கள் சாவடிகள் எழுந்தன. கோயில்கள் தோன்றின. நமது கோயில்களைக் கல்லிலே செதுக்கிய காவியம் என்பர். பழங்கால நாகரிகத்தைச் சங்க நூல்களிலே காண்பது போல், இடைக்காலக் கலைவளத்தைக் கோயில்களிலே காணலாம். இவைகளைப் போன்ற மகத்தான கல் கட்டடங்கள் உலகிலே வேறு எந்த நாட்டிலும் இல்லை. சிற்ப நூலின் அற்புதமாய் அவை திகழ்கின்றன. இவைகளை எளிதிலே ஆக்ககக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த மூதாதையரது சமயப் பற்றைப் போற்றுமல் இருக்க முடியாது." 7

சோழர் காலத்தில் தமிழகப் பண்பாட்டு வளர்ச்சியினை ஆய்வாளர் ஒருவர் தாம் வரைந்த ஆய்வேட்டில் பின்வருமாறு குறிப்பிடடுள்ளார்:

"மனித சமுதாயம் அனைத்தையும் தழுவிய முறையில் சோழர்கள் பண்பாடு பரவி நின்றது. அறிவு, கலை, சமயம், நீதி, சமூகம், பொருளாதாரம், அரசியல் முதலான அனைத்துத் துறைகளிலும் பண்பாடு விளங்கிற்று. மனிதனின் மனமே பண்பாட்டின் உறைவிடம் என்பதனைக் கண்டனர். எனவே எதிர்காலத் தலைமுறைகளுக்கு வியக்கத்தகு பண்பாட்டு நிலையினைத் தந்து விட்டுச் சென்றனர்."8

கம்பநாட்டாழ்வானின் கம்பராமாயணம் எனும் பெருங் காப்பியமும், தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராணமும், கச்சியப்பரின் கந்தபுராணமும் இக் காலத்தே தோன்றின.

சிற்றிலக்கியங்கள் எனப்படும் தொண்ணூற்றாறு வகைச் சிறு பிரபந்தங்கள் இக் காலப பகுதியில் முகிழ்ததன எனலாம்.

---

7. கல்வியிற் பெரியர் கம்பர், பக்கங்கள் 116-117.
8. Thiru S. R. Krishnamurti - A study of the cultural developments in the Chola period - "Culture had a wide and comprehensive significance for the Cholas, covering as it should, the entire field of human activity intellectual, aesthetic, spiritual, moral, social, economic and political. They would appear to have realised and appreciated the dictum that the seat of culture is the mind of man. It was this understanding that enabled them to leave such a wonderful heritage to posterity" - p. 15.

சோழர்கள் ஆட்சி மேம்பாடும், வெளிநாட்டு வாணிகநலனும், ஊராட்சிச சிறப்பும், வளமனே வாழ்வும் புதிய இலக்கியங்களுக்குக் கால்கோள் செய்தன.

இக்காலப் பகுதியில் தோன்றியவரே ஒட்டக்கூத்தர்.

ஒட்டக்கூத்தர் பற்றிய என்னுடைய இக் கட்டுரையினை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேச நினைக்கின்றேன்.

முதலாவது பகுதி 'ஊரும் பேரும்' என்பதாகும். இதில் ஒட்டக்கூத்தரின் ஊரும், அவர்தம் பேரும், அவர் பெற்ற பட்டங் களும் சிறப்பும் ஆராயப்படுகின்றன.

இரண்டாவது பகுதி, 'நூற்களும் அவை நுவலும் பொருள் களும்'' என்பதாகும். இப்பகுதியில் ஒட்டககூத்தாதம் நூல்களும், அந் நூற்கண் பொதிந்துள்ள செய்திகளும் சிறப்புகளும ஆராயப் பெறும்.

மூன்றும் பகுதி ''ஆய்வும் முடிவும்'' என்பதாகும். இப் பகுதியில் ஒட்டக்கூத்தர் வாழ்வு பற்றியும் புலமை பற்றியும் எழுந்துள்ள பல்வேறு கருத்துகள் ஆராயப்பெற்று, யான் முடிவாக எண்ணுகின்ற ஆராய்ச்சி முடிவுகளை வைத்துள்ளேன்.

'செப்பலுற்ற பொருளின் சிறப்பினல் அப்பொருட்கு உரை யாவரும் கொள்வரால்' என்றபடி, என ஆர்வததால் எழுநத இச் சிற்றுரையைச் செவிமடுக்க வேண்டுவல்.

ஊரும் பேரும்

பிறந்த ஊர்

ஒட்டக்கூத்தர் ஊரைப் பற்றிப் பல மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

சென்ற செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் — ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக்கு, ஒன்று
மலரிவருங் கூத்தன்தன் வாக்கு.

என்ற தண்டியலங்கார மேற்கோட் செய்யுளின் அடிகளில் 'மலரி வரும்' என வரும் சொற்கள் கொண்டு கூததரின் பிறப்பிடம் மலரி என்று கூறுவர்.

கீழ்க்காணும் சோழமண்டலச் சதகச் செய்யுளொன்று கூத்தரின் பிறப்பிடம் சீகாழியே எனச் செப்புகின்றது.

ஒத்த துணர்ந்த நாடனைத்தும் ஒருங்கே கூடி உயர்கூத்தன்
கத்தி யலையத் துரத்துதலும் கசிந்துகாழிக் கவுணியர்கோன்
பத்தி யுடனே தக்கன்மகப் பரணி பாடப் பணிந்து முத்தின்
வைத்த சிவிகை மகிழ்ந்தேற வைத்தார் சோழ மண்டலமே.

மேலும் இதற்கு ஆதாரமாகக் கூத்தர் தம் நூலில் 'வைரவர் வணக்கம்' கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி, வைரவக் கடவுள் சீகாழித் தலத்தில் மட்டும் எழுநதருளிவித்துள்ள சிறப்பினைக் குறிபபிடுவர். மேலும் சீகாழியில் கூத்தரைப் போற்றித திரு விழாககள் இன்றும் எடுக்கப்படுவதனைக் காட்டுவர். கூத்தர் இயற்றியுள்ள நூல்களின் ஏட்டுச்சுவடிகள் சீகாழி மடத்திலிருந்தே முதன்முதலாகக் கண்டெடுக்கப்பட்ட செய்தியினைத் தம் கருத்திற்கு வலுவான சான்ருகச் சுட்டுவர்.

அடுத்து, கூத்தர் சோழநாட்டிலுள்ள திருவாய்முருக்கு அடுத் தமைந்துள்ள மணக்குடியில் பிறந்தவர் என்பர்.

தேனுந்து மலர்ச்சோலைத் திருமணவூர்ச் சிவசங்கத்
தோனந்தச் சிற்சபைஎம கூத்தனருட் கூத்தனெனும்
ஆனந்தச் செல்வனின தாசனத்தில் அலகுபெறின்
நானந்தச் செனனமுனை நயந்திரத்தல் என்கடனே.

மேலும் சிலர் கூத்தர் வாழ்ந்த ஊர் இன்று பூந்தோட்டம் ரயிலடிக்கு அருகில் உள்ள கூததனூரே என்பர். இவ்வூர் சோழ மன்னரால் இவருக்கு முற்றூட்டாக வழங்கப்பட்டது என்பதறகு ஆதாரங்கள் காணலாம். மேலும கூத்தரே முன்நின்று இவ் வூரில் சரசுவதி தேவிககுக் கட்டிய கோயில் ஒனறும் நன்னிலையில உளது.

பெயர்

இவர் பிறந்த குடியின் காரணமாக இவருக்குக் கூத்த முதலியார் எனும் பெயர் வந்தது என்பர். இருவேறு பாக்கள் தம்முள் ஒட்டிவரப்பாடிய சிறப்பினுல் ஒட்டக்கூத்தர் என்று பெயர் பெற்ருர் என்று சிலரும், பந்தயம் (ஒட்டம் — பந்தயம்) வைத்துப் பாடுவதில் பெயர் பெற்றவராதலால் ஒட்டக்கூத்தர் எனப் பெயர்

பெற்றார் என்று வேறு சிலரும் கூறுவர். விக்கிரம சோழன் தன் மீது இயற்றப்பட்ட உலாவில் வரும்

கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே[9]

என்ற கண்ணியை ஒட்டிப் பாடும்படி புலவரைக் கேட்டுக் கொள்ள,

— வையம்
அளந்தாய் அகளங்கா ஆலிலைமேற்பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்

என்று அவ்வாறே விரைந்து ஒட்டிப் பாடி முடித்துக் கொடுத்த தனால் ஒட்டக்கூததர் என வழங்கப் பெற்றார் எனறு வேறு சிலரும் கூறுவர். ஒட்டத்கூத்தர் எனப் பெயர் அமைந்ததற்கு வேறு ஒரு காரணமும் கூறுவர். அதாவது இவர் பிறந்த மரபினைச் சேர்ந்த செங்குந்தர்கள் பலர் திரண்டு வநது இவரிடம் தம் மரபின் பெருமை விளங்க ஒரு பிரபந்தம் பாட வேணடுமென்று கேட்க, முதலில் மறுதத கூத்தர், பின்னர் ஒரு நிபந்தனையுடன் பாட ஒப்புக் கொண் டாராம். தாம்பாடும் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தலை விழுக்காடு, எழுபது செஙகுந்தர் குலததலைச்சன் பிள்ளைகளின் தலை களைக காணிககையாகக் கொடுக்கும்படி கட்டளையிட, அச் செங் குந்த மரபினரும் கூத்தர் இட்ட கட்டளையை நிறைவேற்றினராம். கூத்தர் அத் தலைகளை ஒன்றன்மேலொன்று அடுக்கி அத் தலையா சனத்தின் மீதிருந்து,

கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல்லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவு நிசமேயன்றோ!
சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்கள் துணிந்து முயல் சீவனுற்றாள்
தலையாவி கொடுத்திடுஞ் செங் குந்தருயிர் பெற்றிடநீ தயை
செய்வாயே

என்று கலைமகளை வேண்டிப்பாட, அத் தலைகள் அனைத்தும் தத்தம் உடல்களில் வந்து பொருந்திக் கொண்டனவாம். இவ்வாறு பொருந்தி ஒட்டிக்கொண்டு இறந்தவர் உயிர் பெற்ற காரணத்தினால் அவ்வாறான நிலை — 'அறற தலையும் உடலும ஒட்டப்' பாடிய காரணததினால் ஒட்டக்கூததர் என்று பெயர் வநதென்று விநோத

9. விக்கிரமசோழனுலா, கண்ணி, 158.

ரச மஞ்சரி[10] கூறும். விநோத ரச மஞ்சரி கூறும் செய்திகள் வரலாற்றுய்வு உணர்வுக்குப் பொருந்துவனவல்ல எனக் கருதி ஒதுக்கி விடலாம்.

பட்டப் பெயர்கள்

இவருக்குக் கவிராட்சசன், கவிச்சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி, காளக்கவி, கௌடப் புலவர், சருவஞ்ஞ கவி என்னும் பெயர்கள் வழங்கின.

கவிராட்சசன்: சோழ மண்டல சதக மேற்கோள் பாடல், இவரைக் கவிராட்சசன் என்று குறிப்பிடுகின்றது.

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில் புரி ஒட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்கும் கவிராட்சதன் எனப்
புவிக்குயர் கவுடப் புலவனும் ஆக்கி[11]

எனக் கூறுதலால் உணரலாம். கவிராட்சதன் என்பதால் இவருடைய கவிப் புலமையின் ஆழம் பெறப்படும்.

கவிச்சக்சக்கரவர்த்தி

இப் பட்டம் பெற்ற கவிஞர் மூவர். 1. கம்பர், 2. ஒட்டக் கூத்தர், 3. செயங்கொண்டார் என்போர். தக்கயாகப் பரணியில் வாழ்த்துப்பகுதியில்,

ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்கர வர்த்தி வாழியே[12]

வாழி கவிச்சக்ர வர்த்தி கூத்தனே[13]

எனவரும் அடிகளால் இப்பெயருண்மை விளங்கும். கவியரசர்களில் பேரரசராக இவர் புகழ்பூத்துச் சிறந்தமையால் இவ்வாறு பாராட்டப் பெற்றார்.

---

10. விநோதரச மஞ்சரி, பக்கங்கள் 238-239.
11. சோழமண்டல சதகம், 93 மேற்கோள்.
12. தக்கயாகப் பரணி, தாழிசை 813.
13. ,, 814.

சக்கரவர்த்தி

தக்கயாகப் பரணி உரையாசிரியர் ஓரிடத்தில், "உலகக் களிப் பென்னும் பெயர் சக்கரவர்த்திகள் தாம் படைத்த திரி சொல்லென உணர்க" என்று குறிக்கின்றார்.[14] இவர் கூற்றால் கூத்தர் 'சக்கர வர்த்தி' எனவும் அழைககப்பெற்றார் என அறிகிறோம்.

காளக்கவி

கொத்தற் றதுஞ் சடிலக்குந் தளருக்கு மல்லாற்
கூழைத்தண் டமிழ்க்கேன் கொடியுங்கா ளமுமே

என்ற அடிகள் கொண்டு 'காளவிருது' பற்றி அறியலாம்.

சோழ மன்னனிடம் 'காளம்' என்ற விருது பெற்றமையால் 'காளக்கவி' என்றும் சிறப்பிக்கப் பெற்றார். "இப பொருள் காளக் கவிக்குப் பொருந்தாது" எனத் தக்கயாகப் பரணி உரையாசிரியர் இப் பெயரை ஆட்சி செய்வா.

கௌடப் புலவர்

வடமொழிச் செய்யுள் நெறி வைதருப்ப நெறி, கௌடநெறி என இருவகைப் படும். இரு நெறிகளைத் தமிழ்த் தண்டியாசிரியரும் விளக்குவர். கௌட நெறி என்பது உலக இயல்பைக் கடந்த வருணனைகளைக் கொண்டது. சொற்பெருகத் தொடுப்பது. இவ் வமைப்பு, இவர் பாடிய தக்கயாகப் பரணியில காணப்படுகினறது. எனவே இப் பரணி பாடிய பின்னரே இவர் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனை
கவிக்களி றுகைக்கும் கவிரா க்ஷதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி

என்ற சோழ மண்டல சதக மேற்கோள் பாடல்,[15] இவரை இப் பெயரால் பாராட்டுகின்றது.

---

14. தக்கயாகப் பரணி, தாழிசை 457 உரை
15. சோழமண்டல சதகம், 93.

சருவஞ்ஞ கவி

தக்கயாகப் பரணியில் 'டாகினிகள்' என்னும் சொல் வருகின்றது.[16] தமிழில் 'டா' மொழிககு முதலில் வராது. அவ்வாறிருக்க இவர் அமைததிருத்தல் இவர் சருவஞ்ஞ கவியாய் இருத்தல் காரணமே என்று உரையாளர் விளக்குவர். இவ்விளக்கத்தால், இவர் வடமொழிக் கடலை கடந்தவர் எனபது பெறப்படும். பல மொழிகளும் நன்கறிந்து எல்லாப் பொருள்களையும் எளிதில் பாடும் ஆற்றல் பெற்றிருந்தமையால் இப்பெயரால் சிறப்பிக்கப் பெற்ருர். தக்கயாகப் பரணியில் இவருககுள்ள 'யாமள நூற்' பயிற்சியை அறிகிரும். இப் பயிற்சி மிகக தமிழறிஞர் இவர் ஒருவரே.

ஊழுக்குக் கூத்தன்

'காசுக்குக் கம்பன்' என்ற பழம்பாடல் "தேசு பெறும் ஊழுக்குக் கூத்தன்" என்று சிறப்பிககின்றது. கூத்தர் சொல் வாழ்த்தாயினும் சாபமாயினும் ஊழ்வலி போலத் தப்பாது பயன் தந்தமையால் இச்சொல் எழுந்தது போலும்" என்பர் இலக்கிய வரலாற்றுப் பேராசிரியர் மு. அருணசலம் அவர்கள்.

பிறந்த மரபு

செங்குந்த மரபினர் வீரவாகுதேவர் முதலிய முருகக்கடவுளின் வழித்துணைவர்கள் ஒன்பதின்மர் வழிததோன்றினவர் என்று கூறுவர். குந்தம் என்னும் வீரப்படைக்கு உரியார் செங்குந்தராவர்.

செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்து வாயர் காருகர் கைக்கோளர்

என்ற சேந்தன் திவாகர நூற்பா கொண்டு செங்குந்தப்படையர், சேனைத் தலைவர், தந்துவாயர், காருகர், கைக்கோளர் என்கின்ற ஐந்து பெயர்களும் கைக்கோளரையே — செங்குந்தரையே குறிக்கின்றன என அறியலாம். இச் செங்குந்தர் மரபினரை உப சுப்பிரமணிய வம்சத்தினர் என்று கூறும் வழக்கம் உளது. இக் குடியினர்

---

16. தக்கயாகப் பரணி, தாழிசை, 433,

செல்வவளமும் செல்வாக்கு நலமும் சான்றவர் என்றும்,[17] தென்னிந்தியாவில் புகழ் வாய்ந்த நெசவுக் குடியினர் என்றும்,[18] அறிஞர் கூறுவர்.

இம் மரபினர் பற்றி எழுந்துள்ள பழைய குறிப்புகள் சில வருமாறு :

வீரவாகு வழியினர் :

'தேவியுமை பாதச் சிலம்பில்வரு வீரியர்கள்
சிறுதே ருருட்டி யருளே '
'சிவ கயிலாய பரம்பரையா ரென்னும் செங்குந்தரே '
'குமரச் செட்டிக் கிளையாநற் செட்டிகளாகும் இச் செங்குந்தர் '

வீரர்கள் :

'சண்முகன்றன் சேனு பதிகளும் சேனையும் ஆனவர் செங்குந்தரே '
'சிங்கள மாகிய பல்தேயும் வென்றவர் செங்குந்தரே '
'சிறந்த சீலமுடையவர்; சிவ சிந்தனையுடையவர்'
'எய்தவர்க்குச் சிறைச்சோறு மீகுவர் கைக்கோள ராகிய
செங்குந்தரே '
'தேவார முற்றும் படிப்பவரும் அங்கையிற் செங்குந்தரே '
'திருவாசகஞ் சொல் ஒருவா சகத்தரும் செங்குந்தரே'
'நிதம்அந்திசந்தி சிவசிந்தனை மறவாதவ ராவரிச் செங்குந்தரே'[19]

தமிழ் மருத்துவன் திரு சுப்பிரமணிய தேசிகனார் அவர்கள் 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு ' எனும் நூலில் ' கல்வெட்டுரை ' என்ற பகுதியில், இம் மரபினர் பற்றிப் பின் வருமாறு சில செய்திகளை மொழிந்துள்ளார்:[20]

---

17. Thiru T. V. Seshagiri Aiyar - Opinions செங்குந்தர் பிரபந்தத் திரட்டு – ப. 56. 'Senguntharş, a community of great wealth and influence in the Tamil country'.
18. Thiru C. T, Parthasarathy Mudaliar - Opinions - Do - p, 58 - Sengunthar or Kaikolars the familiar weaving class of South India.
19. செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் முன்னுரை, பக்கங்கள் 1-10.
20. ஷை கல்வெட்டுரை, பக்கங்கள் : 41-42.

"பழைய ஒழுக்கத்தை இன்றும் கைவிடாதொழுகிவரும் தமிழ்நாட்டுச் சாதியர் என்னும் பகுப்பினுள் இவர்களும் ஒரு பான்மைய ரென்றும் குறிககப்படும் இவர்களின் பெருமைகளையும் பண்டைய நாட்களின் பல சிறப்புகளை யும் குறித்துப் பல்லிடங்களில் எழுதியிருந்தாலும், பல் குன்றக் கோட்டத்துச் சிங்கபுர நாட்டு அண்ணமங்கலயப் பற்று தேவனூர்க் கோயில் கல்வெட்டுகளிலும், வெண் ணிக் கோட்டத்து கோலிய நல்லூரிலும், பையூர்க் கோட்டத்துக் கீழ்பட்டைய நாட்டின் திருவான்பூரென் னும் தமிழ் முருக வேளாரது கோயிலுள்ளும் எழுதப்பட் டுள்ள அரிய கல்வெட்டுகளுள் இவர்களது பெருமைப் பாடுகளைக் குறித்து மிகச் சிறப்பிக்கப்படுகின்றன.

இச் சாதியார் எத்தனையோ கோயில்களை எடுப்பித் தனர். கச்சியுள் ஆண்ட பல தொண்டைமான்கட்குத் துணையாகப் போந்து பல போர்களில் வெற்றி கொண் டனர். இவர்களின் வீரச் செயல்களின் வீரர்கள் பல ரிருந்து மேம்பட்டனர்களென்பதும் அவர்களது பெயர் களைக் கொண்டே உணரலாம். அவர்களுள் ஊன் புசிக் காது தூய்மையாக இருந்தவர் பல்லோர்கள். அவர்கள் இடையில் மேற்கொண்ட தொழில்களுள் நூல் நூற்றல், ஆடையாக்கல் முதலிய செய்திகளினாலேயே அவர்களது பாவச் செயல் இன்மையாகிய விருத்தியைப் புலப்படுத் தும். அவர்கள் பழந்தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்க ளென் றெண்ணுதற்குச் சான்றாக இன்றும் தங்கள் தமிழாசிரியர்களிடத்திலேயே பல சடங்குகளையும் நடத் திக் கொள்ளுகின்றனர். பிற்காலத்தும்கூட இவர்களது ஆட்சியில் அரும்பெருங் கோயில்கள் அகப்பட்டுக் கிடக் கின்றன. அவற்றுள் கச்சி வேளுக்கைத தண்காக் கோயி லும், கச்சிக் கச்சாலையுடைய நாயனார் கோயிலும், கச்சி மேற்றளியும், கச்சிப் பஃறளியும் இன்னும் பலவாம்". 20

காலம்

தமிழ்ப் புலவர்கள் பலரின் கால ஆய்வு, அடிமுடி தேடிய ஆய்வுபோல மலைப்பாய்வாக உள்ளது. இவ்வாய்வில் ஐயம் தெளிவுறக் காலம் தெரிந்த ஒரே புலவர் ஒட்டக்கூத்தர். இவர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன், ஆகிய மூவேந்தர் காலத்தும் வாழ்ந்தவர். இம்மன்னர்கள் காலம் கி.பி. 1118-1163. எனவே கி பி 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த முதுதமிழ்ப் புலவர் ஒட்டக்கூத்தர் ஆவர்.

கூத்தர் காலப் புலவர்கள்

சோழர் காலம் புலவர் பலர் வாழ்ந்த பொற்காலம். ஒட்டக் கூத்தர் காலத்தில் நம்பி காளியார், நெற்குன்ற வாண முதலியார், தமிழ்த்தண்டி ஆசிரியர் ஆகிய பலர் வாழ்ந்தனர்.

'ஒட்டக்கூத்தர் கடைசியாக இராஜராஜன் விருப்பப்படி உறந்தையிற்றுனே தங்கியிருந்து தமது 97 ஆம் வயதில் பரிபூரணம் அடைந்தார். அவரடைந்த திருநக்ஷத்திரம் ஆவணி மாத உத்தி ராடம் என்ப'[21]

'உத்திராட நக்ஷத்திரம்' ஒட்டக்கூத்தர் பரிபூரண தினமாகக் கொண்டு ஆவணி மாதத்தில் மதுரை, காஞ்சி, உறந்தை, கமலை முதலிய பல இடங்களில் கொண்டாடப்படுகிறது.[22]

(ஆ)

நூல்களும் அவை நுவலும் பொருள்களும்

பொதுச் செய்திகள்

இப்பகுதியில் கூத்தரின் இலக்கியப் பணிகள் ஆராயப் படுகின்றன.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
செயங் கொண்டான் விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கணபாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாக உயர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொ ணாதே"[23]

என்னும் தனிப்பாடல், குறிப்பிட்ட இலக்கியம் பாடுதலில் சிறப் புடையார் இவர் எனத் தொகுத்துணர்த்துகின்றது. இப் பாடலை நோக்கின் இவர் கோவை, உலா, அந்தாதி என்னும் சிற்றிலக்கியம்

---

21. காஞ்சி நாகலிங்க முனிவர், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, பதிப்பாளருரை, ப. 74.
22. காஞ்சி நாகலிங்க முனிவர், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, பதிப்பாளருரை, பக். 75.
23. பெருந்தொகை, 1804.

மூன்றும் பாடுதலில் வல்லார் என அறியலாம். ஆனால் இப்போது இவர் பாடிய 'மூவருலா' மட்டுமே கிடைத்து இவரை உலா வல்லார் என்பதனை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது. கோவையும் அந்தாதியும் கிடைக்கவில்லை. இவ்விலக்கியங்களும் இவர் பாடியிருத்தல் வேண்டும். இல்லையேல் கோவையுலா அந்தாதி என எண்ணுப் படுத்திப் பாடியிருக்க ஏதில்லை. இவர் பெயரால் வழங்கப் படும் நூல்கள் முப்பால் போல மூன்றாகப் பகுப்பர்.

1. கிடைக்கின்ற நூல்கள்
2. மறைந்த நூல்கள்
3. ஐயத்திற்குரிய நூல்கள்.

1. கிடைக்கின்ற நூல்கள்

விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி, இராமாயண உத்திர காண்டம் என்பன.

(அ) மூவருலா

விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராச சோழனுலா என்ற மூன்றும் மூவருலா என்ற பொதுப் பெயரால் வழங்கப் பெறுகின்றன. இம் மூன்றும் தம்மைப் பேணிய ஒரு குலத்து வந்த மூவேந்தரைப் பற்றியன. சோழர் வரலாற்றிற்குரிய அகச்சான்றுகள் நிறைந்த கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் வரலாற்றுப் பெட்டகம் இது. சோழர் வரலாற்றில் இருள்நிறைந்த பகுதிகளை இவ்விலக்கிய விளக்குகளே தெளிவாகக் காட்டின. இதனைத் தமிழுலகுக்கு வழங்கிய பெருமை தமிழ்த்தாத்தா உ. வே. சா. அவர்களைச் சாரும்.

(ஆ) தக்கயாகப் பரணி

பதினொரு உறுப்புக்களையும் 814 தாழிசைகளையும் கொண்ட தாய்ப்பரணி. வீரப் பரணிகளின் போக்கை மாற்றிய புதுப்பரணி. இதற்கு அரிய உரை உள்ளது. இதனையும் நமக்கு அளித்தவர் டாக்டர் உ. வே. சா. அவர்களே.

(இ) இராமாயண உத்தரகாண்டம்

இராமாயணம் உத்தரகாண்டம் கம்பர் பாடினர் என்று கூறுதல் ஏற்புடைத்தன்று. "கரைசெறி காண்டம் ஏழு" என்னும் தனிப்பாடல், இராம காதை ஏழு காண்டங்கள் உடையது என்றும், இவற்றைப் பாடியவர் கம்பரே என்றும் குறிக்கின்றது. ஆனல் நடையால் உத்தர காண்டத்திற்கும் ஏனைக் காண்டங்களுக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. மேலும் யுத்த காண்டத்தின் இறுதிப்பகுதி, இராமன் அயோத்திக்குத் திரும்பி வந்து முடிபுனைந்த செய்தியையும், இராமன் அனைவருக்கும் விடை கொடுத்து அனுப்பிய செய்தியையும் கூறுகின்றது. இவ்வமைப்பில் யுத்த காண்டத்துடன் இராமகாதை முற்றுப்பெற்றது என்பது போதரும். எனவே அதன்பின் கம்பர் உத்தர காண்டம் பாடினர் என்றல் ஏற்புடைத்தாகாது.

ஒட்டக்கூத்தர் கலைமகளின் அருள் பெற்றவர். ஆதலால் இவருக்கு 'வாணிதாசன்' என்ற பெயரும் உண்டு. இப் பெயரே இவர் உத்தரகாண்டம் பாடினர் என்ற செய்திக்கு இடமளித்து விட்டது என்று சிலர் கருதுவர். அவர்கள் கருத்துப்படி உத்தர காண்டம் பாடியவர் 'வாணியன்தாதன்' என்ற புலவர். இப்பெயர் மருவி, 'வாணிதாசன்' என ஆயிற்று. பின் ஒட்டக்கூத்தருக்கும் இப்பெயர் இருத்தலால் ஒட்டக்கூத்தரே உத்ரகாண்டம் பாடினர் என்ற நிலையை ஏற்படுத்தியது என்பதாம். விநோதரச மஞ்சரி எழுதிய அட்டாவதானம் வீராசாமி செட்டியார், ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் பாடினர் என்பதற்குச் சுவையான கதையும் எழுதியுள்ளார். இக் கதை, கம்பரையும் கூத்தரையும் இணைக்கின்றது. எனவே இது சான்றற்ற பொய்க்கதை என முடிவு செய்வர்.

"ஒட்டக்கூத்தருடைய பிற நூல்களின் நடைக்கும் உத்தர காண்டத்துக்கும் நிரம்ப வேறுபாடு உண்டென்று சொல்கிறர்கள். உண்மை. பிற்காலத்தில் சக்கரவர்த்திகளுடைய அவைப்புலவ ராகப் பெருஞ்சிறப்போடு வாழ்ந்த காலத்தில் இவர் பாடிய பாடலின் பெருமித நடைவேறு; உலாக்களிலும் பிள்ளைத் தமிழிலும் தக்க யாகப் பரணியிலும் இதை நன்ருய்க் காணலாம். ஆனல் இளமை ஓர் ஆதரவுமின்றி வாழ்க்கையில் முன்னேற வழிதேடிக் கொண்டிருந்த இளம்புலவருடைய நடைவேறு. இந்த இளம்புலவர் சிறப்பான இந் நூல் செய்தார் என்பதை அறிந்தே விக்கிரமசோழன்

இவரைத் தனது அவைப்புலவராக ஆக்கிக் கொண்டான்" இவ்வாறு விளக்கம் செய்து உத்தரகாண்டம் எழுதியவர் ஒட்டக் கூத்தரே என நிலைநாட்டுபவர் திரு. மு. அருணாசலம் அவர்கள்.[24]

(ஈ) குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பாடப் பெற்றது இச் சோழன் மீது உலாவும் பாடியுள்ளார். இந் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 1933இல் பண்டிதர் உலகநாத பிள்ளை அச்சிட்டார். இந்நூலில் 103 பாடல்கள் உள்ளன. பிள்ளைத்தமிழ் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப் படுகின்றன. ஆயினும் பிள்ளைத்தமிழ்ப் பகுதிகள் பலவற்றைத் தொடர்புபடப் பாடியவர் பெரியாழ்வார். ஆயினும் இதனை முழுமை யாகப் பிள்ளைத்தமிழ் என்று கூறமுடியாது. இத் தமிழை முதன் முதல் அளித்தவர் ஒட்டக்கூத்தரே. இப்போது கிடைத்த இந் நூலின் அமைப்பு.

1. *காப்புப் பருவம் - 11 பாடல்*
2. *செங்கீரைப் பருவம் - 11 பாடல்*
3. *தாலப் பருவம் - 11 பாடல்*
4. *சப்பாணிப் பருவம் - 11 பாடல்*
5. *முத்தப் பருவம் - 11 பாடல்*
6. *வாரானைப் பருவம் - 11 பாடல்*
7. *அம்புலிப் பருவம் - 12 பாடல்*
8. *சிறுபறைப் பருவம் - 7 பாடல்*
9. *சிற்றிற் பருவம் - 11 பாடல்*
10. *சிறுதேர்ப் பருவம் - 7 பாடல்*

சிறுபறைப் பருவம் நாற்சீர் கொண்ட சந்தக் கலிவிருத்தமாக உள்ளது பெரும்பாலும் பிள்ளைத்தமிழ் ஆசிரிய விருத்தத்தால் பாடப்பெற இவர் சந்தக் கலிவிருத்தத்தைக் கையாண்ட முறை குறிப்பிடத்தக்கது.

குலோத்துங்க சோழனுலாப் பாடிய பின்னரே இப்பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். இதன்பின் தோன்றிய சங்கரசோழனுலா,

---

24. தமிழ் இலக்கிய வரலாறு, 12-ஆம் நூற்றாண்டு, பக். 442.

" கூடிய சீர்தந்த என்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும் — பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றேனும் "

எனக் குறிப்பிடுதலால் அறியலாம்.

இப் பிள்ளைத்தமிழில்,

" பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி
கவிச்சக்ர வர்த்தி பரவ "[25]

எனவரும் அடிகளால் இவர் ' பரணி ' நூலொன்றும் பாடினர் என அறியலாம்.

2. மறைந்த நூல்கள்

கலிங்கப் பரணி, அரும்பைத் தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக் கோவை, எதிர்நூல் என்பன.

அ. கலிங்கப்பரணி

ஒட்டக்கூத்தரை முதன்முதல் போற்றிய மன்னன் விக்கிரம சோழன். இவன் தந்தை முதற் குலோத்துங்கச் சோழன் கலிங்கத்தில் பெருவெற்றி பெற்றான். இதனைப் பாராட்டி செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடி பெருவெற்றி கொண்டார். தந்தை போலவே விக்கிரமசோழனும் தென்கலிங்கத்தை வென்றான். இவ் வெற்றியைப் பாராட்டிச் செயங்கொண்டார் பரணி ஒன்று பாடினர். இப் பரணி இப்போது கிடைக்கவில்லை. ஆனல் இவர் பாடினர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெருமபரணி கொண்ட பெருமாள் — தரும்புதல்வன்
கொற்றக் குலோதுங்கச் சோழன் (28-29)

என்று குலோத்துங்க சோழன் உலாவிலும்,

பாவகன் வளைத் தெழுகலிங்கமும் விழுங்கப்
பகட்டணிதுணித்தொரு பெருமபரணி கொள்ளுஞ்
சேவகன் அபங்கன் அகளங்கன் மதலாய் ! நின்
சேவடிக ளால் எமது சிற்றில் சிதையேலே.

என்று இராசராச சோழன் உலாவிலும் ஒட்டக்கூத்தரே கூறியுள்ளார்.

---

25. குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், 14-2.

இனி, தக்கயாகப் பரணியில்,

செருத்தந் தரித்துக் கலங்கரோடத்
தென்தமிழ்த் தெய்வப்பரணி கொண்டு

வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
மைந்தர்க்கு மைந்தன் வாழ்த்தினவே (776)

என்னும் தாழிசைக்கு உரைகாரர், "இப் பரணி பாடினர் ஒட்டக் கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள். இப் பரணிப் பாட்டுண்டார் விக்கிரமசோழதேவர்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்தாழிசையில் வரும் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்பது கூத்தர் பாடிய கலிங்கப் பரணியையே குறிக்கும் என்று சிலரும், செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியைக் குறிக்கும் என்று சிலரும் கருதுவர். பெரும்பாலும் தக்கயாகப் பரணி குறிப்பிடும் தென் தமிழ்த் தெய்வப்பரணி கலிங்கத்துப் பரணியே என்பது பொருத்தமாகும்.

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையின் உரையில் அடியார்க்கு நல்லார் மூன்று பரணித் தாழிசைகளைக் காட்டுகின்றார். இப் பாடல்களில் ஒருபாடல் கலிங்கத்துப் பரணியில் உள்ளது. ஏனைய இரண்டும் எப்பரணியைச் சார்ந்தன என்பது தெரியவில்லை. ஆனால் முதற் தாழிசையின் இறுதியில் கவிச்சக்கரவர்த்தி என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இதனால் அப் பட்டம் பெற்ற ஒட்டக் கூத்தர் பாடிய கலிங்கப்பரணியில் இத்தாழிசைகள் இருந்திருக்கலாம் என்று முடிவு செய்யலாம்.

இந்நூல் விக்கிரம சோழனின் படைத் தலைவனான அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் காலிங்கராயன் மீது இயற்றப் பெற்றது. இந் நூலின் பெயர், அரும்பைத் தொள்ளாயிரம் என்று இருத்தல் தவறு என்றும் அரும்பகைத் தொள்ளாயிரம் என்பதே பொருந்துவது என்றும் கூறுவர். இந்நூல் கிடைக்கவில்லை. இந் நூல் வச்சத்தொள்ளாயிரம் முத்தொள்ளாயிரம் போன்றது போலும்.

(இ) காங்கேய நாலாயிரக் கோவை,

இந்நூல் தம்மை இளமைக் காலத்தில் ஆதரித்த புதுவைக்காங்கேயன் மீது கூத்தரால் பாடப்பெற்றது. இந் நூல் கிடைக்கவில்லை. நானூறு பாடல்களால் பாடப்படுவதே கோவையாக, இவர் நாலாயிரம் பாடல்களால் கோவை பாடினர் என்றால் இவரின் புலமையை என்னென்பது! சிலர் நாலாயிரக் கோவை என்பதற்கு

காங்கேயன் ஊர் நாலாயிரம் என்றும் அதனைச் சிறப்பித்து நானூறு பாடல்களால் பாடிய கோவையே நாலாயிரக் கோவை என்றும் கூறுவர்.

(ஈ) எதிர் நூல்

நூலின் வகைகளில், எதிர்நூல் என்பதும் ஒன்று. இதன் இலக்கணம்

தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுப்பது
எதிர்நூல் என்ப ஒருசா ரோரே

என்று பேராசிரியரால் தொல்காப்பிய உரையில் காட்டப்படுகின்றது. இத்தகைய நூல் ஒன்று கூத்தர் இயற்றியிருக்கலாம். ஆனால் அந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

3. ஐயத்திற்குரிய நூல்கள் :

கண்டன் கோவை, கண்டன் அலங்காரம், தில்லை உலா, ஈட்டி எழுபது, எழுப்பெழுபது என்னும் நூல்களும் ஒட்டக்கூத்தர் பாடினர் என்று கூறுகின்றனர். ஆனால் இந் நூல்கள் இவரால் இயற்றப்பட்டன என்று கூறுதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

இனி, இப் பகுதியில் ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவும், தக்கயாகப் பரணியும் அவர் பாடியனவாகக் கருதப்படும் தனிப் பாடல்களிற் சிலவும் ஆராயப்படுகின்றன. இவ் ஆராய்ச்சியின் நோக்கம், ஒட்டக்கூத்தர் இந் நூல்களிற் காட்டியுள்ள கற்பனை வளத்தினையும், புலமைச் சிறப்பினையும், வரலாற்று உணர்வினையும் புலப்படுத்துவதேயாம்.

முதற்கண் சிறுபிரபந்த வகைகள் குறித்து ஒரு சிறிது காண்போம் ;

சிறுபிரபந்த வகைகள்

சிற்றிலக்கியங்கள் பிற்காலத் தெழுந்தனவாம். அவை தொண்ணூற்றாறு வகைப்படும். தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள 'விருந்து' என்னும் வகையைச் சேர்ந்த இலக்கிய வகைகளில் இச் சிற்றிலக்கியங்கள் அடங்கக் காணலாம். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்

திலும் வாழ்ந்தவராகக் கருதப்படும் படிக்காசுப் புலவர், சிவந்தெழுந்த பல்லவன் என்னும் வள்ளல்மீது பாடிய சிவந்தெழுந்த பல்லவராயன் உலா நூலில்,

'தொண்ணூற்றுறு கோலப்ர பந்தங்கள்'

என்று குறிப்பிட்டுள்ளார். பொதுவாக இச் சிற்றிலக்கியங்களில் புலவர் பெருமக்களின் நூலறிவும், உலகியலறிவும், கற்பனைத் திறனும், காவிய நயமும், அணிநலனும், கற்பார்தம் உள்ளத்தைக் கவரும் வருணனைத் திறனும் கண்டு தெளிவதோடு, அவ்வப் புலவர் பெருமக்கள் காலததில வாழ்ந்த அரசர், அமைச்சர், படைத்தலைவர், வள்ளல்கள் முதலானோரின் வீரமும் ஈர நெஞ்சமும் அறப்பணி போற்றிய அருங்கொடை மணமும் கண்டு தெளியலாம் என்பர்.

இனி, இவர் நூல்களில் மூவருலா — தக்கயாகப் பரணி ஆகிய இருநூல்களில மட்டும் அமைந்துள்ள சிறப்புச் செய்திகளைக் காணலாம்.

1. மூவருலா

உலாப் பிரபந்தம் பாடுதலில் ஒட்டக்கூத்தர் வல்லவர் என்பது வெளிப்படை.

பேதை முதலா எழுவகை மகளிர்கண்
தொடங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே 26

என்ற நூற்பா உலாவின் இலக்கணத்தை உணர்த்தும். கலி வெண்பாவான் இயன்று ஓரடி எதுகை பெற்று அமைந்த கண்ணிகள் விக்கிரமசோழன் உலாவில் 342, இரண்டாம் குலோத்துங்க சோழன் உலாவில் 387, இரண்டாம் இராசராச சோழன் உலாவில் 391, ஆக 1120 கண்ணிகள் மூவருலாவில் அமைந்துள்ளன. குலோத்துங்க சோழன் உலாவுக்கு மட்டும் பழைய உரை உள்ளது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. ஆயினும் இவர்தம் உரையில் தொல்காப்பியம், பரிபாடல், பெருங்கதை முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டியிருப்பதனல் இவர் தென்மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிகுந்தவர் என்பதனை அறியலாம்.

---

26. பன்னிருபாட்டியல்

தம் வழிபடு தெய்வத்தின் மீதும், ஆசிரியர் மீதும் தம்மை ஆதரித்த உபகாரி மீதும் புலவர் உலா பாடுவர். மூவருலா, ஒட்டக்கூத்தரால் தம்மை ஆதரித்த அரசர்கள் மூவர் மீது பாடப் பட்டுள்ளது. இம் மன்னர்கள் பட்டத்து யானை மீது பவனிவந்ததாக மூவருலா குறிப்பிடுகின்றது. பாட்டுடைத்தலைவர்களுடைய முன்னோர் பெருமையினை முதலில் கூறிப் பின்னர் அவர் பெருமை யினைக் கிளத்தி, அவர் நீராடுதல், பட்டத்து யானையில் பவனி வருதல், உடன் வருவோர், மகளிர் குழாம் மன்னர்களைக் காத்திருந்து காணல் முதலான செய்திகளை முற்பகுதியில் கூறு கின்றது. பிற்பகுதி, பேதை முதல் பேரிளம் பெண் ஈருகவுள்ள ஏழு பருவ மகளிரின் இயல்புகளையும் விளையாட்டுக்களையும் கூறித் தலைவரைத் தரிசித்த வழி அவர்கள் பெற்ற உணர்வுகளைக் கிளத்தி நிற்கின்றது. மூவருலாவில், தலைவன் உருவத்தைக் கிழியில் வரைதல், பந்து அம்மானை ஆடல், மது அருந்துதல், தலைவன் நிறத்திற்கு ஏற்ப உடுத்தல், அணி பூணல், பூக்கொய்தல், புனலாட்டு, கழங்காடல், சிற்றில் இழைத்தல் முதலான விளையாட்டுக்கள் மகளிர் மேற்கொண்ட விளையாட்டுக்களாக இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மூன்று உலாக்களின் தொடக்கக் கண்ணிகளே ஒட்டக் கூத்தரின் மிடுக்கு நடைக்குக் கட்டியங்கூறி நிற்கின்றன.

சீர்தந்த தாமரையாள் கேள்வன் திருவுருவக்
கார்தந்த உந்திக் கமலத்து

— விக்கிரமசோழன் உலா

தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடல் பூத்தனையோன்

— குலோத்துங்கசோழன் உலா

புயல் வண்ணன் பொற்பதுமப் போதிற் புவனச்
செயல் வண்ணங் காட்டிய சேயோன்

— இராசராச சோழன் உலா

தாம் சிறந்த சைவராயிருப்பினும், தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப, சோழர்குலப் பெருமையைக் கூறவந்த ஒட்டக் கூத்தர், அக் குலம் சூரிய குலம் ஆன காரணத்தினுல் அக்குல முதல்வனுர் திருமாலைத் தக்காங்கு புகழக் காணலாம்.

இது போன்றே அறச் செங்கோல் நாட்டிய சோழர் குல முன்னோன் மாந்தாதாவைக் கூத்தர் ஒவ்வோர் உலாவிலும் கூற வந்த ஒரு செய்தியினையே வேறுவேறு சொற்களைக் கையாண்டு திறம்பட உரைப்பதனைக் காணலாம்:

ஆடுதுறையில் அடுபுலியும் புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவன். 27

— விக்கிரம : 5

போந்த புலியுடனே புல்வாய் ஒருதுறைநீர்
மாந்த உலகாண்ட மன்னர்பிரான். 28

— குலோத்துங்க : 7

புக்க துறையிற் பகைப்புலியும் புல்வாயும்
ஒக்க வொருகாலத் தூட்டினோன். 29

— இராசராச : 5

இதுபோன்றே களவழி பாடிக் கோச்செங்கட் சோழன் சிறைக் கோட்டத்திலிருந்து சேரமான் கணைக்காலிரும்பொறை பொய்கை யாரால் சிறை மீட்கப்பட்ட செய்தி ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். இதனைக் கூத்தர் மூன்றுலாக்களிலும் பின்வருமாறு கூறுவர்.

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும். 30

— விக்கிரம : 14

படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன். 31

— குலோத்துங்க : 20

நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன். 32

— இராசராச : 18

---

27. விக்கிரமசோழன் உலா, 5.
28. குலோத்துங்க சோழன் உலா, 7
29. இராசராச சோழன் உலா, 5
30. விக்கிரம சோழன் உலா, 14
31. குலோத்துங்க சோழன் உலா, 20
32. இராசராச சோழன் உலா, 18

இதுபோன்றே விசயாலய சோழனின் வீரத்திறனை விளங்க எடுத்துரைக்கின்றார்:

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்[33]

—விக்கிரம : 15

சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றொண்ணூறும்
ஆறும் படுதழும்பி னாகத்தோன்[34]

—குலோத்துங்க : 21

தொழும்புடைய ஆகத்துத் தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்ர சண்டன்[35]

—இராசராச : 19

சங்கம் தவிர்த்துச் சோழ நாட்டு வாணிக வளத்தை மேம்படுத்திய முதலாம் குலோத்துங்க சோழனை,

—உடலை
இறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுங் சுங்கமும் மாற்றி[36]

—விக்கிரம : 25, 26

என்றும்,

புவிராச ராசன் மனுமுதலோர் நாளில்
தவிராத சுங்கந் தவிர்த்தோன்[37]

—குலோத்துங்க : 26

என்றும் புகழ்ந்துரைத்த கூத்தன், அவன் காலத்தில் ஏற்பட்ட குடிமக்கள் கலகத்தினையும், ஒருங்கே கூறியுள்ளார்:

கல்கமுஞ் சுங்கமுங் காய்கலியும் மாற்றி
உலகைமுன் காத்த உரவோன்.[38]

—இராசராச : 26

இதனால் கூத்தரின் நடுநிலைமை சான்ற நன்னெஞ்சம் விளங்கும்.

---

33. விக்கிரம சோழன் உலா, 15
34. குலோத்துங்க சோழன் உலா, 21
35. இராசராச சோழன் உலா, 19
36. விக்கிரம சோழன் உலா, 25, 26.
37. குலோத்துங்க சோழன் உலா, 26.
38. இராசராச சோழன் உலா, 26.

வருணனைத் திறம்

பேதையை வருணிக்கும் அழகினைப் பின்வரும் பகுதியிற் காணலாம் :

—அங்கொருத்தி
வந்து பிறந்து வளரு மிளந்திங்கள்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து — பைந்தழைத்

தோகை தொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு — கோகுலத்தின்

பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை — கள்ளம்

தெரியாப் பெருங்கட் சிறுதேற ருயர்ப்
பிரியாப் பருவத்துப் பேதை.[39]

—விக்கிரம : 112-116

இதனோடு குலோத்துங்க சோழன் உலாவின் பேதைப் பருவ வருணனையும் ஒப்புநோக்கினால் புலவர் எத்துணையளவு திறம்பட வருணிப்பதில் வல்லவர் என்பதனையும், ஒரே கருத்தினையே வேறு வேறு வகைகளில் நயம்படக் கிளத்தும் சதுரப்பாடு உடையவர் என்பதனையும் காணலாம்.

இனையர் பலர்நிகழ வீங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை — கனைமுகினேர்

ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை — சூடத்

தளிராத சூதந் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி — அளிகள்

இயங்காத தண்கா விறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி — தயங்கிணர்க்

கூழைச் சுருண்முடிக்கக் கூடுவதுங் கூடாதாம்
ஏழைப் பருவத் திளம்பேதை.[40]

—குலோத்துங்க : 123_127

பட்டத்து யானையில் பவனிவரக் கண்ட தலைவனைக் கண்டு தன் தாய் நடந்து கொண்டது போன்றே பேதையும் நடந்து கொண்டாள் என்று பின்வருமாறு கூறும் கூத்தரின் கூற்றில் அவர்தம், உளவியல் நுட்பம் உணரும் திறம் கண்டு தெளியலாம்.

---

39. விக்கிரம சோழன் உலா, 112-116.
40. குலோத்துங்க சோழன் உலா, 123_127.

தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான் மொழிந்தாள்[41]

—விக்கிரம : 122

அடுத்து, பேதைப் பருவங்கடந்து பெதும்பைப் பருவம் வந்தடைந்த நிலையுடைய பெண்ணைப் புலவர் வருணிக்கும் வகையில் அப் பெண்ணின் உடல், உள்ள வளர்ச்சியினை ஒருங்கே காணலாம் :

—ஒருத்தி
மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து கொண்டாள் — நிழல்விரவு

முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள் — கன்னி

மடநோக்கந் தான்வளர்த்த மானுக் களித்து
விடநோக்கம் வேலிரண்டிற் கொண்டாள் — சுடர்நோக்கும்

தானுடைய மெய்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள் — பூநறும்

பாவைகள் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள் — மேவும்

மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள் — சுடர்கனகக்

கொத்துக் குயின்ற கொடிப்பவள பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியாள் — எத்திறத்தும்

வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேல்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள் — நேரொத்த

கோங்க முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்.[42]

—விக்கிரம : 134-143

அடுத்து, தெரிவை பட்டத்துயானைமேற் பவனி வந்த தலைவனைக் கண்டு காமுற்று மயங்கி விழுந்த நிலையில் அவள் உற்ற நிலையினைப் பின்வருமாறு திறம்பட வருணிக்கின்றார் :

"வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச் — சேணுலாம்

வாடை யனைய மலயா நிலந்தனையும்
கோடை யிதுவென்றே கூறினாள் — நீடிய

---

41. விக்கிரம சோழன் உலா, 122.
42. ,, , 134-143.

வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றாள் — ஊரெலாம்

காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள் — சேக்கைதொறும்

வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள் — கோழிக்கோன்

எங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள் — கங்குல்

*புலருந்தனையும் புலம்பினாள்.*43

மேலும், இரண்டாம் குலோத்துங்கன் கரிய நிறமுடையவன்

கொற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கள்
*முற்றப் புரக்கு முகில்வண்ணன்.*44

என்று குறிப்பிடும் கூத்தர், அவனைக் காணவந்த பெண்களும் நீலச்சேலையே அணிந்து, நீலமணிகளே பூண்டு, நீலநிற மலர்களையே அணிந்து, நீல நிறத்தையே நினைந்திருந்தனர் என்று திறம்படக் கூறுகின்றார் :

நீலமே வேய்ந்தடுக்க நீலமே பூண்டுடுக்க
*நீலமே யன்றி நினையாதாள்.*45

நாகரிகம் என்று இன்றும் நாகரிக மங்கையர் மேற்கொள்ளும் நெறியன்றோ இது. முருகப் பெருமானைப் பரவும் பாரதம் பாடிய பெருந்தேவனாரும் முருகனின் செந்நிறத்தைப் பின்வருமாறு கூறியிருக்கக் காணலாம்.

தாமரை புரையும் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல். 46

முருகனின் திருவடிகளும் செந்நிறம்; திருவுருவமும் செந்நிறம்; ஆடையும் செந்நிறம்; கைவேலும் செந்நிறம் என்று இப்பாடலில் புலவர் கூறியுள்ளார்.

---

43. விக்கிரம சோழன் உலா : 279–285.
44. குலோத்துங்க சோழன் உலா : 29.
45. ,, : 194.
46. குறுந்தொகை : கடவுள் வாழ்த்து.

மேலும் கூத்தர் அக் கால மகளிர் அணிந்த ஆபரண வகைகளைப் பின்வருமாறு கூறியுள்ளார் :

— கொணர்ந்தணிந்த
சூடா மணியும் பணிவளையுஞ் சூடகமும்
கோடா மணிமகர குண்டலமும் — ஆடிய

கலைசையும் மாலையும் ஆரமும் தாமமும்
கச்சையும் மேகலையும் காஞ்சியும் — பச்சென்ற

பட்டும் குறங்கணியும் பட்டிகையும் நாபுரமும்
கட்டும் கனவயிரக் காறையும். 47

கதிரவனை வருணிக்கும் கவிஞர் கூற்றில் பாட்டோட்டத்தினைக் கண்டு மகிழலாம் :

"அடுத்தடுத் தேந்திய திவ்யா பரணம்
எடுத்தெடுத் தொப்பித் தெழுந்து — சுடர்க்கதிரோன்
மாலைப் பகைவியைப் போக்கி வருவித்த
காலைத் துணைவியைக் கண்டெழுந்தாள்." 48

ஒட்டக்கூத்தரின் கற்பனை வளத்திற்குக் கீழ்க்காணும் பகுதிகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

— சுடர்நோக்கும்
தானுடைய மெய்ந்நுடக்கம் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள். 49

திருவிருந்து தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள். 50

— செம்மை
நிறையும் அழகால் நிகரழித்துச் செய்யாள்
உறையும் மலர்ப்பறிப்பாள் ஒப்பாள். 51

இரவிக்கு நிற்பன வேழு மொழியப்
புரவிக் குலமுழுதும் போத. 52

---

47. இராசராச சோழன் உலா, 321–324.
48. குலோத்துங்க சோழன் உலா, 267-268.
49. விக்கிரம சோழன் உலா, 138.
50. ,, , 240.
51. ,, 309.
52. குலோத்துங்க சோழன் உலா, 94.

தில்லைத் திருப்பணிகள்

இரண்டாம் குலோத்துங்க சோழன் உலாவில், குலோத்துங்கன் செய்த தில்லைத் திருப்பணிகள் கூறப்படுகின்றன.

" தில்லைத் திருமுன்றிற் சிறுசெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து ....
வருநாளில் " 53

— குலோத்துங்க : 39_58

இவன் தில்லைக் கோவிந்தராசப் பெருமாளைக் கோவிலிலிருந்து பெயர்த்தெடுத்துக் கடலில் போட்டவன் என்பதும் இப் பகுதியால் விளங்கும். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த செயலாகும். திருப்புறம்பியக் கல்வெட்டு இவன் செய்த இத திருப்பணிகளைக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு ஒட்டக்கூத்தர் புலமை நலத்துக்கும், வரலாற்றுணர்வுக்கும் (Historical Sense) மூவருலா ஒரு சான்றாய் விளங்குகின்றது.

(2) *தக்கயாகப் பரணி*

உலா, பிள்ளைத்தமிழ், தூது, அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களைப்போல அளவால் மிகுதியான பரணிகள் தமிழில் இல்லை. ஆயினும் பரணி நூல்களில முதலாவது கலிங்கத்துப் பரணியும், அதனையடுத்துத் தக்கயாகப் பரணியும் சிறப்புற்று விளங்கக் காணலாம். கூடல் சங்கமத்துப்பரணி, கொப்பத்துப்பரணி, கலிங்கப்பரணி முதலான நூல்கள் இருந்து மறைந்திருக்கலாம் என்பது பினவரும் சான்றுகள் கொண்டு அறியலாம்.

கூடல் சங்கமத்துப்பரணி

—கூடலார்
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் — கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும். 54

" பாட வரிய பரணி பகட்டணி வீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்டோன் " 55

---

53. குலோத்துங்க சோழன் உலா : 39-58.
54. விக்கிரம சோழன் உலா : 22.
55. இராசராச சோழன் உலா : 23.

கொப்பத்துப் பரணி

……………… கொலையானை
பப்பத் தொருபசிப் பேய் பற்றவொரு பரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன். 56

செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணிகொண்டு
வருத்தங் கவிர்த்துல காண்ட பிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே. 57

விக்கிரம சோழன் மீது ஒட்டக்கூத்தர் கலிங்கத்துப் பரணி (கலிங்கப்பரணி) பாடியது:

விருப்பரணி வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள் — தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்" 58
தரணி யொரு கவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி — முரணில்
புரந்தர னேமி பொருவு மகில
துரந்தரன் விக்கிரம சோழன். 59

பின்வரும் பாட்டியல் இலக்கண நூல்கள் 'பரணி' நூல் எழுதற்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டாலும், ஆயிரம் யானைகளை அமர்க்களத்திலே அட்டு வெற்றிவாகை சூடிய வேந்தனை நயம்பட நாவாரப் புகழ்ந்து பாடுதலே பரணியின் இலக்கணம் என்பது புலப்படுகின்றது.

பரணியின் இலக்கணம்

பின்வரும் நூற்பாக்கள் பரணியின் இலக்கணம் கூறும்:

வஞ்சிமலைந்த உழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானைவெங் களத்தில்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே. 60

—பன்னிரு பாட்டியல்: 57

---

56. இராசராச சோழன் உலா 24.
57. தக்கயாகப் பரணி: கூழடுதலும் இடுதலும்: 49.
58. குலோத்துங்க சோழன் உலா: 28, 29.
59. இராசராச சோழன் உலா: 27, 28.
60. பன்னிரு பாட்டியல்: 57

மூண்ட அமர்களத்து மூரிக களிறட்ட
ஆண்டகை யைப்பரணி யாய்ந்துரைக்க—ஈண்டிய
நேரடியே யாதியா நீண்டகலித் தாழிசை
ஈரடிகொண் டாதியுட னீறு. [61]

—வெண்பாப் பாட்டியல் : 38

ஆனை யாயிர மமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி " [62]

—இலக்கண விளக்கப் பாட்டியல் : 838

அடுத்து, பரணியின் உறுப்புக்கள் வருமாறு :

பரணியின் உறுப்புக்கள்

1. கடை திறப்பு, 2. பாலை கூறல், 3. கோயிற் சிறப்பு, 4. காளியைப் போற்றல், 5. இந்திரசாலம், 6. மன்னன் மரபுரைத்தல், 7. போர்ச்சிறப்பு உரைத்தல், 8. போர்க்களம் காணல், 9. கூழ் சமைத்து வார்த்தல், 10. மன்னனை வாழ்த்தல்.

இனி, பரணியின் பெயர்க்காரணத்தை ஆராய்வோம்.

பரணி — பெயர்க்காரணம்

தினைப் புனத்தில் காவல் செய்வோர் ஒரு பரண்மீது அமர்ந்து, தினையை அழிக்க வரும் பறவையினங்களைத் துரத்துவது போன்று, போர்க்களத்தில் வீரன் யானை மீதிருந்து எதிரிகளைத் துரத்துவதால் இச் செய்தி பற்றிக் கூறும் இந் நூல் பரணி எனப்பெயர் பெற்றது என்பர் சிலர்.

தினைப்புனங் காப்போர் பரண்மீது இருந்து பறவைகளைத் துரத்தப் பாடுதல் போல, அரசனின் வில்வேல், வாள் ஆகிய படைக் கலங்களால் அமைக்கப்பட்ட பரண்மீதிருந்து புலவர் இந் நூலைப் பாடுதலால் இந் நூல் பரணி என அழைக்கப்படுகின்றது என்பர் சிலர்.

அணி மணி முதலியவற்றை வைக்கும் செப்பு பரணி என அழைக்கப்படுதல் போல, பல்வேறு கற்பனை நலமும் சுவைகளும்

---

61. வெண்பாப் பாட்டியல் : 38

62. இலக்கண விளக்கப் பாட்டியல் : 838

தன்னகத்துக் கொண்டது இவ்விலக்கியமாதலால் இது பரணி என அழைக்கப்படுகின்றது என்பர் வேறு சிலர்.

இப்பெயர் பரணி நட்சத்திரம் பற்றி அமைந்த பெயராகும் என்றும் அறிஞர் சிலர் கூறுவது ஏற்புடைய கருத்தாக விளங்குகின்றது.

நூற்பொருள்

தக்கயாகப் பரணி என்று ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட இப்பரணி, தாட்சாயணி (உமாதேவி)யின் தந்தையாகிய தக்கன், சிவபெருமானை மதிக்காமல், அவரை அவமதிக்கும் நோக்கில் செய்யப் புகுந்த யாகத்தைச் சிவபெருமான் வீரபத்திரக் கடவுளைத் தோற்றுவித்து, அவரைக்கொண்டு அந்த யாகத்தை யழித்து, தக்கனுக்கு உதவ வந்த தகாத தேவர்களை அவமானப்படுத்தி, இறுதியிற் தக்கனுடைய தலையையும் தடிந்த புராணச் செய்தியினைக் காப்பிய நயம்பட விளக்குகின்றது.

இப் பரணியின் பாட்டுடைத் தலைவன் சிவபெருமான், இப் பரணியைப் பாடும்படி வேண்டியவன் இரண்டாம் இராசராசன் ஆவன்.

தக்கயாகப் பரணியில் எண்ணூற்றுப் பதின்மூன்கு தாழிசைகள் அமைந்துள்ளன. முதற்கண் வைரவக் கடவுள் காப்பு அமைந்துள்ளது. இக் காப்புப் பகுதியே இப்பரணி முழுவதிலும் அமைந்துள்ள சந்தச் சுவைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

உரககங் கணங் தருவனபணமணி
யுல கடங்கலுந் துயிலெழவெயிலெழ
உடைதவிர்ந்ததன் றிருவரையுடைமணி
யுலவியொன்றொடொன் றல மரவிலகிய

கரதலந்தருந் தமருகசதிபொதி
கழல்பு னைந்தசெம் பரிபுரவொலியொடு
கலகலன்கலன் கலனெனவருமொரு
கரியகஞ்சுகன் கழலி ணைகருதுவாம் 63

அடுத்து அமைந்துள்ளது உமாபாகர் வாழ்த்து. அதன் பின்னர் விநாயகக் கடவுள், முருகக்கடவுள் காப்புச் செய்திகள் பின்வருமாறு அமைந்துள்ளன :

---

63. தக்கயாகப் பரணி : வைரவக் கடவுள் காப்பு

விநாயகக்கடவுள் வாழ்த்து

"சதகோடி விததாள சதிபாய முகபாகை குதிபாய்கடா
மதகோடி யுலகேழு மணநாற வரும்யானை வலிபாடுவாம்.

நககோடி பலகோடி புலியேறு தனியேற நளினாலயன்
உககோடி பலகோடி குலதீப னெழுதீவு முடனாளவே.[64]

முருகக்கடவுள் காப்பு

ஒருதோகை மிசையேறி யுழல்சூரு மலைமார்பு முடனூடுறப்
பொருதோகை சுரராச புரமேற விடுகாளை புகழ்பாடுவாம்.

கடலாழி வரையாழி தரையாழி கதிராழி களிகூர்வதோ
ரடலாழி தனியேவு குலதீப ந்ருபதீப னருள்கூரவே[65]

திருஞான சம்பந்தப் பெருமானை முருகனாகவே எண்ணி, அவர் வள்ளியை மணம் புணர வந்தவர் என்பதனைக் 'கோயில் பாடியது' எனும் பகுதியில், மதுரையில் சமணரை வாதில் வென்ற கதையினை விளக்கும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார் :

வருகதை தெய்வமகளென் மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லுமினிய

தொருசதை சொல்லுதவள வொளிவிரி செவ்விமுளரி
யொளிதிக ழல்லிகமழ மொருமனை வல்லியெனவே.[66]

'சம்பந்தர் முருகப் பெருமானின் அவதாரம்' என்று முதற்கண் இக் கொள்கையைத் தோற்றுவித்தவரே ஒட்டக்கூத்தர் ஆகலாம் என்றும், சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் இவ்வாறு சொல்லவில்லை எனறும், ஆயினும் அருணகிரிநாதர் ஒட்டக்கூத்தர் கொள்கையை ஏற்றுப் பாடியுள்ளார் என்றும் ஆராய்ச்சி வல்ல திரு மு. அருணாசலம் அவர்கள் கூறுவர்.[67]

இனி, இப் பரணியின்கண் அமைந்துள்ள போர்க்கள வருணனை யினைக் காண்போம் :

சிரமுஞ் சிரமுஞ் செறிந்தன
சரமுஞ் சரமுந் தறிப்பவே.

கனமுங் கனமுங் கனைத்தன
சினமுஞ் சினமுஞ் சிறக்கவே.

---

64. தக்கயாகப் பரணி : 3, 4
65. ,, : 5, 6
66. ,, கோயிலைப் பாடியது : 34
67. தமிழ் இலக்கிய வரலாறு; 12-ஆம் நூற்றுண்டு; ப. 408

கடையுங் கடையுங் கலித்தன
தொடையுந் தொடையுந் துரப்பவே.

தாருந் தாருந் தழைத்தன
தேருந் தேருந் திளைப்பவே.

தோலுந் தோலுந் துவைத்தன
கோலுங் கோலுங் குளிப்பவே.

தோளுந் தோளுந் தொடங்கின
தாளுந் தாளுந் தரிப்பவே.

கிரியுங் கிரியுங் கிடைத்தன
கரியுங் கரியுங் கடுப்பவே.

தலையுந் தலையுந் தகர்த்தன
சிலையுஞ் சிலையுஞ் சிலைப்பவே.

குடையுங் குடையுங் கொழித்தன
படையும் படையும் பகைப்பவே.[68]

இப் பகுதியில் எளிய சொற்கள் அடுக்காக அமைந்து, ஒரு போர்க் களத்தையே நம் கண்முன் காட்டக் காணலாம்.

தேவியின் வருணனையும் நம் உள்ளத்தை அள்ளுகின்றது. தேவிக்குத் திருமஞ்சன நீர் கங்கை நீர்; அவளுடைய குழைகள் சந்திர சூரியர்; படுக்கை அரவரசு; ஆடை பொன்னுடை

வனமலரோ பூமாரி வானகற் பகமலரே
கனசலமோ வபிடேகங் கடவுட்கங் காசலமே.

வயங்குகுழை மதியமோ வாளிரவி மண்டலமே
தயங்குகவுத் துவமோபூண் டனிச்சோதிச் சக்கரமே.[69]

இவருடைய பாலை வருணனை பின்வருமாறு அமைந்துள்ளது.

பால்வறந்துகீழ் நின்றகள்ளியும்
பசைவறந்துபோய் மீமிசைச்
சூல்வறந்துபோய் மாகமேகமுஞ்
சுண்டவீமவெரி மண்டவே.

பிணங்கடுங்கனலு மின்றிவெந்துநில
வாய்நிமிர்ந்துபில வாயபேய்
நிணங்கரைந்துருக நெய்யைநீரென
நினைந்துநாவினை நனைக்குமே.[70]

---

68. தக்கயாகப் பரணி, காளிக்குக் கூளி கூறியது; 268–276
69. ,, தேவியைப் பாடியது: 13, 14
70. ,, காடு பாடியது; 2, 3

தேவி வருணனை யாமள நூலிற் கண்டபடி கூறப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவர்.

இக்கணங்கள் வந்துசூழும் யோகயாமளத்தினுள்
மெய்க்கணங்க ளேவிரும்பு கோயில்யாம் விளம்புவாம் [71]

யாமள நூல் அறிந்து, அச் செய்திகளைத் தமிழ் நூல்களிற் பயன்படுத்திய புலவர் ஒட்டக்கூத்தர் ஒருவரே யாவர்.

இந் நூலின் முடிவில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரை வாழ்த்தும் முகமாகப் பாடல்கள் இரண்டு அமைந்துள்ளன.

ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்ர வர்த்தி வாழியே.

வாழி தமிழ்ச்சொற் றெரிந்த நூற்றுறை
வாழி தமிழ்க்கொத் தனைத்து மார்க்கமும்
வாழி திசைக்கப் புறத்து நாற்கவி
வாழி கவிச்சக் ரவர்த்தி கூத்தனே. [72]

"மிகச் சிறப்புடைய கலிங்கத்துப்பரணிக்குப் பழைய உரை எதுவும் இல்லை; அடுத்துவந்த தக்கயாகப் பரணிக்கே உரை உண்டென்பது இந் நூலின் சிறப்புக்களில் ஒன்று" என்பர் அறிஞர் திரு மு. அருணசலம் அவர்கள். [73]

இதற்குக் காரணம் தக்கயாகப் பரணியில் அமைந்துள்ள சைவ சமயச் சிறப்பின் திறமே எனலாம்.

3. தனிப்பாடல்கள்

ஒட்டக்கூத்தர் இயற்றியனவாகப் பல செய்யுட்கள் தனிப்பாடல் திரட்டிலும், தமிழ் நாவலர் சரிதையிலும் காணப்படுகின்றன. இனி, இவை குறித்து ஒரு சிறிது காண்போம்.

---

71. தக்கயாகப் பரணி, கோயிலைப் பாடியது: 1
72. ,, வாழ்த்து: 14, 15
73. தமிழ் இலக்கிய வரலாறு; 12 ஆம் நூற்றாண்டு: பக். 413

விக்கிரம சோழனுடைய வீரத்தினைப் புகழ்ந்து இரண்டு பாடல்களை ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். அவை வருமாறு:

இன்னம் கலிங்கத்து இகல்வேந்தர் உண்டென்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா! உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.[74]

இப்பாடலில் விக்கிரமசோழனின் போர்ப்பெருமை குறிப்பிடப் படுகின்றது.

அன்றையிலும் இன்றைக் ககன்றதோ, அல்லாது
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ— என்றும்
அடைந்தாரைத் தாங்கும் அகளங்கா! நீயும்
நடந்தாயோ நாலைந் தடி.[75]

இப்பாடலும் விக்கிரம சோழனின் சீற்றச் சிறப்பினை வெளிப் படுத்துவதாக அமைந்திருக்கக் காணலாம்.

'உலாப் பாடியபோது, பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது' என்ற தலைப்பின் கீழ், தமிழ் நாவலர் சரிதையில் பின்வரும் பாடல் காணப்படுகின்றது:

செங்கால்மட அன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
பைங்காய்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா!
தங்காதலி யருமைந்தரும் உடனுக வணங்கித்
'தலைகா, எம துடல்கா, எம துயிர்கா, அக ளங்கா
கொங்கா, மன துங்கா!' என மதுரேசர் வணங்கும்
கொல்யானை அபங்கா! இவள் குழலோசை பொறுளே.[76]

இப்பாடலில் அரிய இலக்கியச் சுவை அமைந்திருக்கக் காணலாம். மேலும் ஒட்டக்கூத்தருக்கும் இரண்டாம் குலோத்துங்க னுக்கும் இடையே சிறக்க நிலவிய ஆசிரியர் — மாணுக்கன் தொடர்பினைத் தமிழ்நாவலர் சரிதை பின்வருமாறு விளக்குகின்றது. ஒட்டக்கூத்தர் ஒருசமயம் குலோத்துங்கனின் புகழைப் பாடத் தொடங்கினுர்.

---

74. தமிழ் நாவலர் சரிதை (கழகப் பதிப்பு): 126
75. ,, : 124
76. ,, : 132

ஆடுங் கடைமணிநா அசையாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையில் தரித்தபிரான் என்றும்

என்று பாடிக் கொண்டிருந்த அளவில் இதனைக் கேட்டுக் கொண்டே வந்த சோழன், தன் ஒட்டக்கூத்தர்மாட்டுக்கொண்ட ஆசிரிய அன்பினையும் பணிவுடைமையினையும் பாங்குறப் புலப்படுத்தும் வகையில், கூத்தர் தாம் தொடங்கிய பாடலை முடிப்பதற்குள், தானே அப்பாடலின் பிற்பகுதியினைப் பின்வருமாறு பாடி முடித்தான் என்பர்.

— நித்தநவம்

பாடுங் கவிப்பெருமாள் ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே என்னைச் சொல்லுவரே.[77]

இரண்டாம் இராசராசனைக் குறித்தும் இவர் தனிப்பாடல்கள் சிலவற்றை இயற்றியதாகத் தெரியவருகின்றது. இராசராசன் குதிரையேற்றம் கற்றுக்கொண்டு வெளியே குதிரை விட்ட சமயத்தில்

கண்டன் பவனிக் கவனப் பரிநெடுங்கால்
மண்துளங் காதே யருந்தவா! — கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை [78]

என்றும், அவன் துலா புருடதானம் செய்த சிறப்பினைப் பாராட்டி,

தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட
செம்பொற் றுலாத்திடைவண்டு
உழுகின்ற தார்க்கண்டன் ஏறிய
ஞான்றின் உவாமதிபோய்
விழுகின்ற தொக்கும் ஒருதட்டுக்
காலையில் வேலையில்வந்து
எழுகின்ற ஞாயிறொத் தான்குல
தீபன் எதிர்த்தட்டிலே [79]

என்றும், இராசராசனுடைய தேவி ஊடல் காரணமாகக் கதவடைத்துக் கொண்டிருந்த காலையில்,

---

77. தமிழ் நாவலர் சரிதை (கழகப் பதிப்பு) : 131
78. ,, : 125
79. ,, : 127

கரத்தும் சிரத்தும் களிக்குங் களிறுடைக்
கண்டன் வந்தான்
இரத்தும், கபாடம் இனித்திறப் பாய், பண்
டிவன் அணங்கே
உரத்தும் சிரத்தும் கபாடம் திறந்திட்ட
துண்டு, இலங்கா
புரத்தும் கபாட புரத்தும்கல் யாண
புரத் தினுமே [80]

என்றும் பாடியதாகப் பாடல்கள் தமிழ்நாவலர் சரிதையில் காணப் படுகின்றன. அரசி ஊடலாய்க் கதவடைத்துக் கொண்டிருந்த பொழுது இவர் மேற்கண்ட பாடலைப் பாட, அரசி சினந்தணி யாளாய், கதவடைத்து ஒரு தாழ்ப்பாள் போட்டுக் கொண்டிருந்தவள் இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள் என்றும், அன்றிலி ருந்து 'ஒட்டக்கூத்தர் பாடலுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற மொழி நாட்டில் எழுந்தது என்றும் கூறுவர்.

ஒரு சமயம், அரண்மனைச் சமையற்காரன் அரசனுக்காகச் சமைத்த உணவில் கல்லும் மண்ணும் கலந்திருந்ததைக கண்டு, அரசன் அடங்காச் சீற்றங்கொண்டு சமையற்காரனுக்குத் தண்டனை கொடுக்க முன்வந்தபோது, ஒட்டக்கூத்தர் தலையிட்டுச் சமையற் காரன் பிழையினை அரசன் பொறுத்தருள வேண்டும் என்று கூறும் போக்கிற் பின்வரும் பாடலைப் பாடிச் சமையற்காரனை உய்யச் செய்தார் என்பர்.

மீனகம் பற்றிய வேலையும் மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோ? பொருந் தாஅரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கல் பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங் கனே. [81]

மேலும், குலோத்துங்கன் போலவே இராசராசனும் ஒட்டக் கூத்தர் மாட்டுப் பேரன்பு செலுத்தினன் என்பது பின்வரும் நிகழ்ச்சி யால் விளங்கும். ஒருமுறை அவைக்களத்தில் வீற்றிருந்த ஒட்டக் கூத்தர், அவை கலைந்தபோது தம் வயது முதிர்ச்சியின் காரணமாகத் தாம் அமர்ந்திருந்த இருக்கையினின்றும் எழுந்திருக்கச் சிறிது தொல்லைப்பட்ட நிலையில், அதுபோது அரியணையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த இராசராசன் இதனைக் கண்டுவிட்டு இரங்கி,

---

80. தமிழ் நாவலர் சரிதை (கழகப் பதிப்பு) : 128
81. „ : 138

ஒட்டக்கூத்தர் பெருமானுக்குக் கைகொடுத்து அவரை இருக்கையினின்றும் இறக்கி விட்டான் என்பர். அவன் தன்மாட்டுக் காட்டிய பேரன்பாலும் பெருமதிப்பாலும் மனம் உருகிய ஒட்டக்கூத்தர் பின்வரும் பாடலைப் பாடினர்.

கொலையைத் தடவிய வைவேல் அரக்கர் குலம்மடியச்
சிலையைத்தடவிய கையே யிது, செக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவன்னர்
தலையைத் தடவி நடக்குங் கொல் யானைச் சயதுங்கனே 82

குலோத்துங்க சோழன் தில்லைக் கோவிந்தராசப் பெருமானைக் கடலில் தூக்கி எறிந்ததாக வரலாறு கூறும். ஆனால் இராசராசன் அவ்வாறின்றிச் சமயப் பொறை மிகுந்தவன் என்பது 'விழுந்த அரிசமயத்தை மீள எடுத்தான்' என்று அவன் மெய்க்கீர்த்தி குறிப்பிடுவதனின்றும் அறியலாம். மன்னன் 'அரியைப் பாட வேண்டும்' என்று ஒட்டக்கூத்தரை ஒரு ஞான்று கேட்டதாகவும், அதுபோது பின்வரும் பாடலை அவர் பாடியதாகவும் தமிழ்நாவலர் சரிதை குறிப்பிடும்.

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினும் அவ்விடத்துன்
பேரே வரும்என்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்
வேரே, மிதிலையின் மின்னுட னேவெய்ய கான்நடந்த
காரே, கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே. 83

சிவபெருமானிடம் ஒட்டக்கூத்தர் பெரும்பக்தி செலுத்தியவர் என்பது அவர் திருநெய்த்தானத்துச் சிவபெருமானைச் சேவித்த பொழுது பாடிய பாடலால் அறியப்படும்.

சோணாட்டில் திரிபுவனம் என்ற புவனைமாநகரில் வாழ்ந்த செல்வன் சோமன் என்பான் ஒட்டக்கூத்தரைப் புரந்த வள்ளல் ஆவன்.

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். 84

---

82. தமிழ் நாவலர் சரிதை (கழகப் பதிப்பு): 137
83. ,, : 139
84. ஔவையார் தனிப்பாடல்

என்ற பாடலால் சோமன் கொடைப் பெருமை நன்கு வெளிப்படும். பழிகாரர் சிலர் ஒட்டக்கூத்தரைத் துரத்தி வந்த பொழுது சோமன் வாயிலிற்கு ஓடிச்சென்று ஒட்டக்கூத்தர் பாடியதாகத் தமிழ்நாவலர் சரிதையிற் பின்வரும் செய்யுள் காணப்படுகின்றது.

அடையென்பார் தள்ளென்பார் அன்பொன் றிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேம்—கொடையென்றால்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்குடைக்கீழ்
வந்துய்ஞ்சோ மாதலான் மற்று [85]

மேலும், சோமன் ஒருகால் சோழ மன்னனைக் காணவேண்டி அரண்மனை வந்து, அரசனைக் காண அமயம் பார்த்து நின்றபோது, அரசனைக் கண்டு திரும்பும் கூத்தரை 'அரசனைக் காணத் தகுந்த சமயம் யாது?' என வினவ அதற்குக் கூத்தர் மறுமொழி கூறிய பாடல் வருமாறு:

தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் தானுரைப்பது
உன்னுடைய கீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமோ ருரைக்க வினி. [86]

நெய்த்தானப் பெருமானை ஒட்டக்கூத்தர் பாடியதாகப் பின் வரும் செய்யுள் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றது. இப் பாடலில் அமைந்துள்ள அரிய பொருள், வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துவதாக இருக்கின்றது.

விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டா னட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
இற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்காடப் பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்போம்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே. [87]

இப் பாட்டின் பொருள் வருமாறு:

"விக்கித் தளர்ந்து உயிர் உடலை விட்டுப்போய் விட்டால், உறவினர் பிணத்தைத் தகனஞ் செய்துவிட்டு ஊர்க்குள் போய்விடுவர். இத்தகைய இயல்புடைய உடம்பில் பற்றுவைத்து, செல்வத்தைத்

85. தமிழ் நாவலர் சரிதை: 134
86. ,, : 133
87 தனிப்பாடல் திரட்டு; முதற்பாகம்: பாட்டு 61

தேடிச் சம்பாதித்து வீட்டிற்கொண்டு வைக்கின்றவர்களே! தாம் அணிந்திருக்கும் எலும்பு மாலை அசையும் பேய்கள் ஒருங்குகூடிக் கூத்தாடவும், சடையிற் 'சூழ்ந்திருக்கும் கங்கையானது அசையவும், திருக்கைகளில் வைத்திருக்கும் வெப்பமான நெருப்பு அசையவும், அச் சுடுகாட்டினிடத்தில் நடனஞ் செய்கின்ற அந்தப் பெருமை பொருந்திய நெய்த்தானமென்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு நிலையான கதியைப் பெறுவீராக.''

இவ்வாறுகத் தனிப்பாடல்கள் பலவுள. இவை அனைத்தும் ஒட்டக்கூத்தரே பாடியவைதாமு என்பதில் சிலர்க்கு ஐயப்பாடு உண்டு. ஆயினும் இலக்கியச் சுவை நோக்கி இவை இங்கே ஓரளவு சுருக்கமாகக் கூறப்பட்டன.

கதைகள்

ஒட்டக்கூத்தர் பல்வேறு சமயங்களில் பலரைப் பாராட்டித் தனிப் பாடல்கள் பாடியிருக்கலாம். அப் பாடல்கள் தனிப்பாடற் றிரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி, தமிழ் நாவலர் சரிதை, விநோதரச மஞ்சரி, பெருந்தொகை ஆகிய நூல்களில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வெண்பா ஆகிய யாப்புகளில் காணப் படுகின்றன. இப் பாடல்களைக் கொண்டு கதைகள் பல கட்டியுள் ளனர். அவற்றில் பல கால முரண்பட்டன. ஒட்டக்கூத்தர்-கம்பர் கதை, ஒட்டக்கூத்தர்-புகழேந்தி கதை என்பன பின்வந்தோரின் கற்பனைப் படைப்புகள். இக் கதைகளில் ஒட்டக்கூத்தர், புகழேந்தி கதை விறுவிறுப்பும், சுவையும் மிக்கது. இப் பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு கூத்தரின் புலமைநலங் காண முற்படுதல் பொருந்தாச் செயலாகும்.

3. ஆய்வும் முடிவும்

1. ஒட்டக்கூத்தரின் பெயர்க்காரணம்

ஒட்டக்கூத்தரின் இயற்பெயர் கூத்தர் என்றும், அம்பலக்கூத்தர் என்றும், ஆனந்தக் கூத்தர் என்றும் குறிப்பர் ஒரு சாரார். ஒட்டக் கூத்தர் என்பதில் ஒட்ட என்பதனை வினையெச்சமாகக் கொண்டு 'ஒட்டுதல்' என்ற பொருளும், 'ஒட்டம்' எனப் பெயராகக் கொண்டு 'பந்தயம்' என்ற பொருளும் அமைத்துக் கதைகள் பல புனைப்பட் டுள்ளதும் காணலாம். விக்கிரம சோழன் உலாவில் தாம் பாடிய ஒரு கண்ணியை ஒட்டிப் பாடியமையால் இப்பெயர் பெற்றுர் என்

றும், அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூலினை அரங்கேற்றிய பொழுது, அந்நூலில் உள்ள ஒரு செய்யுளைத் தனக்கு ஒட்டப் பாடும்படி விக்கிரம சோழன் சொல்ல, அவ்வாறே கூத்தர் பாடினமையால் இப்பெயர் பெற்றார் எனறும் கூறுவர். மேலும் புலவர் பலருடன் பந்தயம் வைததுப் பாடிப் புகழ் பெற்ற காரணத் தால் ஒட்டக்கூத்தர் எனும் பெயர் பெற்றார் என்றும் கூறுவோர் உண்டு.

டாக்டர் மு. வரதராசனார் அவர்களால் எழுதப்பெற்று அண் மையில் சாகித்திய அக்காதெமியினர் வெளியிட்டுள்ள 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில் ஒட்டக்கூத்தர் பெயர்க் காரணம் பின்வருமாறு சுட்டப்படுகின்றது.

> *" அவர் (ஒட்டக்கூத்தர் ஒரிசா நாட்டோடு பெற்றிருந்த தொடர்பு காரணமாக ஒட்ட (ஒரிசா நாட்டு) என்ற அடையுடன் ஒட்டக் கூத்தர் என வழக்கப் பெற்றார் "*[88]

முதற் குலோத்துங்கனின் கலிங்க வெற்றிக்குப் பிறகு, தமிழர் கலிங்க நாட்டோடு - ஒரிசாவோடு நெருங்கிய தொடர்புகளை வளர்த் துக் கொண்டிருக்கக்கூடும். எனவே அம்முறையில் சோழ மன் னர்களின் அவைக்களப் புலவராகவும், ஆசிரியராகவும், இலக்கியச் செம்மலாகவும் விளங்கிய ஒட்டக்கூத்தர் ஒரிசா நாட்டிற்குப் பன் முறை சென்றுவந்திருக்கலாம். அதுவும் அரசியற் பணியின் பொருட்டுச் சென்று வநதிருககலாம். இக்காரணம் பற்றி இவர் 'ஒட்டக்கூத்தர்' என்று அழைக்கப்பட்டார் என்றும் டாக்டர் மு. வ. அவர்கள் கூற்று ஆய்வுக்குப் பொருந்துவதேயாகும்.

2. ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர்

> *" சேலேய் விழிமடவாரில் செங்கா லன்னம்சேர் பழனப்*
> *பாலேய் மணவயிற் கூத்த "*

என்னும் தனிப்பாடல் ஒன்றுகொண்டு, இவர் 'மணவை' எனும் ஊரினர் என்பர். இம் 'மணவை' என்னும் ஊர் 'மணக்குடி' யாக இருக்கலாம் என்று கொண்டு, அவ்வூரினைத் திருத்துறைப் பூண்டிக்கு எட்டு மைல் தொலைவில் உள்ள ஊராகக் கருதுவர். இவ்வூரில் இன்றும் செங்குந்தர்கள் மிகுமியாக வாழ்கின்றனர். மேலும், இவ்வூரின் மேலைத் தெருவின் வடபுறம் ஓட்டுக் கட்டடம்

88. தமிழ் இலக்கிய வரலாறு : பக். 157

என்று உள்ளது. இதுவே கூத்தர் பிறந்த இல்லம் என்று கருதுவர்.

இனி 'காழிவொட்டக் கூத்தன்' என்று இவர் பாராட்டப்படு வது கொண்டு, இவர் சீகாழியில் பிறந்தவர் என்பர். 'காழியொட்டக் கூத்தன்' என்பது பாடமில்லை. 'காளியொட்டக்கூத்தன்' என்பதே பாடம் எனக்கொண்டு அக் 'காளி' எனும் சொல், ஒட்டக்கூத்தரின் சமகாலத்துப் புலவராகிய 'நம்பிகாளி' எனும் புலவரைக் குறிப்பிட்டு நிற்கிறது என்பர். ஒட்டக்கூத்தர் காளிதேவியின் அருள் பெற்றவர். எனவே 'காளியொட்டக்கூத்தர்' என அழைக்கப்பெற்ருர் என்பர்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் ரயில் நிலையத் திற்கு மூன்று கல் தொலைவில் அமைந்துள்ள கூத்தனூரே ஒட்டக் கூத்தர் பிறந்த ஊர் என்பர். விக்கிரம சோழன் முற்றூட்டாக - புலவர்க்குப் பரிசாக இவ்வூரினைத் தந்துள்ளானேயன்றிக் கூத்தர் பிறப்பிடம் இவ்வூர் ஆகாதென்பர்.

தண்டியலங்கார மேற்கோள் செய்யுளொன்றில் 'மலரிவரும் கூந்தன் தன் வாக்கு' எனும் தொடரால் ஒட்டக்கூத்தர் ஊர் மலரி என்பர்.

கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞரான திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டில் ஒட்டக் கூத்தர் பிறந்த ஊர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "இப்புலவர் பிறந்தது மலரி என்னும் ஊர். இவ்வூர், திருச்சிராப் பள்ளிக்கு அண்மையில் இக்காலத்தில் திருவரம்பூர் என்று வழங்கிவரும் திருஎறும்பியூரே என்பது அங்குள்ள கோயிற் கல்வெட்டால் உறுதி எய்துகின்றது.[89]

எனவே கூத்தர் மலரியிற் பிறந்து, சீகாழியில் சிலகாலம் வாழ்ந்து, கூத்தனூரில் இறுதிக் காலத்தைக் கழித்து, இயற்கை எய்தியவர் என்று முடிவுக்கு வரலாம்.

---

89. கலைக்களஞ்சியம் : தொகுதி 2 : பக். 654

3. ஒட்டக்கூத்தர் பொறுக்காத மனமும் புலமைக் காய்ச்சலும் கொண்டவரா?

ஒட்டக்கூத்தர் பல்வேறு சமயங்களில் பலரைப் பாராட்டித் தனிப்பாடல்கள் பாடியிருக்கலாம். அப் பாடல்கள் தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி, தமிழ் நாவலர் சரிதை, விநோதரச மஞ்சரி, பெருந்தொகை ஆகிய நூல்களில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வெண்பா ஆகிய யாப்புக்களில் காணப் படுகின்றன. இப் பாடல்களைக் கொண்டு கதைகள் பல கட்டியுள் ளனர். அவற்றில் பல கால முரண்பட்டன. ஒட்டக்கூத்தர்-கம்பர் கதை, ஒட்டக்கூத்தர்-புகழேந்தி கதை எனபன பின்வந்தோரின் கற்பனைப் படைப்புகள் என்று உறுதியாக நிறுவலாம். இக்கதை களில் ஒட்டக்கூத்தர்-புகழேந்தி கதை விறுவிறுப்பும் சுவையும் மிக்கது. இப்பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு கூத்தரின் புலமை நலங்காண முற்படுதல் பொருந்தாச் செயலாகும்.

புலவர் போட்டியும் பொருமையும் இக்கால (ஒட்டக்கூத்தர் கால) இலக்கிய வளர்ச்சிகு ஒரு தூண்டுதலாக இருந்துள்ளது என்றும், இவர் காலத்துப் புலவர்களாகிய கம்பர், புகழேந்தி, ஒளவை முதலானோருடன் காழ்ப்புக் கொண்டு பூசலிழைத்துக் கொண்டே யிருந்திருக்கலாம் என்றும், சோழ மன்னர்க்குச் சமயப் பொறையில்லாதது போலவே இவர்க்கு (ஒட்டக்கூத்தருக்கு) புல மைப் பொறையும் இல்லாமை உணரப்படுகின்றது என்றும் அறிஞர் கருதுவர்.[90]

கல்வெட்டுப் புலமையும், நடுவுநிலை நெஞ்சும், ஆராய்ச்சி வித் தகமும் நிறைந்த அறிஞர் சதாசிவ பண்டாரத்தார் பின்வருமாறு எழுதியுள்ளார்.

" இவர் காலத்திருந்த புலவர்கள் நம்பிகாளியார், நெற்குன்ற வாண முதலியார், தமிழ்த் தண்டியாசிரியர், தக்கயாகப்பரணி உரையாசிரியர், தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பேராசிரியர் முதலானோர் ஆவர். கம்பர், புகழேந்தி, சேக்கிழார் ஆகியோர் இவர் காலத்தில் இருந்தவர்கள் என்பது சிலருடைய கொள்கை யாகும்; அதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை என்பது அறியத் தக்கது. அவர்களுள் புகழேந்திப் புலவர் இவருக்குச் சற்றேறக்

---

90. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம் : பக். 133

குறைய நூறுண்டுகளுக்குப் பிற்பட்டவர். எனவே, இவருக்கும் அப் புலவருககும் வாதப போர் நிசழ்ந்தது என்றும், இவர் தூண்டுத லால் அவர் சோழ மன்னனுல் சிறையிடப்பட்டார் என்றும் கூறப் படும் செய்திகள் எல்லாம் வெறுங் கற்பனைக் கதைகளேயன்றி உண்மையான சரித்திர நிகழ்ச்சிகள் ஆகமாட்டா என்பது திண் ணம்: இவர் புலவர் பெருமக்களிடத்தில் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார் என்பதை இவருடைய நூல்களால் நன்குணரலாம்.

இவரை ஆதரித்தவர்கள் மேலே குறிப்பிடப்பெற்ற சோழ மன்னர் மூவரும் அவர்களுடைய அமைச்சர்களும் படைத் தலைவர் களுமான அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன காலிங்கராயன், திருசசிற்றம்பலமுடையான் பெருமானம்பி என்பவர்களும், காவிரிப் பூம்பட்டினத்து வீரர்கள் புதுவைக் காங்கேயன், திரிபுவனைச் சோமன் ஆகியோரும் ஆவர். [90அ]

டாக்டர் மு. வ. அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவர்:

"அவர் (ஒட்டக்கூத்தர்) இலக்கண இலக்கியங்களில் வல்லவர் வடமொழிக் கல்வியும் நிரம்பியவர். பழைய மரபுகளை விடாமல் போற்றி, பிறர் செய்யும் தவறுகளைக் கடுமையாக எடுத்துரைத் துக் கடிபவர்.. ...புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தருக்குப் பிறகு சில நூற்றாண்டுகள் கழிதது வந்தவர்." [91]

இனி, இதுகுறித்து நாம் ஒரு முடிவுக்கு வருவோம்.

ஒட்டக்கூத்தனென்ன பெயர் தரித்த புலவனொருவன் ஏதோ கவிகள் பாடி வந்ததைக் கேட்ட தத்துவப் பிரகாசர் என்ற புலமைப் பெரியார்,

பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறியவொரு
மட்டப்பேர் போதாதோ வாககிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்றூ னுனக்கு. [92]

என்று கூறியுள்ளதாகப் பாடல் ஒன்று தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

---

90 அ. கலைக்களஞ்சியம்; இரண்டாந் தொகுதி: ப: 655

91. தமிழ் இலக்கிய வரலாறு: பக். 157, 158

92. தமிழ் நாவலர் சரிதை; பாட்டு: 235

இப் பாடலால் ஒட்டக்கூத்தர்தம் புலமைச் சிறப்பும், போலிப் புலவர்களைக் கண்டிக்கும் திறமுமே விளங்குகின்றன.

அடுத்து,

பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்யே
தாட்டுக் கடற்புலி யஞ்சலன் றேவறுத் துககிடந்த
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் றெருத்துமள்ளர்
மேட்டுக் குவாலிடும் பொன்னிநன் னாடுடை வேற்கண்டனே.

என்னும் பாடல் தமிழ் நாவலர் சரிதையிற்[93] காணப்படுகின்றது. இப் பாடலின் கொளு, 'அது கவிகளை அறுத்தபோது புலவரெலலாம் வெகுள, ஒட்டக்கூததர் பாடியது' என்று அமைந்துளளது.

இப்பாடலுக்கு உரைவேந்தர் ஒளவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள 'குறிப்பு' வருமாறு:

"புன்மையும் வழுவும் நிறைந்த கவிகளால் தமிழிலக்கியத்தின் பொலிவழிக்கும் புன்கவிகளை ஒட்டக்கூத்தர் கண்ணோடாது ஒறுததது ஏனைப் புலவரெல்லாக்கும அவர்மேல் வெகுளியை விளைத்தது. அதனால் அவாகளும் அவர்வழி வந்தவர்களும் அவர்மேல் பொய்க் கதைகள் பல புனைந்து பரப்பினர். ஒட்டக் கூத்தர் அவர் செய்கைக்கு அஞ்சாமல் இப்பாட்டைப் பாடினா. 94

"இப்பாட்டு, கூத்தர் செய்ததுதானா என்பது ஐயத்திற்கிடமானது" என்பர் அறிஞர் திரு. மு. அருணசலம்.[95]

அடுத்து, "இது கவிஞரை வெட்டவேண்டாமென்று ஒட்டக் த்தரை நெற்குன்றவாண முதலியார் பாடியது" என்ற கொளு மைத்து தமிழ் நாவலர் சரிதையில் பின்வரும பாடல் காணப்படு கின்றது.

கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்ட கொட்டியும் பூவா தொழிந்தில பூவில் விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்தியின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர் களோகவி பாடிய பாவலரே 96

---

93. பாட்டு: 129
94. தமிழ் நாவலர் சரிதை; பாட்டு: 129 உரை
95. தமிழ் இலக்கிய வரலாறு; 12ஆம் நூற்றாண்டு; பக். 351
96. தமிழ் நாவலர் சரிதை; பாட்டு: 130

புலவர்கள் பிழை பொறுக்கலாற்ருது அவர்கட்குத் தண்டனை தந்த ஒட்டக்கூத்தர், சோழவேந்தனது சமையற்காரர், ஒருமுறை சமைத்த உணவில் கல்லும் மண்ணும் கலந்திருக்கக்கண்டு, அதனைப் பொருது சோழமன்னன் அவனைத் தண்டஞ் செய்ய முற்பட்டபோது, அதனை விலக்கக் கீழ்க்காணும் பாடலைப் பாடியதாக அறிய வருகிருேம்.

மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கல் பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங் கனே.[97]

இதனல் ஒட்டக்கூத்தரின் இரக்கவுள்ளம் இனிது புலப்படும். போலிப் புலமையைப் பாராட்டித் தமிழிற்குத் தலையிறக்கம் தாராமல் போலிப் புலவர்களைக் கடுமையாகச் சாடி, உண்மைப் புலமையே உலவ வழிவகை செய்தார் ஒட்டக்கூத்தர் என்றே கொள்ளலாம். மேலும் தனிப்பாடல் திரட்டில் 'பொறகளந்தைப்படிக்காசுத் தம்பிரான் பாடியது' என்ற தலைப்பில் கீழ்க்காணும் பாடல் காணப்படுகின்றது.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லைக்
குறும்பியளவாக் காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்ரு முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைகளை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.[98]

'போலிப் புலவர்களைப் பற்றிப் பாடியது' என்ற தலைப்பில் இப் பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் போலிப் புலவர்களைக் கண்டித்துத் தண்டஞ் செய்டவர்களாகப் பிள்ளைப் பாண்டியனும், வில்லிபுத்தூரரும், ஒட்டக்கூத்தரும் ஆகிய மூவர் குறிப்பிடப் பெறுகின்றனர். இதனல் ஒட்டக்கூத்தர் பொருத மனங்கொண்டு புலவர்களை யொறுத்து வந்தார் என்பது பிழை; போலிப் புலவர்மாட்டே கடுமையாக இருந்தார் என்பது வெளிப்படை. சமையற்காரனைத் தண்டத்தி லிருந்து தப்புவித்த நன்மனம் ஒட்டக்கூத்தருடையது.

---

97. தமிழ் நாவலர் சரிதை; பாட்டு : 138
98. தனிப்பாடற்றிரட்டு; முதற்பாகம் : பக். 233

மேலும் சோழமன்னர்கள் பலர் சமயப் பொறை வாய்ந்தவர்கள். முதலாம் இராசராசன் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரம்-சூடாமணி விகாரம் ஒன்று எழுப்பினன். இரண்டாம் குலோத்துங்கன் மட்டுமே சமையப்பொறை அற்றவனாகக் காணப்படுகின்றான். அந்நிலைக்கும் காரணம் அவன் காலச் சமயச் சூழ்நிலையே என்பர். இரண்டாம் இராசராசன் 'விழுந்த அரி சமயத்தை மீள எடுத்தான்' என்று அவனுடைய மெய்க்கீர்ததி கூறுவதோடு, ஒட்டக்கூத்தரை அரியைப் பாடுமாறு கேட்க, அவரும் அவ்வாறே திருமாலைச் சிறப்பித்து ஒரு பாடல்[99] பாடினார் எனபதும் விளங்குகின்றன.

எனவே, அறிஞர் திரு தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் கீழ்க்காணும் கருத்தே ஒட்டக்கூத்தர் நன்னெஞ்சம் சான்ற நல்லவர் என்பதனைப் புலப்படுத்தும் சான்றாக அமையும்:

> "இவர் இருவேறுலகத்தியற்கைக்கு மாறாகத் திருமகள், கலைமகள் ஆகிய இருவரது திருவருட் பேற்றிற்கும் உரியவராகப் பெருஞ் செல்வமும் அருங் கல்வியும் எய்திச் சிறந்து வாழ்ந்தவர். செய்ந் நன்றியறிதல், பிற புலவர் பெருமக்களை உளம் உவந்து 'பாராட்டுதல்' மாணக்கர்கட்குப் பாடஞ் சொல்லி அன்னாரை நல்வழிப்படுத்துதல் ஆகிய உயர்ந்த குணங்கள் இவர்பால் நன்கு அமைந்திருந்தன என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.[100]

4. ஒட்டக்கூத்தர் 'ஈட்டி எழுபது' என்னும் நூலைப் பாடினாரா?

அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், "அவர் (ஒட்டக்கூத்தர்) அம்மரபின் (செங்குந்தர் மரபு) பெருமை விளங்க ஈட்டியெழுபது என்னும் நூலினைப் பாடியுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.[101]

அறிஞர். மு. இராகவையங்கார் அவர்கள்,

> "இப்புலவர் (ஒட்டக்கூத்தர்) பாடிய நூல்களிலே ஈட்டியெழுபது என்பதும் ஒன்று. இஃது இவரது குலப்பெருமைகளையெல்லாம் கம்பீரமாக விளக்குவது."

என்று குறிப்பிடுவர்.[102]

---

99. தமிழ் நாவலா சரிதை : 139
100. கலைக்களஞ்சியம் ; இரண்டாந் தொகுதி; பக். 654
101. இலக்கிய வரலாறு; பக்கங்கள் 372
102. செங்குந்தர் பிரபந்தத் திரட்டு; பிரபந்த ஆராய்ச்சியுரை

அறிஞர் திரு. மு. அருணசலம் அவர்கள் "இது (ஈட்டி எழுபது) ஒட்டக்கூத்தர் செய்ததன்று"[103] என்பர்.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி பாடிய பின்பே ஈட்டி யெழுபது பாடியவர் என்பது,

எந்தையா யம்மையாகத் திறைவனை வணங்கியாமே
பைந்தமிழ்ப் பரணிசெய்த பாடலோடு

என்னும் ஈட்டியெழுபதுத் (பாடல் 63) தொடரால் அறியப்படும்.

எனவே, தாம் பிறந்த செங்குந்தர் குலச் சிறப்பு விளங்க ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடினர் எனலாம்.

5. *ஒட்டக்கூத்தர் உத்தர ராமாயணம் பாடினரா?*

"இராமாயண உத்தரகாண்டம் இவர் (ஒட்டக்கூத்தர்) எழுதியதாகக் கூறப்படுவதனை ஏற்கத் தடையுள்ளது" எனபர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள்.[104]

அறிஞர் மு. அருணசலம் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

> "இங்கு நாம் பார்க்கவேண்டுவது, கூத்தர் உத்தரகாண்டம் பாடினர் என்பதற்குரிய சான்று: நெடுங்காலமாக வழங்கிவரும் வழக்கு இவர் பாடினரென்பது. தாம் இளைஞராயிருந்தபொழுது ஒரு பேரிலக்கியம் பாட இவர் எண்ணினர். இராமாயணம் ஞாபகம் வந்தது. அதன்மேல், முன்னமே கம்பர் இராமாயணத்தைப் பாடி முடித்திருந்தமையால் அவர் பாடாது விட்ட உத்தர காண்டப் பகுதியை மட்டும் தாம் பாடி முடித்தார் என்று கருதுவது பொருந்தும்".[105]

ஆயினும் ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் பாடினர் என்றோ பாடவில்லை என்றோ கொள்வதற்குத தகுந்த ஆதாரங்கள் கிடைக்க வில்லை. நெடுங்காலமாக வழங்கிவரும் வழககால் ஒட்டககூததர் உத்தரகாண்டம் பாடினர் எனறு கொளளலாம். அவ்வளவே! தகுந்த சான்றுகள் மேற்கொணடு கிடைக்கும்வரை இக் கருத்தினையே வைத்துக் கொள்ளலாம்.

---

113. தமிழ் இலக்கிய வரலாறு; 12 ஆம் நூற்றுண்டு; பக். 435
114. இலககியத தோற்றம்; பக: 182
115. தமிழ் இலக்கிய வரலாறு; 12 ஆம் நூற்றுண்டு; பக். 415, 416

6. 'கோவை யுலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்னும் கூற்று எந்த அளவிற்குப் பொருத்தமுடைத்து ?

ஒட்டக்கூத்தர் 'நாலாயிரக் கோவை'' என்றொரு நூல் செய்த தாகச் சோழ மண்டல சதகம் கூறும்:

புதுவைச் சடையன் பொருந்துசங் கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியந்துகாங் கயன்மேற்
கூறு நாலாயிரக் கோவைகொண் டுயர்ந்தோன்.

தம்மை ஆதரித்த புதுவைக் காங்கேயன் மீது நாலாயிரக் கோவை என்னும் நூலினை ஒட்டக்கூத்தர் பாடியதாகத் தெரிகிறது. அந்நூல் இன்று கிடைக்காமையினால் இது குறித்து மேலும் ஒன்றும் கூறுவதற்கில்லை.

'உலா' என்னும் பிரபந்தம் பாடுதலில் ஒட்டக்கூத்தர் வல்லவர் என்பதற்குச் சில சான்றுகளை 'மூவருலா'க் கொண்டு நிறுவலாம்.

கூத்தரின் காவியப் புலமை

இராமாயணமும், பாரதமும் இந்திய நாட்டின் இரு கண்கள்; இதிகாசம் எனப் போற்றப்படும் இலக்கியங்கள். இவ்விலக்கிய நிகழ்ச்சிகள் சங்ககாலந்தொட்டே தமிழகத்தில் புலவரால் கவிதை களில் மேற்கோளாகக் காட்டப்பட்டன. காலம் செல்லச்செல்ல இக்கதைகள இலக்கிய உலகில் பெரும்பங்கு பெற்றன. கூத்தர் இக்காப்பியங்களில் நல்ல பயிற்சி உடையவரே என்பது மூவர் உலாவால் வெளிப்படுகின்றது.

இராமன் மிதிலையில் வில்லை உடைத்த நிகழ்ச்சியை, 'மாதை, ஒறுக்கும் மிதிலை யொருவில்லைத தொல்லை, இறுக்கு மவனிவ னென்பார்' (குலோத்துங்க : 116) என்ற கண்ணியிற் காணலாம். இராமன் கடலின் மீது அம்பெய்த நிகழ்ச்சியைப் பின்வரும் அடிகளால் குறிப்பிடுகின்றார்.

—ழற்கோலி
வட்ட மகாததி வேவ வொருவாளி
விட்ட திருக்கொற்ற விற்காணீர்" (இராசராச: 84)

—மாதண்ட
ழற்றக் கடல்கிடந்து வேவ ழனிந்தின்னம்
கொற்றத் தனிவிற் குனியாதோ?" (இராசராச: 310)

—பொருது
சிலையால் வழிபடு தெண்டிரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோன்" (இராசராச: 12)

—தென்திசையில்
நீரதிரா வண்ணம் நெடுஞ்சிலையை நாணெறிந்த
விரதரா வீரோ தயா" (இராசராச: இறுதி வெண்பா)

என்ற கண்ணியில் இராவண சங்காரத்திற்குரிய காரியங்களைப் பற்றித் தன்னை சூழ்ந்து நிற்போரிடம் ஆலோசிக்கையில் கடல் முழக்கம் ஒருவர் பேசுவது மற்றவருக்குக் கேளாதபடி செய்ததால் சினங்கொண்டு வாளியை விட்ட இராமனைப் போன்ற வீரத்தை யுடைய சோழன் என்று கூறுகிறார்.

இராமபிரான் இராவணனின் பத்துச் சிரங்களையும் வெட்டிய சிரத்தோன் என்று பின்வரும் அடிகள் கூறும்.

மலைபத்தும் வெட்டும் உருமின் மறவோன்
தலைபத்தும் வெட்டும் சரத்தோன்" (குலோத்துங்க: 10)

ஒட்டக்கூத்தர் பாரதத்திலிருந்து எடுத்துக்கூறிய அரிய செய்தி களால் புலவரது நுண்ணிய ஆராய்ச்சி புலனாகிறது.

கண்ணபிரான் விடைப்பேரினம் தழுவிப் பின்னை என்ற மாதை மணந்ததைப் புலவர் கூறுகிறார்.

—விடைப்பே
ரினந்தழுவிப் பின்னையைக் கொள்வாய்" (குலோத்துங்க: 253)

காளியன் என்ற பாம்பினுடைய படத்தில் கண்ணன் ஆடிய கூத்தையும் ஆயர் சேரியில் ஆடிய குடக்கூத்தையும் கூறுகிறார்.

"பாடிக் குழலூதிப் பாம்பின் படக்கூத்தும்
ஆடிக் குடக்கூத்தும் ஆடினார்"

— (இராசராச: 338)

கண்ணன் ஆய்ச்சியரது துகில்களைக் கொண்ட செய்தியை,

—தோகையர்
நற்றுகில் கொண்ட நறுந்துழாய் மார்பநின்
பொற்றுகில் தந்தருளிப் போதென்பார் "

— (குலோத்துங்க : 218)

என்றும், கண்ணபிரான் நாரதருக்குப் பதினாயிரம் திருவிளையாடல் களைக் காட்டிய நிகழ்ச்சியை,

—மாதவத்தோன்
சார்ந்த பொழுதனகன் தன்னை அறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்றும் "

— (விக்கிரம : 92)

என்றும், கண்ணன் இரு மருதமரங்களை வீழ்த்திய செயலை,

" ஒருதன் அடியின் மடிய வுபய
மருது பொருத வயவன் "

— (குலோத்துங்க : 155)

என்றும் கூறுகிறார்.

கூத்தரும் வருணனையும்

கவிஞர்கள் உள்ளதை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டும் ஓவியக்காரர்கள் அல்லர். அவர்கள் தம் மனஉந்துதலால் அழகிய வருணனைகளைப் படிப்பவர் மனம் இன்புற அமைக்கின்றனர். கூத்தரின் வருணனைகளும், கற்பனைகளும் நம்மை இன்பக்கடலில் ஆழ்த்துகின்றன.

சுடர்க் கதிரோன் எழுந்ததும் ஆய வெள்ளமும் தலைவியும் சோலையில் வருதலைக் கண்டு மானினம் மருண்டு ஓடின. அன்னமும் சேவலும் விழித்தெழுந்து ஆரவாரித்தன. மஞ்ஞைகள் ஆசையோடு ஆடின. அவற்றின் ஆட்டற்திற்குத் தகுந்தாற்போல் கிளிக்குலம் கான மழை பொழிந்தனவாம். நாகணவாய்ப் புள்ளும் சேவலும் நகைத்து மொழி கூறவும் உழவர் அவற்றின் முகம் பாராமல் புறத்திலே முகத்தைச் சாய்த்துத் தங்கள் வேலையில் கவனம் செலுத்தினார்கள். தேனுண்டு மயங்கிக் கிடந்த வண்டு, கோவை செய்யும் களியாட்டம் கண்டு விரும்பி, அதற்கேற்பக் கபோதப் பேடும் சேவலும் தம்மிலே விளிக்கும் தன்மை கண்டு வியந்தனவாம்.

இவ்வாறு இயற்கைக் காட்சி ஒன்றை மிகவும் நயமாக வருணித் துளளார புலவர். (குலோத்துங்க : 272 : 276)

குயில்களைப் பற்றிக் கூறுகையில் 'முற்றுத சொற்குதலைக் கோகுலங்கள்' (இராசராச: 165) என்று அழகாகக் கூறுகிறார்.

மகளிர் நீராடுதலை வருணித்துள்ளார். அவர்கள் நெடுநேரம் நீரிலே விளையாடினதால் ஏற்பட்ட நிலையைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

—வெள்ளம்
படிய வருஞ்சிவப்பு வள்ளப் பசுந்தேன்
வடிய வருஞ்சிவப்பின் வாய்ப்ப"

— (இராச : 293)

நீராடிய மகளிரது கண்கள் நீர் படிந்ததனால் சிவந்து விட்டன வாம். அவற்றிலிருந்து நீர் வழிந்த காட்சி கிண்ணத்திலிருநது வடியும் செவ்வித் தேனை ஒத்திருந்ததாம்.

ஒட்டக்கூத்தரின் கற்பனையாற்றல் மிக்க வியப்பை அளிக் கின்றது. ஒவ்வோர் அடியும் மேன்மையான நயத்தை உடையதா யிருக்கின்றது. இவர் கற்பனையாற்றலை அறிவதற்குச் சில அடிகளை நோககுவோம்.

—சுடர்நோக்கும்
தானுடைய மெய்ந்நுடக்கம் தன்மா தவிக்களித்து
வானுடை மின்னுடக்கம் வாங்கினாள்."

— (விக்கிரம : 138)

பெதும்பை மிக்க நாணமுடையவள் என்று கூறுது வானத்தில் தோன்றும் மின்னலினது துவளுதலை—'வானுடைய மின்னுடக்கம்' வாஙகினாள் என்று கூறுகின்றார்.

" திருவிருந்து தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுஙகுழலாள்."

— (விக்கிரம : 240)

இவ்வடிகளில் அரிவையை அறிமுகப்படுத்தும்போது, 'பெரு விருந்து பேணுங் குழலாள்' என்று நயமாகக் கூறுகிறார். அவள் கேசத்தில் மலர்கள் விளங்கியதால் வண்டுகளுக்கு விருந்தளிக்கும் கூந்தலையுடையவள் என்று கூறுகிறார்.

ஒரு பேரிளம்பெண்ணின் செய்கையை அழகாகக் கூறுகிறார். பின்வரும் அடிகளின் மூலம் புலவரின் கற்பனையாற்றல் எல்லையைக் கடந்துவிட்டதென்றே கூறலாம்.

—செம்மை
நிறையும் அழகால் நிகரழித்துச் செய்யாள்
உறையும் மலர்பறிப்பாள் ஒப்பாள்.

— விக்கிரம : 309

அந்தப் பேரிளம் பெண் தன் சிவந்த கரத்தினால் தனக்கு நிகரான கமலத்தைக் கொய்தாளாம். அக்காட்சி எவ்வாறிருந்தது என்பதை நயத்துடன் இவ்வடிகள் கூறுகின்றன. தாமரையை அவள் கொய்தது தன்னிடம் எழிலிலும் தனமையிலும் தோல்வி யடைந்த திருமகள் வீற்றிருக்கும் இடத்தைக் கைக்கொள்வது போல் இருந்ததாம். என்ன ஒப்பற்ற கற்பனை!

கூத்தரின் உவமைகள்

உவமை என்பது கவிஞரின் அனுபவ ஆற்றலையும், அறிவு முதிர்ச்சியையும் காட்டுவது. ஒட்டக்கூத்தரின் உவமைகள் அவருடைய நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றன.

" அரியன நித்திலத்தின் அம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்தும் "

— விக்கிரம : 175

முத்தினாலாகிய வளையை அணிந்த தோளை மூங்கிலுக்கு ஒப்பிடுகிறார். மூங்கிலும் முத்து பிறக்கும் இடங்களில் ஒன்றாதலின அதை ஓர் ஏற்றப் பொருளாக எண்ணி முத்துக்கள் விளங்கும் தோளுக்கு உவமையாக்கிக் கூறியுள்ளார்.

" —திருமார்பிற்
கார்க்கடன் மீதே கதிர்முத்தத் தாமங்கள்
பாற்கடல் போர்த்த தெனப்பரப்பி. "

— குலோத்துங்க : 68

கரிய நிறத்தை உடைய குலோத்துங்கனின் மார்பிற்குக் கார்க் கடலும், தோளின் மீது அணியப்பட்ட முத்துமாலைகளுக்குப் பாற் கடலும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இரு கடல்களையும் ஒருங்கே சேர்த்துவிடுகிறார் கவிஞர்.

மேற்காட்டிய இலக்கிய எடுத்துக்காட்டுகளால் ஒட்டக்கூத்தர் உலாப்பாடுதலில் இலக்கிய உலகில் தலை சிறந்த இடத்தினை வகிக்கின்றார் என்பது தாமே போதரும்.

ஒட்டக்கூத்தர் பாடியதாக அந்தாதி ஏதும் நமக்கு இன்று கிடைத்திலது. இவர் பாடிய அந்தாதி, இவர் பாடிய வேறு சில நூல்கள் இன்று கிடைக்காமற் போனமை போன்றே இருந்து பிற்காலத்தே வழக்கு வீழ்ந்திருக்கலாம்.

இவர் பாடிய 'மூவருலா' கொண்டே இவர் புலமை நயத்தினை வியந்து பாராட்டலாம். எனவே 'கோவை உலா அந்தாதிக்கொரு ஒட்டக்கூத்தன்' என்ற புகழுரை பொருளுடையதேயாகும்.

7. *தக்கயாகப் பரணி ஏன் பாடினார்?*

ஒட்டக்கூத்தர் தம்மைக் குலகுருவாகவும், ஞானசிரியராகவும், அவைக்களப்புலவராகவும் பெரிதும் மதித்துப் போற்றிய இராசராசனைத் தக்கயாகப் பரணியில் சிறப்பித்துள்ளார். இப் பரணியில் பல பெயர்கள் கூறி, இராசராசனைப் பாராட்டுகின்றார். இராசராசன் சிறப்புப் பெயர்களாக இவர் குறிப்பிடும் எட்டுப் பெயர்களைப் பின்னிணைப்பில் காண்க. இரண்டாவதாக, நல்ல பழுத்த சைவர் ஒட்டக்கூத்தர் என்பதால், சிவபெருமானுடைய சிறப்பினைக் கூறும் தக்கயாகப் பரணியினை இயற்றினார் எனலாம். சிவபெருமானை 61 பெயர்களால் அழைக்கக் காணலாம். (பார்க்க : பின்னிணைப்பு) மூன்றாவதாக தேவி உபாசகர் ஒட்டக்கூத்தர் என்பது நாம் அறிந்த செய்தியாகும். கலைமகளையும், கோயில் கட்டி வழிபட்டவர் இவர். எனவே தேவியின் — துர்க்கையின் — காடுகெழு செல்வியின் வீரமும் ஈரமும் ஒருங்கே பேசும் பரணியினை இயற்றினார் எனலாம். உமாதேவியின் திருப்பெயர்களாக இவர் 55 பெயர்களைக் குறிப்பிடுவர். (பார்க்க : பின்னிணைப்பு). தம் புலமை நலந் தோன்றப் பரணி நூலினை யாத்தார் என்றுங் கொள்ளலாம். இறுதியாகத் திருஞானசம்பந்தர் பெருமானிடத்துத் தாம் கொண்ட ஈடுபாட்டினைக் காட்டுவதற்கு பதினைந்து பெயர்களால் திருஞானசம்பந்தர் பெருமானைச் சுட்டுகின்றார். (பார்க்க : பின்னிணைப்பு) சம்பந்தரிடத்தும் தாம் கொண்ட ஈடுபாட்டினைப் புலப்படுத்த ஓர் அரிய இடமாகக் கொள்ள — தக்கயாகப் பரணியினைத் தேர்ந்தெடுத்தாரோ என்று கருதும் வகையில், இப்பரணியின் இடையில் திருஞானசம்பந்தர் மதுரை சென்று சமணரை வாதில் வென்ற வரலாற்றுச் செய்தியினை வைத்துள்ளார்.

இதனைச் சிறிது விளங்கக் காண்போம்.

திருஞானசம்பந்தரிடம் ஈடுபாடு

ஒட்டக்கூத்தர் கைக்கோளார் என்று கூறப்படும் செங்குந்தர் மரபில் தோன்றியவர். சைவ சமயத்தவர்; சக்தி வழிபாட்டில் நாட்டம் மிக்கவர்; தம் நூல்களில் திருமாலைப் பற்றிய பெருமைகளைக் கூறி வணங்குதலால், சமயப் பொதுமை உடையவர் என்று இவரைக் கருதலாம். ஆயினும் கூத்தர் சிறந்த முருக பக்தர். தக்கயாகப் பரணியில் கோயில் பாடியது என்ற பகுதியில் திருஞான சம்பந்தர் வரலாறு காணப்படுகின்றது. இங்கே திருஞான சம்பந்தரை முருகப் பெருமானாகவே கூத்தர் காட்டுகின்றார். காளி தேவி, கோயிலில் வீற்றிருககின்றாள்; அப்போது கலைமகளை அழைத்துச் சம்பந்தர் சமணரை வென்ற வரலாற்றைக் கூறுமாறு கட்டளையிடுகின்றாள். அவ்வாறே கலைமகளும் சம்பந்தர் வரலாற்றினைக் கூறுவதாகக் கூத்தர் பாடுகின்றார்.

தக்கயாகப் பரணி பாடுவதற்கு இவ்வாறு பலவாறான காரணங்கள் ஒட்டக்கூத்தருக்கு இருந்திருக்கக் கூடும் எனக் கருதலாம்.

8. ஒட்டக்கூத்தர் நூல்களிற் சில வழக்கு வீழ்ந்தமைக்குரிய காரணங்கள்

ஒட்டக்கூத்தர் செய்யுட்கள் மிடுக்குநடை வாய்ந்தன; எளிதிற் பொருள் அறிய முடியாதன; வடமொழிச் சொற்கள் விரவி நிற்பன என்பர் பேராசிரியர் ஏசுதாசன் அவர்கள். [106]

வரம்பிகந்த வருணனைகளும், வடமொழிக் கலவை பெற்ற சொற்கள் அமைப்பும், கடினமான பல்வேறு வகைப்பட்ட யாப்பு வடிவங்களும் அமைந்த நடையினை ஒட்டக்கூத்தர் கையாண்டுள்ளார் என்றும், மன்னர்கள் நிகழ்த்திய போர்களைப் புகழ்ந்து பாடுதலைத் தவிர்த்து, நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும்

---

106. Prof. C. Jesudasan and Hephzibah Jesudasan, History of Tamil Literature:

"Ottakkuttar's style certainly arrests by its Miltonic tread……The Poet maintains a stately and dignified style, inclining to hardness rather than softness…… For Ottakkuttan's Tamil is a highly sanskritised Tamil, and just short of becoming Mani Pravala ..Ottakkuttan's achievement, then is a courtly style"—pages 190 & 191.

போராட்டத்தைப் பாடத் தம் புலமையைப் பயன்படுத்தினர் ஒட்டக் கூத்தர் என்றும் பல்கலைச்செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவர்.[107]

டாக்டர் மு. வ. அவர்கள் தாம் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில், ஒட்டக்கூத்தர் நூல்கள் புலவர் களிடையே பெருவழக்கினைக் கம்பரது நூல் இராமாயணத்தின் அளவிற்குப் பெருமற் போனமை குறித்துப் பின்வருமாறு காரணம் காட்டுவர்.

> " கவிச்சக்கரவர்த்தி எனச் சோழ வேந்தரால் பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தர் மரபுகளைப் போற்றி நூல்கள் இயற்றினர். வாழ்வின் உணர்ச்சிகளை உந்த நூல்களை இயற்றும் வாய்ப்பு அவர்க்கு இல்லை. ஆதலின், மக்களால் கவிச் சக்கரவர்த்தி எனப் போற்றப்பட்ட கம்பரின் நூல் எய்திய சிறப்பை ஒட்டக்கூத்தரின் நூல்கள் பெற முடியவில்லை. செய்யுள்கள், வருணனைகள் மிகுந்தனவாய்ச் செறிவு உடையனவாய் இருந்தபோதிலும், அவற்றின் நடையில் இயல்பான ஓட்டம் அமையவில்லை. அவருடைய வாழ்வில் இருந்த பெருமிதமும் கடுமையும் அவர் இயற்றிய செய்யுள் களிலும் அமைந்தன ; உளத்து உணர்வின் செம்மையும் இனிமையும் படியவில்லை. "[108]

9. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒட்டக்கூத்தர் பெறும் இடம்

முதலாவதாக, ஒட்டக்கூத்தர் 'பிள்ளைத் தமிழ்' என்னும் பிரபந்த வகையினை விளங்கச் செய்யும் போக்கில் 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலினைப் பாடினர். பெரியாழ்வார்

---

107. A History of Tamil Literature: p. 258

"He has developed a style full of exaggerations, sanskrit compounds and difficult varieties of metres He must have felt that then ultra grand style becomes nothing but an unnatural exaggeration when applied to the description of ordinary battles which are becoming less and less glorious and less frequent. Therefore he conceived the idea of making use of this style to sing the glories of the universal fight between the good and the evil"

108. தமிழ் இலக்கிய வரலாறு; ப. 258

கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பாடிய பாடல்களை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் காணலாம். ஆனாலும் 'பிள்ளைத்தமிழ்' என்றோர் இலக்கிய வகைக்கு இலக்கிய வடிவத்தினை முதற்கண் தந்தவர் ஒட்டக்கூத்தரே ஆவர்.

இரண்டாவதாக, ஒட்டக்கூத்தர் பற்றி நாம் சிறப்பாகக் குறிக்கத் தக்க செய்தி, அவர் தாம் பாடியுள்ள நூல்களில் அரிய வரலாற்றுச் செய்திகள் பலவற்றினை ஆங்காங்கே பொதிந்து தந்துள்ள பெருஞ் சிறப்பாகும். சங்ககாலப் புலவரான பரணர் போன்றே ஒட்டக் கூத்தர் வரலாற்றுணர்வு வாய்ந்த புலவராகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறந்து மிளிர்கின்றார். இவ்வுண்மையினை அறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் 'பிற்காலச் சோழர் சரித்திரம்' எனும் நூலால் (பகுதி 2; பக்கங்கள், 44-118) நன்கு அறியலாம்.

முடிவுரை

ஒட்டக்கூத்தர் அப்பர் அடிகளைப் போல் நீண்டநாள் வாழ்ந் தவர். சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பிய பனுவல்களை ஈந் தவர். செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி என்னும் வரலாற்றுப் பரணியைப் பாட, ஒட்டக்கூத்தரோ தக்கயாகப் பரணி என்னும் சமயப் பரணியைப் பாடினார். பரணியில் புரட்சியை உண்டாக் கியவர் கூத்தர். இவர் தொடங்கிவைத்த இப் பரணிப் போக்கே அஞ்ஞவதைப் பரணி, பாசவதைப் பரணி, மோகவதைப் பரணி முதலிய பரணிகளுக்கு வழிகாட்டியாயிற்று. ஒட்டக்கூத்தருக்கு முன் திருக்கைலாய ஞான உலா போன்ற இறை உலாக்கள் தோன்றின. கூத்தரோ வரலாற்று உலாக்களை வடித்தார். பிள்ளைத் தமிழ் என்னும் பெரிய தமிழுக்கு வடிவும் வனப்பும் கொடுத்தார். இவர் புலவரில் புலவர்; கவிஞரில் கவிஞர். இவர் இயற்றிய நூல்கள் இவர் பெருமைக்குச் சான்றாக என்றும் விளங்கும்.

"இறைவாழி தரைவாழி நிறைவாழி
இயல்வாழி இசைவாழியே"

பின்னிணைப்பு

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தக்கயாகப் பரணி பற்றி ஆய்ந்துரைக்கும் சில ஆராய்ச்சியுண்மைகள் - செய்திகள் இவண் தரப்பட்டுள்ளன. இச் செய்திகள் ஆராய்ச்சி உலகிற்குக் கிடைத்துள்ள நல்விருந்தாயினமையின் அவற்றுள் சில பகுதிகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. பிற பரணி நூல்களுக்கும் தக்கயாகப் பரணிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்.

1. மற்றப் பரணிகளைப் போலப் பாட்டுடைத் தலைவனுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று வாழ்த்தாமல், ஆக்குவித்தோனுக்கு நன்மை உண்டாகும்படி தெய்வங்களை வாழ்த்தியிருத்தல்.
2. உமாபாகர், விநாயகர், முருகக் கடவுள், திருஞானசம்பந்தரென்னும் இவர்களை மட்டும் வாழ்த்தியிருத்தல்.
3. நூலுறுப்புகளின் பிறழ்ச்சி.
4. காடு பாடியது முதலியவற்றில் யாமள நூலின் முறைப்படி வருணித்திருத்தல்.
5. சைவத்தின் ஏற்றம் புலப்படும்படி திருஞான சம்பந்தர் சைனரை வென்ற கதையைத் தேவிக்கு நாமகள் கூறியது முகமாகப் புதிதாக விளங்கக் கூறியிருத்தல்.
6. கூழடுதலென்னும் உறுப்பிற் பேய்கள் கூழையாக்கிக் குடித்துப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்தாமல் இந்நூலை ஆக்குவித்த இராசராச சோழனையும் அவன் முன்னோர்களையும் அவர்களுடைய நற்செய்கைகளையும் வாழ்த்துதலைக் கூறியிருத்தல்.
7. களங்காட்டுதலிற் காளி பேய்களுக்குக் களங்காட்டியதாகக் கூறியது போலன்றிக் கதைத தொடர்பு புலப்படத் தேவிக்குச் சிவபெருமான் காட்டியதாகக் கூறியிருத்தல்.
8. ஆக்குவித்தோனிடத்துள்ள பேரன்பால் அவனைத் தனியே இறுதியில் வாழ்த்தியிருத்தல்.

2. வரலாறு தொடர்பான செய்திகள்.

1. இராச கம்பீரன் (இராசராசன் 2) பிட்டனை வென்று இரட்டனுக்குப் பட்டம் கட்டியது.
2. இராசராசபுரி பல அரசர்களாற் காக்கப்படுதல்.
3. இராசராசன் II தில்லைத் தலத்தில் தேர் அமைத்தது.
4. அவன் பாண்டியரை வெல்லப் படைவிடுத்தது.

5. அவன் மலையை வெட்டிப் பொன்னிக்கு வழி கண்டது.
6 அவன் வஞ்சியில் வாகை புனைந்தது.
7. ஒரு பாண்டியன் கை பொன்னானது.
8. காவிரிப்பூம்பட்டினத்தார் வல்லவனை நடை கொண்டது.
9. குலோத்துங்கன் II (தில்லையில்) ஏழ்நிலைக் கோபுரம் வகுத்தது.
10. அவன் கோயிலுக்கு ஆனிரையையும் யானைகளையும் வழங்கியது.
11. அவன் தில்லை மன்றிற்கு இடங் கண்டது.
12. அவன் தில்லையில் மண்டபங்கள் அமைத்தது.
13. அவன் தில்லையிற் கற்பகம் வைத்தது.
14. அவன் மகோதைமேற் சென்றது.
15. அவன் மதுரைமேற் சென்றது.
16. அவன் (தில்லையில்) மறுகு வகுத்தது.
17. சோழர் கருநடர் ஒளித்த விந்தவனத்தில் எரியிட்டது.
18. சோழர் மலைகளிற் புலிவடிவம் பொறித்தது.
19. தண்டகாபதியாகிய பல்லவராயன் (நம்பிப் பிள்ளை) சேரனைத் திறை கொண்டது.
20. தெய்வப் பெருமாள் (முதல் இராசராசன்) இராசராசேசுவரம் அமைத்தது.
21. பெரிய பெருமாள் (குலோத்துங்கன் II) தில்லைவனத்திற் பீடிகையமைத்தது.
22. முதற் குலோத்துங்கன் வேதத்தழிவு மாற்றிச் சுங்கந் தவிர்த்தது.
23. விக்கிரமசோழன் கலிங்கரை வென்று தெய்வப்பரணி கொண்டது முதலியன.

3. சிவபெருமானுக்குக் கூத்தர் வழங்கும் பெயர்கள்.

1. அடிப்பெருங் கடவுள், 2. அந்திப் போதனையான், 3. அரன், 4 அற்புதத்துயிர்க் கிழத்தி புக்குழி, 5. அனலன், 6. ஆதிவானவன், 7. ஆலமமுது செய்யுமையன், 8. ஆலால மயிலுநாதன், ,9 இருவர்கட் கரியராமெங்கணுயகர், 10. இருவரே தெரியவரியர், 11. இறை. 12 இறைமலை வில்லி, 13. இறைவர், 14. ஈசன், 15. உமைவாழ்வ தொருபாகர், 16. ஐயன், 17. கண்ணுதற் கடவுள், 18. கண்ணுதன் முதற்கடவுள், 19. கபால நிரைப்பேரார மார்புடைய வீரர், 20. குன்ற வில்லி, 21. கொன்றையார், 22. சடாடவி முடித்தேவர், 23. சிங்கமுங் கற்கியும் பன்றியுஞ் செற்றவர், 24. சிவன், 25. சூலபாணி, 26. சேயோன், 27. தலைவர், 28. தனிமூல முதல்வர், 29. தாராக வண்டந் தொடுத் தணிந்தோர், 30. திரிபுரம் பொடிபடப்பொரும் பொருநர், 31. தேவர் தேவர், 32. தொல்லைநாயகர், 33. நக்கர், 34. நாதர், 35. நாயனுர், 36. நிசிந்தர், 37. பணி மதாணியோர், 38. பரசுபாணி, 39. பரம்பரன்,

40. பரமன், 41. பரன், 42. பசிமேவுநாயகன், 43. பிரான், 44. புராரி, 45. பெருமான், 46. பெருமானடி, 47. பொலஞ்செக்கர்ச் சடையான், 48. மதியமூர் சடாமோலி மகிணர், 49. மழுவார், 50. மழுவாளியார், 51. முக்கணெம்மாதி, 52. முத்தர், 53. முப்பத்து முத்தேவராயவர் (தேவர் ஆயும் அவர்), 54. முப்புரஞ் சுட்டவீரர், 55. மூவராயவரின் முதல்வர், 56. மேருதரர், 57. மேருவரையிற் கடவுள், 58. ரசதக் குன்றவர், 59. ராசராச புரேசர், 60. வல்லவன், 61. வெள்ளிமலைப் பெருமான்.

4. தேவியின் திருப்பெயர்கள்.

1. அகிலலோகநாயகி, 2. அகிலலோக மாதா, 3. அகிலாண்ட நாயகி, 4. அந்திப்போதனையானுடனுடுந்திரு, 5. அமலை, 6, அன்னை, 7. ஆரணுகாரி, 8. இகன்மகள், 9. இமவான்மகள், 10. இரணியருரம் பிளவுபட நடுமுகிரி, 11. இறைமகள், 12. இறையாள், 13 இறைவி, 14. உடையாள், 15. உமை, 16. உயிர்க்கிழத்தி, 17. உலகினன்னை, 18. உலகுடைய செல்வி, 19. உவணவூர்தியூர்வாள், 20. ஐயை, 21. ஒப்பரிய நாயகி, 22. கடவுணீலி, 23. கலையுகைப்பாள், 24, கனகனுகமிரு கூறுபடு கூரேக நகநாயகி, 25. கானநாடி, 26. கௌரி, 27. த்ரிபுரபயிரவி, 28. தலைவி, 29. தொல்லை நாயகி, 30. நாயகி, 31. நிலாவீசு சடிலமோலி, 32. நூபுராதாரசரணி, 33. பங்கனகலத்திறைவி, 34. பச்சைவிளக்கு, 35. பணிமதாணி மார்பள், 36. பத்ரகாளி, 37. பரம்பரன்றேவி, 38. பாகனகங் குழைவித்த பவித்ரபயோதரி, 39. பிரமற்குமம்மனை, 40. பிரமனைப் பண்டு பெற்ற பெருந்திரு, 41. புணரியிற்றுயில் வல்லி, 42. புவன நாயகி, 43. மங்கலமகள், 44. மலைமகள், 45. மாகாளி, 46. மாதேவி, 47. மாயோள், 48. மூலநாயகி, 49. மோகினி, 50. மோடி, 51. யோக முதலிறைவி, 52. யோக யாமளத்தினுள், 53. வன்மானுகைத்தகொடி, 54. வேதங்கவர் கிளவித்திருமின், 55. வேதநாயகி.

5. திருஞான சம்பந்தருக்கு வழங்கும் பெயர்கள்.

1. அமண்முகர் கருமாள வருமீளி, 2. இமவான் மகளார் மகன், 3. ஐயைகளிறு, 4. கொச்சைப் பெருமான், 5. நான்மறையோரேறு, 6. பரதசமய கோளரி, 7. பிள்ளை, 8. பிள்ளையார், 9. புகலிக்கிறை, 10. புகலிப்பெருந்தகை, 11. மலையாண் முலையாரமுதுண்டவர், 12. மலைவில்லி புதல்வர், 13. வெள்ளிமலைப் பெருமான் மகனர், 14 வைதிக ராச சிங்கம், 15. வைதிகவாரணம்.

6. இராசராசனுக்கு வழங்கும் பெயர்கள்.

1. இராசகெம்பீரன், 2. இராசபுரந்தரன், 3. கண்டன், 4. குலதீபன். 5. சனநாதன், 6. சொக்கப்பெருமாள், 7. தெய்வப் பெருமாள், 8. வரராசராசன்.

4

சயங்கொண்டார்

திரு. க. ப. அறவாணன்,

பரணி, போர் வெற்றியைப் பாடும் இலக்கிய வகை. இவ்விலக்கிய வகை, பிற்காலச் சோழர் காலத்தில் (கி. பி. 10 ஆம் நூற்றுண்டு முதல்) மிகவாகப் பரவி இருக்கிறது. இதற்கு முதற் காரணம் வேறு எக்காலத்திலும் இல்லாதபோர்வெற்றியே. பழைய காலத்தில் போர்கள் தமிழகத்தில் நிகழ்ந்தன எனினும், அவை பெரும்பாலும், தமிழ் வேந்தரே, தமக்குள் நிகழ்த்திக் கொண்டவை. சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவரும் ஒருவர் மற்றொரு வருடனும், ஒரு குடிவேந்தருடனும் நிகழ்த்திக் கொண்டவை. சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் போர் ஒன்று மட்டுமே இதற்கு விலக்கு. வேற்றுநாட்டு இன, மொழி வேந்தரோடு போர் தொடுக்கிற அளவிற்கு, மாற்று நிலத்தவர் தமிழ் மூவேந்தர் மீது பகை கொள்ளாது இருந்திருக்கலாம். எப்படி ஆயினும், கி. பி. 10 ஆம் நூற்றுண்டில் இந்நிலை மாறியது. சோழர் பேரெழுச்சி கொண்டு, தமிழகத்தை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தனர். அம்மட்டுமன்றி, தென்னகம் முழுவதையும், இலங்கை முதலான தீவுகளையும், கடாரம் முதலான தொலை தூர நாடுகளையும் வென்றனர். தமிழர்தம் கொடி கடல் கடந்தும் பறந்தது. இவ் வெற்றி எளிய ஒன்றன்று. பிற்காலத்தில் வெள்ளையர் உலகெங்கும் ஏற்படுத்திய காலனி ஆட்சியை விட, அவரினும் பன்னூறு ஆண்டு கட்கு முன், ஆசியக் கண்டத்தில் பெரும்பகுதியைத் தமிழ்க் கொடியின் கீழ்க் கொண்டுவந்தது — வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இராசராசன், இராசேந்திரன் போன்ற தென்னுட்டு அலெக்சாண்டர்களின் சாதனைச் சரித்திரம் இது. இவ்வரும் பெரும் வெற்றி, பாவலர்களின் எழுதுகோலை ஈர்த்திருக்கிறது. முதலிரண்டாம் உலகப் போர்கள், அவற்றிலே பங்கு ஆற்றிய பிரிட்டனில், பல போர்ப் பாவலர்களை உருவாக்கியது.[1] அதுபோலத் தமிழகத்திலும் பரணிப் பாவலர்கள் உருவானுர்கள். ஆக இடைக்

1. அவவாணன், க. ப. இப்படை தோற்கின் எப்படை செயிக்கும்? மறவன் மடல், 5. 12. 71

காரத்தில் பல்கிக் கிடந்த வெற்றிகளே, போர்ப்பரணி தோன்று தற்குக் காரணிகளாகும்.

இக்காரணம் மட்டுமன்றி இன்னொரு தலைமைக் காரணமும் உண்டு. பரணி இலக்கியத்தில், காளி, யானை, பாலை, பேய் ஆகியன பெரும்பங்கு பெற்றுள்ளன; பெருகப் பேசப்பட்டுள்ளன. பரணி இலக்கியங்கள் ஒவ்வொன்றும் இந்நான்கையும் வற்புறுத்து கின்றன. இவற்றுள் காளி பற்றிய குறிப்புத் தலைமையானது. காளிகோயில், காளிதேவி, காளிதேவி — பேய் உரையாடல்கள், குலோத்துங்கன் வரலாற்றைக் காளி, பேய்களுக்குக் கூறுதல், காளிக்குக் கலிங்கப் போர் நிகழ்ச்சியைக் கூளி கூறுதல், காளி கூழ் சமைக்குமாறு பேய்களுக்கு ஆணையிடுதல், பேய்கள், காளியையும் குலோத்துங்கனையும் புகழ்ந்து பாடுதல் — என்பன, கலிங்கப் பரணி இலக்கியத்தில, காளியின் பெருஞ் செல்வாக்கைப் புலப்படுத்தும் பகுதிகளாகும். ஏனைய பரணி இலக்கியங்களும் இவ்வாறே காளியை வைத்துச் சமைந்துள்ளன. பரணி இலககணம் கூறும் இலக்கிய நூல்களும் காளியின் பங்கைப் பகர்கினறன. பன்னிரு பாட்டியல் காளிகோயில், காளியை ஏத்தல், காளி பீடம் காளியைப் பழிச்சுதல் என்று பலவற்றையும் (243), பிரபந்த மர பியல் காளி கோட்டம், காளிக்குப் பேய் சொல்லுதல், அப்போர்க்குக் காளி சொல்வது, என்றும் (19) இலக்கண விளக்கம், கொடுங்காளி கோட்டம், காளிக்கு அது சொலல், பேய்க்குக் காளி சொலல், என்றும் காளியின் பங்கைப் பறை சாற்றுகின்றன. ஆக, இக் குறிப்புகள், பரணி இலககியத்தில் காளி பெற்ற பெருஞ் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன. காளி, இதற்கு முன்னேயே கொற்றவை, காடுகிழவோள் என்று கொண்டாடப் பட்டிருந்தாலும், கி. பி. 10 ஆம் நூற்றுண்டில் இவள் கொண்டாடப்பட்ட அளவிற்கு முன்பில்லை என்று தெரிகிறது. ‘காளி’ என்ற பெயராட்சியும் முன்பே இருந்தாலும் இக்காலத்தில்தான் பேரளவு அறிமுகமாகிப் பரவி இருக்கிறது. (காளி — சிலம்பு வழக்குரை. 38-39 வேட்டுவ வரி 45-72.)

கி. பி. 1012 - 1044 வரை, முதல் இராசேந்திர சோழன் அரசாண்டான். இவன் இராசராசன் புதல்வன் ஆவான். நெப்போலியனுக்குப் பிறந்த நெப்போலியன். இவன் பெற்ற வெற்றிகள் பல. இவற்றுள் குறிப்பிடத்தக்கது வங்காள வெற்றி யாகும்.

தன்ம பாலனை வெம்முனை அழித்து
வண்டுறை சோலை தண்ட புத்தியும்
இரண சூரனை முரணறத் தாக்கித்
திக்கணை[*] கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழல் சங்குகொடு அடல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி.

முதல் இராசேந்திரனின் வங்காள வெற்றியை இப்பகுதிகள் குறிப்பனவாம். மெய்க்கீர்த்தியில் குறிக்கப்படும் வங்காளம் என்பது இன்றைய பங்களா தேசமாகும். மகிபாலன் என்பான் கி. பி. 11 ஆம் நூற்றுண்டில் வங்காள மாநிலத்தை ஆண்டவன் ஆவன். பால மரபினன் ஆவான். இவன் கீழ்ப் பல சிற்றரசர்கள், வங்காள நாட்டின் மேற்குப் பகுதியை ஆண்டனர். தண்டபுத்தி என்பது மிதுனபுரி மாவட்டத்தின் தென்பகுதியும், தென்மேற்குப் பகுதியும் அடங்கிய நிலப்பரப்பாகும். இதனது வேந்தன் தன்ம பாலன். தக்கண லாடம் என்பது, வங்காளத்திலுள்ள கூக்லி (Hooghly) ஔரா (Howrah) மாவட்டங்களைக் கொண்ட நாடு. இதன் அரசன் இரணசூரன். உத்தரலாடம் என்பது மூர்சிபாத் (Murshidabad), பீர்பூம் (Birbhum) மாவட்டங்களை உள்ளடக்கியது. இதன், வேந்தன் கோவிந்த சந்தன். இம்மூவரும் மகிபாலனுக் கடங்கிய சிற்றரசர்கள் போலும். இவ்வனைவரையும் வென்றடக்கி யதையே மெய்க்கீர்த்தி உணர்த்துகிறது. தோல்வியுற்ற மன்னர் களின் தலைகளில் கங்கை நீர் நிரப்பிய குடங்களையும் வைத்துக் கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினர், இராசேந்திரனின் படையினர். இப்படையெடுப்பின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்க நாட்டில் புகுந்தது.[2] படையுடன் சென்ற தமிழ்நாட்டுத் தலைவர் களுள் ஒருவன் மேல் வங்காளத்தில் தங்கிவிட்டான் என்றும் அவன் வழியில் வந்த சாமந்த சேனன் என்பவனே பிற்காலத்தில் வங்காளத்தில் ஆட்சிபுரிந்த சேர மரபினரின் முதல்வன் என்றும் திரு ஆர். டி. பானர்ஜி என்னும் அறிஞர் கூறுகின்றார்.[3] மிதிலையை ஆண்ட கருநாடரும் அவ்வாறு சென்றவர்களாக இருத்தல்

2, சதாசிவ பண்டாரத்தார் தி. வை. பிற்காலச் சோழர் சரித்திரம். 1958. ப. 167

3. Balas of Bengal. PP 73 and 99

வேண்டும் என்று பேராசிரியர் கே. ஏ. என். சாஸ்திரி கருதுகிருர்.[4] திரிலோசன சிவாசாரியாரது சித்தார்ந்த சாராவளியின் உரையின்படி இராசேந்திர சோழன் கங்கைக் கரையிலிருந்து பல சைவர்களை அழைத்து வந்து காஞ்சிபிலும், சோழ நாட்டிலும் குடியேற்றிஞன்.[5] கும்பகோணம் நாகேச்சரத்து கோயிலில் இறைவன் திருமுன்னர் வைக்கப்பட்டுள்ள கங்கை விநாயகர் படிமமும் அப் படையெழுச்சியில் வடநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு இராசேந்திரனுல் அங்குப் பிரதிட்டை செய்யப் பெற்றதேயாகும். அப்படிமம் அமைக்கப் பெற்ற கல்லும், அதன் சிற்ப அமைதியும், கங்கை விநாயகர் என்ற சிறப்புப் பெயரும் — அப்படிமத்தின் வட இந்திய வாழ்வை வரவை, வற்புறுத்துகின்றன.[6]

இவையன்றி காளி வழிபாடும் இவன் காலத்திலேயே வட புலத்திலிருந்து தமிழகம் வந்திருத்தல் வேண்டும். வங்கநாடு காளி வழிபாட்டில் மிகச் சிறந்தது. பார்க்கும் இடமெல்லாம் காளி கோயில்களே. கல்கத்தா என்ற பெயரே, ‘காளிகோட்டம்’ என்ற பெயரினதே. படையெடுத்துச் சென்ற படைவீரர்களாலும் வட புலத்திலிருந்து தமிழகம் போந்த சைவாசாரியர்களாலும் காளி வழிபாடு, தமிழகத்தில் அறிமுகமாகிப் பெருகியிருத்தல் வேண்டும். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் இராசேந்திர சோழனுக்குப் பின் வந்த சயங்கொண்டார் காலத்தில் தமிழகம் எங்கும் காளி வழிபாடு பரவிப் பெருகி இருத்தல் வேண்டும். பரணியில் இடம் பெற்றிருக்கிற அளவுக்குக் காளி வழிபாடு, கி. பி. 10 ஆம் நூற்ருண்டிற்கு முன் இல்லை. தலைமைப் பாத்திரங்களுள் ஒன்ருக, காளி இருப்பதும், அவளது தோற்றத்தைப் பற்றிய வருணனைகளும் சோழர் காலத்திற்கு முன்பு தமிழகத்தில் பெருக இல்லாதிருந்தமையும் இக்கருத்தை வற்புறுத்துகின்றன.

பாலை பற்றி வருணனைகளும் ஆராய்ச்சிக்குரியவை. கலித்தொகை முதலான சங்க இலக்கியம் காட்டும் பாலை நிலமும், பரணி இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டும் பாலை நிலமும் ஒன்றல்லவோ என்று தோன்றுகின்றன. பாலைக்கலி காட்டும் பாலை, வறண்ட குறிஞ்சியும் முல்லையுமே ஆகும். வளமான குறிஞ்சியிலும், முல்லையிலும் வாழ்ந்த கருப்பொருட்கள், கோடையிலே வளங்குன்றி வாடி

4. Sastri K.A.N. The Cholas P. 254
5. Ibid.
6. பிற்காலச் சோழர் சரித்திரம் I. ப. 166

வதங்கி இருப்பதையே சங்கப்பாலை காட்டுகிறது. ஆனால் பரணிப் பாலை, வளங் குன்றிய குறிஞ்சி, முல்லை என்பவற்றைக் காட்டுவதும் அன்றி, நீண்ட மணல்வெளியைக் (Desert) காட்டுகின்றன. இத்தகு மணல்வெளிப் பாலை, தமிழகத்தில் இல்லாதது, தமிழிலக்கியங்கள் காட்டாதது. ‘அணிகொண்ட குரங்கு இனங்கள் அலைகடலுக்கு அப்பாலை மணல் ஒன்று காணுமல் வரை எடுத்து மயங்கினவே’ என்ற தாழிசையில் வரும் ‘பாலைமணல்’ — தமிழகம் காணாதது. இஃதன்றியும் ஒட்டகம் பற்றிய ஐந்து குறிப்புகள் கலிங்கத்துப் பரணியில் உள்ளன.[7] சோழ அரசனுக்குத் திறை செலுத்தும் மன்னர்கள் ஒட்டகங்களைத் திறைப் பொருளாக நல்கியதையும் (334), பாலைவனத்தில் வாழும் பேய்கள், ஆங்குள்ள ஒட்டகங்களைத் தம் குழந்தைகள் என்று கருதி தம் இடையில் எடுத்து வைத்துக் கொண்டதையும் பரணி காட்டுகின்றது (142).

அட்டமிட்ட நெடுங்கழை காணில் என்
அன்னை அன்னை என்றலும் குழவிய
ஒட்ட ஒட்டகம் காணில்என் பிள்ளையை
ஒக்கும் ஒக்கும் என்று ஒக்கலை கொள்வன

ஒட்டகம் - தமிழ்நாட்டில் இல்லாத உயிர். பாலைவனத்தில் மட்டுமே வாழும் உயிர். அத்தகு ஒன்றைப் பற்றிப் பரணி இலக்கியத்தில் குறிப்பிருப்பது சிந்தனைக்குரியது.

நீண்ட மணல்வெளிப் பாலையில், அதன்கண் வாழும் ஒட்டகமும், பரணி இலக்கியப் படைப்பாசிரியர்கட்கு வடபுலப் பயண அறிவு இருப்பதைக் காட்டுகின்றன. சோழர் காலத்தில், வடபுலம் வரை சென்ற தமிழ் மறவர்கள் ஆங்குள்ள பாலை நிலத்தையும், ஆங்கு வாழ்ந்த ஒட்டக உயிரையும் கண்டனர் போலும். அதன் எதிரொளியே பரணி யிலக்கியத்தில் பாலை நிலப் படைப்புப் போலும்.[8]

சயங்கொண்டார் என்ற பெயர்

தமிழிலக்கிய வரலாற்றில் இடைக்காலம் அரும்பெரும் இலக்கியத் தோற்றத்திற்குத் தடைக் காலம் என்று கருதுவார் உண்டு. பழகிப்போன புராணச் செய்திகளைத் திரும்பத் திரும்பச்

7. ஒட்டகம்: 6-3, 11-23, 11-122, 11-148, 12-20
8. ஒட்டகம் பற்றிய பழைய குறிப்புகளும் உள்ளன. தொல்காப்பியம் மரபியல். 53, அகநானூறு 245, சிறுபாணாற்றுப்படை 154.

சொல்லுகின்ற இலக்கியங்கள் பல்கிய காலம் என்றாலும் இக்கால எல்லையிலே தோன்றிய சில இலக்கியங்கள் உலக இலக்கிய வரலாற்றின் திருப்பு முனைகளாகும். வீறுமிக்க சோழர் ஆட்சி தமிழ்நாடு கடந்து தரணிவரைப் பரவி இருந்தது. வெங்கடராமா மகனுன மாதவனும், சுந்தரியும் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிற்றூரில் தங்கி வேதத்திற்கு உரை வகுத்தார்கள்.[9] உலகத்தையே வெற்றிகண்ட வீரர்களைப் போல இன்பமான சூழலில் உரை வடித்த தாகக் குறித்துள்ளார்கள். இக் குறிப்பிலிருந்து சோழர் கால நாடு பூலோக சொர்க்கமாகப் பொலிந்து நின்றது என்பது புலனுகின்றது. இச்சூழலில்தான் சயங்கொண்டார் என்ற கவிச் சக்கரவர்த்தி பிறக்கிறார். இவரே கலிங்கத்துப் பரணி என்ற வீர இலக்கியத்தின் ஆசிரியர் ஆவார். இச்செய்தி தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி மகாலில் உள்ள பழையதோர் ஏட்டுச் சுவடியின் ஈற்றில் காணப் படும்.

" குலோத்துங்க சோழ பெருமானுக்குத் தீபங்குடி கவிற் சண்டிதன் கவி சக்கிரவர்த்தி சயங்கொண்டார் பாடின கலிங்கத்துப்பரணி முற்றும் "

என்ற தொடரால் வலியுறுகிறது.[10] கவிற் பண்டிதன் என்பதற்கு மாறாகக் கவிராசக் கண்டிதன் என்ற பாடம், அச்சிட்ட சரசுவதி மகால் நூல்நிலைய ஏட்டில் காணப்படுகிறது.[11]

ஊர் :

மேலே கண்ட குறிப்பால் தீபங்குடி என்ற ஊர் இப்பாவலரின் பிறந்தவூர் என்பது புலனுகின்றது. இவ்வூர் சோழநாட்டில் கும்பகோணம், திருவாரூர், பேரூந்துத் தடத்தில் நாச்சியார்கோயில் என்ற ஊருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் சாலைகுத் தென்பால் இரண்டு பர்லாங்கு தொலைவில் இன்றும் உள்ளது. இங்கு ஐந்தாறு சைனக் குடும்பங்கள் இன்றும் உள்ளன. தீபநாயகர் என்ற பெயரில் ஒரு பெரிய விருசக தீர்த்தங்கரர் கோயில் இருக்கிறது. இக்கோயில் கோபுரம், விமானம், விசாலமான பிரகாரம், பெரிய மூலவர்,

---

9. Sastri K. A. N. Cholas. P 687
10. கோபாலையர். கலிங்கத்துப் பரணி. 1923. ப. 50.
11. பட்டியல் தொகுதி. I. 1925, ப. 228

உற்சவர், துவாரபாலகர், தருமதேவி கோயில், பிரம்மதேவர் கோயில், வர்த்தமான தீர்த்தங்கரர் கோயில், ஜுவாலினி க்ஷேத்திரபாலர் கோயில்கள் முதலானவை நல்ல நிலையில் உள்ளன.[12] தீபங்குடியே அவரது சொந்த ஊர் என்பது தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெற்றுள்ள கொளுவால் உறுதியாகிறது. அப்பாட்டு

> ' செயங்கொண்டார் அபயன் நுமது ஊர்யாது
> எனக் கேட்டபோது சொன்ன கவி '

என்னும் தலைப்பின்கீழ் இடம் பெற்றுள்ளது. அப்பாட்டு பின் வருமாறு :

> ' செய்யும் வினையும் இருளுண் பதுவும்
> தேனும் நறவும் ஊனும் களவும்
> பொய்யும் கொலையும் மறமும் தவிரப்
> பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்
> கையும் முகவும் இதழும் விழியும்
> காலும் நிறமும் போலும் கமலம்
> கொய்யும் மடவார் கண்வாய் அதரம்
> கோபம் கமழும் தீபங் குடியே '

இப்பாடலில் முதல் நான்கு வரிகள் சைன முனிவர்களின் வாழ்வோடு தொடர்புடையவை. இன்றும் இவ்வூரில் சைன சமயத்தின் எச்சங்கள் இருப்பதால் தீபங் குடியே இவர் ஊர் என்பது திண்ணம்.

இவையன்றித் தீபங்குடிப்பத்து என்ற ஒரு நூல் இருந்ததாகத் தெரியவருகிறது. இந்நூலின் ஏழுபாடல்களும் வேறு சில பதிகங்களும் அடங்கிய கையெழுத்து ஏடு ஒன்று சைன கெசட் (Jain's Gazette) எனும் ஆங்கிலத் திங்கள் இதழின் உரிமையாளர் திரு சி. எஸ். மல்லிநாத ஜெயின் அவர்களிடமிருந்து வாங்கிச் சென்னை மாநிலக் கல்லூரித் தத்துவப் பேராசிரியர் ஏ. சக்கரவர்த்தி நயினார் தன்னிடம் அளித்ததாகப் பண்டிதக் கோபாலய்யர் குறிப்பிடுகிறார்.[13] இச்செய்யுட்கள் தீபங்குடியினுடைய இயற்கை அமைப்பை அழகாக வருணிக்கின்றன.

---

12. தமிழரசு — தமிழ்நாடு அரசாங்க நவம்பர் (1974) சிறப்பு வெளியீட்டைப் பார்க்க.
13. கோபாலையர். க. பரணி. ப. 10

'வண்டார் பிண்டிக்கு இறை முக்குடையான்
வாமன் .... சரணே
பரிவால் நிதமும் பணிவார் தீபங்குடிமக்கள்,
(தீபங்குடிப்பத்து-6)

என்று இப் பாடல் வருவதாலும், இப் பாடலின் ஆசிரியர் சயங் கொண்டார் என்பதினாலும் இத் தீபங்குடிப்பத்தில் குறிக்கப்பட்ட விளக்கங்கள் இன்றைய தீபங்குடிக்கும் பொருந்தி இருப்பதாலும் சயங்கொண்டாருடைய பிறந்த ஊர் சோழ நாட்டுத் தீபங்குடியே என்பது தெளிவு.

சயங்கொண்டாரின் காலம்

தமிழ் நாவலர் சரிதையில் வரும் குறிப்பு அபயன் என்பானொடு தொடர்பு படுத்துகிறது. கலிங்கத்துப் பரணி நூலினுள்ளும் சோழ அரசனை அபயன் என்று குறிப்பிடுகிறார். இவ் அபயன் என்ற பட்டம் உடையவன், கி. பி. 1070 முதல் கி. பி. 1120 வரை ஆண்ட முதற் குலோத்துங்க சோழனவான்.[14] கலிங்கத்துப் பரணியில் குறிக்கப்படுகின்ற கருணாகரத் தொண்டைமான் முதற் குலோத்துங்கன் காலத்தில் சோழ வேந்தனின் தளபதியாக விளங்கியவன்.

'ஸ்வஸ்திஸ்ரீ கோ இராசகேசரி வர்மரான திரிபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 44 செயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டு திரு அத்தியூர் ஆழ்வார்க்குக் குலோத்துங்க சோழ வள நாட்டு திருநறையூர் நாட்டு வண்டாளஞ் சேரிவுடையான் வேள் ஆன கருணாகரனார்'

S. I. I. Vol. IV. No. 862

என்று வருவதனாலும் கலிங்கத்துப் பரணியில் குறிக்கப்பெறும் கலிங்க நாட்டுப் படையெடுப்பும், படையெடுப்புக்கு ஆளான அனந்தவர்மன் என்ற வட கலிங்க நாட்டு மன்னன் நிகழ்த்திய போரும் முதற் குலோத்துங்க சோழனோடு தொடர்புடையனவே.[15]

ஆக அபயன் என்ற குறிப்பு குலோத்துங்க சோழனுக்குப் பொருந்துதல், கருணாகரன் படையெடுப்பு பரணி இலக்கியத்திலும்

---

14. S. I. I. vol. IV. Nos 1338
15. பிற்காலச் சோழர் சரித்திரம். II. ப. 25

முதற் குலோத்துங்க சோழன் வரலாற்றிலும் ஒத்திருத்தல், சோழனின் வட கலிங்கப் போரும் பாவலரின் கலிங்கப்போர் வெற்றியும் ஒன்றாய் இருத்தல் ஆகியன சயங்கொண்டார் முதற் குலோத்துங்க சோழன் காலமாகிய கி. பி. 1070, 1120 என்பதை உறுதி செய்கின்றன.[16]

2 ஆம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் இயற்றியதாகக் கருதப்படும் பிறிதொரு கலிங்கத்துப் பரணியை மனத்திற் கொண்டு இங்கே குழம்புதல் ஆகாது.

சயங்கொண்டாரின் சமயம்

சயங்கொண்டாரின் வரலாற்றைக் காட்டும் தீபங்குடிப்பத்து, தமிழ் நாவலர் சரிதை பாட்டு ஆகியவற்றைப் பார்க்கும்பொழுதும் அவர் வாழ்ந்த தீபங்குடி இன்றும் சைன ஊராக இருப்பதைக் கொண்டும் அவரது சமயம் சைனமே என்று கொள்ளத் தகும். ஆனால் கலிங்கத்துப் பரணியில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்தும் கடவுள் தொடர்பான செய்திகளும் இவர் சைனர் என்று சொல்லுதற்கு எதிராக உள்ளன, உமாபதி, திருமால், நான்முகன், சூரியன், கணபதி முருகவேள், நாமகள், கொற்றவை, சத்த மாதர்கள் வைதீகக் கடவுளர்களை வழிபடுவதும் அருகக் கடவுள் வணக்கத்தைக் குறிக்காமல் விடுவதும் கவனிக்கத் தக்கவை.

வைதீக இதிகாசங்களாகிய இராமாயணத்தை (170) பாரதத்தைக் (47) குறிப்பதோடு மனுதர்மத்தை இரண்டு (26, 241) இடங்களில் குறிப்பிடுகிறார்.

கடவுள் வாழ்த்து இறுதிப் பகுதியில் மனு வளர்க என்று வாழ்த்துகிறார்.

புராண வரலாறு:

வைதிக சமயங்களைச் சார்ந்த புராண நிகழ்ச்சிகளை இவர்தம் நூலில் பெருக ஆளுகிறார். இக்குவாகு அரங்கநாதனைக் கொணர்ந்தது (187) கண்ணபிரான் சிசுபாலனைக் கொன்றது (591) கண்ணன் தூது சென்றது (544) கபையரமுனிவன் காவிரி நீர்ப்

---

16. பரிதிமாற் கலைஞருக்கு இச் செய்தி உடன்பாடில்லை. சயங் கொண்டார் தமிழ்ப் புலவர் சரித்திரம். ப. 13 - 21. ஒட்டக் கூத்தர் இயற்றிய பிறிதொரு பரணியைச் சயங்கொண்டார் இயற்றிய பரணியுடன் உறழ்த்தியதால் நேர்ந்த வழு.

பெருக்கியது (192) காஞ்சியில் பொன்மாரி பொழிந்தது (314) குரங்குகள் கடலுக்கு அணைகட்டியது (96) சிவபெருமான் நஞ்சுண்டது (124) சூரவர்க்கன் நாக கன்னியை மணந்தது (195) சூரியன் சாயாதேவியைத் தேடியது (79) திரிசங்கு சொர்க்கம் புக்கது (194) திருமால் மாவலியிடம மண் கேட்டது (243) திலீபன் சிங்கத்திற்குத் தன் குருதியைக் கொடுத்தது (193) தேவர்கள் பாற் கடல் கடைந்தது (122, 542) என்பன இடம் பெற்றுள்ளன.

வைதிகக் கடவுளரை வணங்குதல், நூலினுள்ளே வைதிக நெறிகளைப் போற்றுதல், வைதிகச் சார்புள்ள முனிவர்கள், தேவர்கள் புராணச் செய்திகள் இவற்றைக் குறிப்பிடுதல் கொண்டு இந் நூலாசிரியரை வேத சமயத்தினர் எனக் கூற இடமுள்ளது.

ஆயினும் முன்னே குறித்த குறிப்புகள் இவரைத் தீபங்குடிச் சைனர் என்று காட்டுவதை முற்றும புறக்கணித்தற்கில்லை. நூலினுள்ளே சைனர்க்கும் பௌத்சர்க்கும இவர் முற்றும் பரிவு காட்டுகிறார். கலிங்கப் போர்க்களததில் சமணர், புத்தர் என்று வேடமிட்ட அளவில் வீரர் அவரைத் துன்புறுத்தாமல் விடுவதையும் (466, 468), சமண பௌத்தப் பேய்களுக்கும் கூழ் வார்க்குமாறு பேய்கள் ஆணையிடுவதையும் (566, 567) இவர் படைப்பதிலிருந்து உணரலாம். தொடக்க காலத்தில் சமண மதம் பெருகியிருந்த ஊரில் பிறந்தவர் என்பதனுல் இவரும் சைனராக இருந்திருத்தல் வேண்டும். அதனையே தமிழ் நாவலர் சரிதையும், தீபங்குடிப்பத்தும் அவ்வூர்ச் சைன இருக்கைகளும் வற்புறுத்துகின்றன. தொடக்கத்தில் சைனத்தினின்று பின்னர் சைவத்திற்கு வந்த திருநாவுக்கரசரைப் போலச் சயங்கொண்டாரும் சைனத்தினின்று வேதச் சமயத்திற்கு மாறினுர் என்று கொள்ளத் தகும்.

சயங்கொண்டார் என்ற பெயர்

அக் காலத்து வாழ்ந்த புலவரிடையே நிகழ்ந்த 'உறழ்' குறித்து எழுந்த கருத்துப்போரில் வெற்றி பெற்றமையால் சயங்கொண்டார் என்ற பெயர் பெற்றனர் இந் நூலாசிரியர். பெற்றபின் முன்பு வழங்கிய இயற்பெயர் மறைந்து சயங்கொண்டார் என்ற பட்டப் பெயரே நிலைபெற்றது. கலிஙக வாகை சூடிய பின் சோழன், இப் புலவரை நோக்கி யானும் சயங்கொண்டான ஆயினேன் என்ருனும், உடனே இப்புலவா அங்ஙனமாயின் சயங்கொண்டான் சயங் கொண்டான் மீது பரணி புனைவான் என்று உரைத்து, இவ் விலக்கியத்தை எழுதினுராம். அரசன் அவைக்களத்தில் புவிச்

சக்கரவர்த்தி சயங்கொண்டானைக் கவிச் சக்கரவர்த்தியாகிய சங்ய கொண்டான் பாடி அரங்கேற்றியபோது ஒவ்வொரு தாழிசையின் முடிவிலும் ஒவ்வொரு பொன்னுலாகிய தேங்காயைச் சோழப் பெரு வேந்தன் அன்பளிப்பாக அளித்தானும்.[17] ஆக அச் செவிவழிச் செய்தியும் சயங்கொண்டார் என்ற பெயரமைப்பும் இப்பெயர் இயற் பெயர் அன்று என்பதைச் சாற்றுகின்றன.[18]

சயங்கொண்டார் எழுதிய பிற நூல்

கலிங்கத்துப் பரணி பெற்றிருக்கும் செய்யுள் அழகைப் பார்த்தால் ஒரு முழுமை பெற்ற கவிஞனுடைய படைப்பிலக்கியம் என்பதை அந்நூல் உறுதி செய்கின்றது. எடுத்த எடுப்பிலேயே முன் யாதொரு நூலும் எழுதாமல் இத்தகு நூல் எழுதுவது என்பது அரிதே. ஆதலின் சயங்கொண்டார் என்ற பெயர் பெறுதற்கு முன்னே பின்னே வேறு இலக்கியத்தையும் இவர் எழுதியிருத்தல் கூடும். தீபங்குடிப்பத்து என்ற நூலின் பாக்கள் கலிங்கத்துப் பரணிக்கு நிகரான செய்யுள் தகைமை பெறுவிடினும் கவிதைத் தரத்திலிருந்து முற்றத் தாழ்ந்தவை அல்ல. அதரபானத்தைச் சுவைபடப் பரணியில் சொல்லும் பாவலர் (1) அதரபானம் (54) கனி அதரத்தினன் (130) மணியரதம் (482), மகரக் குழையார் அதரம் (2) தீபங்குடிப்பத்தில் பணிசேர் மடவார் அதரம் (3) கனிவாய் அதரம் (4) கொஞ்சும் சுகம் மென்மொழியார் அதரம் (5) குனிவில் புருவப் படையார் அதரம் (6) குண்டார் முலை மென் மடவார் அதரம் (7) கொலைவேல் விழியார் செவ்வாய் அதரம் என அதரத்தைத் தீபங்குடிப்பத்திலும் ஆளுகிறார். இவ் ஒற்றுமை இவ் இரு நூலின் ஆசிரியர் ஒருவரே எனக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது.

பரணி இலக்கிய வரலாறு :

பரணியாவது காடுகெழு செல்விக்குப் பரணிநாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது.

---

17. செல்வக் கேசவராய முதலியார், தி. கலிங்கத்துப்பரணி கதா சங்கிரகம். 1915. ப. 5

18. சோழ மன்னர் தம் பட்டப் பெயர்களுள் செயங்கொண்டான் என்பதும் ஒன்று. சயங்கொண்ட சோழ மண்டலம் என்பதே ஒரு நாட்டுப் பெயராக வழங்குகிறது. செயங்கொண்டான் என்ற ஊர்ப்பெயர், கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அண்மையில் இன்றும் ஒரு வட்டப் (Taluk) பெயராக வழங்குகிறது. செயங் கொண்டார் என்ற பெயரும், சோழ மன்னரின் பட்டப் பெயர் எதிரொலி ஆதல் கூடும்.

அது பாட்டுடைத் தலைவனைப் பற்றிக் கூறலின் புறத்திணை பலவும் விராஅயிற்று என்று நச்சினார்க்கினியர் எழுதுவார்.[19] பரணி இலக்கியங்களில் கூறப்படுகின்ற செய்திகள் சங்க இலக்கியங்களிலும் சங்கம் மருவிய இலக்கியங்களிலும் தொல்காப்பிய உரைகளிலும் சிதறிக் கிடக்கின்றன. பொருநர்களுள் ஏர்க்களம் பாடுநர், போர்க் களம் பாடுநர் என்பாரோடு பரணி பாடுநரையும் நச்சினார்க்கினியர்[20] குறிப்பிடுகிறார். இக் குறிப்பால் பரணி பாடும் பொருநர் என்ற ஒருவகையார் இருந்தனர் என்பது பெறப்படுகிறது. மூவருலாக்களில்,

> *‘ தனிப்பரணிக்கு எண்ணிறந்த துங்கமத யானைத்*
> *துணித்தோடும் ’ (வி. சோ. உலா)*

எனவும்

> *கொலையானை பப்பத்து ஒரு பசிப் பேய்பெற்ற*
> *ஒரு பரணி கொப்பத்து ஒரு களிற்றால்*
> *கொண்ட சேரன் ’ (இராச இராச. சோழன் உலா)*

எனவும் கண்ணிகளால் சோழ அரசர்களைச் சிறப்பிக்கும் பரணி நூல்கள் பண்டு வழங்கின என்பது புலனாகிறது. எவ்வகை இலக்கியமும் புலவர்களால் பாடப்பெற்று வரவரச் செவ்விய அமைப்புப் பெற்றுத் திகழுவது இயல்பு. கலிங்கத்துப்பரணியின் செப்பத்தைப் பார்க்கும்போது அது பல புலவர்கள் பாடிய பரணிகளைப் பயின்றதனால் வந்த பயன் என்று எண்ண வேண்டியிருக்கிறது.[21] போர் வெற்றியை மையமாக வைத்து அமைவது இவ்விலக்கியத்தின் இயல்பு. கள வெற்றியைக் குறிததுப் புறப்பாக்கள் பல பண்டு அமைந்தமையைப் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியன புலப்படுத்துகின்றன. புறத்திணையில் இடம் பெற்றுள்ள துறைகளும் போர் வெற்றியைப் புனைவனவே. துண்டு துண்டாகப் போர்ச்செய்தியைப் பாடிவந்த பண்டைய மரபு பிற்காலத்தில் தனிப் பிரபந்தமாகப் பெருகியிருக்கிறது. ஆற்றுப்படை, உலா, தூது, போன்றவை சங்க காலத்தில் துறைகளாக இருந்து பிற்காலத்தில் தனிப் பிரபந்தங்களாக மலர்ந்து பெருகி இருக்கின்றன. இதுபோலப் போரைப் பற்றி இருந்த சிறுபா மரபுகள் ஒன்று சேர்ந்து பிற்காலத்துப் பரணி என உருக்கொண்டி

---

19. தொல்காப்பியம்—செய்யுளியல். 149
20. தொல்காப்பியம் புறத்திணையியல். 36
21. சாமிநாதையர் டாக்டர், உ. வே. பாசவதைப் பரணி. ப. 5

ருக்கின்றன. செருக்களவஞ்சி, களவழி, பரணி என்பன களவெற்றியைப் பாடுகிற பிரபந்தங்கள். மனிதர் உடலையும், யானை, குதிரை, என்பவற்றின் உடலையும், பேய், கழுகு, முதலியன பிணம் தின்று ஆர்ப்பரிப்பதையும், பூதமும் பேயும் பாடியாடுவதையும் செருக்கள வஞ்சி என்ற பிரபந்தம், படம் பிடித்துக்காட்டும். இறப்புண்ட உடல் உறுப்புள்ள வீரரின் உறுப்புகளையும், யானை, குதிரை முதலிய வற்றின் உடல் உறுப்புகளையும் அவை சிதறுண்டு கிடக்கும் தோற்றத்தையும் வருணித்துக்காட்டும் 'களவழி' என்ற பிரபந்தம் இவ்விரண்டிலும் இடம் பெற்ற செய்திகளையும் இடம் பெருச் செய்திகளையும் வரலாற்றோடு கூட்டிக் குழைத்துத் தருவது பரணி இலக்கியம். எனவே பாத்திறம் அனைத்தும் தாங்கிய பாங்கு வாய்ந்தது பரணி ஆகும். கலிங்கத்துப்பரணி இந்த அமைப்பிலேயே உருவானது.

பரணி இலக்கணம்

பரணியின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் காட்டுகின்றன. பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, தொன்னூல் விளக்கம், சதுரகராதி ஆகிய இவ்வனைத்தும் பரணி இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப்பரணி காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. இதற்கு முன்னே 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்னிரு பாட்டியல் பரணி இலக்கணத்தைப் பேசுகிறது (242, 43, 44, 45). இதனால் கலிங்கத்துப்பரணிக்கு முன்பே பரணி இலக்கியம் இருந்திருத்தல் வேண்டும்.

பன்னிரு பாட்டியலில் (242-245) கூறப்படுகிற இலக்கணம் கலிங்கத்துப் பரணிக்குப் பெரிதும் பொருந்தி வருகிறது எனினும்

> *" கனாநிலை, நிமித்தம் ... ...*
> *அவர்பதம் பழிச்சா மன்னன் "*

என்பன பரணி இலக்கியத்திற்குப் பொருந்தவில்லை.

> *" யானை சாய்த்த அடுகளத் தல்லது யாவரும் பெறுஅர்*
> *பரணிப் பாட்டே "*
>
> — பன்னிருபாட் : 242

என்று வரையறுக்கிறது. இங்கு எத்தனை யானை என்ற குறிப்பில்லை. காலப்போக்கில் ஆயிரம் யானை கொன்றவனுக்கே பரணி என்ற மரபு புதிதாகக் கிளைத்தது. பிரபந்த மரபியல் என்ற சிறு இலக்கண நூல் 'யானை ஆயிரம்' என்றே சொல்கின்றது.

“ படை புக்கு ஆயிரம் பகடு அற ஒன்னர்
போரில் எதிர்த்து பொருதும் அரசன் ”

பி. ப. 19

என்று கூறுகிறது. இதனை யொட்டியே பின்வந்த இலக்கண விளக்கம்

“ ஆயிரம் யானை அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி ”

என்று இலக்கணம் வகுக்கின்றது.

பரணியின் யாப்பு

பரணி கலித்தாழிசைகளால் பாடப்பட வேண்டும். இத் தாழிசைகள் கொச்சக ஒரு போகின் வகையின என்பர். “தாழிசை கொச்சகமாகிய பரணிச் செய்யுளும்”, தரவுக் கொச்சகமாகிய தொடர்நிலைச் செய்யுளும்” இவை முழுதும் தேவபாணி ஆகும். பரணிப்பாட்டாகிய தேவபாணி எனவரும் பேராசிரியர் கூற்றல் இஃது உறுதியாகிறது.[22] பாசவதைப் பரணியில் ஒரு தாழிசை அடியில் இருபது சீர்களைப் பார்க்கிறோம் (466). எத்தனைத் தாழிசைகள் வேண்டுமானலும் இடம் பெறலாம்.

பரணியின் உறுப்புகள்

கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு உரைத்தல், கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம், கடிகணம் உரைத்தல், காளிக்கு அது சொலல், அதனல் தலைவன் வண்புகழ் உரைத்தல், எண்புறத் திணையுற வீட்டல், அடுகளம் வேட்டல் இவ் வுறுப்புகள் பரணிக்குத் தகப் பேரளவு வேறுபடா விடினும் ஓரளவு வேறுபட்டிருக்கின்றன. சிறப்பாகப் பாட்டியல் நூல்கள் காட்டுகின்ற பத்து உறுப்புகளைக் காட்டிலும் கலிங்கத்துப் பரணியில் இந்திரசாலம், இராச பாரம்பரியம், அவதாரம், என்னும் உறுப்புகள் கூடுதலாக உள்ளன.

கலிங்கத்துப் பரணி வரலாற்றுக் கருவூலம்

“ கலிங்கம் எறிந்த கருணைகரன் தன் களப்போர்
பாடக் கடை திறமின் ” (2 : 44)

என்ற தாழிசையே கலிங்கத்துப்பரணியின் கரு ஆகும். கி. பி. 12 ஆம் நூற்றுண்டில் வரலாற்றைத் தழுவி எழுந்த இலக்கியங்கள்

---

22. பேராசிரியம்-செய்யுளியல். 156, 149

இரண்டு. ஒன்று திருத்தொண்டர்களின் வரலாறு கூறும் பெரிய புராணம். மற்றொன்று முதற் குலோத்துங்கனின் வரலாறு பாடும் கலிங்கத்துப்பரணி. அனபென்னும் இழை கொண்டு தொடுக்கப் பெற்ற பக்திப் பனுவல் பெரியபுராணம். வீரம் என்னும் இழை கொண்டு பின்னப்பட்ட தீரப்பனுவல் கலிங்கத்துப்பரணி. கலிங் கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் 'முதற குலோத்துங்க சோழன். இவனை ஒட்டி, சோழர் தலைமுறையின வரலாற்றையே தருகின்றது இராச பாரம்பரியம். குலோத்துங்கனின் தலைமுறையை 27 வேந்தர்களின் பெயரையும் பெருமையையும் சொல்லிப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றது இராச பாரம்பரியம். குலோத் துங்கனின் பிறப்பு வளர்ப்பு வாழ்வு, வெற்றி அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது அவதாரம் என்ற பகுதி. சோழன் முதற் குலோத்துங்கனைப் பற்றி இந்நூல் கூறும் செய்திகள் பெரும் பாலானவை கல்வெட்டுச் சான்றுகளால் உறுதியாகின்றன.

சயங்கொண்டாரின் பாத்திறன்

நான் களைப்படைந்தபோது இந்நூலில் இடம் பெற்றுள்ள

எடும் எடும் எடும் என எடுத்தவேல்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடு பரி கரிக்குழாம்
விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே'' (404)

என்பது முதலிய சில தாழிசைகளை முழுக்காகச் சில நிமிடம் படிப்பேன். அதனால் களைப்பு தீர்ந்து விடும்' என்பர் மோசூர் கந்தசாமி முதலியார். அத்துணையளவு வீறுபடைத்தது இப்பரணி. இந்நூல் ஒன்றாலேயே சயங்கொண்டார் ''பரணிக்கோர் செயங் கொண்டானெனப் பெயர் பெற்றுவிட்டார். 'தமிழ்த் தெய்வப் பரணி' என ஒட்டக்கூத்தரால் புகழுரையும் வாங்கிவிட்டார். 'பாடல் பெரும் பரணி தேடற்கருங் கவி கவிச்சக்கரவர்த்தி பரவ' எனக் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில், சயங்கொண்டாருடைய கவித் திறனைப் பெரிதும் உருகிப் போற்றுவர் ஒட்டக்கூத்தர். தோன்றிய இருபதாவது ஆண்டில், கலிங்கத்துப்பரணி, பிறிதொரு கவிச் சக்கரவர்த்தியாகிய கூத்தரால் பாராட்டப்படுகிறது என்றால் ஏன்? அதன் சிறப்புத்தான் அனைத்திற்கும் காரணம். இவருக்குப் பின் வந்த உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கலிங்கத்துப் பரணியிலிருந்து மூன்று தாழிசைகளை மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார். ஒரே நூலால் பெரும்பேர் பெற்ற இவர்

'கவிச்சக்கரவர்த்தி' என்ற தனிப்பெயர் பெற்றுள்ளார். இத்துணைப் பெயர், சயங்கொண்டார் பெறுதற்குக் காரணம் என்ன? அவரது கவிதையும், கவிதைக்காக எடுத்துக்கொண்ட கருப்பொருளும், கருப்பொருளை நடத்திச்சென்ற முறையுந்தான் முதன்மைக் காரணங்கள். போர்க்களத்தின் கொடுமைகள் இவருக்கு முன்பும் பாடப்பட்டுள்ளன. ஆனால் இவர் அளவிற்கு யாரும் பாடவில்லை. காதல் பாக்கள் இவருக்கு முன்பும் இயற்றப்பட்டன. ஆனால் இவர் வடிக்கும் அளவிற்கு யாரும் காதற் காட்சிகளை வடித்ததில்லை. தமிழிலக்கிய வரலாற்றில் நகைச்சுவை ததும்பும் பாடல்கள் மிகக் குறைவே. அக்குறையை அகற்றி நிறைவு செய்த பெருமை இப் பாவலருக்குண்டு. இவருக்கு முன்பிருந்தோர், பேய்களைக் குறித் துள்ளனர். ஆனால் இவரைப்போல் யார்க்கும் அங்கம் அங்கமாகப் படிப்போர் பதறும்படியாகப் படைக்கவில்லை.

கதையைக் கவர்ச்சியான முறையில் காளி பேய்கள் கூற்றாக மாற்றி அவர்கள் வாயால் சொல்ல வைத்த உத்தி இவர் வெற்றிக்கு முதற்காரணம்.

இவர் பாடல்களின் சிரிப்பும், அவலமும், காதலும், போதலும், வீரமும், கோழைத் தனமும், நகையும், காதலும் இடம்பெற்றுள்ளன. இவரைப்போல வேறு யாரும் பாடவில்லை.

எதுகைக்காகவோ மோனைக்காகவோ வாய்பாடு கட்டுக் கோப்புக்காகவோ கவிஞன் சொற்களைத் தேடி அலையவில்லை. அல்லது எதுகைக்காகச் சொற்களைச் சிதைத்தும் வழங்கவில்லை. பாட்டின் புற அழகுகளுக்காகப் பொருளை மறைத்துவிட்டு ஓடவும் இல்லை. ஏறக் குறைய ஒரு குலத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டு நமக்கு ஒரு வரலாற்று இலக்கியம் படிக்கிறோம் என்ற எண்ணமே ஏற்படாமல் கவிஞன் ஒரு காவியத்தை முடித்திருக் கிறான் என்றால் அது எளிய சாதனை அன்று; யாரும் எளிதில் செய்து முடிக்கக் கூடியதும் அன்று. உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் அறிவும், சொற்பெருக்கும் இயற்கையாகக் தூண்டிவிடும் கவிதைத் திறனும் உடையவன் தான் இத்தகு காவியத்தின் கருத்தாவாக இருக்க-இலங்க முடியும்.

பரணி இலக்கியப் பட்டியல்

நூல்	ஆசிரியர்	காலம்
கலிங்கத்துப் பரணி	சயங்கொண்டார்	1112
தக்கயாகப் பரணி	ஒட்டக்கூத்தர்	1096
இரணியவதைப் பரணி	?	1210
சூரன்வதைப் பரணி	,,	?
அஞ்ஞவதைப் பரணி	சோதிப் பிரகாசர்	1450
அஞ்ஞவதைப் பரணி	தத்துவராயர்	1450
மோகவதைப் பரணி	சோதிப் பிரகர்சர்	1450
மோகவதைப் பரணி	தத்துவராயர்	1450
பாசவதைப் பரணி	வைத்தியநாத தேசிகர்	1650
திருச்செந்தூர்ப் பரணி	சீனிப் புலவர்	18 (நூற்)
சீனத்துப் பரணி	மு. பி. பாலசுப்பிரமணியம்	20 (நூற்) (1972)
வங்கத்துப் பரணி	அரங்க சீனிவாசன் கழக வெளியீடு	20 (நூற்) (1972)

மறைந்து போன பரணி நூற்கள்

நூல்	ஆசிரியர்	காலம்
தமிழ்ப் பரணி	,,	1048
கொப்பத்துப் பரணி	,,	1054
கூடல் சங்கமத்துப் பரணி	,,	1064
கலிங்கப் பரணி	ஒட்டக்கூத்தர்	1096
இரண்டு பரணி நூற்கள்	,,	,,
கலைசைச் சிதம்பரேசுரர் பரணி	தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்	1800 (18 நூற்)
கஞ்சவதைப் பரணி	,,	,,
பேராசிரியர் கூறும் பரணி	,,	,,
அடியார்க்கு நல்லார் கூறும் பரணி	,,	,,

நூல் கட்டுரை அடைவு

அப்புவையங்கார், புதுவை. ரெ.
கூத்தர், 'தெய்வப் பரணி' என்றது எதனை ?
செந்தமிழ் தொகுதி 29, பக். 353

அருணாசலம்; திருச்சிற்றம்பலம், மு. சயங்கொண்டார், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், 1972

அருணாசலம் (அறவாணன்), க. ப. கவிதையில் ஓசை நயம்; ப. 46-54, செந்தமிழ்த் தொகுதி, 62, பகுதி 1, 1966

அறிவொளி, தி. நா., கலிங்கத்துப் பரணியில் ஓசை நயம், செந்தமிழ்ச் செல்வி-சிலம்பு 33 பரல் ஒன்பது 425–431

இராகவையங்கார், மு. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, 1925, ப. 71, விலை நான்கு அணா

இராதா, ஓவியர், கலிங்கத்துப்பரணிக் காட்சிகள் - கடைதிறப்பு, கலைக்கதிர் வெள்ளி விழா மலர், 1974, 8 படங்கள்

இராமநாத ஐயர், ஏ. எஸ். கருணாகரத் தொண்டைமானும் ஸ்ரீஸௌத்திரரத்ந உஹாரமும் All-India Oriental Conference Third Session, Madras, 1924. மேற்கோள் : கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, மு. இராகவையங்கார், 1925 - ப. 47

இராஜம், கலிங்கத்துப்பரணி, எஸ். ராஜம், 5, தம்புச்செட்டித் தெரு, சென்னை-1, 1960

இளவரசு, சோம. புலவர். பரணி இலக்கியங்கள் (ப. 200) மணிவாசகர் நூலகம், 1967

கந்தையா பிள்ளை, ந.சி., கலிங்கத்துப்பரணி வசனம் (மாணவர் பதிப்பு) சாலகச்சேரி இலங்காபிமாலை அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்றது. ப. 86, விலை 75 சதம்

கம்பராமன், சயங்கொண்டான் கனிந்தளித்த பரணி, ப. 207–208, தமிழ் வட்டம் 2வது ஆண்டு மலர், 11. 4. 1969

கலிங்கத்துப்பரணி, பண்டித அ. கோபாலையர், 1923; செந்தமிழ் (தொகுதி 21, பகுதி 7)

கோபாலையர், பண்டித. ச. கலிங்கத்துப்பரணிச் சுருக்கம், குறிப்புரை, சென்னை ஆசிரியம் அச்சகம் பிரசுராலயம், புஸ்தகசாலை, எட்வர்டு எலியட் ரோடு - மயிலாப்பூர், 1924

பண்டாரத்தார் தி. வை. ச. கலிங்கத்துப்பரணி. கலைக்களஞ்சியம் ப. 332—334, தொகுதி–3, 1956

சந்திரசேகரன், செயங்கொண்டார் வழக்கம் 1955

சடகோப ராமானுஜாசாரியார்; வை. மு. கலிங்கத்துப்பரணி, இராச பாரம்பரிய உரை, மேற்கொள்: மு. ராகவையங்கார், கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, 1925

சித்ரலேகா. கலிங்கத்துப்பர்ணி ஓவியங்கள், ப. 238-241, தமிழ்வட்டம், 2வது ஆண்டு மலர் 11. 4. 69

சிவஞானம். ம. பொ. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, செங்கோல் வார இதழ் 1974

சுந்தராம்பாள், இரா. கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கியச் சொற் பொழிவுகள் மூன்ருவது மாநாடு 13. 3. 60 திருநெல்வேலி ப. 69-110

சுப்பராய முதலியார், புதுவை கல்வி வளர்ச்சிக்கூடம் 1840 கடவுள் வாழ்த்து – களம்பாடியது தாழிசை – 563

சுப்பிரமணியம், என். கலிங்கத்துப்பரணி – திறனுய்வு எம். ஏ, தமிழ் ஆய்வுக் கட்டுரை - அச்சிடாதது. நாகர்கோயில் எஸ். டி. இந்துக் கல்லூரி, 1972

சுப்பு ரெட்டியார், டாக்டர் ந., பரணிப் பொழிவுகள், திருப்பதி வேங்கடேசுவரப் பல்கலைக்கழக வெளியீடு, 1972

சுப்பு ரெட்டியார், டாக்டர் ந., கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, பழநியப்பா பிரதர்ஸ் வெளியீடு, 1969

சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கோ. சயங்கொண்டான் அருளிச் செய்த கலிங்கத்துப்பரணி, தாமஸன் கம்பெனி, 1898, பக். 130 விலை 8 அணு

செயராமன், ந. வீ., சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967

ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ., கலிங்கத்துப்பரணி, ப. 257-260 தமிழ் வட்டம், 11. 4. 69

பழனிவேல் பிள்ளை, பெ. கலிங்கத்துப்பரணி தெளிபொருள் விளக்கம், கழக வெளியீடு, பிராட்வே, சென்னை-1, 1965

பிளாரென்சு காதரைன், Kalingatthu Parani Grammar, With Index, கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, எம். ஏ. ஆய்வு, 1968.

புலியூர்க்கேசிகன், கலிங்கத்துப்பரணி தெளிவுரை, அருணா பப்ளி-கேஷன்ஸ், சென்னை–17, 1959

முத்துசிவன், ஆ. பரணித் திறனாய்வு (?) மேற்கோள் : பரணி இலக்கியங்கள் ப. 48-51, 1967

வேங்கடசாமி நாட்டார், ந. மு., பரணிப் பெயராய்வு, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு–11, பரல்-6,

வையாபுரிபிள்ளை, எஸ். கலிங்கத்துப்பரணியில் நகைச்சுவை, ப. 35–57 இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1965

Aroul, G., The Chapter on the opening of the portals in 'Kalingattu Barani' Maraimalaiadikal Library No. 100

Parani in English, by V. Kanagasabhai Pillai, Indian Antiquary Vol. XIX, 1890

Kamban and Jayankondan by S. Krishnaswamy Aiyangar, The Christian College Magazine, 1902-1903

Meenakshisundaram, T. P. The Parani Poetry, Tamil Conference I.A.T.R. Proceedings Vol. II, P. 196; 1966

Nagaswamy, R., Kalingattupparani, pp. 238-241 தமிழ்வட்டம் இரண்டாவது ஆண்டுமலர், 11-4-1966

Sinnathambi Thillainathan, Court Literature of Cola Period Madras, M. Litt., 1968-1969

Subramania Aiyar, A. V., Kalingattupparani, A. Martial Tamil Classic (The Hindu)

Thirumalai Mutthusamy, A. Studies in Parani Literature Madras, M. Litt, 1962.

5

சித்தர்கள்

திரு. இரா. மாணிக்கவாசகம்

முன்னுரை

தமிழில் வழங்கும் சித்து என்ற சொல்லுக்கு 'அருள் விளையாட்டு' என்று பொருள் கொள்ளலாம். இதனை ஆங்கிலத்தில் 'மிஸ்டிசிசம்' (Mysticism) என்ற சொல்லால் குறிப்பர். இச்சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றனர்[1]. அனைத்து விளக்கங்களுக்கும் அடிப்படையாக விளங்கும் பொருளாவது 'ஆன்மா பரம்பொருளோடு இரண்டற இணைய எடுத்துக்கொள்ளும் முயற்சி அல்லது அம் முயற்சியில் பெறும் அனுபவம்' என்பது. மேலைநாடுகளில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இம் முறை அறிமுகம் செய்யப்பட்டது என்னும் கருத்தும்[2], 1900-ம் ஆண்டுதொட்டே இம் முறை பரவலாக ஆன்மீகத்துறையில் பின்பற்றப்பட்டது என்னும் கருத்தும்[3] நிலவுகின்றன.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சுமார் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்திலேயே இந்தச் சித்துமுறை இருந்துள்ளது எனலாம். சித்து என்னும் சொல்லோ அல்லது சித்தர் என்னும் சொல்லோ சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட

---

1. வாழ்க்கையைப் பற்றிய நுண்ணறிவு என்பது பொருள்.
   a) P 188 - Dictionary of Religion and Religions-R. Ince.
   இறைவனோடு ஆன்மா இரண்டறக் கலக்கும் அனுபவநிலை.
   b) P 83 Encyclopaedia of Religion and Ethics.
   c) P 288 Comparative Religion A. C. Bouquet.
   d) இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்ளும் தன்மையை வலியுறுத்தும் ஒருவகைச் சமமாகும்.
   P 203 Dictionary of Philosophy D. D. Runes.
2. 'Mysticism' The new American Encylopaedia Vol. VIII 1963.
3. P 188 Dictionary of Religion and Religions R. Ince.

வில்லை எனக்கருதுகிறேன். ஆனால் இச்சொல் குறிக்கும் நிகழ்ச்சிகள் இருந்தன என்பது தெளிவு.

தமிழில் மிகத் தொன்மையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் காணப்படும் நிறைமொழிமாந்தர் எனும் சொல் சித்தர்களைக் குறிப்பது எனக் கொள்ளலாம்.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் எனப'[4]

இது நூற்பா.

குறுந்தொகையில் ஒரு பாடல் சித்தரைப் பற்றிக் குறிப்பதாக உள்ளது.

'நிலந்தொட்டுப் புகாஅர் வானமேரூர்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னூட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காதலோரே'[5]

என்பது பாடல். தலைவன் பிரிந்திருக்கும்போது வருந்திய தலைவியை நோக்கித் தலைவர் இவ்வுலகில் எங்கேனும் ஓரிடத்தில் இருப்பார்; அவரைத் தேடித் தருவேன் என்பதுபடத் தோழி கூறும் பாடல் இது.

'தோழி, நம் தலைவர் சித்திபெற்றவர்போல் பூமியைத் தோண்டி உள்ளே புகார்; ஆகாயத்தின்கண் ஏறுர்; குறுக்கிடும் பெரிய கடலின் மேல் காலால் நடந்து செல்லார்; நாடுகள்தோறும், ஊர்கள் தோறும் முறையாகக் குடிகள் தோறும் ஆராய்ந்தால் அகப்படாமல் தப்புவாரும் உளரோ!' என்பது இப் பாடற் கருத்து. பின்வந்த காப்பியங்களான மணிமேகலை, பெருங்கதை முதலியவற்றிலும், சூடாமணி நிகண்டிலும் இந்தச் சித்து நிகழ்ச்சிகள் குறிக்கப்படுகின்றன.

மணிமேகலையில்,

'நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்திற் றிரியுமோர் சாரணன்'[6a]

---

4. நூற்பா 178 செய்யுள் - தொல்காப்பியம்.
5. பாடல் 130 குறுந்தொகை.
6.a 24: 46-47 மணிமேகலை;

எனவும், பெருங்கதையில்,

' இருநிலம் புகுதலும் ஒருவிசும் பிவர்தலும்
வருதிரை நெடுங்கடல் வாய்க்கொண் டுமிழ்தலும்
மந்தர மேந்தலும் மென்றிவை பிறவும்
பண்டியல் விச்சை பயிற்றிய மாக்களைக்
கண்டுமறிதும் ' 6b

எனவும், சூடாமணியில்,

' நீரினிற் பூவினில் வானினைத்துழி யொதுங்குகின்ற
சாரண ரெண்மராவார் சமணரி லிருத்தி பெற்றோர் ' 6c

எனவும் குறிக்கப்படுகின்றனர். எனவே சித்து முறை தமிழருக்கு மிகத் தொன்மையான அறிமுகமாகும் எனலாம்.

சொல்லாய்வு

இனி, இச் சொல்லினைச் சிறிது ஆராய்வோம். சித்து எனும் சொல் சித்தம் எனும் சொல்லில் இருந்து தோன்றியதாக இருக்கலாம்[7]. சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக்கரணம் என்பர். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும், புத்தி நிச்சயிக்கும், அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும், சித்தம் இம் மூன்றுக்கும் காரணம் ஆகும். இவற்றில் அசுத்த மாயையிலிருந்து தோன்றும் சித்தத்தினின்றே மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய, ஞானேந்திரியம் எனப்படும் ஐம்பொறிகளும்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய தன்மாத்திரை எனப்படும் ஐம்புலன்களும், வாய், கை, கால், மலவாய், எருவாய் ஆகிய கர்மேந்திரியம் எனப்படும் தொழில் உறுப்புகளும், ஆகிய தத்துவங்கள் தோன்றி ஒடுங்குகின்றன.[8] மேலும் சித்தத்தின் சலனமே அனைத்துத் தத்துவங்களின் தோற்றம், ஆதலால் சித்தத்தை வெல்லுதல் வேண்டும். சித்தத்தின் சலனம் பிராணவாயுவின் அசைவே சித்தத்தின் அசைவு.[9] இவ்வுண்மையை உணர்ந்தே சித்தர்கள் பிராண

6b) 3-4: 86-90 பெருங்கதை

6c) 2:4 சூடாமணி நிகண்டு.

7. There is no word in the English language which adequately describes it. It is not mind for mind is a limited instrument through which chit is manifested. It is that which is behind the mind and by which the mind itself is thought that is created.

8. P. 240 Shakti and Shakta - Author Avalon.

9. சிவயோகசாரம் - பக். 248 சித்தர் ஞானக்கோவை.

யாமத்தை வலியுறுத்தினர். எனவே பிராணுயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கிய நிலை சித்தர் நிலையாகும். இதுவே சிவநிலை எனலாம். திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்த நிலை இது.[10] இந் நிலையில் சித்தமும் இல்லை; செடலும் இல்லை.[11] இதனை மோன நிலை எனவும் கூறலாம். திருமூலர் இதனைச் செத்தார் நிலை[12] எனக் குறிக்கின்றார்.

மாணிக்கவாசகரின்,

'சித்தமல மருவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே[13]

எனவரும் அடிகள் ஈண்டு நினைவுகூரத்தக்கது. இதனையொத்த கருத்துக்கள் மெய்ஞ்ஞான இலக்கியங்களிலிருந்து பலவற்றை மேற்கோளாகக் காட்டலாம்.[14]

எனவே சித்தத்தை வென்றவன் சித்தன் என்றும், அவனது அருளனுபவ நிலை சித்து அல்லது சித்தி என்றும் கூறலாம்.

இரண்டாவதாக வேறு ஒரு விளக்கமும் தருதல் கூடும். சித்தி என்ற சொல்லுக்கு அடைதல் என்பது பொருள். இதனை இன்றும் பரவலாகப் பேச்சு வழக்கிலும் காணலாம். 'போன காரியம் சித்தியாச்சு', 'சொல்லியது சித்தியாச்சு' என்பது காண்க.

'சிரி லுடைரட்ட சித்தியார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினல்[15]

---

10. திருமந்திரம் 2915
11. திருமந்திரம் 2216
12. திருமந்திரம் 1870
13. பாடல் 1 அச்சோபதிகம் - திருவாசகம்.
14. ,, 148 பராபரக்கண்ணி - தாயுமானுர்.
,, 790 (வைத்தீஸ்வரன் கோயில்) திருப்புகழ்.
,, 380 4 திருமுறை - அப்பர்.
,, 473 1 ,, - சம்பந்தர்.
,, 5 7 ,, - சுந்தரர்.
15. பாடல் 18 கடுவெளிச்சித்தர் பாடல்.

என வருவதும்,

'குறியான சிவயோகம் சித்தியாச்சு' 16

என வருவதும், இலக்கிய வழக்கு ஆகும். எனவே பெறத்தக்க பேறு எனக் கருதப்படுகின்ற சாயச்சியநிலை கைவரப்பெறுதலே-அடையப்பெறுதலே சித்தி எனவும், அடைந்தவரே சித்தர் எனவும் கருதலாம்.

மூன்றாவதாக, ஒரு விளக்கமும் தருதல் கூடும். இறைவனைச் சத், சித், ஆனந்தம் எனக்குறிப்பர். 'சத்து' என்பது என்றும் உள்ள பொருள் (Reality). சித்து என்பது பேரறிவு (Intelligence). ஆனந்தம் என்பது பேரின்பம் (Bliss). பேரறிவுப் பெரும்பொருளான இறைவனை உணர்த்தும் சித் என்ற சொல்லை அடிசசொல்லாகக் கொண்டு சித்து-சித்தன் எனும் சொற்கள் தோன்றியிருக்கலாம். ஆன்மாவும் அறிவுடையதே; எனினும் தானாக அறியும் அறிவற்றது என்பர் சித்தாந்திகள். கதிரவனது ஒளியினால் அக் கதிரவனைக் காணுதல்போல இறையறிவு உணர்த்த உணரும் அறிவே ஆன்மாவின் அறிவாகும். ஆதலின் இப்பேரறிவினைப் பெறுவது சித்து எனவும், அவ்வறிவினைப் பெற்றவன் சித்தன் எனவும் கூறலாம்.

நான்காவதாக ஒரு விளக்கம்: சிவனுக்குச் சித்தன் என்ற பெயரும் உண்டு.[17] சைவ சமய நால்வருள் சம்பந்தரால் பாடப் பட்ட திருநறையூர் சித்தீச்சரம் என்றே வழங்கப்பட்டது. அக் கோயில் கொண்ட சிவன் சித்தன் என்றே வழங்கப்பட்டான் என்பதைத் தேவார வாயிலாக அறிய முடிகின்றது.[18] சேலம் மாவட்டத்தில் சித்தர்கள் வாழ்விடம் என்று கருதப்படும் கஞ்சமலையைச் சித்தர் கோயில் என்று குறிக்கின்றனர். இங்கிருக்கும் கோயிலின் சிவனைக் 'சித்தேஸ்வரன்' என அழைக்கின்றனர். கடல் நீரோடு சேர்ந்த மழைத்துளியும், கடல் நீராதல்போல சித்தனின் அருள்பெற்ற ஆன்மாவும் சித்தன் என்ற நிலையை அடையும். சக்தியை வணங்குபவர் சாக்தர் எனவும், புத்தரை வணங்குபவர் பௌத்தர் எனவும், இயேசுகிருத்துவை வணங்குபவர்

---

16. பாடல் 21 நிஜானந்த போதம்.
17 பக். 907 மதுரைத்தமிழ்ச்சங்க அகராதி - முதல் பாகம் - பதிப்பு இ. மா. கோபாலகிருஷ்ணகோன்.
18. பாடல் 423 1 திருமுறை - சம்பந்தர்.

கிருத்துவர் எனவும், முகமது நபிகளை வணங்குபவர் முகமதியர் எனவும், சிவனை வணங்குபவர் சைவர் எனவும், விஷ்ணுவை வணங்குபவர் வைஷ்ணவர் எனவும் வழங்கப்படுதல் போல சித்தனை வணங்குபவர் சித்தர் என்றே அழைக்கப்பட்டிருத்தல் கூடும் எனலாம். சிவனை வழிபடுபவர் அனைவரும் சித்தர் எனக்குறிக்கப்படுவதில்லையே என்ற ஐயம் தோன்றும். இதற்கு இரண்டு அமைதிகளைக் கூறலாம். நான்கு கால்களை உடைய அனைத்திற்கும் நாற்காலி என்று வழங்காது ஒருகுறிப்பிட்ட பொருளையே வழங்குவது போல, சிவனை வணங்குபவர் பலரிருக்க அவருள் ஒருசாராருக்கே சித்தர் என வழங்கப்படுகிறது. இது ஒரு அமைதி. மற்றொன்று, சமயம் என்ற எல்லைக்குள் நின்று சிவனைப் பாடிய பக்தர்கள் சைவர் எனப்பட்டனர்; சிவனைச் சித்தனாகக் கொண்டு சமயச் சார்பற்ற நிலையில் நின்று பாடியயோகியர் சித்தர்கள் எனப்பட்டனர்.

ஐந்தாவதாக ஒரு விளக்கம்: சித்தி என்னும் சொல்லுக்குப் பேறு (நல்வாய்ப்பு) என்ற பொருளும் உண்டு எனத் தெரிகின்றது.[19] உலகம் என்பது உயர்ந்தவரையே குறிப்பது போல, பேறு என்பது இறைஇணைவுப் பண்பாகிய விழுமிய வாய்ப்பினையே குறிக்கும் எனலாம். எனவே இப் பேற்றை யடைந்தவன் சித்தன் எனக் கூறலாம்.

இறுதியாகச் சித்தர்கள் பாடல்கள் வாயிலாக இச் சொல்லை ஆராய்வோம்.

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே.[20]

என்பது திருமந்திரம். சாலோகம், சாமிபம், சாரூபம், சாயுச்சியம் இந் நான்கையும் நான்குவகை முக்திகள் என்பர். இவற்றில் முதல் மூன்றும் பதமுத்தி எனப்படும். சித்தியாரின் 269ஆம் செய்யுளில்,

'முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபத மென்பர்'

---

19. பத்தியினுற் சிலந்தியுந்தன் வாயின் நூலால் புதுப்பந்தர் அது இழைத்துச் சருகால் மேய்ந்த சித்தியினல் அரசாண்டு சிறப்புச் செய்ய - 6 திருப்பாச்சூர் - 6 திருமுறை - அப்பர்.
20. பாடல் 2485 திருமந்திரம்.

எனவரும் அடிகளுக்கு மறைஞானசம்பந்தர் அவர்கள், 'முதற் கண்கூறிய சன்மார்க்கமாகிய ஞானபாதத்தின் வழிநின்று அநுட்டிக்கும் அதனுல் அடையும் சாயுச்சியமே பரமமான முத்தி என்றும் மற்ற மூன்றினுக்கும் பதமுத்தி என்றும் சொல்லுவார்கள், ஆகமம் கற்ற வல்லோர்' என உரையெழுதியுள்ளார்.

இது என்னும் சுட்டுக்குப் புலனுகக் கூடிய மாயாகாரியப் பொருள் பாசம். அதற்கு மூலம் ஆணவ வல்லிருள் என உணர்ந்து, அவற்றைத் துறந்து, ஆணவத்தால் விளையும் மதமற்று, யான் எனதென்னும் செருக்கற்று அவை அனைத்தையும் அருள்நினைவால் மாற்றி அப்பேரறிவுப் பெருங்கருணைப் பொருளோடு இணையும் நிலை பெற்றவர் சிவசித்தராவர் என்பது இப் பாடலின் பொருள். எனவே திருமூலரின் கருத்துப்படி சாயுச்சிய நிலையுற்றவர் சித்தர் என்பது தெளிவு.

" எழும்பாமல் வாசனையைக் கொன்ருேன் ஞானி
ஏகாமல் வாசனையை யடித்தோன் சித்தன். " 21

இது சட்டை முனி தருகின்ற விளக்கம். வாசனை என்பது கர்ம வினையாகும்: இதன் இயல்பாவது பிறவிதோறும் தொடர்வது. இதனை எழும்பாமல் தடுப்பவன் ஞானி எனவும், ஏகாமலேயே தடுப் பவன் சித்தன் எனவும் குறிக்கின்ருர். எழும்பாமல், ஏகாமல் எனும் சொற்கள் இடையே உள்ள நுட்பமான வேறுபாடு கூர்ந்து ஆராய்ந்து உணரத்தக்கது.

'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்' [22]

இது அகத்தியர் தரும் விளக்கம். சமுதாயத்தில் பரவலாகக் குடிகொண்டிருக்கும் சாத்திரம், சம்பிரதாயம், சடங்கு முதலியன வற்றைச் சாடும் உள்ளத்திட்பம் பெற்றவனே சித்தன் என இவ் வரிகளுக்குப் பொருள் கொள்ளலாம்.

கொங்கணர்,[23] கருவூரார்,[24] சட்டை முனி,[25] இராமதேவர்,[26] முதலியோர் வாலையைப் பூசிப்பவன் சித்தன் என விளக்கம்

21. பாடல் 56 சட்டமுனி.
22. பாடல் 5 அகஸ்தியர் ஞானம்.
23. பாடல் 74 கொங்கணர் பாடல்.
24. பாடல் 18 கருவூரார் பாடல்.
25. பாடல் 1 சட்டைமுனி.
26. பாடல் 3 இராமதேவர் பாடல்.

தருகின்றனர். வாலை என்னும் சொல் இளம் பெண் என்னும் பொருளுடையது. சித்தர்கள் தமக்கே உரிய குழுஉக்குறி மொழியில் விழிப்புற்ற குண்டலினியை வாலையெனக் குறிப்பர். யோக மார்க்கத்தின் மூலம் இதனை மேலே யெழுப்பி அதன் பயனை நுகர்பவர் சித்தர் என்பது இதன் உட்பொருளாக இருக்கலாம்.

முடிபு

மேற்காட்டின இத்துணை விளக்கத்தினுல் பெறலாகும் கருத்து ஒன்று அது இறைமையடைந்தவன் சித்தன் என்பது. அன்னோன் செயல் சித்தி என்பது. இதுவே எனது சொல்லின் முடிபு.

இனிச் சித்தர்கள் பற்றிச் சிறிது காண்போம்.

முப்பிரிவு

இறையுணர்வோடு வாழ்வோரைப் பக்தர், சித்தர், ஞானி என்னும் மூன்று பிரிவினுள் அடக்கலாம். பக்தர் என்பவர் சமய உணர்வோடு வாழ்பவர். குறிப்பிட்ட தெய்வ வணக்கம் உடையவர். உருவ வழிபாடு உடையவர். கோயில்தோறும் சென்று உள்ளம் உருக இறைவனைப் பாடிப் பணிபவர். சமயச் சின்னங்களை அணிபவர்.

ஆனல் சித்தர்களோ சமயம் என்ற எல்லையைக் கடந்தவர். அருவாக உலகெங்கும் விரிந்துள்ள உயிரில் இறைமையைக் காண்பவர். 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்' என்னும் கோட்பாட்டினர். ஆண்மீகவாதிகளான இவர்களுக்குச் சமயச் சின்னம் புறம்பானவை. எனவே பக்தர் சித்தராதல் உண்டு சித்தர் பக்தராதல் இல்லை. அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள் கடவுளைக் காண முயல்பவர்களைப் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்களை சித்தர்கள் என்றும் குறிக்கின்றூர்.[27]

ஞானம் என்பது பேரறிவு, பேரறிவுடையவனே ஞானி. பக்தர் ஞானி ஆதலும் சித்தர் ஞானி ஆதலும் கூடும்.

சைவ சமயத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு வழிகள் பேசப்படுகின்றன. அவை நான்கும் நான்கு நிலைகள் என்பது பொதுவான கருத்து. தாயுமானுரும், மெய்கண்டாரும்

27. பக். 643 தொகுதி 4 கலைக்களஞ்சியம் - 1956.

இந் நான்கும் நான்குபடிகள் எனக் குறிக்கின்றனர். ஆனால் இந்த நான்கு நிலைகளுக்கும் சம்பந்தர் முதலிய நால்வரையும் உதாரண மாகக் காட்டும் மரபும் இருந்து வருகின்றது. சித்தியாரின் 269 ஆம் செய்யுள்[28] உரையில் மறைஞானசம்பந்த தேசிகர் 'இவை ஒன்றுக் கொன்று தாழ்ந்த பலத்தையுடையன' எனக் குறிக்கின்றார். இக் கூற்றை அம்மரபோடு ஒப்பவைத்து நோக்கினால் சைவத்தின் தலையாய நால்வரும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு உடைய வராய்க் கொள்ள வேண்டியுள்ளது.[29] எனவே இக்கருத்து ஏற்கத் தக்கதாக இல்லை. சரியை வாயிலாக ஞானம், கிரியை வாயிலாக ஞானம், யோகம் வாயிலாக ஞானம் எனக் கொள்வது பொருத்த மாகும். எனவே இந்நான்கில் சரியையும் கிரியையும் பக்தருக்கும் யோகம் ஒன்று சித்தருக்கும், ஞானம் இருவருக்கும் பொருந்தும் எனக் கொள்வது ஏற்புடையதாகும்.

பதினெண் சித்தர்

இனி, சித்தர்கள் பண்டுதொட்டே தமிழகத்தில் இருந்து வந்துள்ளனர் என முன்னர்க் கண்டோம். இவர்கள் பொதுவாகப் பதினெட்டு பேர் எனக்கூறும் மரபு உள்ளது. இம்மரபு நெடுங் காலமாக இருந்து வருகின்றது எனலாம்.

> *'சிவ சிவா பதினெண்பேர் பாடற்கெல்லாம்*
> *திறவுகோல் வால்மீகர் பதினொருகும்*[30]

எனவும்,

---

28. சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கமென்னும் சங்கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சியம் என்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபத மென்பர்.

29. சரியை - தாசமார்க்கம் - நாவுக்கரசர் - சாலோகம்.
கிரியை - புத்திரமார்க்கம் - சம்பந்தர் - சமீபம்.
யோகம் - சகமார்க்கம் - சுந்தரர் - சாரூபம்.
ஞானம் - சன்மார்க்கம் - மாணிக்கவாசகர் - சாயுச்சியம்.

30. பாடல் 11 வால்மீகர்.

‘ சித்தர் பதினெண்மர் செய்கையிற் றேன்றுத
அத்தனரு ளும்புசுண்டர் யான் ’ 31

எனவும்,

‘ திட்டதாய்ப் பாணம்வைத்துத் தேவிபூசை
சீர்பெற்றுர் பதினெட்டுச் சித்தர்தாமே ’ 32

எனவும்,

‘ ஆச்சப்பா இந்தமுறை பதினெண்பேரும்
அயன்மாலும் அரனேடுங் தேவரெல்லாம் ’
மூச்சப்பா தெய்வமொன்றே யறியச் சொன்னார் 33a

எனவும்,

வரும் குறிப்புகளால் அம்மரபை அறியலாம். பதினெட்டு என்னும் மரபு தெரிகின்றதே தவிர அவர்கள் யார் எனத் தெளிவாகத் தெரிய வில்லை. மேலும் அவர்கள் பற்றிய கருத்து வேறுபாடும் உள்ளது. இன்று கிடைக்கும் சித்தர் பாடல் தொகுப்புகளில் சுமார் ஐம்பதுக்கும் 3b மேற்பட்ட பெயர்கள் காணப்படுகின்றன.

‘ மேவுமென்கை லாயபரம் பரையா மாரை
வெகுகோடி ரிடிகளுக்கு முபதே சித்தார்
மேவுமென்று சித்தரிலே யனேசங் கோடி ’ 34

எனவரும் சட்டைமுனியின் பாடல் வாயிலாகச் சித்தர்கள் எண்ணிக்கையற்றவர்கள் பலர் இருந்துள்ளனர் என்பது புலனு கின்றது. இன்றும் கஞ்சமலை, ஏற்காடு, கொல்லிமலை, மருதமலை, திருவண்ணுமலை, திருப்பதி முதலிய சில மலைகளில் பலர் வாழ்ந்து வருகின்றனர். இங்ஙனம் இருக்கப் பதினெட்டு என்று வரையறை செய்ததன் காரணம் தெளிவாகப் புலனுகவில்லை. மருத்துவம், வான இயல், மாந்திரீகம், ரசவாதம் முதலிய துறைகளில் பல நூல்களை எழுதினேர் பெயர்களே நமக்குக் கிடைக்கின்றன. ஆதலின் கிடைக்கின்ற குறிப்புகொண்டு இத்துணைப் பேர்கள்தாம் வாழ்ந்தார்கள் என்பது பொருந்தாது.

---

31. பாடல் 6 காகபுசுண்டர் குறள்
32. பாடல் 23 கருவூரார் பாடல்.
33. (a). பாடல் 2 அகத்தியர் ஞானம் 33 (b) பின் இணைப்பில் காண்க).
34. பாடல் 84 சட்டைமுனி பின்ஞானம் கரு.

இனி, இங்ஙனம் மிகப்பலர் மறைந்துவாழ, பலர் பல நூல்கள் எழுதியிருக்க, அவர்கள் அனைவரையும் குறிக்காது பதினெட்டு பேர் எனச் சிலரையே குறித்ததன் நோக்கம், ஒருவேளை சித்தர் கூட்டம் எனக்கணிக்கப்பட்ட காலத்தில் பதினெட்டு பேர் இருந்திருக்கலாம். அதுவே மரபாக வந்திருக்கலாம். அல்லது சித்தர் கூட்டத்தில் சிறப்போடு விளங்கியவர்கள் பதினெட்டு பேராக இருக்கலாம். சங்க நூல்களில் பல மன்னர்களின் வள்ளல்தன்மை பலவாறுகப் போற்றப்படினும் கடையேழு வள்ளல்கள் எனச் சிலரையே குறிப்பிடுவதுபோல, இச் சித்தர் கூட்டத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். இராமலிங்க அடிகளார் அக்னிகலை 64ம் சைவ சமயத்தின் நாயன்மார்களாகவும், சூரிய கலை 12ம் ஆழ்வார்களாகவும் உருவகிக்கப் பட்டன எனக் கருதுகின்றார்.[35] எனவே 18 என்பதும் ஏதேனும் தத்துவார்த்தமாக இருக்குமோ எனவும் எண்ண வேண்டியுள்ளது.

இனி, பதினெட்டு பேர் யார் என்பதிலே அறிஞர் மத்தியில் இருக்கும் கருத்துக்களில் சிலவற்றைக் காண்போம்.

கும்பமுனி	தேரையர்	சிவவாக்கியர்
நந்திமுனி	யூகிமுனி	சண்டிகேசர்
கோரக்கர்	மச்சமுனி	ரோமரிஷி
புலிப்பாணி	புண்ணுக்கீசர்	சட்டநாதர்
புசுண்டரிஷி	இடைக்காடர்	காலாங்கி
திருமூலர்	பூனைக்கண்ணர்	போகர்[36].

அகத்தியர்	ஆனந்தர்	கமலமுனி
போகர்	கொங்கணர்	கோரக்கர்
நந்தீசர்	பிரம்மமுனி	சட்டைமுனி
புண்ணுக்கீசர்	ரோமமுனி	மச்சமுனி
கருவூரார்	வாசமுனி	இடைக்காடர்
சுந்தவானந்தர்	அமலமுனி	பிரமமுனி[37].

35. பக். 42 திருவருட்பா - உபதேசப் பகுதி - பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு.
36. பக். 2 - 3 கருவூரார் மாந்திரீக அட்டமா *சித்து*.
37. பாடல் 1 நிஜானந்த போதம்.

நந்தி	இடைக்காடர்	எழுகண்ணர்
அகத்தியர்	போகர்	அகப்பேய்
மூலர்	புலிக்கையீசர்	பாம்பாட்டி
புண்ணாக்கீசர்	கருவூரார்	தேரையர்
புலத்தியர்	கொங்கணன்	குதம்பை
பூனைக்கண்ணர்	காலாங்கி	சட்டைநாதர்[38].

அகத்தியர்	நந்தி	கமலமுனி
போகர்	கூன்கணர்	இடைக்காடர்
கோரக்கர்	கொங்கணர்	புண்ணாக்கீசர்
கைலாசநாதர்	மச்சமுனி	சுந்தரானந்தர்
சட்டைமுனி	வாசமுனி	ரோமரிஷி
திருமூலர்	கூர்மமுனி	பிரமமுனி[39].

நந்தி	இடைக்காடர்	காலாங்கி
திருமூலர்	போகர்	அகப்பேய்
அகத்தியர்	புலிக்கையீசர்	பாம்பாட்டி
புண்ணாக்கீசர்	கொங்கணர்	தேரையர்
புலத்தியர்	அழுகணி	குதம்பை
பூனைக்கண்ணர்	கருவூரார்	சட்டைநாதர்[40]

அகத்தியர்	கொங்கணர்	மச்சமுனி
திருமூலர்	கமலமுனி	வராஹமுனி
போகர்	இடைக்காடர்	கூர்மமுனி
கோரக்கர்	சுந்தரானந்தர்	புண்ணாக்கீசர்
சட்டைமுனி	ரோமமுனி	கைலாசநாதர்
நந்தி	பிரம்மமுனி	கூன்கண்ணர்[41].

---

38. பக். 3 சித்தர் பாடல்கள் - அரு. இராமநாதன் பதிப்பு.
39. பக். 645 கலைக்களஞ்சியம் – தொகுதி 4.
பக். 638 அபிதான சிந்தாமணி,
40. P 40 Siddha's Science of longeirtz and Kalpa Medicine of India - Dr A. Shanmugavelan.
41. P. 72 The poetry and Philosophy of Siddhas - A V. Subramanian.

நந்தி	பதஞ்சலி	கொங்கணர்
சனகர்	அகத்தியர்	கருவூரார்
சனுதனர்	புலத்தியர்	தன்வந்திரி
சனந்தனர்	புசுண்டர்	சட்டைமுனி
சனற்குமாரர்	காலாங்கி	தேரையர்
திருமூலர்	போகர்	யூகிமுனி [42].

அகத்தியர்	போகர்	தன்வந்திரி
புலத்தியர்	கொங்கணர்	புண்ணுக்கீசர்
புசுண்டர்	சட்டைமுனி	கோரக்கர்
நந்தி	ரோமமுனி	யூகிமுனி
திருமூலர்	மச்சமுனி	தேரையர்
காலாங்கிநாதர்	கருவூரார்	இடைக்காடர் [43].

இங்ஙனம் பட்டியல் நீண்டுகொண்டே போகும் என்பதால் இதை இவ்வளவில் நிறுத்துகின்றேன். தேவஜாதியினர் பதினெட்டு பேரில் ஒருவர் எனச் சித்தர்கள் கருதப்படுகின்றனர். [44]

தெற்கில் பதினெண்சித்தர்கள் எனக் குறிப்பது போலவே வடக்கே நவநாத சித்தர்கள் எனக் குறிக்கும் மரபு உள்ளது. பதினெண்மர் யாவர் என்பதிலே கருத்து வேறுபாடு இருப்பது போல் நவநாத சித்தர் யாவர் என்பதிலும் கருத்து வேறுபாடு இருந்து வருகின்றது. மூன்றினை எடுத்துக்காட்டாகத் தருகின்றேன்.

சத்துவநாதர்	மச்சேந்திரநாதர்
சாலோகநாதர்	கடயேந்திரநாதர்
ஆதிநாதர்	கோரக்கநாதர்
அருளிநாதர்	குக்குடநாதர் [45].
மதங்கநாதர்	

---

42. P. 265 Tamil Literature - M. S. Purnalingam Pillai.
43. பக். 338 இலக்கிய வரலாறு – கா. சு. பிள்ளை.
பக். 157 தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்.
44. P. 212 The Tamil Dictionary of proper names - Eekkadu Ratnavelu Mudaliar.
45. பக். 940 அபிதான சிந்தாமணி.

சத்யநாதர்	மதங்கநாதர்
சுகோதநாதர்	மச்சேந்திரநாதர்
ஆதிநாதர்	கடேந்திரநாதர்
அனுதிநாதர்	கோரககநாதர் [46].
வகுளிநாதர்	

திருமூலர்	சனற்குமாரர்
சண்டிகேசர்	வியாக்கிரபாதர்
சனகர்	பதஞ்சலி
சனந்தனர்	சட்டைமுனி [47].
சனுதனர்	

இவர்களைப் பற்றிய விளக்கங்களை வேறு நூல்களில் காண லாம்.[48] இறைவனை ஆனந்தமயமாகக் கொள்பவர்கள் தம்பெயரின் பின்னர் ஆனந்தர் எனச் சேர்த்துக் கொள்வர். சுந்தரநாதர், சுருளிநாதர் என்பன காண்க. இவர்கள் ஆதிநாதர் என்று பெயர் கொண்ட சிவனைப் பின்பற்றியவர்கள் ஆதலால் இவ்வகையில் பெயர் பெற்றனர் என்ற கருத்தும் நிலவுகின்றது.

சித்தர்கள் காலம்

சித்தர்களின் காலம் பற்றியும் அறிஞர் மத்தியில் கருத்து வேறுபாடு மிகுதியாக உள்ளது. திரு. மு. இராதாகிருஷ்ண பிள்ளை யவர்கள் கி.பி. 14-ஆம் நூற்றுண்டு என்கிறார்.[49] திரு. தெ. பொ. மீ. அவர்கள் கி.பி. 15-ஆம் நூற்றுண்டு என்கிருர்.[50] திரு. நீலகண்ட சாஸ்திரி,[51] W. H. Hunter,[52] Dr. Caldwell[53] முதலியோர் கி.பி. 16, 17 நூற்றுண்டுகள் என்கின்றனர்.

---

46. P. 263 Tamil Literature - M. S. Purnalingam Pillai.
47. பாடல் 12 சட்டைமுனி பின்ஞானம் நூறு
48. P. 136-137. The Religious life of India - Gorakhnats and the Kanphata yogis - G. W. Briggs.
    P. 7 Siddha - Siddhanta - Paddhati and other works of the Nadha yogis - Smt. Kalyani Mallik.
49. பக். 56 முன்னும் பின்னும்.
50. பக். 4 Tamil Plutarch - Foot note.
51. P. 119 Culture and Hist. of Tamils.
52. P. 205 Tamil Studies - M. Srinivasa Ayengar (Quotes).

சித்தர்களைப் பொறுத்தவரையில் காலத்தை வரையறை செய்ய முடியாது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. அவர்கள் காலத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். சித்தர் இலக்கியங்களை ஊன்றிப் படித்தவர்களும், அவர்களோடு பழகும் பேறு பெற்றவர்களும் இதனை ஏற்றுக் கொள்வர். எனவே இது பற்றி ஆராயாது விட்டுச் செல்கிறேன்.

இனி, சித்தர்கள் தமிழுக்கும், சமுதாயத்திற்கும் செய்துள்ள தொண்டினைச் சிறிது காண்போம்.

சமுதாயத்துடன் சேர்ந்தும், சேராமலும் தாமரை இலை நீர்போல வாழ்ந்த இவர்கள் யோகம் பயின்று விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மையியல்புகளையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து மருத்துவ நூல், மந்திர நூல், இரசவாத நூல், யோக நூல் முதலிய பலவகை நூல்களை எழுதினர் என முன்னர்க் கண்டோம். இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க தொண்டு ஆற்றியவர்கள் இவர்கள் எனலாம்.

தமிழ்

தமிழ்ப்புலவர்கள் அனைவரும் (ஏறக்குறைய) தம் இலக்கியங்களில் வாய்ப்பு நேரும் போதெல்லாம் தமிழைப் போற்றினர் என அறிகிறோம். இதேபோல் சித்தர்கள் பற்றற்றவர்களாக இருந்தாலும் மொழி உணர்வு நீங்காமல் வாழ்ந்தனர் என்பதை அவர்தம் நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

ஞானக்கும்மியின் ஆசிரியரான வாலைசாமி என்பவர் தமிழில் பாடும் வாய்ப்பை நல்க வேண்டும் என இறைஞ்சுகிறார்.

' அம்பிகை வாலை பதம்போற்றி—அருள்
ஆனந்தக் கும்மித் தமிழ்பாடத்
தும்பிமுகனுக் கிளையவ னுஞ்சிவ,
சுப்பிர மணியனுங் காப்பாமே ' [54]

என்பது பாடல். இவ்வாறே இரண்டு பாடல்களில் [55] தமிழைப் போற்றுகின்றார்.

---

53. P. 305 Dravidian comparative Grammar - Dr. Caldwell.
54. பாடல் 2 ஞானக்கும்மி.
55. பாடல் 6, 184 ஞானக்கும்மி.

'மதுரத்தமி ழோதும் அகத் தியனே போற்றி' [56]
'முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுககடி? குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி? [57]
'தில்லையில் முல்லையி லெல்லையு ளாடிய
வல்லவள் வாலைப் பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் தமிழ்பா டவரும்
தொல்லை வினை போக்கும் வாலைப் பெண்ணே'[58].

'பூமியிற் சவுந்த ரப்பெண் புணர்ந்திடு நாகைநாதர்
நாமமெந் நாளும் நாவி னவின்றுசெந் தமிழாற் பாடிக்
காமமு மாசா பாசக் கன்மமு மகற்றிமூல
ஓமெனு மெழுத்தைந் தாலே யுனையறிந் துணர்வாய் நெஞ்சே'[59]

முதலியன சில எடுத்துக்காட்டுகளாகும். சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த வள்ளலாரை மேற்கோளாகப் பயன்படுத்திக் கொள்கிறேன். இராமலிங்கர் தமிழால் பாடுபவர்கள் செய்த பெரும் குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் இயல்புடையவன் என இறைவனைப் பாடுகின்றுர்.

'பற்றும் செந்தமிழால் பாடுகின்றேர் செய்தபெருங்
குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே' [60]

என்பது பாடல்.

இலக்கிய நயம்

இனி, இவர்கள் பாடல்கள்மூலம் பெறலாகும் நயங்களைச் சிறிது காண்போம்.

உவமை

கருத்து விளக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் உவமை இலக்கியச்சுவைக்கு மெருகூட்டுவது ஆகும். சித்தர்கள் பாடல்களில் கணக்கற்ற உவமைகள் காணப்படுகின்றன. இரண்டினை இங்குக் காண்போம்.

---

56. பாடல் 1 திருவள்ளுவர் ஞானம்.
57. பாடல் 10 குதம்பைச்சித்தர்.
58. பாடல் 8 கொங்கணர்.
59. பாடல் 96 நெஞ்சறி விளக்கும்.
60. 3 : 63 – II திருவருட்பா.

இப்படியான் இந்நிறந்தான் இவ்வண்ணத்தான் இவன் இறைவன் என எழுதிக்காட்ட ஒண்ணுதவன் இறைவன். வானுகி மண்ணுகி வளியாகி வொளியாகி ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் விளங்குபவன். இத்தன்மையைக் காக புசுண்டர் பல உவமைகளைக் கொண்டு விளக்குகிருர். 'எள் கண்ணுக்குப் புலனு கின்றது. ஆனுல் அதனுள் மறைந்திருக்கும் எண்ணெய் நமது கண்ணுக்குப் புலனுவதில்லை. விதை கண்ணுக்குத் தெரிகின்றது; அதனுள் மறைந்திருக்கும் செடியோ, மரமோ கண்ணுக்குப் புலனுவதில்லை. பூவைப் பார்க்கின்ருேம், அதனுள் மறைந்துள்ள மணத்தைப் பார்க்க முடிவதில்லை. பாலைப் பார்க்க முடிகிறது, அதனுள் சுரந்திருக்கும் நெய்யை அறிய முடிவதில்லை. மயில் முட்டையைப் பார்க்கின்ருேம். தோன்றுகின்ற பலவண்ணங்கள் மறைந்துள்ள விந்தையை அறிய முடியவில்லை. எனவே நமது பொறிபுலன்களுக்கெட்டாத காரணத்தால் ஒன்றை இல்லை என மறுத்துவிட முடியாது என்பது உறுதி. தோன்றுகின்ற ஸ்தூலப் பொருள்களில் சூக்குமமாக அத்தன்மைகள் மறைந்துள்ளன. அவ்வண்ணமே தோன்றும் தோன்றும் பொருளில் இறை சூக்குமமாய் மறைந்துள்ளான், என்பது காகபுசுண்டர் கருத்து,

'வேணுமென்று யெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம் போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம்போலும்
கன்ருவின் பாலிலுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வண்ணம்போலும்
தூலமதிற் சூட்சுமந்தான் துலங்கி நிற்கும்'

இது பாடல்.

'தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ,
தேனுக்குள் இன்பம் கறந்தாற்போல
ஊனுக்குள் ஈசன்'[62]

ஒளிந்திருப்பான், எனத் திருமூலர் கூறும் அடிகள் இங்கு ஒப்பு நோக்குவதற்குரியது.

---

61. பாடல் 25 காகபுசுண்டர் உபநிடதம்.
62. பாடல் 3069 – Extra Stanzas - T. M Kumaraguruparan Pillai - 1906.

பாம்பாட்டிச் சித்தரின் பாடலில் ஒரு உவமை: நாற்ற மெடுக்கும் மீனைப் பலமுறை கழுவினாலும் அதன் நாற்றம் போவதில்லை. நல்ல தூய்மையான நீரில் கழுவினாலும் போவதில்லை. தினமும் பலமுறை கழுவினாலும் போவதில்லை. அதைப்போலவே பிழையே செய்யும் இயல்புடையவர்கள் செய்த பிழையைக் கழுவுவதற்குக் கோயில் கோயிலாகச் செல்கின்றார்கள். குளங்களில் மூழ்குகின்றார்கள். எத்துணை கோயில் சென்றாலும், எத்துணை குளங்களில் மூழ்கினாலும் அவர்கள் செய்யும் பிழையின் பயன் நீங்காது. மீனின் நாற்றம் தொடர்ந்திருப்பதுபோல் பிழையின் பலனும் தொடர்ந்திருக்கும். இது கருத்து. இனி, பாடல்:

'நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினும் அதன்நாற்றம் போமோ?
கூறும்உடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்டமலம் நீங்காதென்று ஆடுபாம்பே' [63]

பழமொழி

கருத்து விளக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் பழமொழிகள் இலக்கியச்சுவை கூட்டுவன. இலக்கியங்களில் பழமொழியைப் புகுத்தும் மரபு இடைக்காலத்தில்தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும். சங்க நூற்களிலோ, காவியங்களிலோ இவ்வாட்சியைக் காணமுடியவில்லை எனக் கருதுகின்றேன்.

கணபதிதாசரின் பாடலில் காணலாகும் பழமொழி ஒன்று:— மனிதனுக்கு இறையுணர்வு பெரும்பாலும் இயல்பாய் வருவதில்லை. வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும்போது அந்தத் துன்பங்களைத் தன்னால் தாங்கிக் கொள்ளமுடியாத நிலையில் இறைவனை நினைப்பது தான் இயல்பாக உள்ளது என நினைக்கின்றேன். உலகியலை நம்பி வாழும் வாழ்க்கை நிலையானதன்று; உலகியலில் அவன்பெறும் இன்பமும் அமைதியும் எல்லையயுடையன. இறைவன்பால் அடைக்கலம் புகுதலால் ஏற்படும் இன்பத்திற்கும் அமைதிக்கும் எல்லை இல்லை. இக்கருத்தைக் குறிக்கும் வகையில் ஆங்கிலப் பெருங்கவிஞராகிய பிரான்சிஸ் தாம்ஸன் (Francis Thompson) எழுதிய 'The Hound of Heavan' என்னும் பாடலைப் பற்றிக் குறிப்பது பொருந்தும். இறைவனை மறப்பதற்காக உலகியலில் ஒவ்வோர் பிரிவிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மனிதன் எங்குச் சென்றாலும் நிரந்தர அமைதியையும் ஆதரவையும் பெற

63. பாடல் 65 பாம்பாட்டிச்சித்தர்.

முடியாமல் துன்புறுகின்றான். எங்கும் — எதிலும் இறையின் கலப்பை உணர்கின்றான். இறையிடமிருந்து தப்புவது அரிது என்பதை உணர்கின்றான்; அடைக்கலமாகிறான். இதுவே அவ் ஆங்கிலப் புலவனின் பாடற்கருத்து.

இவ்வரிய உண்மையை மிக எளிய, பழமொழியால் விளக்கு கின்றார் கணபதி தாசர்.

> 'இலவுகாத் திருந்த பட்சி ஏங்கியே பறக்குமாப்போல்
> உலகமே பொருளாய் நம்பிஒருவன் அற்றாய்நீயே' 64

என்பது பாடல். இலவங்காய் கனியாமல் காய்ந்து வெடித்துப் பறக்கும். இவ்வியல்பை அறியாத கிளி அக்காயைக் கண்டதும் அதன் தோற்றம் கண்டு விரும்பி அக்காய் கனியானபின் உண்ணலாம் என அதன் பக்கத்தில் தங்கும் அப்பறவை அறியா மலேயே அக்காய் வெடித்துவிடும். உலகியல் இதுபோன்றதே. உலக வாழ்க்கையை — அதில் பெறும் இன்பம் முதலியவற்றை நிலையெனக் கருதி அதனை நுகர விரும்புதல் பறவையின் வீண் முயற்சியைப் போன்றதாகும். நிலையான இன்பம் பெறவேண்டு மாயின் நிலையான பொருளைப்பற்ற வேண்டும் என்ற அரிய கருத்தை எளிய பழமொழியில் விளக்கினார்.

இலக்கிய மேற்கோள்

முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுவது என்பது ஒரு சிறந்த மரபாகத் தமிழைப் பொறுத்தவரையில் வழங்கி வருகின்றது. கொங்கணரின் பாடல் ஒன்று அவ்வையாரின் பாடலைக் குறிப்பதாக உள்ளது.

> 'பண்டுமுளைப்ப தரிசியே யானாலும்
> விண்டுமி போனால் விளையா தென்றும்
> கண்டு கொண்டு முன்னே அவ்வை சொன்னாளது
> உண்டோ வில்லையோ வாலைப் பெண்ணே' 65

---

64. பாடல் 44 கணபதிதாசர்.
65. பாடல் 71 கொங்கணர். (65b) அகம் 70; கலி 38; புறம் 378; (65 c) சிலம்பு: ஊர்காண்: 46 – 49.

இது பாடல்.

நெல் என்பது உமிசேர்ந்த அரிசியாகும். இந்நிலையில் விதைத்தால்தான் விளையும். நெல்லினுள் இருக்கும் அரிசிதான் முளைக்கிறது, உமியன்று என்பது உண்மைதான். எனினும் அரிசியைத் தனியாக விதைத்தால் விளையாது என்பதை அறிதல் வேண்டும். உமியை முதலாகக் கொண்டு அரிசி முளைக்கின்றது. மாயையை முதலாகக் கொண்டே தத்துவங்கள் தோன்றுகின்றன என்னும் இவ்வரிய கருத்தை விளக்குவதற்காக அவர் அவ்வையின் பாடல் அடிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளது பாராட்டத்தக்கது.

இதிகாச மேற்கோள்

அடுத்துப் புராண இதிகாசக் கதைகளை மேற்கோள் காட்டிக் கருத்தை விளக்கும் முறை தமிழுக்குப் புதியதன்று, சங்க இலக்கியங்களிலேயே காணப்படுகின்றது.[65a] பின்வந்த இலக்கியங் களிலும் காணப்படுகின்றது.[65b] சித்தர்களும் இதற்கு விதி விலக்காக அமையவில்லை.

ஆதாரமான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்டம் ஏதுக்கடி?—குதம்பாய்
வாதாட்டம் ஏதுக்கடி? [66]

என்பது குதம்பைச் சித்தர் பாடல். இறைவனது (சிவன்) அடியைக் காணத் திருமால் பன்றி வடிவுடன் கீழே செல்லப் பிரமன் பறவை வடிவுடன் மேலே சென்றார்; இருவர் முயற்சியும் வீணானது என ஒரு புராணக் கதை வழங்குகின்றது. குதம்பைச்சித்தரின் பாடல் அடிமுடிதேடும் கதையைக் குறிக்கும் போக்கில் அமைந்துள்ளது.

சித்தர்கள் பாடல்களில் பெரும்பாலானவை உட்பொருள் உடையனவாய் இருப்பதைக் காணுகின்றோம். மேற்கண்ட பாடலில் அடிமுடிதேடும் கருத்துள்ளது எனினும் இவ்வரியின் உட்பொருள் வேறு ஒன்றாய் இருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

அடி என்பது காலையும், முடி என்பது தலையையும் குறிக்கும். சித்தர்கள் நூலில் வேகாக்கால், சாகாத்தலை, போகாப்புனல் என அடிக்கடி குறிப்பதைக் காணலாம். இவற்றில் கால் என்பது கீழான மண் தத்துவம்; தலை என்பது மேலான விண்தத்துவம்.

---

66. பாடல் 5 குதம்பைச்சித்தர்

எனவே மண் முதல் விண் வரையுள்ள பஞ்ச பூதங்களின் இயல்பை உணர்ந்தவர்களுக்கு அப்பூதங்களினுல் ஆன அனைத்துப் பொருள் களின் இயல்பையும் அறிதல் இயல்பே. ஆதலின் அவர்கள் தர்க்கம் முதலான நூற்களைப் படித்து அவ்வப்பொருள்களின் இயல்பினை அறிதல் வேண்டும் என்பதில்லை என்பது இப்பாடலின் பொருளாகக் கொள்ளலாம்.[66b]

இத்தகைய அரிய உட்பொருளை உட்பொதித்துப் புராணக் கருத்துப்போல் பாடும் நயம் பாராட்டுவதற்குரியது.

ஏமாற்றும் எளிமை

குழுஉக்குறிச் சொற்களைப் பயன்படுத்து முறையைச் சித்தர்களே அறிமுகம் செய்தனர் எனலாம். இவ்வகைக் குழுஉக் குறி ஆட்சி இவர்தம் பாடலுக்குச் சிறப்புச் சேர்ப்பது எனலாம். சாதாரண நிலையில் உள்ளவர்க்கு எளிமையாகத் தோற்றம் அளிக்கும் சொற்களால் ஆழ்ந்த பொருளைப் பொதிந்துவைத்துப் பாடுவர் சித்தர்கள். இதனை ஏமாற்றும் எளிமை எனக் குறிக்கலாம்.

‘ மாங்காய்ப்பா லுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி?—குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி ’ 67

இது பாடல். இப்பாடலின் நேர்ப்பொருள் மலைமேல் இருப்போர்க்கு மாங்காய்ப்பாலுண்டு, ஆதலின் தேங்காய்ப்பால் தேவையன்று என்பது.

சித்தர் பாடல்களில் அம்பலம், அருள்வெளி, முச்சந்தி, மலை, சிற்சபை, கபாடம், மணிமேடை என்றெல்லாம் குறிக்கப்படுவது புருவமத்தியாகும். யோகமார்க்கத்தின் வழிநின்று குண்டலினியை மேலேற்றி, சந்திர அமுதாக்கி அதனை நாவினை மடித்துச் சுவைப்பர் யோகியர். இச்செயலை உச்சியில் பிச்சையெடுத்தல் என்பர். இவ்வமுதைத்தான் மாங்காய்ப்பால், கரவாப்பால், காயாப்பால், சோமசலம், சந்திர அமிர்தம் என்ற பெயர்களில் வழங்குவர். இவ்வமுது இருக்க வேறு எந்தப்பாலும் தேவையில்லை என்பது இப்

(66 b) பின் இணைப்பில் காண்க.

67. பாடல் 28 ,,

பாடலின் கருத்து. இவ்வாறு ஏமாற்றும் எளிமை உடைய பாடல்கள் பல சித்தர் நூல்களில் காணலாம்.

மந்திர எழுத்து

சித்தர்கள் மேற்காட்டியவாறு குழூஉக்குறி (Mystical words) களைப் பயன்படுத்தியதுபோலவே மந்திர எழுத்துக்களையும் (Mystic letters) பயன்படுத்தியுள்ளனர். இப் பகுதியைத் தொட்டுக்காட்டிச் செல்லக் கடமைப்பட்டுள்ளேன். சித்தர் மரபில் மந்திரம், தந்திரம், யந்திரம் என மூன்று உள. யந்திரம் என்பது வரைகின்ற சக்கரம். ஆனல் சக்கரமும் யந்திரமும் வேறுவேறு காரணங்களுக்குப் பயன் படுத்தப்படுவன. ஆகவே இரண்டும் நோக்கத்தால் ஒன்று அன்று. இவ்வெந்திரத்தில் எழுதப்படும் எழுத்துக்கள் மந்திரம் எனப்படும். இம்மந்திர எழுத்துக்களுக்கு உயிரூட்டும் முறைமையே தந்திரம் ஆகும். இம் மூன்றில் மந்திர எழுத்து என்பது பெரிய ஆற்றல் ஒன்றின் மிகச் சிறிய வடிவம் ஆகும். அணுவின் ஆற்றலை அனை வரும் அறிவர். இதுபோலவே வியக்கத்தக்க ஆற்றலை உடைய எழுத்துக்கள் குறிக்கப்படுகின்றன. அறிவியலில் குறியீட்டு எழுத்துக்கள் பயன்படுத்தப்படுவனபோல[67b] சித்தர் இலக்கியங்களில் மந்திர எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

'வாய்ச்சுதடா மனமடங்க 'வங்' என்றேர் சொல்'[68]

எனவும்,

'விள்ளாதே யுள்ளபடி 'சிங்' கென்றோர் சொல்' [69]

எனவும்,

'சொல்லுகின்றேன் 'சிங்'கென்று முன்னே யூன்றிச்
சோதிகண்ட பின்பதிலே மனத்தை யூன்றிச்
சொல்லுகின்றேன் 'அங்'கென்று பின்னே யூன்றிச்
சோதியிலே அக்கரங்கள் தினமும் கண்டு' [70]

எனவும், வருகின்றன. மேற்கண்ட வரிகளில் 'வங்', 'சிங்', 'அங்' முதலிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வெழுத்துக்கள்

(67 b) H_2O - Water
NH_3 - Ammonia
NaOH – Sodium Hydroxide etc.

68. பாடல் 8 கருவூரார்.
69. ,, 9 ,,
70. ,, 10 சட்டை முனி பின்ஞானம் நூறு.

பெரும்பாலான சித்தர் பாடல்களில் காணப்படுகின்றன. இம் மந்திரங்கள் மறை எனவும் வேதமெனவும் சொல்லப்படுகின்றதாத லினாலும், இன்னமும் ஆராயப்பட வேண்டிய—அறிந்து கொள்ள வேண்டிய—நிலையில் உள்ளன ஆதலினாலும் இதனை இவ்வளவோடு விட்டுச் செல்கிறேன்.

சுவை

தமிழ் இலக்கிய வரலாற்றில் மூன்று சங்கங்கள் இருந்தன எனவும், அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் பெயர் தாங்கியவை எனவும் காண்கின்றோம்.

இம் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் சொல்லாட்சியை வைத்துக் கொண்டு பட்டினத்தார் சுவையான பாடல் ஒன்று பாடியுள்ளார்.

'முதற்சங்கம் அமுதூட்டும், மொய்குழலார் ஆசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போ தது ஊதும், அம்மட்டோ இம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்' 71

என்பது பாடல்.

மனித வாழ்வில் மூன்று நிலைகள் முக்கியமானதாகக் கருதப படுவன. குழவிப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப்பருவம் என்பன. இம் மூன்று பருவங்களும் வாழ்க்கையின் திருப்பு மையங் களாகும். குழவிப்பருவம் வாலிபப்பருவத்திற்குத் திருப்புமையம்; வாலிபப்பருவம் முதுமைப்பருவத்திற்குத் திருப்புமையம்; முதுமைப் பருவம் மரணத்திற்குத் திருப்புமையம். இம் மூன்று நிலைகளிலும் சங்கம் (சங்கு) இடம் பெறுகின்றது. குழவிப்பருவத்தில் பயன்படும் சங்கு—அமுதூட்டும் (பாலூட்டும்); வாலிபப்பருவத்தின் சங்கம் மணவாழ்வின் சின்னம்; முதுமையின் சங்கம் மரணத்தின் சின்னம். எனவே முதற்சங்கம், நடுச்சங்கம், இடைச்சங்கம் என முறையே பாலூட்டும் சங்கையும், மணச்சங்கையும், மரணச்சங்கையும் குறித்தன. இச் சுவையுணர்ந்து மகிழவேண்டியதொன்று.

---

71. பாடல் 13 பொதுப்பாடல் - பட்டினத்தார்.

அடுத்துச் சிவவாக்கியர் பாடல் ஒன்று :—

'அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலேவளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓரெழுத்தை அறிந்துகூற வல்லிரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே'.[72]

இப் பாடல் கம்பரின் பாடல்களில் ஒன்றை நினைவுபடுத்தும் போக்கில் உள்ளது.[73] கம்பர் குறிக்கும் 'ஐந்து' பஞ்சபூதங்களைக் குறிப்பது. இப்பாடலில் வரும் 'ஐந்து' பஞ்சாட்சரத்தை உணர்த்தும்.

இனி இப் பாடலின் பொருளைக் காண்போம்.

அஞ்செழுத்திலே பிறந்து	—	நமசிவய என்னும் ஐந்தெழுத்தில் தோன்றி
அஞ்செழுத்திலே வளர்ந்து	—	அவ்வைந்தெழுத்தையே துணையாகக் கொண்டு வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற	—	அவ்வைந்தெழுத்தை தினமும் ஓதுகின்ற
பஞ்சபூதப் பாவிகாள்	—	ஐம்பூதங்களால் ஆனவர்களே
அஞ்செழுத்தில் ஓர் எழுத்தை	—	ஐந்தெழுத்தில் ஓர் எழுத்தாகிய சி என்பதை (சி - நாயோட்டு மந்திரம் எனத் திருமூலர் குறிப்பார்.)
அறிந்துகூற வல்லிரேல்	—	அறியும் நிலைபெறின்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே	—	புருவ மத்தியாகிய அம்பலத்தில் தோன்றியாடும் நாத விந்து கலை அஞ்சாமையைத் தோற்றுவிக்கும்.

என்பது இதன் பொருள். சொற்களை வைத்துப் பின்னப்பட்ட சுவையான பாடல் என்பதில் ஐயமில்லை.

யாப்பு

சித்தர்கள் எல்லாவகையான பாக்களிலும், பாவினத்திலும் பாடியவர்கள். அதோடு அவர்கள் பாடல்களில் பெரும்பான்மை

---

72. பாடல் 20 சிவவாக்கியர்.

73. ,, 31 காப்பு - பாலகண்டம். பகுதி I.

யாவை எந்தப் பழைய யாப்பு இலக்கணத்திலும் கூறப்படாத வகையிலும் அமைந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

வெண்பா	—	*திருவள்ளுவர் ஞானம்*[74],
நேரிசை வெண்பா	—	*பட்டினத்தார்*[75]
குறள் வெண்பா	—	*காகபுசுண்டர்*[76]
வெண் செந்துறை	—	*நிஜானந்த போதம்*[77]
அகவல்	—	*பட்டினத்தார்*[78]
அறுசீர் விருத்தம்	—	*சிவானந்த போதம்*[79]
பன்னிருசீர் விருந்தம்	—	*நிஜானந்த போதம்*[80]
கட்டளைக் கலித்துறை	—	*பட்டினத்தார்*[81]
கலித்தாழிசை	—	*அழுகணிச் சித்தர்*[82]
கலிவிருத்தம்	—	*சிவபோகசாரம்*[83]

இவைதவிர 128 அடிவிருத்தம்,[84] கலிவெண்பா,[85] கொச்சகக் கலிப்பா,[86] தரவுகொச்சகக் கலிப்பா,[87] வஞ்சித்துறை[88] முதலிய பாக்களிலும் சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் பாடியுள்ளார்.

---

74. ,, 10 திருவள்ளுவர் ஞானம்.
75. ,, 12 பட்டினத்தார்.
76. பக். 400 காகபுசுண்டர் பாடல் – *சித்தர் பாடல்கள்.*
77. பக். 551 நிஜானந்தபோதம்.
78. பக். 60 கோயில் திரு அகவல்.
79. பக். 508 *சிவானந்த போதம்*
80. பக். 549 நிஜானந்த போதம்.
81. பாடல் 37 பொது – பட்டினத்தார்.
82. பக். 238 அழுகணிச்சித்தர்.
83. பக். 536 *சிவபோகசாரம்.*
84. திருவடிப்புகழ்ச்சி.
85. விண்ணப்பக் கலிவெண்பா.
86. 16 – வது உட்பிரிவு – II-திருமுறை
87. 51 ,, – ,,
88. 8 ,, – ,,

மேற்காட்டிய பழைய யாப்பு முறையேயல்லாமல் புதிய யாப்பு முறைகளிலும் பல பாடல்கள் காணப்படுகின்றன.

பெரும்பாலான சித்தர் பாடல்கள் சிந்து என்னும் ஒருவகை யாப்பைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றன.

சிந்து என்பது கலிப்பாவின் இனத்தைச் சேர்ந்தது.[89] ஒரு எதுகை உடைய இரண்டு அடியாய் வருவது சிறுபான்மை. நான்கு அடியாகவும் வருதல் உண்டு.

ஓரடியில் மோனைத் தொடையெடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி சிந்தியல் அடி என வழங்கப்படும்.

அம் முதல் அரையடியின் ஈற்றில் பெரும்பாலும் தனிச் சொல் வரும். சிறுபான்மை இரண்டாவது அரையடியின் ஈற்றில் தனிச் சொல் வரும். மிகச் சிறுபான்மை தனிச்சொல் இன்றியும் வரும்.

சிந்து பொதுவாகக் குறளடி முதல் எல்லா அடியிலும் வரும். தனை வரையறையும் இல்லை.

மோனைத்தொடையெடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அடிகள் அதாவது தனிச் சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அடிகள் ஒத்துவருதல் சமநிலைச்சிந்து எனவும், ஒவ்வாது வருதல் வியநிலைச் சிந்து எனவும் படும்.

நஞ்சுண்ண வேண்டாவே—அகப்பேய்
நாயகன் தாள்பெறவே
நெஞ்சு மலையாதே—அகப்பேய்
நீயொன்றுஞ் சொல்லாதே'. 90

இப் பாடலில் தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அடி இரு சீர் அடியாக இரண்டடியில் உள்ளதால் இருசீர் இரட்டைச் சமநிலைச் சிந்து வகையைச் சாரும்.

'ஆடுமயி லேநட மாடுமயிலே—எங்கள்
ஆதியணி சேடனைக்கொண் டாடுமயிலே
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே—என்றும்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே'. 91

---

89. பக். 257 தொடையதிகாரம் – புலவர் குழந்தை
90. பாடல் 1 அகப்பேய்.
91. ,, 87 இடைக்காட்டுச்சித்தர்.

தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அடி முச்சீர் அடியாக இரண்டடியில் உள்ளதால் இப் பாடல் முச்சீர் இரட்டைச் சமநிலைச் சிந்து வகையாகும்.

இவ்வாறே நாற்சீர் இரட்டைச் சமநிலைச் சிந்து,[92] ஐஞ்சீர் இரட்டைச் சமநிலைச் சிந்து[93] எனவரும்.

'ஆட்டுக் கூட்டங்களை அண்டும் புலிகளை
ஓட்டியே யூதுகுழல்—கோனே
ஓட்டியே யூதுகுழல்'.[94]

இப் பாடலில் தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அடிகள் ஒவ்வாது வந்துள்ளமையால் வியனிலைச் சிந்து ஆகும்.

முதல் அடியில் நான்கு சீரும் அடுத்த அடிகள் இரண்டு சீர்களும் பெற்றுவருவதால் நாலிருசீர் இரட்டை வியனிலைச் சிந்து ஆகும். இவ்வாறே மூன்றடி நாற்சீர் இரட்டை வியனிலைச் சிந்து வரும்.[95]

கும்மி

இது வெண்பாவின் இனம் எனலாம்.[96] வெண்டளை பிழையாமல் ஓரெதுகையுடைய எழுசீர்க் கழிநெடிலடி இரண்டு வருவது. அடியின் முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை வரவேண்டும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் அல்லாது வேறு தளைவருதல் கூடாது. ஈற்றுச்சீர் பெரும்பாலும் விளங்காய்ச் சீராக வரும்; இது கும்மியின் பொது இலக்கணம்.

'கனிமொ ழிச்சியீர் வாருங்கடி கொஞ்சங்
கருவைச் சொல்லுவேன் கேளுங்கடி'.[97]

இப் பாடல் ஏழு சீரான் அமைந்து, வெண்பாத்தளையோடு, முதற் சீரிலும், ஐந்தாம் சீரிலும் மோனை பெற்று வந்துள்ளது. ஆதலின் இதனை இயற்கும்மி என்பர்.

---

92. ,, 20 பாம்பாட்டி.
93. ,, 23 ஞானரத்தினக் குறவஞ்சி.
94. ,, 101 இடைக்காட்டுச்சித்தர்.
95. பாடல் 5 அழுகணிச்சித்தர்.
96. பக். 81 யாப்பதிகாரம் – புலவர் குழந்தை.
97. பாடல் 23 கொங்கணர்,

'கும்மியடி பெண்ணே கும்மியடி—இரு
கொங்கை குலுங்கவே கும்மியடி'.[98]

இப் பாடல் கும்மியின் இலக்கணம் அமையப்பெற்று ஏழுசீர்க் கழி நெடிலடி ஒன்றே பொருள் முற்றி வந்துள்ளமையால் ஓரடிக்கும்மி யாகும்.

ஆனந்தக் கும்மி

இதையும் சிந்தின் வகை எனக் கருதலாம்.

'நீர்மேற் குமிழியிக் காயம்—இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவும் நேயம்—சற்றும்
பற்று திருந்திடப் பண்ணு முபாயம்'.[99]

கண்ணி

இரண்டடித் தாழிசையில் வருவது. இது ஓர் எதுகையுடைய அளவடி இரண்டாக வருவது.'[100]

'பாராயோ என்னை முகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே'[101]

இவ்வாறே ஏலப்பாட்டு,[102] ஏற்றப்பாட்டு,[103] வண்ணப் பாட்டு,[104] முதலிய பல புதிய யாப்பு முறைகளிலும் அமைந்துள்ள பாடல்கள் காணப்படுகின்றன.

சந்தம்

பாடல்களின் நோக்கம் கருத்தினை விளக்குவதே எனினும், பாடலுக்குச் சிறப்பு கருத்தால் மட்டும் வருவதில்லை. சொல்லாட்சி, அணி, ஓசை முதலியனவற்றையும் பொறுத்தே அமையும்.

சித்தர்களின் பாடல்கள் ஆழ்ந்த கருத்துடையதாயினும் அக் கருத்துக்களை உணர்த்த அவர்கள் கொண்ட யாப்பு மக்கள் மத்தியில்

---

98. ,, 1 நடேசர் கும்மி. அருட்பா.
99. ,, 5 கடுவெளிச்சித்தர்.
100. பக். 297 - 98 தொடையதிகாரம் - புலவர் குழந்தை.
101. பாடல் 28 பராபரக்கண்ணி.
102. பக். 611 காயக்கப்பல் — சித்தர் பாடல்கள்.
103. பக். 277 சேஷயோகி — ,,
104. பக். 117 பட்டினத்தார் - ,,

அதிக வழக்கில் உள்ளதாகும். இலக்கணம் எழுதப்படாதிருந்து யாப்பில் எளிய, இனிய பாடல்களைப் பாடியவர்கள் என்று இவர்களைப் போற்றலாம். இந்த யாப்புக்கு ஏற்றவகையில் பாடலின் சந்த நயமும் அமைந்துள்ளது.

'மாடு கன்று செல்வமும் மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளி கைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந்து உயிர் கழன்று உண்மைகண்டும் உணர்கிலீர்'.105

இது ஒருவகைச் சந்தம்.

'ஆலத்தி லேயிந்த ஞாலத்தி லேவருங்
காலத்தி லேயணு கூலத்திலே
மூலத்தி லேப்பரமன் தானிருந் துவாசி
முடுக்குருன் பிண்டம் பிடிக்கிருன்'. 106

இது ஒருவகைச் சந்தம்.

'மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர விடுகட்டி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே
மூக்காலைக் காணுமல் என்கண்ணம்மா
முழுதுந் தவிக்கிருன்டி'.107

இது ஒருவகைச் சந்தம்.

'ஆருதாரத்தெய் வங்களை நாடு
அவர்கரும் மேலான ஆதியைத் தேடு
கூருனவட்டஆ னந்தத்திற் கூடு
கோசமைந் துங்கண்டு குன்றேறி யாடு' 108

இது ஒருவகைச் சந்தம்.

'நந்தவனத்திலோ ராண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனைவேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி—மெத்த
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி' 109

இது ஒருவகைச் சந்தம்.

---

105. பாடல் 80 சிவவாக்கியர்.
106. பாடல் 36 கொங்கணர்.
107. பாடல் 15 அழுகணி.
108. பாடல் 82 இடைக்காடர்.
109. ,, 4 கடுவெளி.

இங்ஙனம் சுமார் 50க்கும் மேற்பட்ட சந்தங்களைக்கொண்ட பாடல்கள் சித்தர் பாடல்களில் காணப்படுகின்றன.

சொல்லாட்சி

யாப்பு முறையில் புதுமையைப் புகுத்தியதைப் போலவே சொல்லாட்சியிலும் புதுமை புகுத்தியவர்கள சிததர்கள் என்பதை மறுக்க முடியாது. எந்த மொழியிலும் எழுத்துமொழி, பேச்சு மொழி என இருவகை இருப்பதைப் பார்க்கிறோம். எழுததுமொழி என்பது திருந்திய முழுவடிவம் பெற்றதாகும். பேச்சுமொழி என்பது செம்மை குன்றிய வடிவமாகும். காலம், முயற்சி சுருக்கம் கருதிப் பேச்சு மொழியில் வடிவங்களைச் சுருக்குகின்றோம். (இதனை ஆங்கிலத்தில் Economy of Time and effort எனக் குறிப்பர்.) சித்தர்கள் மக்கள் வழககில் இருந்த யாப்பைப் பயன்படுத்தியது போலவே மக்கள் வழக்கில இருந்த சொற்களையும் பயன்படுததினர் என்பது பொருந்தும்.

'என்ன சொல்லப் போறேன் நான் இந்த அதிசயத்தை' 110
'பட்டமும் கயிறுபோல் பறக்க நின்ற சிவனை
பார்வையாலே பார்த்து நீபடுமுடிச்சுப் போடடா
திட்டவும் படாதடா சீவனை விடாதடா
கட்டடா நீ சிக்கெனக் களவறிந்த கள்ளனை' 111
'ஆரையா உனக்கீடு சொல்லப் போறேன்' 112
'ஒருவனென்றே தெய்வத்தை வணங்கவேணும்
உத்தமனாய் பூமிதனி லிருக்க வேணும். 113
'மாமன் மகளடியோ மச்சினியே நானறியேன்' 114
'அட்டகாசம் செலுத்தும் அவத்தைச் சடலத்துடனே
பட்டபாடு அத்தனையும் பகுத்தறிவது எக்காலம்' 115
'சாவா திருந்திட பால்கற—சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற' 116

---

110. ,, 72 அருட்புலம்பல் - பட்டினத்தார்.
111. ,, 199 சிவவாக்கியர்.
112. ,, 5 உரோமரிஷி.
113. ,, 4 அகஸ்தியர்.
114. ,, 11 அழுகணி.
115. ,, 76 பத்திரகிரியார்.
116. ,, 107 இடைக்காடர்.

மேற்காட்டியன மிகச் சிலவேயாகும். பேச்சுவழக்கு மொழியை இலக்கியத்தில் புகுத்தியவர்கள் சித்தர்களே. இவர்களைப் பின்பற்றியே குறவஞ்சி, பள்ளு போன்ற இலக்கியங்கள் எழுந்தன எனலாம். இங்ஙனம் பின்வந்த இலக்கியப் படைப்பாளர்களுக்கு யாப்பு முறையிலும், சொல்லாட்சி முறையிலும் முன்னோடியாகச் சித்தர்கள் விளங்கினார்கள் என்று கூறுவது தவறாகாது.

சமுதாயத் தொண்டு

சித்தர்கள் இலக்கிய உலகிற்கு மட்டும் தொண்டு ஆற்றியுள்ளனர் அல்லர். மக்கட் சமூகத்திற்கும் பல்வேறு வழிகளில் தொண்டாற்றியுள்ளனர். முதலில் மருத்துவம் பற்றிக் காண்போம்.

மருத்துவம்

சித்தர்களது வாழ்க்கையைப் போலவே மருத்துவமும் விந்தையானது. இயற்கையில் கிடைக்கின்ற இலைகளையும் வேர்களையுமே பயன்படுத்துகின்றனர். இம் மருத்துவத்தின் குறிப்பிடத்தக்க வேறு ஒன்று, மணி மந்திர மருந்து முறையாகும்.

> *'மணிமந்திர மாதியால் வேண்டுசித்திகள் உலக*
> *மார்க்கத்தில் வைக்கவிலையோ'* [117]

எனவும்,

> *'மருந்தறியேன் மணியறியேன்*
> *மந்திரமொன் றறியேன்*
> *மதியறியேன் விதியறியேன்'* [118]

எனவும்,

> *'வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமும்*
> *தந்திரமும் மருந்துமாகி*
> *தீராத நோய் தீர்த்தருள வல்லான்தன்னை'* [119a]

எனவும்,

வரும் அடிகள் இவற்றைக் குறிப்பன. இவற்றுள் மணி என்பது காலமாகும். வான இயலில் கோள்களின் அமைப்பை ஒட்டியே முன்னர் மருத்துவம் செய்யப்பட்டது. இன்னும் சில சித்தரிடையே இம் முறை இருந்து வருகின்றது. இன்ன இன்ன பிறையில்தான் மருந்துண்ண வேண்டும் என்று உள்ளது. பரம்பரையாய்ப் பொருள்

---

117. ,, 9 பரிபூரணானந்தம் – தாயுமானவர்.

118. ,, 1 : பகுதி 6 - VI – I அருட்பா. பாலகிருஷ்ண பிள்ளை.

119 (a). பாடல் 548 VI – திருமுறை – அப்பர்.

கருதாது வாழும் உண்மைச் சித்த மருத்துவர் தம்மிடம்வரும் அத்துணைபேருக்கும் அத்துணை நாளும் மருந்து தரமாட்டார். இவ்வாறு வானியலையொட்டி கோள்களின் உச்ச, நீசத்தன்மை அவற்றின் ஆதிக்கம முதலியவற்றை ஒட்டி நோயாளியின் நோய் குணமாவதற்கான மருந்தினைத் தரும் முறையே முதலாவது மணி முறையாகும். [119b]

மந்திரம் என்பது நாம் முன்னர்கண்ட தெய்வீக சக்தி வாய்ந்த ஒலிகள். இவ்வொலிகளை உருவேற்றிப் பெற்ற ஆற்றலால் மருத்துவம் செய்யும் முறை இரண்டாவது மந்திர முறையாகும்.

நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் மருந்துமுறை மூன்ருவது முறையாகும்.

பொதுவாக வாத, பித்த, சிலேத்துமம் என்னும் மூவகைப் பொருள்களின் ஏற்றக் குறைவினுல் வருவதே நோய்.

ஐந்து பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்பனவற்றுள் நமது உடம்பில் உயிராய் இருந்து உடம்பை இயக்கிச் செயல்படுவது வளி, தீ, நீர் என்னும் முப்பொருள்களே. இவ்வைந்து பொருள்களில் தன்நிலையில் மாறுபடாதன வான்; மண் இவ்விரண்டுமாகும். அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உண்டு. வளி, தீ, நீர் இவையே வாத, பித்த, சிலேத்துமம் எனக் கூறப்படும். இவை (வளி, தீ, நீர்) உயிரிலலாப் பொருள்களிலும் இயங்கக் காரணமாக உள்ளன. ரயில், கப்பல், கார் முதலியன சில உயிரில் பொருள்களுக்கு எடுத்துக்காட்டு. இம் மூன்று பொருளும் தன்னிலையில் மிகாதிருக்கின்றவரையில் (குறையாதிருக்கும் வரையிலும்) மக்கள் உடல்நிலை சரியாகவே இருக்கும். அண்டத்திலும் முப்பொருள்களில் ஏதேனும் ஒன்று மிகினும், குறையினும் ஊறுசெய்வதைக் காணுகின்ரேம். மற்ற இரண்டும் மாறுதல் இல்லாதன. ஆதலின் இதனைக் குறிக்க ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்னும் பழமொழியும் எழுந்துள்ளது.

‘மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று’ [119c]

என வரும் குறள் மேற்கூறிய கருத்தை விளக்கும் போக்கில் அமைந்துள்ளது.

---

119 (b). பின் இணைப்பில் காண்க.

119 (c). குறள் 941.

இம் மூன்றில் வலிமையுடையது வளியேயாகும். ஆதலின்தான் சித்தர்கள் மூச்சுப் பயிற்சியைப் பெரிதும் வற்புறுத்துகின்றனர். மருத்துவத்தில் சரம்பார்த்தல் என்று ஒன்று உண்டு. சரம் பார்த்தே நோயின் நிலையைக் கணிப்பர். சரம் என்பது மூச்சு ஓட்டம். ஒரு நாழிகைக்கு (24 நிமிடம்) 360 முறை சரவோட்டம் நடைபெறும். இங்ஙனம் ஒரு நாளைக்கு 21600 முறை நடக்கும். 5 நாழிகைக்கு (2 மணிக்கு) ஒருமுறை சரம் மாறும். திருமூலர் திங்கள் முதலிய நாட்களில் எவ்வெக்கலைகளில் சரவோட்டம் நடைபெறும் எனக் குறித்துள்ளார். [119d]

இடது நாசியில் சரவோட்டம் நடக்கும்போது எந்தச் செயலைச் செய்யலாம், வலது நாசியில் நடக்கும்போது எந்தச் செயலைச் செய்யலாம் என்பதை ஞானசரம் [119e] எனற நூல் விரிவாகக் கூறுகின்றது. சிவயோகசாரம், நிஜானந்தபோதம் முதலிய நூல்களும் இப் பொருள் பற்றி விரிவாகக் கூறுகினறன. 'ஆடவன் கொண்ட பிணிக்காக ஆடவனே வந்து சரம் பார்க்கின்றவனைக் கண்டு இந் நோய் குணமாகுமா என, சரம் பார்ப்பவனுக்கு வலப்புறம் நின்று கேட்கின் குணமாகும். பெண் கொண்ட பிணிக்காக பெண்ணே வந்து சரம் பார்க்கின்றவனை இடப்புறம் நின்று கேட்கின் குணமாகும். அப்படி இல்லாமல் ஆணுக்குப் பெண் வந்தாலும், பெண்ணுக்கு ஆண் வந்தாலும் அப் பிணி தீராது. ஒருவன் வலப் பக்கத்தினின்று குறி கேட்டுக் கொண்டே இடப்பக்கத்தில் வந்து நின்ருலும், ஒருத்தி இடப்பககத்தினின்று குறி கேட்டுக்கொண்டே வலப்பக்சத்தில் வந்து நின்ருலும் நோய் போக்குவது கடினம்' இது ஞானசரம் எனும் நூல் கூறுவது. [119f] இனி சிவயோக சாரம் கூறுவது காண்போம். [119g]

இடகலை அல்லது பிங்கலை ஓர் இரவு முழுவதும் சுவாசம் இடைவிடாமல் நடந்தால் அம் மனிதன் மூன்று வருஷங்களில் மரண

---

119 (d). பாடல் 770 – 776

திங்கள், புதன், வெள்ளி		– இடம்.
செவ்வாய், சனி, ஞாயிறு		– வலம்.
வியாழன்	(வளர்பிறை)	– இடம்.
	(தேய்பிறை)	– வலம்.

119 (e). பக். 459 – 460 சித்தர் பாடல்கள்.

119 (f). பக். 467 ,,

119. (g) பக். 418 ,,

மடைவான். பிங்கலையில் மாறுதல் இல்லாமல் இரண்டு இரவு இரண்டு பகல் இடைவிடாமல் நடந்தால் அவன் இரண்டு ஆண்டு களில் மரணமடைவான். இடைவிடாமல் சுவாசம் ஒரு நாசியில் மூன்று நாளைக்குள் நடக்குமானால் ஒரு ஆண்டில் மரணமடைவான். இராத்திரி முழுவதும் இடகலையிலும் பகல் முழுவதும் பிங்கலையிலும் இடைவிடாமல் நடந்தால் ஆறு மாதத்தில் மரணமடைவான். பிங்கலையே தொடர்ச்சியாக இடைவிடாமல் நடந்தால் பதினைந்து நாளில் மரணமடைவான். இவ்வாறு சிவயோக சாரம் கூறுகின்றது. யோகியர் மேற்கண்ட அடையாளம் ஏற்பட்டால் உடனே வாயுவைச் சோதனை செய்து அதைச் சரி செய்து கொள்வர்.

திருவள்ளுவர் என்பார் எழுதிய ஞானவெட்டியான் 1500, என்னும் நூல் மலட்டுத் தன்மைக்கான ஆறு காரணங்களைக்கூறி அதைப்போக்கும் வழிகளைக் கூறுகின்றது. இவர்கள் எழுதி யுள்ளதாகக் கிடைக்கும் மருத்துவ நூற்கள் பல.

அகத்தியர்

சென்னையிலுள்ள கீழ்நாட்டுக் கையெழுத்துப் பிரதி நூலகம் தயாரித்துள்ள பட்டியலைப் பார்த்தால் இவர் பெயரில் சுமார் 96 நூல்கள் காணப்படுகின்றன.

பெருந்திரட்டு, ஆயுள்வேதபாஷ்யம், வைத்திய சிந்தாமணி, செந்தூரம் 300, மணி 4000, சிவஜாலம், சக்திஜாலம், ஷண்முக ஜாலம், வைத்தியக்கண்ணாடி, வைத்திய ரத்னகரம், வைத்தியம் 1500 வைத்தியம் 1600, கரிசில் பஸ்மம் 200, நாடி சாஸ்திரம்,[120a] ஆறெழுத்தந்தாதி, கர்ப்பசூத்திரம், வாகடம், பூஜவிதி, ரஸவாத சூத்திரம் எட்டு, அகத்தியர் ஞானம் பன்னிரண்டு,[120b] வைத்தியக் கும்மி, குணவாகடம், நோயின் சாரம், பஞ்ச காவிய நிகண்டு, செந்தூரமுறை, சுங்கு சுத்தி[120c] முதலிய நூற்கள் இவர் பெயரால் வெளிவந்துள்ளன.

இடைக்காடர்

ஊசிமுறி, அறுபது வருஷ பலன்;[120d] சாரீரம்;[120e] இடைக் காடர் ஞானம்;[120f]

---

120. a, b, c etc. – பின் இணைப்பில் காண்க.

ரோமரிஷி

உரோமமுனி 100, உரோமமுனி 500, ஐம்புள் 100, பட்சி சாஸ்திரம் முதலியன.[120g]

கோரக்கர்

கோரக்கர் வைப்பு 100;[120h] கால்பந்தனம், வைத்தியம்.[120i]

கொங்கணர்

அதிசய சூத்திரம், ஞானம் 300, ஞானம் 500, ஞான காவியம், கல்பம் முதல், இடை, கடை காண்டம், கலைஞானம், முப்பூதீட்சை, பூஜாவிதி, திருமந்திரம், வாதகாவியம், வாலைக் கும்மி, வைத்திய சூத்திரம்.[120j]

தேரையர்

நெய்க்குறி, நீர்க்குறி, தைலவர்க்க சருக்கம், வைத்தியம் 500, வைத்தியம் 1500, மருந்து பாரதம்.[120k] இவை சிலர் இயற்றிய சில நூல்கள். 500க்கும் மேற்பட்ட நூல்கள் இவர்கள் பெயரில் கிடைக்கின்றன. மருத்துவத் துறைக்கு ஆற்றிய தொண்டு தமிழிலக்கிய உலகிற்கும் ஆற்றிய தொண்டாக அமைந்தது.

சமூக சீர்திருத்தம்

சித்தர்கள் பெரிய சீர்திருத்தவாதிகள் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. சாதி, சமயம், சாத்திரம், சடங்கு, ஆகியவற்றைப் பலமாகக் கண்டித்தனர். இதனால் மனித சமுதாயத்தில் ஒற்றுமையை உண்டாக்க முயன்றனர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் வள்ளுவர் கருத்தை வாழ்க்கையில் கொண்டு ஒழுகியவர்கள் சிததர்கள் என்றால் மிகையாகாது.

சாத்திரம்

இராமலிங்கர் இதனைக் 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக' எனக் குறிக்கின்றார். சாத்திரங்களால் சமுதாயத்திற்கு எவ்விதப் பயனுமில்லை. ஒவ்வொரு சாதியினர்க்கும், அல்லது ஒவ்வொரு சமயத்தவருக்கும் சாத்திர வகை வேறுபடுகின்றது. இதனால் மக்களிடையே வேற்றுமை அதிகமாகின்றதே ஒழிய ஒற்றுமை வளர வழியில்லை. எனவே

---

120. a, b, c பின் இணைப்பில் காண்க. etc.

மக்களிடையே இருக்கின்ற ஒற்றுமையைப் பிரிக்கும் இச் சாத்திரங்களைக் கண்டித்ததில் வியப்பில்லை.

'சதுர்வேதம் அறுவகைச் சாத்திரம்பல
தந்திரம் புராணகலை சாற்றும் ஆகமம்
விதம்வித மானவான வேறுநூல்களும்
வீணான நூல்களே என்று ஆடுபாம்பே' 121

'சாத்திரம் இல்லையடி
சலனம் கடந்ததடி'121b

'தத்துவக்குப்பையைத் தள்ளுங்கடி–வேத
சாத்திரப் பொத்தலை மூடுங்கடி' 122

'சாத்திரங்களைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கி' 123

'சாத்திரங்கள் பார்த்துப்பார்த்து தான்குருடு ஆவதும்' 124

இவை சில எடுத்துக்காட்டுகள். பட்டினத்தார்,[125a] கொங்கணர்[125b] முதலியோரும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

சாதி

ஒன்றுபட்டிருக்க வேண்டிய மக்கட் சமுதாயத்தைப் பிரிப்பதில் சாதி முதலிடதைப் பெறுகின்றது. எனவே ஒழிக்கப்பட வேண்டியனவற்றுள் சாதியும் ஒன்று,

'சாதிபேதந் தனைக்குறித்துத் தயங்கி மயங்கித் தளராதே
சாதியாவ தெவரறிவார்? சருவவுடலு மொன்ருச்சே' 126

---

121 (a). பாடல் 98 பாம்பாட்டி
121 (b). ,, 76 அகப்பேய்
122. பாடல் 146 ஞானக்கும்மி
123. ,, 524 சிவவாக்கியர்
124. ,, 155 மெய்ஞானப்புலம்பல் - பத்திரகிரி
125 (a). பாடல் 1 இறந்தகாலத்து இரங்கல் - பட்டினத்தார்
125 (b). ,, 100 வாலைக்கும்மி
126. பாடல் 496 சிவானந்தபோதம்

'தோண்ப்பா தோணுமற் சாதிபேதம்
சொல்லுவான் சுருக்கமாக சுருண்டுபோவான்' [127]

'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' [128]

'சாதிகுல மில்லை
சற்குருவ தறிந்தால்' [129]

இங்ஙனமே கொங்கணர், [130] அகப்பேய், [131] சிவவாக்கியர், [132] பட்டினத்தார், [133] பத்திரகிரியார், [134] அகத்தியர், [135] வால்மீகர் [136] முதலியோர் பலரும் சாதியைச் சாடியுள்ளனர். சிவவாக்கியரின் பாடல் ஒன்று மேற்கோள் காட்டத்தக்கது :—

'பறச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சிதோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ?' [137]

சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வை எந்த அளவுக்கு வன்மையாக எதிர்க்கின்றார் என்பதற்கு இப் பாடல் தக்க சான்று.

மதம்

மதம் என்னும் சொல்லுக்குக் கொள்கை என்பது பொருள். சமயத்துறையில் இச் சொல் மிகுதியாக உரிமை பெற்று விட்டதால் மதம் என்றால் சமயம் என்று மயங்கும் நிலை தோன்றியது. சமயத்தோடு சார்புடைய மதத்தைச் சித்தர்கள் சாடியுள்ளனர்.

'பல்மதம் பொய்ம்மையே என்று ஓதுகுயிலே—எழு
பவம் அகன்றிட்டோம் நாம்என்று ஓதுகுயிலே' [138]

---

127. ,, 66 காகபுசுண்டர்
128. ,, 123 பாம்பாட்டி
129. ,, 128–129 ஞானஏற்றம்
130 ,, 95 கொங்கணர்
131. ,, 68 அகப்பேய்
132. ,, 211 சிவவாக்கியர்
133. ,, 125 மெய்ஞ்ஞானம்புலம்பல்
134. ,, 36 பூரணமாலை
135. ,, 4 ஞானம் - அகத்தியர்
136. ,, 8 வால்மீகி
137. ,, 38 சிவவாக்கியர்
138. ,, 84 இடைக்காடர்

'பொய்ம் மதங்கள் போதனைசெய் பொய்க் குருக்களை
புத்திசொல்லி நன்னெறியில் போகவிடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று போதனைசெய்யும்
பூரண சற்குருநாள் கண்டு ஆடுபாம்பே' 139

இவை சில எடுத்துக்காட்டுக்கள்.

இறைக் கொள்கை

தமிழ்ச்சித்தர்களின் இறைக்கொள்கை விந்தையானது. அவர்கள் சமயம் சார்ந்தவர் அல்லர் என்பதை முன்னர்க் கண்டோம். இறைவன் ஒன்று என்னும் கொள்கையை உடையவர்கள். அவன் குடி கொண்டிருக்கும் பொருள் கல்லும், செம்பும், அன்று; அவன் குடிகொள்ளுமிடம் கோயில் அன்று. தெய்வம் ஒன்று அது நம்முள்ளே இருப்பது. இதுவே சித்தர் இறைக்கொள்கை. உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம் என்பது திருமந்திரம்.

'ஓம பா கல்செம்பைத் தெய்வமென்றே
உருகுவார் பூசிப்பார் கிரியை என்பார்' 140

'உடலுக்குள் நின்று உலாவினதைக் காணாமல்
கடல்மலை தோறும் திரிந்து கால்அலுத்தேன பூரணமே' 141

'நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணுவென்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்' 142

இவை சில எடுத்துக்காட்டுகள். சிவவாக்கியரின் கேள்வி ஒன்றையும் இங்கே குறிக்கின்றேன்.

'ஓசையுள்ள கல்லைநீர் உடைத்து இரண்டாய் செய்துமே
வாசலில் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக்கல் சொல்லுமே' 143

ஒரே கல்லையுடைத்து இரண்டு துண்டுகளில் ஒன்றைப் 'படி' என்ற பெயரிட்டு மிதிக்கின்றோம். மற்றொன்றை இறைவன் என்று

---

139. „ 11 பாம்பாட்டி
140. „ 4 வால்மீகர்
141. „ 34 பூரணமாலை
142. „ 496 சிவவாக்கியர்
143. „ 421 „

பெயரிட்டு மதிக்கின்றேம். எத்துணைப் பேதமையானது இச் செயல் எனச் சாடுகின்றுர். ஆகவே கோயில், குளம் முதலிய சென்று செய்யும் சடங்குகளும், வழிபாடுகளும் உண்மையான இறைநெறி யாகா என்பது இவர்கள்தம் கொள்கை எனலாம்.

மக்கள் நிலே

சித்தர்கள் தனித்த போக்குடையவர்களே என்றுலும் மக்களேக் கூர்ந்து நோக்கியவர்கள். அவர்களிடையே உள்ள குறைபாட்டைக் கண்டவர்கள் ; கண்டு கண்டித்தவர்கள்.

சமயத்துறையில் ஈடுபட்ட சிலர் போலி வேடதாரிகள் எதற் கெடுத்தாலும் இறைவன் பெயரைச் சொல்லிப் பணம் பறிப்பர். மிகத் தாராளமாகப் பொய் பேசுவர். மக்களிடம் இருக்கும் வலிமை இன்மையைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் பிழைப்புக்கு வழி தேடுவர். இத்தகையர் எக்காலத்தும் இருப்பர் போலும்.

'பாரப்பா சீடர்களே அழைப்பான் பாவி
பணம்பறிக்க உபதேசம் பகர்வே மென்பான்
ஆரப்பா பிரமநிலே காட்டா மற்றுன்
ஆகாசப் பொய்களேயு மவன்றுன் சொல்வான்
நேரப்பா சீடனுக்கும் பாவமாச்சு
நிட்டை சொல்லுங் குருக்களுக்குத் தோடமாச்சு
விரப்பா அடங்குகின்ற இடத்தைப் பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே' 144

'தானென்ற வுலகத்தில் சிற்சில் லோர்கள்
சடைபுலித்தோல் காசாயம் தவவேடம் பூண்டு
ஊனென்ற உடம்பெல்லாம் சாம்பல் பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானியென்பார்
தேனென்ற சிவபூசை தீட்சை யென்பார்
திருமாலேக் கண்ணுலே கண்டோ மென்பார்' 145

'புகலுவார் பேதமெல்லாம் வந்த தென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங் கற்றே
அகலுவார் பெண்ணுசை விட்டோ மென்றே
அறிவுகெட்டே ஊர்தோறும் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னேச் சாற்றி
இகலுமான மடங்காமல் நினேவு வேருய்
எண்ணமெலாம் பெண்ணுசை பூசைதானே' 146

---

144. ,, 35 காகபுசுண்டர்
145. ,, 16 கருவூரார்
146. ,, 6 வால்மீகர்

இவை சில எடுத்துக்காட்டுக்கள். சட்டைமுனி, சிவவாக்கியர், பட்டினத்தார் முதலியோரும் மிகுதியாகச் சாடுகின்றனர். துறவறத்தில் வழுவினரைச் சாடுதல் போலவே இல்லறத்தினின்று வழுவினரையும் சாடினர்.

ஓயாமல் பொய்சொல்வார், நல்லோரை நிந்திப்பார், தாயாரை வைவார், சதி ஆயிரம் செய்வார், சாத்திரங்கள் ஆயார், பிறர்க்கு உபகாரம் செய்யார், தம்மை அண்டினவர்க்கு ஒன்றும் ஈயார்[147], வாதுக்குச் சண்டைக்குப் போவார், வழக்குரைப்பார், தீதுக்கு உதவியும் செய்திடுவார்[148], தான் என்ற ஆணவத்தை நீக்க மாட்டார், கோபத்தைத் தள்ள மாட்டார்[149], என இவ்வாறெல்லாம் மக்களிடையே உள்ள குறைபாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டிச் சாடுகின்றனர்.

அறிவுரை :

இனி, இவர்கள் கூறும் அறிவுரைகளில் சிலவற்றைப் பார்ப்போம். இரண்டு வகையான முறையில் இவர்களது அறிவுரை அமைகின்றது. ஒன்று இன்னவற்றைச் செய்யாதே என்பது, மற்றொன்று இன்னவற்றைச் செய் என்பது.

'கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலைகளவுகள் செய்யாதே' 150

'கண்டதும் கேட்டதும் சொல்லாதே கண்ணில்
காணாத உத்தரம் விள்ளாதே
பெண்டாட்டிக் குற்றது சொல்லாதே
பிள்ளைக் கிளப்பம் கொடுக்காதே' 151

'கஞ்சாப் புகைபிடியாதே—வெறி
காட்டி மயங்கிய கட்குடியாதே
அஞ்ச வுயிர் மடியாதே - பத்தி
அற்றவஞ் ஞானத்தின் நூல்படியாதே' 152

---

147. „ 19 திருவேகம்பமாலை - பட்டினத்தார்
148. „ 18 „
149. „ 32 சட்டைமுனி
150. „ 91 கொங்கணர்
151. „ 88-89 „
152. „ 29 கடுவெளிச்சித்தர்

'வைதோரையும் கூடவையாதே – இந்த
வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே

'வெய்யவினைகள் செய்யாதே - கல்லை
வீணில் பறவைகள் மீதிலெய்யாதே' 153

இவை ஒருவகையானவை.

'ஒருவனென்றே தெய்வத்தை வணங்கவேணும்
உத்தமனாய்ப் பூமிதனி லிருக்கவேணும்' 154

'வேதவிதிப்படி நில்லு - நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாதநிலைமையே சொல்லு – பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு' 155

'ஒன்றென்றிரு தெய்வம்உண்டென்றிரு உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர்முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமல் நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே' 156

இவை ஒருவகையானவை. மூன்றும்பாடல் மனத்திற்குக் கூறுவதாக இருந்தாலும் பொதுவான அறிவுரையாகக் கொள்வதில் பிழையில்லை.

முடிவுரை

பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்து, இட்ட பிச்சையெல்லாம் நாய்போல் அருந்தி, நரிபோல் உழன்று, நன்மங்கையரைத் தாய்போல் கருதித் தமாபோல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச் சேய்போல் இருக்கும் சித்தர்கள் தமக்கெனத் தனிவழி வகுத்துக் கொண்டதோடு அமையாமல் தமிழ்மொழிக்கும், மக்கட் சமுதா

---

154. பாடல் 5 அகஸ்தியர் ஞானம்.

155. ,, 8 கடுவெளிச் சித்தர்.

156. ,, 20 பொது—பட்டினத்தார்.

யத்திற்கும் பலவகையிலும் பெருந்தொண்டு ஆற்றியுள்ளனர். அவர்களின் இலக்கியங்களை மேலும் ஊற்றிப் பலர் படித்தல் வேண்டும். சித்த மருத்துவத்தையும், யோக முறைமையையும் உலகிற்குத் தந்த சித்தர்களின் இலக்கியங்களைத் தக்க முறையில் தக்கார் கொண்டு ஆராய்ந்தால் தமிழகத்தின் பெருமை மேலும் பெருகும் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்த அறிஞர் இதற்குப் பெருந்துணையாய் இருத்தல் வேண்டும் என வேண்டி இவ்வுரையை முடிக்கின்றேன்.

பின் இணைப்பு

33 (b). 1 அகத்தியர், 2 அகப்பேய், 3 அழுகணிச்சித்தர், 4 இடைக்காடர், 5 இராமலிங்கர், 6 இராமதேவர், 7 உரோமரிஷி, 8 ஔவையார், 9 கடுவெளிச்சித்தர், 10 கருவூரார், 11 கபிலர், 12 கணபதிதாசர், 13 காகபுசுண்டர், 14 கைலாயகம்பளிச் சட்டைமுனி, 15 குதம்பைச்சித்தர், 16 கோரக்கர், 17 கொங்கணர், 18 சங்கரனார், 19 சிவவாக்கியர், 20 சுந்தரானந்தர், 21 சூரியானந்தர், 22 தன்வந்திரி, 23 தாயுமானார், 24 திருமூலர், 25 திருவள்ளுவர், 26 திருமாளிகைத் தேவர், 27, நந்தீஸ்வரர், 28, பட்டினத்தார், 29 பத்திரகிரி, 30 பாம்பாட்டிச்சித்தர், 31 புலிப்பாணி, 32 புலஸ்தியர், 33 புஜண்டரிஷி, 34 காலாங்கி, 35 கஞ்சமுனி, 36 கந்துரு, 37 மாலாங்கன், 38 இந்திரன், 39 பிரமன், 40 உருத்திரன், 41 சிவயோகமாமுனி, 42 மன்றுதொழுதபதஞ்சலி, 43 வியாக்ரமர், 44 சட்ட நாதர், 45 சண்டிகேசர், 46 சனகர், 47 சனந்தனர், 48 சனாதனர், 49 சனற்குமாரர், 50 போகர், 51 பூனைக்கண்ணர், 52 புண்ணாக்கீசர், 53 அமலமுனி, 54 கமலமுனி, 55 பிரம்மமுனி, 56 வாசமுனி, 57 மச்சமுனி, 58 யூகிமுனி முதலியோர்.

66 (b). இதனை வேறு வகையாகவும் விளக்குதல் கூடும். கால் என்பது காற்று. கால் 'அதர் அத்தம்' எனக் காற்றுப் போக்கியைப் பண்டைய இலக்கியங்கள் குறிக்கின்றன. வேகாக்கால் என்பது அழியாக் காற்று என்பது பொருள். இது பிராணாயாமத்தை உணர்த்துகின்றது. சித்தர்கள் மொழியில் 'கால்பிடித்தல்' என்னும் சொல்லால் குறிக்கப்படும். தலை என்பது ஆறு ஆதாரத்திற்கு அப்பாற்பட்ட சகஸ்ராரத்தைக் குறிக்கும். தலையாய நிலை இது. யோக மார்க்கத்தில் இதனை 'உச்சி' எனக் குறிப்பர். காண்க 'உச்சியில் பிச்சையெடுத்தல்'. எனவே சாகாத்தலை எனில் பயனற்றுப் போகா சகஸ்ராரம் எனலாம்.

---

119 (b). ரசமணியைப் பயன்படுத்தும் முறை எனவும் சிலர் கருதுகின்றனர்.

120 (a). பக். 4-5, அபிதான சிந்தாமணி.

120 (b). பக். 9, கலைக்களஞ்சியம் Vol. I.

120 (c). பக். 3, புலவர் சரித்திர தீபகம்.

120 (d). பக். 35, புலவர் சரித்திர தீபகம்.

120 (e). பக். 99, Tamil Literature - M. S. Purnalingam Pillai.

120 (f). பக். 59, Tamil Dictionary of Proper names.

120 (g). பக். 366, தமிழிலக்கிய வரலாறு - திரு. கா. சு. பிள்ளை.

120 (h) பக். 264, Tamil Literature - M. S. Purnalingam Pillai.

120 (i). பக். 207, Siddhar's Science of Longeirtz and Kalpa Medicine of India - Dr. A. Shanmugavelan.

120 (j). பக். 206, ,,

6

பவணந்தியார்

பேராசிரியர் மா. நன்னன்

முன்னுரை

சாலைகளில் உள்ள வளைவு நெளிவுகளையும், குறுகலையும், குறுக்கிடும் இருப்புப்பாதை முதலியவற்றையும் ஊர்திகளில் செல்வோர்க்கு முன்னதாகவே அறிவித்துச் சாலைப் பயணத்தில் ஊறுபாடுகளைத் தவிர்க்க உதவும் சாலைக்குறிகள் போல் மொழியில் இலக்கண குறியீடுகள் மொழியைக் கற்போருக்கு ஏற்படும் சிதைவுகளையும், ஊறுபாடுகளையும் போக்கி அவர் தம் மொழிப் பயணத்தை இனிதாக்க உதவுகின்றன. சாலைகளில் இடது புறமாகவே செல்லுதல் வேண்டும். திரும்பக்கூடிய இடம், முந்தக்கூடிய இடம், திரும்பக்கூடாத இடம், முந்தக்கூடாத இடம், நிற்கக்கூடாத இடம் ஆகியனபோன்ற சாலை விதிகளைப் போன்றனவே இலக்கண விதிகளும். சாலை விதிகளில் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாற்றங்கள் நிகழ்தல் கூடும். ஆனால் அம்மாற்றங்களைத் தக்கவர்களே தேவையை உணர்ந்து ஏறபடுத்துவர். அம்மாற்றத்தை அனைவரும் ஒழுங்காகவும் சீராகவும் பின்பற்றுவர். அவ்வாறே இலககணத்திலும் காலத்திற்கேற்ப மாற்றங்கள் நிகழலாம். ஆனால் அமமாற்றஙகளை ஏற்படுததும் உரிமை தகுதியுடையோர்க்கே உணடு என்பதோடு தேவைககேற்பச செய்யப்படும அம்மாறுதல்களை அனைவரும் சீராகப் பினபற்றவும வேண்டும்.

சாலை விதிகளில் அவரவர் தத்தம் உடனடித் தேவைக்கேற்ப மாறுதல் செய்து கொளவது தவறுதும். எல்லாரும் இடப்புறமாகவே செல்லுமபோது ஒருவரோ சிலரோ தமககேறற முறையில வலது புறமாக ஊர்தியைச செலுததிச் சென்றால் எத்தனைககேடுகள் ஏற்படும்? நோயாளி தனக்கேற்ப மருந்திலும், மருத்துவத்திலும் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டால் எனனாகும். அவ்வாறே மொழியின் இயல்பும் பிறவும் அறியாதாரால் தத்தமககேற்ப ஏற்படுத்திக் கொள்ளப்படும மாற்றங்கள் மொழியில் சிதைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி மொழியின் அடிப்படையையே தகர்த்து விடும். ஆகவே மொழிததிறம் உணர்ந்த வல்லுநர்களால் காலத்தின்

தேவைக்கேற்ப இலக்கண விதிகளில் மாறுதல்கள் ஏற்படுத்தப் படலாம் என்பதோடு அவை அனைவராலும் ஒருமுகமாகப் பின் பற்றப்படவேண்டும் என்பதும் உணரத்தகும்.

இலக்கணம் வழக்குஞ் செய்யுளுமாகிய இலக்கியத்திலிருந்து உண்டாக்கப்படுவது என்பதோடு அது பின திருநதிய வழக்கையும் செய்யுளையும் தோற்றுவிக்கவும் வலலதாகும். தமக்கு முன்னிருந்த வழககையும் செய்யுளையும் நாடித் தொல்காப்பியர் இலக்கணஞ் செய்தார். அவருககுப் பினவந்த தமிழ்ப்புலவர்கள் அத்தொல் காப்பிய விதிகளைப் பெரும்பாலும் பின்பற்றி மொழிப்புலமை நடத் தினர். பின்வந்த பவணந்தி முனிவர் தம் காலததிற்கேற்ப உணரப் பட்ட மாறுதல்களை உளங்கொண்டு கழிந்த பழையவற்றை விடுத்துத் தேவைக்கேற்பப் புகுந்த புதியனவற்றை மேற்கொண்டு தம் இலக் கணத்தை யாத்தார். அது பின்னோர்க்குப் பல இலக்கியங்களை உருவாக்க உதவிற்று. ஆகவே மரத்தினின்று தோன்றும் விதை, பின் மரத்தைத் தோற்றுவிப்பதுபோல் இலககியத்தினின்றும் எடு படும் இலக்கணம் பின் இலக்கியங்களைத் தோற்றுவிக்க உதவும் என்பது பெறப்பட்டது.

இலக்கணத்தை உளங்கொண்டு இலக்கியங்கள் தோற்று விக்கப்படுவதோடு புதிய இலக்கணங்களைத் தோற்றுவிக்கக் கூடிய இலக்கியங்களும் தோன்றுவதுண்டு. ஆனால் அத்தகு இலக்கியங் களைப் படைப்போர் காவல், மருத்துவம், போன்ற துறை வல்லார் போல் மொழித் திறம் உணர்ந்த வல்லோராயிருப்பர். அல்லார் செய்யும் மாறுதல்கள் பொல்லாத விளைவுகளையே தோற்றுவிக்கும்.

இலக்கியத் துறையில் அத்தகு வல்லாராகவும் நல்லாராகவும் தமிழுலகுக்குக் கிடைத்தவரே பவணந்தி முனிவர். தொல்காப்பியத் திற்குப் பின் பல நூற்றுண்டுகள் கழிந்தபின் தமிழ்மொழியில் பல மாறுதல்கள் தேவைபபட்டன. அத்தேவைகளில் சிலவற்றை உணர்நது சில புது ஒழுங்குகளைப் பவணநதி முனிவர் ஏற்படுததினர். சில பழம்விதிகளைக் கைவிட்டார். எழுததுஞ் சொல்லுந் தவிர்த்த பிற பகுதிகளுக்கு அவர்தம் உதவி இன்று நமக்குக் கிடைககவில்லை. திரு. மு. அருணசலமவர்கள் பத்து நூற்றுண்டுகள் கழித்துத்தான் அஃதாவது 23-ஆம் நூற்றுண்டிற்றுன் தமிழில் மற்றோரிலக்கணம் தோன்றும் போலும் என்கிறுர். ஆனுல் இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியாகிய இப்போது தமிழுககு ஒரு புதிய இலககணம் தேவைப்படுகிறது என்று உணருமஎன் உணர்வை ஈண்டு வெளிப்

படுத்துவது பொருத்தமற்றதாகாது என்று கருதுகின்றேன். இன்று வழக்கிலும் செய்யுளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாறுதல் ஆகிய வற்றுககேற்ப அவையனைத்தையும் தழுவி அவற்றை ஒழுங்கு படுத்தும் இலக்கணம் ஒன்று உடனடித் தேவையாக உள்ளது. முன்பெல்லாம் மொழிப் புலமை நடத்தியோர் கற்றுத் துறை போய வலலுநர்களாயிருந்ததோடு அவர்கள் மக்களுள் ஒரு சிலராகவும் இருந்ததால் மொழிதேர் அன்று பாதுகாப்பாக உருண்டு இனி தாகச் சென்றது. இன்றோ அத்தேரைத் தொட்டு இழுக்காத வர்களே இலலை என்று சொல்லும் வண்ணம் மிகப் பெருமபாலான மக்களால் மொழித்தேர் இழுக்கப்படுகிறது. ஒரு வகையில் இது மகிழ்ச்சிக்குரிய மாறுதலான வளர்ச்சியாயினும் அச்சமும் ஏற்படு கின்றது. மெதுவாக நடக்கும் மாந்தர்க்குத் தடைகள் (பிரேக்) தேவையில்லை. மெதுவாகச் செல்லும் மாட்டு வண்டி போன்ற வற்றுக்கு அவை தேவையில்லை. ஆனல் விரைந்து செலலும் ஊர்திகளுக்கு அவை மிகவும் தேவை. மேலும் பல்லாயிரவர் இழுககும கோவில் தேருக்கு அத்தடை இன்றியமையாதது. வழியில் போவோரும் வருவோருமெலலாம் தேரினை இழுப்பர். அவர்களுக்கு எதனையும் சொல்லி அவர்களை நெறிப்படுதத முடியாது. ஆகவே தேரின் உருளைகளை முட்டுககட்டை சன்னககட்டை ஆகியவறருல் தடுதது நெறிபபடுததுவர். அவ்வாறே பலவகைப்பட்டோராலும் பல தரமுடையோராலும் ஈர்க்கப்படும தமிழ்மொழித் தேரோட்டத் திற்கு இலக்கணம் என்னும் முட்டுக்கட்டை இன்றியமையாது தேவைப்படுகின்றது. முட்டுக்கட்டை தேரோட்டத்தைத் தடுப்ப தனறு; அதனை நெறிப்படுததி இனிதாகச் செலுத்த உதவுவது. அவ்வாறே இலக்கணமும் மொழித் தேருக்கு அதன் ஓட்டததைத் தடுப்பதற்கனறி அதனை நெறிப்படுததி இனிதாக்க உதவுவதாகும். இலக்கியம் படைப்பது இன்று ஒரு தொழிலாகவும் ஆகிபிருப்ப தோடு பல்லோரும் ஈடுபடும் ஒரு துறையாகவும் வளர்ந்துவிட்டது. ஆகவே மொழித் தேரோட்டத்திற்குத் தேவையான ஒரு இலக்கண முட்டுக்கட்டையைப் பல்கலைக்கழகம் ஆக்கித் தரல் வேண்டும் என்று என் முன்னுரையிலேயே கூறிக்கொள்ள விழைகின்றேன்.

இன்றைய நிலைபில் பழையனவாய்க் கழிந்தன இவை; புதியன வாய்ப் புகுந்தன இவை என இலக்கிய மரபுகளை வரையறுத்து அவற்றிற்கேற்ற புதிய இலக்கணமொன்றை உருவாக்கினல் அது விரிந்த ஒன்ருகவே இருககும். தமிழர் வாழ்வியல இக்காலத்தில் விரிந்து பல்கியிருக்கிறது. "எங்குந் தமிழ் எதிலுந் தமிழ்" என்னும் முழக்கம் எழுந்து அது செயறபடத் தொடஙகிவிட்டதால்

நன்னூலார் காலத்தில் சுருங்கிய இலக்கணம் இன்று விரிய வேண்டும் என்பதையும் உணர முடிகின்றது.

நூலும் ஆசிரியரும்

“முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்
எந்நூ லாரும் நன்னூ லாருக்
கிணையோ வென்னுந் துணிவே மன்னுக”

என்று இலக்கணக்கொத்தாசிரியர் சுவாமிநாத தேசிகராலும்,

‘பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்’

என்று சங்கர நமச்சிவாயராலும், பவணந்தி முனிவர் பாராட்டப் பெறுகிறார். தமிழின் அக்காலத்திய அரிமாவெனத் திகழ்ந்த சிவஞானமுனிவர் தன்மையாற் பெயர் பெற்றதற்கெடுத்துக் காட்டாக நன்னூலைக் குறிப்பிடுகின்றார். இத்தகு சிறப்பு வாய்ந்த நன்னூலையும் அதன் ஆசிரியர் பவணந்தியாரையும் பற்றி முதற்கண் பொதுவாகச் சில கூற விழைகின்றேன்.

சுருக்கமும் எளிமையும் வாய்ந்து நினைவுகோடற்குதவியதா யுள்ள நன்னூல் இலக்கணங் கூற மேற்கண்டுள்ள முறை தொல் காப்பியம் பின்பற்றிய முறையினின்றும் வேறுபட்டது. இவ்விரு முறைகளுள் எம்முறை செம்முறை என ஆய்ந்து முடிவுகட்டுவது ஈண்டு எனது நோக்கமன்றாயினும் அவ்விரண்டையும் வேறுபாடு தோன்றப் புலப்படுத்துவது என் நோக்கமாகும். வரலாறு கற்பிக் குங்கால் பண்டைத் தமிழரசர் பற்றிப் பொதுவாக ஒரு வகுப்பில் கற்பித்துப் பின் அடுத்தடுத்த வகுப்புக்களில் சிறிதுசிறிதாக அளவோடு வகுப்பிற்கேற்ப உரைத்து இறுதியில் தமிழரசர் வரலாற்றை முற்றுவிப்பது ஒருமுறை. ஒரு வகுப்பிலேயே ஒரு பாட நூலிலேயே தமிழரசர் பற்றிய முழு வரலாற்றையும் கூறி முடிப்பது மற்றொரு முறை. கண்ணகியின் பண்பு நலனை மங்கல வாழ்த்து முதல் வரந்தரு காதை முடியச் சிறிது சிறிதாகப் பொருந்தப் பகுத்து உரைத்து முடிப்பது முன்னுள்ள முறை. கண்ணகியின் பண்பு நலனை ஒரே கட்டுரையில் தொகுத்து முடிப்பது பின்னுள்ள முறை. இவ்விரு முறைகளையும் முறையே இயல்புறப் பகுத்தல் என்றும் ஒருவழித் தொகுத்தல் என்றும் கூறலாம். இவற்றுள் தொல்காப்பியர், இயல்புறப்பகுத்தல் முறையையும், பவணந்தியார் ஒருவழித் தொகுத்தல் என்னும் முறையையும் மேற்கொண்டுள்ளன ரென்னலாம். தொல்காப்பியர் நூன்மரபு,

மொழி மரபு, பிறப்பியல் என மூன்று இயல்களில் பகுத்து உரைத்த எழுத்தின் இலக்கணமனைத்தையும் பவணந்தியார் எழுத்தியல் என்னும் ஓரியலிலேயே தொகுத்துக் கூறியுள்ளார். எழுத்துக்களின் பிறப்பு, குற்றியலுகரம் போன்றவற்றையும் இவ்வாறே இருவரும் பகுத்தும் தொகுத்தும் கூறியுள்ளனர். சுருங்க உரைப்பதாயின் தொல்காப்பியம் மூலநூல் போலவும், நன்னூல் திறனாய்வுக் கட்டுரை போலவும உள்ளன என்னலாமோ? தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திற்கு ஒன்பது இயல்களும் சொல்லதிகாரத்திற்கு ஒன்பது இயல்களுமாக வகுத்துக்கொண்டு கூறிய இலக்கணத்தையெல்லாம் பவணநதியார் எழுத்துக்கு ஐந்தும் சொல்லுக்கு ஐந்துமாகத் தொகுத்துச் சுருங்க உரைத்துள்ளார். அவற்றிற்கு முறையே 483, 463 என்று நூற்பாக்களைப் பகுத்துக் கொண்டு தொல்காப்பியர் உரைத்துள்ளார். பவணந்தியார் முறையே 202, 205 என்னும் சுருங்கிய அளவில் நூற்பாக்களை அமைத்துக் கூறியுள்ளார். தொல்காப்பியர் 946 நூற்பாக்களுள் பகுத்தோதியவற்றைப் பவணந்தியார் 407 நூற்பாககளுள் தொகுத்தோதியுள்ளார்.

"முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றி"த்

தொல்காப்பியத்திலிருந்து நன்னூலார் மேற்கொண்ட நூற்பாக்கள் பல. அவற்றுள்,

6. வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

90. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

252. அத்தி னகர மகரமுனை யில்லை.

317. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

396. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

404. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

408. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

439. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

தமிழகத்தில் வழக்கிலிருந்த மரபுவழிப்பட்ட கல்வி பற்றிய நூற்பாக்களைத் திரட்டிப் பாயிரமாக அமைத்துக் கொண்ட பவணந்தியார் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னும் இரண்டு

அதிகாரங்களை மட்டுமே எழுதினாரா? தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துக்களை விட்டுவிட்டாரா என ஆராய்ந்தால்,

" அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகை வகை விரியிற் றருக"

எனச் சீயகங்கன் "மொழிந்தனனாக"

" முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்"

"பவணந்தி" என்று கூறும் நன்னூற் சிறப்புப் பாயிரக் கருத்தால் பவணந்தி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணம் பற்றியும் நூல் செய்தார் எனக் கொள்ள வேண்டியிருக்கிறது. எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்களின் கடவுள் வாழ்த்துக்களும் முறையே

56. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

என்றும்

258. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

என்றும் கூறுவதால் இவ்வாறே பிறவற்றையும் அவர் எழுதியிருக்கக் கூடுமென்றே தெரிகின்றது. இக்கருத்தினாற்றான் நன்னூலுக் குரைவகுத்த மயிலைநாதர் என்னுஞ் சான்றோர், 'பழையன கழிதலும்' என்னும் நூற்பாவுரையில், "இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும சிஙக நோக்காய் நிற்பதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று" என்றுரைத்ததோடு "இவ்வாறே மேல்வரும் அதிகாரங்களிலும் கண்டு கொள்க" என்று உரைத்துள்ளார். எனவே மயிலைநாதர் காலத்தில் பவணந்தியின் ஏனைய அதிகாரங்கள் மூன்றும் இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகின்றது. சங்கரநமச்சிவாயர், இராமானுசக் கவிராயர் ஆகிய பிற உரையாசிரியர்களும் இககருததே கொண்டுள்ளனர். எனவே இவ்வுரையாசிரியர்கள் காலத்திருந்த நன்னூலின் பிற மூன்றதிகாரங்களும் ஏன் மறைந்தன என்றும் விளஙக வில்லை. ஒருவேளை யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பா மாலை, நம்பியகப் பொருள் ஆகிய நூல்களின் செல்வாக்கு — பவணந்தியின் பொருள், யாப்பு, அணி ஆகிய அதிகாரங்களை மங்கி மறையச் செய்திருக்கலாமோ? இவர் தொகுத்த எழுத்துஞ் சொல்லும் மட்டும் தம் சிறப்பால் நிலைத்திருக்க நேர்ந்தனவோ?

பவணந்தியார் சமயத்தாற் சமணரேயாயினுந் தமிழரேயாதலின் அவர்தம் இலக்கணம் சிறந்து விளங்குகின்றது. இலக்கணம், அறநூல் போன்றவற்றை எழுதுதற்குப் பலவற்றைத் துறக்கு முள்ளமும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் தேவை. இவையனைத்தும் பவணந்தியிடம் அமைந்திருக்க வேண்டும். அதனாற்றான் அவர் "அருந்தவத்தோன்" என்று பாராட்டப் பெறுகிறார். பாயிரத்தில் குறிக்கப்பெறும் சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவ னாதலின் பவணந்தி பன்னிரண்டாம் நூற்றாண்டி னிறுதியிலோ பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்திருக்கக் கூடும் என்னும் கருத்தே இவர் காலத்தைப் பற்றிய ஏற்புடைக் கருத்தாகத் தோன்றுகின்றது.

கட்டுரையின் நோக்கம்

பவணந்தியார் பற்றிப் பழைய மரபு வழியில் ஆராயும் இக் கட்டுரையில் எழுத்துக்களின் பிறப்பு, சாாபெழுத்துக்கள், விளு வெழுத்துக்கள், ஆகியவை பற்றிய பவணந்தியாரின கருதது்க்களை அதனேடொத்த தொல்காப்பியப் பகுதிகளோடு ஒப்பிட்டு நோககி ஆராய்ந்து சில விளக்கங்களைத் தர முயல்வதே என நோக்கமாகும்.

1. *எழுத்தெனப் படுவ*
அகர முதல னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே

என்று தொல்காப்பியர் எழுத்துக்களின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகிறாரேயன்றி எழுத்து என்பது யாது என்று விளக்கினாரிலர். ஆனால் பவணந்தி முனிவரோவெனின்

58. *மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி*
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே

என்று மொழிக்கு முதற் காரணமான ஒலி அணுக்களின் கூட்டமே எழுத்து என்று விளக்கியுள்ளார். அவ்வாறே தொல்காப்பியர்,

484. *உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே*
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே

என்னும் இந்நூற்பாவில் உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் என்பவற்றை வகுக்கின்றாரே அன்றிச் சொல்லென்பது யாது என்று கூறிற்றிலர். ஆனால் பவணந்தியோ,

128. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப

என்று சொல்லென்பது இது என்று அதன் இலக்கணத்தை வரையறுக்கின்றார். ஆனால் நன்னூலாரும் பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல், வினையைக் குறிப்பது வினைச்சொல், இடைப்பட்டது இடைச்சொல், உரிமை யுடையது உரிச்சொல் என்றவாறு அவற்றிற்கு இலக்கணங் கூறுமையும் ஈண்டு நாம் கருதுதல் தகும். தொல்காப்பியங் கற்போர்க்கு எழுத்து என்பது யாது என்றும், சொல்லென்பது யாது என்றும் கூறும் விளக்கம் தேவையற்றதாதலின் அவர் அதனைத் தந்திலர் : அவ்வாறே பெயர் வினைகள் இவை என்னும் விளக்கம் நன்னூல் கற்போர்க்குத் தேவைப்படாவென்று பவணந்தியு மவற்றைக் கூறாது விடுத்தார் போலும். ஆனால் இடையுரிகளை அவ்வாறு விட்டதாகக் கொள்ள முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

எழுத்துக்களின் பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பைக் கூறுமிடத்துப் பவணந்தி முனிவரின் நூற்பாக்கள் சுருக்கமும் அழகும் வாய்ந்தனவாக உள்ளன. ஆனால் பொருத்தமும் தெளிவும் எவ்வாறு உள்ளனவென இங்கு நோக்கலாம். பிறப்பின் பொதுவிதி, இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு ஆகியவற்றைத் தொல்காப்பியரும் பவணந்தியாரும் கூறுவனவற்றை முதற்கண் நோக்குவோம்.

83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னுக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான

என்று தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பின் பொது விதிகளைப் பவணந்தி முனிவர்,

74. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே

என்று கூறுகின்றார். ஆற்றொழுக்காகச் செல்லும் தொல்காப்பிய நூற்பாவின் தெளிவும் இயல்பான போக்கும் நன்னூற்பாவில் காணப்படவில்லை. ஆனால் நன்னூற்பா செறிவுடையதாய்க் காணப் படுகின்றது. நன்னூல்போல் தொல்காப்பியம் இடம் உறுப்பு இவற்றைத் தெளிவாக வரையறை செய்திலது. தொல்காப்பியம் மூக்கையும் ஓர் உறுப்புப்போல் கூறிச் செல்கின்றது. நன்னூலோ அதனை இடமென்பதுபோல் கூறிச் செல்கின்றது. உந்தி முதலா வளி முந்துகிறது என்பதற்கு மாறாக நன்னூல் நிறையுயிர் முயற்சி யினால் உள்வளி செலுத்தப்படுகிறது என்று கூறுகின்றது. அணுத் திரள் என்னும் சொற்கள் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. எட்டு என்னும் தொகை இருவர்க்கும் உடன்பாடே.

84. அவ்வழிப்
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்.

99. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

100. மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்

என்னும் தொல்காப்பிய நூற்பாக் கருத்துக்களை நன்னூல்,

75. அவ்வழி,
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவும் மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

87. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய

எனத் தொகுத்துச் சுருக்கிவிடுகின்றது. உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம் மிடறு என்னும் கருத்து இருவருக்கும் பொதுவானதாகவே இருக்கிறது. ஆனால் தொல்காப்பியர் யகரத் திற்கு "மிடற்றெழுவளி" என்று மிடற்றைக் கூறுகின்றாரேயன்றி இடையினம் அனைத்திற்கும் இடம் மிடறு என்று கூறினாரில்லை. வல்லின வெழுத்துக்களுக்குத் தொல்காப்பியர் இடம் கூறவில்லை. பவணந்தி அவற்றிற்கு மார்பு இடம் என்கிறார். மெல்லினத்திற்கு இருவரும் மூக்கையே இடமாகக் கூறுகின்றனர். ஆய்தம் பற்றித் தொல்காப்பியர் கூறாத இடம் தலை, முயற்சி அங்காத்தல் என்பவற்றைப் பவணந்தியார் கூறுகின்றார்.

93. அண்ணம் நண்ணிய பன்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம்

என்று த, ந ஆகிய இரண்டற்கும் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறும் தொல்காப்பியக் கருத்தை நன்னூல்,

80. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்

என்று சுருக்கிச் செறித்து விடுகின்றது. இரண்டுக்கும் உள்ள முயற்சி வேறுபாட்டு நுட்பத்தை நன்னூல் அறவே புறக்கணித்து விடுகின்றது. தொல்காப்பியம் பரந்து, மெய்யுற என அதனை நன்கு விளங்க எடுத்துக் காட்டுகின்றது.

யகரப் பிறப்பைப் பற்றி இருவரும் கூறும் கருத்துக்களை ஆராய்ந்தால் இருவர் காலங்களிலும் அவ்வெழுத்து வெவ்வேறு வகையாய் ஒலிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

99. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்

என்னும் தொல்காப்பியக் கருத்து நன்னூலுள்

82. அடிநா வடியண முறயத் தோன்றும்

என்று வேறுபட மொழியப்படுகின்றது.

96. நாவிளிம்பு வீங்கி யண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

என்னும் தொல்காப்பிய நூற்பாவினும் பின்வரும் ல, ள பிறப்புப் பற்றிய நன்னூற்பா தெளிவும் விளக்கமும் வாய்ந்திலங்குகிறது.

84. அண்பன் முதலு மண்ணமு முறையின்;
நாவிளிம்பு வீங்கி யொற்றவும், வருடவும்;
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

அவ்வாறே,

98. பல்லித ழியைய வகாரம் பிறக்கும்.

என்னுந் தொல்காப்பியத்தினும்,

85. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

என்னும் நன்னூற்பா தெளிவும் அழகும் பெற்றிலங்குகின்றது. எனவே எழுத்துக்களின் பிறப்பு முயற்சியைக் கூறும் நன்னூல்

தொல்காப்பியத்தினும் தெளிவும் சுருக்கமும் உடையதாகக் காணப் படுகின்றதென்பதும் சிற்சில இடங்களில் பொருத்தம் குன்றிச் சுருக்கம் பெற்றுக் காணப்படுகிறதென்பதும் உணரத்தகும்.

வினு

அடுத்து வினுப் பற்றிய கருத்தினே யாராயலாம். தொல் காப்பியர்,

32. ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினு

எனக்கூறியதை நன்னூலார்,

67. ஏ, யா முதலு மாவோ வீற்று
மேயிரு வழியும் வினவா கும்மே.

என்று முறைப்படுத்தி விரித்து விளங்க உரைத்துள்ள அருமை போற்றுதற்குரியதாகும். தொல்காப்பியர் எ, யா என்பனவற்றை விடுத்து ஏனே மூன்றை மட்டும் வினு என்றதேன் எனில் ஆ, ஏ, ஓ இம் மூன்றும் தனித்து நின்றே வினுப்பொருள் உணர்த்தும் ஆற்றல் உடையனவாக அக் காலத்து இருந்திருக்கும் போலும். மேலும் அவை அவன் + ஆ = அவனு ; அவன் + ஏ = அவனே ; அவன் + ஓ = அவனே எனப் பிற சொற்களுடன் சேர்ந்து அப் பொருளே விளக்கும் ஆற்றலேயும் அதனுற்றுன் பெற்றன போலும். எ, யா என்பன அவ்வாறன்றி எவன், யாவன் என்று ஒரு சொல்லுள் உறுப்பாகும்போதே அஃதாவது, சொன்னிலேயாம் போதே வினுப் பொருடரும் திறத்தனவாயுள்ளன. ஆகவே சுட்டுப் பொருள் உணர்த்தவல்ல சுட்டெழுத்துக்களேயும், வினுப்பொருள் உணர்த்தவல்ல வினு எழுத்துக்களேயும்

31. அ, இ, உஅம் மூன்றுஞ் சுட்டு.
32. ஆ, ஏ, ஓஅம் மூன்றும் வினு.

என்று தொல்காப்பியர் இவற்றைச் சொன்னிலேயவாம் எழுத்துக்கள் என்று கொண்டதாற்றுன் நூன்மரபினிறுதியில் மொழி மரபினேச் சார வைத்துள்ளார். எனவே, தொல்காப்பியர் காலத்து எழுத்துரு விலேயே வினுப்பொருள் தந்த இம் மூன்றையும் வினு எழுத்துக்கள் என்று கூறினுர். பிற இரண்டையும் அவர் அறியாமையாலோ அவர் காலத்து அவை அப் பொருள் தராமையாலோ விட்டாரல்லர். (இளம்பூரணர் தன்னினம் முடித்தல் என்பதால் எகரமும், யகர ஆகாரமும் வினுப்பெறும் எனக் கொள்க என்கின்றுர்). இக் கூற்றுப் பொருந்தாது. ஏனெனில்,

1. யாவினா முதலிய மென்றொடர் மொழி (குற்றி 427.)
2. யாதுஎவன் என்னும் ஆயிருகிளவி (கிளவி. 31)
3. சுட்டுமுதல்வயினும் எகரமுதல் வயினும் (புள்ளி. 334)

என்று கூறுகிறாராதலின் அவர் இவற்றை அறியார் எனக் கொள்ள இயலவில்லை. வினாப்பொருள் தரும் சொற்களாகத் தொல்காப்பியர் வழங்குவன இவை:

1. எகர முதல் வினாவின் இகர விகுதி (தொகை. 159)
2. யாவென் வினாவின் ஐயென் இறுதி(,, ,)
3. பலரறி சொன்முன் யாவர் (தொகை 172)
4. ஒன்றறி சொன்முன் யாதென்வினா (,,)
5. யாவென் வினாவும் ஆயியல் திரியாது (உரு. 175)
6. யாவென் வினாவின் ஐயென்னிறுதி (,, 180)
7. யாதென்னிறுதியும் (,, 202)
8. யாவென் வினாவும் (உயிர்மயங் 224)
9. தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவி (,, ,,)
10. மாறுகோளெச்சமும் வினாவும் (ஏகாரம்) (உயிர்மயங். 275)
11. ,, ,, (ஓகாரம்) (,, 290)
12. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும் (புள்ளி 334)
13. யாதென் னிறுதியும் (குற்றி 422)
14. யாவினா முதலிய மென்றொடர் மொழி (,, 427)
15. யாவினா மொழியே இயல்பு மாகும் (குற்றி 428)
16. யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும் (கிளவி 514)
17. யாது எனவரும் வினாவின் கிளவி (,, 515)
18. சுட்டு முதற் பெயரும் வினாவின் பெயரும் (விளி 633)
19. யாவன், யாவள், யாவர் என்னும் (பெய. 647)
20. யாது, யா, யாவை என்னும் பெயரும் (,, 652)
21. யாஅர் என்னும் வினாவின் கிளவி (வினை 696)
22. ஒக்குமென்ப எவன் என்வினாவே (,, 704)
23. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் (,, 729)
24. ஏகாரவிடைச்சொல் வினாப்பொருள் தரல் (இடை 741)
25. ஓகாரவிடைச்சொல் வினாப்பொருள் தரல் (,, 742)

ஆகத் தொல்காப்பியர் பதினொரு இயல்களில் 22 நூற்பாக்களில் வினாச் சொற்களைப் பற்றிக் கூறுகிறார். ஒன்றில் மட்டும் (32) வினா

எழுத்துக்களைக் கூறுகின்றார் என்று கொள்ளலாம். தொல்காப்பியர் யாது, யாவை, யாவற்றை, யாங்கு, யார், யாவன், யாவள், யாவர், எவன், எவ்வயின் என்னும் சொற்களை மட்டும் தம் நூற்பாக்களில் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றார். ஆ, ஏ, ஓ என்பன எழுத்துக் களாதலின் அவற்றை விடுத்துள்ளார். இக் காரணந்தவிர எ, யா இவற்றை வினா எழுத்துக்களுள் தொல்காப்பியர் சேர்க்காததற்கான வேறு காரணம் இருக்குமா என்பது ஆராயப்பட வேண்டும். நன்னூலார் இப் பாகுபாட்டைப் புறக்கணித்து விட்டார் என்று கூறுவது பொருந்துமா ?

சார்பெழுத்து

தொல்காப்பியர் எழுத்துக்களைப் பற்றிக் கூறுங்கால்,

> 1 *எழுத்தெனப் படுப*
> *அகரமுதல் னகர விறுவாய்*
> *முப்பஃ தென்ப*
> *சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே*
>
> 2 *அவைதாம்,*
> *குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற*
> *முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன*

என்று கூறுகின்றார். எழுத்து என்று சிறப்பாகச் சொல்லப்படுவன உயிரும் உடம்புமாகிய முப்பதுந்தான் என்றும், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய அவ்வெழுத்துக்களைச் சார்ந்து வரும் மரபினையுடைய மூன்றும் எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லத் தகுவன வல்லவாயினும் அவ்வெழுத்துக்களோடு ஒத்த தன்மை யனவாய் வரும் என்றும் அவர் கூறுகின்றார். ஆனால் பவணந்தி முனிவரோவெனின்,

> 58 *மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி*
> *எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே*

என்று எழுத்து என்றால் என்ன என்றும், அது முதல், சார்பு என இருவகைப்படும் என்றும் பகுத்துக்கொண்டு கூறத் தொடங்கு கின்றார். எழுத்தாந் தனித்தன்மை பெறாதவை யென்று தொல்காப் பியர் பிரித்துக்கூறிய மூன்றையும் 'எழுத்தோரன்ன' என்றுங் கூறுதற்கியலாதென விடுத்த பிற ஏழையும் பவணந்தியார் எழுத்தின் ஒருவகையாம் சார்பில் அடக்கி அவை எழுத்தாந் தன்மையைப் பெற்றனவே என்று கூறிவிடுகின்றார்.

59 உயிரு முடம்புமா முப்பது முதலே

என்று முதலெழுத்தை வரையறுத்துவிட்டு,

60 உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்

என்று சார்பெழுத்துக்களைப் பத்தாகப் பெருக்கி,

61 உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறு றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப

என்று அச் சார்பெழுத்துக்களை முன்னூற்றறுபத்தொன்பது என விரித்துக் காட்டுகிறார் பவணந்தி முனிவர். ஆகவே 'எழுத்தோரன்ன' எனப்பட்ட மூன்றும் 'எழுத்தெனப்படுவ' என்னும் தகுதி பெற்றதோடு அவற்றோடு பிற ஏழும் சேர்ந்து அவை பத்தானது பவணந்தி காலத்திலாகும். அம் மூன்றும்தாம் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையவையாதலின் அவை மொழிக்கண் பிறவற்றைச் சார்ந்தன்றித் தனித்துப் பிறபோல நில்லாமையின் எழுத்தெனப்படா வாயினும் எழுத்தோரன்னவென்றார் தொல்காப்பியர். நன்னூலார் கூறும் பிறவேழும் எழுத்துக்களின் நீட்டமுங் குறுக்கமுமேயன்றி வேறல்லவாதலின் எழுத்தோரன்னவென்றுங் கூறப்படாவாயின. எழுத்துக்கள் சொற்களாங்கால் நிகழும் திரிபுகளையெல்லாம் தனியெழுத்தெனக் கொள்ளப்புகின் அஃது வரையறையின்றிப் பெருகும் என்பதும் உணரப்பட வேண்டும்.

எழுத்துக்களின் நீட்டமே அளபெடை என்பதால் அளபெடைத் தனியெழுத்தாகக் கொள்ளலாகாதெனின் குறில்களின் நீட்டமே நெடில்களாதலின் அவற்றையும் தனியெழுத்துக்களாகக் கொள்ள முடியாது என்றால் அவை பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும் உடைமையின் தனியெழுத்துக்களாயின எனக் கூறல் வேண்டும்.

சார்ந்து வருவது சார்பெழுத்தாயின் மெய் உயிரொலியைச் சார்ந்தன்றித் தனித்தியங்காமையின் அதனைச் சார்பெழுத்தென்று

கூறமுடியாதா என்ருல் குற்றியலிகரம் குற்றியலுகரம் போல அதற்குத் தனி மூல ஒலி இன்ருதலின் சார்பாகாது. ஆய்தத்திற்குத் தனி மூல ஒலி இல்லையே என்ருல் பிறவற்றைச் சார்ந்தல்லது வாராமையின் நுண்ணெலியா மிதனையும் சார்பென்ருர். ஒரு வகையில் தொல்காப்பியர் கூறும் மூன்றும் நுண்ணெலிகளே என்பது அறியத் தக்கதாகும்.

12 அவ்வியல் நிலையு மேனை மூன்றே

என்று அரைமாத்திரை கூறினுராயினும் அவற்றின் நுட்பம் கூர்ந்து நோக்கத்தக்கது. பிற ஏழையும் தொல்காப்பியர் வேறு இடங்களில் கூறுகின்ருராயினும் அவற்றைத் தனியாக (சார்பு) எழுத்தென்று கூறவில்லை.

உயிர் மெய்

உயிர்மெய்யைப் பவணந்தியார் தனி (சார்பு) எழுத்தென்று கொண்டது பொருந்துமா என்பது பற்றிச் சிறிது எண்ணிப் பார்க்க விரும்புகின்றேன்.

46 மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்

என்பதிலிருந்து உயிரெழுத்தாகிய அகரத்தோடு சேராவிட்டால் மெய்யெழுத்து இயங்காது என்பது பெறப்படுகின்றது. ஆகவே, மெய் அகரத்தோடு (உயிரோடு) சேருவது அதன் இயல்பென்ரு கிறது. ஆகவே அதன் இயல்பே அது வேருெரு எழுத்தாவதற்குக் காரணமாகுமா ? உயிர் உடல் இரண்டும் வெவ்வேறியல்பின என்கின்றனர். ஆனல் உடல் உயிரோடு சேர்ந்தே வாழ்வு பெறுகின்றது. அவ்வாறு அது அதனுடன் சேரும்போது பிறிதொன்ருய் விடுமா ? உடம்பு உயிர் பெருவிட்டால் உடம்பாகக் கருதப்பட முடியாதே ; பிணம் என்றன்ரே அஃது அழைக்கப்படும். உடம்பு உடம்பாந் தன்மை முற்றப் பெறுவதே அஃது உயிரோடு சேர்கின்றபொழுதுதான். ஆகவே உயிரோடு கூடிய உடம்பைப் பிறிதென்று தனித்துக் கூற முடியாதவாறுபோல உயிரோடு கூடிய மெய்யெழுத்தையும் தனியெழுத்தென்று கொள்வது பொருந்தாது.

10 மெய்யோ டியையினும் உயிரியல் திரியா

என்பதனையும்,

204 உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே

என்பதனையும் இங்குக் கருதுதல் நலமென்று கருதுகின்றேன். எனவே மெய்யினியக்கத்திற்காக வரும் உயிர், எழுத்தன்று ஆதலின்

அதனைச் சாரியை என்கின்றோம். பிறவழி வருவன எல்லாம் மெய்கள் சொல்லாங்கால் புணர்ச்சியிலிணைவனவே. அவற்றைத் தனியெழுத்து என்றால் புணர்ச்சியால் ஏற்படும் திரிபுகளையெல்லாம் தனியே சார்பெழுத்துக்களென வேண்டும். ஒருவனே ஓரிடத்துத் தந்தையாகவும் பிறிதோரிடத்து ஆசிரியனாகவும் தோன்றுவது போன்றதே மெய்உயிர்த் தோற்றமும்.

17 *புள்ளி யில்லா எல்லா மெய்யும்*

என்னும் நூற்பா மெய்யின் அத்தோற்ற வேறுபாடுகளை விளங்குவதேயாகும்.

"உயிரும் மெய்யுங் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை மெய்யோடியையினும் என உயிர்மேல் வைத்துக் கூறியது உயிரின் மாத்திரையே இதற்கும் மாத்திரையாதல் நோக்கிப் போலும்'' என்னும் இளம்பூரணர் கருத்தைப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் "தனித்தியங்கிச்சென்று சேரும் இயல்பு உயிர்க்கே உரித்தாதலின் அவ்வாறு கூறினார்'' என்று கூறிச் சிறக்கச் செய்கிறார். ஆகவே உயிருக்கு மெய்யினும் ஒரு தனித் தலைமை யுண்மை புலப்படுகிறது. அதனாற்றான், 'உடன்மே னுயிர்வன் தொன்னுவதியல்பே.' என்னும் விதிப்படி கற்றான் + அவன் = கற்றான வன் என்று எழுதாமல் "கற்றா னவன்'' என்று எழுதுகின்றோம். தலைவியிருக்கு மிடந்தேடிச் சென்று மணந்து அவளைத் தானிருக்குமிடத்திற்கு அழைத்து வந்து கலந்து வாழும் தலைவனைப்போல் உயிர் எழுத்து மெய்யெழுத்திருக்கும் நிலைமொழியீற்றுக்குச் சென்று அதனைத் தானிருக்குமிடமாகிய வருமொழி முதலுக்கழைத்து வந்து உயிர்மெய்யாய் வாழ்கின்றது.

குற்றியலிகரம்

குற்றியலிகரம் பற்றிய கருத்திலும் பவணந்தி தொல்காப்பியரது கருத்தினின்றும் பெரிதும் வேறுபட்டே செல்கின்றாரென்று தோன்றுகிறது. தொல்காப்பியர்,

34 *குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்*
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே

411 *யகரம் வரும்வழி இகரம் குறுகும்*
உகரக் கிளவி துவரத் தோன்றாது

என்னும் இரு நூற்பாக்களிலும் தொல்காப்பியர் குற்றியலிகரம் பற்றிக் கூறியுள்ளார். முதலில் உள்ள நூற்பாவில் மியா என்பதி

லுள்ள குற்றியலிகரத்தைக் கூறுகின்றார். அச்சொல்லிலுள்ள இகரம் குறுகிய ஓசையை உடைய இகரம் என்று கூறும் தொல்காப்பியர் அது முற்றியலிகரங்குறுகி நின்றது என்று கூறவில்லை. எனவே அவரது கருத்துப்படி இது ஒரு தனியெழுத்து என்பது பெறப் படுகின்றது. இதனைப் பொறுத்தவரையில் பவணந்தி முனிவரும் வேறுபடாது இணங்கியே உரைக்கின்றார்.

93 "அசைச்சொல் மியாவின் இகரம்"

என்றே கூறி அது திரிந்த இகரமன்று என்ற கருத்தையே அவரும் வெளிப்படுத்துகின்றார். ஆனால் புணரியலில் வரும் இகரத்தில் இருவரும் வேறுபடுகின்றனர். தொல்காப்பியர் நாகு + யாது = நாகியாது என்றாகும்போது யகரம் வரும்போது நிலைமொழியிலுள்ள உகரம் முற்றிலும் தோன்றாது (அதாவது மறைந்து விடும்) என்றும், அங்கு குறுகிய இகரம் ஒன்று வருமென்றும் கூறுகின்றார். ஆனால் பவணந்தி முனிவரோவெனின்

93 யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய

என்று அந்த இடத்திலுள்ள உகரம் இகரமாகத் திரியும் என்றும் அவ்வாறு திரியுமிகரம் குற்றியலிகரமென்றும் கூறுகின்றார். உயிர் எழுத்தாகிய உகரம் இகரமாகத் திரிந்ததென்னும் பவணந்தி முனிவர் கருத்துப் பொருத்தமற்றதாகத் தோன்றுகின்றது. எனவே உகரம் திரிந்து இகரமாகாதென்பதும் குறுகிய இகரமாகாதென்பதும் குறுகிய இகரமொன்று தனியே உள்ளதென்பதும் முற்றியலிகரம் குறுகிக் குற்றியலிகரமாவது (புணரியல் நிலையிடை வருவது) சார் பெழுத்தாகாதென்பதும் பெறப்பட்டன. தொல்காப்பியர் குறுகிய இ, உ க்களைத் தனி (சார்பு) எழுத்துக்களாகவே கொள்கிறார். "குற்றியலிகரம் ஆய்தம்போல வேறு எழுத்தேயாவதன்றி ஒரு மாத்திரையாய் நின்ற இகர, உகரங்களே மகரக் குறுக்கம் முதலியன போல ஒரு காரணம் பற்றி அரைமாத்திரையாய் நின்றனவல்ல" என்று முதற் சூத்திர விருத்தியுரையில் சிவஞான முனிவர் கூறும் கருத்து இவ்வகையில் ஏற்புடையதாகவே உள்ளது. இதனால்தான் தொல்காப்பியர் மூன்று தவிரப் பிறவற்றைச் சார்பெழுத்துள் அடக்காது விடுகின்றார்.

குற்றியலுகரம்

மேற்கூறியவற்றால் குற்றியலிகரம்போல் குற்றியலுகரமுந் தனியெழுத்தே என்பது பெறப்படும்.

36 நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே

என்னும் நூற்பா தனிக் குற்றியலுகர எழுத்தினைக் கூறுகின்றது.

37 இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான

என்பதால் சுட்டுப்படுவது சார்பெழுத்தாம் நிலை பெறுவதன்று.

ஆய்தம்

இன்றைய மொழியியலார் கற்பனை எனக் கூறினும் பண்டைய இலக்கண நூலோர் அதனைத் தனித்துக் காணப்பட்டதோர் நுண் ணொலியாகவே கொண்டனர். அஃதுள்ள பல சொற்கள் அன்றிருந்து மொழிமுதற் குற்றுகரம்போல் (நுந்தை) இன்று வீழ்ந்திருக்கலாம்.

உயிரளபெடை

5 மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே

என்று மூன்று மாத்திரையாய் ஒலிக்கு ஓரெழுத்து இல்லை என்று வரையறுத்த தொல்காப்பியர்

6 நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்

என்னும் நூற்பாவில் ஒலிநயம் போன்றவற்றுக்காக நீண்ட ஓசை தேவைப்படின் அவ்விடங்களில் தேவையான அளவு ஓசையைக் கூடுதலாக எழுப்பிக் கொள்க என்று கூறுகின்றார். எழுதுங்கால் அவ்விடங்களில் உரிய குற்றெழுத்துக்களை இசைநிறைக்கும் குறி களாக எழுதிக் கொள்க என்று கூறுகின்றார்.

41 குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே

42 ஐ ஒள வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர உகர மிசை நிறை வாகும்

என்பவற்றால் அளபெடையில் எழுதப்படும் குற்றெழுத்துக்கள் பிற இடங்களில் வருவன போன்ற எழுத்துக்களல்ல; இன்று பயன் படுத்தப்படும் நிறுத்தக் குறிகள் போன்ற இசைநிறைக்குறியே என்றும் கூறியுள்ளார். ஆனால் பவணந்தி,

91 இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடி
லளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே

என்கிருர். தொல்காப்பியர் "நீட்டம் வேண்டின்" என்றதற்கு மாருகப் பவணந்தி 'இசைகெடின்" என்று கூறுகின்ருர். மேலும் நெட்டெழுத்துக்கள் நீண்டொலிக்கும் என்றும் அங்கு அவற்றிற்கு மூன்று மாத்திரைகளென்றும் கூறுகின்ருர். இவரும் ஆண்டு எழுதப்படும் குறில்கள் குறிகளே அன்றிப் பிறபோன்ற எழுத்துக் களாகாவென்கிருர்.

"இவ்வாறு கூறியதன் காரணம் தமிழ் அளபெடையும் வடமொழிப் புளுதமும் ஒன்று என்று பிறழ உணர்ந்ததனுலாகும்" என்று சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறியுள்ளார். வடமொழிப் புலமை தமிழ் மரபை அழித்துள்ளமைக்கு இஃதோரெடுத்துக் காட்டாகும் என்று டாக்டர் சி. இலக்குவஞர் தம் தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் நூலில் 63 ஆம் பக்கத்தில் வரைந்துள்ள கருத்து இதனேடொப்பிட்டு ஆராயத் தகுவதாகும்.

ஒற்றளபெடை

33 அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப
ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப

என்பவற்ருல் தொல்காப்பியர் ஒற்றளபெடை இசைக்குத்தான் வருமென்றும் அது அசைநிலை பெறுவது பற்றியுமே கூறுகின்ருர். ஆனுல் பவணந்தியோ,

92 ஙஞண நமன வயலள, வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே

என்று வகுத்தும் விரித்துங் கூறுகின்ருர்.

பிற

ஏனே ஐ, ஔ, ஃ, ம் குறுக்கங்கள் பற்றிச் சிறப்பாக ஏதும் ஈண்டு ஆராயப்பட வில்லை. இவை யாவும் முதலெழுத்தின் நீட்டக் குறுக்கங்களே என்று தொல்காப்பியரும் தனிச் சார்பெழுத்துக்க ளென்று பவணந்தியும் உரைக்கின்றனர். ஔகாரக் குறுக்கத்தைத் தொல்காப்பியர் கூறவில்லை. வ. உ. சி. தம் உரையிற் கொள்

கின்றார். ஆய்தக்குறுக்கம் பற்றியும் தொல்காப்பியம் கூறவில்லை. மாத்திரை கூறும்போது 'அவ்வியல் நிலையும் ஏனை முன்றே' (12) என்று அம்மூன்றுக்கு மட்டுமே தொல்காப்பியர் மாத்திரை கூறுகின்றார். பவணந்தியோ சார்பெழுத்துக்களென்று தாம் கொள்ளும் அனைத்துக்கும் மாத்திரைகளையும் வரையறுக்கின்றார்.

முடிவுரை

இருவர் கருத்துக்களையும் இணைத்தால் எழுத்துக்களின் நான்கு நிலைகள் பெறப்படுகின்றன. அவை:

1 தனித்தியங்கக் கூடியவை (உயிர்)

2 தனித்தியங்க முடியாவிடினும் தனி ஒலிகள் (மெய்)

3 முழு எழுத்தியல் பெறு நுண்ணொலிகள் (தொல். கூறும் சார்பெழுத்து)

4 எழுத்துக்களின் திரிந்த நிலை (பவ. கூறும் சார்பெழுத்துக்கள்)

7

நிகண்டுகள்

பண்டித வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி

தோற்றுவாய்

மனிதன் தன் கருத்துக்களைத் தெரிவிக்கப் பேச்சையும் எழுத்தையும் கருவியாகக் கொண்டான். இவ்விருவகை வழக்கிற்கும், தன் நாட்டிலுள்ள மொழியையே கருவியாகக் கொண்டான். அவ் வகையில் அச் சொற்கள் இரண்டு வகையாகப் பிரிந்தன. முழுமையாக இருக்கும் சொற்கள் இயற்சொல் என்றும், அவற்றினின்றும் முழுமையாகவோ அன்றிச் சிறிதளவோ திரிந்த சொற்கள் திரிசொற்கள் என்றும் பெயர் பெற்றன. இங்ஙனம் தன்னுட்டில் பயின்று வாழ்ந்த மனிதன் தன் நாட்டுக்கு அருகிலிருக்கும் நாட்டினரோடு பயிலத் தொடங்க, அவரின் பேச்சு, எழுத்து வழக்கையும் மேற்கொள்ளலானுன். அவ் வகையில் வழங்கப் பட்டனவே திசைச் சொற்கள் ஆகும். இனித் தனக்கு அயலாக இருக்கும் நாட்டவருடன் பேசப் பழக அவற்ருல் வந்தனவே பிற மொழிச் சொற்களாகும். நம் மொழியைப் பொறுத்த மட்டில் வட சொற்கள் இவ்வகையைச் சார்ந்தனவாகும். இவ்வாறு சொற்கள் பெருகி வளர்ந்தவாற்றை,

> *"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்—என்று*
> *அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"*

என வரும் தொல்காப்பியத்தால் அறியலாம்.

நெறிமுறை

இங்ஙனம் வளர்ந்த சொற்களை ஒரு நெறிப்படுத்திப் பொருளைக் குறிப்பன இவை, அவற்றின் செயலைக் குறிப்பன இவை, அப் பொருளையும் செயலையும் விளக்க இடைநின்று உதவுவன இவை, அவற்றின் பண்பு முதலியவற்றைக் குறித்து நிற்பன இவை, என வகுத்து விளக்க எழுந்தனவே இலக்கண நூல்களாகும். இவ்வாற்ருன் அவை பெயர், வினை, இடை, உரி எனப் பெயர் பெற்றன. இந் நெறி முறையை முதற்கண் மேற்கொண்டு செய்தவர் அகத்தியர் என்றல் வழக்கு. எனினும் இவற்றைக் காணும் நிலையில் சிறந்து விளங்குவது தொல்காப்பியமே ஆகும்.

இலக்கணத்தின் கூறுகள்

இவ் வகையில் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய முப்பிரிவையும் கொண்டிலங்குகின்றது. எழுத்துக்களின் வகை, அவை தனித்தும், பிறவற்றோடு சார்ந்தும் வழங்கும் முறை, அவற்றின் பிறப்பிடம், ஒலிநிலை, எழுத்துக்கள் ஒன்றோடொன்று இயையுங்கால் வரும் நிலை, ஆகியவை எழுத்தில் இடம் பெறுகின்றன. சொற்களின் வகை, அவற்றுள் வழுவுடையன, வழுவற்றன என்ற பகுப்பு, அவற்றின் இலக்கணம், அவற்றின் தொகுதிப் பெயர், அவற்றின் பொருள் ஆகியவை சொல்லில் இடம் பெறுகின்றன.

மக்கள் தொகையின் வகை, அவரவர் வாழும் இடம், அவற்றைச் சுற்றியுள்ள பொருள்கள், அவரவர்கள் வாழ்வியலில் அமைந்த அக, புறச்செய்திகள், ஒழுகலாறுகள், குறிக்கோள், தம் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள்[1] ஆகியவை பொருளில் இடம் பெறுகின்றன.

நிகண்டுகள் தோற்றம்

மேற்கூறிய மூவகைப் பாகுபாடுகளையும் ஊன்றிக் கவனித்த சான்றோர்கள் மனிதன் நெறியோடும், நேர்மையோடும் வாழ வேண்டுவதற்கும், அங்ஙனம் வாழ்ந்தவர்கள் வாழ வேண்டியவர்களுக்கு அறிவுறுத்துவதற்கும் பயன்படுவன சொற்களே எனக் கண்டனர். ஆதலின் அச் சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றில் பெயரைக் குறிப்பன இவை, செயலைக் குறிப்பன இவை, இன்னின்ன பொருளால் வழங்குவன இவை என எடுத்து விளக்க முற்பட்டனர். இவற்றின் வளர்ச்சியே நிகண்டுகளாகும்.

நிகண்டு

நிகண்டு என்பது கூட்டம் அல்லது தொகுதி எனப் பொருள் படும். எனவே சொற்களின் கோவை அல்லது களஞ்சியம் நிகண்டாகும். இதன்கண் பெயர், வினை, இடை, உரி, திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய அனைத்தும் இடம் பெற்றுள்ளன. நிகண்டு என்பது வடசொல். முதன்முதல் வடமொழியில் வேதத்திற்கு அங்கமாகிய வைதிகச் சொற்களின் பொருள்களை உணர்த்தும்

---

1. செய்யுளியலும், மரபியலும்.

கருவி நூலுக்கு மட்டுமே இப் பெயர் இருந்தது. பின்பு சொற்பொருள் உணர்த்தும் நூலுக்கெல்லாம் இப் பெயர் வந்துவிட்டது.

தமிழில் இப் பெயர் வழக்கு

தமிழில் இத்தகைய நூலிற்கு உரிச்சொற் பனுவல் என்றே பெயர் இருந்தது.

1 *"பிங்கலம் முதலா நல்லோர் உரிச் சொலின்"—நன்னூல்*

2 *"பிங்கலம் முதலிய உரிச்சொல் பனுவல்"—மயிலைநாதர்*

3 *"கயாதரன் தொல் வேதியன் செய்த உரிச்சொற் பனுவலும்"*

4 *"தன் தமிழோர்"*

விரும்பிய கோவை உரிச்சொற் பனுவல் விரித்து என வருவன இவ் வுண்மையை விளக்கும். இத்தமிழ் வழக்கே காலப்போக்கில் நிகண்டு என வழங்குவதாயிற்று. இப்பெயர் வரக் காரணம் என்ன?

பெயரும் வினையும் பொருளும் பொருளின் புடை பெயர்ச்சியு மாகும். இடைச் சொல் பெயர் வினையைச் சார்ந்தல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல. உரிச்சொல் பெயர் வினைகட்கு முதனிலையாயும், பொருளது இசை, குறிப்பு, பண்பு முதலியவற்றை விளக்குவதாயும், பொருள் உணர்தற்கு அரிதாயும் இருத்தலின் உரிச்சொற்களுக்குரிய பொருளை அறிதற்கே பெருமுயற்சி வேண்டி யுள்ளது. தொல்காப்பியரும் உரிச்சொற்களுக்குப் பொருள் கூறும் பொழுதே பொருள் விளக்கும் நெறியை விரித்துக் கூறியுள்ளார். ஆதலின் ஏனைய சொற்களைப் பற்றி விளக்கம் இருப்பினும், உரிச் சொற்களின் சொற்களைப் பற்றிய இன்றியமையாமை கருதி உரிச் சொல் பனுவல் என வழங்கினர்.

நிகண்டு என்ற பெயர் வழக்கு

நிகண்டு என்னும் பெயர் 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இறையனார் களவியல் உரையில் முதன்முதலில் காணப்படுகின்றது. இடுகுறியால் பெயர் பெற்றன நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு முதலாயின என்பது அவ்வுரை. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயரும் இங்ஙனமே கூறுகின்றனர். இங்குக் குறிக்கப் பெற்ற நிகண்டு யாரால் எப்பொழுது செய்யப் பெற்றது என்பது தெரியவில்லை. சங்க காலப் புலவரில் நிகண்டன் கலைக்கோட்டன் தண்டனார் என்றொரு புலவர் காணப்படுகின்றார். அவருக்கும் இந் நிகண்டிற்கும் தொடர்பு உளதா என்பது ஆராயத்தக்கது.

16 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மண்டல புருடர் என்பார் தம் நூலை "நிகண்டு சூடாமணி என ஒன்று சொல்வன்" எனக் குறிக்கின்றுர். இக் காலத்திலிருந்தே இப் பெயர் பெருக வழங்கியது.

நிகண்டுகட்குத் தாயகம்

இக் காலத்தில் காண்பதுபோல் முழுமையான நிகண்டு நூல்கள் பத்தாம் நூற்றுண்டிற்கு முன்பு காணப்படவில்லை யெனினும் இங்ஙனம் தோன்றுதற்குத் தாயகமாகச் சிறந்து விளங்கியிருப்பது தொல்காப்பியமாகும். தொல்காப்பியத்தில் இடையியல், உரியியல், மரபியல்களில் காணும் சொற்களின் அடைவும் பொருளும் இவ் வுண்மையை விளக்கும். இனி நிகண்டு என முழுமையாக அமைந்து இருக்கும் நூல்களைக் காண்போம்.

திவாகரம்

இதுவே நிகண்டு நூல்களில் முதன்மையும் தலைமையும் பெற்று விளங்குவதாகும். இதனின் வேருக ஆதி திவாகரம் என்றெரு நூல் இருந்ததாகவும் அதற்கும் இந் நிகண்டிற்கும் வேறுபாடு தெரியவே அதனை ஆதிதிவாகரம் என்றும், இதனைச் சேந்தன் திவாகரம் என்றும் கூறுப என்றும் சிலர் கருதுவர். இதனைத் தமிழ் வரலாறு எழுதிய சீனிவாச பிள்ளையவர்கள் வன்மையாக மறுக்கின்றுர்.

1 சூடாமணி நிகண்டின் சிறப்புப் பாயிரத்தில் "விரவிய தேவர் மக்கள் விலங்கொடு மரமிடம் பல்பொருள் செயும் வடிவு பண்பு போற்றிய செயல் ஒலிப்பேர் ஒரு சொற்பல் பொருளினேடு முரைத்தபல் பெயர் கூட்டந்தான் வருமுறை திவாகரம் போல் வைத்துப் பிங்கலந்தை தன்னில்".

"ஒருங்குள பொருளுமோர்ந் திட்டுரைத்தனன்"—' எனக் கூறப்பட்டுள்ளது. அக் காலத்தில் ஆதி திவாகரம் என்றெரு தனி நூல் இருப்பின் அதனை அவர் குறியாது விடுவதற்குக் காரண மில்லை.

2. அடியார்க்கு நல்லார் சொற்பொருள் விளக்குங்கால் திவாகரத்தையே குறிக்கின்றனர்" [2]

---

2. 1. நீரின்றி வேனில் தெறு நிலம் பாலை (திவா. 5) சிலம்பு: பக். 18.
   2. உத்தர குரு போக பூமி (திவா. 12) சிலம்பு: பக். 46, 47.
   3. ஆக சிறுமை குற்றம் (திவா.   ) சிலம்பு: பக். 109.
   4. இங்ஙனமே சிலம்பு: பக். 153, 159, 246—ஆகிய இடங் களிலும் திவாகர நூற்பாக்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

3. நன்னூலார் பிங்கலம் முதலா எனக் கூறுகின்றனரே அன்றி ஆதி திவாகரத்தைக் கூறவில்லை என்பன அவர்தரும் ஏதுக்களாகும். எனினும் ஆதி திவாகரம் ஒன்றிருத்தல் வேண்டும் என்று கருதுகிருர் புலவர் திரு. சுந்தர சண்முகனர்.

சேந்தன் திவாகரம் பெயர்க் காரணம்

இந் நூலைச் செய்தவர் திவாகரர். செய்வித்தவன் சேந்தன். இவ்விரு பெயர்களையும் இணைத்து இந் நூற் 'சேந்தன் திவாகரம்' எனப் பெயர் பெற்றது. நூல், பெயர் பெறுமாற்றில் இது ஒரு புதுமையே.

திவாகரர்

சேந்தனுல் ஆதரிக்கப் பெற்றமையின் இவரும் அச்சோழ நாட்டினராகலாம் எனக் கருத இடமுண்டு. திவாகர முனிவர் என வழங்குவதைக் கொண்டு அவர் முனிவரென அறியலாம். இவ்வளவன்றி வேறு ஏதும் அறிய இயன்றிலது.

சமயம்

இவர் விநாயகர் வணக்கம் தொடங்கி இந்நூலைச் செய்திருப் பதனுலும், 'தந்தி முகத்து எந்தை' என அப்பெருமானை உரிமை தோன்றக் குறித்திருப்பதனுலும், இவர் சைவ சமயத்தினர் எனத் தெளியலாம்.

செய்ந்நன்றி மறவாச் செம்மல்

செய்ந்நன்றியறிதலில் இவர் கம்பரையும் சேக்கிழாரையும் ஒத்தவர். அவர்கள் தம்மைப் புரந்த புரவலர்களைப் பாராட்டுவதைப் போன்றே இவரும் தம் நூலின் 12 தொகுதிகளிலும் அவ்வவற்று இறுதியில் தம்மைப் புரந்த சேந்தனைப் பாராட்டியுள்ளார். அந் நூற் பாசுகள் பாராட்டுரையாக மட்டும் அமைந்ததன்று. சேந்தனைப் பற்றி அறியத்தகும் வரலாற்றுக் குறிப்பும் உடையதாகும். இச் சிறப்புடைமை நோக்கி அவற்றை ஈண்டுத் தொகுத்துக் காண்போம்:

1 *"வடநூ ற்கரசன் தென்தமிழ்க் கவிஞன்*
கவியரங் கேற்றும் உபய கவிப் புலவன்
செறி குணத்து அம்பர் கிழவோன் சேந்தன்"

2 *"கற்ற நாவினன் கேட்ட செவியினன்*
முற்ற உணர்ந்த மூதறிவாளன்
நாகரிக நாட்டத் தாரியன் அருவந்தை
தேறுங் காட்சிச் சேந்தன்"

3 "காதலி கையிற் போதிப் பெருந்தவன்
தெவ்வடு கால வைவேல் எழிலி
அவ்வை பாடிய அம்பர் கிழவன்
தேன் தார்ச் சேந்தன்"

4 "நாடே பிறர் நாட்டிற்குவமை ஆறே
காலம் அறிந்துதவும் காவிரி தானே
ஆடவர் திலகன் அம்பல் மன்னன்
ஈடிசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத் தரும்பொருள் விளங்கும்"

5 "ஒருவற் கொருவன் ஆகி உதவியும்
பரிசில் மாக்கள் பற்பல ராயினும்
தாளுெரு வன்னே தரணி மாணவன்
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரம்"

6 "வருநற் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனல் காவிரிப் பெரும்பதி
அம்பர்க் கதிபதி சேந்தன்"

7 "முற்றவப் பயனே கற்றவப் பயனே
சாபத் திழுக்கிய தேவ சாதரில்
தோற்றம் உடையனென அம்பல் தோன்றிய
இயற்கைச் சேந்தன்"

8 "மறக் குறும்பு ஓட்டி அறத்தின் வழி நின்று
கவிகைத் தண்ணளி புலிபெற ஆணையின்
ஐம்புலன் ஆளும் அம்பர்க் கோமான்
திண்பெருஞ் சேந்தன் திவாகரம்"

9 "அண்ணல் செம்பாதிக் காணியாட் டியைப்
பெண்ணணங்கு மூவுலகும் பெற்ற—அம்மையைச்
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன் அம்பர்க் காவலன் சேந்தன்"

10 "அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருசற் கடிந்த வீரத் தயிலும்
பாடிய புலவன் பதிஅம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரம்"

11 "புலவி நீக்கிய கல்விச் செல்விக்கு
அமிழ்து சுவைஈந்த அரும்பெறல் இன்பத்து
ஒருபெருஞ் செல்வன் அருவந்தைச் சேந்தன்
பகர்வுற்ற திவாகரம்"

12 "செம்பொற் கிடையன் அம்பொற் சேந்தன்
நல்லராளன் நலமிகு நாட்டத்தன்"

இவற்றால் சேந்தனின் புலமை நலமும், புலவர் பாடும் புகழுடைமையும், கொடைத் திறனும், அவனது ஊரும், ஒழுக்க நலனும் சமய நலமும், நூல் இயற்றும் பேரறிவும் ஒருங்கு விளங்கும்.

சோழ நாட்டிலுள்ள அம்பல் என்ற ஊரினனாய் இவன் இருப்பது போலவே புறநானூற்றில் கல்லாடனாரால் பாடப்பெற்ற அம்பர் கிழான் அருவந்தை என்றொருவன் உளன் (புறம் 385). சிலர் இவ்விருவரும் ஒருவரே என்று கூறுவர். அங்ஙனம் கருதின் திவாகரர் சங்க காலத்தவர் ஆவர். இது எவ்வாற்றானும் பொருத்தம் உடைத்தன்று.

1. சேந்தனால் புரக்கப்பட்டவர் திவாகரர். இவர் நூலின் காப்பில் 'தந்தி முகத்து எந்தை' யென விநாயகரைக் குறிக்கின்றார். விநாயகர் வழிபாடு தமிழகத்தில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் வந்ததென்பது அறிஞர் கூற்று. ஆதலின் 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே சேந்தன் வாழ்ந்து இருத்தல் வேண்டும்.

2. திவாகர நிகண்டில் மக்கட் பெயர் தொகுதியில் வேள் எனத்தகும் சாளுக்கியரைப் பற்றிப் பேசுகின்றனர். தமிழ்நாட்டில் சாளுக்கியர் தொடர்பு 6, 7-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. ஆதலின் சேந்தன் காலம் அந் நூற்றாண்டிற்குப் பிந்தியதேயாகும்.

3. சேந்தனைப் 'பெண்ணணங்கை மூவுலகும் பெற்ற அம்மையைச் செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த நாவலன்' எனத் திவாகரர் குறிப்பிடுகின்றார். அந்தாதி போன்ற இலக்கிய வகைகள் சங்க காலத்தில் இல்லை. ஆதலின் அவன் காலம் பிற்காலமே என்பது துணிவு. எனவே திவாகரர் காலமே சேந்தனின் காலமாகும்.

காலம்

எட்டாம் நூற்றாண்டு என்பர் சிலர். ஒன்பதாம் நூற்றாண்டு என்பர் சிலர். பிங்கலர் என்பார் இவர் மகனார் எனப் பலரும் கூறுவ

தாலும், அப்பிங்கலர் காலம் 10-ஆம் நூற்றுண்டென ஆராய்ச்சியாளர் அறுதியிடுதலானும் அவர் காலம் கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் தொடக்கம் எனக் கருதலாம்.

நுவலும் பொருளும் திறனும்

இந்நூல் 12 தொகுதிகளையுடையது. அவையாவன :—

1 *தெய்வப் பெயர்த் தொகுதி*
2 *மக்கள் பெயர்த் தொகுதி*
3 *விலங்கின் பெயர்த் தொகுதி*
4 *மரப் பெயர்த் தொகுதி*
5 *இடப் பெயர்த் தொகுதி*
6 *பல் பொருள் பெயர்த் தொகுதி*
7 *செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி*
8 *பண்பு பற்றிய பெயர்த் தொகுதி*
9 *செயல் பற்றிய பெயர்த் தொகுதி*
10 *ஒலி பற்றிய பெயர்த் தொகுதி*
11 *ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி*
12 *பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி*

1. தெய்வப் பெயர்த்தொகுதி

இப்பகுதிக்கண் சிவன், திருமால், பிரமன், இந்திரன், கணபதி, முருகன், காமன், வைரவன், ஐயனுர், வச்சிரவண்ணன், அருகன், புத்தன், நமன், காலன், உமையவள், கங்கை, காடுகாண்மோடி, திருமகள், சரசுவதி, சேட்டை, இந்திராணி, காளி முதலிய தெய்வப் பெயர்களும், தேவர், அசுரர், கந்தருவர் முதலியவர்களின் பெயர்களும், பூதகணம், பேய் இவற்றின் பெயர்களும், ஒன்பான் கோளின் பெயர்களும், ஐம்பெரும் பூதங்களின் பெயர்களும், விண்மீன்கள், அறுவகைப் பெரும்பொழுது, மழை, இடி, மேகம் முதலியவற்றின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. எனவே இப்பெயர்த் தொகுதியில் தெய்வங்களும் அவற்றின் ஆணை வழி நிற்கும் பல பெயர்களும் உள்ளன எனத் தெரிகிறது. தெய்வப் பெயர்கள் கூறுங்கால் ஆனை உரித்தோன், புலித்தோலுடையோன், உந்திபூத்தோன், நரசிங்கன், சூர்ப்பகை, வரைபகயெறிந்தோன் முதலிய பெயர்கள் கூறப்படுகின்றன. இவை போல்வன எல்லாம் புராண வரலாற்றை உட்கொண்டமைந்த காரணப் பெயர்கள். அறு

வகைப்பருவம் கூறி அவற்றை ஆவணி முதலாகக் கணக்கிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

> "காரே, கூதிர், முன்பனி பின்பனி
> சீர் இளவேனில் முதுவேனில் என்றுங்கு
> இருமூன்று வகைய பருவம் அவைதாம்
> ஆவணி முதலா இரண்டிரண்டாக
> மேவின திங்கள் எண்ணினர் கொளலே"

என்பதே அந்நூற்பா. இலக்கண விளக்க நூலார் இதை,

> "காரே கூதிர் முன்பனி பின்பனி
> சீரிளவேனில் வேனில் என்றுங்கு
> இருமூன்று திறத்தது, பெரும் பொழுது
> அவைதாம்,
>
> ஆவணி முதலா இரண்டிரண்டாக
> ஆடி இறுதி ஆயுங்காலே"

என அப்படியே தழுவி உரைத்தமை நினைவு கூர்தற்குரியது.

நிகழ்காலத்தின் பெயர் 'வேலை' என்பதும், பெருமழையின் பெயர் 'ஆசாரம்' என்பதும் புதியனவாய் உள்ளன.

2. மக்கள் பெயர்த் தொகுதி

இத்தொகுதியுள் அருந்தவர், சைவ, வைணவ, சமண, புத்தர், கலைவல்லோர், மூவகையரசர் பெயர்களும், நால்வகை வருணத்துப் பெயர், பல்வகைத் தொழில் வல்லுநர் பெயர், ஐவகை நிலத்திலுள்ள மக்கட்பெயர், மக்கள் உடல் உறுப்பின் பெயர், பொறி புலன்களின் பெயர் முதலியவையும் கூறப்பட்டுள்ளன. கற்றோரை நூலுரைப் போர், கலை வல்லோர், அறிவுடையோர், புலவர் எனப் பாகுபடுத்தி உரைத்திருப்பதும், புதல்வர்களைக் கொண்டோன் பிழைத்துப் பெறும் புதல்வன், கைம்மையில் பெறும் புதல்வன், கன்னியில் பெறும் புதல்வன் எனப் பாகுபடுத்தி இருப்பதும் அக்காலச் சமுதாய அறிவியல் நுட்பத்தையும், ஏற்றிழிவுகளையும் காட்டு கின்றன.

1	நூலுரைப்போர் பெயர்	கணக்காயர்
2	கலைவல்லோர் பெயர்	கவிஞர்
3	அறிவுடையோர் பெயா	சான்றோர், மிக்கோர், நல்லவர், மேலவர், ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர்.

4 புலவர் பெயர்	கவிஞர், கலைஞர், சான்றவர் மேதையர், சவையேசங்க முதுவோர், மூத்தோர், அவையேறறிஞர்.
கொண்டோற் பிழைத்துப் பெறும் புதல்வன்	குண்டகன்
கைம்மையில் பெறும் புதல்வன்	கோளகன்
கன்னியில் பெறும் புதல்வன்	கானீனன்

ஐவகை நிலத்தின் பெயர்கள்,

> "ஆயர் வேட்டுவர் ஆடுஉத்திணைப் பெயர்
> ஆவயின் வரும் கிழவரும் உளரே"

எனத் தொல்காப்பியர் கூறியதைத் தழுவி எழுந்தவையாகும். மூவேந்தர்களைக் குறிக்கும் பொழுது சேர அரசனை முற்கூறி இருப்பது இளங்கோவடிகள் போன்று இவர்தம் நடுநிலைமை காட்டுகின்றது.[1]

குயவர் பெயரில் மட்பகைஞன் என்பது இடம் பெற்றிருப்பது சுவைத்தற்குரியது. குமரகுருபரரும் பிள்ளைத்தமிழில் இச்சொல்லை எடுத்தாண்டு உள்ளார்.[2]

3. விலங்கின் பெயர்த் தொகுதி

இத்தொகுதிக் கண் சிங்கம், புலி, யானை, குதிரை, பெற்றம், ஆடு, கழுதை, பன்றி, குரங்கு, அணில், எலி முதலிய விலங்கு களின் பெயர்களும், பருந்து, குயில், காக்கை, அன்றில் முதலிய பறவைகளின் பெயர்களும், முதலை, மீன், சிலந்தி, கரையான், புழு முதலிய பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் யானை, பெற்றம், குரங்கு ஆகியவற்றிற்கு ஆண் பால் பெயர்கள் இவை, பெண்பால் பெயர்கள் இவை எனப் பாகுபாடு செய்திருப்பதும், களிறு, ஒருத்தல், போத்து, பெட்டை, பிணை, மூடு, பாட்டி, குருளை, பிள்ளை, கன்று, குழவி, பறழ் எனப்பெயர் பெறு வனவற்றைப் பாகுபாடு செய்திருப்பதும் தொல்காப்பியத்தைத் தழுவியன.

---

1. ஆய்ச்சியர் குரவையுள் பாண்டியன், சோழன், சேரன் என்ற வரிசையில் இளங்கோவடிகள் கூறியிருப்பது பற்றி அடியார்க்கு நல்லார் கூறிய உரையைக் காண்க.
2. 'தெருமரல் மட்பகைஞன்'—குமரகுருபரர்.

அவற்றுள் சில :—

போத்து :—புலி, மரை, புல்வாய், எருமை முதலியன

பெட்டை :—ஒட்டகம், குதிரை, கழுதை, மரை முதலியன

பிணை :—புலி, உழை, புல்வாய், கவரி முதலியன

மூடு, கடமை :—ஆடு அல்லவை பெரு

பாட்டி :—பன்றி, நாய் முதலியன.

குருளை, கன்று, குழவி, இவை விலங்கின் பிள்ளைப் பெயர்களாம்.

பறழ் :—வெருகு, பன்றி, அணில்.

இக்கருத்துக்கள்,

"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையும் மகவு மறியு மென்று
ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே"

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடு நாகுங் கடமையு மளகு
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே"

என்ற தொல்காப்பிய மரபியல் நூற்பாக்களை நினைவுபடுத்துவன.

"பெண் பாலெல்லையும் பெண்எனப் படுமே
ஆண் பாலெல்லையும் ஆண்எனப் படுமே"

என்ற திவாகர நூற்பாக்கள்

"ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய
பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய
காண்ப வவையவை யப்பாலான"

என்ற தொல்காப்பிய நூற்பாவை முழுமையும் தழுவியுள்ளன.

"அவற்றுள்
பார்ப்பும் பறழும் பறப்பவற் றிளமை"

என்ற தொல்காப்பிய நூற்பா, திவாகரத்துள் தனிச் சொல் நீக்கிக் காணப்படுகிறது.

"கோடுவாழ் குரங்கு" என்ற தொல்காப்பியத் தொடர்திவாகரத்தில் அப்படியே உளது.

4. மரப் பெயர்த் தொகுதி

இத்தொகுதிக்கண் சந்தனம், அகில், மகிழ், தேக்கு, சண்பகம், ஆல், அரசு, அசோகு, மருது, கொன்றை, குரா, வேம்பு, ஆத்தி, இருப்பை, கோங்கு, கருங்காலி, எட்டி, புன்னை, குருந்து, நெல்லி, குடைவேல், விளர், வில்வம், வேங்கை, கடம்பு, பலா, மாதுளை, எலுமிச்சை, குருக்கத்தி, இலந்தை, சதுரக்கள்ளி, அணிச்சம், ஓடு, சே, தெங்கு, மூங்கில், ஆண், வாழை முதலிய பெயர்கள் கூறப் பெற்றுள்ளன. இவையன்றிப் பூவாது காய்க்கும் கோளி மரமும், வண்டுணு மலர் மரமான சண்பகம், வேங்கையும் இத்தொகுதிக்கண் இடம் பெற்றுள்ளன. இம்மரப் பெயர்கள் இருக்கும் காட்டின் பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன. நந்தவனத்தின் பெயர் 11 என அறிவிக்கின்றது.

அவையாவன :— தேம்பொழில், மரக்கா, தோட்டம், துடவை, உய்யானம், சோலை, வனம், உத்தியானம், தண்டலை, காலம், அடவி என்பன.

மேற்கூறிய மரங்களுள் ஆண், சே, ஓடு என்பன தொல் காப்பியரால் கூறப்பெற்ற மரங்களாகும்.

இனி "மருந்தாகித் தப்பாமரம்" என்றும் "பயன்மரம்" என்றும் கூறியதற்கேற்ப மருந்தாகும் மரங்கள் சிலவும் காட்டப்பட்டுள்ளன.

"துணிப்பட்ட உடம்பினைப் பொருத்தும் மருந்து" — (சந்தான கரணி)

ரணம் தழும்புகளை நீக்கும் மருந்து — சமனியகரணி

உயிர் தரும் மருந்து — மிருதசஞ்சீவினி

மரங்களின் பெயர்களேயன்றி இலை, தளிர், கொத்து, பசுங்காய், பழம் ஆகியவற்றின் பொருள்களும் இடம் பெற்றுள்ளன. அலரி, வெட்சி, வெட்டிவேர் முதலிய மலர்களின் பெயர்களும், மிளகு, திப்பிலி, கடுகு, இஞ்சி முதலிய துணைப் பொருள்களின் பெயர்களும், உழுந்து, துவரை, வரகு முதலிய உணவுப் பொருள்களின் பெயர் களும், கதிர் பதர், தினைததாள், வைக்கோல் முதலியவற்றின் பெயர் களும், இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப் பூ, நிலப் பூ என்ற பூக்களின் வகைகளும், முகை, நனை, முகிழ், நகை, கன்னிகை முதலிய மொட்டின் பெயர்களும், அலர், தார், அலரி, போது, மலர், இணர்வீ முதலிய பூவின் பெயர்களும் கூறப்

பட்டுள்ளன. இவை அக்காலச் சமுதாயத்தின் பரந்த சொல் அமைப்புக்களைக் காட்டுகின்றன.

"முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல்"
"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி"

என இச்சொற்கள் இலக்கியத்தில் பயின்றுள்ளமை கண்டு இன்புறலாம்.

5. இடப்பெயர்த் தொகுதி

இதன்கண் மோட்சலோகம், தெய்வலோகம், நால்வகைத் திக்கின் பெயர், மலைகளின் பெயர், ஆறு, கடல் இவற்றின் பெயர், ஐவகை நிலத்தின் பெயர், ஊரின் பெயர், தெருவின் பெயர், வீடு, வீட்டின் உறுப்புக்கள், வேள்வி செய்யும் இடம், விலங்குகள் உறையும் இடம் முதலியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதன்கண் கூறப்படும் மலைகள் :

மேரு, வெள்ளி மலை, பொதிய மலை, கொல்லி மலை என்பன.

இதன்கண் கூறப்படும் நதிகள் :

காவிரி, பொருநை, கோதாவரி, பாலியாறு என்பன.

இதன்கண் கூறப்படும் ஊர்களின் பெயர்கள் :

உறையூர்—கோழி
மதுரை—கூடல்
சிதம்பரம்—மன்றம்
திருவாரூர்—கமலை
கருவூர்—வஞ்சி
காவிரிப்பூம்பட்டினம்—காகந்தி, புகார்
அவந்தி—உஞ்சை
காசி—வாரணாசி
காஞ்சி—கச்சி
மிதிலை—விதேகை
அயோத்தி—கோசலை

தெருவின் பெயரை எடுத்துக்கொண்டு நெடுந்தெரு, குறுந்தெரு, முடுக்குத் தெரு, முச்சந்தி, சந்தி, நாற்சந்தி எனப்பாகுபாடு செய்து கொண்டு விளக்குவது அக்கால ஊர் அமைப்புக்களை விளக்குவதாகும்.

தெருவின் பெயர்—ஆவணம், வீதி, மறுகு, சிறகு, கோசம், நியமம்
நெடுந்தெரு—மன்றம், மார்க்கம், நியமம்
குறுந்தெரு—மறுகு
முடுக்குத்தெரு—கோணம்
முச்சந்தி—அந்தி
சந்தி—அந்தி, கவலை, வரி
நாற்சந்தி—சதுக்கம்.

வீட்டின் பெயரே அன்றித் தாழ்வாரம், வேபுள், மடைப்பள்ளி, சலதாரை, முற்றம், திண்ணை முதலியவைகளும் இங்கு ஆராயப் பெற்றுள்ளன.

வீட்டின் பெயர்—மாடம், மனை, உறையுள், புக்கில், பதி. வசதி, இடம், பாத்தி, அகம், இல்லம், சேர்வு.
மடைப்பள்ளியின் பெயர்—அட்டில், அடுக்களை.
சலதாரையின் பெயர்—அங்கணம், தூம்புவாய்.
திண்ணையின் பெயர்—திட்டை, மண்ணீடு, தெற்றி, வேதிகை.

கழகம் என்னும் பெயர் பற்றி இவர் தரும் விளக்கம் மிகச் சுவையாக உள்ளது.

"செல்லல் தீய்க்கும் பல்புகழ்ச் சேந்தனின்
வல்லுனர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும் சூதும் படையும் மற்றும்
கல்வி பயில் களமும் கழக மாகும்"

6. பல்பொருள் பெயர்த் தொகுதி

இத்தொகுதியில் பொன், ஐவகை உலோகம், வெள்ளி, வெண்கலம், செம்பு, இரும்பு, ஈயம், குங்கிலியம், அரக்கு முதலிய பெயர்கள் கூறப்பெற்றுள்ளன.

திருநீறு, சாணி இவற்றின் பெயர் விகற்பங்களைக் கூறுவதன் மூலம் ஆசிரியரின் சமயக் குறிப்பு விளங்குகிறது.

திருநீற்றின் பெயர்—காப்பு, பொடி, பற்பம், வீபூதி
சாணியின் பெயர்—புண்ணிய சாந்தம்.

பொதி சோற்றின் பெயர்—ஆற்றுணா[1], தோட்கோப்பு

சிற்றுண்டியின் பெயர்—அப்பம், பிட்டு, அஃகுல்லி[2], பிடி

அப்ப வர்க்கத்தின் பெயர்—பூரிசம், நொலையல், கஞ்சம், தோசை.

இக்காலச் சிற்றுண்டி இதனோடு ஒருபுடை ஒத்திருத்தல் கண்டு மகிழ்தற்குரியது. உயர்வுப் பெயர்களுள் புளிங்கறி, கறி, குழம்பு, கஞ்சி, தயிர், பால், நெய், மோர், வெண்ணெய் ஆகியவை இடம் பெற்றிருப்பது அக்கால உணவு வகைகளை நன்கு விளக்குகின்றது.

7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

உலோகம், மரம், மண், தோல், நூல் முதலியவற்றினால் செய்யப்படும் பொருள்களைச் செயற்கைப் பொருள் எனக் கூறுவர். குலம், மழு, சக்கரம், வில், வேல், வாள், தண்டாயுதம், உளி, கவசம் முதலிய உலோகச் செயற்கைப் பொருள்கள் இப்பகுதிக்கண் ஆராயப்பட்டுள்ளன. ஐவகை நிலங்களுக்கும் உரிய தோற்கருவிகளும், தேரின் பல்வேறு உறுப்புக்களின் பெயர்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவையன்றிச் சும்மாடு, காற்றுடி, செருப்பு, கச்சு, சட்டை, மெத்தை, தலையணை இவற்றின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

சும்மாட்டின் பெயர்—சுமடு, சுமையடை

காற்றுடியின் பெயர்—கழல், கறங்கு, கதலி

செருப்பின் பெயர்—தொடுதோல், கழல்

அடியில் தொடுவனவற்றின் பெயர்—பாதுகை.

கச்சின் பெயர்—வம்பு, பிணிகை, பட்டிகை, வார், வடம்

---

1. வேற்றவரில்லா நுமருர்க்கே செல்லினும் வெகுண்டீர்போல
ஆற்றுணாக்கொள்ளாது அடிப்புறத்து வைப்பீரே யல்லீர் போலும்
கூற்றம் கொண்டேவிடத் தமியே கொடுநெறிக்கண் சொல்லும் போதில்
ஆற்றுணாக் கொள்ளீர் அழுகலால் அறிவொன்றும் இலீரே போலும்
—கேமசரி—139
எனத் திருத்தக்கத்தேவர் இச் சொல்லைக் குறிக்குமாறு காண்க
2. அஃகுல்லி—இடியாப்பம்.

சட்டையின் பெயர்—மெய்ப்பை, கஞ்சுளி, கஞ்சுகம், வாரணம், குப்பாயம்[1], அங்கி

தலையணையின் பெயர் உபாதானம்

மெத்தையின் பெயர்—அணை, தவிசு, தளிமம்.

8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி

வடிவு, அளவு, வண்ணம் ஆகிய இவற்றைக் கொண்டு காட்சியிலும் கருத்திலும் உணரப்படும் பொருள் பண்பு எனப்படும் என ஆசிரியர் முதற்கண் விளக்குகின்றார். வடிவுப் பெயர்களுள் வளைதல், திரள்தல், குவிதல், உள்துளை, உருண்டை, பருமை, சிறுமை முதலிய பெயர்களும், வண்ணப் பெயர்களுள் சிவப்பு, கருப்பு, பொன்மை, பசுமை, வெண்மை ஆகிய பண்புப் பெயர்களும் கருத்துப் பெயர்களும் அன்பு, சினம், கண்ணோட்டம், அழுக்காறு முதலிய பெயர்களும் குறிக்கப் பெற்றுள்ளன.

அவற்றுள் பழமை வாய்ந்த சொற்கள் :—

எளிமையின் பெயர் — எண்மை, தஞ்சம்.

1 "என்பதத்தால் எய்தல் எளிது என்ப"
2 "தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே"

கண்ணோட்டத்தின் பெயர் :— நயப்புணர்வு, நாகரிகம்.

1 "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்"
2 "முந்தையிருந்த நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்".

பேரறிவு முதிர்ச்சியின் பெயர்—முதுக்குறைவு

அறியாமையின் பெயர்—எய்யாமை

"எய்யாமையே அறியாமையே"

அறிவின் திரி பெயர்—துயவு

"துயவின் கிளவி அறிவின் திரிபே"

---

1. மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக் கிருக்க கில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பாலவர்க்கும் அப்பாலாம் என்னார முதேயோ
அப்பா காண ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

—ஆசைப்பத்து : 2

என மணிவாசகரும் இச்சொல்லைக் குறித்தல் காண்க.

ஈன்றணிமையின் பெயர் —புனிறு
"புனிறென்கிளவி ஈன்றணிமைப் பொருட்டே".

இதன்கண் மகளிர் விளையாட்டின் பெயர், விழா, ஒப்பனை, துயிலல், ஊடல், புலவி, இரத்தல், வேள்வி முதலிய சொற்கள் ஆராயப்படுகின்றன.

ஊடல் முதிர்வின் பெயர்—புலவி
புலவி நீடுதலின் பெயர்—துனி

1 *"ஊடுக மன்னோ ஒளியிழை"*
2 *"ஊடுதல் காமத்திற்கின்பம்"*

என்பன கொண்டு இச்சொற்களின் பொருள்நயத்தைக் காணலாம். இவையன்றிச் சிவன், முருகன், திருமகள், இந்திராணி, துர்க்கை காமன் இவர்களின் ஆடல் பற்றிய பெயர்களும் குறிக்கப் பெற்றுள்ளன.

சிவன் ஆடலின் பெயர்	—	*பாண்டரங்கம், கபாலம், கொடுகொட்டி*
மாயோன் ஆடலின் பெயர்	—	*அல்லி, குடம், மரக்கால்*
முருகன் ஆடலின் பெயர்	—	*கொட்டி, குடை*
இந்திராணி ஆடலின் பெயர்	—	*கடையம்*
திருமகள் ஆடலின் பெயர்	—	*பாவை*
துர்க்கை ஆடலின் பெயர்	—	*மரக்கால்*
காமன் ஆடலின் பெயர்	—	*பேடு.*

இவ்வாடல்கள் பலவும் யாரால் எப்போது நிகழ்த்தப்பெற்றன என்பதைச் சிலப்பதிகாரம்[7] விளக்கும்.

---

7. திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒருதிற னாக வோங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி யாடலும்,
தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண்ட ரங்கமும்
கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும் அவுணர் கடந்த
மல்லினாடலும், மாக்கடல் நடுவண்
நீர்த்திரை அரங்கத்து நிகர்த்துமுன் நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்
படைவீழ்த் தவுணர் பையுள் எய்தக்
குடைவீழ்த் தவர்முன் ஆடிய குடையும்
ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய மரக்கால் ஆடலும்
செருவெங் கோல அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலுள்
அயிராணி மடந்தை ஆடிய கடையமும்
—சிலம்பு : கடலாடு காதை : 40–63

10. ஒலி பற்றிய பெயர்த்தொகுதி

இதன்கண் சொல்லுதலின் பெயர், சொல்லின் பெயர், சத்தியம், மெய், பொய், புகழ், பழி, முதலிய பெயர்கள் கூறப் பெற்றுள்ளன. பதம்/சொல், குறளை புறங்கூறல்/வெறும் புறங் கூறல், இவற்றின் வேற்றுமை தெரிந்திலது.

சொல்லின் பெயர்—பகர்தல், செப்பல், இயம்பல், இறுத்தல், கூறல் முதலாக முப்பத்து மூன்று பெயர்கள் கூறப்படுகின்றன.

பதத்தின் பெயர் —பாழி, உரை
குறளையின் பெயர் —குஞ்சம், மிசுநம்
புறங்கூறலின் பெயர் —கொடுவாய்
வெறும் புறங்கூறலின் பெயர்—கொண்டி, கொடுப்பு
அம்பல்—சிலர் அறிந்து தம்முட் புறங்கூறல்
அலர்—பலரும் அறிந்து புறம் தூற்றல்

"சிலரும் பலரும் கடைக்க ணோக்கி
மூக்கின் உச்சி சுட்டு விரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற"

என்பது இவ்வேற்றுமையோடு ஒத்து நோக்கி ஆராயத்தக்கது.

"இடக்கர் என்பது மறைத்து மொழி கிளவி"
"சீர்த்தியும் கீர்த்தியும் மிகு புக ழாகும்"
"அம்ம கேட்பிக்கும் உரையசைச் சொல்லே"
"ஆங்கு அன் உரையசை சொல் என வாகும்"

என்பன தொல்காப்பியத்தை அடி ஒட்டிக் கூறியனவாகும்.

முன்னிலை அசைச் சொல்லும், இசை நிறை அசை நிலைகளும் ஒப்பில் போலியும், எழுத்தின் சாரியைகளும் வேற்றுமையின் பெயர் களும், சுட்டு வினக்களின் பெயர்களும், பாயிரம் ஓத்து, படலம், முதுமொழிக்காஞ்சி, முதுபாலை இவற்றின் விளக்கமும் தொல்காப் பியத்தை முழுமையாகத் தழுவி உரைக்கப்பட்டுள்ளன.

1 முன்னிலை அசைச் சொல்—
"மியா இக"

2 அசைநிலை—
"யாக பிற பிறக்கு"

3 இசை நிறை அசைநிலை—
"ஏயும் குரையும்"

4 எழுத்தின் சாரியை—
"காரமும் கரமும்"

5 வேற்றுமையின் பெயர்—
"ஐயோடு கு இன்"

6 சுட்டின் பெயர்—
"அ இ உ"

7 வினாவின் பெயர்—
"யா, எ, ஓ"

8 பாயிரம்—
"பாயிரம் நூன்முகம்"

9 ஒத்து—
"நேரினமணியை"

10 படலம்—
"ஒருநெறியின்றி"

11 முதுமொழிக் காஞ்சி—
"கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை"

12 முதுபாலை—
"நனிமிகு சுரத்திடை"

இப்பகுதி இறுதியில் வள்ளைப்பாட்டு, இசைப்பாட்டு, நரம்பின் ஓசை, நால்வகை யாழ், ஏழிசையின் பெயர், இராகத்தின் பெயர், முதலிய இசை நுணுக்கங்களும் கூறப்பெற்றுள்ளன.

இராகத்தின் பெயர்களில் நிருபதுங்க ராகம் என வருவது இசை உலகத்தில் பல்லவர்க்கு இருந்த செல்வாக்கை விளக்கும்.

11. பல்பொருட் பெயர்த் தொகுதி :

இத்தொகுதி அகர வரிசையில் உள்ளது. ஆனால் இம்முறை பதிப்பாசிரியர்களாலேயே செய்யப்பெற்றது என்பது இக்கால ஆய்வாளர்களின் கருத்து. இத்தொகுதி ஆதியிற்பொருள், அந்தத்துப் பொருள் என இருவகையாகப் பிரித்துப் பேசப்படுகின்றது. எந்தச் சொல்லுக்கு உரை கூறப் பெறுகின்றதோ, அச்சொல் தொடக்கத்தில் இருப்பின் அது ஆதியிற் பொருளாம். அச்சொல் இறுதியில் வரின் அது அந்தத்துப் பொருளாம்.

(எ - டு) ''வேலன் முருகன் வெறியாட்டாளர்''
''வாழி இடைச்சொல் வாழ்க வெனும் சொல்லும்''

இவற்றுள் எடுத்துக்கொண்ட பொருள் வேலன், வாழி என்னும் இரண்டும் ஆதியில் இருத்தலின் இவை ஆதியிற் பொருளாம்.

''விழவும் கள்ளும் சாறெண விளம்புவர்''
''குலமும் ஒழுக்கமும்
ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும்
திணை யென நிகழ்த்தும் கிளவி''

இவற்றுள் எடுத்துக்கொண்ட பொருள் சாறு, திணையென்பன இறுதியில் வருதலின் இவை அந்தத்துப் பொருளாம்.

12. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி :

முன்னுள்ள தொகுதிகளில் வந்த சொற்களில், ஒரு சொல் பல்பொருள் தொகுதியாய் வருவனவற்றை இத் தொகுதியில் ஆசிரியர் கூறுகின்றார். எனவே இத்தொகுதி தொகைச்சொல் பற்றிய விளக்கமாம். இவற்றில் கூறப்பட்டன இனம் பற்றி அவ்வத் தொகுதியில் கூறப்பட்டிருப்பினும் தொகை பற்றி அவை மீண்டும் கூறலின் கூறுவது கூறல் ஆகாது.

''கூறியது கூறினும் குற்றம் இல்லை
வேறொரு பொருளை விளக்கு மாயின்
முன்னரெய்த பதினொரு தொகுதி யுள்ளும்
வந்தன வாலொரு சொற்பல்பொருட் பெயர்த்
தொகுதியின் வந்த சொற்களென் னெனில்
ஆண்டுச் சிறப்பு வகைக் கெய்தியவை
ஈண்டுப் பொது வகைக் கெய்தவும் படுமே''.

என ஆசிரியரே இவ்வுண்மையை விளக்குகின்றார்.

இத் தொகுதிக்கண் ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலும், பதினெட்டு, இருபத்தைந்து, இருபத்தெட்டு, முப்பத்திரண்டு ஆகிய எண்களின் தொகை விளக்கமும் கூறப்பெறுகின்றன. நாற்கவியை விளக்குங்கால் இடையே சித்திர கவி வகைகளைக் கூறுகின்றார். மாலை மாற்று முதல் சருப்பதோபத்திரம் ஈறாக இருபத்தொரு சித்திர கவிகள் கூறப்பெறுகின்றன. இவற்றிற்கு வடநூற் கடலுள் ஒருங்குடன் வைத்து உதாரணம் நோக்கித் தெளிக என ஆசிரியர் ஆணை கூறுகின்றார். எனினும் ஞானசம்பந்தர் திருமுறைகளுள் எழு கூற்றிருக்கை, மடக்கு முதலிய சித்திர கவிகள் உள்ளன என்பதும் ஈண்டு அறியத்தக்கது. எண் வகை வெற்றியின் பெயராக வெட்சி,

கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, ஆகிய புறத்திணைகளைக் கூறுகின்றார். வெட்சி — நிரை கவர்தல்— எனத் தொடங்கிக் கூறும் முகமாகத் தொல்காப்பியர் கருத்தை இவர் தழுவாமை விளங்குகின்றது. முப்பத்திரண்டு அறங்கள் இவையென விரித்துரைக்கின்றனர். அவை,

1	ஆதுலர் சாலை	2	ஓதுவார்க்குணவு
3	அறுசமயத்தோர்க்குணவு	4	பசுக்கு வாயுறை
5	சிறைச்சோறு	6	ஐயம்
7	தின்பண்டம்	8	மகப்பெறுவித்தல்
9	மகவு வளர்த்தல்	10	மகப்பால்
11	அறவைப் பிணம் சுடுதல்	12	அறவைத் தூரியம்
13	நாவிதர்க்கு வதுவை செய்தல்	14	வண்ணார்க்கு வதுவை செய்தல்
15	நோய்க்கு மருந்து கொடல்	16	கண்ணாடி தருதல்
17	காதோலை நல்கல்	18	கண்மருந்து தருதல்
19	தலைக்கு எண்ணெய் தருதல்	20	பெண்போகம் நுகர்வித்தல்
21	சுண்ணம் தருதல்	22	பிறர் துயர் காத்தல்
23	தண்ணீர்ப் பந்தல் வைத்தல்	24	மடம்
25	தடாகம்	26	கா
27	ஆவுரிஞ்சி தறி இவற்றை அமைத்தல்	28	ஏறு விடுத்தல்
29	விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல் என்பன.		

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர் வகைகளைத் தொல்காப்பியரைத தழுவி இவ்வாசிரியர் உரைத்துள்ளார். அவை வருமாறு :—

''ஒன்றே புலன் ஒன்றே யுடைமையின்
மற்றைப் புல்லும் மரனுமோ ரறிவே''

''உற்றறி புலனும் நாவு முடைமையின்
அட்டையும் நந்துவும் போல்வ ஈரறிவே''

'உற்றறி புலனும் மூக்கு முடைமையின்
இனைய மூவறிவே''

''உற்றறி புலனும் மூக்கொடு கண்ணும்
பெற்ற வண்டும் ஞெண்டு நாலறிவே''

''உற்றறி புலனும் மூக்கொடு கண்செவி
மக்களு மாவும் ஐந்தறிவே''

''மனத்தோ டாறறி வினரே மக்கள்
ஒருசார் விலங்கும் அதுபெறற்குரிய'

ஆண்பாற் பிள்ளைப் பாட்டின் வகையையும் பெண்பாற் பிள்ளைப் பாட்டின் வகையையும் இவர் விரித்துரைத்திருப்பது பிற்காலத்தே பிள்ளைத்தமிழின் வகைகள் பயில்தற்குத தோற்றுவாய் ஆயின.

ஆண்பாற் பிள்ளைப் பாட்டின் வகைப் பெயர் :

"திங்க ளிரண்டில் தெய்வக் காப்பும்,
ஐந்தாம் திங்களில் செங்கீரையும்,
ஏழாந் திங்களில் தாலப் பாட்டும்.
எட்டாந் திங்களில் இன்னமு தூட்டலும்
ஒன்பதாந் திங்களில் சப்பாணியும்
பத்தாந் திங்களில் முத்தங் கூறலும்
ஆண்டு வரை அகவையின் ஈண்டு வருக என்றலும்,
ஈரெண்டிங்களில் அம்புலி காட்டலும்,
இரண்டா மாண்டில் சிறுபறை கொட்டலும்
மூன்றுமாண்டில் சிற்றில் சிதைத்தலும்
நாலா மாண்டில் சிறுதேரு ருட்டலும்
வைத்த முந்நான்காண் டெல்லை வரையில்
கச்சிற் சுரிகை காமுறப் புனைதலும்
பெற்றி யாண்பால் பிள்ளைப் பாட்டே".

பெண்பாற் பிள்ளைப் பாட்டு வகைப் பெயர் :—

ஆண்டுவரை யகவையின் முன்னுரைத் தனவும்
மூன்று மாண்டில் குழமன் மொழிதலும்
ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு தோற்றலும்
பனிநீர் தோய்தலும் பரவை யாடலும்
சிறுசோறு டுதலும் சிற்றி லிழைத்தலும்
ஊசலாட்டு மென்றிவை யுள்ளிட்டுப்
பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே".

பிங்கலம்

திவாகரத்தை அடுத்து எழுந்த நூல் இதுவே. பிங்கல முனிவரால் செய்யப்பட்டதாதலில் பிங்கலம் எனப் பெற்றது. இது கருத்தனுல் பெற்ற பெயராம்

பிறப்பிடம்

இவரது தந்தையார் திவாகரர் என்பார். அவர் அம்பர்ச் சேந்தனுல் ஆதரிக்கப்பட்டவர் என்று கண்டதாகும். அம்பர்ச் சேந்தனுக்கும் திவாகரருக்கும் பிறப்பிடம் சோழ நாடேயாகலின் இவரும் சோழ நாட்டினிலே என்று கருத இடமுண்டு. அன்றியும்

இவர் தம் நூலில் அவனிவகை என்ற தொகுதியில் பல சிறந்த ஊர்களைக் குறிக்கும்பொழுது திருவாரூர், சிதம்பரம், உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நான்கு சோழ நாட்டு ஊர்களையும் குறித்துள்ளார். ஏனைய பாண்டிய சேர தொண்டை நாடுகளுக்கு முறையே மதுரை, வஞ்சி, காஞ்சி என ஒவ்வொரு ஊர்களைக் குறிக்கின்றார். இதனாலும் இவர் சோழ நாட்டவராகலாம் எனக் கருத இடமுண்டு.

சமயம்

இவர் சைவர். சிவபெருமானது பெயரைக் குறிக்குங்கால் 'ஏனையாள் ஈசன் பெயர்' எனக் குறிப்பதும் வானவர் வகையுள் விநாயகரை முதன்மையாகக் குறிப்பிடுவதும், சாணத்தைப் புண்ணிய சாந்தமெனத் திவாகரர் கூறுவது போலவே இவர் கூறுவதும் இதற்கு அரண் ஆகும்.

திவாகரமும் பிங்கலமும்

திவாகரரின் மகனார் பிங்கலர் என்பதாலே திவாகரத்திற்குப் பிந்தியது பிங்கலம் எனத் தெள்ளிதில் விளங்குகின்றது. எனினும் நன்னூலுள்

"பிங்கலம் முதலா
நல்லோரர் உரிச் சொலுள் நயந்தனர் கொளலே"

எனக் கூறப்படுவது கொண்டு பிங்கலம் திவாகரத்திற்கு முந்தியது எனச் சிலர் கருதுவர். எனினும் இது பொருந்துவது அன்று. திவாகரத்தில் உள்ள சொற்களிலும் பிங்கலத்தில் சொற்கள் மிகுதியாக உள்ளன. ஆதலின் நிறைந்த சொற்கள் உடைமை பற்றிப் பிங்கலத்திற்கு முதன்மை கொடுத்தனரேயன்றி கால வகையைக் கருதி அங்ஙனம் கூறினரல்லர். அகராதி நிகண்டிலும் 'தெரிதரு பிங்கலம் திவாரம்' எனப் பிங்கலத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் கூறப்படுவன வெல்லாம் கால வகையைக் கொண்டதன்று.

சிறப்புப் பாயிரம்

இதற்கமைந்த சிறப்புப் பாயிரம் யாரால் பாடப்பட்டதென்று தெரிந்திலது. எனினும் இப்பாயிரம் செய்தார் தொல்காப்பியத்தில் அளவிறந்த பயிற்சியும், பற்றும் உடையவரெனத் தெரிகின்றது

அது வருமாறு

இருங்கடல் உடுத்தஇம் மாநிலம் விளங்க
அரும்பொருள் தெரிந்த அகன்றமிழ் வரைப்பில்
இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
அனைத்தே செய்யுட்கு அணிகலன்; ஆதலிற்
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமல் இசைக்கும் இயற்சொல்;
ஒரு பொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி;
செந்தமிழ் சேர்ந்த திசைதொறும் திசை தொறும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி;
வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொற்றா குகும்
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்;
அந்நாள் சொற்றிறம் அரில்தப முழுதும்
செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனியெனத் தன்பெயர் நிறீஇ
உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை,
விரிப்புடன் நிலை இய வீறுசால் சிறப்பின்
வாஅன் வகையும், வானவர் வகையும்,
வானிலும் மண்ணினும் வழங்கல் வழாஅ
ஈனமில் ஐயர் இயல்புளி வகையும்
அவனி வகையும், ஆடவர் வகையும்
அவர்திறத் தமைந்த அநுபோக வகையும்
அவயவத் தடைத்த ஆறு வியல்பிற்
பண்பிற் செயலிற் பகுதி வகையும்,
மாப் பெயர் வகையும், மரப்பெயர் வகையும்
ஒருசொல் பல் பொருள் ஓங்கிய வகையும், என்று
இருளற ஈரைந் தாக்கி
மருளற வகுத்தனன் மதியினின் விரைந்தே.

இப்பாயிரத்தின் முற்பகுதியில் இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களையும் அரில்தப அறிந்தவர் எனக் கூறப்படுகின்றது. திவாகரன் பயந்த பிங்கலமுனி என்பதால் தந்தை மகனென்னும் தகைமை தோன்றுகிறது. அடுத்து வரும் பகுதிகளில் இந்நூலின் பொருளமைப்பு எடுத்துப் பேசப்படுகின்றது.

நூலமைப்பு

திவாகரத்தைப் போன்றே இதுவும் அமைந்துள்ளது. திவா கரத்தில் பத்துப் பிரிவுகள் உள்ளன. இங்குப் பன்னிரண்டு பிரிவுகள் உள்ளன. எனினும் அவர் கூறிய பன்னிரண்டையும் இவர் பத்தில்

அடக்கியுள்ளார் என்பதன்றி எதையும் விட்டுவிடவில்லை. திவாகரத்தில் சொல்லமைப்புகளையும் சூத்திரங்களையும் இவர் அப்படியே எடுத்தாளுகின்றார்.

எடுத்துக் காட்டாகச் சில

1. *"உற்றறி புலனது ஒன்றே உடைமையின்*
   மற்றைப் புல்லும் மரனும் ஓரறிவே"
2. *"உற்றறி புலனும் நாவும் உடைமையின்*
   அட்டையும் நந்துவும் போல்வ ஈரறிவே"
3. *"உற்றறிபுலன், நா, மூக்கொடு கண்ணும்*
   பெற்ற வண்டும் ஞெண்டும் நாலறிவே"

(திவாகரம்)

1. *'உற்றறி புலனது ஒன்றே உடைமையின்*
   மற்றைப் புல்லும் மரனும் ஓரறிவே"
2. *"உற்றறி புலனும், நாவும் உடைமையின்*
   அட்டையும் நந்தும் போல்வ ஈரறிவே"
3. *"உற்றறி புலன், நா மூக்கோடு கண்ணும்*
   பெற்ற வண்டு ஞெண்டு ஆதி நாலறிவின்." [1]

(பிங்கலம்)

திவாகரம் பிங்கலம் இவற்றின் பிரிவு ஒப்புமை

திவாகரம்	பிங்கலம்
1. தெய்வப் பெயர்	1. வான்வகை 2. வானவர் வகை
2. மக்கட் பெயர்	5. ஆடவர் வகை
3. விலங்கின் பெயர்	8. மாப் பெயர் வகை
4. மரப்பெயர்	9. மரப் பெயர் வகை
5. இடப் பெயர்	4 அவனி வகை

---

1. புல்லும் மரனும் ஓரறி வினவே
   பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
   நந்தும் முரளும் ஈரறி வினவே
   பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.
   நண்டும் தும்பியும் நான்கறிவினவே
   பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
   நண்டும் தும்பியும் நான்கறி வினவே
   பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

எனவரும் தொல்காப்பிய மரபியல் நூற்பாககளோடு ஒத்துக் காண்க.

6. பல்பொருட் பெயர் 7. செயற்கை வடிவப்பெயர்	6. அனுபோக வகை
8. பண்பு பற்றிய பெயர் 9. செயல் பற்றிய பெயர்	7. பண்பிற் செயலிற் வகை
10. ஒலி பற்றிய பெயர்	ஷ ஷ உட்பிரிவு
11. ஒரு சொற் பல்பொருட் பெயர்	7. வாய்வகை செவிவகை
12. பல்பொருட் கூட்டத்தொரு பெயர்	10. ஒரு சொற் பல் பொருள் வகை 3. ஐயர் வகை.

சில அரிய சொற்களும் அவை இலக்கியங்களில் பயிலுமாறும்

நறும்புகையின் பெயர்—நரை, குய், வெடி எனக் கூறப்படுகின்றது.

"குவளை உண்கண் குய்ப்புகை கமழ" (குறுந்தொகை)

செல் — மேகம்.

"செருநர் தேய்த்த செல்லுறழ் தடக்கை" (திருமுருகாற்றுப்படை)

எண் குணத்தோன்

"பவமின்மை யிறவின்மை பற்றின்மை பெயரின்மை
உவமை யின்மை யொருவினை யின்மை
குறைவிலறி வுடைமை கோத்திர மின்மையென்
றிறைவ னிடத்தி லெண்குண மிவையே".

பரிமேலழகர் இவற்றின் வேருகக் கூறுகின்ருர்

திருமகளின் பெயர்களில் பொறி என்ற ஒன்றும் காணப்படுகின்றது.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று"

என்னும் திருக்குறளுக்கு மணக்குடவர் **புண்ணியம்** என்றும், பரிதியார் ஐம்பொறி என்றும், பரிமேலழகரும் காலிங்கரும் விதி என்றும் பொருள் காண்கின்றனர். இங்குக் கூறப்படும் செல்வம் என்பதையும் வைத்துப் பொருள்காண்டல் தக்கதன்ருே?

தெய்வத்தின் பெயர்களுள் இயவுள் என்பது பழைமை வாய்ந்தது. "பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்" என்பது திருமுருகாற்றுப்படை.

குபேரனை 'இருநிதிக்கிழவன்', 'அரசுடைத் தோழன்' என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகின்றது. இச்சொற்களில் முன்னையது சிலம்பினையும், பின்னையது நால்வர் நான்மணிமாலையையும் நினைவு கூரச் செய்கின்றது.

முன்னைய நாளின் பெயரை,

நெருநல், நென்னெல் — என்ற சொற்களால் கூறுகின்றார். இவற்றுள் முன்னையது திருக்குறளையும், பின்னையது திருவெம்பாவையையும் நினைவுகூரச் செய்கின்றது. சிறப்பிலா எண்வகைப் பெயரெச்சம் எனக் குறிப்பன "சிறப்பில் சிதடும்" — என வரும் புறநானூற்றுப் பாடலை நினைவுகூரச் செய்கின்றது.

விளையா நிலத்தைக் களர், கவர் என்ற சொற்களால் அழைப்பதும், ஒதுக்கிடத்தின் பெயரைத் 'துச்சில்' என்றழைப்பதும் திருக்குறளை நினைவுகூரச் செய்கின்றது.

அரசர்க்குரிய பரியின் இலக்கணத்தை உவமை நலம்தோன்றக் கூறுகின்றார்.

" மாதர்தம் மணமென மிக்க மணத்தது
வாழை மடலென வளர்ந்த செவியது
நாலு தாளு மெருத்து முகனும்
வெந்து முன்னும் வெண்மை யுடையதாய்
எண்பத் திருவிரலுயர முயர்ந்தது
பண்புடை யரசர்க் காவது பரியே "

என்பது அந்நூற்பா.

கூட்டின் பெயர் 'குடம்பை' என்றிருப்பது "குடம்பை தனித்தொழிய" என்ற திருக்குறளுக்கு உரை காண்டற்கு உதவி செய்வது.

" ஐவகை மரபி னரசர் பக்கம் " எனத் தொல்காப்பியம் கூற இவ்வாசிரியர் அவர்க்கு அறுதொழில் கூறுகின்றார். அவை, ஓதல், பொருதல், உலகுபுரத்தல், ஈதல், வேட்டல், படை பயிறல் என்பன.

நடுச்சொல் கூறுவோனைக் கரியன், கள்வன் என்றது " யாருமில்லை தானே கள்வன் " என்ற குறுந்தொகைப் பாடற்கு உரை காண்டற்கு உதவியாகின்றது.

வள்ளல்களில் வரையாது யாவர்க்கும் கொடுப்போரை முதல் வள்ளல் என்றும், இரப்போர்க்குக் கொடுப்போரை இடை வள்ளல் என்றும், புகழ்வோருக்குக் கொடுப்போரைக் கடை வள்ளல் என்றும் பாகுபாடு செய்வது, பாரி, எழினி, ஆய், நள்ளி, ஓரி, மலையன் பேகன் ஆகியோரைக் கடை வள்ளல் எனக் குறித்திருப்பது ஆராயத்தக்கது.

பொய்யின் பெயரில் பொக்கம் எனக் கூறுவது அப்பர் தேவாரத்தை நினைவுகூரச் செய்கிறது. பிறத்தலில் கருவுள் அமைப்பு, மெய்படுபருவம் எனப் பாகுபாடு செய்திருப்பது நுண்ணியதாக உள்ளது.

" பேறிழ வின்பம் பிணிமூப்புச் சாக்காடென்
றாறுள வங்காள மைந்தன வறியக்
கூறிய புலவர் கோட் பா டன்றியும்
பாலை பாலன் காளை யிளையோன்
முதியோ னென்ன விதிவழி வந்த
மெய்யே மெய்யின் மேம்படு குணமே "

இவற்றுள் முன் இரண்டடிகள் சிவஞான சித்தியாரை [1] நினைவுகூரச் செய்கின்றது.

பிச்சையின் பெயரை ஐயம் என்றுரைத்திருப்பது "ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி" என வரும் செய்யுள் வழக்கொடு மாறுபடுகின்றது.

கும்பிடுதல் ... ... சோத்தம் [2]

இது திருவாசகத்தை நினைவு கூர்கின்றது.

தமிழ்—இனிமை, நீர்மை—எனப் பொருள் தரும் என்பது இனிமையாக உள்ளது.

---

1. பேறிழவு இன்பமோடு பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும் முன் கருவுட்பட்டது அவ்விதி அநுபவத்தால்
ஏறிடும் முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கேது
தேறுநீ இனிச் செய்கன்மம் மேல் உடல் சேருமன்றே.
—சித்தியார் 2-9.

2. முழுது அயில் வேற்கண்ணியர் என்னும் மூரித்தழல் முழுகி
விழுதனையேனை விடுதிகண்டாய் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத்தொடும்பரில் கூட்டிடு சோத்து எம்பிரான்
பழுதுசெய்வேனை விடேல் உடையாய் உன்னைப் பாடுவனே.
—திருவாசகம்.

கட்டுரைக்குத் துணை செய்த நூல்கள்

1. தொல்காப்பியம்
2. நன்னூல்
3. தமிழ் வரலாறு — சீனிவாச பிள்ளை.

சொற்பொருள் வளர்ச்சி :

தொல்காப்பியர் கூறிய சில உரிச்சொற்களுக்கு, இவர் அவரினும் மிகுபொருள் காணுகின்றார்.

> *1. வயம் — வலி (தொல்)*
> *பலி, நீர்ப்பறவைப் பொது (பிங்கலம்)*
>
> *2. வயா — வேட்டைப் பெருக்கம் (தொல்)*
> *வருத்தம், கருப்பம், ஆசை (பிங்கலம்)*
> *" வறிது சிறிதாகும் "—(தொல்)*

சிறுமை, பயனில்சொல், அறியாமை, குறைவு, இயலாமை, (பிங்கலம்) இங்ஙனமே விதிர்ப்பு, வியல் ஆகிய சொற்களுக்கும் மிகு பொருள் காணுகின்றார்.

விபூதி என்பதற்கு ஆறு பொருள் கூறப்பெறுகின்றது. அவையான :-

ஓர் நரகம், திருநீறு, கொடுமை, தசை, குற்றம், செல்வம் என்பன.

உரிச்சொல் நிகண்டு

ஆசிரியர் காங்கேயன் என்பார். தொண்டை நாட்டிலுள்ள செங்கற்பட்டு இவரது ஊர் என்பர் ஒருசாரார். கொங்கு நாட்டினர் என்பார் ஒருசாரார். இவர் செங்குந்தர் மரபினர் என்பர் சிலர். வேளாண் மரபினர் என்பர் சிலர்.

சமயம் :

> *" திருமாலும் செங்கமல மேயோனுங் காணுப்*
> *பெருமான் பிறைசூடும் பெம்மான்—அருள் மூர்த்தி*
> *நன்னெஞ்சி னுன்மறையோன் தில்லை நடம்புரிவோன்*
> *என்னெஞ்சின் மேய இறை "*

என இவர் சிவபெருமானைப் புகழ்வதால் இவரது சமயம் சைவம் என்பது வெள்ளிடை

நுவலும் திறன் :

இது திவாகரம் போன்று பன்னிரண்டு தொகுதியுடையது எனச் சிலரும், பத்துத் தொகுதி உடையது எனச் சிலரும் கூறு

கின்றனர். சிவன் பிள்ளைப் பதிப்பிலும், சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளைப் பதிப்பிலும் பன்னிரண்டு தொகுதிகளாக இருப்பதால் இது பன்னிரண்டு தொகுதிகளை உடையது என்று கோடல் பொருந்தும்.

இது வெண்பா யாப்பில் இயன்றது. 287 வெண்பாக்களை உடையது

எடுத்துக்காட்டு :

" அரிபன்றி தேரை கிளிபச்சை யளிசிங்கம்
பரிகவிபாம் பிந்திரன்மால் கால்கூற் றிருசுடர்தீ
கோவிறை திக்குக் கிரணஞ் சலங்குலிச
மாவுரைகண் பார்சுவர்க்க மம்பு".

இதன்கண் " அவி " என்று சொற்குப் பதினாறு பொருளும், "கோ" என்று சொற்குப் பதினொரு பொருளும் காணப்படுகின்றன. காலம் பதினான்காம் நூற்றாண்டு.

கயாதர நிகண்டு

கயாதரரால் இயற்றப்பட்டது. மாறனலங்கார உரையிலும் ஆண்டிப் புலவன் இயற்றிய ஆசிரிய நிகண்டின் பாயிரத்திலும், இந்நிகண்டு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவ் இடங்களில் எல்லாம் இதற்குக் "கயாகரம்" என்று பெயர் உள்ளது. இவரைப் பற்றி அவரே செய்துள்ள பாயிரப் பாடல்களால் இவர் இராமேசுவரப் பதியினர், சோமேசர் மகனார், அரும்பொருள் அந்தாதி, இராமேசுவரக் கோவை என்னும் வேறு பிற நூல்களையும் இயற்றியவர் எனத் தெரிகிறது.

நூலின் அமைப்பு

கட்டளைக் கலித்துறையில் இயன்றது. அந்தாதித் தொடையில் அமைந்தது. 566 பாடல்களை உடையது. 10500 சொற்களை உடையது.

எடுத்துக் காட்டு

" பொன்னேர் இரும்பு சுரர்குருமாடை பொலிவு திரு
என் ; ஏர் அழகு முழு பெற்றமும் ; எள் ஒளிபகலாம்
தென்னே வனப்பும் இசை பாடலும் தென் திசையும் என்ப :
கொன்னே பெருமை பயனிலி அச்சம் கொளும் பொழுதே "

இப்பாடலின் இறுதி வரி,

> *" அச்சம் பயலி பெருமை என்று*
> *அம்முன் றென்ப கொன்னைச் சொல்லே "*

எனவரும் தொல்காப்பிய நூற்பாவைத் தழுவியதாகும்.

சூடாமணி நிகண்டு

இந்நிகண்டே பிற்காலத்துப் பெருஞ்சிறப்புப் பெற்று விளங்கிற்று. தலையில் அணியும் ஒருவகை அணிக்குச் "சூடாமணி" என்று பெயர். அணியில் சிறந்தது சூடாமணி போன்று நிகண்டில் சிறந்தது இது வென்ப. இதனைச் சூளாமணி நிகண்டென்றும் அழைப்பர்.

ஆசிரியர்

மண்டலபுருடர் என்பார். தொண்டை நாட்டிலுள்ள பெருமண்டூர் என்னும் ஊரினர். குணபத்திரனாரின் மாணவர் கிருட்டினராயன் என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர்.

இனி இவர் எழுதிய தற்சிறப்புப் பாயிரத்தைக் காண்போம் :

தற்சிறப்புப் பாடல்கள் எட்டு உள்ளன. அவற்றுள் முதல் பாட்டில் பிண்டி நீழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி,

> *" மண்ணிய நிகண்டு சூடாமணி என ஒன்று சொல்லுவன "*

என நுதலிப் போகின்றார். மூன்றும் பாடலில் திவாகரமும், பிங்கலமும் கற்க எளிதல்ல என்று கருதித் தாம் இந்நிகண்டைச் செய்ததாகக் கூறியுள்ளார். ஆறுவது பாடலில் குணபத்திரன் என்னும் தம் குருவின் ஆணையும், இயலிசை வல்லோரின் வேண்டுகோளும் சேர உந்தியமையின் இந்நூலைச் செய்ததாகக் கூறுகின்றார். ஏழு, எட்டாம் பாடல்களில் திவாகரத்தை முழுமையாகவும், பிங்கலத்தை ஒருபுடையும் ஒத்துத் தாம் இயற்றியதாகக் கூறுகின்றார். இப்பாடல்களில் தம் குருபக்தியை மிக அழகாகக் காட்டியுள்ளார். தம்முடைய நூலில் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் குரு வணக்கம் செய்து அவ்வப்பகுதிகளை நிறைவுறுத்துகின்றார். இவற்றால் இவரது குருபக்தியும் சமய நலமும் தெள்ளிதின் விளங்கும்.

காலம்

சூடாமணியின் பெயர்த் தொகுதியின் பத்தாவது பாடலில் கிருட்டினராயன் என்ற பெயர் காணப்படுகின்றது. எனினும் இப்பெயரைக் கொண்டு இந்நூலுக்குக் காலவரையறை செய்தல் எளிதன்றேனும் இன்றைய ஆராய்ச்சி வல்லுநர்கள் பதினாறும் நூற்றாண்டென்றே அறுதியிடுகின்றனர்.

நூல் அமைப்பு

விருத்தப்பாவால் இயன்றது. 1197 பாடல்களை உடையது. திவாகரத்தைப் போன்றே பன்னிரண்டு தொகுதிகளையுடையது. பதினோராம் தொகுதியில் தாம் எடுத்துக் கொண்ட 1575 சொற்களையும், ககரமுதல் னகர ஈறாக உள்ள எதுகை அமைப்பில் அமைத்துள்ளார். இங்ஙனம் அமைத்துக் கொண்ட முறை சொற்பொருளைக் காண்டற்கு எளிதாக உள்ளது. ஒரு பாடல்,

"பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சிவனே புத்தன்
பகலே நாள் ஒரு முகூர்த்தம் பகலவன் நடுவே தேசு
மகரமே கருப்பூந்தா தாம் வசி கூர்மை வசியம்வாளே
அகம் மனம் மனையே பாவம் அகலிடம் உள்ளுமாமே".

அகராதி நிகண்டுகள்

நிகண்டுகள், சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருள் விரிக்கும் நூல் இதுவாதலின் இது அகராதி நிகண்டு எனப் பெயர் பெற்றது. அயல் நாட்டாரின் தொடர்பு ஏற்படுவதற்கு முன்னமேயே சொற்களை இங்ஙனம் அகர வரிசையில் அமைக்கும் இயல்பை நம் தமிழ்மக்கள் கண்டு இருந்தனர் என்பது நினைவு கூரத்தக்கது. ஆசிரியர் இரேவணசித்தர் என்பார் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். சைவ வேளாண் மரபினர். பட்டீச்சுரத்து எழுந்தருளியுள்ள இறைவனைப் பல பாடல்களில் இவர் போற்றியிருப்பதால் அப்பெருமானிடத்து இவர் பேரன்பு கொண்டவரெனத் தெரிகிறது. திருப்பட்டீச்சரம், திருவலஞ்சுழி, திருமேற்றளி ஆகிய ஊர்களுக்குப் புராணமும் பாடியுள்ளார்.

காலம்

அரிய சகாப்தம் ஆயிரத்து ஐந்நூற்று ஒருபத்தாறென உரைத்திடு ஆண்டினில் இந்நூல் செய்யப் பெற்றதாக அப்பாயிரம்

கூறுதலின் இந்நூல் கி.பி. 1594-ல் செய்யப் பெற்றதென அறியலாம். (சக ஆண்டுடன் எழுபத்தெட்டு ஆண்டுகளைச் சேர்த்தால் கி. பி. ஆண்டு கிடைக்கும்).

நுவலும் திறன்

இது நூற்பா யாப்பில் அமைந்தது. 3368 பாடல்களை உடைய தெனப் பாயிரம் கூறுகின்றது. எனினும் 3334 நூற்பாக்களே இப்பொழுது காணப்படுகின்றன. இந்நூல் 10 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. *அகராதிப் பேர்த்தொகுதி*
2. *ககராதிப் பேர்த்தொகுதி*
3. *சகராதிப் பேர்த்தொகுதி*
4. *ஞகராதிப் பேர்த்தொகுதி*
5. *தகராதிப் பேர்த்தொகுதி*
6. *நகராதிப் பேர்த்தொகுதி*
7. *பகராதிப் பேர்த்தொகுதி*
8. *மகராதிப் பேர்த்தொகுதி*
9. *யகராதிப் பேர்த்தொகுதி*
10. *வகராதிப் பேர்த்தொகுதி.*

இந்நூலில் சங்ககால, பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் உள்ள சொற்களும் வழக்குச் சொற்களும், வடமொழி, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளினின்றும் திருந்தி வந்த சொற்களும் இடம் பெற்றுள்ளன.

இந்நிகண்டில் அகரம் முதலாக எடுத்துக்கொண்ட சொற்களில் ஒருபொருள் உணர்த்தும் சொற்கள், இருபொருள் உணர்த்தும் சொற்கள் என்ற பாகுபாடு காணப்படுகின்றது. இது இந்நூற்கு அமைந்த சிறப்பாகும்.

எடுத்துக்காட்டு

1. *"அரன் என்பதுவே சங்கரன் ஆகும்"*
2. *"அம்பிகை என்பது உமையவள் பெயரே"*

1. *"அந்தரியே உமை, துர்க்கை என்றிருபேர்"*
2. *"அனந்தை தானேர் சத்தியும் பூமியும்"*

1. *"அத்தன் என்பதுவே சிவனும் பிதாவும்*
   சுவாமியும் என்றே சொல்லு முப்பெயரே"

ஆசிரிய நிகண்டு

இந்நூல் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. ஆதலின் இப்பெயர் பெற்றது. ஆசிரியர் ஆண்டிப் புலவர் என்பார். இவர் தொண்டை நாட்டிலுள்ள ஊற்றங்கால் என்னுமூரினர். சைவர். சங்கறுத்து வளையல் செய்யும் மரபினர்.

> " மன்னுசெஞ்சிச் சீமை சூழ் தொண்டை வளநாட்டில்
> வாய்த்த ஊற்றங்காலில் வாழ்
> வளையறுப்போர் குலன் பாவாடை வாத்தியார்
> மைந்தனும் நற்கீரனே "

என அந்நூற்கண் வரும் பாடலால் இவ்வுண்மை அறியலாம்.

காலம்

திவாகரம் முதல் கயாகரம் வரை உள்ள நிகண்டுகளின் சொற்களைத் திரட்டியே தாம் இந்நூலைச் செய்திருப்பதாகப் பாயிரத்தில் கூறுகின்றார். ஆதலின் கயாதரர் காலமாகிய 15-ம் நூற்றாண்டை அடுத்து இவர் வாழ்ந்தாரெனத் துணியலாம்.

நுவலுந்திறன்

ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ளதால் பாடல்கள் மிக நீண்டுள்ளன. ஒவ்வொரு சொற்கும் தாம் கூறும் பொருள் எத்தனை என்பதை எண்ணிக்கை கொடுத்துச் சொல்லல் இவர் மரபு.

கைலாச நிகண்டு

கைலாசர் என்பவரால் எழுதப் பெற்றது. ஐம்பத்தாறு தொகுதிகளை உடையது. நூற்பா நடையில் அமைந்தது. பிரிவுகள் 56 ஆக இருப்பினும் இதற்கு முன்னுள்ள நூலின் பொருட்பாகு பாட்டை முழுமையாகத் தழுவியே இந்நூல் அமைந்துள்ளது. திவாகர நிகண்டில் உள்ள முதல் பத்து தொகுதிகளில் உள்ள சொற்களையே இவர் நாற்பத்தெண்பது பிரிவுகளாக வகுத்துக் கொண்டு பேசுகின்றார். திவாகரத்தில் 11-ஆவது தொகுதியில் உள்ள சொற்களை இவர் ஏழு பிரிவுகளாக வகுத்துக்கொண்டு பேசுகின்றார். ஓரெழுத் தொருமொழி, ஓரெழுத்தொற்று ஒரு மொழி, ஈரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொற்று ஒரு மொழி

எனப் பாகுபாட்டை அமைத்துக் கொள்கிருர். இவர் காலம் பதினேழாம் நூற்ருண்டு என்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

பாரதி தீபம்

திருவேங்கட பாரதி என்பவரால் செய்யப்பெற்றது. தென் கடம்பை ஊரில் அந்தண மரபில் தோன்றியவர். கலித்துறை யாப்பில் தம் நூலே அமைத்துள்ளார். எழுநூற்று முப்பத்தேழு பாடல்கள் இந்நூலின்கண் உள்ளன. 13000 சொற்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. காலம் பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்ருண்டு என அறுதியிடுகின்றனர்.

பலபொருள் சூடாமணி நிகண்டு

ஆசிரியர் ஈசுவர பாரதியார் என்பார். நெல்லே மாவட்டத்தில் உள்ள மடசை என்னும் ஊரினர். சைவசமயத்தினர். நெல்லேப் பதியில் உள்ள சிவபெருமானே வழிபடு கடவுளாகக் கொண்டவர். இந்நூலின் பாயிரத்தால் மூலநாளில் இந்நூல் அரங்கேற்றப் பெற்றதாகத் தெரிகிறது.

ஒரு சொல் ஒரு பெயர்க் காண்டம்
ஒரு சொல் பல் பொருள் காண்டம்
பல பொருள் கூட்டத்து ஒரு பெயர் காண்டம்

என இந்நூல் மூன்று காண்டங்களேயுடையது. அகர வரிசையில் ஆசிரிய விருத்தத்தால் அமைந்தது.

''நாவுவந்த பல் பொருட் சூளாமணியைப் பாரில்
நாட்டிய சீர் முதற்காண்ட மென்னும் பேர்தான்
பூவுவந்த ஒரு பெயரோர் பொருளேயாகும்
போற்றிரண்டாங்காண்டம் பல பொருளிஞேர் சொல்
சேவுவந்த நெல்வேலிப் பெருமான் ஈன்ற
செவ்வேளின் திருவருளால் தேர்ந்து நான்சொல்
பாவுவந்த பெயர் மூன்ருங்காண்ட மாகும்
பல பெயர்க் கூட்டத்தொருபேர் பலவுந்தானே''

என வரும் பாயிரச் செய்யுளால் இப்பகுப்பு முறை அறியக் கிடக்கின்றது.

காலம்

இவர் கொல்லம் 876-ல் இந்நூலைச் செய்ததாகக் கூறுதலின் இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு என அறியலாம்.

அரும் பொருள் விளக்க நிகண்டு

ஆசிரியர் அருமருந்தைய தேசிகர் என்பார். திருச்செந்தூரில் வாழ்ந்தவர். நூலின் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் தாம் செந்தூரினர் எனவும், செந்திலாண்டவனை வழிபடுபவர் எனவும் கூறுகின்றார்.

காலம்

சகம் 1685-ல் இந்நூலைச் செய்ததாகக் கூறுதலின் 18 ஆம் நூற்றாண்டென்பது தெளிவாகின்றது.

நுவலும் திறன்

இந்நூல் விருத்தப் பாவால் ஆனது. எழுநூறு பாக்களை உடையது. ஒரு சொல் பல் பொருள் படுமாற்றையே பெரிதும் பேசுகின்றார். ககரம் முதல் னகரம் ஈறாக உள்ள பதினெட்டு எழுத்துக்களையும் முறையே அமைத்துக்கொண்டு அவ்வவ்வெதுகைகளுக்குரிய சொற்களைத் திறம்பட அமைத்துப் பேசுகின்றார். ஒவ்வொரு தொகுதியின் முதலிலும் முருகப் பெருமானை வணங்கி, இன்ன எதுகையைப் பற்றி நுவலத் தொடங்குகின்றேன் எனக் கூறுவதும், அவ்வத் தொகுதியின் இறுதியில் பாடல்களின் எண்ணிக்கை கூறிமுடிப்பதும் இவர் மரபு. இந்நூலைப் படிப்பதால் புலமையும் செல்வமும் பெருமையும் கிடைக்கும் என இவர் கூறியுள்ளார்.

உசித சூடாமணி நிகண்டு

ஆசிரியர் திருநெல்வேலிச் சிதம்பரக் கவிராயர் என்பார். சைவர். ஆசிரிய விருத்தத்தால் அமைந்தது. 197 பாடல்களை உடையது. 18 தொகுப்புக்களை உடையது. தொகுப்பின் பெயர்கள் அவ்வவற்றில் கூறப்பட்டுள்ள பொருண்மையை விளக்குவதாக அமைந்துள்ளது.

1. தேவ சரித்திரத் தொகுப்பு
2. வருணாச்சிரம வொழுக்கத் தொகுப்பு
3. இராச சின்னத் தொகுப்பு
4. காம சின்னத் தொகுப்பு
5. எழுவகைப் பெண்பருவத் தொகுப்பு
6. எழுவகை யாண் பருவத் தொகுப்பு
7. எண்வகை விவரணத் தொகுப்பு
8. புணர்ச்சி வகைத் தொகுப்பு
9. புணர்தற்குரிய வகைத் தொகுப்பு
10. பிரிவின் வகைத் தொகுப்பு
11. பெண் விரக வகைத் தொகுப்பு
12. புருட விரகத் தொகுப்பு
13. விரகப் பெண்ணின் பகையாதிய தொகுப்பு
14. மகளிர் பதாதி யுவமைத் தொகுப்பு
15. பெண்ணினுவமை யலங்காரத் தொகுப்பு
16. புருட வுவமை யலங்காரத் தொகுப்பு
17. முப்பொருள் வகைத் தொகுப்பு
18. உதாரண வொழிபென்ற உசிதப் பொருள் அலங்காரத் தொகுப்பு,

பொதிகை நிகண்டு

ஆசிரியர் சாமிநாதக் கவிராயர் என்பார். தம் பெயரால் சாமிநாதமெனும் இலக்கண நூலையும் இயற்றியுள்ளார். சைவர்.

காலம்

இவர் மகன் சிவசுப்பிரமணியக் கவிராயர் என்பார். இவர் பூவைப் புராணம், நாமதீபநிகண்டு ஆகிய இரு நூல்களையும் இயற்றியவர். பூவைப் புராணம் என்னும் நூலைக் கொல்லம் 985-ல் இவர் இயற்றியுள்ளதாகக் கூறியுள்ளார். இக்காலம் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே, இவர் தந்தையார் காலம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு என அறுதியிட இடமுண்டு.

நுவலும் திறன்

இந்நூல் இரு பகுதிகளை உடையது. முதல் பகுதியில் பத்துத் தொகுதிகள் உள்ளன. 500 பாடல்களை உடைய இப்பத்துத்

தொகுதிகளில் முதல் ஒன்பது தொகுதிகளில் 14500 சொற்களும், பத்தாவது தொகுதியில் 1350 சொற்களும் உள்ளன. இரண்டாம் பகுதியில் 2288 சொற்கள் உள்ளன. அகர வரிசையில் அமைந்துள்ளது. முதல் பகுதி விருத்தப்பா அமைப்பிலும் இரண்டாம் பகுதி நூற்பா அமைப்பிலும் அமைந்துள்ளது.

பொருள் தொகை நிகண்டு

ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி என்பார், புதுக்கோட்டையைச் சேர்ந்த குடுமியாமலையில் வாழ்ந்தவர். தீட்சிதர் மரபினர். சுப்பிரமணிய கவிராயர் என்பார் இந்நிகண்டில் தாமும் சில நூற்பாக்களை எழுதிச் சேர்த்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

நூலமைப்பு

நூற்பா யாப்பில் இயன்றது. பொருள் தொகை நிகண்டு என்ற பெயரைக் கொண்டே இந்நூல் முழுமையும் தொகைச்சொல் விளக்கமாகவே அமைந்துள்ளதென அறியலாம். ஒன்று முதல் பதினாறு வரை உள்ள தொகைவிளக்கமும், 18, 20, 21, 22, 24, 27, 28, 30, 31, 32, 35, 36, 38, 56, 60, 64, 96, 100 ஆகிய தொகைகளின் விளக்கமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

ஔவை நிகண்டு

ஆசிரியர் பெயர் தெரிந்திலது. ஔவை என்பவரால் பாடப் பெற்றதாக நினையலாம். விருத்தப்பாவால் இயற்றப்பெற்றுள்ளது. இதைப்பற்றி வேறு தெரிவதற்குக் கருவியில்லை.

இங்ஙனம் பல பட வளர்ந்த நிகண்டுகள் இடைக் காலத்தே மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தன. அக்காலத்து இலக்கணம் பயிலுமுன் இந்நிகண்டு கற்றுத்தான் கற்க வேண்டுமென்ற நியதி இருந்தது. 'நிகண்டு கற்றுச் செய்யுளாராய்ச்சி யுடையார்க்கே அவற்றை ஆராய்வுழி அவற்றின்கண் உளவாகிய செய்கை வேறுபாடுகளும் சொல்முடிபு பொருள்முடிபு வேறுபாடுகளும் இன்ன வென்று துணியப் படாமையின் அவற்றைத் துணிந்தறிய வேண்டி இவ்வியற்றமிழ் கேட்டறிதலின் கண்ணே ஊக்கம் செல்லுமாகலின் அவை ஆராய்ந்த பின்னர் இது கேட்கற்பாற்று' என வரும் விருத்தியுரை இதனை விளக்கும். இங்ஙனமிகுந்த செல்வாக்கு காலப்போக்கில் படிப்படியாகக் குறைந்தும் அருகியும் வரலாயிற்று.

காரணம் மொழியை ஊன்றிப் பயில்வாரும் வரலாற்று முறைமையில் பயில வேண்டுமென விரும்புவாரும் குறைந்துவந்தமையுமே ஆகும். அன்றியும் அரசியல் அமைப்பில் நேர்ந்த மாறுபாடுகளும் இதற்குக் காரணமாகும். இங்ஙனம் குறைந்து வந்த நிலை மேலும் வளர்ந்து இக்காலத்து அதனைப் பயிலும் பயிற்சியே நின்று விட்டது. அதற்குக் காரணம் அந்நிகண்டுகளைக்காட்டிலும் எளிமையாகவும் தெளிவாகவும் பொருள் உணர்த்தும் நூல்கள் உரைநடையில் தோன்றி வளர்ந்தமையே ஆகும். அது மட்டுமன்று; நிகண்டுகளில் உள்ள சொற்களில் பெரும்பாலன வடசொல் தொகுதியாகவும், அவற்றின் பொருளை உணர்த்துவனவாகவும் அமைந்தமையும் ஒரு காரணமாகும். எனினும் மொழி வளர்ச்சியிலும், சமுதாய அமைப்பிலும் நிகண்டிற்கு ஒரு தனியிடம் உண்டு என்பதை மறுத்தற்கில்லை. இக்காலத்து அகராதிகள் இவ்வளவு விரிவாக வருதற்குத் தோற்றுவாய் செய்த பெருமை நிகண்டுகளுக்கேயுண்டு.

நிகண்டுகள்

(கி. பி. 900 முதல் 1800 வரை)

1.	திவாகரம்	9-ம்	நூற்றாண்டு
2.	பிங்கலம்	10-ம்	,,
3.	உரிச்சொல் நிகண்டு	14-ம்	,,
4.	கயாதர நிகண்டு	15-ம்	,,
5.	சூடாமணி நிகண்டு	16-ம்	,,
6.	அகராதி நிகண்டு	16-ம்	,,
7.	ஆசிரிய நிகண்டு	17-ம்	,,
8.	கைலாச நிகண்டு	17-ம்	,,
9.	பாரதி தீபம்	17-ம்	,,
10.	பல்பொருள் சூடாமணி	17-ம்	,,
11.	அரும்பொருள் விளக்க நிகணடு	18-ம்	,,
12.	உசித சூடாமணி	18-ம்	,,
13.	பொதிகை நிகண்டு	18-ம்	,,
14.	பொருள் தொகை நிகண்டு	18-ம்	,,
15.	ஔவை நிகண்டு	18-ம்	,,

8

தமிழ் இசை - நாடக வரலாறு

(900—1800)

டாக்டர் இரா. குமரவேலன்

0. 1. கலைகள்

பல நுண்கலைகளின் தாயகமாய் விளங்கியது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். அவற்றுள்ளும் இசை, நாடகத் துறைகளில் ஈடிணையற்று விளங்கியிருந்ததனைச் சங்க இலக்கியம் தெளிவாகக் காட்டுகின்றது.

"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்"[1]

என இயல் இசை நாடகம் என்ற முத்தமிழையும் ஒருங்கிணைத்துக் கூறுகிறது பரிபாடல் திரட்டு. சங்க இலக்கியம் இயற்றமிழ்க் கூறுகளை நிறையப் பெற்றிருப்பினும் இசை நாடகச் செய்திகளையும் மிகுதியாகத் தருகின்றன எனலாம். கலித்தொகையும் பரிபாடலும் இயலை விட இசை நாடகக் கூறுகளை மிகுதியாகப் பெற்றுள்ளவை யாகும். ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப் படை நாடகத்தின் சிறப்பையும், பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை என்பன இசையின் சிறப்பினையும் நன்கு விளக்கு வனவாம். பாணர்,[2] பொருநர்,[3] பாடினியர்,[4] குயிலுவர்,[5] ஆடுநர்,[6]

---

1. பதி. திரட்டு 4. வையாபுரிப்பிள்ளை, எஸ். இலக்கியச் சிந்தனைகள் பக். *167*.
2. பாணர்: தொல். *3-88-3; 3-148-25; 3-167-2;* சிறு *248* முதலியன.
3. பொருநர்; தொல் *3-74-6; 3-88-3.* முருகு. *69,* சிறு *203* முதலியன
4. பாடினி: பொருந. *47, 162,* பதிற். *14-17; 17-14; 61-16; 87-1* முத.
5. குயிலுவர்: சிலம்பு *5-52; 184; 17-27; 26-129;* மணி *7-123*
6. ஆடுநர்: பதி. *17-6; 90-43;* பரி *9-61; 64;* புறம் *29-24;*

வயிரியர்,[7] கோடியர்,[8] விறலியர்,[9] கூத்தர்[10] முதலிய கலைஞர்கள் தமிழ் இசைக்கலை, நாடகக் கலை ஆகியவற்றை நன்கு வளர்த்தனர்; வள்ளல்களும் மன்னர்களும் தக்க முறையில் அவர்களைப் புகழ்ந்து போற்றிப் பாராட்டிப் பரிசளித்துக் கலைத்தொண்டு ஆற்றினர். பிற்காலத்திய பிங்கல நிகண்டு,

"இசைத்தமிழ் இயற்றமிழ் நாடகத் தமிழென
வகைப்படச் சாற்றினர் வகையுணர்ந் தோரே" 11

என முத்தமிழ்க் கூறுகளை இயம்புகிறது.

1. 0. நாடகம்

முத்தமிழினுள் நாடகம் பற்றித் தொல்காப்பியம் முதற் கொண்டே பல குறிப்புக்களை நாம் காணலாம்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" 12

எனவரும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா 'நாடகம்' பற்றிய நேரடிக் குறிப்பென்றே கொள்ளலாம். 'நாடக வழக்கு' என்பதை நச்சினார்க்கினியர் 'புனைந்துரை வகை' என்பர். அகப் பொருள் தழுவிய நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலி, பரிபாட்டு ஆகிய வகைப் பாக்களில் இடம்பெறத் தக்கவை என்றும் தொல்காப்பியர் கூறுவர்.

"கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்" 13

—இந்நூற்பாக் கருத்துக்களைப் பிறழ உணர்ந்த சிலர் "தொல் காப்பியர் கலித்தொகைச் செய்யுட்கள், பரிபாடலிலுள்ள வையைப் பாடல்கள் ஆகியனவற்றை நோக்கியும், அவற்றிலுள்ள நாடகப் பண்பு, உலகியற் பண்பு, இசைப் பண்பு என்பனவற்றை

---

7. வயிரியர்: மது. *628, 750;* நற் *100-10;* பதி *20-16* புறம் *9-9* முதலியன.
8. கோடியர்: பொருந. *57;* சிறு *109-125,* மது *523,* புறம் *29-23*
9. கூத்தர்: தொல் *3.88.3;* புறம் *28-13;* சிலம்பு *.6-228* முதலியன
10. விறலியர்: தொல். *3. 88 3;* பொருந *110;* சிறு *31;* பெரும் *486,* மது *217,* மலை *46* முதலியன
11. பிங்கல நிகண்டு *6,* அனுபோகம்
12. தொல். அகத். *56*
13. தொல். அகத். *56*

உணர்ந்துமே இச்சூத்திரத்தை அமைத்துள்ளார்'' [14] என்று தவருன கொள்கையை வற்புறுத்தியுள்ளனர். தொல்காப்பியர் கடைச்சங்க நூல்களான கலித்தொகை, பரிபாடல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்நூற்பா செய்தனர் என்பதை விட, முதலிரண்டு ஊழிகளிலிருந்ததாகக் கூறப்படும் மறைந்தொழிந்த பெரும்பரிபாடல், பெருங்கலித்தொகை ஆகியவற்றை மனத்துட் கொண்டு இதனை எழுதியிருக்கலாம் என்று எண்ணுவதே பொருத்த மாகும். மேலும் 'என்மனுர், புலவர்' என்ற தொடரும் கவனிக்கத் தக்கது; அவருக்கு முன்னிருந்த நூலாசிரியர்களே இவ்வரை யறையைச் செய்தனர் என்பதை விட்டு தொல்காப்பியர் இதனை 'அமைத்துள்ளார்' என்பதும் தெளிந்த அறிவினர் கூற்ருகாது.

1. 1. நாடகம் என்ற சொல்

தொல்காப்பிய இலக்கண நூலேயன்றிப் பிற சங்க நூல்களில் சில இடங்களிலும், சிலம்பு மணிமேகலையிலும் 'நாடகம்' என்ற சொல் பயின்றுவரக் காணலாம்.

> *"நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த*
> *விசிவீங் கின்னியம் கடுப்ப"* [15]

எனப் பெரும்பாணுற்றுப்படையும்,

> *"பாட லோர்ந்தும் நாடக நயந்தும்"* [16]

எனப் பட்டினப்பாலையும் குறிப்பிடுகின்றன.

"நாடகம் ஏத்தும் நாடகக் கணிகை",[17] 'நாடகம் உருப்பசி'[18] 'வால சரிதை நாடகம்',[19] நாடகமடந்தையர் [20] 'நாடக மகளிர்',[21]

---

14. சண்முகதாஸ், அ. "நாடக வழக்கும் உலகியல் வழக்கும்", இரண்டாவது உலகக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் *(1968), 1971,* ப. *194*
15. பெரும் *55-56*
16. பட். *113*
17. சிலம்பு, பதிகம் *15*
18. சிலம்பு *6-21*
19. சிலம்பு *17-5* (உரைப்பாட்டுமடை)
20. சிலம்பு *22-142; 26-58,* மணி *4-51*
21. சிலம்பு *26-128; 26-141*

'நாடகக்கணிகை', [22] 'நாடகக் காப்பியம்' [23] எனற தொடர்கள் இரட்டைக் காப்பியங்களில் பயின்று வந்துள்ளன. நாடகத்தைப் பற்றித் திவாகரம் கீழ்வருமாறு குறிக்கிறது:

> "நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
> படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
> ஆறுதல் தூங்கள் வாணி குரவை
> நிலயம் நிருத்தம் கூத்தெனப் படுமே" [24]

திவாகரம் குறிப்பிடும் இப் பதினைந்து பெயர்களேயன்றி வேறு பிற சொற்களும் நாடகத்தைக் குறிப்பிடுவனவாகக் கொள்ளக் கிடைக்கின்றன. அவற்றுட் சில; சொக்கம், கரணம், குறிப்பு, விறல், அவிநயம் முதலியன. [25] வள்ளுவர் 'கூத்து' என்ற சொல்லையே கையாளுகின்றார். [26]

1.2. நாடகம்—தமிழ்ச்சொல்லே

'நாடகம்' என்ற சொல்லைத் 'தமிழ் லெக்சிகன்' வடசொல் என்கிறது.

"நாடகம்: natakam. n <nātaka: 1. measured dance = தாளவொத்துக்கு இயைய நடிக்கும் நடம் (பிங்கலந்தை). 2. play, dance, comedy = கதாபுருஷர்களின் வேஷம் பூண்டு ஒரு கதையை நடந்ததுபோல் நடத்திக் காட்டுவது (சிலப் 3.12 உரை)." [27]

வடமொழியில் 'நாடகம்' என்ற சொல்லிற்கு வேர் 'நட்' என்பதாம்:

"नाटकम्—a play drama (in general) (root—नट्)" [28]

கிரேக்க மொழிச் சொல்லமைப்பும் இவ்வாறே அமைந்துள்ளது.

---

22. *சிலம்பு*, பதிகம் *15*, மணி *24.23; 24-25*
23. மணி *19-80*
24. திவாகரம் *9-191*
25. இளவழகனார், சங்க நூற் கட்டுரைகள்
26. குறள் *332*
27. தமிழ் லெக்சிகன், தொகுதி *6*, ப. *2208*
28. Apte's Principal Skt Eng. Dictionary Pt. II Eds. P. K. Gode & C. G. Karve, Poona 1958. P. 885

"Drama - a representation of actions : Gk. Spaua - a deed, act. drāma. Gk. Spau - I do, perform." [29]

இந்த 'நாடகம்' என்ற சொல்லைத் தூய தமிழ்ச்சொல் என்று கொள்வதில் தவறில்லை. நாடகம் என்ற சொல் 'நடித்தல்' என்ற வினையின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் ஆக வேண்டும். நடித்தலை அகத்தே பெற்றது நாடகம் என்று கூறலாம்.

பேரறிஞர் அண்ணு,[30] கலைஞர் தி. க. சண்முகம்[31] ஆகியோர் குறிப்பிடுவதுபோல் "நாடகம் - நாடு அகம், நாட்டின் அகத்தைச் செம்மையாகக் காட்டுவது" என்றும் கொள்ளலாம்.

ஆனல், தொல்காப்பியர் உள்ளிட்ட பலரும் ஆளுகின்ற இச் சொல்லை வடசொல் எனச் சிலர் கூறுவது தமிழுலகம் ஆழ்ந்து சிந்தித்தற்குரிய ஒன்ருகும்.

"நாடகக் கலையென்பது நமது தமிழ் நாட்டிலே பழமையானது. 2000 ஆண்டுகட்கு முன்பும் இருந்தது. ஆனல் இன்று சிலர் நாடகம் என்ற சொல்கூடத் தமிழல்ல, சமஸ்கிருதம் என்று கருது கின்ருர்கள். நாடகம் என்ற சொல் 'நடை' என்ற தமிழ்ச்சொல்லின் கருத்தைக் கொண்டது," என்று டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் கூறுவதும் இங்குக் கருதத்தக்கது ('நாடக வாழ்க்கை' டி. கே. சண்முகம், ப. 417).

வடமொழியின்பால் தீராப் பற்றுக்கொண்ட அறிஞர் சிலர் 'நாடகம்' என்ற இத்தூய தமிழ்ச் சொல்லை, வடமொழியிற் காணப் பெறும் இதே ஒலியுள்ள சொல்லோடு இணைத்து, அதனின்றும் இச் சொல் வந்தது என்று கூறுவது பொருந்தாதது ஆகும்.

---

29. An Etymogical Dic. of the Eng. Language Eds. Rev. Walter W. Sheat O. U. P. London 1958. p. p. 181-182.

30. தமிழ் நாடகக்கலை அபிவிருத்தி மாநாட்டு மலர், ஈரோடு, 1944

31. சண்முகம், தி. க. நாடகக் கலை.

1.3. நாடகம்—பழமை

காந்தள்,[32] வள்ளி,[33] குரவை[34] ஆகிய கூத்து வகைகளைத் தொல்காப்பியம் காட்டுவதும், பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல் எனத் தனியானதோர் இயல் நடிப்பிலக்கணத்தை உணர்த்தவே அமைத்ததும் நாடகத்தின் பழமையைச் சாற்றுவதாகும். *கிரேக்க, சமஸ்கிருத நாடகங்கள் தோன்றுவதற்கு முன்னரே தமிழில் நாடகம் தோற்றிற்றென்றால், அது மிகையாகாது.* சோபோக்கிளிசுக்கும் (Sophocles), காளிதாசனுக்கும் முற்பட்டவர் ஆகிய தொல்காப்பியர் நாடகத்தின் இலக்கணத்தையே ஒருவாறு தம் நூலில் கூறியுள்ளதே அதனை உறுதிப்படுத்துவதாகும். இளம்பூரணர் மெய்ப்பாட்டியல் பற்றிக் கூறும்போது "இவ்விலக்கணம் கூத்தினுள் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின் ஈண்டுச் செய்யுங்கால் சுவைப்படச்செய்ய வேண்டுதலின் ஈண்டுங் கூற வேண்டுமென்க" என்று கூத்தினொடு மெய்ப்பாட்டைப் பொருத்துவதையும் காண்க.[35]

ஆயின் தமிழ் நாடகக் கலையின் பழமையை நிலைநிறுத்தும் வண்ணம் ஒரு நாடக நூலையேனும் - முழுமையாகச் சங்க காலந் தொட்டுப் பள்ளு, குறவஞ்சி நூல்கள் தோன்றிய பதினேழாம் நூற்றாண்டு வரை - பெறாதது தமிழர்தம் தவக்குறைவேயாகும். சிலப்பதிகாரம் மட்டுமே முத்தமிழ்க் காப்பியமாக நின்று நாடகத்தின் இயல்புகளையும் ஓரளவு காட்டி நிற்கின்றது. ஆனால், *எந்த நாடக நூலும் கிடைக்கவில்லை என்பதனைக் கருத்திற்கொண்டு பதினேழாம் நூற்றாண்டு வரை தமிழில் நாடகம் எழுதப் பெறவில்லை என்று சொல்ள முடியாது.*

இருப்பினும், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் ஒரு கருத்து ஈண்டு நினைக்கத் தக்கது; "ஆதிகாலத்தில் தமிழில் நாடகம் இருந்ததோ இல்லையோ என்ற ஆராய்ச்சி அவசியமே இல்லை. இப்பொழுது தரித்திரனாயிருக்கிற ஒருவன், அவனுடைய

---

32. தொல், பொருள், புறத். 5-1—2
33. ,, ,, 5-6
34. ,, ,, 21
35. ,, ,, 247

முப்பாட்டன் கப்பலோட்டி வியாபாரியாய் இருந்தான் என்ற கதையைக் கூறிக் கொண்டிருப்பதனால் யாதும் பயனுண்டோ? தரித்திரன் முயற்சி செய்து குபேரன் ஆவதில் ஆட்சேப மில்லையே!"[35அ] (டி. கே. சண்முகம்-நாடக வாழ்க்கை ப. 511)

கவிமணியின் கூற்றுப்படி, நாடகத்தின் பழமை பற்றிய ஆராய்ச்சி ஒரு புறம் இருக்க, தற்காலத் தமிழில் புதிய நாடக இலக்கிய நூல்களைப் படைத்துச் சிறப்பிக்க வேண்டியது தமிழ் அறிஞர், கலைஞர் தம் இன்றியமையாத் தலைமைப் பணியாகும்.

2.0. கி. பி. 900-க்கு முன்னர் நாடகம்

"நாம் சங்க காலத்து நாடக நூல் எதனையும் பெறவில்லை என்றாலும் சங்கப் பாடல்கள் அனைத்துமே நாடகத் தனிமொழி யாகவே அமைந்துள்ளன" என்பதைக் கருத்தில் இருத்திட வேண்டும்.[36] நாடகத்திற்கான களம், காட்சி, காலம்[37] ஆகிய வற்றை முதல், கரு, உரிப் பொருள்கள் தருகின்றன.

கலித்தொகையின் 65 ஆம் பாடல் "முதுபார்ப்பான் வீழ்க்கைப் பெருங் கருங்கூத்து"[38] பற்றியதாகும் (The deliberate farcial drama of the old brahmin). கருங்கூத்து—நகைச்சுவை நாடகம். அப்பாடலின் அடிக்குறிப்பு: "அவன் செய்த குறியறிதற்குப் புறத்துச் சென்ற வழி ஆண்டுப் பிறந்ததோர் செய்தியாக ஒரு பொய்யை நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகப் புனைந்துரை வகையாற் படைத்துக் கொண்டு, பிற்றைஞான்று தலைவன் சிறைப் புறமாகத் தோழி தலைவிக்குக் கூறியது."[39]

குரவை,[40] துணங்கை[41] ஆகிய கூத்து வகைகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

35அ. சண்முகம், தி. க., நாடக வாழ்க்கை, பக். 511

36. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., ப. 9. The Pageant of Tamil Literature

37. Unity of time, Unity of place & Unity of Action.

38. கலி 65

39. கலி 65 நச். உரைக்குறிப்பு

40. புறம் 24—129

41. புறம் 26, 370, 371

சிலம்பு நாடகக் காப்பியம் என்று கூறுதற்கான எல்லாத் தகுதிகளும் பெற்ற நூலாகும். திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் சிலப்பதிகாரம் ஒரு 'டிராஜி-காமெடி' (Tragi-Comedy) என்று கூறுவர்.[42] "*சிலம்பு காப்பியமன்று; நாடகமன்று; ஓர் இசை நாடகம்*" என்பாரும் உளர்.[43] தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சிலம்பின் முதற்பகுதியை 'காமெடி' என்றும், இரண்டாம் பகுதியை 'டிராஜடி' என்றும், மூன்றும் பகுதியை 'Historical' என்றும் பகுப்பர்.[44] மங்கல வாழ்த்துப் பாடல் வாழ்த்துப் பகுதியைக் கொண்டு சிலம்பினை 'நாடகக் காப்பியம்' என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்.[45]

திருக்குறள் நாடகக் கூறுகள் நிரம்பிய குறட்பாக்கள் பலவற்றைப் பெற்றுச் சிறந்துள்ளது.[46]

சோழர்களின் எழுச்சிக் காலம் வரை வாழ்ந்த ஆழ்வார்களும் நாயனமார்களும் தம் பாடல்களில் மிகுதியான அளவிற்கு நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதோடு, நாடகப் போக்கிலும் பாடல்களைப் புனைந்துள்ளனர். சைவரும் வைணவரும் போற்றும் தெய்வப் பெயர்களாகிய நடராசன் — அரங்கநாதன் என்பவையே நாடகத தன்மை உடையனவாகக் காணப்படுதல் கருதத் தக்கது.

2.1. *சங்க காலத்துக் கூத்து வகைகள்*

"மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய *துடிநிலையும்*, வேலன் வெறியாட்டயர்ந்த *காந்தளும்*, மூவேந்தர்க்குரிய போந்தை, வேம்பு, ஆர் என வரூஉம் அடையாளப் பூச்சூடி *ஆடிய கூத்தும்*, வாடாவள்ளி *என்ற வள்ளிக் கூத்தும்*, மழலைப் பருவத்தானொருவன் போர்க் களத்திடை ஓடாது நின்றமை கண்டு, அவற்குக் கட்டிய கழலினைப் பாடிய *கழல் நிலைக் கூத்தும்*,

---

42 இராமச்சந்திர தீட்சிதர், வி. ஆர்., *சிலப்பதிகாரம்*, ப. *16* (ஆங்)

43. தமிழ் ஒளி, சிலம்பு காவியமா? நாடகமா?

44. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., ப. *21*

45. மாணிக்கம், வ. சுப., இரட்டைக் காப்பியங்கள், *முன்னுரை*, ப. *43*

46. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., ப. *19* The Pageant of Tamil Literature. "Tiruvalluvar makes use of this part of his Kural 250 speeches suggestive of 250 dramatic situations of ideal love."

வாளாற் பொருது உயர்ந்த அரசிளங் குமரனை, அவற்கு அரசு கொடுத்து வீரர்கள் கொண்டாடிய *பிள்ளையாட்டும்*, களிறெறுடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் வியந்து ஆடும் *அமலைக் கூத்தும்*, தேரின்கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன், வெற்றிக் களிப்பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த் தலைவரோடு கைபிணைந்தாடும் *முன்தேர்க் குரவையும்*, தேரோரை வென்ற கோமாற்கே பொருந்திய இலக்கணத்தானே தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச் சுற்றம் ஆடும் *பின்தேர்க் குரவையும்*, எனும் இவையெல்லாம் முதற்கண் செயலாகவும், வரலாறு கூறுங்கால், கூத்து விகற்பமாகவும் அமைதற்கு உரிய'' (விபுலானந்தர், சுவாமி, யாழ்நூல் ப. 375) என்று *வீர நிலைக் கூத்து* நாடகப் பகுதிகள் பலவேறு நிலைகளில் தனித்தனியே ஆடப்பெறுந தன்மையை 'யாழ்நூல்' தந்த விபுலானந்தர் நன்கியைததுப் பொருத்தி விளககிக் காட்டுவர்.

'வாடா வள்ளி' என்பது தாழ்ந்தோர்க்கான நாடக வகை, நச்சினார்க்கினியர் "வாடா வள்ளி" — வாடுங் கொடியல்லாத வள்ளிக் கூதது; அஃது, *இழிந்தோர் காணும் கூத்து* .... இது பெண்பாற்குப் பெருவரவிற்று. இதனைப் பிறகூறினார், வெறியறி சிறப்பன்மையானும் ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாவது அல்லது அகத்திணைக்கண் வந்து பொதுவாவது அலலது அகத்திணைக்கண் வந்து பொதுவாகாமையும் பற்றி'' என்று கூறுவர். (தொல். புறத். 5)

2. 2. *சிலம்பில் சில கூறுகள்*

சிலப்பதிகாரத்தில் இசை, நாடகம் பற்றிப் பல செய்திகள் குறிக்கப்படுகின்றன. கூததியது அமைதி, ஆடலாசிரியன் அமைதி, இசையாசிரியன அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமையாசிரியன் அமைதி, குழலோன் அமைதி, யாழாசிரியன் அமைதி, அரங்கின் அமைதி, தலைக்கோல் அமைதி, அரங்கிற் புகுந்தாடு முறைமை, பாலைப்பண் இலக்கணம், பதினோராடல், நெயதல் வரிப பாடல்கள், விளரிப்பண், எண்வகை வரிக்கூத்து, நால்வகைப் பண், நரம்பிலககணம் (இணை, கிளை, ஒப்பு, பகை), குற்றமும் நீக்குமாறும், யாழ் வாசிக்கும் முறைமை, பாலை வரிப் பாட்டு (வேட்டுவ வரி), அம்பணவர் யாழியல்பு (புறஞ்சேரி), பாலைப்

பெரும்பண் (காந்தாரம), வேத்தியல் (ஊர்காண்), பொதுவியல், நால்வகை அவிநயக் களரி, எழுவகை வரிப் பாடல், குரவையாடல் (ஆய்ச்சியர்), ஒத்திசை, மருத வரிப்பாடல் (ஊர்சூழ்வரி), நால்வகை வருணப் பூதர் (அழற்படு காதை), குறிஞ்சிக் குரவைப் பாடல் (குன்றக் குரவை), கார்க் குரவை (கால்கோள்), வேனிற்பாணி, வரிப்பாடல், குறிஞ்சிப் பாணி (நீர்ப்படை), உழவரோதைப் பாணி, குழற் பாணி, நெய்தற் பாணி, குறிஞ்சிப்பண் இலக்கணம் (நடுகல்), கொடுகொட்டி, கூத்தச் சாக்கையன் திறம், அம்மானை வரி (வாழ்த்து), கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப் பாட்டு—என்றிவ் வாருகப் பல இசை நாடகச் செய்திகளையும் இலக்கணங்களையும் விளக்கங்களையும் அவற்றிற்குரிய பாடல்கள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றையும் காண்கிறோம். *கலை நூல் வல்லார்க்குச் சிலம்பு ஒரு நற்பொருட் சுரங்கம்* எனலாம். அதன் உரைகள் கிடைத்தற்கரிய பெரும்புதையலாம்.

2 3. மத்த விலாசம்

மகேந்திர வர்மன் (கி. பி. 600-630) பல கலைகளிலும் வல்லவனு யிருந்து 'மத்த விலாசப் பிரகசனம்' என்ற வடமொழி நாடக நூல் ஒன்றையும் எழுதினுன் என்றறிகிறோம். சமயம் தழுவிய நகைச் சுவைக் கேலி நாடகமாகிய இந்நூல் சிறியது; அழகியது; கருத்தாழ மிக்கது. ஆங்கிலத்திலும் தமிழிலும் இனிதே மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.[47]

3.0. மறைந்த இசை நாடக நூல்கள்

ஆராய்ச்சிக் குதவும் வகையில் நமக்கு எந்தப் பழைய இசை நாடக இலக்கியமும் கிடைக்கவில்லை யென்ருலும் அடியார்க்கு நல்லார் முதலான உரையாசிரியர்கள் சில இசை நாடக நூல்களின் பெயர்களைக் குறித்துச் சென்றுள்ளனர். அவற்றுள் பல இலக்கண நூல்கள். அவை :

---

47. Eng. Tr. by Barnett, Bulletin of Oriental Studies, London Institute, Vol V. Tamil Tr, by மயிலை சீனி வேங்கடசாமி, & T N. சுப்பிரமணியன்,

1. அகத்தியம்	13. பஞ்ச பாரதீயம்
2. இசை நுணுக்கம்	14. பஞ்ச மரபு
3. இந்திர காளியம்	15. பரதம்
4. கடகண்டு	16. பரத சேனாபதியம்
5. குணநூல்	17. பெருநாரை
6. கூத்தநூல்	18. பெருங்குருகு
7. சயந்தம்	19. பேரிசை
8 சிற்றிசை	20. மதிவாணர் நாடகத் தமிழ்நூல்
9. செயன்முறை	21. முறுவல்
10. செயிற்றியம்	22. மோதிரப் பாட்டு
11. தாளவகையோத்து	23. வஞ்சிப் பாட்டு
12. நூல்	24. விளக்கத்தார் கூத்து [48]

மேற்கண்டவை அனைத்தும் இசை, நாடக இலக்கண நூல்களாக உள்ளன. ஆனால், ஒன்றேனும் நாடக நூலாக அமையவில்லை. கதை தழுவி வரும் கூத்தாகிய நாடகம் எழுத்து வடிவில் இல்லாமல், கதையறிந்த குழுவினரால் ஆங்காங்குப் பேசி நடிக்கப்பட்டிருக்குமோ என்று கருதுதற்கு இடம் உள்ளது. திறமை மிக்க நடிகர்கள்—எழுதப்பட்ட வசனம், உரையாடல், பாடல் ஆகியவை இல்லாமலே—தத்தம் ஆற்றலால் நடித்துக் காட்டி இருக்கக்கூடும். பாணர்கள், விறலியர்கள் முதலானோர் இசைபாடி மக்களையும் மன்னர்களையும் மகிழ்வித்துப் பரிசில் பெற்றதாக இலக்கிய வாயிலாக அறிகிறோம். ஆனால் அவர்கள் பாடிய பாடல்கள் இன்னவை என்று நம்மால் அறியக் கூடவில்லை; அது போலவே கூத்தரும் பிறரும் நடித்த நாடகங்கள் எழுத்து உருவில் வராமலேயே மறைந்திருக்க வேண்டும். இக்கருத்து ஓர் ஊகமே.

3.1. இவ்வளவு நாடக இலக்கண நூல்கள் இருந்தபோதிலும் நாடக இலக்கிய நூல்கள் இல்லாமற் போய்விட்டனவே என்று நினைக்கிறபோது, மற்றொரு கருத்தும் நினைவில் வருகிறது. இந்த நாடக இலக்கண நூல்கள் எவ்வாறு மறைந்து ஒழிந்

48. இப் பட்டியலில் உள்ள பெயர்கள் தொல்காப்பியம், சிலம்பு, இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலம் முதலிய நூல் உரைகளில் காணப் பெறுவன ஆகும். மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் "மறைந்துபோன தமிழ் நூல்கள்" நூலையும் காண்க.

தனவோ, அவ்வாறே இவை தோன்ற அடிப்படைக் காரணமாய் இருந்த நாடக நூல்களும் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்பதே அது.

3.2. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் 'மறைந்து போன தமிழ் நூல்கள்,[49] என்ற நூலில் 314 நூல்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் இசை நாடக நூல்கள் பல ஆகும். என்றேனும் ஒரு நாள் இவற்றுள் எவையேனும் ஒன்றிரண்டு கிடைக்குமென நம்புவோமாக !

4.0. 900-முதல்-1600 வரை

பிற்காலச் சோழப் பேரரசு விசயாலய மன்னனால் கி. பி. 849ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட சோழராட்சி தமிழக முழுவதும் விரைவில் விரிந்து வளர்ந்தது. சேர நாடு, பாண்டிய நாடு, கலிங்கம், கருநாடகம், சாளுக்கிய நாடு, கீழைத்தீவுகள் ஆகிய அனைத்தும் சோழர் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. களப்பிரரின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழகம் அமைதியான ஆட்சியைப் பெற்றது. இராசராசன், இராசேந்திரன் ஆகிய மன்னர்களின் காலத்தில் தமிழ் நாட்டின் புகழ் உச்சநிலை அடைந்தது. ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் மிகச் சிறப்பான ஆட்சி நடத்தி, அரசியல், பொருளாதார முனைகளில் பெருமையைச் சேர்த்தனர். பெரிய கோயில்கள் கட்டப்பட்டன ; ஏரி குளங்கள் வெட்டப்பட்டன ; கலைகள் ஊக்கப்பட்டன ; இலக்கிய நூல்கள் ஆக்கப்பட்டன ; புலவர்களும் கலைஞர்களும் போற்றப்பட்டனர் ; திருமுறைகளும ஆழ்வார் பாடல்களும் கோயில்களில் ஓதப் பெற்றன; இசையும் நாடகமும் விழாக்களிலும் கோயிற் பணிகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்றன.

4.1. காவிய காலம் எனப் பொதுவாக இலக்கிய மாணாக்கரால் கருதப்படும் இக்கால எல்லையில் சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம், பெரிய புராணம், கந்த புராணம், நளவெண்பா, மூவருலா, கலிங்கத்துப் பரணி முதலிய நூல்கள் தோன்றின. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சேக்கிழார், செயங்கொண்டார் முதலிய பெரும்புலவர்கள் சோழர் அவையை

---

49. வேங்கடசாமி, மயிலை சீனி, "மறைந்துபோன தமிழ் நூல்கள்"

அணிசெய்தனர். மன்னர் இப் பெருமக்களை நன்கு மதித்துப் புரந்தனர். இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகிய கலைகளில் சிறந்த விற்பன்னர்கள் இருந்தனர்; எல்லாக் கலைகளும் நன்கு செழித்தன; மக்கள் ஒற்றுமை உட்பகையையும் புறப் பகையையும் கழித்தன. மன்னரில் வெற்றியும் கொடையும் ஆணையும் கல்வெட்டுகளிலும் செப்புப் பட்டயங்களிலும் எழுதப் பெற்றன; இசை நாடக வல்லுநர்கள் சோழர் ஆதரவில் பெருகியதையும் நடித்த நாடகத்திற்காகவும் நிலங்களும் பொன்னும் பரிசாகப் பெற்றதையும் கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

5. 0. கல்வெட்டுகள்

நடிக்கப்பட்ட நாடகங்களைக் குறிக்கும் சில கல்வெட்டுக் குறிப்புகள் இங்குக் குறிக்கப்படுகின்றன.

5.1. முதலாம் இராசராசன் (985-1033) பத்தாம் ஆண்டுக் காலத்திய திருப்பந்தணைநல்லூர் பசுபதீசுரர் கோயில் கல்வெட்டு, அங்கு '*இராசராச நாடகம்*' நடிக்கப்பெற்றதைக் குறிக்கிறது. '*ஹாசியன் விக்கிரமாதித்தன் அச்சனுன ராசராச நாடகப் பெரியன்*' இந் நாடகத்தை அரங்கேற்றினவன் ஆவன். 'ராசராச நாடகப் பெரியன்' என்பது இவன் சிறப்புப் பட்டப்பெயராகும்.[50]

5.2. இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்திய தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு, அக் கோயிலில் வைகாசி மாதம் திருவிழாவில் '*ராஜராஜேஜச்வர நாடகம்*' ஆடிக்காட்ட நிவந்தம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.[51]

5.3. இராசராசேசுவர நாடகத்தைத் தஞ்சைப் பெரியகோயிலில் நடத்திய ஒருவன் பெயர் *சாந்திக் கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றன் ஆன விசய ராசேந்திர ஆசார்யன்*' என்று கல்வெட்டில் தரப்பட்டுள்ளது. அவனுக்கு 120 கலம் நெல் ஆடவல்லான் மரக்கால் அளவு கொண்டு தரப்பட்டுள்ளது. இந்த நாடகத்தினை ஆக்கியவன் பெயர் தெரியவில்லை.[52]

5.4. முதலாம் இராசராசன் ஆட்சி ஒன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று, கோயிலின் கர்ப்பகிருகத்தின் மேற்குப்புறச் சுவரின்கண் உள்ளது. இதில் காணப்பெறும்

---

50. A. R. of S. I. Epigraphy. 1931, 1932.
51. S. I. I. Vol. II No 67.
52. S. I. I. Vol. II P. 306, 120 of 1931.

செய்தி; புரட்டாசி மாதம் ஏழு நாள்[53] நடைபெறும் திருவிழாவின் போது, புரட்டாசி பூரட்டாதியில் *திருமூல நாயனார் நாடகமும்*, *ஏழு அங்கங்களை யுடைய ஆரியக் கூத்தும்* நடத்தப் பெற்றன என்பதாகும்.[54]

5.4.1. அவைகளை அக்காலத்தே நடித்தவர் *வடுகமாங்குடி பாண்டி குலாசினி* என்பவர் ஆவார். அவர்க்குப்பின் சாக்கையர் *குமரன் சீகண்டவன்* நடித்தனன். சாத்தனூர் அவையினர் ஊர் அறச்சாலை அம்பலத்தில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து தென் கரை சாக்கைவேலி ஆன நில அளவுப்படி அரையே இரண்டு மாவும் திருவாவடுதுறை ஆழ்வார் தேவதானம் நெற்குப்பை பதிற்று வேலியிலும் கீழ்க்கடைய மாம்பள்ளி வாய்க்காலுக்கு வடக்கு நிலம் முக்காலும் ஆக நிலம் ஒன்றே எழு மாவை நிர்த்த போகம் அளித்திருந்தனர்.[55]

5.4.2. சாத்தனூரும் திருவாவடுதுறையும். 'சாத்தனூர் பிர்மதேயம் ஸ்ரீ சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ திருவாவடுதுறை உடையார் கோயில் தென்கரை திரைமூர் நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை ஆழ்வார்க்கு' என்பதால் 'ஊர் சாத்தனூர், கோயில் திருவாவடுதுறை' என்பது பொருந்தாது; சாத்தனூருக்கு அருகில் உள்ள திருவாவடுதுறை என்றே கொள்ளல் வேண்டும்.

5.4.3. திருவாவடுதுறை கோயிலில் நாடகம், நடனம் ஆகியன நடத்துவதற்காக ஒரு மண்டபம் இருந்தது. அது *'நானுவித நடனசாலை'* என முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது.[56]

5.5. திருவாவடுதுறைக் கல்வெட்டு ஏழுநாள் திருவிழா பற்றிக் குறிப்பிடுகிறது. இதனைப் பத்துப்பாட்டுள் ஒன்றான மதுரைக் காஞ்சி *"கழு நீர் கொண்ட எழுநாள் அந்தி"* என்று கூறு கிறது.[57] இதனால் *'ஆடு துவன்று விழா'* ஏழு நாட்கள்

53. பத்தி 5.5. காண்க
54. S. I. I. Vol. IV. Pt. V.
55. ibid.
56. ibid.
57. மதுரை 247.

நடந்தது என்பது அறியப்படும். எழு நாட்கள் நடைபெறும் இத்தகைய திருவிழாவினைப் "*பவுநம்*" என்று கூறுவர்.[58]

5.6. திருவிடை மருதூரின் சிவன் கோயிலிலும் ஒரு நாடக சாலை இருந்தது. கல்வெட்டு "திரைமூர் நாடு உடையாரும் திரு விடை மருதில் நகரத்தாரும், தேவகன்மிகளும் *நாடகசாலையில்* இருந்து" என்று கூறுகிறது. இந்த நாடகசாலையில், தைபூசத் திருநாளில் தீர்த்தம் ஆடின பிற்றைநாள் தொடங்கி மூன்று நாளும், வைகாசித் திருவாதிரையின் பிற்றைநாள் தொடங்கி மூன்று நாளும், வைகாசித் திருவாதிரையின் பிற்றைநாள் தொடங்கி மூன்று நாளும் ஆக, *ஏழு அங்கங்களுடன் கூடிய 'ஆரியக் கூத்து'* நடிக்கப்பெற்று வந்தது. இக் கல்வெட்டு மூன்றும் குலோத்துங்கன் ஆட்சியில் 37 ஆம் ஆண்டில் வெட்டப்பெற்றது.[59]

5.6.1. இக்கோயில் இறைவனை *'நடராசப் பெருமான்'* என்றும், *'மாணிக்கக் கூத்தர்'* என்றும் அழைத்துள்ளனர். *'ஆடல் விடங்கத் தேவர்'* என்ற திருமேனியை இங்கா நாட்டுப் பல்லவரையன் என்பவன் எழுந்தருளிவித்தான்.[60]

5.7. மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மராகிய முதலாம் பராந்தக சோழன் (907-948) காலத்தில் திருவிடை மருதூர்க் கோயிலில் ஒரு நிவந்தம் விடப்பட்டுள்ளது. "தைப்பூசத் திருநாளில் தீர்த்தம் ஆடின பிற்றை நாள் தொடங்கி மூன்று நாள் கூத்து ஆடுவதற்கும் ஏழு அங்கங்களைக் கொண்டுள்ள *பழைய ஆரியக் கூத்தில்* வல்லவனாகிய *கீர்த்தி மறைக்காடன் ஆன திருமறைக்காடன் ஆன திருவெள்ளறைச் சாக்கனுக்கு* விளங்குடி நிலத்தில் பறைச்சேரி பத்து உட்பட வேலி நிலத்தைத் திரைமூர் நாடு உடையாரும் திருவிடை மருதூரில் நகரத்தாரும் கோயில் ஸ்ரீகாரியம் ஆராய்கின்றவரும் கொடுத்துள்ளனர்."[61]

5.8. முதலாம் குலோத்துங்கன் திருப்பாதிரிப்புலியூர்க் கல்வெட்டுப் பாடல் *கன்னிவன புராணமும் நாடகமும்* பாடிய ஒரு புலவருக்கு நிவந்தம் அளித்தான் என்கிறது.[62]

---

58. திருப்பெருந்துறைப் புராணம், புரூரவன் 50.
59. A. R. of S.I. E. 1895-1907.
60. ibid.
61. A. R. of S. I. E.
62. A. R. of S. I. E. 1902. (S. I. I. Vol. VII)

5.9. திருப்பாதிரிப்புலியூர் பாடலிபுரீசுவரர் கோயிற் சாசனத்தில் *பூம்புலியூர் நாடகம்* என்பதொன்று கூறப் பட்டுள்ளது. இதன் ஆசிரியர் *கமலாலய பட்டர்.*[63] இதன் காலம் 1119.

5.9 1. *வீரைத்தலைவன் பரசமய கோளரி மாமுனி* என்பவர் இந்நாடகத்தைத் தந்ததாக மற்றொரு கல்வெட்டு (அதே கோயில்) தருகிறது.[65] முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் 41 ஆம் ஆண்டும் 49 ஆம் ஆண்டும் வெளியிடப்பெற்ற கல்வெட்டுகள் இதனைத் தருகின்றன.[65] இந்நாடக ஆசிரியர் பாலையூரில் இறையிலியாக நிலம் பெற்றார்.

5.10. திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலுகா, ஆத்தூர் சோமநாதீசுவரர் கோயில் விழாவில் நடிக்கப்பட்ட '*திருநாடகம்*' பற்றிய கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. ஆவணி மாதத்தில் ஒரு நாள் இதனை ஆடியதற்காகத் '*திருமேனி பிரியாதாள்*' என்ற கூத்திக்கு இரண்டு மாநிலம் வழங்கப் பட்டதாகப் பாண்டியன் திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் கல்வெட்டு கூறுகிறது.[66]

5.11. திருநெல்வேலி பட்டமடை கிராமத்தில் ஸ்ரீவில்லிஸ் வரம் என்னும் கோயில் கல்வெட்டுகளில் அக்கோயில் அதிகாரிகள் '*உய்யவந்தாள் அழகிய யசோதை*' எனும் தாசிக்கு உற்சவ காலங்களில் நடனமாடுவதற்காகக் கொஞ்சம் பூமி மான்யமாகக் கொடுத்ததாக வரையப்பட்டிருக்கிறது. அவள் நடித்த நாடகத்தின் பெயர் தெரியவில்லை.[67]

5 12. முதலாம் இராசராச சோழன் நாட்டியமறிந்த நானூறு தளிச்சேரிப் பெண்டுகளை —'*தளிக்கூத்திகள்*' எனப்பெறும் நாடக மகளிரை வரவழைத்து எல்லா வசதிகளும் செய்தான்.[68]

---

63. வையாபுரிப் பிள்ளை, எஸ்., இலக்கியச் சிந்தனைகள், ப. 172
64. வேலுப்பிள்ளை, ஆர்., சாசனமும் தமிழும், ப. 284
65. வேங்கடசாமி, மயிலை சீனி, ''மறைந்துபோன தமிழ் நூல்கள்''
66. மேற்கண்ட நூல்
67. சம்பந்த முதலியார், ப., நாடகத் தமிழ், ப. 51.
68. நாகசாமி, இரா., தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், ப. 54–89

5.13. "காமரசவல்லி என்ற ஊரில் இராசேந்திர சோழன் காலத்தில் *சாக்கை மாராயன் விக்கிரம சோழன்* என்பவன் கோயில் திருவோலக்க மண்டபத்தில் வைகாசித் திருவாதிரை தோறும் சாக்கைக் கூத்து ஆட அவ்வூர்ச் சபையார் நிலம் வழங்கினர். [69]

5.14. சாக்கைக் கூத்து ஆடுவதற்காகத் '*தளபதி சமுத்திரம்*' என்ற ஊரில் *மூன்று* நடனப் பெண்களுக்கு மூன்று மாநிலம் கொடுத்துச் சித்திரை புரட்டாசியில் ஆட ஊர்மக்கள் ஏற்பாடு செய்தனர். [70]

5.15. *சாந்திக் கூத்து*: திருவெங்கை வாயில் கோயிலில் விக்கிரம சோழன் காலத்தில் 16 ஆம் ஆண்டில் *சாந்திக் கூத்து ஒன்பது அங்கங்களும்* ஆட, *ஏமுநாட்டு நங்கை* என்பவளுக்கு நிலம் தரப்பட்டது. இது திருவிழாக் காலத்தில் ஆடப்பட்டது. [71]

5.16. அதே கோயிலில் '*சதிர விடநாயகர்*' சிலையின் முன் சாந்திக் கூத்து *ஆறு அங்கங்கள்* நடிக்க '*உமையாழ்வியார் சதிரவிட நங்கை*' என்பவளுக்கு நிலம் வழங்கப்பட்டது. [72]

5.17. தஞ்சை, திருப்பூந்துருத்தியில் முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டில் "*ஸ்ரீராஜராஜ விஜயம்*" என்னும் நூல் வாசிப்பதற்கு நிவந்தம் அளிக்கப்பட்ட செய்தி உள்ளது. [73]

5.18 வீர சோழ அணுக்கன் என்னும் சிற்றரசன் ஒருவனைப் புகழ்ந்து '*வீரணுக்க விஜயம்*' என்ற நூல் ஒன்றனைப் '**பூங்கோயில் நம்பி**' என்பவன் எழுதி, இறையிலி நிலம் பெற்றான். இது திருவாரூர்க் கோயில் நடனத்தைக் கண்டபோது அவன் எழுதியதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. [74]

5.18.1. 'விஜயம்' என்ற பெயர் பெற்ற இவ் இரு நூல்களும் 'பாமா விஜயம்', 'கிருஷ்ண விஜயம்' என்று கூறுவதுபோல நாடக நூல்களாக இருந்திருத்தல் வேண்டும்.

---

69. கலைக் களஞ்சியம், தொகுதி 6, ப. 314
70. முதல் 72 வரை : மேற்கண்ட நூல், பக்கம். 314
73. S I. I. 120 of 1931
74. S. I. I. 548 of 1904

5.18.2. ஆனால், வீரனுக்க விஜயம் என்பதனை ஓர் காவியமாக இருக்க வேண்டும் என்று கூறுவர் அறிஞர் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்.[75]

5.19. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (12 ஆம் நூற்.) நாடகம் வல்லாருக்கும் இசைப் பாணருக்கும் கருவியாளருக்கும் கொடை வழங்கப்பட்டது "பெரும் புலவரும் அருங் கவிகளும் நாப்புறு" நல்லிசைப் பாணரும் கோடியரும் குயிலுவரும் நாடு நாடு சென்று இரவலராய் இடும்பை நீங்கிப் புரவலராய்ப் புகழ் படைப்ப" என்கிறது குலோத்துங்கன் கல்வெட்டு.[76]

5.20. ஓர் ஐயம் : 'ஸ்ரீராஜராஜ விஜயம்', ராஜ ராஜேச்வர நாடகம்' என்ற பெயர் பெற்றுள்ள இரண்டும் வெவ்வேறு நூல்களா ?

5.20.1. இவை யிரண்டும் வெவ்வேறு நூல்களைக் குறிப்பதாகத் 'தென் இந்திய கோயிற் சாசனங்கள்' எனும் நூல் தெரிவிக்கிறது.[77] பாலூர் கண்ணப்ப முதலியாரும் இதனைக் குறிப்பிடுவர்.[78]

5.20.2. நாடகங்களை 'விஜயம்' என்ற பெயராலும் அழைப்பதுண்டு. எனவே, இவையிரண்டும் ஒரு நூலாகவே இருத்தலும் கூடும். நாடகமாக அன்றிக் காவிய நூலாகவும் இருக்கலாம்.[79]

5 20.3. இரண்டும் வெவ்வேறாக இருக்குமேயானால், ஸ்ரீ ராஜ ராஜ விஜயம்' என்பது முதலாம் இராசராச சோழன் வரலாற்றைத் தெரிவிப்பதாக இருத்தல் வேண்டும். 'ராஜராஜேச்வர நாடகம்' கபாலீச்சுரம், குணபரவீச்சுரம், திருவல்லீச்சுரம் என்பன போல ராஜராஜேச்வரமான பெரிய கோயில் கட்டுவித்து நிறைவேற்றிய நிகழ்ச்சியையும் பெருவுடையார் வரலாற்றையும் நாடக வடிவில் அமைத்ததாக இருத்தல் வேண்டும்.

6.0. *கல்வெட்டுகள் நமக்குத் தரும் செய்திகளின் தொகுப்பு :* மேற்கூறிய கல்வெட்டுகளிலிருந்து பல அரிய செய்திகளைப் பெற முடிகிறது. அவை கீழே தரப்படுகின்றன :

---

75. வேலுப்பிள்ளை, ஆ. சாசனமும் தமிழும், ப. 284
76. S. I. I. VII. V. (No. 645)
77. S. I. I. V. III. Pl. II. (p. 258)
78. கல்வெட்டுக் கருத்தரங்கு
79. வேலுப்பிள்ளை, ஆ. சாசனமும் தமிழும், ப. 284

6.1. இராசராஜேசுவர நாடகம் முதலான நாடகங்கள் ஆண்டுதோறும் கோயில்களில் விழாக் காலங்களில் நடிக்கப் பட்டன.

6.2. நடித்தவரிற் சிறந்தவருக்குப் பொன்னும் பொருளும் நிலமுமாக மன்னர், ஊர்ப் பெருமக்கள், ஊரவையினர் ஆகியோர் நிரம்பத் தந்து ஆதரித்தனர்.

6.3. ஆடல் வல்லாருக்குப் பட்டங்களும் அளிக்கப்பட்டன.

6.4. தாசிகளே யன்றி, ஆடவரும் கோலம் புனைந்து நடித்தனர்.

6.5. மன்னர் முன்னிலையில் கலை நுட்பம் வாய்ந்ததாகவே சிறப்புடன் நாடகம் நடத்தப்பட்டது. தாழ்ந்த ஒரு பொருளாக மதிக்கப்படவில்லை.

6.6. சிற்றூர்க் கோயிலிலும் மண்டபங்களிலும் நாடகங்கள் நடிக்கப்பட்டுள்ளன.

6.7. மன்னரின் வாழ்க்கை, வெற்றி, கொடை, பிற சிறப்புகள் ஆகியன நாடகத்தின் கருப்பொருள்களாக விளங்கின.

6.8. நாடகமாடுபவர்களைத் 'திருவாளன்' என்ற அடையோடு அழைப்பதனால் அவர்கள் நன்கு மதிக்கப்பட்டனர் என்பது வெளிப்படை.

6.9. நாடகத்திற்கெனக் கோயில்களில் 'நாடக சாலைகள்' அமைக்கப்பட்டிருந்தன.

6.10. சாந்திக் கூத்து, சாக்கைக் கூத்து ஆகியவற்றில் வல்லவர்கள் சாந்திக் கூத்தன், சாக்கன் என்று அழைக்கப் பெற்றனர்.

6.11. பெரிய நாடகங்கள் கோயில்களில் தொடர்ந்து ஏழு நாட்கள்வரை நடத்தப் பெற்றுள்ளன. ஆரியக் கூத்து முதலானவை அவ்வாறு நடத்தப்பட்டவை யாகும்.

6.12. 'அங்கம்' என்ற பகுப்புடன் பிரிவுகளை அமைத்து நாடகம் வரையப் பெற்றிருந்தது. ஆரியக் கூத்து ஏழு அங்கங்களை உடையது; சாந்திக் கூத்து ஒன்பது அங்கங்களை உடையது.

6.13. தை, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் சிறப்பாக இந்த நாடகங்கள் கோயில் விழாக்களில் நடிக்கப் பெற்றன.

6.14. புராணக் கதைகளும் நாடகங்களாக அமைக்கப் பெற்றிருந்தன. *சான்று : கன்னிவன புராண நாடகம்.*

6.15. வாழ்க்கை வரலாறு நாடகங்களும் நடிக்கப்பெற்றன. எ-டு. திருமூல நாயனார் நாடகம், ராஜராஜேச்வர நாடகம்.

6.16. நாடகச் செய்திகளும் நாடகத்திற்கென அளிக்கப்பட்ட கொடைகளும் கல்வெட்டில் பொறிக்கத் தக்க அளவிற்குச் சிறப்புடையதாகக் கருதப்பட்டது.

6.17. இறைவனை 'நடராசப் பெருமான்', 'மாணிக்கக் கூத்தர்', 'ஆடல் விடங்கத் தேவர்' என்று அழைப்பதிலிருந்தும் அக்கால மக்கள் நாடகத்தின்மேல் கொண்டிருந்த பற்றும் தெளிவாகும்.

6.18. 'திருமேனி பிரியாதாள்', 'உய்யவந்தாள் அழகிய யசோதை', 'ஏழு நாட்டு நங்கை', 'உமையாழ்வியார் சதிரவிட நங்கை' என்பன நாடகமாடிய பெண்கள் சிலரின் பெயர்களாகும்.

6.19. நடனமும் நாடகமும் ஆடிய பெண்களைத் 'தளிச்சேரிப் பெண்டுகள்' என்றும் 'தளிக்கூத்திகள்' என்றும் அழைத்தனர்.

6.20. பொதுவாகச் சோழர்களே இக் கலையினைப் பெரிதும் போற்றி வளர்த்தனர் என்பதனைக் கல்வெட்டுகள் நமக்கு உணர்த்து கின்றன.

6.20.1. *முடிவாக, இத்தகைய நாடகச் செய்திகளை வழங்கும் கல்வெட்டுகள் சில உள்ளன. இவற்றை ஆராய்வது அருமையே எனினும் பெரும்பயன் உடைய தாகும். இத்துறையில் ஆர்வமுள்ளவர் 'கலைகளும் கல் வெட்டுகளும்' என்ற தலைப்பில் இவை குறித்துச் செய்திகளைத் தொகுப்பின் பின்னர் வரும் ஆய்வாளர் பலருக்கும் பெரிதும் துணைசெய்யும்.*

6.20.2. பள்ளு, குறவஞ்சி நாடகங்களுக்கு முன்னர் எழுதப் பெற்ற நாடக நூல்கள் எவையும் நமக்குக் கிடைக்காத நிலையில் தமிழ் நாடகங்களைப்பற்றிய செய்திகளைக் காப்பியங்கள், சிற்றிலக் கியங்கள் முதலியவற்றில்தான் காணவேண்டியுள்ளது.

6.20.3. தாம் எடுத்துக்கொண்ட கால எல்லையில் (இடைக் காலம் கி.பி. 900 - 1800) நாடக நிலை எவ்வாறு இருந்தது என்பதனை அறிவதற்குப் பெரிதும் துணைசெய்யும் நூல்களில் குறிப்பிடத்தக்கது 'சீவகசிந்தாமணி' யாகும்.

7.0. சீவகசிந்தாமணி

பத்தாம் நூற்றுண்டு என நாம் கொள்ளத்தக்க சமணக் காப்பியமாகிய சீவக சிந்தாமணி கலைகளைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதாகும். பொதுவாகச் சமணர்கள் கலைகளை வெறுப்பவர்கள் என்றும், அவர்களாலேதான் தமிழர்கள்தம் கலைகளாகிய இசை, நாடகம் முதலானவை தேய்ந் தொழிந்தன என்றும் கொண்டிருக்கின்ற கருத்துக்கு மாருகச் சீவக சிந்தாமணி கதைத் தலைவனை ஒரு வீரனுக மட்டுமின்றிக் கலைஞனுகவும் படைத்துக் காட்டுகிறது. *ஏறத்தாழ ஐம்பது இடங்களில் நாடகத்தைப்பற்றிய குறிப்புகளைச் சிந்தா மணியில் காண முடிகிறது.*

7.1. சீவகனுக்கு ஓய்வு கிடைக்கும் நேரத்திலெல்லாம் நடனங்களையும் நாடகங்களையும் காண்பதுவே பொழுது போக்காக இருந்துள்ளது.

> *''பண்கனியப் பருகிப் பயன்நாடகம்*
> *கண்கனியக் கவர்ந்துண்டு சின்ஞள் செல''* 80

நாடகங்களில் இனிய பண்கலந்து சுவை தந்ததை இவ் வரிகளில் காணலாம்; அவன் கண்ட நாடகம்* கண்களுக்கு இனிமையைத் தந்ததால் 'கண்கனியக் கவர்ந்துண்டு' என்கிருர் ஆசிரியர்.

7.2. நாடகங்களைக் காண மக்கள் பெருங் கூட்டமாக வந்தனர்.

> *''கடியரங் கணிந்து மூதூர்க் கடற்கிளர்ந் தனைய தொப்ப*
> *நடையறி புலவர் ஈண்டி நாடகம் நயந்து காண்பான் '* 81

'இனிய நாடகங்களைக் காண்பதற்கு மக்கள் திரண்டு வந்ததைக் கடற் கிளர்ந்தனைய' என்ற தொடர் சுட்டுகிறது.

---

80. *சீவக.* 230

81. *சீவக.* 672

7.2.1 நாடகம் காணச் சீவகன் வந்தபோது நாடக நலனுணர்ந்த புலவர்கள் - இசை, நாடக நுண்ணுணர்வு மிக்க *நடையறி புலவர்கள்* குழுமி வந்திருந்தனர் என்பதால் இத் துறையில் வல்ல பெருமக்கள் பலர் இருந்தனர் என்பதனையும் நன்கு அறிய முடிகிறது.

7.3. மற்ருேர் இடத்தில் சீவகனைப் பற்றிக் குறிப்பிடுகையில் "இன்னிசைக் கூத்து நோக்கி இருந்தனன் திலக மன்னுன்"[82] என்றும், வேருேர் இடத்தில்

"இந்திர குமரன் போல இறைமகன் இருந்து காண
சுந்தர மகளிர் அன்ஞர் நாடகம் இயற்று கின்ருர்" [83]

என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். கூத்து இன்னிசையோடு கூடிச் சிறந்து விளங்கியது என்பதையும், ஆடியவர்கள் மிகவும் பாராட்டத்தக்க அழகு மிக்க நங்கையர் - *சுந்தர மகளிர் அன்ஞர்* - என்பதையும் இப் பகுதிகள் உணர்த்துகின்றன.

7.4 நாடக இசையில் *யாழுக்குச் சிறந்த* இடம் இருந்ததை 'கிளைநரம்பு இசையும் கூத்தும்'[84] என்ற தொடர் தெரிவிக்கிறது.

7.5. *விழாக் காலங்களில்,* மகிழ்ச்சி நாட்களில், கூத்து நடந்ததை இறுதி இலம்பகமாகிய முத்தி இலம்பகத்தின் தொடக்கத் திலேயே காண்கிருேம். "விழாவயர்ந்து, வடிநீர் நெடுங்கண்ணுர் கூத்தும் பாட்டும் வகுத்தாரே"[85] என்பதஞல் விழவு நடத்தி, அழகிய நீண்ட கண்ணுடைய மகளிர் இனிய பாட்டும் கூத்தும் நடத்தினர் என்பதறியலாம்.

7.6. நாடகத்தில் *கூட்டிசை* முழங்கப் பெற்றது.

"யாழும் குழலும் மணிமுழவும் அரங்க மெல்லாம் பரந்திசைப்பத்
தோழன் விணஞேன் அவண் தோன்றி வயங்கக் கூத்து வயங்கிய" [86]

பின் நாடக அரங்கில் யாழ் குழல் முழவு என்பவற்றின் கூட்டிசை மிகுதியாக விளங்கியது பற்றிய செய்தியையும், அரிய, காணக்

82. *சீவக.* 1170
83. *சீவக.* 1253
84. *சீவக.* 2598
85. *சீவக.* 2601
86. *சீவக.* 2704

கிடைக்காத கூத்தொன்றை விண்ணவனாகிய சுதஞ்சணன் என்னும் சீவகனுடைய தோழன் நடத்திய செய்தியினையும் இவ் வரிகள் காட்டுகின்றன.

7.7 எப்போதும் தொடர்ந்து ஆடலும் பாடலும் நிகழும் அரங்குகள் பல அக் காலத்தில் இருந்துள்ளன. அதனைக் '*கூத்தருத பள்ளி*' என்பர்.

> *"காமர் வல்லி மாதரார் கூத்தருத பள்ளி"* [87]

என்று சீவக சிந்தாமணி இதனைக் குறிப்பிடுகிறது.

7.8. ஆடலுக்கும் நாடகத்துக்கும் மிக இன்றியமையாத ஒன்று *ஒப்பனைக் கலை.* சீவகன் இக் கலையில் வல்லவனாய் இருந்ததோடமையாது, அனங்கமாலை என்னும் பெண்ணிற்குச் சீரிய முறையில் ஒப்பனை செய்வித்து அரங்கிற்கனுப்பினான் என்ற செய்தியை விரிவாகச் சிந்தாமணி குறிப்பிடுகிறது.[88] நெற்றியிற் பட்டம் கட்டி, கூந்தலில் மாலை சூட்டி. மார்பினில் சந்தனம் பூசி, மேனியில் நகைகளைப் பூட்டிச், சிவந்த பட்டாடை அணிவித்து, அவளை மேடைக்கனுப்பினான் சீவகன்.[79]

7.9. சீவகனால் ஒப்பனை புனையப்பெற்ற அவள் பலரும் மயங்குமாறு ஆடினாள்.

> *"ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல்*
> *அனங்க மாலை ஆடினாள்"* [90]

நடன அரங்கில் ஆட வந்தவள், கண்டோர் நெஞ்ச அரங்கினில் ஆடினள் என நயம்படக் கூறியுள்ளார் திருத்தக்க தேவர்.

7.9.1. இதேபோலக் கேமசரியார் இலம்பகத்தில் தேசிகப் பாவையின் கூத்தினைப் பலவகையிலும் சிறப்பித்துள்ளதைக் காண்கிறோம்.[91]

---

87. *சீவக.* 154
88. *சீவக.* 673–683
89. *சீவக.* 673
90. *சீவக.* 683

7.10. கலைத்தொழில் மிக்க நாடகத்தைக் கண்டு மகிழாதவர் வாழ்க்கை கொலைத்தொழில் மிக்க வேடுவர் வாழ்க்கைக்கு ஒப்பாகும் எனலாம்; தேவர் வேறு நிலையில் பெண்கள் தரும் மயக்கம் பற்றிக் குறிப்பிடும் இடத்தில் கூறியுள்ள சொற்கள் "நாடகம் கண்டு வாழாதவர் வாழ்க்கையெல்லாம் சவரர் வாழ்க்கையே"[92] என்பது உண்மையிற் சிறந்த நாடகங்களைக் காணுதார் வாழ்க்கைக்கும் பொருந்துவதேயாகும்.

7.11. *வாழ்க்கை வரலாற்று நாடகங்கள்* சிலவற்றை இன்று நாம் காண்கிறோம். அவ்வாறே சுதஞ்சணன் என்னும் தன் தோழன் வரலாற்றைச் சீவகன் அழகாக நாடக மேடையேற்றிய செய்தி சிந்தாமணியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

> *" பாரிடம் பரவ நாட்டி அவனது சரிதை எல்லாம்*
> *தாருடை மார்பின் கூத்துத் தான்செய்து நடாயி ருனே "* [93]

என்பதனுல் *" சுதஞ்சணன் வரலாறு "* நாடகமாக்கப்பட்டது தெரிகிறது.

7.12. "நாடகத்தை விரும்பிக் கண்ட மக்களின் அழகிய நல்ல கண்களைத் தோண்டியிருப்போம்! .... அதனுல் நாங்கள் இந்தப் பிறவியில் துறவை மேற்கொள்ளுகிறோம்" என்று சீவகனின் தேவியர் கூறுகின்றனர். எனவே, *நாடகத்தைக் காண்பதைத் தடை செய்வது பாவமாகக் கருதப் பட்டிருக்கலாம்.* "நாடகம் நயந்து காண்பார் நலங்கிளர் கண்கள் சூன்றும்"[94] என்கிறது சிந்தாமணி.

7.13. *நாடக அரங்கின் திரைகள் குறித்தும்* *சிந்தாமணி பேசுகிறது. அவை அழகாய் இருந்தன; மென்மையாய் இருந்தன; பட்டால் செய்யப்பட்டு இயந்திரத்தால் தொங்கவிடப் பட்டும் சுருக்கப்பட்டும் இயங்கின.* அவை *'தானை', 'படம'* என்றும் வழங்கப் பட்டன. "சிலைகொண்ட புணிரென்று எழினி சேர்ந்தாள், இலங்குமோர் கிண்கிணியாள் எழினி சேர்ந்தாள்", [95]

---

91. சீவக. 1253–1261
92. சீவக. 1655
93. சீவக. 2573
94. சீவக. 2989
95. சீவக. 653

பளிக்கொளி மணிச்சுவர் எழினி பையவே, கிளிச்சொலின் இனியவர் நீக்க'',[96] ''மேற்பட வெருவி நோக்கித் தானையை விட்டுத் தொங்கி'',[97] ''ஏதமொன்று இன்றிப் பூம்பட்டு எந்திர எழினி வீழ்த்தார்'',[98] ''ஐந்துமூன் றெடுத்த செல்வத் தமளி மூன்றியற்றிப் பூம்பட்டு எந்திர எழினி வாங்கி'',[99] ''கோவை குயிற்றிப் படம் கனேந்துஆடு கூத்தரினே எனத் தோன்றினன்''[100] எனப் பலவாருக எழினிகள் குறிப்பிடப் படுகின்றன.

7.13.1. திரைகள் *எலிமயிராலும்* செய்யப் பெற்றன. ''எலிமயிர்ப போர்வை வைத்தெழினி வாங்கினன்''[101]

7.14. *நாடகம் என்ற சொல்லை வேறு சில இடங்களில் வேறு பொருள்களிலும் தேவர் பயன்படுத்தியுள்ளார்.* பரத்தையர் சேரிகளில் உள்ள பொதுமகளிரின் வீட்டுச் சுவர்களின் மேலுள்ள *ஓவியத்தை* ''எங்கும் நற்சுவர்கள் தோறும் நாடகம் எழுதி''[102] என்று குறிப்பிட்டுள்ளார். ஒருவேளை சுவர்களில் நாடகக் காட்சிகள் தீட்டப்பட்டிருக்கலாம்; அதனுல் அவ்வோவியத்தைக் குறிக்க 'நாடகம்' என்றே சொல்லியிருக்கக் கூடும்.

7.15. கடலில் வீழ்ந்து தப்பிய தன் *கதையை* ஒருவன் சிலருக்கு விளக்கிச் சொன்னன். கேட்பவர்கள்,

''பாடிடும் பௌவத்து முந்நீர்ப் பகர்த லோடும்
நாடகம் நாங்களுற்ற தென்றுகை யெறிந்து நக்கார்''[103]

என்கிருர் தேவர். நாடகம் போல இனிதாக எடுத்துச் சொல்லியதனுல் போலும் நிகழ்ச்சியைக் கேட்டவர்கள் 'நாடகம் நாங்களுற்றது' என்று கூறினர்.

7.16. இளவேனிலின் *இயற்கை* ஆடலைக் — கூத்தை இவ்வாறு கூறுகிறது சிந்தாமணி :

---

96. சீவக. 655
97. சீவக. 675
98. சீவக. 740
99. சீவக. 838
100. சீவக. 948
101. சீவக. 2471
102. சீவக. 108
103. சீவக. 582

*"இளிவாய்ப் பிரசம் யாழாக இருங்கண் தும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக் கடிபூம் பொழில்கள் அரங்காகத்
தளிர்போல் மடவார் தணந்தார்தம் தடந்தோள் வளையும் மாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில் விருந்தா ஆடல் தொடங்கினுள்"*104

இங்ஙனம் இடைக்கால இலக்கிய நூல்களில் நாடகம் ஆகிய கூத்து பற்றி மிகுதியான செய்திகளைத் தருவது சிந்தாமணியே.

8.0. இனிக், கம்பராமாயணம் முதலான இடைக்கால நூல்களில் காணப்பெறும் நாடகம் பற்றிய செய்திகளையும் சிறப்பான கூறுகளையும் காணலாம். சீவக சிந்தாமணி நாடகங்களைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தருகிறதென்றால் கம்பராமாயணம் நாடகக் கூறுகள் மிகுதியாகப் பெற்ற நூலாகத் திகழ்கிறது.

இராமாயணத்தின் பல பகுதிகள்—ஏன் ஒவ்வொரு பகுதியுமே—நாடக நயமுடையதாக விளங்குகிறது. கம்பராமாயணம் 'கம்ப நாடகம்' என்று அழைக்கப் படுவதே இதனை நன்கு விளக்குவதாகும்.

8.1. கதையமைப்பு, கதையின் திருப்பங்கள், கதை உரையாடல்கள், கதை நிகழ்ச்சிகள், கதைப் பாத்திரங்கள் ஆகிய அனைத்துமே இராமாயணத்தில் நாடக நோக்குடனேயே அமைக்கப் பட்டுள்ளன என்பதைக் கம்பன் காவியத்தை ஒரு முறையாவது சுவைத்துப் படிப்பவர் நன்கு உணரலாம். கதா காலட்சேபமாக நாட்டின் பல பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வந்ததைப் போல கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக இராம கதை கூத்தாகவும், மேடை நாடகமாகவும் நடத்தப்பட்டு வருகின்றது. ஆறு காண்டங்களாக நூற்றுக்கணக்கான படலங்களில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பெற்றுள்ள கம்பராமாயணம் நாடகத்திற்குத் தேவையான எல்லாக் கூறுகளையும் நிரம்பப் பெற்றுள்ளதாகும். சுவைகள் (மெய்ப்பாடுகள்) அனைத்திற்கும் நிலைக்களமாக அமைந்தது. இலட்சக் கணக்கான தமிழர்கள் கண்ட நாடகம் தமிழகத்தில் உண்டென்றால் அது கம்பன் கதையைத் தழுவிய இராமாயண நாடகமே யாகும்.

8.2. இராமன் சீதை திருமணம் (சீதா கல்யாணம்), மந்தரை கைகேயி சூழ்ச்சி, இராமன் குகன் சந்திப்பு, பரதன் பாதுகா பட்டாபி

---

104. சீவக. 2691

ஷேகம், சூர்ப்பணகை மானபங்கம், பொன்மான், வாலிவதை, இராம பக்த அனுமன், இந்திரஜித், இரணியன் வரலாறு, இராவண வதம், இராமன் முடிசூடல் ஆகிய பகுதிகள் நாடகப் போக்குடன் அமைந்து தெருக்கூத்துகளாக நாடு முழுவதும் நடிக்கப்பட்டுச் சிறப்படைந் தனவாகும்.

8.3 "தண்டலைமயில்களாட" [105]என்ற பாடல் இயற்கை வருணனையாய் அமையினும் நாடக அரங்கின் தன்மையை எழில்படச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளது.

8.4 நாடகம், நடனம் ஆடும் கலைஞர்கள் கம்பன் காலத்தில் '*மதங்கியர்*'[106] என்றும், '*கண்ணுளர்*'[107] என்றும் அழைக்கப் பட்டுள்ளனர்.

8.5 நாட்டியம், நாடகம் ஆகியவற்றிற்கென மேடைகள் இருந்ததை '*அன்னமென் நடையவர் ஆடு மண்டபம்*'[108] என்ற கம்பன் கூற்றால் அறியலாம்.

9.0 பெரிய புராணம், கந்த புராணம், நளவெண்பா, கலிங்கத்துப்பரணி, மூவருலா, வில்லி பாரதம், திருவிளையாடற் புராணம், தஞ்சைவாணன் கோவை முதலிய இந்த இடைக் காலத்தைச் சேர்ந்த நூல்களிலும் பல நாடகப் பாங்கான பகுதிகள் உள்ளன எனினும் நான் கருதும் அளவிற்குப் போற்றத் தகுந்தவை எவையும் இல என்றே கொள்ளலாம். ஆங்காங்கே நாடகமாடுதல் பற்றியும் தொடர்பான செய்திகள் பற்றியும் சிற்சில இந்நூல்களில் கூறப்பட்டுள்ளன.

9.1 நளன் தமயந்தியின் அழகிலேயே ஒரு நாடகத்தைக் கண்டான்.

> *"தங்கள் புலவித் தலையில் தனிந்திருந்த*
> *மங்கை வதன மணியரங்கில்—அங்கண்*
> *வடிவாள்மேல் கால்வளைத்து வார்புருவ மென்னும்*
> *கொடியாடக் கண்டானோர் கூத்து"* [109]

---

105. கம்ப. 1.2.4
106. 1.3.51
107. கம்ப. 1.16.44
108. கம்ப. 1.3.61
109. நள. 2/192

9.1.1 சீவக சிந்தாமணியும் இதுபோலவே பெண்ணின் முகத்தை ஒரு நாடக மேடையாகவே வருணிக்கிறது.

"முறுவல் திங்கள் முகஅரங்கின்மேல்
முரிந்து நீண்ட புருவக் கைகள்
நெறியின் வட்டித்து நீண்ட உண்கண்
சென்றும் வந்தும் பிறழ்ந்தும் ஆடப்
பொறிகொள் பூஞ்சிலம்பு மேகலைக்கும்
புணர்ந்த இன்னியங்களார்ப்ப வேந்தன்
அறியும் நாடகம் கண்டான் பைந்தார்
அலர்ந்து மாதர்நலம் குழைந்தே" [110]

இவ்வாறு பெண்ணின் அழகு முகம் கவிஞர்க்கு நாடக அரங்காகவே காட்சியளிக்கிறது என்றால், அவர்கள் இக் கலை மேல் கொண்ட ஈடுபாட்டை அது உணர்த்துகிறது என்று கொள்ளலாம் அல்லவா ?.

9.2 கலிங்கத்துப் பரணியில் சிவபெருமானைக் கவிஞர் செயங்கொண்டார் '*நடமாடி*'என்றே அழைக்கிறார்.[111]

9.3 துணங்கைக் கூத்து *(சிங்கிக்கூத்து)* என்பதனைப் பேய்கள் ஆடியதாகக் கூறுகிறார்.[112]

9.4 பேய்களிலே கூடக் '*கூத்திப்பேய்*' என்ற ஒன்று இருந்தது கருதுதற்குரியது.[113]

9.5 நடனம் நாடகம் ஆகியவற்றை இயக்குபவர்களைக் கலிங்கத்துப்பரணி '*நித்தகாரர்*' என்றழைக்கிறது.

"கவந்த மாட முன்புதங் களிப்போ டாடு பேயினம்
நிவந்த வாட லாட்டு விக்கும் நித்தகாரர் ஒக்குமே" [114]

'*ஆட்டுவிக்கும் நித்தகாரர்*' என்பதால் அவர்களே இக் கலைகளை நடத்துகின்றவர்கள் என்று கொள்ளலாம்.

---

110. சீவக. 2594
111. பரணி. 299
112. பரணி. 309
113. பரணி. 574
114. பரணி. 432

9.6 மூவருலாவில் '*தில்லைத் திருநடனம்*'[115] குறித்தும், '*பாடிக் குழலூதிப் பாம்பின் படக்கூத்தும் ஆடிக் குடக் கூத்தும் ஆடினுர்*'[116] என்றவகையில் காளிங்க நர்த்தனத்தையும் குடக் கூத்தையும் குறித்தும் பேசுகிறதே தவிர நாடகத்தைப் பற்றி வேறு குறிப்புகளைத் தரவில்லை.

9.7. ஒட்டக் கூத்தர் என்ற பெயரே அவர் கூத்தின் மேற்கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்துவதாகும். அவரே ஆடுவதில் வல்லவராகவும் இருந்திருக்கக் கூடும். மூவருலாவின் கடைசிப் பகுதித் தலைவன் இரண்டாம் இராசராச சோழன் ஆவன். அவன் ஆட்சி கி. பி. 1173-ல் முடிவுற்றது. பின் சில ஆண்டுக் காலத்திலேயே சோழராட்சி வீழ்ச்சியுற்றது. பின் மீண்டு எழவே யில்லை.

10.0 நாயக்கர் காலம்: கி. பி. 14 முதல் 16 ஆம் நூற்ருண்டு வரை மதுரை நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் நிலவியது. தமிழ்நாடு பல சிதறல்களாகிப் பல்வேறு பட்டவரின் ஆட்சிக்குட் பட்டது. முகலாயர்கள் ஒரு புறம் உள் நுழைந்து நகரங்களை அழித்துக் கோயில்களையும் இடித்துப் பொருள்களைக் கொள்ளை யடித்துச் சென்றனர். நாட்டை ஆண்டவர்களில் பெரும்பாலோர் தமிழர் அல்லாதவர் ஆனதால் தமிழ் மொழியும் கலையும் காப்பாற்றுவார் இழந்து இருளில் துன்புற்றன எனலாம். ஆயினும் இந்தக் கால எல்லையில் தருமபுர மடமும் திருவாவடுதுறை மடமும் தோற்றம் பெற்றுச் சைவம் தழைக்கவும் தமிழ் தழைக்கவும் பணி புரியத் தொடங்கின.

10.1 வில்லி பாரதமும் திருவிளையாடற் புராணமும் இந்தப் போது தோன்றினும் கூட நாடக நலம் மிக்கதாக அவற்றைக் கொள்வதற்கில்லை. முதலாவது, பிற்காலக் காலட்சேபங்களுககும் சில தெருக்கூத்துகளுக்கும் பயன்பட்டதென்பது உண்மையே. எனினும் கம்ப நாடகம் போன்று சிறப்புறவில்லை.

10.2 மாறை நாட்டுத் தஞ்சாக்கூரைச் சேர்ந்த சந்திர வாணன் என்னும் தஞ்சைவாணன் மேற்பாடப்பட்டது 'தஞ்சை வாணன் கோவை'. தஞ்சைவாணன் 12 ஆம் நூற்ருண்டில் சோழ நாட்டை ஆண்ட கோமாறவர்ம திரிபுவன சக்கரவர்த்தி

115. மூவருலா 3/47

116. மூவருலா 3/338

குலசேகரத் தேவனின் படைத் தலைவர்களில் ஒருவன் ஆவான். நாடகப் பாங்கான முறையில் தலைவன் - தலைவி வரலாற்றினைக் குறிப்பிடுவதால் தஞ்சைவாணன் கோவையை ஒரு நாடக நூல் என்றே குறிப்பிடலாம்.

10.2.1. "இத்தமிழ் நாடகத் தமிழ் எனப்படும்; என்னை? கிளவிகளை ஒழுங்குபடக் கோத்துக் கதை போல வந்து நாடகத்துக் கேற்றலின்; ஆயின் இலக்கணமென்று இலக்கணத்திற் கூறியவாறென்னை எனின், அந் நாடகத் தமிழிற்கே இலக்கணம் கூறினர் என்க"[117] என்று சொக்கப்ப நாவலரின் உரை இதைத் தெளிவுறுத்துவதாகும்.

10.3. வீர கவிராயரின் 'அரிச்சந்திர புராணம்', அதிவீர ராம பாண்டியனின் 'நைடதம்', சிவப்பிரகாசரின் 'பிரபுலிங்க லீலை' முதலியவையும் இக்காலத்தைச் சார்ந்த நூல்களெனினும் அவை நாடகச் சுவைபட அமையவில்லை எனலாம்.

10.4. இதுவரையிற் கூறப்பெற்றவைகளை மனத்திற்கொண்டு பார்த்தால், நாடக நூல்கள் என்ற வகையில் 18ஆம் நூற்றாண்டு வரை நமக்கு எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்பதையும், நாடக அரங்கு, நாடக மகளிர், திரைகள், காட்சிகள் முதலியன பற்றி ஓரளவு குறிக்கப் பெற்றன என்பதையும் அறியலாம். ஆனால் இந்தக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் சமுதாயச் சூழ்நிலையின் பின்னணியிலேயே 17-18ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாடக வளர்ச்சி வேறு திசையில் திரும்பிச் செல்லத் தொடங்கிவிட்டது.

11.0. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் நாடகம்: பதினாறும் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் இலக்கிய உலகிலே, குறிப்பாக நாடக உலகிலே, ஒரு பெருமாற்றம் நிகழ்ந்தது. கவிஞர்களாலும் மொழிப் புலவர்களாலும் மிக உயரிய நடையில் இயற்றப் பெற்ற கவிதையாக மலர்ந்த இலக்கிய இலக்கணங்களிலிருந்து தமிழ் விடுவிக்கப் பெற்றுப் பாமர மக்களினைத் தேடி வந்து விட்டது. சமுதாயத்தில் கீழ்நிலையில் இருந்த மக்கள் மனமகிழுமாறு இலக்கியச் சுடர் கரம் மாறி, அவர்களிடம் வந்து சேர்ந்தது. பள்ளு, குறவஞ்சி, என்ற மக்கள் இலக்கியங்களாக அவை மலர்ந்தன.

---

117. தஞ்சைவாணன் கோவை I, உரை

11.1. இவை தமிழ் நாட்டுக்கும் தமிழருக்குமே *உரியவை*. பிற மொழிகளில் - இன மக்களிடை - காண இயலாத இனிய இலக்கிய வகைகளாகும். கோயில்களிலும் அரண்மனைகளிலும் பண்ணைக்காரர் முதலான பெருமக்கள் முன்னிலையிலும் இவை நடிக்கப்பட்டன. சில நேரங்களில் சமயத் தொடர்புடையனவாகத் தெய்வங்களைப் போற்றியும் இவை பாடப் பெற்றன. தம்மைப் புரந்துவந்த அமைச்சர், தலைவர், ஜமீந்தார் முதலியோரைப் புகழ்ந்தும் போற்றியும் பல எழுதப்பெற்றன. ஓரிரண்டு நூற்றாண்டுக் காலத்திற்குள்ளே மிகப் பலவான பள்ளு, குறவஞ்சி நூல்கள் தோன்றின. அறிவுக்கு உணவு மட்டும் போதாது; கண்ணிற்கு விருந்தும் நாடோறும் படும் துன்பம் குறைய மனமகிழ்ச்சியடையும் வகையில் எளிய இனிய நிகழ்ச்சியும் ஆக இவை அமைந்து மக்கள் இலக்கியமாகத் திகழ்ந்தன. அனைவரையும் அடக்கியாண்ட பெருவேந்தர்களின் ஆட்சி தமிழகத்தில் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கே சிறுசிறு ஜமீந்தார்கள், மிராசுதார்கள், வேறு புரவலர்கள் போற்றப் பெற்றனர்; அவர்கள்மேல் இந்நூல்கள் வரையப்பட்டன.

12.0. பள்ளு-குறவஞ்சி நாடகங்களின் தோற்றம்: பாமரர் இலக்கியமான பள்ளும் குறவஞ்சியும் தோன்றிய வரலாற்றை ஆராயும்போது நாம் தொல்காப்பியர் காலத்திற்கே செல்ல வேண்டியுள்ளது. உயர்ந்த மக்களிடமிருந்து பிரிந்து நகரின் எல்லைப் புறங்களிலும் சேரிகளிலும் வாழ்ந்த பாமர மக்கள் வேத்தியல் நாடகங்களைக் கண்டு பொழுது போக்கும் நிலையில் இல்லாததால் தமக்கென புதிய எளிய பொழுதுபோக்குக் கலைகள் உருவாக்க வேண்டியிருந்தது. அதன் விளைவே இப் பாமரர் இலக்கியங்களாகும். இவற்றை ஆராயப் புகின் விரிந்து பெருகும். ஆதலால் தோற்றத்தினை மட்டும் உணர்த்தும் சில குறிப்புகளைமட்டும் ஈண்டுக் காணலாம்.

12.1. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலில் "*ஏரோர் களவழி*"[118] என்பது உழவர் கூத்தையே குறித்தது எனக் கொள்ளலாம்.

12.2. தொல்காப்பியம் கட்டு, கழங்கு கொண்டு குறி சொல்லுவதைக் காட்டுகிறது. அது,

---

118. தொல். பொருள். புறத். *21*

> "கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
> ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" [119]

என்பதாம். குறவஞ்சியின் அடிப்படைச் செய்தி குறி பார்ப்பதேயாம்.

12.3. எண்வகை வனப்புகளைச் சுட்டும் தொல்காப்பியர் புதிய வகை இலக்கியங்கள் தோன்றுகையில் அவற்றை 'விருந்து' என்ற வனப்பில் அடக்கலாம்[120] என்பர். பின்னர்த் தோன்றியதாகிய இவற்றை 'விருந்தில்' சேர்க்கலாம்.

12.4. சேரி மொழிகளில் செய்திகளை ஆராய்ச்சியின்றி வெளிப்படையாகத் தோன்றுமாறு செய்யும் கவிதைகள் **'புலன்'** எனப்பட்டது.

> "சேரி மொழியிற் செவ்விதிற் கிளந்து
> தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப புலனுணர்ந் தோரே" [121]

சேரி மொழி என்பது *'பாடி மாற்றங்கள்'* எனப்படுவதாகும். "வழக்குச் சொல்லினானே தொகுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் விளங்குவது புலன் என்னும் செய்யுளாம்" என்பர் இளம்பூரணர்.

12.5. *'வெறியாட்டு',*[122] *வெறியயர்தல்*[123] என்ற சங்க கால நிகழ்ச்சிகள் பிற்காலக் குறவஞ்சிக்கு வித்தாக அமைந்திருக்கலாம்.

12.6. சிலம்பில் *'திணை நிலைவரி'* [124] என்று குறிப்பிடப் படுவது அவ்வத் திணைகளுக்குரிய கலைகளாம். சிறப்பாக, மருதத்துப் 'பள்ளு' நாடகத்தினையும், குறிஞ்சியின் 'குறவஞ்சி' நாடகத்தினையும் இதன்கண் அடக்கலாம்.

---

119. தொல் களவியல் 24
120. தொல் யாப்பு பொருள் : 237
121. தொல் யாப்பு பொருள் : 239
122. தொல் பொருள் 63–2 ; 109–23; சில 24–10 ; பட் 155
123. குறு 53–3; 318–3; அகம் 98–19; 114–2; 182–17; 241–11
124. சிலம்பு 1. கட்டுரை 12–13

12.7. *"ஏர் மங்கலம்"*[125] என்பது உழவர் பெருங்குடி மக்களின் இசையோடு கூடிய நாட்டிய நிகழ்ச்சியாகும்.

12.8. அடியார்க்குநல்லார் *'பல்வரிக்கூத்து'*[126] பற்றிக் குறிப்பிடுகையில் 'ஐயனுக்குப் பாடும் பாட்டு ஆடும் படு பள்ளி' என்று கூறுவது பள்ளரின் நிகழ்ச்சியையே எனலாம்.

12.9. *குன்றக் குரவையும்*[127] *ஆய்ச்சியர் குரவையும்*[128] முதற்கண் குறிஞ்சி மருத நில நடனங்களாக இருந்து, பின்னர் குறவஞ்சி, பள்ளு நாடகங்கள் தோன்றத் துணையாக இருந் திருக்கலாம்.

12.10. பாட்டியல் நூல்களில் பல பள்ளு, குறவஞ்சி நாடக வகைகளுக்கு இலக்கணம் வரையறுத்துச் சொல்லவில்லை.

12.11. பன்னிரு பாட்டியல் *'உழத்திப் பாட்டு'* பற்றிக் கூறுகிறது. ஆனல் இது பள்ளுப் பிரபந்தமல்ல.[129]

12.12. பன்னிரு பாட்டியல் *'குறத்திப் பாட்டு'* பற்றியும் குறிக்கிறது.

> *"சிறப்பு நிகழ்வுஎதிர்வு என்னுமுக் காலமும்*
> *திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே"*[130]

இதனல் ஒருவரின் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால வாழ்வு பற்றிய செய்திகளை யறிந்து 'குறி' சொல்வது 'குறத்திப் பாட்டு ஆகிறது. ஆனல் இது குறவஞ்சி நாடகத்தைக் குறிப்பதாகாது.

12.13. கி.பி, 1732இல் செய்யப்பெற்ற *'சதுரகராதி'*யில் வீரமாமுனிவர் உழத்திப் பாட்டின் உறுப்புக்களாக நாற்பத்தெட்டு தலைப்புகளைக் கூறுகிருர்.[131]

12.14. பள்ளு, சிந்து விருத்தம் ஆகியவற்றில் இயற்றப்பட வேண்டும் என்று சதுரகராதி சொல்ல, முக்கூடற் பள்ளு கலிப்பா முதலிய பிற பாடல் வகைகளால் செய்யப் பெற்றுள்ளது.

---

125. சிலம்பு. நாடு 134
126. சிலம்பு அடி, உரை
127. சிலம்பு 3–1
128. சிலம்பு 2–7
129. பன்னிரு 333
130. பன்னிரு
131. சதுரகராதி, (மு. அருணசலம், பள்ளு)

12.14. இவற்றையெல்லாம் மொத்தமாக ஒப்பிட்டுப் பார்க்குங்கால், பளளின் தோற்றத்தை ஒருவாறு உணரலாம். தொல்காப்பியர் காலத்தே 'ஏரோர் களவழி'யாக இருந்து, 'சேரிமொழியாலான புலன்' என்னும் வனப்பிலக்கியமாகச் சிறிது மாறி, சிலம்பின் காலத்துத் 'திணைநிலைவரி'யாகவும் 'ஏர் மங்கலம்' ஆகவும் விளங்கிப் பின்னர் 'உழத்திப் பாட்டு' ஆக வளர்ந்து, இறுதியில் பதினேழாம் நூற்ருண்டுக் காலத்தில் பள்ளு நாடகமாகப் பொலிந்தது எனலாம்.

12.15. பள்ளு, பள்ளு நாடகம், பள் மூவகைத் தமிழ், பள்ளிசை, பள்ளேசல் என்றெல்லாம் இப்பள்ளு அழைக்கப் பெறும்.

12.16. குறவஞ்சி: தொல்காப்பியத்திற குறிக்கப்பெறும் கட்டு, கழங்குகளால் குறிசொல்லும் அடிப்படை நிகழ்ச்சியிலிருந்து தோன்றி, வெறியாட்டு, வெறியயர்தல் என்பதோடு இயைந்து, குரவைக் கூத்தாக வளர்ந்து, குறம் என்னும் கலம்பக உறுப்பாகவும் பாட்டாகவும் நடந்து, குறத்திப் பாட்டாக மலர்ந்து, இறுதியில் குறவஞ்சியாக மணம் வீசுகிறது, இக் குறவஞ்சி யென்னும் சிற்றிலக்கிய வகை.

12.16.1. குறவஞ்சி இலக்கிய அமைப்புக் குறித்த மற்ருெரு கருத்தும் உண்டு. அது: ஆரம்பத்தில் குறத்தி சொல்வதோடு அமைந்த குறவஞ்சி நாடகம், பின்னர் குளுவன் தன் மனைவியைத் தேடி அடையும் பகுதியாகிய குளுவ நாடகத்தோடு சேர்ந்து பிரபந்த இலக்கியமாகத் திகழ்கிறது என்பதே ஆகும். இஃது ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

12.16.2. முதலாவதாக, குறவஞ்சியின் முதற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை - கதையமைப்பில். தலைவியும் தோழியும் இடையில் மேடையைவிட்டுச் செல்பவர்கள் இறுதிவரை வருவதே இல்லை. இது நாடக இலக்கணத்துக்கே முரணுனதாகக் காணப்படுகிறது.

12.16.3. இரண்டாவதாகக், குறவனை விட்டுக் குறத்தி பிரிந்து சென்றதற்கான அடிப்படைச் சிக்கல் என்னவென்பதும் முதற்பகுதியில் விளக்கப் பெறவில்லை.

12.16.4. மூன்ருவதாக, நாடகத்தின் முற்பகுதி தெய்வத்தின் பெருமையையும், இறையுணர்வையும் காட்டும் உயர்ந்த தன்மை பெற்றதாக விளங்குவது. பிற்பகுதி மானிடரின் தாழ்ந்த காதல்

விருப்பத்தையே சாற்றுவது. அதுமட்டுமின்றி நடையிலும் 'சேரி மொழி' புகுந்து விடுகிறது.

12.16.5. நான்காவதாக, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட மக்கள் நீண்ட நாடகம் ஒன்று வேண்டியே குறவஞ்சி நாடகத்தோடு குளுவ நாடகத்தையும் சேர்த்து ஒன்ருகக் கண்டு மகிழ்ந்திருக்க வேண்டும். இந்தக் கருத்து, கலாட்சேத்திரா வெளி யிட்டுள்ள 'திருக்குற்ருலக் குறவஞ்சி' பதிப்பின் முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளது.

13 0. பள்ளு நாடகங்கள் பெரும்பாலும் ஊர்ப்பெயரை ஒட் டியும் சிறுபான்மை தெய்வம் அல்லது புரவலர் பெயரை ஒட்டியும் அழைக்கப் பெறும்; குறவஞ்சியும் அவ்வாறே ஊர்ப்பெயரை ஒட் டியும் வழிபடு தெய்வம் அல்லது புரவலர் பெயரை ஒட்டியும் அழைக்கப்படுவதாகும். சில பள்ளு நூல்கள் சாதிப் பெயராலும் வந்துள்ளன. (எ - டு. முக்கூடற் பள்ளு; திருக்குற்ருலக் குறவஞ்சி; செண்பகராமன் பள்ளு; அழகர் குறவஞ்சி; வைசியப் பள்ளு)

14.0. குறவஞ்சி நாடகங்கள் கோயில்களில் - மண்டபங்களில் நடிக்கப்பெற்றதுண்டு.

14.1. பள்ளு நாடகங்கள் பெரும்பாலும் திறந்தவெளி களத்து மேடுகளிலே நடிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். வேறு சிறந்த தகுதி அதற்குத் தரப்பட்டதாகத் தெரியவில்லை.

15.0 'நெல்லு வகையை எண்ணினுலும் எண்ணலாம்; பள்ளுவகையை எண்ண முடியாது' என்ற பழமொழி நிலவக் கூடிய அளவிற்குத் தமிழ்நாட்டில் பள்ளு நாடகங்கள் மிகுந்திருந்தன. அதுபோலவே, குறவஞ்சி நூல்களும் எண்ணற்றவை தமிழ்நாட்டில் வழங்கியிருந்திருக்க வேண்டும்.

16.0. *வட்டார இலக்கியங்கள் நீண்ட நாள் வாழ்தல் என்பது இயலாத ஒன்ருகும்.* குறிப்பாக, ஒரு தன்மையான கதைப் போக்கைக் கொண்ட குறவஞ்சியும் பள்ளும் அந்த வகையிலேயே அழிந்து போயின, சிலவற்றைத் தவிர. *ஊர்தோறும் தோன்றிய தல புராணங்கள் எவ்வாறு பாராட்டுப் பெருமல் நிலைத்த புகழும் பேறும் பெருமல் மறைந் தனவோ அது போலவே இவ்வகை வட்டார இலக்கியங் களும் மறைந்து போனதில் வியப்பில்லை.* இருப்பினும், கால

வெள்ளத்தையும், தோன்றிய ஊர் எல்லையையும் கடந்து வென்று வாழ்கின்றன சில என்றால் அதற்குக் காரணம் அச் சிலவற்றின் கவிதைச் சிறப்புகளே ஆகும்.

17.0. பள்ளு குறவஞ்சி கதைகளின் போக்கு அறிஞர் பெருமக்கள் அறிந்த ஒன்றாதலால் அவை ஈண்டு விளக்கப் பெறவில்லை.

18.0. முதற் பள்ளு: *பள்ளு நாடக நூல்களுள் முதலிற் தோன்றியது எது என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.*

18.1. திரு. மு. அருணாசலம் அவர்கள் தம் முக்கூடற் பள்ளு பதிப்பில் '*மன்னார் மோகனப் பள்ளு*' என்ற ஒரு நூலைக் குறிப்பிட்டு அதன் காலம் 1640 - 1674க்கு உட்பட்டதாக இருக்கலாம் என்று கூறுவர். பதின்மூன்று பாடல்களே கொண்டது இந்நூல். ஒவ்வொரு பாடலும் 'பள்ளீரே' என்று முடிகிறது. ஆதலால், இது பள்ளு நாடகப் பிரபந்தமாக இருக்க முடியாது என்று கருதுவர் திரு. மு. அருணாசலம் அவர்கள். [132]

18.2. "உணர்வின் எல்லை" என்ற கட்டுரை நூல் வழங்கிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் '*மோகனப் பள்ளு*' என்ற ஒரு கட்டுரையை அதில் சிறப்பாக எழுதியுள்ளார். பதினெட்டுப் பாடல்களைக் கொண்ட தத்துவலிங்க ஐயரின் 'மோகனப் பள்ளு' 'பள்ளு நூல்களின் சாறு' என்று அவர் குறிப்பிடுவர். இந்தப் பள்ளு முன்னர்க் குறிப்பிட்ட மோகனப் பள்ளு நூலினின்றும் வேறுபட்ட ஒன்றாகும். [133]

18.3: தமிழகத்தில் நமக்குக் கிடைத்துள்ள மிகச் சீரியதும் சிறப்பு மிக்கதுமான பள்ளு நாடகம் ஆகிய '*முக்கூடற் பள்ளு*' கி. பி. 1680 இல் தோன்றியதாகும். [134] முதலில் தியாகராசக் கவிராயராலும், பின்னர் மு. அருணாசலம் அவர்களாலும், அடுத்து ந. சேதுரகுநாதன் அவர்களாலும், பின் மர்ரே கம்பெனியாராலும் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றது.

18.4. இலங்கையில் போர்த்துக்கீசியர் ஆட்சிக் கால (1621-1658) இலக்கியத்தில் '*ஞானப்பள்ளு*' என்ற ஒரு நூல்

132. மு. அருணாசலம், முக்கூடற் பள்ளு முன்னுரை, ப. 24
133. சஞ்சீவி, டாக்டர் ந., உணர்வின் எல்லை, ப. 184
134. அருணாசலம், மு., முக்கூடற் பள்ளு, ப. 37

தோன்றியது. நல்லூர் ஞானப் பிரகாச அடிகள் இது எழுதப்பட்ட காலம் கி. பி. 1642 என்பர்.[135] அவ்வாறெனில் இதுவே முதன் முதல் தோன்றிய பள்ளு நாடக நூல் எனக் கொள்ள வேண்டிவரும். இஃது இயேசு பெருமானைத் தலைவராகக் கொண்டு எழுதப்பட்டதாகும். இது ***'வேதப் பள்ளு'*** என்றும் அழைக்கப்படும்.

18.5. ***'கதிரைமலைப் பள்ளு'*** என்ற நூலைப் பதிப்பித்த ஆசிரியர் தெள்ளிப்பள்ளி குமாரசாமி அவர்கள் கதிரைமலைப் பள்ளு நூலைப் பார்த்து, அதன் பின்னரே கிறித்தவரால் 'ஞானப்பள்ளு' எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர்.[136] அவர் கருத்துப்படி கதிரைமலைப் பள்ளு பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது ஆகும்.[137]

18.6. ***'ஞானப்பள்ளு'*** என்ற பெயரில் மற்றொரு பள்ளு நூலும் குறிப்பிடப் படுகிறது. இஃது ***'ஆதிப்பள்ளு'*** என்றும் அழைக்கப்படும். இதன் ஆசிரியர் சிதம்பரநாத ஞானப்பிரகாசர் என்பவர். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. சிவஞானபோத சாரம் உரையின் முன்னுரையில் குறிப்பிடப் பெறும் இந்தப் பள்ளு நூலே முதல் பள்ளு நாடகமாக இருக்கலாம் என்று கருதுவர் திரு. மு. அருணசலம் அவர்கள்.[138] ***இலங்கையில் பதிப்பிக்கப் பெற்ற 'ஞானப்பள்ளு' வேறு; இது வேறு.***

18.7. ஆக, முதலில் தோன்றிய பள்ளு நாடகம் எது என்ற வினு எழுகிறது. சிவஞான போக சாரம் உரை குறிப்பிடும் 'ஞானப் பள்ளு' நூலா? இலங்கையில் வெளியிடப்பட்டுள்ள 'ஞானப்பள்ளு' நூலா? அன்றி, 'கதிரைமலைப் பள்ளு' நூலா? எது முதற் பள்ளு?

18.8. கிடைக்காது மறைந்து போன—சைவ சாத்திர உரை கூறும் ஞானப்பள்ளு நூலை முதற்பள்ளு நூலாகக் கொள்ள முடியாது! ஏசு நாதரைப் பற்றிய இலங்கையில் எழுந்த கிறித்தவ ஏடான ஞானப் பள்ளு நூலின் தன்மைகளையும் சிறப்புகளையும் வளர்ச்சியுற்ற பாங்கினையும் கண்டால் அதனையும் முதற்பள்ளு

---

135. சதாசிவம், ஆ. ஈழத்துத் தமிழக் கவிதைக் களஞ்சியம், ப. 79

136. குமாரசாமி, கதிரைமலைப் பள்ளு, ப. 8

137. மே. க. நூல். ப. 8,45

138. அருணசலம், மு. பள்ளு, ப. 154

நாடகமாகக் கூற முடியாது! கதிர் காமக் கடவுளைப் போற்றிப் பாடும் 130 செய்யுட்களைக் கொண்ட கதிரைமலைப் பள்ளு நாடகமும் ஐயப்பாட்டிற்குரியதாகவே இருப்பதால் அதனையும் முதற் பள்ளு நாடகமாகக் கொள்ள முடியாது!

19.0. *இவை மூன்றுக்கும் மேலாகச் சிறந்ததாகவும் காலத்தால் முந்தியதாகவும், இவற்றிற்கு வழிகாட்டக் கூடிய தன்மையதாகவும் ஒரு பள்ளு நாடக நூல் இருந்திருக்க வேண்டும் என்றே நினைக்கத் தோன்று கிறது.*

20.0. இக் கட்டுரையோடு ஒரு ப்ட்டியல் இணைக்கப் பட்டுள்ளது.[139] அதில் காணப் பெறும் பள்ளு நாடகங்களின் காலம் சரியாக இன்னும் வரையறை செய்யப்படவில்லை. ஆதலினால், அவை இந்த இடைக் காலத்திற்குள் அடங்குவன என்று தெளிவாகச் சொல்ல முடியாது.

20.1. ஆயினும், சேற்றூர் ஜமீன் பள்ளு (1800), சீர்காழிப் பள்ளு (1745), சிவசயிலப் பள்ளு (1770), கண்ணுடையம்மன் பள்ளு (1775), குருகூர்ப் பள்ளு (1700), மன்னூர் மோகனப் பள்ளு (1670), முககூடற் பள்ளு (1680), ஞானப் பள்ளு (சைவம்), ஞானப் பள்ளு (கிறித்தவம்), பருளை விநாயகர் பள்ளு (1780), தண்டிகை சினக ராயன பள்ளு (1790), தில்லைப் பள்ளு (1760), திருமலை முருகன் பள்ளு (1730), திருப்புவன வாயின பள்ளு (1780), வையாபுரிப் பள்ளு (1770), வடகரைப் பள்ளு (1723) — ஆகியன இக்கால எல்லையைச் சேர்ந்தன எனக் கூறலாம். *நமக்கு கிடைக்காத பள்ளு நூல்கள் இன்னும் எத்தனையோ?*

21.0. பாத்திரப் படைப்பு, கவிதைச் சிறப்பு, செவிக்கு இனிமை, பள்ளியர் ஏசல் நுட்பம், இயற்கை வருணனை, சொல்லாட்சி, உழவர் வாழ்வைத் தெளிவாகப் படம் பிடித்தல் ஆகியவற்றில் உயர்ந்து காணப்படுவதால் 'முக்கூடற் பள்ளு' அனறு தொட்டு இன்று வரை ஈடு இணையற்றதாகவே விளங்கி வருகிறது.

22.0. **இலங்கையும் தமிழகமும்:** முக்கூடற் பள்ளு நாடகத்தில் முக்கூடற் பள்ளியும், மருதூர்ப் பள்ளியும் வருகின்றனர்;

---

139. கட்டுரையின் பின்னிணைப்பு, பள்ளுநூற் பட்டியல்

ஞானப் பள்ளு நாடகத்தில் இடம் பெற்றவர்கள் செருசலம் பள்ளியும் உரோமாபுரிப் பள்ளியும்; கதிரைமலைப் பள்ளில் வருபவர் இலங்கையைச் சேர்ந்த மாவிலங்கைப் பள்ளியும் இந்தியாவைச் சேர்ந்த பகீரத கங்கைப் பள்ளியும் ஆவர்; பருளை விநாயகர் பள்ளில் சோழ மண்டலப் பள்ளியும் ஈழமண்டலப் பள்ளியும் வருவர். பொதுவாக, ***இலங்கைப் பள்ளு நூல்கள் பரந்த மனப் பான்மையை வளர்ப்பனவாக உள்ளன என்று கூறலாம்; அல்லது தாயகப் பற்றுடன் எழுதப்பட்டன என்றும் கூறலாம்.***

23.0. ***பள்ளும் குறவஞ்சியும் :*** குறவஞ்சி நாடகத்தைப் பொறுத்தவரை அவை பள்ளு நாடகத்திலிருந்து தனித்து நிற்கின்றன. ***குறவஞ்சி தத்துவ நோக்கம் உடையதாக அமைந்துள்ளது.*** கதைத் தலைவி தலைவனைக் காதலித்து, நினைத்து, ஏங்கி நிற்பதெல்லாம் ஆன்மா இறைவனை நாடி நிற்பதாகக் கொள்வர். இவ்வாறே நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் தொடர்பு படுத்திக் குறவஞ்சியின் சிறப்பை அவரவர் மன உயர்வுப்படி அளந்து காணலாம்.

23.1. மற்றொன்று, பள்ளு நாடகங்கள் சிலர் இன்பத்திற்காகக் களங்களிலும் அரண்மனையிலும் பொது இடங்களிலும் நடிக்கப் பெற்றன. ஆனால் குறவஞ்சி நாடகம் உயர்வாகக் கருதப்பட்டுக் கோயில்களிலேயே நடித்துக் காட்டப்பட்டுள்ளன. திருக்குற்றால நாதர் கோயில் திருககுற்றாலக் குறவஞ்சியும், தஞ்சைப் பெரிய கோயில் சரபேந்திரப் பூபாலக் குறவஞ்சியும், கும்பகோணம் கோயில் கும்பேசர் குறவஞ்சியும் ஆகச் சிறப்பாக இடம் பெற்று நடிக்கப் பட்டுள்ளன.

23.2. நமக்குக் கிடைத்துள்ள சிறந்த குறவஞ்சி நாடகம் திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகமே. இதன் காலம் ஏறத்தாழ கி.பி. 1720. பதினெட்டாம் நூற்றாண்டில் இதனை அடுத்துச் சில குறவஞ்சி நூல்கள் வந்துள்ளன எனினும் குறிப்பிடத்தக்க சிறப் புள்ளவை எவையுமில்லை. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி உள்ளிட்ட பலவும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக உள்ளதால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

24.0. ***நொண்டி நாடகம் :*** சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரால் சிறப்பாகக் கையாளப்பட்டது 'காவடிச் சிந்து'.

இந்தச் 'சிந்து' எனும் நாட்டுப் பாடல்வகை மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது ஆகும். பிற்காலத்துப் பல புலவர்களும் இச் சிந்து நடையினைக் கையாண்டுள்ளனர்.

24.1. *நொண்டி நாடக வகையின் உயிர் இச் சிந்து நடைப் பாடல்களேயாகும்.*

24.2. ஒரு நொண்டித் திருடன் - கொள்ளையடித்த காரணத்தால் ஒரு கையும் காலுமிழந்தவன் - மனம் திருந்தி, வருந்தி, இறைவனை வேண்டி, அவன் கருணையால் பழைய நன்னிலை எய்தி நல்லவனாகிறான். அவன் காதலி வீட்டிற்குச் சென்று, அவளுக்காகத் திருடச் சென்று, பின் காவலரிடம் சிக்கித், தண்டனை அனுபவித்துப் பின் திருந்துவதாகிய அனைத்துமே 'சிநது' பாட்டு வகையில் இனிது சந்தத்துடன் சொல்லப்பெறும்.

24.3. இந்த நொண்டி நாடகம் '*ஒற்றைக் கால்*' நாடகம் என்றும் கூறப்படும். விழாக் காலங்களில் குறவஞ்சி போல இதுவும் நடிக்கப் பெறுவதுண்டு.

25.0. நமக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்ததும் முதலானதுமான நொண்டி நாடகம் *திருச்செந்தூர் நொண்டி நாடகம்* ஆகும். இது முத்தாலங்குறிச்சி கந்தசாமிப் புலவரால் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் (ஏறத்தாழ 1680) எழுதப்பட்டதாகும்.[140]

25.1. திருச்செந்தூர் நொண்டி நாடகத்தில் முந்நூறு நொண்டிச் சிந்து பாடலகள் உள்ளன. இந்நூலில் உள்ள ஒரே பாத்திரம் நொண்டியாவன். ஏறத்தாழ 'மோனோ-ஆக்டிங்' போல ஒருவரே இதனை நடித்துக்காட்டவும் முடியும்.

25.2. தெய்வ நம்பிக்கையை உணர்த்துவதே - ஊட்டுவதே நொண்டி நாடகத்தின் அடிப்படைக் கொள்கையோ என்று நினைக்கும் வகையிலேயே இவ்வகை நூல்கள் அமைந்துள்ளன. ஒப்பற்ற குணங்களைத் தலைவனாகக் கொள்ளாமல், ஒரு கெட்டவனை - திருடு, கொலை, களவு, காமம், ஆசை ஆகிய எல்லாத் தவறுகளையும் செய்யும் ஒருவனைத்-தலைவனாகக் கொண்டிலங்குவது 'நொண்டி நாடகம்'.

25.3. சீதக்காதி நொண்டி நாடகமும், திருக்கச்சூர் நொண்டி நாடகமும் இவ்வகையிற் சிறந்த நூல்களாகும்.

---

140. அழகிரிசாமி, கு., "தமிழ் வட்டம்" கட்டுரை, ப. 248

26.0. *தமிழ் நாடக இலக்கிய வரலாற்றில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்களின் இடம்.*

பிறர் ஆதிக்கத்தின் கீழிருந்த தமிழகத்தில் இலக்கியம் வளர்ச்சி குன்றி வாடி இருந்தது. மதுரை நாயக்கரும் தஞ்சை மராட்டியரும் ஓரளவு - சில - சீரிய பணிகளை யாற்றினர். கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலான சிற்றிலக்கியங்கள் தோன்றின எனினும், அவையும் புலவர்தம் உயரிய இலக்கணத் தமிழிலேயே அமைந்து விட்டதால் பாமரர் கைக்கு எட்டவில்லை. இந்த நிலையில்தான் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்கள் தோன்றின. இவை படிக்கப் பயன்பட்டன; நடிக்கவும் பயன்பட்டன. புரவலரை இந் நூலில் பாராட்டினும் சமய தத்துவங்களும் காதற் செய்திகளும் இந் நூல்களை உயர்த்திச் சிறப்பித்துள்ளன. இந்நூல்கள் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டன. இறுகிய இலக்கணப் பிடியிலிருந்து சிறிது விடுபட்டுப் பொதுமக்களைத் தேடி இலக்கியம் வருவதற்கு இவையே காரணமாகும்.

26.1. ஆழ்ந்த கருத்தமைந்த இலக்கியங்கள் அறிவுக்குப் பயன்பட்டனவேயன்றி, பொழுது போக்கிற்கு இத்தகைய நூல்களே பெரிதும் பயன்பட்டன. எளிமையும் நாடக இயல்பும் உள்ளதனல் மக்கள் மனத்தை இந்நாடகங்கள் நேரடியாகத் தொட இயலுகிறது. ***அரண்மனை நாடகம் அங்காடிக்கு வந்துவிட்டது; இலக்கிய நடை இளகிய பாமர நடையானது; படிப்பறையிலிருந்து பரந்த வெளிகட்கு மாறியது இலக்கியம்!***

26.2. இவற்றைப் பாடிய கவிஞர்கள் பாமரர் இலக்கியமாக மட்டும் படைக்காமல் இலக்கியத் தரத்தையும் இணைத்து விட்டது, அவர்கள் திறமையை நன்கு காட்டுவதாகும். ***படித்தோரின் அறிவை ஈர்த்துப் பாமரரின் நெஞ்சையும் கவர்கின்ற ஆற்றல் இப் பாமரர் நாடகங்கட்கு அமைந்திருந்தன.***

26.3. எல்லாவற்றிற்கும் மேலாகப், பள்ளு, குறவஞ்சி, நொண்டி ஆகியவற்றை விட்டால் அவற்றிற்கு முற்பட்ட நாடக நூல் தமிழில் கிடையாது; இவையே தமிழர் பெற்ற நாடக இலக்கிய முதல் நூல்களாகும். ***தமிழ் நாடக இலக்கிய வரலாற்றினை முதல் பள்ளு நூலில் இருந்துதான் உண்மையில் தொடங்க வேண்டும்.***

26.4. குறிப்பிட்ட வட்டாரங்களில் வழங்கிய மொழிநடை, பண்பாடு, நிலவியல், வரலாற்றுச் செய்திகள், கொச்சை மொழிச்

சொற்கள், பழமொழி முதலான பல்வேறு இயல்புகளை ஆராய்வ தற்குப் பெரிதும் துணைநிற்பவை இத்தகு குறவஞ்சி, பள்ளு, நொண்டி இலக்கிய வகைகளே யாகும்.

27.0. *ஒப்பாய்வு-சில செய்திகள்* : இக் கால எல்லையில் தோன்றிய தமிழக நாடக வடிவங்கள் பலவற்றையும் பிற தென்னக மொழிகளிற்றோன்றிய நாடக வடிவங்களோடு ஒப்பிட்டு ஆய்வதனுல் பெறும் முடிவுகள் இங்குத் தரப்படுகின்றன.

27.1. பள்ளு, குறவஞ்சி நாடகம் தோன்றி வளர்ந்த இந்த இடைக்காலத்தில், *ஆந்திரத்தில் 'யட்ச கானம்'* என்ற தெலுங்கு *பாமர* நாடக வகை வளர்ந்து செழித்திருந்தது. பதினைந் தாம் நூற்ருண்டில் 'சபரி சரித்திரம்' எழுதப் பெற்றது ; இது கிடைக்கவில்லை. நமக்கு கிடைத்த முதல் யட்ச கானம் கந்துகூரி ருத்ரகவி எழுதிய 'சுக்ரீவ விஜயமு' என்ற தெலுங்கு பாமர நாடகமே.

27.2. *கன்னடத்து 'யட்ச கான'* நாடகம் ஆந்திர நாடகத்திலிருந்து சற்று வேறுபட்டது. பெரும்பாலும் புராணம் தழுவியது. இதில் பாகவதரே முக்கியமானவர். இன்றும் கரு நாடகத்தில் யட்சகான நாடகம் நடைபெறுகிறது.

27.3. பதினேழாம் நூற்றுண்டின் இறுதியில் தமிழ்நாட்டுத் தஞ்சைப் பகுதியில் தோன்றிய நாடோடி வகை ***'குச்சுப்புடி'*** யாகும். 'பாரிஜாதாபகரணம்' எனும் குச்சுப்புடி நாடகம் 300 பாடல்களைக் கொண்டது ; தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறுவ தாகும்.

27.4. தஞ்சையருகில் மேலாட்டூரில் பிறந்த கலை ***'பாகவத மேளா'*** கலை நாடகமாகும். தமிழ்-தெலுங்கின் இணைப்பு இந் நாடக வகையில் காணலாம். மேலாட்டூர் வேங்கடராம சாஸ்திரி பல நாடகங்களை இவ்வகையில் செய்துள்ளார்.

27.5. தென்னகத்தில் மட்டுமின்றி அகில இந்தியாவிலுமே ஒப்பற்று விளங்கும் ஒரு கலை *'கதகளி'* கலையாகும். தமிழகத் தெருக்கூத்து, ஆந்திர கருநாடக யட்சகானம் உள்ளிட்ட அனைத்து நாடோடி நாடக வகையிலும் சிறந்து விளங்குவது கதகளியே. ***'ஆட்டகதா'*** எனவும் வழங்கும் இக்கலை இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது. பதினேழாம் நூற்றுண்டில்

கொட்டாரக்கர தம்புரான் எழுதிய 'ராம நாடகம்' கதகளியில் முதலாவதாகும். மிகச் சிறந்த கதகளி ஆசிரியர் கோட்டயத்துத் தம்பிரான் ஆவார். கார்த்திகைத் திருநாள் எனும் திருவாங்கூர் மன்னன் (1714-1798) நூற்றுக்கு மேற்பட்ட கதகளி நாடகம் எழுதி இக்கலையை வளர்த்துள்ளார்.

27.6. *'துள்ளல்'* மற்றொரு மலையாள நாடோடிக் கலையாகும். கதகளியிலிருந்து பிரிந்தது இது; குஞ்சன் நம்பியார் இதன் தலைவர்; 64 நூல்களை இதற்கென எழுதியவர் ஆவர். அறிஞர் கே. எம் ஜார்ஜ் அவரைப்பற்றிக் கீழ்வருமாறு கூறுவர்.[141]

"In the whole range of Malayalam literature, there is no one so vivacious, witty and flamboyant as Kūnchan Nambiar...... He is of course the great stalwart and master craftsman of the Tullal *genre.*"

28.0. *தென்னகக் கூத்து வகைகளைப் பற்றிய ஒப்பீட்டு ஆய்வில் பெறும் சிறப்புக் குறிப்புகள் வருமாறு;*

28.1. பள்ளு, குறவஞ்சி, நொண்டி ஆகியவற்றோடு ஒட்டித் தோன்றிய தெருக்கூத்து, ஆந்திரநாட்டு யட்சகானம், பாகவத மேளா, கருநாடக யட்சகானம், கேரள குச்சுப்புடி ஆகியவை தென்னகக் கூத்துவகைகளாகக் கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் சிறப்புற்றிருந்தன.

28.2. இவைகளே யன்றி, பொம்மலாட்டம், நிழலாட்டம், கும்மி, குரவை, கோலாட்டம், குச்சுப்புடி, சம்பு, கூடியாட்டம், துள்ளல் முதலான நடிப்புக் கூத்து வகைகளும் இருந்தன.

28.3. பெரும்பாலான கூத்துவகைகள் எல்லா மொழிகளிலுமே இதிகாச, புராணங்களை அடிப்படையாகக் கொண்டன. குறிப்பாக, இராமன், கிருட்டினன் வரலாறுகள் சிறப்பான இடத்தைப் பெற்றன. குறிப்பாக, தெருக்கூத்துகளில் காத்தவராயன், நல்லதங்காள் கதை முதலியன இடம் பெற்றன.

---

141. ஜார்ஜ், கே எம். "A Survey of Malayalam Literature," p. 102

28.4. எல்லா நிகழ்ச்சிகளுமே இரவு 9 அல்லது 10 மணிக்கு மேல் தொடங்கி பொழுது விடியும் வரை நடைபெறும்.

28.5. இந்த நாடகவகைகளில் 'கதகளி' மிகச் சிக்கலானது, நடிப்பதற்கும் தயாரிப்பதற்கும்.

28 6. இக்கால நாடகங்கள் அனைத்திற்கும் பாடலும் இசையும் நடிப்பைப் போலவே இன்றியமையாதன ஆகும்.

28.7. குச்சுப்புடி, பாகவத மேளா முதலான கூத்துக்கள் தவிர கதகளி, துள்ளல், குறவஞ்சி, பள்ளு, யட்சகானம் முதலான வற்றிற்கு நிறைந்த இலக்கிய நூல்கள் உண்டு.

28.8. கதகளிக்கும் யட்ச கானத்திற்கும் மிகுதியான இசைக் கருவிகள் உடன் இருக்க வேண்டும்.

28.9. பெரிய தலையலங்காரமும், கனமான ஆடைகளும் யட்ச கானத்திற்குத் தேவை; கதகளிக்கு ஒப்பனை மிகவும் அதிக மாகும்; தெருக்கூத்து நாடகங்களுக்கு இலேசானதும் ஒளிமய மானதுமாக இருத்தல் வேண்டும். ஆனால், எல்லாக் கலைநிகழ்ச்சி களிலும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருள்களையே பயன் படுத்துவர்.

28.10. 'கதகளி'யில் நடிப்போர் பாடுவதோ பேசுவதோ இல்லை. ஆனால் பிறவற்றில் பாட்டும் உரையாடலும் இன்றியமை யாதவை.

28.11. சண்டையும் கொலையும் தமிழ், தெலுங்கு, கன்னடத் கூத்து நாடகங்களில் பெரும்பாலும் இல்லை; ஆனால், கதகளியில் அவை பெரிதும் இடம் பெற்றிருக்கும்.

28.12. தமிழ்க் கூத்து வகைகள் பெரும்பாலானவை கிராமியச் சூழ்நிலையில் மக்களுக்காகத் தோன்றியவை. மலையா ளத்தில் கதகளி, செல்வர் பொழுது போக்குக் கலையாகவும், துள்ளல் பாமரர் கலையாகவும் மாறிவிட்டது.

28.13. தமிழகத்தில் எல்லா நாடக வகைகளுமே (பள்ளு, குறவஞ்சி, நொண்டி, தெருக்கூத்து) மறைந்தொழியும் நிலையில் உள்ளன. தெலுங்கு, கன்னட யட்ச கானம் நடத்துவதற்கு எனத்

தனித்தனி குழுக்கள் இன்னும் உள்ளன. கதகளி நடத்த ஐந்தாறு குழுக்களே உள்ளன என்றாலும் கேரளத்தில் அடிக்கடி நடத்து கின்றனர்.

28.14. தென்னகக் கூத்துக்கலைகள் அனைத்திலும் மிகப் பெரும்பான்மையாக ஆடவரே பெண் வேடமும் பூண்டு நடிப்பர்; மிகச் சில நாடகங்களில் மட்டுமே பெண்டிர் பங்கேற்பர்.

28.15 மணிபுரி, கதக் போன்ற வடநாட்டு நாட்டுப்புறக் கூத்து வகைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை தெற்கத்திய வகைகள். எந்த முறையிலும் இவை ஒற்றுமை உடையனவல்ல; யட்ச கானத்தில் மட்டும் கோமாளி 'கதக்' நடனம் போல 'பைஜாமா' அணிந்து வருதலுண்டு.

28.16. தென்னிந்தியக் கலைகள் அனைத்துமே பெரும்பாலும் கோயில்களில் விழாக் காலங்களில் நடத்தப்படுவன ஆகும். சில ஆலயங்களில் யட்சகானக் குழுக்களே உள்ளன.

28.17. எல்லா நாடக வகைகளிலும் நடத்துகின்ற ஆசிரியன் மார்கள் முக்கியமானவராகவும், மதிப்பிற்குரியராகவும் தலைவ ராகவும் கருதப்படுவர். தெருக்கூத்து அண்ணாவியார் போல, கதகளியில் இசைபாடுவோரும் யட்ச கானத்தில் பாகவதரும் உயர்வாகக் கருதப்படுகின்றனர்; அவர்களே கலை நுட்பமறிந்த சான்றோராவர்.

28.18 *அனைத்து நாடக வகைகளுமே சமயத்தையே உயிரோட்டச் சக்தியாகக் கொண்டுள்ளன என்பது தென்னக மொழிக் கூத்து வகைகள் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.*

28.19. இந்த நாடகங்கள் மக்கள் வரலாற்றையும், வட்டார மொழி வேறுபாடுகளையும், பாமரர் பொழுது போக்கிற்கு விரும்பும் சுவைகளையும் சமய உணர்வுகளையும் வெளிப்படுத்துவன ஆகும்.

28.20. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய அனைத்து மொழிப் பாமரர் நாடகக் கலைகளும் புதுமைக் கோலமும் பாதுகாப்பு நிலையும் பெற வேண்டிய நிலையில் உள்ளன.

29.0. *இசை நாடகம்:* நாடகம் முழுவதும் கீர்த்தனை வடிவாகவே அமைந்து நடிப்பதற்கும் படிப்பதற்கும் இசைப்பதற்கும் ஏற்றதாக அமைவது தமிழ் இசை நாடகம் ஆகும்.

29.1. *இசை நாடகத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் அருணாசலக் கவிராயரே.* 1712-ல் தோன்றிய கவிராயர் தம் அறுபதாம் வயதில் புகழ் வாய்ந்த *இராம நாடகக் கீர்த்தனையை* எழுதி முடித்தார். சித்தரி அருணகிரி முதலியார் என்பவர் முதன்முதலாக இதனை அச்சில் கொண்டு வந்தார். கம்பன் கதையைப் பெரிதும் தழுவிச் செல்லும் இராம நாடகத்தில் ஏறத்தாழ 500 இசைப் பாடல்கள் உள்ளன.[142] அவற்றுள் தருவும் விருத்தமுமே அதிகம்.

29.2. செவிக்கும் கருத்துக்கும் இனியவான கவிராயரின் பாடல்கள் நீண்ட காலமாகவே கதை சொல்வாரின் - காலட்சேபம் செய்வோரின் - அடிப்படை ஊற்றுக அமைந்தவை ஆகும். பல்லவி, அனுபல்லவி, மூன்று அல்லது ஐந்து சரணங்கள் கொண்ட 'தரு'க்கள் 197 உள்ளன.

29.3. பழமொழிகளும் அடுக்குத் தொடர்களும் மிகப்பல இடங்களில் கவிராயரால் கையாளப்பட்டுள்ளன. எளிய இனிய பேச்சுத் தமிழிலேயே கீர்த்தனைகள் அமைந்தது ஒரு சிறப்பாகும். குறவஞ்சி, பள்ளு நாடகங்களில் இலக்கிய நடையும் உண்டு, எளிமையான மக்கள் வழக்கு முண்டு. ஆனால் கவிராயரின் பாடல்கள் முழுவதும் மக்கள் மொழியிலேயே அமைந்தனவாகும்.

29.4. அருணாசலக் கவிராயர் மிகச் சிறந்த கவிமன்னர். பல்வேறு சந்தங்களில் அமைந்த இனிய இசைப் பாடல்களை அவர் பாடியுள்ளார். அனைத்தும் கதையின் சூழ்நிலைக்கேற்ற நடையில் அமைநதனவாகும். சொல்லாற்றல், கற்பனை, உவமை, உருவகம், வாதம், வருணனை எனப் பல வகையிலும் அவர் பாடல்கள் சிறந்து விளங்குகின்றன. இசை மேடைகளில் பாடகர்களால் இன்றும் பெரிதாகப் போற்றி இசைக்கப்படுவது இவர் பாடல்களே.

29.5. "ஆரென்று ராகவனை எண்ணினீர் அம்மா"[143] (பைரவி), "அந்த ராம சௌந்தரியம்"[144] (கேதாரகௌள),

---

142. இராமநாடகக் கீர்த்தனைகள், சென்னை 1914

143. ,, ப. 114

144. ,, ப. 177

"இராமசாமி தூதன் நானடா"[145] (மோகனம்) முதலான பாடல்கள் புகழ் வாய்ந்தவையாகும். கொச்சை மொழியும் மக்கள் பேச்சும் கலந்த நடை கொண்டதால் இராம நாடகக் கீர்த்தனை, 'மக்கள் இலக்கிய' உலகில் சிறப்பான இடம் பெற்று விட்டது. அவர் "எல்லாத்தையும்"[146] என்று ஒர் இடத்தில் சொல்லைக் கையாளுகிறார்; மற்றோர் இடத்தில் கைகேயியைச் "சண்டாளி"[147] என்று பழிக்கிறார்; "மதனி"[148] "வீட்டுக்காரன்"[149] (மனைவி) என்ற சொற்களையும் உறவு முறைக்குப் பயன்படுத்துகிறார். இவ்வாறெல்லாம் கொச்சை மொழியைப் பின்பற்றினாலும் பாடல்கள் அழகு மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.

29.6. அழகிய இனிய நடையும், சிறந்த வருணனையும், சொல் திறனும், நகைச் சுவையும் இந்நூலை ஒப்பற்ற வெற்றிப் படைப்பாக ஆக்கிவிட்டன.

29.7. அருணாசலக் கவிராயர் பாடாத உத்தர காண்டப் பகுதியை அனந்த பாரதி ஐயங்கார் சிறப்பாகப் பாடி முடித்து விட்டார்.

30.0. *நந்தனார் கீர்த்தனை :* இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் கோபாலகிருஷ்ண பாரதியாரால் எழுதப் பெற்றதே நந்தனார் கீர்த்தனை. பிராமணராகப் பிறந்த பாரதியார் தாழ்ந்த பறையனான நந்தனாரை நயம்படப் பாடியுள்ளார்.

30.1. சேக்கிழாரின் 'திருநாளைப் போவார் புராணம்' என்னும் பெரிய புராணப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு, ஆனால் சில இடங்களில் மாற்றியமைத்து நந்தனார் கீர்த்தனையை எழுதியுள்ளார் பாரதியார்.

30.2. சேக்கிழாரின் நந்தனார் தோல்கருவி செய்யும் புலையராக இருக்கிறார்; ஆனால் பாரதியாரின் நந்தனார் உழவுப்பணி செய்பவராக வருகிறார்.

---

145. இராமநாடகக் கீர்த்தனைகள், ப. 199
146. ,, ப. 84
147. ,, ப. 52
148. ,, ப. 72
149. ,, ப. 97

30.3. குடியானவன் - பண்ணைக்காரன் போராட்டம் பாரதியாரால் புதுவதாகப் புகுத்தப்பட்டதாகும். தஞ்சையிற் பிறந்தவராகிய இந்த நூலாசிரியர் உழவர் சிக்கலை நன்குணர்ந்து புரட்சிகரமான நூலாகவே இதனைப் படைத்துவிட்டார்.

30.4. சாதிப் போராட்டம், ஆண்டான் அடிமைப் போராட்டம் ஆகிய இரண்டும் புதிய கூறுகளாக இவர் கீர்த்தனை நாடகத்தில் காணப்படுகின்றன.

30.5. 'மாடு தின்னும் புலையா'[150] 'ஐயே மெத்தக் கடினம்'[151], 'பித்தம் தெளிய மருந்து'[152] முதலான பல பாடல்கள் பாரதியாரின் கவிபுனையாற்றலை நன்கு தெரிவிப்பனவாகும்.

30.6. நந்தனார் கீர்த்தனையேயன்றி, இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம் ஆகியவற்றையும் பாரதியார் கீர்த்தனை வடிவத்தில் செய்தார்.

30.7. இவரது கவியாற்றலை நன்குணர்ந்த பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார் :

"Bharati's genius as a playwright, his imaginative skill, his gift for original melody - making, the ease with which he composed in several musical forms his remarkable powers of characterization and the vigour of his sahityam are all striking."[153]

30.8. இசை நாடகத் துறையில்பதினெட்டாம் நூற்றாண்டில் இவர்களையன்றி வேறு எவரையும் சுட்டக்கூடிய நிலையில் நாம் இல்லை.

31. முடிவுரை : கி.பி. 900 முதல் கி.பி. 1800 வரை உள்ள கால எல்லையில் தமிழ் நாடக வரலாற்றினை ஆராய்கிறபோது பல

150. நந்தனார் கீர்த்தனைகள், ப. 99
151. ,, ப. 127
152. ,, ப. 88
153. சாம்பமூர்த்தி, வி. எஸ். கிருட்டிணசாமி ஐயங்கார் நினைவு மலர், ப. 424

அரிய செய்திகளை நம்மால் உணர முடிகிறது; எனினும், பழைய தாகிய நாடக நூல்கள் கிடைக்காமல் போய்விட்டதே என்ற மனக் குறை அனைவருக்கும் எழுதல் இயல்பே. இதனைப்பற்றி நாம் முன்பே கண்டோம். கல்வெட்டுகள் பண்டைய கால மன்னர்கள் கலையில் ஆர்வம் கொண்டு கூத்து நாடகங்களைப் புரந்து வந்தனர் என்பதையும் அதில் பங்கு கொண்டோருக்கு நிலமும் பொருளும் அளித்தனர் என்பதையும் தெரிவிக்கின்றன.

31.1. சீவக சிந்தாமணி முதலான தமிழ்க் காப்பியங்களும், பிற இடைக்காலத்து நூல்களும் தமிழ் நாடக நூல்களைப்பற்றியோ வகைகளைப்பற்றியோ குறிப்பிடாவிட்டாலும், நாடகம் நடைபெற்ற தன்மை குறித்தும், நடித்தோர் குறித்தும் பிற நாடக நுண்கலை குறித்தும் சில செய்திகளைத் தருகின்றன.

31.2. பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் பதினேழாம் நூற்றாண்டு தொடங்கி மிக விரைவில் பல்கி, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. எளிய பொழுது போக்கு - இலக்கிய - நாடகவகை என்ற வகையில் தமிழ் நாடக இலக்கிய வரலாற்றில் இவற்றிற்குத் தனிச் சிறப்பான இடம் என்றும் உண்டு.

31.3. அருணாசலக் கவிராயரும், கோபால கிருட்டின பாரதியாரும் தமிழ் நாடகத் துறையில் 'இசைநாடகம்' எனும் பிரிவை நன்கு வளப்படுத்தினவர்கள் ஆவார்கள். இராம நாடகமும் நந்தனார் கீர்த்தனையும் இறவா வரம் பெற்றனவாகும்.

31.4. இதுவரை நாம் மேற்கொண்ட தமிழ் நாடகத் தனிநிலை ஆயவும், தென்னிந்திய மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் இவற்றின்கண் தோன்றிய பிற நாடகங்களோடு சேர்த்துக் கண்ட ஒப்புநிலை ஆய்வும் இடைக்கால நாடக வரலாறுபற்றிய தன்மைகள் சிலவற்றை அறிய உதவின.

31.5. ஆங்கில மொழியில் கிறிஸ்டோபா மார்லோ (1564-1593), சேக்சுபியர் (1564-1616), பென் ஜான்சன் (1573-1637), காங்கிரீவ் (1670-1729), வான்பர்க் (1664-1726) ஆகியவர்களும்,

இத்தாலிய மொழியில் மாக்கியவெல்லி (1469-1527), கோல்டொனி (160 நாடகங்கள் எழுதியவர் 1707-1793) ஆகியவர் களும்,

பிரெஞ்சு மொழியில் கோர்நெய் (1606-1684), இரசீன் (1631-1699), மோலியர் (1621-1673), வால்டேர் (1694-1778), போமார்ஷே (1732–1799) ஆகியவர்களும்,

ஸ்பானிஷ் மொழியில் லோப்-டி-வாகா (1562), கால்டெரான் (1600-1683) ஆகியவர்களும்,

ஜெர்மன் மொழியில் கோய்தே (1749-1832), ஷில்லர் (1759-1805) ஆகியவர்களும்,

உருசிய மொழியில் முதன் முதலாக நாடகம் எழுத ஆரம்பித்த கராம்ஜின் (1761-1826) போன்றோரும்,

இதே கால எல்லையில், மேலை நாடுகளில் நாடக மேடையைத் தத்தம் நூற்றுக்கணக்கான பல்வேறு சுவைகள் அமைந்த, வெவ்வேறுபட்ட போக்குகள், கதைகள், திருப்பங்கள், உத்திகள் அமைந்த சிறியனவும், பெரியனவும் ஆகிய நாடகங்களால் அணி செய்து செம்மையுற்றுப் புகழேணியில் ஏறி நின்றனர். அதே நேரத்தில், ஈராயிரம் ஆண்டிற்கு முற்பட்ட பழைய இலக்கிய ஏடுகளைப் பெற்றும் பின்னர் வந்த காப்பியம், சிற்றிலக்கியம், திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம் முதலானவற்றுன் சிறப்புற்றும் உள்ளதாகப் பெருமை பேசிக் கொள்ளும் நாம் நம் தமிழ்மொழியில் —இனியேனும் மேலைநாட்டு நாடகவாணர்களை வெல்லும் பணியில் முனைந்து, புதிய நாடக நூல்களை எழுதிக் குறை களைந்து, தமிழன்னைக்குப் புதிய அணிகலன்களைப் பூட்டி மகிழ்தல் வேண்டு மல்லவா ?

தமிழிசை

(900-1800)

32.0. "இசையானது தென்னாட்டில் முதலூழிக் காலந் தொட்டே கடல் கொள்ளப்பட்ட தென் மதுரை, கபாடபுரம், திருவாலவாய் என்னும் நகரங்களில் வளர்க்கப் பெற்றது. பரம சிவன் கல்விக்கழகம் நிறுவியும் அரசியற்றியும் தாமே முதல்வராக இருந்தும் புலவர்களுடன் பல கலைகளையும் வளர்த்த காலையில் இசையாசிரியர்கள் பலர் சங்கத்தில் வீற்றிருந்து பல இசைநூல்களை இயற்றினர். இதனைப் பிற்காலத்தில் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் தாம் உரை எழுதுவதற்கு உதவியாய் இருந்த சில இசை நூல்களின் பெயரையும் அவற்றின் ஆசிரியர் களின் பெயர்களையும் அக்காலத்து இசைமுறையையும் கூறியுள்ள

தனுல் அறியலாகும்'' [154] — என்று சங்கீத சலாநிதி பொன்னையா பிள்ளை அவர்கள் தமிழ் இசையின் பழமையைக் குறித்து அழகாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவர்.

32.1. அகத்தியர், ஆதிவாயிலார், சிகண்டியார், செயிற் றியனுர், நாரத மதிவாணனுர், யாமளேந்திரர் உள்ளிட்ட மிகப்பல தமிழ்ச் சான்றோர்களால் தொல் பழங்காலத்தே தமிழிசை நன்கு வளர்க்கப்பட்டது. அவர்தம் அரும்பெரும் இசையிலக்கண நூல்களை நாம் முற்றும் இழந்துவிட்டோம்.

33.0. 'இசை' என்ற சொல் 'புகழ்' என்றும் 'இசைதல்' என்றும் இரு பொருள்களைப் பெற்றது. தொடக்க காலத்தே வேந்தர்களையும் வள்ளல்களையும் புகழவும், பிற்பட்ட காலத்தே தெய்வங்களைப் புகழவும் புலவர்கள் பண்ணைப் பயன்படுத்தியதால் பண்ணோடு சேர்ந்த பாடல் 'இசை' என்ருனது. பிறர் 'இசை' யைப் — புகழைப் — பாடியதால் பாடியவர்களும் 'இசை' (புகழ்) பெற்றனர்.

33.1. இந்த இசைத்தமிழ் இயற்றமிழ்க்கும் இசைந்தது; நாடகத் தமிழுக்கும் இசைந்தது.

33.2. கொள்ளும் பொருளிலர் எனினும் தலை துள்ளுதலைக் கண்டு மகிழக் கொல்லும் தொழில் புரியும் ஆறலை கள்வரைக் கூட, அவர்தம் மறச் செயலினின்றும் நீக்கி, அருளை மருவிடச் செய்யும் இயல்புடையது இனிய இசை.

> *"ஆறலை கள்வர் படைவிட அருளின்*
> *மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"* 155

33.3 இயலிசை நாடகம் ஆகிய இவை மூன்றும் ஒன்ரு டொன்று பிணைந்தது என்பதனைக் 'கொட்டாட்டுப் பாட்டு' என்ற தேவாரத் தொடர் உணர்த்துகிறது.

34.4. தமிழிசை தொன்மையானது. தொல்காப்பியர் காலந் தொட்டே பண், பண்ணை, பண்ணத்தி ஆகிய சொற்கள் பயின்று

---

154. பொன்னையா பிள்ளை, க. "இசையியல்", அண்ணுமலைப்பல்கலைக் கழகம், முதல் பகுதி, ப. 134–135

155. பொருநர் 23–24

வரக் காண்கிறோம். பண்ணுதல் என்னும் வினையடியாகப் பிறந்தது பண். 'இராகம்' என்று வட சொல்லாகக் கூறப்படுவது தமிழில் 'நிறம்' என்றழைக்கப்பட்டது.[156] பாவோடு நிறத்தை இசைத்தலால் இஃது இசை எனப்படும்.

35.0. வாய்ப் பாட்டும், இன்னிய இசையும், இனிய கூத்தும் காதலர் தமக்குப் பேரின்பம் விளைவிப்பன ஆகும்.

> *"பாட லோர்த்தும் நாடகம் நயந்தும்*
> *வெண்ணிலவின் பயன் துய்த்தும்"* 157

என்ற பட்டினப்பாலை அடிகளும்,

> *"கிளைநரம்பிசையும் கூத்தும்*
> *கேழ்த்தெழுந் தீன்ற காம*
> *விளைபயன் இனிதிற் றுய்த்து"* 158

என்ற சிந்தாமணி அடிகளும் காதலர்க்கு இக்கலைகளிரண்டும் மிக்க இன்பத்தை விளைவிக்கக் கூடியன என்பதை உணர்த்துகின்றன.

36.0. தமிழிற் காணப்பெறும் ஏழிசைகளாவன : உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை என்பன.

37.0. இனிய இசைப்பாடல்களைப் பாடி வந்தவர்கள் பாணன், பாடினி என அழைக்கப்பட்டனர். 'பாணன் பறையன் துடியன் கடம்பன்'[159] ஆகிய இவர்களுள் முதல் மூவரும் வாய்ப்பாட்டு இசையும் கருவிகள் கொண்டு இசை யியற்றும் திறனும் கொண்டவர்கள் என்பது பெயராலேயே விளங்குகிறது.

37.1. பாணன் தன் இசையாற்றலினால் தலைவன் - தலைவியர் ஊடல் தீர்க்கும் வாயிலாக அமைகிறான். இதனை

> *"பாணன் கூத்தன் விறலி பரத்தை*
> *யாணர் சான்ற அறிவர் கண்டோர்*
> *பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா*
> *முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇ*
> *தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்"* 160

என்ற தொல்காப்பிய நூற்பா அறிவுறுத்துகிறது.

---

156. சிலம்பு அரங். உரை ப. 64, 66, 104
157. பட். 113-114
158. சீவக 2598
159. புறம்
160. தொல் பொருள் 491

37.2. சங்க இலக்கியங்களில் சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகியனவும் இசைவல்ல பாணரின் திறத்தை விளக்குவன ஆகும். அகம், புறம் ஆகிய நூல்களிலும் பாணரின் இசைத்திறம் கூறப்படுகிறது.

38.0 பாணர் பாடும் பண் பொழுதிற்கேற்ப அமைந்ததாம். மருதப்பண் விடியலுக்குரியது.[161] செவ்வழிப்பண் மாலைக்குரியது.[162] இது முறைமாறிப் பாடப் படுவதையும் ஒரு புறநானூற்றுப் பாடல் நமக்குணர்த்துகிறது.[163] யாமத்திற்குக் குறிஞ்சிப் பண என்பதைத் தண்டியலங்கார மேற்கோள் பாடல் அறிவுறுத்தும்.[164]

38.1. யாழ் கொண்டு இசை பாடியவர் யாழ்ப்பாணர் எனப் பட்டனர். யாழ் இசைச் சிறப்புடையது; சங்க இலக்கியந் தொட்டுப் பிற்காலம் வரை மிக உயர்வாக யாழ் கருதப்பட்டது.

> *காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்*
> *யாழ்வரைத் தங்கி யாங்கு*[165]

என்கிறது கலித்தொகை.

38.1 இந்த யாழிசையில் வல்லவராய் உதயணனும் சீவகனும் கோவலனும் மாதவியும் விளங்கினர் என்பதைப் பெருங்கதை, சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் காட்டுகின்றன.

38.3 திருக்குறள் கூத்தினைக் குறித்தது போல இசையையும் குறிப்பிட்டுள்ளது.

> *குழலினிது யாழினிது என்பதம் மக்கள்*
> *மழலைச் சொல்கேளா தவர்*[166]
> *பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்*
> *கண்ணோட்ட மில்லாத கண்*[167]

என்பவனவற்றை நோக்குக.

---

161. மதுரை 657–674
162. மதுரை 604–620
163. புறம் 149
164. தண்டி
165. கலி 1
166. குறள் 66
167. குறள் 573

38.4 திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பாண பத்திரர் என்னும் அடியார்கள் யாழிசை வல்லவராய் இருந்தனர்.

39.0 இறைவன் இசை வடிவானவன்; இசை எழுப்பவே விறகாளாக வந்தவன். "பண்ணும் பதமேழும்" என்று திருஞான சம்பந்தரும், "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னு டைய தோழனுமாய்" என்று சுந்தரரும், "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று திருநாவுக்கரசரும், "பண்சுமந்த பாடல்... பெருமான்" என்று மாணிக்கவாசகரும் இறைவனை இசைச் செல்வனாய் — இசைவடிவமாய் உணர்ந்தது ஓர்ந்து பார்க்கத் தக்கது.

40.0 பல இசைக் கருவிகள் ஒருங்கியைந்து நாட்டியத்திற்கும் பயன்படத்தக்க இசையை எழுப்பின. அது 'ஆமந்திரிகை' (ஆர்கெஸ்ட்ரா) எனப்பட்டது.

40.1 சிலப்பதிகாரம்,

"குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின் றிசைத்தது ஆமந் திரிகை" [168]

எனவும், சீவக சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர்

"குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்பல் ஆமந்திரிகை" [169]

எனவும் கூறுதல் 'ஆமந்திரிகை'யைப் பற்றி நமக்கு உணர்த்து வதாகும்.

"குழலகவ யாழ்முரல முழவதிர" [170]

என இம் முறையைப் பட்டினப் பாலை குறிப்பிடுகிறது.

41. ஆகவே, "கிறித்து சகாப்த ஆரம்பத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் மிக உயர்ந்த நிலையில் தனிப்பட்ட பழைய இசை முறை இருந்து வந்ததென்பதற்குச் சிறிதும் சந்தேகம் இல்லை" [171] என்பர் அறிஞர் பி.வி. இராசமன்னார் அவர்கள்.

---

168. *சிலம்பு* 3/139–142
169. *சீவக* 675 உரை
170. பட். 156–157
171. இராசமன்னார், பி. வி. பண் *ஆராய்ச்சி* அறிக்கை, 1960, ப. 9

42. கி.பி. 900க்குச் சற்று முன் இசை :

42.0 நாம் எடுத்துக்கொண்ட கால எல்லையாகிய கி.மு. 900-1800 பற்றிக் காண்பதற்கு முன் இருந்த இசைநிலை பற்றி அறிய வேண்டியது இன்றியமையாததாகும். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் வாழ்ந்து மறைந்த காலம் அது. தெய்வத் திறத்து வாரப் பாடலாம் தேவாரம் இசைத்தனர் அவர்கள். பதினாயிரக் கணக்காக இவர்கள் பாடிய பாடல்கள் ' சங்கீத ரத்னகரம் ' எழுதிய சாரங்க தேவரைக் கவர்ந்தது எனில இவற்றின் சிறப்பைக் கூறல் வேண்டா.

42.1 சங்க காலத்தில் கருப்பொருள்களுள் ஒன்றாக (யாழ்) இடம்பெற்ற செந்தமிழ் நல்லிசையை — இடையே 200 முதல் 600 வரையிருந்த களப்பிரர் காலத்தில் வீழ்ந்திருந்த தமிழிசையை — இச் சமயச் சான்றோர் என்றுமில்லா அளவிற்கு உயர்த்தினர் என்பதும் சற்றும் மிகையாகாது.

42.2 தேவாரத்தில் குறிக்கப் பெறும் இசைக் கருவிகள் பல; பேரி, முழவு, தமருகம், வீணை, யாழ், துந்துபி, குழல், கொடு கொட்டி, கிண்கிணி, சிரந்தை (உடுக்கை), மொந்தை, கத்திரிகை, துத்திரி, கறங்கு, துடி, தக்கை, இடக்கை, படகம், தாளம், பாலை யாழ், கொக்கரை, சச்சரி, பறை, சல்லரி, தருணிதம், தத்தளகம், கல்லலகு, கல்லவடம், சலஞ்சலம், தண்ணுமை, குடமுழவம், தடாரி,[172] பிடவம், முரவம், கிணை, தகுணிச்சம்[173] என்ற 36 கருவிகளாம்.

43.0 தேவார ஆசிரியர்கள் காலத்தே தமிழிசை மிக உயர்ந்த நிலையில் விளங்கியது என்பதற்குக் குடுமியாமலைக் கல்வெட்டு ஒன்றே போதுமான சான்றாகும். விசிததிரசித்தன், அருங்கலை விநோதன், பல்லவன் மகேந்திரவர்மன் (640-670) காலத்திய புதுக் கோட்டை சித்தன்ன வாசலுக்குப் பத்துக்கல் தொலைவிலுள்ள குடுமியாமலை மிக விரிவான இசைக் கல்வெட்டினைப் பெற்றதாகும். முடிவில் "எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய."[174] என்று காணப்

---

172. பண் ஆராய்ச்சி ஆண்டறிக்கை

173. பண் ஆராய்ச்சி ஆண்டறிக்கை

174. குடுமியாமலைக் கல்வெட்டு

படுதலால் எட்டுச் சுவைகளையும் (?) ஏழு சுரங்களையும் இவை ஒப்பன எனக்கொள்ளலாம். கல்வெட்டில் ஏழு தொகுதிகள் உள்ளன; இவை ஏழும் ஏழு இராகங்களைக் குறிப்பன, இதில் குறிப்பிட்டுள்ள இராகங்கள் ஏழும் நாம் முன்னர்க் கண்ட நாடகவியலோடு நெருங்கிய தொடர்பு உடையதாம்.

பூர்வரங்கம்	—	ஷாடவம்
முகம	—	மத்தியமக்கிராமம்
பிரதிமுகம்	—	ஷட்ஜக்கிராமம்
கருப்பம்	—	ஸாதாரிதா
விளைவு	—	பஞ்சமம்
துய்த்தல்	—	கைசிகம்
நாடகமுடிவு	—	கைசிகமத்தியம்

—ஆகிய ஏழு நாடக சந்திகட்கும் இவ்வேழு இராகங்கள் பொருந்து மாற்றை 'யாழ் நூல்' வல்ல புலமைப் பெருந்தகை விபுலானந்த அடிகளார் சுட்டிக் காட்டுகின்றார்.[175]

43.1 மகேந்திர மன்னனின் கல்வெட்டு ஏழாம் நூற்றாண்டு இசை நாடக மேன்மையை நன்கு வெளிப்படுத்துவதாகும். இக் கல்வெட்டே போல் மிகப் பழம்பாடல்களுக்கும் இசையமைக்கப் பட்டன என்ற செய்தியைப் பரிபாடல் நூலுக்குச் சான்றோர் பலர் இசையமைத்துள்ளனர் என்பதால் அறியலாம்.

44.0 சுந்தரரின் அன்னையார் பெயரே இசைஞானியார் என்பது. இசையில் மிகுந்த ஞானம் கொண்டவராக அவர் இருந் திருத்தல் வேண்டும். சுந்தரர் இசை ஞானத்திற்கும் அந்த அம்மையாரே காரணமாக இருந்திருக்கலாம்.

44.1 காரைக்காலம்மையார் தொடங்கிச் சேக்கிழார் பெருமான் வரை திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் வண்ணப் பண் பாடுவதில் வல்லவராகவே திகழ்ந்துள்ளனர். இறைவன் தன் இணையடிப் பெருமையைக் கூட, அப்பர் 'மாசில் வீணை' என்று கருதுவர்.

44.2. திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிப்பதில் வல்லவ ரெனில் அவர்தம் மனைவியார் மதங்க சூளாமணியார் இசை நடன நாடகங்களில் வல்லவராக இருந்திருத்தல் வேண்டும். 'மதங்க'

---

175. விபுலானந்தர், சுவாமி, யாழ் நூல், ப. 339.

என்ற சொல் அவர் ஆடல் பாடல் கலைப் புலமையைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

44.3 குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியாரும் சம்பந் தரைக் கண்டபோது

"தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்" [176]

என்பதால் அப் பெருமானே இசை வடிவினராய்க் கருதப்பட்ட துணரலாம்.

44.4 ஆனாய நாயனார் தம் வேய்ங்குழலில் "மண்ணமைய எழுமோசை எம்மருங்கும் பரப்பி" [177] பொருள்கள் அனைத்தையும் உருக வைத்துள்ளார்.

44.5 தென்னவன் பிரமராயரான மாணிக்க வாசகர் பலவகை இனிய பண்ணமைத்த பாடல்களைப் பாடியவராவார். திருவம்மானை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பீ, திருத் தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவூசல், திருவுந்தி, குயில்பத்து, பாவைப்பாட்டு - எனப் பல்வகைப் பாட்டுக்களைப் பாடிய முதல் இசை யறிஞராக விளங்குகின்றார் மாணிக்கவாசகர். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பதே "திருவாசக இசைக்கு உருகாதார்" என்று பொருள்படவே நிற்கிறது என்றுணரல் வேண்டும்.

44.6 ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும் திருப்பல் லாண்டும் ஆகிய ஒன்பதாம் திருமுறையும் பண்ணிசைப் பாடல்கள் கொண்டனவாம். இதிற் காணப்பெறும் "சொல்லும் பொருளும் யாப்புருவமும் செய்யுள் நடையும் பிற்காலத்தில் இராமலிங்க அடிகளால் எடுத்தாளப்பட்டுள்ளன" [178] என்பர் விபுலானந்த அடிகள்.

44.7 பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் உட்படப் பலர் பாடிய இசைப் பாடல்கள் உள்ளன. குறிப்பாகப்

---

176. பெரிய புராணம், குலச்சிறை நாயனார் புராணம்
177. பெரிய புராணம், ஆனாய நாயனார் புராணம்
178. விபுலானந்தர், சுவாமி, யாழ்நூல், ப. 388

பட்டினத்தாரின் கோயில் நான்மணிமாலையே அருணகிரிநாதருக்குச் சந்தச் செய்யுட் திருப்புகழ் பாட வழிகாட்டியாயிருந்தது எனக் கொள்ளலாம்.[179]

44.8 திருமுறைப் பண் - இசைக் குறித்து அறிஞர் பி. சாம்ப மூர்த்தி அவர்கள் பின்வருமாறு கூறுவர் : [180]

"In the history of Indian Music, the Tevaram happens to be the earliest musical composition that we possess"....

"Tevaram belongs to a period when there was a single system of music in the whole of India and bifurcation into the two systems, Hindusthani & Karnatic, had not come into existence".

44.9 பிற்காலத்தில், தேவாரத் திருமுறைகளுக்குத் திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலகண்டர் மரபிற் பிறந்த இசைத் துறையில் வல்ல பாடினியாராகிய வல்லி என்பவர் பண் அமைத்தனர் என்பர்.

45. *கல்வெட்டில் இசை* :

45.1 *குடுமியாமலைக்* கல்வெட்டில் (7ஆம் நூற்) இசைக் குறிப்பு காணப்படுகிறது.

45.2 *திருமய்யம்* கல்வெட்டிலும் இசைக் குறிப்பு உள்ளது.

45.3 தஞ்சை இராசராசேச்சுரத்தில் முதலாம் இராசராசன் திருப்பதிகம் விண்ணப்பம் செய்தற்கு நியமித்த *இசைவாணர்கள் ஐம்பதின்மரைக்* கல்வெட்டில் குறித்துள்ளான் : "ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் கொடுத்த பிடாரர் நாற்பத்தெண் மரும் இவர்களிலே நிலையார் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் ஆக

179. விபுலானந்தர், சுவாமி, யாழ்நூல், ப. 390 (& கலைக் களஞ்சியம் I. ப. 525)

180. Sambamurthy, Prof. P. The History of Indian Music, p. 72

ஐம்பதின்மருக்கும் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்திலே பெறவும்". [181]

45.4 முதலாம் இராசராசன் தேவாரத் தேனிசைப் பண் தொண்டு காரணமாகச் சிறப்புப் பெற்றவன் ஆவான். இறைவன் உருவம் '*தேவார தேவர்*' எனவும், திருப்பதிகம் ஓதி வழிபாடு செய்தற்குரிய பூசையிடம் '*தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி*' எனவும், இசைத் தொண்டு செய்பவர் '*தேவார நாயகம்*' எனவும் கல்வெட்டில் வழங்குவர். [182]

45.5 திருப்புத்தூர் (இராமநாதபுரம்) திருத்தளீசுவரர் கோயில் குலசேகர தேவர் எனும் பாண்டிய மன்னனின் நான்காம் ஆட்சி ஆண்டில் நியமத்தைச் சேர்ந்த *கந்தன் உய்யவந்தான் எனும் காங்கேயன்*, திருத்தளியாண்ட நாயனுர் கோயிலில் திருப்பதியம் ஓதுவதற்கு, அதிசய பாண்டிய நல்லூர் எனும் கூத்தக்குடியில் சில வரிகள் ஒதுக்கப்பட்டன. இந்த ஊர் ஏற்கனவே நடராசப் பெருமானுகிய கூத்தாடு தேவருக்கு வரகுணப் பெருமாளால் தானமாக அளிக்கப்பட்டது.[183]

45.6 தஞ்சை, வழுவூர், வீரட்டானேசுவரர் கோயிலில், இரண்டாம் இராசாதிராசன் ஐந்தாம் ஆட்சியாண்டில் (1-6-1167) பங்குனி விழா நடத்துவதற்கும் மார்கழி திருவாதிரை விழாவின் போது வாதவூராளி நாயனுர் திருமேனி முன் *திருவெம்பாவை* ஓதவும் குலோத்துங்க சோழ வளநாட்டு, வேழநாட்டு, மூலங்குடி எனும் ஊரைச் சேர்ந்த ஒருவன் பொருள் தானம் அளித்தான் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. [184]

45.7 திருவீழிமிழலை வீழிநாதசாமி கோயில் கல்வெட்டு: ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஒன்பதாவது ஆட்சியாண்டில் திருமுறைகளை அதற்கெனக் கட்டப்பெற்ற *திருக்கைக் கோட்டியில்* (நரசிங்க தேவரால் கட்டப்பட்டது) ஓதுவதற்காக நிலம் அளிக்கப்பட்டது.[185]

---

181. S. I. I. Vol. II (No. 65)
182. பண் ஆராய்ச்சி ஆண்டறிக்கை, 1964, ப. 73
183. Rangachary, V. Inscriptions No. 99 of 1908 (p. 1191)
184. ibid. 421 of 1912 (p. 1319)
185. ibid. 414 of 1908 (p. 1341)

45.8 அதே கோயிலில் முதலாம் இராசராசன் 22ஆம் ஆட்சி யாண்டில் திருப்பதியம் பாடுவதற்காக ஊர்ச்சபை ஏற்பாடு செய்ததும் குறிக்கப்பட்டுள்ளது.[186]

45.9 திருக்காரவாசல் என்னுமிடத்துக் கல்வெட்டு மூன்றும் இராசராச தேவர் காலத்தில் ஊர்க்கோயிலில் உள்ள திருக்கை கோட்டியில் திருமுறை ஓதுபவருக்கு, அருண்மொழித்தேவர் வளநாட்டு, புலியூர்நாட்டு மூலூர் மக்கள் உணவளிக்க ஏற்பாடு செய்ததனைக் குறிப்பிடுகின்றது.[187]

45.10 தஞ்சை கோவிலூரில் மந்திரபுரீசுவரர் கோயிலில் திருக்கை கோட்டி ஓதுவாருக்காகச் சொக்க நாயகன் எனும் ராஜ கம்பீர சோழியவரையன் ஆணையின்படி நிலம் அளிககப்பட்டது.[188]

45.11 தஞ்சை கோனேரிராஜபுரம் உமாமகேஸ்வர சுவாமி கோயிலில், இராசராசன் ஆறும ஆட்சி ஆண்டில் (1010) திருநல்லம் உடையாருக்குத் திருப்பதியம் பாட இருவருக்குப் பூங்குடியைச் சேர்ந்த காணிநிலம் ஊர்ச் சபையினரால் ஆளிக்கப் பட்டது. [189]

45.12 தஞ்சை வேதாரண்யேசுவரர் கோயிலில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பதியம் பாட ஒருவருக்கு உரிமையும் பொருளும் அளிக்கப்பட்டன.[190]

45.13 சந்திரலேகை சதுர்வேதிமங்கலம் என்னும் செந்தலையில் உள்ள சுந்தரேசுவரர் கோயிலில் கோராஜகேசரிவர்மன் எனும் சோழமன்னன் பாரதம் ஓதுவதற்காக நிலம் அளித்திருந்தான். [191]

46.0 தேவார ஆசிரியர்களின்மேல் கொண்டிருந்த பக்தியாலும் பண்களின்மேற்கொண்டிருந்த ஈடுபாட்டினாலும் அவர்கள் பெயர்களில் மடங்களைக் கட்டினர் அக்கால மன்னர்.

---

186. ibid. 423 of 1908 (p. 1342)
187. ibid. 454 of 1908 (p. 1348)
188. ibid. 203 of 1908 (p. 1376)
189. ibid. 624 of 1909 (p. 1388)
190. ibid. 422 of 1904 (p. 1435)
191. ibid. 63 of 1897 (p. 1398)

46.1 மாறவர்மன் சுந்தரபாண்டியன்-1 (1216-1235) காலத்தில் திருப்பத்தூரில் *திருஞானசம்பந்தர் மடம்* ஒன்றிருந்தது.[192]

46.2 திருமணஞ்சேரியில் *ஆலால சுந்தர குகை* எனும் மடம் இருந்தது.[193]

46.3. திருஞானசம்பந்தர் பெயராலும்[194] திருநாவுக்கரசர் பெயராலும்[195] *திருவீழிமிழலையில் மடங்கள்* அமைக்கப் பட்டன.

46.4. இராசேந்திர சோழன்-1 காலத்தில் வலிவலத்தில் *திருமூல தேவர் மடம்* அமைக்கப்பட்டிருந்தது.[196]

46.5. முதலாம் இராசராசன் காலத்தில் முனியூரில் இருந்த *திருஞான சம்பந்தர் மடம் (குகை)* ஒன்றிற்கு நிலம் அளிக்கப் பட்டது.[197]

46.6. அதுபோலவே அவர் காலத்தில் முனியூரில் இருந்த *திருமுறைத் தேவாரச் செல்வர் மடம்* ஒன்றற்கும் நிலம் அளிக்கப்பட்டது.[198]

46.7 வீரபாண்டியத் தேவர் 17 ஆம் ஆண்டுக் கல்வெட்டின்படி திருப்பத்தூரில் திருத்தொண்டத் தொகை மடம் என்ற ஒன்று இருந்தது.[199]

47.0 இசைக்கு நல்ல இடத்தைப் பழந்தமிழர் சமுதாயம் அளித்திருந்தது என்பதை இவையே அன்றி இசைக்கருவிகள் பற்றிக் குறிப்பிடுகின்ற கல்வெட்டுகளும் வலியுறுத்துகின்றன.

47.1 தஞ்சை வேப்பத்தூர் கங்கதீசுவரர் கோயிலில் உள்ள விக்ரம சோழரின் (1118-1135) ஆறும் ஆண்டுக் கல்வெட்டில்

---

192. ibid. 120 of 1908 (p. 1194)
193. ibid. 28 of 1914 (p. 1317)
194. ibid. 392 of 1908 (p. 1338)
195. ibid. 402 of 1908 (p. 1339)
196. idid. 116 of 1911 (p. 1362)
197. ibid. 156 of 1911
198. ibid. 158 of 1911
199. ibid. 116 of 1908 (p. 1193)

விருதராச பயங்கர வளநாட்டு மிழலை நாட்டு திருந்து தேவங் குடியைச் சேர்ந்த *அருமந்தையார்* எனும் இறைவன் முன் **வீணை** வாசிக்க, *வீணைக் காணி*யாகத் தனிப்பட்ட ஒருவருக்கு நிலம் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[200]

47.2 தஞ்சை திருமணஞ்சேரி பரமசுவாமி கோயிலில் *குடமுழாவாசிக்கும்* ஒருவர் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது.[201]

47.3 குடந்தை திருமயானம் பிரமபுரீசுவரர் கோயில் திருபுவன சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் 22 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் வீணை வாசிப்போருக்குப் பொருள் அளிக்கப் பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.[202]

47.4 இராசாதிராச தேவர் (1018-1052) எடுத்த திருவிடை மருதூர் கல்வெட்டில் *பாடவ்யம் வாசிப்பா*ருக்கு நாள்தோறும் 2 தூணி நெல்லும் ஆண்டுக்கு 240 கலம் நெல்லும் அளிக்கப்பட வேண்டும் என்ற ஆணை பொறிக்கப் பட்டுள்ளது.[203]

48. "தேவாரத்துத் திருப்பதியம் பாடும் பெரியோன் மறை தேடும் பொருளான அகளங்கப் பிரியன்" எனவும் "தேவாரத்துப் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக் கரையன்" எனவும் சிலர் பெயர் குறிக்கப் பெற்றுள்ளன.[204]

48.1 நாங்கூருடையான் பதஞ்சலி பிடாரன் என்பவன் "தேவார நாயகம்" என்று அழைக்கப்பட்டான்.[205]

49.0 *சோழர் காலத்துக்கு முன்பே* **தேவாரம் கோயில்களில்** *ஓதப்பெற்றது.* சான்று: "விஜயநந்தி விக்கிரமன் நந்திவர்ம பல்லவன (17 ஆம் ஆண்டு) திருவல்லம் கோயில் கல்வெட்டு 'திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப் பதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கும் நெல்லு நானூற்றுக் காடியும்' என்று குறிப்பதால், *கி. பி. 750* **இல்**

---

200. ibid. 47 of 1910 (p. 1289)
201. ibid. 17 of 1914 (p. 1317)
202. ibid. 54 of1906 (p. 1248)
203. ibid. 204 of 1907 (p. 1271)
204. S. I. I. Vol. VIII (Nos. 260 & 675)
205. A. R. of S. I. E. 97 of 1932

எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் — தேவாரம் கோயிலில் பாடப்பெற்றது உறுதியாகிறது.[206]

49.1 முதலாம் இராசராச சோழன் காலத்திற்கு முன்பும் முந்தைய சோழ மன்னர்களால் கோயில்களில் சிறப்பாகத் தேவாரம் பாட நிவந்தம் அளிக்கப் பெற்றன : திருஎறும்பியூர்க் கல்வெட்டு (873)[207], பழுவூர்க் கல்வெட்டு (876),[208] ஆகிய முதலாம் ஆதித்த சோழன் கல்வெட்டுகளிலும், திருவாவடுதுறைக் கல்வெட்டு (910),[209] அல்லூர்க் கல்வெட்டு (911),[210] திருத்தவத்துறைக் கல்வெட்டு (944),[211], ஆகிய முதற் பராந்தகச் சோழன் கல்வெட்டு களிலும், கோனேரிராசபுரம் கல்வெட்டு (977),[212] அந்துவ நல்லூர்க் கல்வெட்டு (984),[213] ஆகிய உத்தம சோழன் கல்வெட்டு களிலும் தேவாரத் திருப்பதிகம் பாட நிவந்தங்கள் வழங்கப் பெற்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளதால், ***திருமுறை கண்ட சோழ மன்னருக்கு முன்னரே தேவாரம் கோயில்களில் சிறப்பாகப் பாடப்பெற்றது உறுதியாகிறது.***

50.0 பத்தாம் நூற்றுண்டுக்குப் பின் :

50.1 சேக்கிழார் காலத்தில் இசை மரபு மிகவும் குறைந்தது ; ஆனல் முற்றிலும் மறைந்துவிட்டது என்பதற்கில்லே.

50.2 பத்து முதல் பதின்மூன்றும் நூற்றுண்டு வரையில் உள்ள காலத்தில் சயதேவர், மதங்க முனி, அபிநவ குப்தர், சாரங்க ரத்ஞகரம் முதலிய இசை நூல்களே வடமொழியில் எழுதினர்.

---

206. வெள்ளே வாரணஞர், க. பண் ஆராய்ச்சி ஆண்டறிக்கை, 1964 ப. 72-74

207. S. I. I. 129 of 1914

208. ibid. 349 of 1918

209. ibid. 139 of 1925

210. idid. Vol. VII (p. 687)

211. ibid. 99 of 1929

212. S. I. I. Vol. III, 151 A

213. S. I. I. Vol. VIII 139
(206 முதல் 213 வரை க. வெள்ளேவாரணஞர் கட்டுரைக் குறிப்புக்கள் 1

50.3 இக் காலத்தில் தோன்றிய அடியார்க்குநல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையில் இசையிலக்கணத்தை நன்கு விளக்கியுள்ளார்.

50.4 பின்னர் அகோபிலர், கமலநாதர், புண்டரிக விட்டலர், சோமநாதர், இராமாமாத்தியார் ஆகியோர் சங்கீத பாரிஜாதம், கலாநிதி, சத்ராக சந்திரோதயம், சுரமேள கலாநிதி ஆகிய *வடமொழி* நூல்களை யாத்தனர்.

50.5 அரபத்த நாவலர் பரத சாத்திரத்தையும், அறம் வளர்த்தான் பரத சங்கிரகத்தையும் இயற்றித் தமிழ் - வடமொழி இசை மரபினை வேற்றுமையின்றித் தந்துள்ளனர்.

51.0 1674 முதல் 1784 வரை ஆண்டிருந்த வெங்கோஜி, ஷாஜி, துக்கோஜி, சய்யாஜி, பிரதாப் சிங், துளசா மகராசர் ஆகியோர் இசையை (கர்நாடக இசையை) நன்கு வளர்த்தனர். கடைசியிற் குறிப்பிடப்பட்டவர் வெளியூர்களிலிருந்து இசை வாணரை வரவழைத்து 'நாடகசாலை' என்றொரு கல்வி நிறுவனம் அமைத்தனர். 'சரசுவதி மகால்' என்ற நூலகமும் உண்டாக்கினர்.[214] அவர் மகனான சரபோஜி மன்னர் எல்லாக் கலைகளிலும் வல்லவராகி இசை நாடகங்களை நன்கு வளர்த்தனர். சரபோஜியின் மகன் சிவாஜியும் இசை வளர்த்தார்.

52.0 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தியாகராசர், சியாமளா சாத்திரி, முத்துசாமி தீட்சிதர், பல்லவி கோபாலையர், சங்கராபரண நரசையர், சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேல், வீணை வராகப்பையர், பிச்சாண்டார் கோயில் சுப்பையர், மகாவைத்தியநாத ஐயர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், கரூர் இராமசாமி, பிடில் சுப்பையர், தோடி சுந்தர ராவ் முதலான இசையறிஞர்கள் — கீர்த்தனம், பதம், வர்ணம், சாவளி முதலியன இயற்றியும், இசை பாடியும் தமிழகத்தில் கர்நாடக இசைக் கலையை *வேற்று மொழியில்* வளர்த்தனர்.

53.0 *அருணகிரிநாதர்* : கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் போது வாழ்ந்த அருணகிரிநாதர் தமிழிசை வளர்த்த பெருஞ் சான்றோர் ஆவார். அருள்மிகு தம் வாழ்வில் மிகப் பல பாடல்கள் இயற்றிய அருணகிரியார் சந்தப் பாடல் உலகில் தன்னிகரற்று

---

214. பொன்னைய பிள்ளை, க. ''இசையியல்''

விளங்குபவர். அவர் பாடல்கள் பல்வகைச் சந்தங்கள் பெற்ற தாகும். பட்டினத்தார் போன்ருேரின் கோயில் நான்மணிமாலை முதலான பாடல் நூல்கள் அவருக்கு வழிகாட்டியாக அமைந்தன. தம் இசைப் பாடல்களால் தமிழிசை வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றவரும் இவரே. "சந்தத் தமிழுக்கு அருணகிரி" என்ற வகையில் புகழ்பெற்ருர். வடசொற்கள் பல விரவி வருவதால் பாடல்கள் பொருட்சுவையால் குன்றினுலும் சந்தச் சுவையால் இனிமையாகின்றன. பல்வேறு தலங்களுக்குச் சென்று தம் ஆன்ம அனுபவத்தைப் பக்தி யுணர்வோடு வெளியிட்டுள்ள பாடல்களாக அவை அமைந்துள்ளன. இறையுணர்வு மிக்கார் எளிதில் விரும்பி ஓத ஏற்றதாகத் திருப்புகழ் அமைந்துவிட்டது. மகளிர் வருணனை சற்று மிகை எனக் கருதும்படியாக இருப்பினும், அவை சுவையூட்டு வனவாக அமைந்து கற்பார் உள்ளத்தைப் பிணிக்கின்றன. பிற்கால இசை வல்லுநர்கள் பின்பற்றும் வகையில் அருணகிரியாரின் பாடல்கள் அமைந்து சிறப்புப் பெற்றுள்ளன எனில் மிகையாகாது.

54.0 பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் தமிழிசை இலக்கியமாகப் பாடல் புனைந்து இசைத் தமிழுக்குச் சிறப்பினைச் செய்த சான்ருேர் பலர். அருள் அருணுசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், ஆனை ஐயா, மழவை சிதம்பர பாரதி, கவிக் குஞ்சர பாரதியார், கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை ஆகியவற்றை இயற்றிய வையைச்சேரி இராமசாமி சிவன், நந்தனுர் கீர்த்தனை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியார், சர்வ சமயக் கீர்த்தனைகள் இயற்றிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை, முருகன்மேல் காவடிச் சிந்து இயற்றிய அண்ணுமலை ரெட்டியார், தனிக் கீர்த்தனைகள் இயற்றிய மாரிமுத்தாப் பிள்ளை, அருட்பா வழங்கிய வடலூர் இராமலிங்க அடிகளார் முதலானவர்கள் குறிப் பிடத்தக்கவர்கள் ஆவர்.

54.1 இக் காலத்தே தோன்றிய குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடக நூல்களும் இசைத் தமிழுக்குச் சிறப்புத் தந்தனவாகும்.

55.0 *முடிவுரை:* இதுகாறும் கண்ட தமிழிசை — நாடக வரலாற்றுச் செய்திகள் நமக்கு ஓர் உண்மையை நன்கு புலப்படுத்து கின்றன. தமிழ் மன்னர்கள் தமிழ் மண்ணை ஆண்ட காலமாகிய சங்க காலம், சோழர் காலம் ஆகியவற்றில் தமிழிசையும் நாடகமும் சிறந்து விளங்கின என்பதும் களப்பிரர் காலம், பின்னர் முகலாயர் காலம், நாயக்கர் காலம், மராட்டியர் காலம், ஆங்கிலேயர் காலம்

ஆகியவற்றில் அவை கெட்டுப் பிறமொழி ஆதிக்கத்துக்கு இடம் கொடுத்துவிட்டது என்பதும் தெளிவாகின்றன.

55.1 "*தமிழராட்சி தமிழன் கையில் இருக்கின்ற வரையில்தான் தமிழ்க்கலைகள் வாழும், வளரும்; தமிழரல்லாதார் நாட்டு மக்களுக்கு எவ்வளவுதான் நன்மை செய்ய முனைந்தாலும் - மொழி, கலை, பண்பாடு ஆகிய துறைகளில் தமிழர் முன்னேறுவது முயற்கொம்பே*" என்ற உணர்வை — உண்மையை — எச்சரிக்கையைத்தான் இடைக்காலத் தமிழிசை — நாடக வரலாறு நமக்குத் தெளிவுடன் சுட்டிக் காட்டுகிறது. தமிழர் இனியேனும் விழிப்புணர்ச்சி பெறுவாராக!

9

வீரமா முனிவர்

டாக்டர் வி. மீ. ஞானப்பிரகாசம்

கன்ஸ்சான்சோ ஜியுசேப்பே எவுசேபியோ பெஸ்கி என்று தம் தாய் நாட்டில் அழைக்கப்பெற்று நம் தாய்நாட்டில் வீரமாமுனிவர் என்று அழைக்கப்பெற்றவர். 1680 நவம்பர் எட்டாம் நாள், இத்தாலியிலுள்ள வெனிஸ் மாகாணத்தில் காஸ்டிகிளியோனே என்ற ஊரில் பிறந்தார். இயேசு சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றபின், தமிழ் நாட்டிற்கு வந்து உழைக்கப் பெரியோர்களிடம் இசைவு கேட்டார். இசைவு உடனே கிடைக்கவில்லை. இறுதியாக 1709-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ஆம் நாள் புனித பிரான்சிஸ் சேவியர் நினைவுநாளன்று இயேசு சபைத் தலைவருக்கு ஒரு மடல் எழுதி அதில் உருக்கத்துடன் இசைவு கோரினார். 'தமிழகம் சென்று உழைத்த பிரான்சிஸ் சேவியர் பெயரால் கேட்கிறேன். இசைவு தாருங்கள்' என்று எழுதினார். இசைவு கிடைத்தது. அடுத்த ஆண்டே மகிழ்ச்சியுடன் புறப்பட்டு வந்தார்.

அப்போது அவருக்கு 30 வயது. இங்கு வருமுன் இத்தாலியில் தமிழ் கற்றார் என்பதற்குச் சான்றில்லை. இங்குவந்து, 30 வயதில் தமிழ்கற்று தாம் வாழ்ந்த 37 ஆண்டுகளில் தமிழ் அன்னைக்குக் கவிதை, உரைநடை, இலக்கணம், அகராதி போன்ற அனைத்துத் துறையிலும் பணி செய்தார். அப்பணியின் ஒருசில பண்புகளைத் தொட்டுக் காட்டுவது என் பணி.

கவிதை : தேம்பாவணி

தேம்பாவணியில் தமிழ்க் காவியங்களின் கருத்துகளும், சொற்றொடர்களும் செறிந்துள்ளன என்பது பற்றி டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் ஆரோக்கியசாமி, வித்துவான் ரா. வெ. ஆரோக்கியம் பிள்ளை, திரு. சுந்தரம் போன்ற அறிஞர் பலர் எழுதியுள்ளனர். அதில் காணப்படும் வெளிநாட்டுச் சாயலை யும் தெரிந்து கொள்ள முயல்வோம்.

விவிலியம்

விவிலியக் கருத்துகள் தேம்பாவணிக்கு வேர்போன்றவை. ஏறத்தாழ 150 இடங்களில் முனிவர் விவிலியக் கருத்துகளையும்,

நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றார். விவிலியக் கருத்துகளை மாற்றவில்லை. விவலிய நிகழ்ச்சிகளைத் தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்ற அவர் தயங்கவில்லை. பழைய ஏற்பாட்டு இசை 6.2 வர்ணனையில் செராவிம் என்ற வானதூதர் ஆண்டவர் அரியணை முன் நிற்கின்றனர். ஒவ்வொருக்கும் ஆறு இறக்கைகள் உண்டு. இரண்டு முகத்தைமூட, இரண்டு காலைமூட, இரண்டு பறக்கப் பயன்படுகின்றன. இயேசுவின் தாய் மரியம்மாளின் முன்நின்ற வானதூதர் ஆறு இறகுகள் கொண்டிருந்தனர் என்று கூறிய முனிவர் சிறிய மாற்றம் செய்கிறார்.

ஈர் இறகால் அஞ்சினர்போல் முகத்தைமூடி
ஈர் இறகால் அடி மூடி மற்றிரண்டு
சீர் இறகால் தென்றலும் தண்ணிலாவும் கால
செலும் பைம்பொன் சாமரைபோல் விசித்து இரட்டி (தேம். 8. 61)

இயேசு குழந்தையைக் காணத் கீழ்த்திசையிலிருந்து வந்த மூன்று ஞானிகள், குழந்தையை அதன்தாய் மரியாளுடன் கண்டு, தெண்டனிட்டு வணங்கினர். மத். 211. தேம்பாவணியில் 11.11.

அருத்தியொடு மனத்து ஓங்கி, அனிச்சசையின் நொய்
அழசிரமேல் அணுகிச் சேர்த்தி
கருத்திஞெடு கண்ணில் ஒற்றிக் கண்ணுக்கும் நீர்
முத்தெனக் கால் கழல்போல் மாற்றி
இருத்தியொடு மூலைதழுவும் இளையவர்போல்
வாய் பொருத்தி, இருமுத்து ஏற்றி
அருத்திஞெடு, மனத்தின்பம் மகிழ்வெல்லை
இல்லையென, வரைவில் வாழ்ந்தார்.

நோவா காலத்து ஏற்பட்ட பெருவெள்ளத்தை விவிலியம் வர்ணிக்கின்றது. ஆதி. அதி. 6-7 அதே வர்ணனை தேம்பாவணியில் தமிழ்மறவுலகம் பெறுகின்றது. 14. 114 :

பிடிகலம் தழுவிநிற்கும் பெருங்கரி, வரை என்றெண்ணி
மடிநல முயல், மான், கேழல், மரை, கவி, பலவும் ஏறிக்
கடிகலம் சோர்ந்து, மூழ்கும் களிற்றெடும் அவையும் மூழ்க,
அடிநலம் இழந்த வாழ்க்கை அடுத்தணர் சிதைவ போன்றே.

பிற வெளிநாட்டு நூல்கள்

1. தேம்பாவணி கூறும் சூசையப்பர் வரலாற்றுக்கு மூலமாக அமைந்தது ஸ்பெனின் நாட்டுக் கன்னிகை ஆகிர்த மரியம்மாள் எழுதிய நூலாகும். பாயிரம் 7-11, 13.1. சூசை, மரி, குழந்தை

யேசு எகிப்து நாட்டில் ஏழு ஆண்டு தங்கி இருந்தனர் என்ற செய்தியும் சூசையப்பர் எட்டு ஆண்டுகள் உடல் நோயால் வருந்தி இறந்தார் என்ற செய்தியும் அந்த முதல் நூலில் உள்ளவை. (City of god பக். 387. 413)

எனினும் மூலத்தில் கிடைத்த சில மலர்களைச் சிறிது தழுவி, திருத்தித்தான் முனிவர் தேம்பாவணி தொடுக்கின்றார். முதல் நூலில், பிறந்த குழந்தை ஏசுவைக் காணவந்த இடையர்கள் அரை நாள் தங்கி, மரியம்மாளின் போதனை கேட்டுச் செல்கின்றனர். (City of god பக். 321) தேம்பாவணியில், விரைந்துவந்த இடையர்கள் விரைந்து திரும்பவில்லை, பெத்தலேகிமில் சில நாட்கள் தங்கினர்; மறுபடியும் மறுபடியும் குழந்தை ஏசுவைக் காண வருகின்றனர். இடைப்பெண்கள் மரியம்மாளிடம் உரையாடி, கடவுள் ஏன் இப்படித் துன்பத்தில் பிறக்க வேண்டும் என்று பல கேள்விகள் கேட்கின்றனர். கேட்ட ஒரு பெண்ணின் பெயர் சாந்தி. (தேம். 11. 18_57) மூலத்தில், கீழ்த்திசை ஞானிகள் திரும்புமுன், தங்கள் நாட்டு வழக்கத்தின்படி மரியம்மாளின் கையில் முத்தம் செய்ய விரும்பினர்; மரியம்மாள் தம் கையைக் கொடுப்பதற்குப் பதில் தம் குழந்தையைக் கொடுத்தார்கள். (City of god பக். 336, 339) இச்செய்தி ஒரு தாயின் கையைப் பிறர் முத்தம் செய்யும் ஆசைகூடத் தமிழ் மரபில் அந்த ஞானிகளை—அஞ் ஞானிகளை—அஞ்ஞானிகளாக்கி இருக்கும் என்பதை உணர்ந்த முனிவர், அச்செய்தியை அப்படியே விட்டுவிட்டார். அதற்குப் பதிலாக அவர்கள் சூசையைத் தங்கள் நாட்டிற்கு அழைக்கின்றனர். (தேம். 11. 117)

2. தாசோ என்ற இத்தாலியக் கவிஞர் எழுதிய காவியம் ஒன்று முனிவருக்குக் கதையொன்று கொடுத்துள்ளது. சித்திர கூடப்படலத்தில், நீபகன் என்ற ஒரு அரசன், தன் பழைய நெறிதவறிய வாழ்வைக் களைந்து, வானகம் சென்று புதுவாழ்வு தொடங்க விழைந்தான். அதற்கு இடையூறாக, வழியில் வெள்ளம் புரண்டோடும் ஆறு குறுக்கிட்டது. யானை ஒன்று அவனைத் தூக்கிச் சென்றது. ஆற்றை அவன் கடந்ததும் யானையை ஒரு நாய் விழுங்கிவிட்டது.

காவெலாம் முகைத்துப்பூப்ப
கால் ஏலாலே சவரம் வீச
பூவெலாம் நறுந்தேன் தூவ
புள்ளெலாம் விளித்துப் பாட

அவனுக்கு வனத்தில் வரவேற்புக் கிடைக்கிறது. ஓர் இடத்தில் ஒரு சந்தன மரத்தைச் சூழ்ந்து பல மரங்கள் நின்றன. அம்மரங்கள் தோறும் மாதரே வரக்கண்டான். சந்தனமரத்தினின்று தன் பழைய காதலி காசனே வெளிவரக்கண்டான். இவர்கள் அவனே மயக்க முயன்றனர். அவர்களே வெட்ட வாளே உருவினன். அந்த அரிவை யாரும் அரக்கர் உருவம் எடுதது படையேந்தி நின்றனர். எனினும் துன்னிய இடுக்கண் அஞ்சேன்...........என்று ஓங்கி, மின்னிய வடிவை, வாளால் வியனதரு வீழக்......கொய்தான் (தே. 8. 30-53) தாசோவின் காவியத்தில் ரினல்டோ என்ற வீரன் அரிமிடா என்ற பெண்ணுடன் தவருக வாழ்ந்த பின் அவ் வாழ்க்கையை விட்டு விலகி, காடு செல்கிருன். அங்கு அவனே இதே இடையூறுகள் குறுககிடுகின்றன. யானைக்குப் பதில் தங்கப் பாலம் ஒன்று ஆற்றைக் கடக்க உதவுகிறது. சநதனமரத்திற்குப் பதில் மர்டில் மரம் கூறபபடுகிறது 18. 18-37.

3. வெர்ஜில் என்ற கவிஞரின் நூல்கள் இயேசுசபையாரின் மொழிப்பயிறசிக காலததில பெரிதும் பயனபடும் நூற்கள். அவறறைக் கரைத்துக் குடித்த வீரமாமுனிவர் எந்த அளவில் வெர்ஜிலின கருத்துக்களே நமக்கு அளிததுள்ளார் என்று தனி ஆயவு செய்ய இடமுண்டு. இங்கு ஒன்றையாவது குறிப்பிடலாம். தேம்பாவணியில் ஏசு குழந்தையின புன்முறுவல் பல இடங்களில் பூககின்றது. கடவுள் பிறககப்போகும் நற்செய்தியை நினேக்கும் பொழுதே வளன், குழநதையின் புன்னகைககு ஏங்குகின்ருள்.

"பூமுழுது ஒழிநகை கண்டதேல்
ஓமுழுது உவர்ந்து உணத்து உருகி ஓங்குவேன்"
—(தேம். 9. 106)

பிறந்த குழந்தை படும் துன்பத்தைக் கண்டு தாய் அன்புச் சொற்கள் ஆறுதல மொழிகளகூற,

சொன்ன நல்உகை தேன்சுவையின் சுவை
யன்ன உண்குழவி நகை யாடினன்
—(தேம். 10. 119)

10.102, 10.129, 12,95, 30.122—இவ் விடங்களிலும் இயேசுக் குழந்தையின் புனமுறுவல குறிககப்படுகிறது. இது வெர்ஜிலின் நூலில 4: 60-64 வரும் குழந்தையின புனமுறுவலின் எதிரொலி எனலாம்.

முடிவு:

தேம்பாவணி ஓர் ஏரி, இதில் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வரும் ஆறுகள் கலககின்றன என்ற தவத்திரு. தனிநாயகம் அடிகள் கூற்று உண்மையே. தமிழ்த்தூது. பக். 84.

இன்றைய திறனாய்வுக்கும் தேம்பாவணி உரியது, ஏற்றது. 1971இல் இங்குச் சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவு ஆற்றிய டாக்டர் ச. வே. சுப்ரமணியன் இலக்கியக் கனவுகள் என்ற தலைப்பில் பேசியபோது தேம்பாவணியை ஓரிடத்தில் குறிப்பிட்டார். தமிழ் இலக்கியங்களில் கனவுகள் பல நிலைகளில் பயன்படுத்தப் பட்டாலும் கனவுகள் ஏன் தோன்றுகின்றன என்பதைக் குறித்து எந்தத் தமிழ் இலக்கியமும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. முதன்முதலாக, கனவு தோன்றுவதற்குரிய காரணங்களைத்தருகிறார் முனிவர். இலக்கியக் கனவுகள் 1972, பக். 84 சுரமி என்ற கிழவி வடிவுரும் கனவும் பொய்யோ ? என்று கேட்டபோது, வளன் கனவு தோன்றும் காரணங்கள் மூன்றினை விளக்குகிறார். நனவில் கண்டவை கனவில் தோன்றும்; நனவில் யானையையும் காகத்தை யும் காண்பவர், கனவில் யானை தலைக்குமேற் பறக்கக் காண்பர். மனதில் உருவாகும் எண்ணங்களையும் ஏக்கங்களையும், கண்ணாடி அடுத்தவற்றைக் காட்டுவதுபோல், கனவு காட்டும். வாய்த்த ஓர் பற்றல் பாலால் வரும்கனவு உருவம், மாதோ, உடலில் பித்தமிகுதி யாலும் ஒழுங்கற்ற கனவு தோன்றும். (17. 10-15.)

கனவுகள் தோன்ற முனிவர் கூறும் இக்காரணங்கள் புனித தக்குவினார் தோமை என்பவரின் புகழ்பெற்ற மறையியல் விளக் கத்தில் உள்ளன (1, 11. 0.95.6) உட்காரணம் இரண்டு, புறக் காரணம் இரண்டு என நான்கு காரணங்களை அவர் கூறுகின்றார். விழித்திருக்கும் பொழுது நாம் நினைத்தவை தூங்கும்பொழுது நம்மிடம் தங்கியிருத்தல், உடல்நிலை நம் கற்பனையைப் பாதித்தல் என்பவை உட்காரணங்கள். நமக்கு வெளியே வெட்பதட்பநிலை நம் கற்பனையைத் தாக்கல், கடவுளோ, பாவையரோ நம்மிடம் கனவுகளை உண்டாக்குதல் என்பவை இரண்டு வெளிக்காரணங்கள். இங்குக் காணப்படும் முதல் இரு உட்காரணங்களை முனிவர் இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற செய்திகள் இன்றைய அறிவியல் கருத்து களுக்கு எந்த அளவு பொருந்தும் பொருந்தா என ஆய்தல் வேண்டும்.

பிற கவிதை நூல்கள்

முனிவர் எழுதிய பிற கவிதை நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது கித்தேரியம்மாள் அம்மானை என்பதாகும். தேம்

பாவணி செந்தமிழ்நடை கொண்ட கலைக்காப்பியம் என்றால் கித்தேரியம்மாள் அம்மானை பொதுமக்களுக்கு விளங்கும் நடை கொண்ட மக்கள் காப்பியம் ஆகும். தேம்பாவணியில் சிலப்பதிகாரச் சாயல் உண்டெனில் கித்தேரியம்மாள் அம்மானையில் மணிமேகலையின் சாயல் உண்டு. தேம்பாவணி செந்தமிழ் நடை கொண்ட கலைக்காப்பியம் என்றால், கித்தேரியம்மாள் அம்மானை பொது மக்களுக்கு விளங்கும் நடைகொண்ட மக்கள் காப்பியம் எனலாம். அம்மானை என்ற பாவகை மட்டுமன்றி அதில் வழங்கப் பெறும் சொற்களும் அது பொதுமக்கள் காப்பியம் என்பதைப் புலப்படுத்தும்.

எல்லாக் கத்தோலிக்கருக்கும் விளக்கும் சொற்கள். மேற்றிராணியார் 1.57 சென்மப் பாவக்கறை 1158, மோட்ச 1.67, சிலுவை 3.61, கர்த்தர் 5.110 சம்மனசு 6.50 போன்றவையும், எல்லா,பொது மக்களுக்கும் விளங்கும் சொற்கள். சாதி 2.44, நீசகுணம் 3.5, தற்பரன் 13.50 இலாபம் 3.92, அற்புதம் 5.83 நாலுவிதத்தில் 5.135 போன்றவையும் அதில் உள்ளன.

பிறபக்திப் பாடல்கள் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல நாயகிமேல் வெண்களப்பா அடைக்கலமாலை, தேவாரம், அன்னை அழுங்கல் அந்தாதி, வண்ணம், என்பவை முனிவர் பக்தி நலம் சொட்டப் பாடவல்லவர் என்பதைக் காட்டி நிற்கின்றன. ஒரே ஒரு சான்று,

நெஞ்சி லஞ்சி யணுகா
நாணின்றக்கா லருகொடுங்
அஞ்ச லஞ்ச லென்றணைத்த
அரும்பாவி நானன்றோ

அன்றன்றோ தாயுனையே
அகத்துணர்க் துன்தயை மிதவை
என்றன்றோ சிக்கெனக்கொண்
டெளிதினிதின் நீந்தினனே

அடைக்கல நாயகி மேல் வெண்களப்பாவிலிருந்து எடுத்த இவ்வடிகள் தேவார திருவாசக மணம் கமழ்வதைக் காணலாம்.

உரைநடை நூல்கள்

1927இல் கத்தோலிக்கருக்கும் சில ஆண்டுகளுக்கு முன் தமிழகம் வந்திருந்த லூத்தரன் சபையினருக்கும் இடையே மதப்

போராட்டம் வலுப்பெற்று வந்தது. கத்தோலிக்க வேதத்தின் கொள்கைகளை விளக்குவதற்காக முனிவர் 1728ல் வேத விளக்கம் என்ற உரைநடை நூலை எழுதினர். இது எல்லோரும் எளிதில் பயன்படுத்தும் ஒரு ஏடு ஆகவேண்டுமென இதன் 18 அதிகாரங்களை 140 பிரிவுகளாகப் பிரித்து எண்ணிட்டுள்ளார். நூலின் இறுதியில் ஒரு பொருள் அகராதியும் கொடுத்துள்ளார். தமிழ் நூலில் பொருள் அகராதி கொடுக்கப் பெற்றது இதுதான் முதன் முறை என்று கூறலாம். இது சில பதிப்புகளில் தவிர்க்கப்பட்டுள்ளது வருந்தத்தக்கது.

இதில் முனிவரின் தமிழ்ப்பற்றைக் காண நம் தமிழ் உள்ளம் மகிழும். எண் 119. "மீளவுந் தரங்கம்பாடியார் தமது ஊரின் பெயரைத் தமிழில் செவ்வையாய் எழுதமாட்டாதவராகி, வேத புஸ்தகத்தைத் தமிழுரையாகத் திருப்பினேமென்று ஒளிவிடு மணியைச் சேற்றில் புதைத்தாற்போலவும், இனிய அமுதிலே நஞ்சினைக் கலந்தாற்போலவும், வடிவுள்ள சித்திரத்தின் மேல் கரியைக் கிழித்து மாசு படித்தினற்போலவும், வேத உண்மை மறையவும், அதன் உயிரைக் கெடுக்கவும், வடிவற்று மாசு கொள்ளவுந் தமிழை அறியாதவர்கள் நமது மனம் நோகக் கொடிய மொழிகளால் எழுதித் தந்த புஸ்தகங்களை வேதமென்னப்படுமோ இந்நாள் வரைக்கும் தமிழாக வடமொழி சிலுதுகளேயன்றித் தென்மொழித் தமிழே வழங்கினதென்று அறிவோம்."

இப்போது தரங்கம்பாடியார் தந்த புஸ்தகங்களை வாசித்த அளவில் கீழ்மொழித் தமிழும் மூன்றும் வகையாக எவரும் நகைத் திகழும்படிக்கு முளைத்தது கண்டோம்.

லுத்தரன் சபையினர் எழுதிய திருச்சபைப் பேதகம் என்ற நூலின் கொடுந் தமிழைக்கண்ட ஒரு தமிழறிஞர் வீரமாமுனி வருக்கு மடல் அனுப்பி, லுத்தரன் சபையினர் யார் என்று வினவ, வீரமாமுனிவர் லுத்தேரினத்தியல்பு என்ற செந்தமிழ் நூலை மடல் எழுதும் முறையிலே எழுதினர்.

கத்தோலிக்கக் குருக்களுடன் மறைப்பணியில் உழைக்கும் இல்லறத்தாரை முனிவர் வேதியர் என்றழைத்தார். அவர்கள் பயிற்சிக்குத் தவவேதியர் ஒழுக்கம் எழுதினர். கத்தோலிக்கருக்கென அவர் எழுதின பொதுமடல் இரண்டு இன்னும் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளன.

கைப்பிரதியாக உள்ள வேறொன்று திருச்சபைக் கணிதம் என்பது. ஐரோப்பா கணிதப்படிக்குக் கத்தோலிக்கு ரோமன் திருச் சபையில் வருடந்தோறும் வருகிற வருஷப் பிறப்பு, மாதப்பிறப்பு, வாரந்தேதி வேற்றுமைகளுங் கடன்திருநாள் கடனொரு சந்தி சுத்த போசனங்களு மற்றத் திருநாட்களு மறியும்படிக்குண்டாக்கப்பட்ட பஞ்சாங்கக் கணிதம்.

பரமார்த்த குருவின் கதை

நகைச்சுவை ததும்பும் இந்த முதற் சிறுகதை நூலைப் பற்றி வருத்தமான செய்தி ஒன்று சொல்ல வேண்டும். டாக்டர் ஜி. யு. போப் என்பவரும் வேறு சிலரும் இந்து மதத் துறவினரை ஏளனம் பண்ண இதை முனிவர் எழுதினார் என்பர். புராட்டஸ் டண்டு மதத்தாரைப் பரிகாசம் பண்ண இதை எழுதினார் என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது. (தெ. பொ. மீ)

உண்மை இதுவுமன்று அதுவுமன்று என்பதை முனிவர் இலத்தீன் மொழியில் எழுதியுள்ள முகவுரையே கூறும். பொதுத் தமிழ் கொடுந்தமிழ் இலக்கணம் படிப்பவர்களுக்குப் பாடப்புத்தக மாக இதை எழுதினார். இதை அச்சேற்றினால் தமிழ் எழுத்துக்கள் பார்த்து எழுதுவோரின் கவலையின்மையால் உருச்சிதைந்து போவ தற்குப் பதில் நிலைபேறு பெறும் என்பதையும் கருதினார். தமிழ் படிப்போர் பயனையும் நயனையும் இனிமையையும் அடையும் படியாக நாட்டில் வழங்கிய நகைச்சுவைக் கதையை எடுத் தெழுதினார். அதற்குச் சில வெளிநாட்டுக் கிளைகளைப் பொருத்தினார்.

அவர் பொருத்திய வெளிநாட்டுக் கிளைக்கதைகள் சில, ஒரு கதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை. மூலக்கதையில் பேராசை கொண்ட நாய் தன் வாயில் இறைச்சித் துண்டுடன் ஆற்றைக் கடக்கின்றது. தண்ணீருக்குள் தன் சாயலைக் கண்டதும், அது வேறொரு நாய் வைத்துள்ள பெரிய இறைச்சித் துண்டென நினைத்துப் அதைப் பிடுங்கக் குதிக்கிறது. இதை முனிவர் சிறிது மாற்றுகிறார். நாய் கறித்துண்டுடன் ஆற்றைக் கடக்கும்போது, சூழ்ச்சி நிறைந்த ஆறு, பெரிய துண்டொன்றைக் கீழே இருந்து காட்டிற்று. அதைக் கண்ட நாய் குதித்தது. இரண்டையும் இழந்தது.

வேறொரு கதை, இலத்தின் மூலத்திலிருந்து எடுக்கப்பட்ட நிகழ்ச்சி. வெஸ்பேசியன் என்ற உரோமை அரசன், பண ஆசை

மிகுதியாகச் சிறுநீர் வரி விதித்தான். அவனுடைய மகன் அதைப் பற்றி வெட்கப்பட்டு முறையிட்டான். அரசன் தன் மகனை வரிப்பணம் இருந்த அறைக்கு அழைத்துச் சென்று பணத்தைக் காட்டி இப்பணம் துர்மணம் வீசுகிறதா என்று கேட்டான். இந்தச் செய்தியை, முனிவர் அரசன் பெயரை விட்டு விட்டு அப்படியே பயன்படுத்துகிறார்.

இதைப் பாடப்புத்தகமாகப் பயன்படுத்தினோர் இலத்தீன் அறிந்த வெளிநாட்டு மத போதகராயிருந்ததால முனிவர் நூலின் ஒரு பக்கம் தமிழும் மறுபக்கம் அதன் இலத்தின் மொழி பெயர்ப்பும் கொடுத்துள்ளார்.

எல்லோரும் இன்புற்றிருப்பதே நோக்கமாகக் கொண்ட இந்தத் தூய நகைச்சுவை நூல் பல்வேறு வெளிநாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதில் வியப்பில்லை. தமிழில் பல பதிப்புகளைக் கண்டுள்ளது என்பதிலும் வியப்பில்லை. ஆனால் வியப்பானது என்னவெனில் 1960 இல வெளிவந்த ஒரு பதிப்பு இவ் வாக்கியத்தைக் கொண்டுள்ளதாகும்.

இதை எழுதியவர் தேம்பாவணி ஆசிரியர் ஆகிய வீரமாமுனிவ ரெனச் சிலரும், சுப்பிரதீபக் கவிராயரெனச் சிலரும கூறுவர். (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்)

வாமன் சரித்திரம்

பரமார்த்த குருவின் கதை கொடுந்தமிழ் கற்போருக்குப் பாட நூலாக அமைந்தது போல், வாமன் சரிததிரம் என்ற மிகச் சிறிய நூல் செந்தமிழ் கற்போருக்குப் பாட நூலாயிற்று. இது தேம்பாவணி (28.1.58) இல் வளனுக்கும் வாமன் என்ற போர் வீரனுக்கும் ஏற்பட்ட உரையாடலின் உரைநடை ஆக்கம்.

வீரமாமுனிவர் தம் கவிதை நூல்களில் வெளிநாட்டுக் கருத்துக் களையும் கதைகளையும் சில மாற்றங்களுடன் இணைத்தார். அவ்வாறே தம் உரைநடை நூலகளிலும் வெளிநாட்டுக கருத்துக்களையும் கதை களையும் சில மாற்றங்களுடன் சேர்த்துள்ளார். இதே போக்கினை இலக்கண நூல்களிலும் காணலாம்.

இலக்கண நூல்கள்

1730 எழுதப் பெற்ற *தொன்னூல் விளக்கம்* பழைய இலக்கிய நூல்களைக் கற்க உதவ எழுதப்பெற்றது. சிறப்புப்பாயிரம் இரண்டு குறிப்புகள் கொண்டுள்ளது. பழைய இலக்கண நூல்கள்

செந்தமிழ் உரையால் உணர்த்தாததை இந்நூலில் முனிவர் இளந்தமிழுரையால் வெளிப்படுத்த அவர் நினைத்தாலும், முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தால் இந்நூலும் பெருகக் கண்டாரஞ்சித் துணியாரென்று கருதி, முனமிகவறிய வேண்டுவதொன்றைத் தெரிந்து தருவேன் எனவே பழைய இலக்கண நூல்களில் இருப்பனவற்றை அப்படியே விரிவாகச் சொல்வார் என்று எதிர்பார்ப்பது கூடாது. பறவை தன் குஞ்சுக்கு இறகு முளைக்கும் வரை இரை கொடுப்பது போல், தமிழ் மாணவர் தாங்களே நூல்களில் முழுக இன்றியமையாத உதவியைச் செய்யவே முனிவர் விரும்புகிறார். இரண்டாவது குறிப்பும் மனத்தில் வைக்கத்தக்கது. ஆயினும் செந்தமிழ் உணர்ந்தோர் வழியின்றிப் புறனடையாய்ச் சில விகற்பம் புறநூல் வழியே சென்றுகாட்டுவதும், கவிதையில் உரைநடையில் முனிவரின் திறமை சில மாற்றங்களைப் புகுத்தியது போல, இலக்கணத்திலும் சில வேறுபாடுகளைக் காணும்.

"இவ்வேறுபாடுகள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து அதிகாரங்களிலும் உண்டு. பொருளதிகாரத்தில் மிகுதியாக உண்டு. பொருள் நூல் என்பதற்கு அவர் புதிய விரிந்த விளக்கம் தருகின்றார். பொருள் என்பது பழைய முறைப்படி, இன்பம் போகம் என்ற இரண்டை மட்டும் குறிபபதன்று, அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கையும குறிப்பதாகும்.

> *" பொருள்நூல் என்பது புகல்பொருள் முதலிய*
> *உரிப்பயன்படுத்துமாறு உணர்த்து நூலே "*

இங்ஙனம் பொருளெனப்படுவது தான் விரித்துரைப்பானெடுத்த பொருளைப் பயன்படக் கூறும் படியைக் காட்டுநூலேயெனக் கண்டுணர்க ஆகையாற் பிறபுலவராலுரைக்கத்தகும் பொருளாவன அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. இவற்றுள் பொருள் நூல் தந்த செந்தமிழ் உணர்ந்தோர் மற்றையாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப் பொருளெனப் படைச் சேவகமொன்றையும் விரித்துரைத்தார். அங்ஙனம் பொதுப்படாதுரைத்த நூல் சிறுபான்மையாகையின் இங்ஙனம் அறமுதல் நான்கிற்கேற்பப் பொதுநூலாக இவ்வதிகாரம் முடியுமெனவே கொள்க.''

இவ்வாறு பொருளியலில் இவர் மரபுப்படி கூறப்படும் புறம் அகம் என்பவற்றைச் சுருக்கமாக்கித் தந்து, பேச எழுத விரும்பும் பொருளை எவ்வாறு தொடங்குவது, விரிப்பது, முடிப்பது என்பது பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவ்வித மாற்றத்தைக் கண்டிப்

பவரும் உண்டு. (டாக்டர் கா. மீனுட்சிசுந்தரம் வீரமாமுனிவர் காட்டும் பொருளதிகாரம் பவளவிழா மலர் பா. 108) ஏற்றுக் கொள்பவரும் உண்டு. (டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் தொன் னூல் விளக்கம் நூன் மதிப்பீடு.)

மேல் நாட்டில் வழங்கிய சொல்லணிக்கலையைத் தமிழ் இலக் கணத்தில் இணைத்தல் நன்மை பயக்கும் என்று முனிவர் எண்ணிப் புகுத்திய எண்ணத்தை நாம் மறுக்க முடியாது.

கொடுந்தமிழ் இலக்கணம்

இலத்தினில் எழுதப்பட்ட மூன்று இலக்கணங்களில் இது ஒன்று. 1728 எழுதப்பட்டது. 1738ல் லுத்தரன் சபையினர் இதை அச்சிட்டனர்.

இதற்கு முந்தின நூற்றுண்டில் அறிஞர் ஒருவர் டச்சு மொழியில் தமிழ் இலக்கணம் எழுதியிருந்தார். எனினும் பேச்சு மொழிக்கு முழு இலக்கணம் எழுதப்பெற்றது இதற்கு முன் இல்லை.

தொன்னூல் விளக்கத்தில் உயிர் எழுத்துக் குறிலே ஏ, ஓ மெய்யெழுத்துக் குறிலினின்று வேறுபடுத்தினுர். கொடுந்தமிழ் இலக்கணத்தில் உயிர் மெய் எழுத்துக்களில் குறில் எ நெடில் ஒ குறில் ஒ நெடில் ஒ என்பவற்றை எழுதும் முறையில் வேறுபாடு காட்ட இப்பொழுது நாம்கையாளும் முறையைப் புகுத்தினர். (நிர்.3)

பல இடங்களில் காணப்படும் புணர்ச்சி விதிகள், பொது வானவை எளிதானவை மட்டும் ஒரே இடத்தில் தொகுத்து 13 ஒழுங்குகளாகத் தரப்படுகின்றன. (நிர். 17-31) இதைப் பற்றிப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் குறிப்பிடுகின்றுர்.

மறை போதிக்கவந்த மறைத்தொண்டர் மக்களுடன் பேசிப் பழகப் பொதுத் தமிழ் இலக்கணம் எழுதப்பெற்றது. மக்களின் இலக்கிய நூல்களை உணர்ந்து கொள்ள செந்தமிழ் இலக்கணம் 1730இல் எழுதப்பெற்றது. இதுவும் கொடுந்தமிழ்போல இலத்தீனில் எழுதப்பெற்றது. பிறகு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்றது. இதன் முன்னுரை ஒருவகையான தமிழ் இலக்கிய இலக்கண வரலாறு கொண்டுள்ளது. அதில் வள்ளுவர் அவ்வையாரின் சகோதரர் என்று பரம்பரை கூறுவதாகக் குறிப்பிடுகின்றுர்.

செந்தமிழ் இலக்கணமும், கொடுந்தமிழ் இலக்கணமும், இன்றைய மொழியியல் வல்லுநருக்குத் துணைசெய்து வருகின்றன.

தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கி முனிவர் இலத்தீனில் மூன்ருவது இலக்கணமும் எழுதினர்.

தமிழ் முன்னோரைக் குற்றம் கூறுதல் என் நோக்கமன்று, முன்னோர் கொடுத்த விதிகளை இந்தத் திறவுகோலின் உதவியால் மாணவர் நன்மைக்குத் திறந்து வெளிக்காட்டுவதே என் நோக்கம் (பக். 120) என்று முனிவர் தம் நோக்கத்தை தெளிவாக்குகின்ருர்.

இதில் இலத்தீன் இலக்கணத்தினின்றும், இலக்கியத்தி னின்றும் பல பல எடுத்துக்காட்டுகள் தருகின்ருர். அக்காலத்தில் நன்னூலுக்கு இருந்த மதிப்பையும், அதே சமயத்தில் அதையும் பிற நூல்களையும் ஆழ்ந்து கற்றவர் அருகி இருந்ததையும் சுட்டிக் காட்டு கிருர் (பக். 1,82,83.)

அகராதி

சதுரகராதி

உயர்தமிழ் கற்போருக்கு இலக்கணம் செந்தமிழ் இலக்கணம், பாடநூல், வாமன் சரித்திரம், இவர்கள் பயன்படுத்த அகராதியும் தேவை என்றுணர்ந்த முனிவர் சதுரகராதி என்ற அகராதியைத் தொகுத்தார். 1728இல், கொடுந்தமிழ் இலக்கணம் எழுதும் பொழுதே, உயர் தமிழுக்கு இலக்கணமும் அகராதியும் கொடுப் பதாக உறுதி கூறினர்; அதை 1732இல் செயல்படுத்தினர்.

ஓவியருக்கு வண்ணம், படை வீரருக்குப் படைக்கலம், கட்டு வோருக்குச் சுண்ணும்பு கல் முதலியவை தேவைப்படுவதுபோல, பிறநாட்டு மொழி கற்போருக்குச் சொற்கள் தேவைப்படுகின்றன என்று இதன் முன்னுரையில் முனிவர் உரைக்கின்ருர்.

இது பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடை யகராதி எனும் நான்கு பாகங்கள் கொண்டது. தொகையகராதி, 96 பிரபந்தங்களை ஒரே இடத்தில் கூறுகின்றது. அவற்றின் பெயர்களை மட்டுமன்றி ஒவ்வொன்றின் உறுப்புகளையும் இன்றி யமையாப் பண்புகளையும் விரித்துரைக்கின்றது. (எ. கா.) பிள்ளைக் களி: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல் விருத்தத் தால் பப்பத்தாகக் கூறுவது ஆண்பாற் பிள்ளைக்கவி. இவ்வுறுப்

பினுட் கடை மூன்றெழித்து, கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டி மேற்சொல்லியவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக் கவியாம். இவ்வாறு 96 சிற்றிலக்கியங்களை ஒரே இடத்தில் இத்துணை விளக்கத்துடன் கூறுவது இதுவே முதன் முறை எனலாம்.

சூடாமணி, திவாகரம் போன்ற நிகண்டுகளை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்திய அமைப்பைத்தவிர, வேறொன்றும் புதிதாகச் சதுரகராதியில் இல்லை என்று ஒரு கருத்தும் உண்டு. பழைய நூல்களை படித்துத்தான் முனிவர் இதைத்தொகுத்தார் என்பதை அவர் மறுக்கவில்லை. எனினும் சதுரகராதிக்கும் நிகண்டுகளுக்கும் மேறுபாடு இல்லாமல் இல்லை. (எ. கா.)

சூடாமணி நிகண்டு	சதுரகராதி
1. முதற்சொற்: பகவன்-சிவன் திருமால், பிரமன் அருகன், 5ஆம் சொல்: அகம்–மனம், வீடு, பாவம் பூமி, உள்.	1. பகவன்: அயன், அரன், அரி, அருகன், கடவுள், குரு, புத்தன் அகம்: இடம், உள், ஏழனுருபு (உ.ம்.) பல்லகரத்து பள்ளம் பாவம், பூமி, மரம், பொது. மனம், மனை
2. 12 வது பகுதி இரண்டாவது எண்ணேடு தொடங்கி சமுத்திரத்தோடு முடிகிறது. மூன்ருவது எண்ணில் 14 பொருட்கள் குறிக்கப் படுகின்றன.	2. மூன்ரும் பகுதி, தொகை யகராதி, இலக்கத் தொகை முறை—ஒன்றிலிருந்து தொடங்கி 96 தத்துவம், பிர பந்தம் என்று முடிகிறது. மூன்ருவது எண்ணில் 39 பொருட்கள் கூறப்படு கின்றன.
3. பதினேராவது பகுதி—தமிழ் யாப்பு மரபுப்படி, 2 ஆம் எழுத்து எதுகை யுடன், முதல் எழுத்து அகர வரிசை கொண்டது. (எ. கா.) பகவனே, ககலே, மகரமே அகம்.	3. நான்காம் பகுதி, தொடை யகராதி இரு பிரிவுகள் கொண்டது. குறிற்கீழெதுகை, நெடிற்கிழெதுகை. இரண்டிலும் ஒன்றெழி சிறப் பெதுகை உண்டு. எ. அ. அகடம், சகடம், விகடம்,

நிகண்டுகளுக்கும் சதுகராதிக்கும் உள்ள ஒற்றுமையும் வேறுபாடும் குவிந்து கிடக்கும் செங்கல் குவியலுக்கும் கட்டிடத்திற்கும் உள்ள ஒற்றுமை வேறுபாடு எனலாம்.

சதுரகராதி இன்னும் பயன்படுகிறது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி சதுரகராதியின் அமைப்பைக் கொண்டுள்ளது. மிகுதியான சொற்களைத் தந்தாலும், இது சதுரகராதியின் வளர்ச்சி என்று எண்ண இடமுண்டு. இதில் நான்கு பகுதிகளுக்கும் சதுரக ராதியில் போலத் தனித்தனி கடவுள் வாழ்த்துண்டு. சதுரக ராதியின் அதே கடவுள் வாழ்த்துண்டு; முதற்பகுதிக்கு மட்டும் வேறுபட்ட கடவுள் வணக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே சதுரகராதி இன்னும் நமக்குப் பயன்படுகிறது என்பது தெளிவாகும்.

பொதுத் தமிழ் அகராதி

பொதுத்தமிழ் கற்போருக்கு இலக்கண நூல் கொடுந்தமிழ் இலக்கணம், பாட நூல் பரமார்த்த குருவின் கதை, அகராதி, தமிழ்—இலத்தீன் பொதுத்தமிழ் அகராதி (Vulgaris Tamilicae Lingual Dichionarium Tamilco) முனிவர் தமிழகத்தில் முப்பது ஆண்டு சமயப் பணி முடித்தபோது அவருடைய பட்டறிவின் பயனைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் இத்தகைய பொதுத்தமிழ் அகராதி தொகுக்க வேண்டுமென அவருடைய மறைத்தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். அவர்கள் கட்டளைக்கிணங்கி இவ்வலுவலை, ஏற்கனவே சதுரகராதி முடிந்த 1732 ஆம் ஆண்டிலேயே ஓரளவு தொடங்கியிருந்த இவ்வலுவலைத் தொடர்ந்து செய்யத் துணிந்தார். இது உழைப்பு மிக்கதும், சோர்வூட்டுவதுமாக இருந்தது என அவர் தெளிவாகக் கூறுகின்றார். 1744 இல் இதை முடித்தார் என்ப தற்குச் சான்றுகள் உள.

இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் முடிந்த இவ்வகராதி முனிவரின் பழுத்த பட்டறிவின் பயன். இது போதிய அளவு வெளியே தெரியப்படாமை வருத்தத்துக்குரியது.

உள்ளடக்கம்

தமிழ்ச் சொற்கள் அகரவரிசையில் வருகின்றன; அவற்றிற்கு இலத்தீனில் (சில இடங்களில் பிரஞ்சு, போர்த்துக்கேசிய மொழியில்) பொருள் விளக்கம் தரப்படுகிறது.

சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டபின், அவை பயன்படும் பல்வேறு சொற்றொடர்களும் சுட்டப்படுகின்றன; (எ. கா) 'கை' என்ற சொல் மூன்று பொருள் பெறுகிறது. 49 சொற்றொடர் பெறுகிறது. (முன்னே நான் கை காட்டினதினாலே, திரும்ப

வந்தான் (as I gave him something first, he came again) சமயத்துக்கிவன் நன்ருய்க் கையாடுவான் (Given the occasion he will steal well) கொஞ்சம்: ஒருத்தனைக் கொஞ்சம் பண்ணுகிறது (to make little of someone) கொஞ்சத்தனம் — little mindedness கொஞ்சக்காரன் — little minded person கேட்கிறது, வாசனை கேட்டேன் (I perceived smell) கேட்பார் பேச்சைக் கேட்கிறது (to hear the report of those who narrate, not what they know, but what they have heard in passing)

அன்றைய மக்கள் வாழ்வில் பயன்பட்ட பழமொழிகள் பல இதில் துள்ளிக் குதிக்கின்றன; அண்டத்துக்குள்ளது பிண்டத்துக் குண்டு; அன்பிற்குரைகல்லாகுமுதுகு; ஆசையண்டாதால் அழுகையுமண்டாது, 'கிழவி சத்தம் கின்னரத்திலேறுமோ, 'தாழ்ந்து நின்ருல் வாழ்ந்து நிற்பாய்' 'குடல் கூழுக்கழ உனக்குக் கொண்டை பூவுக் கழுகுதோ?' சில பழமொழிகளை விளக்க வீரமா முனிவர் இலத்தீன் பழமொழிகளைப் பொருத்திக் காட்டுகிருர். (எ.கா.) அகங்கையின் மயிரைத் தேடுகிருன் என்பது 'Nodum in scripoquerit' என்ற இலத்தீன் பழமொழியை ஒத்தது என்கிருர். இதன் பொருள் 'He looks for a knot in a bubrush' இது இடையூறு இல்லாதபோதும் இடையூறு இருக்கலாம் என்று கற்பனை செய்வதைச் சுட்டுகின்றது.

இது இலக்கிய மணமும் கமழ்கிறது. 'ஆருது நாவினுற் சுட்ட வடு' 'ஈயார் தேட்டம் தீயார் கொள்வர்' போன்ற இலக்கிய மேற்கோள்கள் பல மிளிருகின்றன. வள்ளுவரைப்பற்றி, கம்பரைப் பற்றி, சிலப்பதிகாரத்தைப்பற்றி, சிந்தாமணியைப்பற்றி அருமையான சிறு குறிப்புகளும் உண்டு. ஒரே ஓர் எடுத்துக்காட்டு; சிலம்பு - When used adjectively becomes சிலம்பு Hence a book is called சிலப்பதிகாரம் as it narrates the death of a certain கோவலன் the reason for which arose from சிலம்பு it is a book of recondite language and explained by a few; it is however deservedly praised by all இதுபோன்ற சில குறிப்புகள் 18ஆம் நூற்ருண்டின் இலக்கிய நிலைகாட்டும் கண்ணுடியாகின்றன.

இதில் மருந்து மணமும் வீசுகிறது. வீரமாமுனிவர் தமிழ் மருந்து கற்றிருந்தார் என்பதற்குப் பல சான்றுகள் உள. அவற்றுள் ஒன்று இந்த அகராதி கூறும் மருந்துகளைப்பற்றிய, நோய்களைப் பற்றிய செய்திகளாகும். 'கடுக்காயிலாணி நஞ்சு, சுக்கிலே புரணி நஞ்சு' என்ற மருந்துப் பழமொழியை விளக்கும்போது,

முனிவர், மருந்து தயாரிப்பதில் கடுக்காயின் விரையையும், சுக்கின் தோலையும் நீக்கி விடுவர் என்பதைக் குறிப்பிடுகின்றார். அக்காம், அச மோதகம், அசுகுணி, அடைப்பான் போன்ற நோய்களையும் முனிவர் விளக்குகின்றார். காய்ச்சல் என்ற சொல்லில் 15 வகைக் காய்ச்சலைக் கூறிப் பொருளும் தருகின்றார்.

இவ்வாறு இந்தப் பொதுத்தமிழ் அகராதி வெளிநாட்டுக் குருக்களுக்குப் பயன்பட்டதோடு, அன்றைய தமிழ்ச் சமுதாயத்தை இன்று நாம் காணும் கண்ணாடியாகவும் உள்ளது.

போர்த்துக்கேசிய - இலத்தீன் தமிழ் அகராதி

பொதுத் தமிழ் அகராதியின் பிற்சேர்க்கையாக ஒரு சிறு அகராதியும் உண்டு. இதில் 4353 சொற்கள் உள. போர்த்துக்கேசிய சொற்கள் அகர வரிசையில் வருகின்றன. அவற்றிற்கருகில் இலத்தீன் சொற்களும் அடுத்துத் தமிழ்ச் சொற்களும் உள.

18-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதத் தொண்டர் அனைவருக்கும் போர்த்துக்கேசியமும் இலத்தீனும் தெரிந்திருந்தன. இவ்விரு மொழிகளில் சிந்திப்பவர் அவர்களுள் பலர் இருந்தனர். அவர்கள் தமிழில் எழுதப் பேச விரும்பும்பொழுது போர்த்துக்கேசிய அல்லது இலத்தீன் வார்த்தைகளை முதலில் நினைப்பர். எனவேதான் முனிவர் போர்த்துக்கேசிய சொற்களை முதலில் அகரவரிசைப் படுத்துகிறார்.

பொதுத் தமிழ் அகராதியில் மக்கள் வழக்கில் இருந்த எல்லாச் சொற்களும் உள. தகுதியுடையவை தகுதியற்றவை; மங்கலச் சொற்கள் அமங்கலச் சொற்கள் அனைத்தும் உள. ஆனால் இந்த அகராதியில் பேச்சிலும் எழுத்திலும் மதபோதகர் பயன்படுத்தக் கூடிய சொற்கள் மட்டுமே உள.

சிறிய அகராதி என்றாலும் ஒரு பொருட் பன்மொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. (எ.கா.) May, Mater, (Mother) தாய், மாதா, ஆயி, அம்மன், அம்மை, ஆத்தாள், அத்தை, அன்னை, ஆய், சொற்களுக்கிடையேயுள்ள சொல் வேறுபாட்டை முனிவர் சுட்டிக் காட்டுகிறார்.

குறி சொல்லல் – கை பார்த்துச் சொல்லல்
சகுனம் – பறவை பார்த்துச் சொல்லல்
நிமித்தம் – ஒலி கேட்டுச் சொல்லல்
சாஸ்திரம் – எந்தக் காரணமாவது பார்த்துச் சொல்லல்

இது கைப்பிரதி நூலாகவே உள்ளது.

திருக்குறள் மொழிபெயர்ப்பு

கவிதைகளிலும், உரைநடை நூல்களிலும், இலக்கணங் களிலும், அகராதிகளிலும்கூட முனிவர் எவ்வெவ்வாறு கையாண் டுள்ளார் என்பது தனிக் கட்டுரைக்குரிய பொருளாகும்.

குறளின் அருமையை உணர்ந்து, குறளின் கீழ்த்திசை ஒளி மேற்றிசையில் பரவ வேண்டும் என அதை, அதன் முதல் இரு பால்களை இலத்தீன் மொழியில் பெயர்த்தார். வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து நாம் வான் புகழ் கொள்ள முனிவர் அடி கோலினர்.

இந்த மொழி பெயர்ப்பை டாக்டர் ஜி. யு. போப் தமது 'The sacred Kural' என்ற நூலின் பிற்சேர்க்கையில் கொடுக்கிறார். ஒரு சில குறள்கள் கைப்பிரதியில் தெளிவாக இல்லை என்கிறார். எல்லிஸ் சில குறள்களுக்கு எழுதிய விரிவுரையில் முனிவரின் மொழி பெயர்ப்பை இங்குமங்கும் பயன்படுத்துகிறார்.

அண்மையில் பாரிசில் நடந்த மூன்றும் தமிழ்க் கருத்தரங்கிற்கு அடியேன் சென்றிருந்தபோது, பாரிஸ் தேசிய நூலகத்தில் அதைக் கைப்பிரதியில் காணும் பேறு பெற்றேன். அது இப்போது என்னிடம் நிழற்படப் படிவ உருவில் (Photostat ஆக) உள்ளது.

அந்தக் கைப்பிரதியின் மேலே 'Arrive a constantinople' என்ற தொடர் உண்டு. இது எப்படி கான்ஸ்நாந்திநோப்பிள் சென்றது, எப்படி அங்கிருந்து பாரிஸ் பறந்தது என்பது ஆராய்ந்து அறியத்தக்கது.

உள்ளே மொழிபெயர்ப்புத் தொடங்குமுன், வீரமாமுனிவர் தாமே கைப்பட எழுதிய சில வரிகள் உள. அதில் அவர் குறளின் மூன்று பகுதிகளில் இறுதிப் பகுதியை அடக்கத்துடன் விட்டு விட்டு, மற்ற இரு பகுதிகளை மொழி பெயர்ப்பதாகக் கூறுகின்றார். மொழி பெயர்ப்பின் தலைப்பைத் தம் கையாலே எழுதுவதாகவும் சொல்கிறார் (Moralia).

முனிவர் இதில் வெறும் மொழிபெயர்ப்புமட்டு மன்று. பல குறள் களுக்கு விளக்கமும் கொடுக்கிறார். (எ.கா.) ஐந்தவித்தான் ஆற்றல்,

'There is a story that Devendiran who is Indiren or as others say a certain person called Nancuron in the guise of Devendiren was cursed by an ascetic called Agastian, felt the effect of the curse; wherefore (the author) presumes to show that ascetics have power even over the king of gods.'"

பொருள் கூறுவதிலும் முனிவரின் விளக்கம் சில இடங்களில் மற்ற உரையாசிரியர்களின் விளக்கத்தினின்று வேறுபடுகிறது. 'அறவாழி அந்தணன் தாள்' பிறவாழி - என்பதற்குச் சமணர்கள் பல பிறப்பு எனும் ஆழி என்பர்: பரிமேலழகர், பொருள், இன்பம் (அறத்தினைத் தவிர்த்த பிற ஆழி) என்னும் ஆழி என்பார். பரிதியார், அறத்திற்கு எதிரான மறம் எனும் தீமைக் கடல் என்பார். முனிவர், துன்பம் நிறைந்த இந்த வாழ்க்கை எனும் கடல் என்கிறார். 'பிறவிப் பெருங்கடல்' என்பதையும் அவ்வாறே இந்தப் பிறப்பு எனும் துன்பக் கடல் என்றே கொள்கிறார்.

ஊழ் என்ற அதிகாரத்தில் புதுப் பொருள் கண்டார். 33 வரிகள் கொண்ட முன்னுரை கொடுத்து, மொழி பெயர்ப்பைத் தொடங்குகிறார். ஊழ் என்றால் மிகப் பழமையானது; மிகப் பழமையானது கடவுள் செய்த ஏற்பாடு, ஊழ் கடவுளின் ஏற்பாட்டைக் குறிக்கும் இந்தப் பொருளே முழு அதிகாரத்திற்கும், குறிப்பாக,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (கு. 377)

என்ற குறளுக்கும் மிகப் பொருத்தமானது.

இங்கும் முனிவர் மாற்றம் செய்கிறார். பழையதை இடிக்க வேண்டும் என்ற வீண் ஆசையினால் இவ்வாறு செய்யவில்லை. தம் உள்ளம் கொண்டிருந்த கிறிஸ்தவ கருத்துகளின் சாயல் குறளில் காணப்படுவதாக உணர்ந்ததால் இவ்வாறு விளக்கம் கூறுகிறார். இதுபற்றி டாக்டர் வேலுப்பிள்ளையின் கருத்து நினைவுறத்தக்கது. திருக்குறளையும் நாலடியாரையும் கிறிஸ்தவ மத போதகர்கள் மொழி பெயர்த்துப் பிற நாட்டாருக்கு நல்கினர் என்று கூறி இவ்வாறு முடிக்கின்றார். "திருக்குறளும் நாலடியாரும் சமண சமயச் செல்வாக்குடன் காணப்பட்டாலும் அந்நூல்கள் கூறும் அறங்களில் மிகப் பெரும்பாலன கிறித்தவருக்கும் உடன்பாடாகக் காணப்பட்டமையால் அந்நூல்கள் இவ்வாறு பிரபலமெய்தின".

(தமிழ் இலக்கியத்தின் காலமும் கருத்தும்). பக். 46

முடிவுரை

விவிலியக் கருத்துகள், நிகழ்ச்சிகள், விர்ஜில், தாசோ, அக்விருஸ் தோமையார் போன்றவர்களின் கருத்துகள், கதைகள் புகுத்தியது, உரைநடை நூலில் பொருளகராதி இணைத்தது, நகைச் சுவை சிறுகதை நூல் எழுதியது, இலக்கண நூல்களில் மேல்நாட்டு சொல்லணிக் கலையின் (Rhetoric) சில குறிப்புகளைச் சேர்த்தது பேச்சு மொழியை ஆராய்ந்து இன்றைய மொழியியலார்க்கு வழி காட்டியது, முற்றிலும் அகரவரிசையில் அமைந்த சொற்களைக் கொண்ட அகராதி தந்தது. இவையெல்லாம் வீரமாமுனிவர் வெளி நாட்டிலிருந்து தமிழ் உலகுக்குக் கொண்டுவந்த அன்பளிப்பாகும். மூன்று தமிழிலக்கணங்களை இலத்தீனில் எழுதியது, திருக்குறளை இலத்தீனில் மொழி பெயர்த்தது - தமிழ் உலகினின்று வெளி நாட்டார்க்கு அவர் அனுப்பிய அன்பளிப்பாகும்.

இவ்வாறு, இரு உலகையும் தம்முள் இணைத்த இயேசு பெருமானை ஒத்திருந்தார். பழங்காலத்தில் ஏற்றுமதி இறககுமதி செய்த முறைமுகப் பட்டினம்போல் விளங்கினர். இவருடைய பணியால் பயனடையும் தமிழ் உள்ளம் இவர் நூல்களைப் பதிப்பித்துப் பரப்பவும், பாடப் புத்தகங்களில் இவர் பாடல்களைச் சேர்ககவும் விழைவது நன்றி செலுத்த நல்ல வழியாகும்.

10

உமறுப் புலவர்

பேராசிரியர், சி. நயினுர் முகம்மது

முன்னுரை

செந்தமிழ் இலக்கியங்கள் செய்து பைந்தமிழ்த் தொண்டாற்றிய முஸ்லீம் புலவர் பெருமக்களுள், உமறுப் புலவர் பன்மீன் நடுவண் பான்மதிபோல் தலைசிறந்து விளங்குகின்ருர். இவர், சிந்தையள்ளும் சீருப்புராணம் படைத்தளித்த பெரும் புலவராவார். முதுமொழி மாலையும், சீதக்காதி திருமண வாழ்த்தும் செய்தளித்துள்ளார். சீதக்காதி கோவையும் பாடினர் என்பர். சீதக்காதி நொண்டி நாடகத்தை இவர் இயற்றியதாகக் கூறுவாரும் உளர்.

புலவர் வரலாறு

இவ்வாறு பைந்தமிழ்ப் பனுவல்கள் படைத்தளித்த பெரும் புலவராகிய உமரின் தெளிவான வரலாறு கிடைக்கப் பெறவில்லை. ஆனுல் தீந்தமிழ்க் காப்பியங்கள் செய்தருளிய திருத்தக்க தேவர், சேக்கிழார், கம்பர் முதலிய பெரும் புலவர்களுக்கு எழுந்த அருங் கதைகளைப் போன்றே, உமறுப் புலவர் குறித்தும் செவிவழிச் செய்திகள் பல வழியாக வழங்கி வருகின்றன. 1919–இல் வெளியிடப்பட்டுள்ள சீருப்புராண நூல் இறுதியில், வெளியீட்டாசிரியர் கண்ணகுமது மகுதூம் முகம்மதுப் புலவர் "உமறுப் புலவர் வரலாற்றுச் சுருக்கமும், சீருப்புராண வரலாற்றுச் சுருக்கமும் தந்துள்ளார்".[1] இவரைப் பின்பற்றியே இவருக்குப் பினனுல் வந்த நூலாசிரியரும், கட்டுரை ஆசிரியரும் உமறுப் புலவரின் வரலாற்றினை வடித்துக் கூறியுள்ளனர்.[2]

---

1. சீருப்புராணம்—கி. பி. 1919-இல் வெளிடப் பெற்றது. பக்கம் 689–711
2. Muslims Contribution to Tamil Literature-by M. M. Vurise, Page 15-23
   முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்-எம். ஆர். எம். அப்துல்ரகீம்; பக்கம் 27, 88
   உமறு தரும் சீரு-வி. நூர்முகமது-பக்கம் 1–20
   சிந்தையள்ளும் சீரு-முததமிழ்க்காவலர் மணிவிழா மலர் (திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்க வெளியீடு-1965)
   அமுதகவியரசு-மாணவர் இதயம்-ரஞ்கூன் 1961; பக்கம் 48

பிறப்பு

அரபு நாட்டிலிருந்து வந்து அத்தர் வாணிபம் செய்தோரின் வழித்தோன்றல் சேகு முதலியார். இவர் நாகலாபுரத்தில் வாழ்ந்து, அரசர் அவைக்குச் சென்று நறுமணப் பொருள் விற்று வந்தார். இவருக்கு அருந்தவப் புதல்வராக உமறு பிறந்தார். சேகு முதலியார் எட்டயாபுரத்து மன்னரின் அன்பைப் பெற்று அவைக்களப் புலவர் கடிகைமுத்துவின் நட்பையும் பெற்றார். உமறு, திண்ணைப் பள்ளியில் கல்விப் பயிற்சியைத் தொடங்கி, அவைக்களப் புலவரிடத்துப் பயிலும் பேறும் பெற்றார். கருவில் திருவுடைய இளைஞர் உமறு கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினர்.

அருள் திறம்

பதினறு வயதுப் பருவத்தே இவரிடம் மறைந்திருந்த அருள் திறமும், அரும் புலமையும் வெளிப்படும் சுவையான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. வடமொழியிலும், தென்மொழியிலும் புலமை பெற்று, மந்திர தந்திரங்களில் கைதேர்ந்து, புகழ்பெற்ற புலவரையெல்லாம் வாதித்து வென்று, வாகை சூடிவந்த வாலை வாருதியை அருட்கவி[3] பாடி வென்று அரும் புகழ் கொண்டார், எட்டப்பரின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். கரம் சிவக்கக் கொடை அளித்த வள்ளல் சீதக்காதி உமறுப் புலவரின் உயர் புலமையையும், புகழையும் கேட்டு உவகை கொண்டார். நபிகள் நாயகம் அவர்களின் நல்வாழ்வை நற்றமிழ்க் காப்பியமாக

---

3. சமர துர கததுங்க மன்னரும் சபாசென்று
சரிசம ஆசன மீதிலே
மர ஒரு நரகொம்பு தினமும் சுமா செலும்
அமுதகவி ராஜன் நானே
திமிர பகை வரைவென்ற எம(து) எட்டப்ப தீரன்
அணிவாயில் வித்துவான் நானே
உமது குமுறிடில் அண்டமுகடும் படீரெனும்
உள்ளச்சம் வையும் பிள்ளாய்

சீறாப்புராணம் (1919) பக்கம் 700.
உமறு தரும் சீறா—பக்கம்-1.
இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்—பக்கம் 154

இயற்றித் தர வேண்டினர். உமறுப் புலவரும் உத்தமரின் வாழ்வை இலக்கியமாக்கிட இசைந்தார். அந்நாளில் மெய்ஞ் ஞான மேதையாக இஸ்லாமிய மார்க்கப் பேரறிஞராக விளங்கிய செய்து சதக்கத்துல்லா அப்பாவின் ஆசிபெற்று, பரங்கிப்பேட்டை கண்ணுட்டி அப்பா என்பவரிடம் வள்ளல் நபியின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைப் பெற்று வண்டமிழ்க் காப்பியம் இயற்றினர்.

அபுல்காசிமின் ஆதரவு

ஆதரித்து வந்த சீதக்காதி இறந்துவிடவே வருந்திய அருந் தமிழ்ப் புலவரிடம் ஆர்வம்கொண்ட அபுல்காசிம் மரைக்காயர் பெரும் புலவரைப் பரிவுடன் புரந்து வரலானுர். நாயகக் காப்பியம் நன்று வளர்ந்து வந்தது. அறிஞர் பேரவையில் அரங் கேற்றமும் நடைபெற்றது.

புலவர் வாழ்ந்த காலம்

இப் பெரும்புலவர் வாழ்ந்த காலமும் ஆராய்ச்சிக்குரியதே. இவரது காலம் கி.பி. 17-ஆம் நூற்றுண்டு என்பர்.[4] வள்ளல் சீதக்காதி அவையில் உமறுப் புலவர் வீற்றிருந்ததாக சீதக்காதி நொண்டி நாடகம் கூறுகிறது. கி.பி. 1674—1710 காலப் பகுதியில் வாழ்ந்த கிழவன் சேதுபதி விசய ரகுநாதத் தேவர், கி.பி. 1659—1707 காலப்பகுதியில் ஆட்சி செய்த மொகலாயப் பேரரசர் அவுரங்க சீப் ஆகியோரின் காலத்தில் வள்ளல் சீதக்காதி வாழ்ந்தார் என்பது வரலாற்று அறிஞர்களால் நிறுவப்பட்டுள்ளது.[5] மேலும் உமறுப் புலவரின் வழித் தோன்றல்களிடமிருந்து கிடைத் துள்ள ஒரு பழம் பாடல் கொண்டு உமறுப் புலவர் கி.பி. 1642-ல் பிறந்து, 63 ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 1703-இல் இறந்தார்

---

4. 'This by Umaru-p-Pulavar patronised by Cetakati of the early Seventeenth Century'-Prof. T. P. Meenakshi-sundaram Pillai-A History of Tamil Literature Page-161 'இவர் கொடைவள்ளல் சீதக்காதியின் காலத்தவர் (17வது நூற்றுண்டு) என்பது துணிபு'-கலைக்களஞ்சியம் தொகுதி பக்கம் 273

5. டாக்டர் ஹுஸைன் நயினர்—*சீதக்காதி* வள்ளல், பக்கம் 56

என்றும் நிறுவப்பட்டுள்ளது.[6] ஆதலின் இவரது காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று தெளிவாகின்றது.

சில சிந்தனைகள்

இவர் வரலாறு குறித்து வழங்கி வரும் செய்திகளுக்கெல்லாம் அகச்சான்றுகள் அகப்படவில்லை. புறச்சான்றுகளால் சில புலப்படுகின்றன.

(1) கடிகைமுத்துப் புலவரிடம் உமறுப் புலவர் கல்வி பயின்றதாகத் தமிழ் கலைக் களஞ்சியமும், தமிழ்ப்புலவர் வரிசையும் குறிப்பிடுகின்றன.[7]

(2) கடவுள் வாழ்த்துப் படலத்தில் செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்களின் சேவைச் சிறப்பு குறித்துப் பாடுகின்றார். ஆனால் காப்பியம் இயற்றுதற்கு வேண்டிய உரை தந்து உதவிய வரலாறுபற்றி ஒரு குறிப்பும் தரவில்லை. அப்பா அவர்களைப் பற்றி ஓரளவு குறிப்பிட்ட புலவர் உரைதந்து உதவியதாகக் கூறப்படும் கண்ணுட்டி அப்பாவைக் குறித்து எதுவும் கூறவில்லை. இதனால் உமறுப் புலவர் வழக்கிலுள்ள செய்திகளை வைத்துப் புராணம் பாடினார் எனலாம்.

(3) காப்பியத்துள் ஆங்காங்கே கதையுடன் பொருத்தி 22 பாடல்களில் வள்ளல் அபுல்காசிம் குறித்துப் பாடித் தம்

---

6. ஹாஜி ஜே. எம். எம் அப்துல் காதிர்—இலங்கை–'உமறுப் புலவரின் வரலாறு பற்றிய சில ஆய்வுகள்' பிறை சுதந்தர தினமலர், பக்கம் 33

ஓராயிரம் ஹிஜ்ரி ஐம்பத்திரண்டு ஷஅபான்
ஒப்பற்ற தேதி ஒன்பதில்
பாராரும் புகழுற்ற நாகலா புரமதில்
பரிமளக் கறைஷிக் குலத்தில்
பேராளன் மாப்பிள்ளை முகம்மது நயினார்
பிள்ளை யீன்ற கவிஞன்
சீராளன் உமறு அறுபத்து மூன்றெட்டில்
சேர்ந்தான் சுவர்க்க நலமே.

7. கலைக்களஞ்சியம்–தொகுதி மூன்று –பக்கம் 85
'இவரிடம் (கடிகை முத்துப்புலவரிடம்) உமறுப்புலவர் கல்வி பயின்றிருக்கின்றார்'. தமிழ்ப்புலவர் வரிசை, நான்காம் புத்தகம் பக்கம் 79–80

உள்ளத்தில் ஊறிவரும் நன்றிப் பெருக்கை வெளிப்படுத்துகிருர். ஆனல் சீதக்காதி பற்றி சீருப்புராணத்தில் சிறு குறிப்பும் காணப் படவில்லை. சீதக்காதி திருமண வாழ்த்து எனும் பனுவலில் அவரைச் சிறப்பாகப் பாராட்டி இருப்பதாலும், வள்ளல் அப்துல் காசீமுக்குத் தனிச் சிறப்புத் தரவேண்டும் எனக் கருதியதாலும் சீதக்காதி பற்றி ஏதும் கூருமல் இருந்திருக்கலாம்.

சுவையான நிகழ்ச்சிகள்

1. தமிழ்ச் சுவை தேருவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட எட்டப்பர் உமறுப் புலவரின் உயர் புலமையிலும் உவகை கொண்டார். அவைக்களப் புலவராக அமர்ந்த உமறுப் புலவர் அரசருக்குக் கவி அமுதினை வார்த்து வந்தார். கவி நலம் கனிந்த கம்பராமாயணப் பாடல்களில் தோய்ந்துள்ள சொற்சுவை, பொருட்சுவைகளைப் புலவர் எடுத்துரைத்தார். பூபதியும் ஊன்றிக் கேட்டுப் பேரின்பம் எய்துவர். ஒரு நாள் சோர்வாலோ வேறு காரணத்தாலோ புலவர் ஆற்றிய விரி வுரையைக் கேட்பதில் கவனமின்றி இருந்தார். புலவரோ சினம்கொண்டு "எந்தக் கழுதையைப் பார்த்து யான்" கூறுவது என்று கேட்டுவிட்டார். கவியாளும் புலவரிடம் புவியாளும் புரவலர் கட்டுண்டு மன்னிப்பு வேண்டினர். எனினும் புலவரின் சுடுசொல் பூபதியின் மனதைச் சுட்டு விட்டதால், மனக் கசப்பு வளர்ந்துவிடவே புலவர் எட்டப்பரை விட்டு வள்ளல் சீதக்காதியிடம் சென்று விட்டார். இப்படி ஒரு செய்தி.[8]

2. சீருவென்னும் செந்தமிழ்க் காப்பியம் வளர்ந்து வருகையில் நடந்ததாக ஒரு நிகழ்ச்சி உண்டு. மாநிலந் தனக்கோர் மணி விளக்காகத் தோன்றிய மாநபியவர்களின் பிறப்பு குறித்துச் சிறப்பாகப் பாடி வருகையில் 'கிடந்தொளி பரப்பி' எனத் தொடங்கிப் பாட முற்பட்டபோது அடுத்துவரும் தொடர் வராமல் இடர்ப்பட்டார். ஆதலின் புலவர் ஊண், உறக்கம் துறந்து 'கிடந்தொளி பரப்பி' எனும் தொடரைத் திரும்பத் திரும்பக் கூறி வருந்தினர். அதுவரையில் அவரால் வெறுக் கப்பட்டு வந்த புலவரின் மகன் தோன்றி, 'வாசங் கொப் பளித்து' என்று அடுத்த தொடரை எடுத்துக் கொடுத்தா

8 முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்—எம். ஆர். எம். அப்துல்றகீம், பக்கம் 44

ராம். கவிதை தடங்கலின்றி வடிவெடுத்து விட்டது.[9] இதனைப் புலவர் புராணத்தில் முத்துலுக்கப் புலவர் சருக்கத்தில் முருகதாசு சுவாமிகள் ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார் [10]

3. சீறாப்புராணம் அரங்கேற்றம் பற்றியும் ஒரு செய்தி வழங்கி வருகிறது. வளர்ந்து வரும் சீறாவின் சிறப்பு செந்தமிழ் நாடெங்கும் பரவியது. ஆதலின் அக் காப்பியத்தின் கொடை நாயகராகத் திகழப் பல செல்வர்கள் விரும்பிப் பெரும் பொருள் பரிசு தருவதாகத் தெரிவித்தனர். தம்மைப் புரந்து வந்த வள்ளல் அபுல் காசீம் செல்வத்தில் குறைந்து வந்ததினால் பெரும் பொருள் தரும் அருஞ்செல்வர் பெயரில் காப்பியத்தை அரங்கேற்றலாம் என எண்ணி அபுல் காசீமிடம் கூறினார். ஆனால் கவிஞர் கனவிலே கருணை நபி காட்சி தந்து, அபுல் காசீம் பெயரிலேயே அரங்கேற்றம் செய்யவேண்டும் என்று உணர்த்தினார்கள். இதனைப் புலவர் வள்ளலிடம் கூறியபோது அபுல் காசீமும், அவர்தம் மனைவியார் சப்பாகு அம்மையாரும் பெரிதும் மகிழ்ந்தனர். அரங்கேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். புலவர் பெருமக்களும் பொதுமக்களும் கூடிய அவையிலே அரங்கேற்றம் தொடங்கியது. இனிய குரலில் காப்பியப் பாடல்களை ஒருவன் பாடிவர உமறுப் புலவர் அரிய விளக்கம் செய்து வந்தார். நெடுநேரம் பாடி வந்ததால் ஏற்பட்ட தளர்ச்சியினால் பாடுபவன் 'தெள்ள முதனைய முகம்மது நபியை சபா திரு மடிமிசைக் கொண்டார்'[11] எனும் தொடரை 'தெள்ள முதனைய முகம்மது நபியை சபா திரு மடிமிசைக் கொன்றார்' எனப் பாடிவிட்டான். வெகுண்டெழுந்த

---

9. முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பக்கம் 63-64.

10. ஒருபாட் டியிருசீ ருதித்துப் பின் மற்றொன்று முதவாமையால்
வெருள்கூர லெய்தித் தவித்துள்ளகங் கார மெலிவதாலு
மருகே யிருக்குந் தன் மகன்வாயில் வருசொல் லதைச் சேர்த்து
தாப்பொரு நீருடுக்கும் புவிக்கட்பல் புலவோர்கள் புகல்வார்களே

11. முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள், பக்கம் 79
உமறுப் புலவர் சிறப்பு மலர்-ரங்கூன் தொண்டன் வெளியீடு பக்கம் 14-16

புலவர் வையகத்துக்கு உய்யும் நெறிகாட்ட வந்த வள்ளல் நபியைக் கொன்று விட்டானே என்று இரைந்து தொடையில் அறைந்தார். சன்னல் அருகில் இருந்து கன்னல் தமிழ்க் கவிதை பருகிவந்த சப்பாகு அம்மையாரின் மடியிலிருந்து பால் குடித்துக் கொண்டிருந்த பாலகன் புரையேறி இறந்து விட்டான். அருந்தவக் கொழுந்து இறந்து விட்டதால் அம்மையாருக்கு அளவற்ற வேதனை ஏற்பட்டது. அரங் கேற்றம் குலையக் கூடாது எனக் கருதிய அம்மையார் அழாமல் அப்படியே அமர்ந்து விட்டார். அரங்கேற்றம் தொடர்ந்து நடந்து முடிந்தது. அவையோர் பாராட்டினர். வள்ளல் அபுல்காசீம் பண முடிப்பும், அணிகலன்களும் வழங்கி மகிழ்ந்தார். அனைவரும் கலையும் வேளையில் மகனை இழந்த அம்மையார் புதல்வரின் மறைவு குறித்துக் கூறினர். தமிழ்ச் சுவைக்காகத் தாய்க்குலம் காட்டிய தியாகத்தை இது உணர்த்துகிறது.[12]

4. வள்ளல் சீதக்காதி புலவருக்கு மணம் முடித்து வீடமர்த்தி வாழ்ந்துவரச் செய்தார். கீழக்கரையில் நடக்கும் ஒவ்வொரு முஸ்லீம் திருமணத்தின் போதும் புலவரின் மகிமை என $2\frac{1}{2}$ அணு தருமாறு செய்தனர். இது இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.[13]

5. செந்தமிழ்ச் சீருவைப் புலவர் சிந்தை உருகிப் பாடி வரும் போது செம்மல் நபி அவர்தம் கனவில் காட்சி தந்து களிப்பித் தார்கள். ஒவ்வொரு முறையும் உத்தமரைக் கனவில் கண்ட போது ஒவ்வொரு சிறு கல்லை மட்கலத்தில் பெய்து வந்தார். முடிவில் எண்ணிப் பார்க்கும்போது 100 கற்கள் இருந்தன.

---

12. 'அரங்கேற்றம்'–தமிழ்நாடு நாளிதழ் (31-7-59)
உமறு தரும் சீரு, பக்கம் 19–20

13. Muslims contribution to Tamil Literature Page 16
Local tradition has it that there was a custom prevalent among the people in Kilakarai to give two and a half annas to poet Umar on every marriage solemenised in that area. This custom is continued even to this day. The recipient now being his descendant.

இவ்வாறு நூறு முறை நபிகள் நாயகத்தை உமறுப் புலவர் கண்ட காட்சியை எண்ணி, தமக்கும் கிடைக்கவேண்டும் என்று ஏங்கித் தவிக்கின்றார் ஒரு புலவர்.[14]

மறைவு

சிறந்த இலக்கியங்கள் செய்த உமறுப் புலவர் எட்டையாபுரத்தில் ஹிஜிரி 1115-ம் ஆண்டு றபீஉல் அவ்வல் 14-ஆம் பிறையில் மறுமை எய்தினார். இவரது சமாதி எட்டையாபுரத்தில் தென்பகுதியில் அமைந்துள்ளது. எட்டையாபுர மன்னர் இவரது சமாதியில் நினைவுப் *பிரார்த்தனைகள்* நடைபெற ஏற்பாடுகள் செய்தார். பின்னர் பேணுவாரற்றுக்கிடந்தது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் எட்டையாபுரத்தைச் சேர்ந்த பிச்சைக் கோனார் என்பார் உமறுப் புலவர் சமாதி கொண்ட இடத்தில் நினைவுக் கட்டிடம் ஒன்று எடுத்து உமறுப் புலவருக்கு நினைவு விழா எடுத்து வந்தார். கல்வத்து செய்யிது அப்துல் காதிறு நாயகத்தின் சீடர்கள் ஆண்டு தோறும் றபீஉல் அவ்வல் பிறை 14-ல் எட்டையாபுரம் சென்று நினைவுநாள் விழா எடுத்து வருகின்றனர்.[15]

பெருமக்கள் பாராட்டு

இவரது புலமையின் பெருமை உணர்ந்த புலவரும், அறிஞரும் பெரிதும் பாராட்டுகின்றனர்.

1. *" சந்தமுத் தமிழ் தெரி யுங்கல்வித்*
தலைவர் மகிழ் உமறுப் புலவர் "[16]

என்று சிந்து பாடுகின்றது சீதக்காதி நொண்டி நாடகம்.

2. *" செந்தமிழ்ப் பாவலன் சீருப்புராணம்*
தந்தநற் புலவன் சிந்தனைக் கினியோன்
உமறுப் புலவனென் றுரைசால் வித்துவான்
அருமை அளவில தாமே !

---

14. முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பக்கம், 83
செந்தமிழாலே சீரு சிறப்புடன் பனுவல் செய்தே
உந்திய புகழ் பெற்றோங்கும் உமறெனும் புலவோர்க் கன்பாய்
தந்தைபோல் வந்து நூறு தரிசனம் கொடுத்த பான்மை
அந்தலை தினத்தி னேர்வீர் அகுமது நபியுல்லாவே.

15. உமறுப்புலவர் சிறப்பு மலர், பக்கம் 20

16. சீதக்காதி நொண்டி நாடகம்–பாடல் 185

....

அருளே பொருளாய் அன்பே சொல்லாய்
ஆர்வமே பண்ணாய் அறிவே பயனாய்
பூவழ குடனே புதுமணம் போலத்
தேனிசை தழைத்த தெய்வக் கவிதை
சீர்பெறும் புராணம் சீறப்புராணம்
அளித்தான் கவிமணி''

என்று ஏற்றிப் போற்றுகிறார் சுத்தானந்த பாரதியார்.[17]

3. ''செந்தமிழாலே சீறு சிறப்புடன் பனுவல் செய்தே
உந்திய புகழ்பெற் றோங்கும் உமரெனும் புலவோர்''

என்று மகுதூம் முகம்மது புலவர் போற்றுகின்றார்.[18]

4. ''செந்தமிழ்ச் சீறு சிறப்புடன் ஈந்த
விந்தையார் உமரின் வித்தைதா அல்லாஹ்''

என வேண்டுகின்றார் இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர்.[19]

5. ''உமறுப் புலவர்—இனிய செந்தமிழ்ப் பாடல்களால்
சீறுப் புராணம் பாடத் தொடங்கினார்''

எனக் கூறுகிறார் டாக்டர் மு. வரதராசனார்.[20]

6. ''செந்தமிழ் நாடுபுகழ் திகழெட்டையாபுரத்தில்
வந்த உமறுப் புலவன்''

எனப் புகழ்கின்றார் பிரான்மலைச் சாமிதாசன்.

---

17. உமறுப்புலவர் சிறப்பு மலர், பக்கம் 19.

18 முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள், பக்கம் 83

19. இறையருள் மாலை–பேராசிரியர் கா. அப்துல்கபூர், பாடல் 194

20. தமிழ் இலக்கிய வரலாறு–டாக்டர் மு. வ. பக்கம் 224

புலவரின் படைப்புக்கள்

1. சீருப் புராணம்

உமறுப் புலவர் இயற்றியுள்ள இலக்கியங்களிலே சிறந்தது சீருப்புராணம். இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களிலேயும் இது தலைசிறந்து விளங்குகிறது.[21] முஸ்லீம் பெருமக்களால் பெரும் பாலும் விரும்பிப் படித்துச் சுவைக்கும் பேரிலக்கியமாகும். பௌத்தத்துக்கு மணிமேகலையும், சமணத்துக்குச் சீவக சிந்தா மணியும், சைவத்திற்குப் பெரியபுராணமும், வைணவத்திற்குக் கம்ப ராமாயணமும் அமைந்து இருப்பதுபோல், இஸ்லாத்திற்குச் சீருப்புராணம் சிறப்பாகக் கருதப்படுகிறது.

பெயர்

இந்நூலின் பெயர் சீரு, புராணம் என்னும் இரு சொற்களால் ஆகியது. சீறத் என்னும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவமே சீருவாகும். வாழ்க்கை வரலாறு என்னும் பொருளைத் தரும். ஆனால் இங்கு நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பதையே குறிக்கும். புராண என்னும் வடசொல்லே புராணம் எனத் தமிழில் வழங்குகின்றது. இது புனித கதை என்னும் பொருள் கொண்டது. ஆதலின் இத் தொடர் நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய புனிதமான கதை கொண்டது என்னும் பொருளைத் தரும். இடைக்காலத்தில் புராணம் என்னும் சொல் தமிழ் இலக்கிய உலகில் பெரும் செல் வாக்கினைப் பெற்றது. பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், அரிச்சந்திர புராணம் முதலிய மக்களால் விரும்பிப் பேணப் பட்டன. ஆதலின் இக்காலப் பகுதியில் தோன்றிய உமறுப் புலவரும் தமது காப்பியத்திற்கு இப்பெயரினை இட்டுள்ளார்.

இக்காப்பியம் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்

---

21. 'The most important of the Muslim Epics is Cira-p-puranam which is held in great esteem by the Muslims of the Tamil Country' Muslims contribution to Tamil Literature by M. M. Uurise page 15

களையும், 92 படலங்களையும், 5027 பாடல்களையும் கொண்டுள்ளது. விலாதத்து என்னும் அறபுச் சொல், பிறப்பு எனும் பொருளைத் தரும். இம் முதல் காண்டம் நபிகள் நாயகம் அவர்களின் பிறப்பு வளர்ப்புப் பற்றிக் கூறும். இரண்டாவது காண்டத்தின் பெயர் நுபுவ்வத்துக் காண்டம் ஆகும். இது நுபுவா என்பதன் மரூஉவாகும். இக்காண்டத்தில் நுபுவா என்னும் அறபுச் சொல் தூதுத்துவம் (தீர்க்கதரிசனம்) எனும் பொருள் தரும். இக்காண்டத்தில் நபிகள் நாயகம் தூதுத்துவம் பெற்று மக்காவிலிருந்து புன்னெறி படர்ந்து துன்புற்ற மக்களுக்கு நன்னெறி காட்டியதனைக் கூறும்.

ஹிஜ்றத் எனும் அறபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருளாகும். ஆதலின் மூன்ருவதாகிய ஹிஜ்ரத் காண்டத்தில் மக்காக் குறைஷிகள் இழைத்த கொடுமைகளால் நபிகள் நாயகம் பிறந்த பதியை விட்டு மதிஞவிற்கு வந்ததும், அங்கிருந்து மக்கட்கு வழிகாட்டிய வகையும்பற்றிக் கூறுகின்றது.

சில சிக்கல்கள்

பிற தமிழ்ப் பெருங் கவிஞர்கள் தங்களின் காப்பியங்களைப் படைப்பதற்குப் பெற்றிருந்த வாய்ப்பும், வசதியும், உரிமைகளும், உமறுப் புலவர்க்குக் கிடைக்கவில்லை. கம்பர் தமது காப்பிய நாயகனுகிய இராமனைத் தம் விருப்பம்போல் கற்பனை வண்ணத்தில் அற்புதமாகத் தீட்டிக் காட்டுகின்ருர். திருத்தக்க தேவரும், இளங்கோவும், சாத்தனுரும் இவ்வாறே தங்களின் காப்பியத் தலைவர்களை வண்ணக் கவிதைகளில் வடித்துக் கூறுகின்றனர். ஆனுல், உமறுப் புலவருக்கோ சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

1. நபிகள் நாயகம் வரலாற்றுப் புனிதராக விளங்குகின்ருர்கள். இவர்களின் வாழ்வும் வாக்கும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2. 'இறைவனே வணக்கத்திற்குரியவன்; நபிகள் நாயகம் இறைவனின் திருத்தூதர்' என்பதே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை ஆகும். இதற்கு மாறுபடாமல் இலக்கியம் இயற்ற வேண்டும்.

3. நபிகள் நாயகம் அவர்களைக் குறைத்துக் கூறினாலும், கூட்டிக் கூறினாலும் இஸ்லாமிய சமுதாயம் ஏற்காது.

4. அறபு, தமிழ் ஆகிய இரு சமுதாய மரபுகளை இணைத்துப் பாட வேண்டிய இன்றியமையாமை. அறபு மொழியிலுள்ள செய்திகளையும், அறபுப் பண்பாட்டையும் அருந்தமிழ் மொழியில் அமைத்தல் வேண்டும்.

5. இடப் பெயர்களும், காப்பியப் பாத்திரப் பெயர்களும் கொள்கை நுட்பக் குறிப்புக்களும் அறபுச் சொற்களிலே அமைக்க வேண்டிய அவசியம்.

6. நபிகள் நாயகம் 40 வயதான விதவை கதிஜா நாயகியாரை மணந்தார்கள் என்பது வரலாறு. ஆனால் காப்பியத்திலோ காதல் மரபுகளைப் போற்றியாதல் வேண்டும்.

மரபு போற்றுதல்

இவ்வாறு வரம்புகட்குட்பட்டு இரு சமுதாய மொழி வழக்குகளை இணைத்து வண்ணக் கவிதைகளில் காப்பிய மாளிகையினைக் கவினுறக் கட்டும் பொறுப்பினைச் சிறப்பாகச் செய்து விடுகின்றார் புலவர். கன்னித் தமிழ்க் காப்பிய மரபுகளைத் தம் காப்பியத்தில் போற்றிப் பேணுகின்றார்.

1. வாழ்த்து, வணக்கம் வரு பொருளுரைத்தல் இவற்றுள் ஏதேனும் ஒன்று முதலில் அமையவேண்டும் என்று கூறும் தண்டியலங்காரம்.[22] சீறாப்புராணக் காப்புச் செய்யுளில், ''...... வளர்காவல் முதலவனைப் பணிந்துன்னி வாழ்த்துவாமே''[23] என அமைந்துள்ளதில், வணக்கம் வருபொருளுரைத்தல், வாழ்த்து ஆகிய மூன்றும் பொருந்தியுள்ளன. மனம் மொழி மெய்களால் நிகழ்த்தும் திரிகரண வணக்கமாகவும் அமைந்து நிறைவு பெறுகிறது.

2. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருட்கள் பயப்பதாக இருக்க வேண்டும்.[24] சீறாவும் இந்நான்கு உறுதிப்

22. தண்டியலங்காரம் சூத்திரம்–8
23. ,, ,, –8
24. ,, ,, –8

பொருள்களையும் பயக்கவல்லது என்று இந்நூலை முதலில் பதிப்பித்த புலவர் நாயகம் செய்கு அப்துல் காதர் நைய்னார் லெப்பை ஆலிம் கூறுகிறார்.[25] அறம், பொருள், இன்பங்களை இந்நூல் நுவல்கின்றது. வீடு சிந்தையும், மொழியும் செல்லா நிலைமைத்து ஆதலின் இதனைக் காரண வகையால் இந்நூல் இயம்புகின்றது.[26]

3. தன்னேரில்லாத் தலைவரைக் கொண்டு இந்நூல் திகழ்கிறது.[27]

4. ஆறு, மலை, நாடு, நகரம், பருவம், சூரிய சந்திரன் முதலியவற்றின் இயற்கை வருணனைகள் இதன்கண் எழிலுடன் அமைந்துள்ளன.[28]

5. திருமணம், மக்கட்பேறு முதலிய இல்லறச் செய்திகளும் இயம்பப்படுகின்றன.[29]

6. தூதுவிடுதல், போர் புரிதல், வெற்றியடைதல் முதலிய அரசியல் செய்திகளும் அழகுற அமைந்துள்ளன.[30]

7. பாடல்கள் படலங்களாகவும், காண்டங்களாகவும், பகுத்துத் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன.[31]

---

25. இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்—இலங்கை அரசு வெளியீடு 1968, பக்கம் 133
"..........சீறுவென்ன
முதனூல் நாமமே நாட்டி முதுபயன்
அறம் பொருள் இன்பம் வீடனைத்து மடங்கிய
திறம் பெருங் காப்பியஞ் செய்தனர்"
—சீறுப்புராண முதற்பதிப்புச் சிறப்புரை.

26. திருக்குறள் பரிமேலழகர் உரை—அறத்துப்பால் உரைப் பாயிரம்
'அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா
நிலைமைத் தாகலின் துறவறமாகிய காரணவகையால்
கூறப்படுவதல்லது இலக்கண வகையர் கூறப்படாமையின்
நூல்களால் கூறப்படுவன ஏனைய மூன்றுமே யாம்'

27. தண்டியலங்காரம் சூத்திரம் —8

28. „ „ —8

29. „ „ —8

30. „ „ —8

31. „ „ —8

தனிச் சிறப்பு

இவ்வாறு தொன்றுதொட்டு வரும் மரபுகளைப் போற்றினால் மட்டும் போதுமா? பிறரைப் பின்பற்றும் தொண்டராகத்தானே இருக்க முடியும். பிறர் பின்பற்றும் தலைமைப் பண்பு—தனித் தன்மை உமறுப் புலவரிடம் அமைந்து உள்ளன.

1. பிற தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளரை வாழ்த்தி, வணங்கித் தொடங்கும் மரபினைக் காணு கின்றோம். ஆனால் உமறுப் புலவர் காப்பியத்தில் உவமையிலா ஒருவனையே வாழ்த்தி வணங்கும் அமைதி காணப்படுகிறது.[32]

2. காப்பியத் தலைவரையும், தலைவியரையும் அன், அள் விகுதிகளிட்டு அவன் அவள் என்றமைப்பதே சீறாவிற்கு முன்னுள்ள காப்பியக் கவிஞர்களின் பெரும்பான்மை மரபாகும். உமறுப் புலவரோ தம் காப்பியத் தலைவரையும், தலைவியரையும், அர் விகுதி சேர்த்தே சிறப்பிக்கின்றனர். அத்துடன் நாயகத் தோழர்களையும் அவ்வாறே உயர்வு சிறப்பு விகுதி சேர்த்துப் பாடு கின்றனர்,

3. இஸ்லாமிய தத்துவ நுட்பங்களைப் பொருள் நிறைவுடன் தரும்பொருட்டு அறபுச் சொற்களை ஆங்காங்கே ஆளுகின்றார். காட்டாக: அல்லாஹ் றப்பு, ஈமான், தீன், கலிமா, குபுர் முதலிய பெயர்களுக்கும், சொற்களுக்கும் நிகராகப் பொருள் நிறைவுதரும் தமிழ்ச் சொற்களை அமைப்பது அருமை. இவ்வாறு உமறுப் புலவர் தோற்றுவித்த மரபுகளை இவர்க்குப் பின்வந்த முஸ்லீம் புலவர் பெருமக்கள் போற்றி வரலாயினர்.

நாட்டுப்பற்று

உமறுப் புலவர் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மிகுந்து காணப்படுகின்றார்.

1. இவர் மரபு வழித் தமிழ்ப் புலவர் போன்று ஆடை, ஆபரணங்கள் அணிந்து திகழ்ந்தார் என்று இவரைப் பற்றி வழங்கும் செய்திகள் கூறுகின்றன.[33]

---

32. கடவுள் வாழ்த்துப் படலம் (சீறாப்புராணம்)

33. சீறாப்புராணம் (1919) பக்கம் 704, 705.

'புலவரவர்கள் பாளயப்பட்டு இராஜ சமஸ்தான பழக்கம்போலே கிர்தாமீசை வைத்துத் தாடியை வெட்டியிருப்பதோடு தந்த பந்தியிற் காவி

2. அறபு நாட்டில் தோன்றிய அண்ணலாரின் வரலாறு கூறியபோதிலும், இவர் காப்பியத்தில் தமிழ் மணம் கமழ்கின்றது. அறபுப் பாலை வனத்தைக் காட்டவந்த புலவர் அழகுத் தமிழ்ச் சோலையாகத் தீட்டிவிடுகின்றார். ஆற்றுப் பெருக்கும் நானிலப் பாகுபாடும் நன்கு அமைந்துள்ளன. தமிழ்நாட்டு மரங்களும் செடி கொடிகளும், பயிர்களும் செழித்து, தழைத்துப் பயன் தருகின்றன. தமிழ்நாட்டுக் குறவரும் மறவரும் மன்னவரும் காணப்படுகின்றனர். மக்கமா நகரம் மதுரை போன்றே தோன்றுகிறது என்று டாக்டர் மு. வரதராசனார் கூறுகின்றார்.[34] கோலமிடல், ஆரத்தி எடுத்தல், தாம்பூலம்தரித்தல், திலகமிடல் போன்ற தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள் போற்றப்படுகின்றன. எனவேதான் டாக்டர் மு. வரதராசனார் சீறாப் புராணத்தில் புலவரின் தமிழ்ப்பற்று விளங்குவதுடன், பழைய தமிழ் நூல்களில் தோய்ந்த தமிழ் உள்ளம் விளங்குகின்றது என்று கூறுகின்றார்.[35]

இனிய இணைப்பு

அறபு நாட்டில் தோன்றி அண்ணலாரின் வாழ்க்கையினைத் தாய்த் தமிழால் கூறுவதால் இரு நாட்டுப் பழக்க வழக்கங்களும் இணைகின்றன. காட்டாக: பாத்திமா நாயகியாரின் திருமணச் செய்தியினை மதினா மாநகர மக்களுக்கு (ஒட்டகையின் முதுகில் அமர்ந்து) வள்ளுவன் முரசறைந்து தெரிவித்து, பழமணல் மாற்றி, புதுமணல் பரப்பி வீட்டு முற்றங்களில் கோலங்கள் இட்டும் அலங் கரிக்குமாறு கூறுகிறான்.[36] வள்ளுவன் முரசறைந்து தெரிவித்தல்

யிட்டும் கை கால் நகங்களுக்கு மருதாணியிட்டும் கைகளின் முண்டாவில் ஷாஜுபந்துபட்டியும் பொன்னரை ஞாணிட்டும் சுரிகையினா லாகிய முறுக்குத் தலைப்பாகை கட்டியும் மாறுதாய்பாய்ச்சியுடை யுடுத்துமிருப்பதை நாயகமாகிய ஷைகு சதக்கத்துல்லா சாகிபொலியவர்கள் கண்டு மிகவும் கோபமாகிக் காபிரீன்களுடை யுடுத்தியிருக்கிற இவரா நபிநாயகமவர்களி னியற்கை செயற்கைகளான சீறாவைப் பாடுவாரென்று கடுகடுத்த வார்த்தை யாகச் சொன்னார்கள்.

34. தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 225

35. தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 225

36. 'எடுத்த பேரொலி முரசொடு மொட்டகத் திருந்து'
—சீறாப்புராணம், பாத்திமா திருமணப்படலம்—69
'முரசறைந்தவள் ளுவர்தெறுத் தலைதொறும் மொழித்த'
—பாத்திமா திருமணப் படலம்—76

பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புதல் கோலமிடுதல் முதலியன தமிழ் மரபுகள். யானையின் முதுகிலிருந்து முரசறைவது தமிழ் இலக்கிய மரபாகும். பாலைவனக் கப்பல் எனப் பாராட்டப்படும் ஒட்டகையின் மீதிருந்து அறைவதாகக் கூறுவது அறபு வழக்க மாகும்.[36]

முன்னோர் போற்றுதல்—கம்பராமாயணம்

முன்னோர்தம் சொல்லும் பொருளும் பொன்னேபோல் போற்றுகின்றார் புலவர். உமறுப் புலவரின் நாட்டுப் படலமும், நகரப் படலமும் கம்பர் காவியத்தை நினைவூட்டுகின்றன. மலையி லிருந்து வளங்களை வாரிக்கொண்டு வரும் ஆற்றை விலை மகளாகக் கூறுவார் கம்பர். உமறும் மலைமீதிருந்து வீழ்ந்து அங்கிருக்கும் வளங்களை வாரிப் பெருகிவரும் அருவியை விலை மாதாகக் காட்டுகின்றார்.[37] உமறு ஆற்றினை வணிகனாக வர்ணிக்கின்றார். கம்பரோ, கடலை வணிகனாகக் காட்டு கின்றார்.[38] மிதிலை நகரக் கொடி ராமனை வரவேற்பதாகக் கம்பர்

---

37. ‘தலையு மாகமுந் தாழுந் தழீஇய தன்
நிலை நிலாதிறை நின்றது போலவே
மலையிலுள்ள வெலாங் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தல் வெள்ளமே’

—கம்பராமாயணம், ஆற்றுப்படலம்—8

மலையெறு மரசன் வுண் புயங்களைத் தழுவி
மகிழ்ச்சி செய்தவ னுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னு முரக செம்மணியு
நித்திய ராசியுங் கவர்ந்து
தொலைவிலாப் பண்டமனைத்தையும் வாரிச்
சுருட்டியே யெல்லைவி டகலும
விலைமகள் போன்றுப் பலபல முகமாய்
வெள்ளரு வித்திரள் சாயும்”

—சீறுப்புராணம், நாட்டுப்படலம்—9

கிடந்த சந்தனங் காரகில் கிளைமணி......

—சீறுப்புராணம், நாட்டுப்படலம்—12

38. கம்பராமாயணம், ஆற்றுப்படலம் —பாடல் 7

கூறுகிறார்.[38a] உமறும் ஷாம் நகரக் கொடி, நாயகத்திற்கு நல்வரவு தருவதாகக் காட்டுகின்றார்.[38b] தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தமது காப்பியத்துள் பத்து இடங்களில் கம்பர் பாராட்டுகின்றார். உமறும் தம்மை ஆதரித்த அபுல்காசீம் வள்ளலை 22 பாடல்களில் பாடிப் பரவுகின்றார்.

திருக்குறள்

திருக்குறள் மணிகள் சீறாப் புராணப் பாடல்களில் அமைந்து அணி செய்கின்றன. நபிகள் நாயகம் வாணிபம் செய்து பொருளீட்ட வேண்டும் என்று தங்களின் வளர்ப்புத் தந்தையிடம்

"மிடித்தவர் பெரியராதல் மிகுபுகழ் கிடைத்தல் கையில்
பிடித்திடும் பொருளதன்றிப் பிறிதிலை உலகத்தன்றே"[39]

எனக் கூறுவதில்,

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்"[40]

எனும் குறள் கருத்து அமைந்துள்ளது.

"அடுத்தவை காட்டுகின்ற பளிங்குபோ லகத்தினூடு
கொடுத்திடு நளிதலியாவு முகத்தினுற் றேருறக்கண்டு"[41]

எனும் சீறாப் புராணப் பாடல் பகுதியில்

38-a. மையறு மலரி னீங்கி
யான்செய் மாதவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா

38-b. செவந்த பாதபங் கயநபி திருநகர்ப் புறத்துக்
கனிந்த கார்குடை நிழலிட வதுவது கண்டு
நிவந்த வெண்சுதைப் பலிக்குமே னிலைவயி னின்று
குவிந்த கைவிரித் தழைத்தபோ லசைந்தன கொடிகள்

39. சீறாப்புராணம், பாதை போந்த படலம்—5

40. திருக்குறள் (பொருள் செயல்வகை) – 751

41. ஹிஜிரத்துக் காண்டம் 27 : 113

" அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் "[42]

எனும் குறளின் சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளன.

இவ்வாறே சீவக சிந்தாமணி[43] குறுந்தொகை[44] முதலிய இலக்கியங்களின் கருத்துக்களும், தொடர்களும், சீருப் புராணத்தில்அமைந்துள்ளன.

வரலாறும் வண்ணக்காப்பியமும்

நபிகள் நாயகம் அவர்களின் வாழ்வு வரலாற்றில் பதிவாகியுள்ளது எனக் கண்டோம். நடந்தவற்றை அப்படியே நவில்வது கவிதையும் ஆகாது. அதில் கற்பனையும் மலராது. உணர்ச்சி, கற்பனை, ஒலி நயம், வடிவம் முதலியன சிறந்து அமைந்தால்தான் சிந்தை அள்ளும் கலைத்திறனைப் பெறும். ஆதலின் கவிஞர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பனை வண்ணத்தில் தோய்த்துக் கவிதை ஓவியங்களாகத் தீட்டி விடுவார். இவ்விலக்கியக் கலையில் உமறுப் புலவர் பெரிதும் வெற்றி பெற்றுவிடுகின்றார்.

---

42. திருக்குறள் (குறிப்பறிதல்) 766

43. சீருப்புராணம் நாட்டுப்படலம் – 49

மறிந்து தூங்கிய நாவலின் கனியையோர் மங்கை
யெறிந்து பார்மது கரத்தினைக் கரத்தினு லெடுப்ப
பறிந்து போதலிற் றுணிக்கின்கை புதறிமெய் பதறிச்
செறிந்து ஆழ்தரச் சொரிந்தமைக் கனியையுந் தீண்டாள்.

44. "பஞ்சணை பொருந்தா ரிருவிழி துயிலார்
பழத்தொடு பாலமு தருந்தார்
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
கொழுமடற் செவிக்கிசை கொள்ளார்
சஞ்சமென் மலர்த்தாள் பெயர்ந்திட வுலவார்
கடிமண வாச நீராடார்
வஞ்சிநுண் ணிடையர் தம்மிடத் துறையார்
முகம்மது மனத்திடத் துறைந்தார்"

—சீருப்புராணம் கதிஜா கனவு கண்ட படலம்–19.

பாலும் உண்ணுள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள்.

—குறுந்தொகை – பாடல் 231.

எனினும், வரலாற்றில் வரையறுக்கப்படாத பல அற்புத நிகழ்ச்சிகளைப் புலவர் அழகுறக் கூறுகின்றார். பாம்பும்[45] புலியும்[46] பேசியது. மானுக்குப் பிணை நின்றது[47] மதியை அழைத்தது[48] தசைக் கட்டியைப் பெண்ணுருவாக்கியது[49] முதலிய இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இடைக்காலத் தமிழ் மக்கள் இயற்கை கடந்த நிகழ்ச்சிகளில் மிகுந்த ஈடுபாடு காட்டியதே இதற்குக் காரணம்.

தசைக் கட்டியைப் பெண்ணுருவாக்கியதற்கு வேறு ஒரு காரணமும் புலனாகின்றது. முஸ்லீம் பெருமக்கள் நபிகள் நாயகம் அவர்களின் மனைவியரை அன்னையரெனப் போற்றுவர். அவர்களின் அருமை மகளாரும் அன்புத் தோழர்களின் மனைவியாரும் அவ்வாறே மதிக்கப் பெறுகின்றனர். ஆதலின் இம் மகளிரைக் கூறும்போது வரம்புகடந்து வர்ணிக்க முடியாது. மங்கை நல்லாரின் அங்க அழகுகளைக் கேசாதி பாதமாகவும், பாதாதி கேசமாகவும் வர்ணிப்பது கவிஞர் மரபாகும். இதனை ஈடு செய்வதற்காகவே தசைக் கட்டியினைப் பெண்ணுருவாக்கிய படலம் அமைக்கப்பட்டுள்ளது எனலாம். 25 வயது வாலிபராகிய நாயகத்துக்கும் 40 வயது விதவையாகிய கதிஜாவுக்கும் கடிமணம் நடந்தது என்பது வரலாறு. உமறுப் புலவரோ காப்பிய மரபைப் போற்றும் பொருட்டுக் கதிஜாவைக் கன்னிப் பெண்ணாக மாற்றிக் காதல் காட்சிகளைக் கட்டுக்கு உட்பட்டு அமைத்துக் கடிமணம் நடத்தி வைக்கிறார்.

காப்பிய நலம்

சீறாப் புராணம் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்து கற்பனை வளமும், கவிதை உணர்ச்சியும் சிறந்து அணி நலமும் வர்ணனைத் திறனும் பொலிந்து காப்பிய நலமெலாம் கனிந்து விளங்குகின்றது.

---

45. சிறுப்புராணம் விலாதத்துக் காண்டம் – பாந்தள் வதைப்படலம் பாந்தள் பேசிய படலம்.
46. புலிவசனித்த படலம்.
47. மானுக்குப் பிணைநின்ற படலம்.
48. நுபுவ்வத்துக் காண்டம் – மதியை யழைப்பித்த படலம்.
49. ,, தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம்.

காப்பியத்தின் உயிரோட்டம்

காப்பியத்திற்கு இன்றியமையாத பாவிகம் சீறுப் புராணம் எங்கும் பரவிப் பரவசமூட்டுகின்றது:

'பாவிகம் என்பது காப்பியப் பண்பே'[50]

எனக் கூறும் தண்டியலங்காரம். இது காப்பியம் முழுவதும் ஊடுருவிக் கலந்து செல்லும் இயல்பினது. நபிகள் நாயகத்தின் பிறப்பு வளர்ப்பை, வளர்ந்த வகையினை வடித்துக் கூறவந்த வண்டமிழ்ப் புலவர் வையத்தின் வள வாழ்வையே—நானிலத்தின் நன்மையையே—உலக மக்களின் உயர்வையே உணர்த்திச் செல்லுகின்றார்.

"ஆதரம் பெறுக நல்வழிப் பொருளாய்
அகமது நபிதோன் றினரே"[51]

என்றும்,

'எம்மனைக்கும் பேறென வரும் பொருளாய்
இசைத்திடும் திங்களி ராவில்
மும்மை யென்றுரைக்கும் புவனமும் புரந்த
முகமது நபி பிறந்தனரே'[51a]

என்றும்,

'மாநிலம் தனக்கோர் மணிவிளக்கெனலாய்
முகம்மது நபி பிறந்தனரே'[52]

என்றும் நபி அவதாரப் படலத்திலே புலவர் பாடி மகிழ்கின்றார். 118 பாடல்களுக்கப்பால், அலிமா வீட்டில் நாயகக் குழந்தை அழகு ஒழுகத் தளர்நடை பயிலும் அருங் காட்சியைக் கூறவந்த கவிஞர்,

'எந்நில மனைத்தும் தீனெறி நடப்ப
இயல்பெறு மனுநெறிநடப்ப
துன்னிய அறத்தின் துறைவழி நடப்ப
துன்பமற்று இன்பமே நடப்ப

---

50. தண்டியலங்காரம் சூத்திரம் 91
51. நபியவதாரப் படலம் பாடல் 86
51a. ,, ,,
52. ,, ,, 92

பன்னருஞ் செங்கோல் உலகெலாம் நடப்ப
பாரினில் குலமுறை நடப்ப
மன்னிய ரெவரும் சொற்படி நடப்ப
முகம்மது நபி நடந்தனரே' [53]

என்று இயம்புகின்றார்.

இவ்வாறே இப் படலத்துள் நாயகக் குழந்தை மழலை வழங்கியது குறித்தும்[54] நாளொரு மேனியாக வளர்ந்தது குறித்தும் பாடும்போதும்[55] உலக நன்மைகள் விளங்கியதாகவும், வளர்ந்ததாகவும் கூறிக் களிக்கின்றார். 836 பாடல்களுக்குப் பின்னரும், மறந்து விடாமல் இத் தலைமைக் கருத்தைத் தொடர்ந்துரைக்கின்றார். நபிகள் நாயகம் அவர்களும் கதிஜா நாயகியும் கடிமணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்ததை நவில வந்த புலவர்,

'மக்கமா நகரும் செல்வமும் வாழ
மறைவலார் அறநெறி வாழ
தக்கமெய்ப் புகழும் கிளைஞரும் வாழ
தரணிநாற் றிசையிலும் வாழ
மிக்கநன் னெறிநேர் முகம்மதும் சிறந்த
விரைகமழ் மதுரமுற் றிருந்த
இக்குமென மொழியா ரெனுங் கதிஜாவும்
இனிதுறப் பெரிதுவாழ்ந் திருந்தார்'

என உலகம் வாழ இருவரும் உவகையுடன் வாழ்ந்திருந்தனர் என்று பன்னூற்றுக் கணக்கான பாடல்களுக்குப் பின்னரும் பாடி மகிழ்கின்றார்.[56] நபிகள் நாயகம் அவர்களுக்கு நபித்துவம் வந்த செய்தியினைக் கூறும்போதும்,

'மண்டலம் புரக்கும் செங்கோல் முகம்மது'

என்று குறிப்பிடுகின்றார்.[57] நாட்டுப் படலத்தில் காப்பிய நாயகரின் நாட்டு வளத்தை நவில்வதுடன் நாட்டு மக்கள் இன்புற

53, அலிமா முலையூட்டுப் படலம் 86
54. ,, ,, ,, 87
55. ,, ,, ,, 88
56, கடிமணம்புரி படலம் பாடல் 119
57. நபிப்பட்டம் பெற்ற படலம் 21

வாழும் இனிய லட்சியத்தையும் புலப்படுத்துகின்றார். வளங் கொழிக்கும் நாட்டை வர்ணித்து வந்த உமறுப் புலவர்,

‘நினைக்கும் பொற்பொருளே நித்தனை மற்றோர்
நிந்தனை சிந்தனை இலையே
இனக்கருஞ் சுரும்பு மதுத்துளி அருந்தும்
இவையல்லால் மதுப்பிறி திலையே
சினக்கரி முனைக்கோட் டிளமுலைப் புலவி
திருத்தும் பொய்யலது பொய்யிலையே
வனக்கனி கருத்த குலைக்கள வலது
மறுத்தொரு கொலைகள விலையே’ [58]

எனப் பாடிப் படலத்தை நிறைவு செய்கின்றார். விரும்பும் செல்வம் மிகுந்திருப்பதால் மக்கள் பொருளை வெறுக்கும் நிந்தனை ஒன்றே தவிர வேறு நிந்தனையான சிந்தனை இல்லை. வண்டுகள் அருந்தும் மதுவேயன்றி மாந்தர் அருந்தும் மது இல்லை. மங்கையர்தம் ஊடல் தீர்ப்பதில் தோன்றும் பொய்யன்றி வேறு பொய் யில்லை, காடுகளில் கனிந்து வழிப்போக்கர் பறித்துச் சுவைக்கும் குலைக்கு அளவில்லை. வேறு கொலை களவுமில்லை என்று நாட்டு வளம் நவிலும்போது நாட்டு மன வளமும் உணர்த்தப்படுகின்றது. கவிஞர் காண விரும்பும் இலட்சியத திருநாட்டையே இதன்கண் கண்டு இன்புறுகின்றோம்.

3. நபிகள் நாயகத்தின் பிறப்பும், வாழ்வும், நானில மக்களின் முன்னேற்றமே ஆகும். இவ்வாறு காப்பியம் முழு மையும் உலக மக்களின் நன்மையே ஊடுருவிச் செல்வதைப் பார்த்து மகிழலாம். மக்கள் நலத்தை மையமாகக் கொண்டது சிறந்த இலக்கியமாகும். எனினும் அறிஞர் கருத்தை உமறுப் புலவர் அருமையாகப் போற்றுகின்றார்.

கற்பனை

கற்பனை கருத்துக்குக் கலை வண்ணம் தந்து களிப்பூட்ட வல்லது. கவிதைக் கலைக்கு இது உயிர் நிலையாக அமைந் துள்ளது. இயற்கைக் காட்சிகளிலும் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சிகளிலும் கற்பனை வண்ணமூட்டிக் கவின்பெறச் செய்வர் புலவர். இக் கற்பனைத்திறன் சீறாப் புராணத்தில் சிறகடித்துப் பறக்கின்றது.

---

58. நாட்டுப் படலம் 66

நாட்டு வளத்தை நவில வந்த கவிஞர் இனிய கற்பனைக் காட்சிகளை எழிலுற வர்ணிக்கின்றார். மலர்கள், கனிகள், குளம் இவை இயல்பாக அமைந்துள்ளவை. இவற்றுடன் எருமையையும் இணைத்து இனிய காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றார். எருமையின் மடியிலிருந்து பால் வடிகிறது. தேமா, வாழை, பலா முதலிய கனிகளிலிருந்து சிந்தும் தேனுடன் இப் பால் பெருகி குளத்தில் பாய்கின்றது. குவளை மலர் பூத்த குளத்தில் எருமை மூழ்கிக் குளித்து வருகின்றது. அதன் பிளந்த குழம்புகளின் இடுக்குகளில் முத்துக்கள் சிக்கி ஒளி வீசுகின்றன. கரிய எருமையின் காலடிப் பிளவில் சிக்கி ஒளி வீசும் முத்து சந்திர கிரணத்தின் போது பாம்பின் வாயில் பதுங்கியிருக்கும் பால்மதி போல் காணப் படுகின்றது, எனக் குறிப்பிடுகின்றார்.

கனிகள் சிந்திச் சிதைந்த குளத்தில் எருமை சேறுடி வருகிறது. கரிய நிறத்து எருமையும், பொன்னிறம் பெற்றுப் பொலிகின்றது.

> 'தாறு கொண்டபைங் கதலிதே மாப்பலாத் தருதே
> னூறு கொண்டசெங் கனிசிறு கிடங்கிடை யுகுப்பச்
> சேறுகொண்டதிற் கிடந்தருள் செறிகரு மேதி
> வேறு கொண்டுபொன் மேதியின் குலமென விளங்கும்' [59]

தாமாகச் சுரந்து பாயும் எருமையின் பால் கனிகளின் தேன், கால்வைத்த இடத்திலெல்லாம் மிதிபடும் முத்துக்களின் நிறைவு, தனிச்சேற்றில் குளித்து வரும் எருமை ஆகியன நாட்டு வளத்தை நன்முறையில் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு காணும் பொருட்களை அப்படியே கூறாமல் தாம் விரும்பிய வண்ணம் வடித்துக் கூறுவது விழைவுக் கற்பனையாகும்.

ஷாம் நகர வளம் கூறும் பகுதியில் பிறிதொரு வகை கற்பனையினை அமைத்துக் காட்டுகின்றார். வாணிபம் செய்யும் பொருட்டு நபிகள் நாயகம் ஷாம் நகர் நோக்கிச் செல்லும்போது இயற்கைப் பொருட்களெல்லாம் அவர்களுக்கு நல்வரவு கூறுவதாகப் புலவர் வர்ணிக்கின்றார். மரங்களும், செடிகளும், கொடிகளும் நபிகள் நாயகம் அவர்களுக்குச் செய்த வரவேற்பில் நெற்

---

59. நாட்டுப்படலம் 52

பயிர்களும் சேர்ந்து கொள்கின்றன. கழனிகளில் நெற்பயிர்கள் தழைத்து விளைந்து தலை சாய்ந்து அழகும் செல்வமும் திகழக் காட்சி தருகின்றன. இது புலவர்தம் உள்ளத்தில் இல்லறத்துப் பெண்ணொருத்தியின் இயல்பினை நினைவூட்டி விடுகிறது. ஒரு வீட்டில் பிறந்து பிறிதொரு வீட்டில் புகுந்து, சூல் முதிர்ந்து, தன் நாயகனைப் பணிந்து பேணும் கற்புக்கடம் பூண்டவள் அப்பெண். இதனையும் நபிகள் நாயகம் வந்தபோது விளைந்து வளைந்து இருந்த நெற்பயிர்களையும் இயைபுபடுத்தி இனிய காட்சியினை அமைத்து விடுகின்றார்.

> ' ஒருமனைப் பிறந் தொருமனை யிடத்தினி லுறைந்து
> கருவரத்தரித் தீன்றுதன் கணவனை யிகழாப்
> பெருவ ரம்புறும் பெண்கொடி யெனத்தலை சாய்த்துத்
> திருவுஞ் செல்வமும் திகழ்தரக் காண்பன செந்நெல் ' [60]

என உவமை நலந்தோன்ற ஒரு சொல்லோவியத்தைத் தீட்டி விடுகின்றார். இல்லறத்தில் நிகழும் பெண் ஒழுக்கத்தை வயலில் விளைந்து வளைந்து நிற்கும் நெற்பயிருடன் இயைபுபடுத்திக் கூறு வதனுல் இது இயைபுக் கற்பனை வகையைச் சார்ந்ததாகும்.

ஆறு, மலைகள், மரம், செடி, கொடிகள், விண்மதி முதலிய இயற்கை வர்ணனைகளில் எழிலார்ந்த கற்பனை கொண்டு இனிய கருத்துக்களை எடுத்துரைத்த புலவர் செங்கதிரின் தோற்றத்திலும், மறைவிலும், ஏற்றத்தினைக் காட்டுகின்றார். மக்கா குறைகளின் கொடுமை பொறுக்காமல், மதினுவை நோக்கிச் செல்லும் வழியிலுள்ள தௌர் என்னும் குகையில் நபிகள் நாயகம் பகைவர் அறியாமல் தங்குகிறுர்கள். மூன்றும் நாள் காலையில் குகையை விட்டுப் புறப்பட முற்பட்டார்கள். கதிரவனும் அடிவானத்தில் தலைகாட்டத் தொடங்கினன். இங்குப் புலவர் இனிமையான கற்பனையை இயற்கையாக நடக்கும் இந்நிகழ்ச்சியில் அமைத்து விடுகிறுர். "நபிகள் நாயகம் சோலை சூழ்ந்த மக்காவை விட்டு, கொடிய பாலைவனத்தில் வந்து விளங்குவதற்குக் காரணம் என்ன?" என்று அஞ்சி எட்டிப் பார்க்கின்றுன் கதிரவன் எனக் கவிதையில் குறிப்பிடுகின்றுர்.

---

60. ஷாமு நகர் புக்க படலம்: 11

" மட்டு வார்பொழில் சூழ்தரு மக்கமா நகரம்
விட்டு நந்நபி கொடியவெங் கானிடை விளங்க
பட்ட காரண மெவைகொ லென் றஞ்சியுட் பயத்தோ
டெட்டிப் பார்ப்பபோ லெழுந்தன னெடுங்கதி ரிரவி "[61]

தற்குறிப்பேற்ற அணியில் அமைந்துள்ள இப் பாடலில் உட்குறிப்புக்கள் பொருந்தியுள்ளன. மக்காவில் நபிகள் நாயகம் இருந்த போது குறைஷிகள் கொடுமை செய்தார்கள். கல்லாலும், சொல்லாலும் அடித்தார்கள். கழுத்தில் கசையிட்டு முறுக்கினார்கள். உயிருக்கே உலே வைக்கவும் துணிந்தார்கள். பிறந்த பதியை விட்டுப் பெயர்ந்து வந்தபோதும் துரத்தி வந்தார்கள். இப்பொழுது இப் பகை இருள் நீங்கி மகிழ்ச்சி ஒளி ஏற்பட்டது என்பதைக் கதிரவன் தோன்றினான் என்பதை உய்த்து உணரும்படிச் செய்கிறார். இத்துடன் மக்காவில் இருந்தபோது நபிகள் நாயகம் அவர்களின் கொள்கை பரவிவிடாமல் பகைவர்கள் தடுத்தார்கள். மதினாவிற்கு வந்த பின்னரே அவர்களின் அருள்நெறி அகில மெங்கும் ஒளி வீசியது.

கதிரவன் எழுந்ததனால் இருட்படலம் நீங்கி ஒளி பரவியது போல் நபிகள் நாயகம் மக்காவை விட்டுப் புறப்பட்டதனால் குபிர்ப் படலம் (இறை விரோதம்) நீங்கி அருள் நெறி பரந்து சிறந்தது.

இவ்வாறு புலவர் பின்னால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை முன் கூட்டியே தெரிவிக்கும் வகையில் இப்பாடல் அமைந்து இன்பம் செய்கின்றது. இதனை உட்பொருள் என்றும், தொனிப் பொருள் என்றும் கூறுவர்.

சொல்லாட்சி

கவிதை என்பது நெடும் பாடலாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு தொடரிலும், ஒரு சொல்லிலும், ஓர் அசையிலும் கூடக் கவிதை அமையலாம்.

நபிகள் நாயகம் அவர்கள் அவதாரப் படலத்தில், 'நெறி நிலை திரியா மறுண்மதம் மிகுந்த' எனத் தொடங்கும்,[62] பாடல் பலரும் அறிந்ததே. அப்பாடல்,

---

61, ஹிஜ்ரத்துக் காண்டம் – சுருக்கத்துத் தொடர்ந்த படலம் – பாடல் 10.

62. நபியவதாரப் படலம், பாடல் 91

" ......இருளெனும் குபிரின்
குலமறுத்(து) அறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல்
முகம்மதுநபி பிறந்தனரே "

என முடிகிறது.

1. முழுமதி—குளிர்ந்த ஒளி பொருந்தியது. குழந்தைகளும், முதியவரும், காதலரும், கவிஞரும், ஆடவரும் பெண்டிரும் பெரிதும் விரும்பக்கூடியது. நபிகள் நாயகம் அவர்களும் அன்பு ஆதரவு முதலிய இனிய பண்புகளும் கொண்டு எல்லோரும் விரும்பும் இயல்பினராய்த் திகழ்ந்தார்கள்.

2. இருளகற்றி ஒளியூட்டிப் பொருள் காட்டி நலம் பயக்கும் நன்மதி; நபிகள் நாயகம் அவர்களும் இருளெனும் குபிர்க் கூட்டத்தை ஓட்டி அருள் ஒளியூட்டி மெய்ப்பொருள் காட்டும் மேன்மைத் தூதராவார்கள்.

3. கதிரவனிடமிருந்து ஒளியைப் பெற்றுப் பிரதிபலிப்பதே பால்மதியின் பெற்றி என்பது அறிவியல் விளக்கமாகும. நபிகள் நாயகம் அவர்களும் இறைவனிடமிருந்தே அருளொளியைப் பெற்று அவனி மக்களுக்கு அளித்துள்ளார்கள் என்பது இஸ்லாம் கூறும் விளக்கமாகும்.

4. மதியில் மறுவிருப்பது புலவர்க்குப் புரியாமலில்லை. குறைவில்லாமல் நிறைவு கொண்ட நபிகள் நாயகத்திற்குக் கறை கொண்ட நிலவை உவமை காட்டுவாரா? எனவே மறுவிலா தெழுந்த முழுமதி போல என்று இல்பொருள் உவமையில் இயம்புகின்றார்.

5. ஏனைய நபிமார்கள் சாதாரண மதி போன்றவர்கள்· நபிகள் நாயகம் அவர்களோ, நிறைவுடைய முழுமதி போன்றவர்கள், எனவும் எண்ணத் தூண்டுகின்றது. உவமையில் நுட்பமும் ஒட்பமும் பொருந்தி உவகை ஊட்டுகின்றது.

6. இத் தொடரின் சொல்லாட்சி எண்ணி மகிழ்தற்குரியது. தோன்றி, உதித்த, எழுந்த முதலிய சொற்கள் ஒரு பொருளைத் தருவன. இங்கு 'எழுந்த' என்பதிலிருக்கும் பொருளை, உணர்ச்சியை, நிறைவை வேறு எந்தச் சொல்லும் தரமாட்டா. இச் சொல்லாட்சியின் மாட்சியினைச் சொல்வளம் என்பர்.

"கிடந்தொளி பரப்பி வாசங் கொப்பளித்து"[63]

"நிலவு கொப்பளித்திட சிரிப்ப"[64]

"தெள்ளமுதனைய முகம்மது நபி"[65]

"கோதறப்பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வை வாய் அரம்பையர்"[66]

"பேரழகு ஒழுகும் பெண்ணலங்கனியைப்
பிரசமூறியமொழிக் கரும்பை"[67]

முதலிய சொல்வளம் மிகுந்த தொடர்கள் நிரம்ப உண்டு.

அணிகள் கவிதைக்கும் காப்பியத்திற்கும் அழகு ஊட்டுகின்றன. உமறுப் புலவர் தமது காப்பியத்தில் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், இல் பொருள் உவமை, மயக்க அணி முதலிய பல அணிகளை ஆங்காங்கு அமைத்துத் தம் காப்பியத்திற்கு அணி செய்கிறார். 56 பாடல்களைக் கொண்ட நாட்டுப் படலத்தில் 59 அணிகள் காணப்படுகின்றன. இவற்றுள் நாற்பது உவமைகள் அமைந்துள்ளன.

நபிகள் நாயகமவர்கள் பொருள் ஈட்ட விரும்பிச் செல்வம் மிகுந்த கதீஜா நாயகியாரின் பேராளராக வாணிபம் செய்ய முற்படுகிறார்கள். இவ் வாணிபத் தொடர்பு அன்பாக அரும்பிக் காதலாக மலர்கிறது. நாயகமவர்களின் நல்லியல்புகளைச் செவி மடுத்த கதீஜா நாயகியார் விரும்பித் தமது வீட்டிற்கு அழைத்து வரச் செய்தார். கண்கள் சந்தித்தன; இதயங்கள் கலந்தன, நபிகள் நாயகம் அவர்களின் அன்புப் பெருக்கில் ஆழ்ந்துவிட்டார். பின்னர் பிரியா விடை பெற்றுப் பிரிந்து சென்றார்கள். பெண்ணணங்கைக் கண்ணால் நோக்கியும் நோக்காததும் போல் விடை பெற்றுச் செல்லும் நாயகம் அவர்களைக் கடலனைய காரிகையின் கண்ணும் மனமும் பின் தொடர்கின்றன. இந்நிலையில் நபிகள் நாயகம் அவர்களின் நெஞ்சத்தில் தோன்றிய அன்புணர்ச்சிக்கு வடிவம் கொடுக்க விழைகிறார் கவிஞர்.

---

63. நபியவதாரப் படலம் 87
64. ,, ,, ,, 132
65. ,, ,, ,, 101
66. ,, ,, ,, 86
67. விலாதத்துக் காண்டம், மணம்புரி படலம் – 111

ஒளிதிகழும் நபிகள் நாயகத்தின் நெஞ்சம் ஒரு தாமரைத் தடாகம். அத் தடாகத்தில் பூத்து மலர்ந்த தாமரை அவர்களின் காதல் உணர்வாகும். அக் கருத்தெனும் தாமரையில் கதீஜா வெனும் பெடை அன்னம் சென்று தங்கியது. இப் பொருள் கொண்ட உள்ளுறையும் உருவகமும் அமைந்த கவிதை வருமாறு :

" படியினிற் கசியும் செங்கேழ்ப்
பருதிய நிகரொவ் வாத
வடிவெடுத் தனைய வள்ளல்
முகமதி னெஞ்ச மென்னுங்
கடிகமழ் வாவி யூடு
கருத்தெனும் கமல நாப்பண்
பிடிநடை கதீஜா வென்னும்
பெடையன முறைந்த தன்றே "[68]

உவமையும் உருவகமும் அமைந்த இப்பாடலில் எண்ணங் களின் சின்னங்களாகிய தடாகம், தாமரை, அன்னம் முதலிய வற்றை அமைத்துக் காதல் உணர்வின் நிறைவைப் புலப்படுத்து கின்றார்.

உவமையின் செறிவு உருவகமாகும். இவ்வுருவகம் முழுமை பெற்ற முற்றுருவகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு. நபிகள் நாயகம் அவர்களின் மனைவியருள் ஒருவர் ஜைனபு நாச்சியார். இறை யருள் கனிகளைத் தாங்கும் ஏகாம்பு. அன்பு, அறம், கற்பு முதலிய பண்புகள் செறிந்து இலங்கும் பெண்ணரசியார். இவரைப்பற்றி உருவகத்தில் அமைத்துக் காட்டுகிறார் கவிஞர்.

" அன்பெனும் வித்திற் தோன்றி
அறமெனும் சடைகள் விட்டுத்
தன்புகழ் தழைத்துக் கற்பாந்
தனிமலர் செறிந்து நாளும்
இன்பமாய் காய்கள் காய்த்திட
இறையருள் பழுத்த கொம்பே
தென்பயில் ஸிகுசு பெற்ற
ஸெயினபு நாச்சியாரே "[69]

---

68. விலாதத்துக் காண்டம் பாதைபோந்த படலம் – 47

69. ஹிஜ்ரத்துக் காண்டம், ஸைனபுநாச்சியார் கல்யாணப் படலம் – 4

இவ்வாறே அணிகள் பலவும் அமைந்து காப்பியத்திற்கு வனப் பூட்டுகின்றன.

வன்மையான உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் வன்மை யான சொற்களும், மென்மையான உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் மென்மையான சொற்களும், உணர்ச்சிமிக்க இடங் களில் உணர்ச்சி மிகுந்த சொற்களும், இனிமையும் அழகும் மிக்க இடங்களில் நயமான சொற்களும் அமைகின்றன என்பர் இலக் கியத் திறனாய்வாளர். உமறுப் புலவர் ஒலி நயம் மிக்க சொற்களை உணர்ச்சிக்கு ஏற்றவாறு பயன்படுத்துவதில் சிறந்து விளங்கு கிறார். வீரமிக்க ஒருவரைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டும் பாட்டு ஒன்று.

" படி கிடு கிடு என நாகமுடி நெறு நெறு என வாரி
படுதிரை, அறை தாகவே
வடவரை அமைய வான முகடுடைபட, அருத
மழை முகில் சிதறி ஓடவே
அடையலர் கெடிகள் கோடி, இடி படு படலதூளி
அலரியின் உடலில் மூழ்கவே
நடமிடு கடின வாசி மிசைவரு சமரசூர
நரர் புலி அலியை ஓதுவாம் "[70]

என்று வீரத்துடிப்பும் நெஞ்சுறுதியும் கொண்ட ஹஜ்ரத் அலியைப் பற்றிக் கூறும்போது கவிதையும் பீடு நடை போடுகின்றது. இப் பாடலைப் படிக்கும்போது எழும் ஓசைகளே ஹஜ்ரத் அலியின் வீரத்தையும் துடிப்பையும் வெளிப்படுத்துகின்றன. வீர உணர்ச் சிக்கு வல்லோசை தந்த புலவர், காதல் உணர்ச்சிக்கு மெல் லோசை பொருந்தி மென்மை உணர்ச்சி பெருகச்செய்யும் பாடல் ஒன்றை வழங்குகின்றார்.

" பஞ்சணை பொருந்தார் இருவிழி துயிலார்
பழத்தொடு பாலமு(து) அருந்தார் "
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
கொழுமடற் செவிக் கிசை கொள்ளார்
கஞ்சமென் மலர்த்தாள் பெயர்ந்திட வுலவார்
கடிமலர் வாசநீ ராடார்
வஞ்சி நுண்ணிடையார் தம்மிடத் துறையார்
முகம்மது மனத்திடத் துறைந்தார்.[71]

---

70. கடவுள் வாழ்த்துப் படலம் 12
71. கதிஜா கனவுகாண் படலம் 19

இப்பாடலின் நுண்ணிய காதல் உணர்ச்சிக்குப் பொருந்திய மென்மையான சொற்களைப் பெய்து இனியதொரு வடிவம் தந்து விடுகிறார்.

உணர்ச்சி

உணர்ச்சி கவிதைக் கலையின் உயிர் நாடியாகும். இலக்கியத்தில் பலவகையான உணர்ச்சிகள் இடம் பெறுகின்றன. எனினும் மகிழ்ச்சி, வேடிக்கை, மனநிறைவு முதலியவற்றை விட அச்சம், துயரம், கவலை முதலிய உணர்ச்சிகளை உடைய இலக்கியம் விரும்பிப் படிக்கப்படுகின்றது. காதலைப் பாடும் புலவர்கள் காதலரின் இன்ப நிலையைப் பாடுவதைவிட, காதலரின் பிரிவுத் துயரத்தைப் பாடுதலே மிகுதியாக உள்ளது.[72]

உமறுப் புலவர் இவ்வுணர்ச்சிகளை மிகச் சிறப்பாகத் தம் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார். நபிகள் நாயகம் அவர்கள் மீது கழிபெருங்காதல் கொண்ட கதீஜா நாயகியார் தமது காதலரைக் காணாது கசிந்துருகி வருந்துவதாக ஒரு கவிதை அமைந்துள்ளது.

'விம்முறும் ஏங்கிமெய் வருந்தும் வெய்துயிர்த்
தம்மவோ வெனுமுளத் தடக்கி ஆழ்கடல்
மம்மரைக் கடப்பதெவ் வகைகொ லோவெனச்
செம்மலர் முகங்கரிந் திருந்து தேம்புமே"[73]

என உணர்ச்சி பெருகக் கூறுகிறார்.

இப் பாடலில் ஓசைகள் அமைந்து உணர்ச்சியும் கற்பனையும் கலந்து ஒலிநயம் சிறந்து இன்பம் தருகின்றன. இதன்கண் உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம் ஆகியன இயைந்து சிறந்த வடிவம் தோன்றி விடுகிறது. இதில் ஒரு முழுமையினைக் காண முடிகிறது. பிரிவாற்றாமையால் எழுந்த துன்ப உணர்ச்சியைக் கண்டோம். கணவனை இழந்து கதறும் காரிகையின் அவலக் காட்சி ஒன்றையும் காட்டுகின்றார். கருபு என்னும் கவிஞன் கொலையுண்டதைக் கண்டு அவனுடைய இளம் மனைவி துடியாய்த் துடிக்கின்றாள்.

---

72. டாக்டர் மு. வ வின் இலக்கியத் திறன் – பக்கம் 91

73. கதிஜா கனவுகாண் படலம் – 27

" கண்டனள் பதறி வீழ்ந்தன ளாகங்
கலங்கினள் சோர்ந்தன ளறிவு
விண்டன ளுயிர்ப்பு வீங்கினள் பதைத்து
விம்மினள் கதறினள் வெருவல்
கொண்டன லியாவு மறந்தனள் வயிற்றில்
குற்றின ளெற்றினள் பூழ்தி
மண்டினள் புலனு மொடுங்கினள் கண்ணீர்
வடித்தனள் துடித்தனள் மடமான்" [74]

எனும் இப்பாடலில் தலைவனை இழந்து தனித்துயரடைந்த தையலின் துன்ப உணர்ச்சி நம்மையும் துயரத்தில் ஆழ்த்திவிடுகிறது. இதனைப் படிக்கின்றபோது அசோக வனத்தில் இராமனைப் பிரிந்து சோகத்தின் வடிவாக வருந்தும் சீதையின் துயரம் நம் நினைவிற்கு வருகிறது. இவைபோன்ற உணர்ச்சியும் உருக்கமும் அமைந்த பாடல்கள் சீறுவில் பலவுள. எள்ளல், இளமை, பேதமை, மடம் எனும் நான்கினையும் நிலைக்களனாகக் கொண்டு தோன்றும் நகைச் சுவையை நன்முறையில் அமைத்துத் தருகிறார். குரங்கு மனம் கொண்ட குறைஷி ஒருவன் குணக்குன்றாகிய நபிகள் நாயகம் அவர்களைப் பார்த்து கோணவலித்துப் பரிகாசம் செய்கிறான். இரு விழிகளையும் ஒருபுறத்தே ஒதுக்கி உதடுகள் கடைவாயில் பிதுக்கி முகத்தைத் திருகிச் சுளிப்போடு வளைத்து மூக்கைச் சிலிர்த்துக் கழுத்து நரம்புகள் விறைக்க வாய் பிளந்து நாநுனி புரட்டி வரிகள் தோன்ற வலித்து வள்ளல் நாயகம் அவர்களை நோக்கிப் பழித்தான். பெரியோரைப் பழித்தல் பெருமைதருமா ? இச் சேட்டைகள் முன்னைவிடப் பன்மடங்காயின. எதிர்ப் படுகின்ற எல்லோரிடத்தும் மனைவியிடத்தும் கூட வலித்துக் காட்டுகின்ற இப் பழித்தலை ஒழித்துவிடும் வகையறியாது தவிக்கும் பேதை குறித்த சொற்சித்திரத்தைப் படிக்கும்போது நம்மையறியாமல் நகை தோன்றுகிறது.

" இருவிழிக் கறுப்பு மொருபுறத் தொதுங்க
விதழ்கடை வாயிடைப் பிதுங்கத்
திருகுற முகத்தைச் சுரிப்பொடு வளைத்துத்
திகழ்தரு நாசியைச் சிலிர்த்துப்
பெருகிய கழுத்தி னரம்புகள் விறைப்ப

74. கருபு வதைப் படலம் 68

பிளந்து வாய் நாநுனி புரட்டி
வரிவர வலித்து முகம்மதை நோக்கி
மனத்துரு திகழ்ச்சிசெய் தனனல்'' [75]

''பெறுமவரிடத்தும் மனைவி தன்னிடத்தும்
வலிப்பது தவிர்த்திலன் பெரியோர்
மறுகெதிர்ப்படினு முகத்தெதிர் நோக்கி
வலித்திட லொழித்திடான் புதியோர்
சிறுவர்கள் காணி வெவ்விட மனைத்துஞ்
சிதறியே வெருவிடத் திரிவன்
குறைவிலா நபியைப் பழித்தநிந் தனையாற்
குவலயம் பழித்திடத் திரிந்தான்.'' [76]

இப் பாடல்களில் இனிய நகைச்சுவை விருந்து படைத்தளிக்கிருர் புலவர். இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை முதலிய உணர்ச்சிகளும் காப்பியத்துள் சிறந்து அமைந்து சுவையூட்டுகின்றன.

சீருவின் நிறைவு

இதுவரை கண்டவற்ருல் சீருப்புராணம் சிறந்த உணர்ச்சியும் உயர்ந்த கற்பனையும் இனிய ஒலிநயமும் இயைந்து முழுமை பெற்றுச் சொற்சுவை, பொருட்சுவை, அணிநலம், சுவைநலம் முதலியனவும் பொருந்தி அரிய பேரிலக்கியமாகப் பொலிவதனை அறிகின்ருேம். காப்பிய நலமெலாம் கனிந்து விளங்கும் உமறு பயந்த சீருவில் நபிகள் நாயகம் அவர்களின் வாழ்வு முழுவதும் காணப்பெறவில்லை. உறணிக் கூட்டத்தார் படலத்துடன் நின்று விடுகின்றது. ஆனல் உமறுப் புலவர் முழுமையாகப் பாடி முடித்தார் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். அரங்கேற்றம் நடைபெற்ற செய்தி இக் கருத்தை வலியுறுத்துகிறது. பனி அகமது மரைக்காயர் என்பார் நாயக வாழ்வின் பிற்பகுதியை 2145 பாடல்களில் நிறைவு செய்துள்ளார். செய்கு அப்துல் காதிர் நயினர் லெப்பை ஆலிம் புலவர் தமது புத்ஹூஷ்ஷாம் எனும் காப்பியத்துள் முகம்மதியாக் காண்டத்தில் நாயக வாழ்வின் பிற்பகுதியைக் கூறுகிருர். இவ்விரு புலவர்களும் பாடிய பாடல்களைத் தொகுத்துத் தாம் பாடிய பாடல்களையும் இணைத்து ஹாஜி

---

75. நுபுவ்வத்துக் காண்டம் தீனிலை கண்ட படலம் – 100

76. ,, ,, ,, 108

மொன்ஞ முஹம்மது சத்காரி என்பார் "சீருப் புராணம் இரண்டாம் வால்யூம்" என வெளியிட்டுள்ளார். இதன் 72 படலங்களில் 2145 பாடல்கள் காணப்படுகின்றன.

பணிவும் பெருமையும்

இப் பேரிலக்கியம் படைத்தளித்த புலவர் பெருமான் அவையடக்கம் கூறுவது அருமையாக அமைந்துள்ளது. செந்தமிழ் வாணர்முன் தான் கவிபாடுவது பேரரசர்முன் பரம ஏழை எப்படியோ அப்படி என்றும், புயல் காற்றின் முன்னர் ஒரு சிற்றெறும்பு மூச்சு விட்டது போன்றது என்றும், பேரிடி முழக்கத்திற்கு எதிரில் விரல் நொடி நொடிப்பது போன்றது என்றும் கூறுகின்ருர். பணியுமாம் பெருமை என்பதற்கேற்ற நம் பெரும் புலவரிடத்துப் பணிவு அமைந்து பெருமை சேர்க்கிறது.

2. முதுமொழி மாலை

உமறுப் புலவர் பாடிய மற்ருெரு நூல் முதுமொழி மாலையாகும். இது முதிர்ந்த சுவைப் பெருக்காக அமைந்துள்ளது. பக்திச் சுவை மிகுந்து, தேனுகப் பாகாகத் தெள்ளூற்ற அமுதாகத் தித்திக்கும் பாடல்களைக் கொண்டுள்ளது. வள்ளல் நபி நாயகம் அவர்களின் காட்சி வேண்டி ஒவ்வொரு பாடலின் முடிவிலும் முகம்மதை 'என்று காண்குவனே' என்று ஏங்கி ஏங்கிப் பாடி இறுதியில் 'கண்களால் என்று காண்குவனே' என்று முடிப்பதில் புலவரின் தவிப்பையும், துடிப்பையும் காண முடிகின்றது.

> "நானில வாழ்வை நான்மறை வாழ்வை
> நபிகளின் வாழ்வை என்னிதயந்
> தானில வாழ்வைத் தபோதனர் வாழ்வைச்
> சான்றவர் வாழ்வை மேலோகப்
> பானில வாழ்வைப் பாவக வாழ்வைப்
> பதிமதினநகர் வாழ்வைக்
> கானில வாழ்வை முகம்மது நபியைக்
> கண்களால் என்று காண்குவனே"[77]

என்று நெஞ்சுருகிப் பாடும்போது ஊனிலும் உயிரிலும் கலந்து உவட்டாமல் இனிக்கின்றது. இராமலிங்க அடிகளாரின் பாடலில்

---

77. முதுமொழி மாலை, பாடல் 88

காணப்படும் உணர்ச்சியும் தேவாரத் திருவாசகப் பாடல்களில் காணப்படும் உருக்கமும் இப் பாடல்களில் அமைந்துள்ளன.

'மாதவக் கொழுந்து'
'கதிதரும் வழித்துணை மருந்து'
'மறைவளம் பழுத்த நாவேந்து'
'இறையருள் பழுத்த கனி முஹம்மதுவை'
'ஞானக்குமரியைத் தோய்ந்த தோன்றல்'
'தொண்டர்க் கெளிதாய்த் தோன்றும் சுடர்க்கொழுந்து'

முதலிய தொடர்கள் இவர்தம் சொற்சுவையைக் காட்டுகின்றன. செழுந்தமிழ்ச் சுனையில் ஆடிக்களிக்கும் கவிஞர் மெய்ஞ்ஞானத்திலும் மேம்பட்டு விளங்குகின்றார்.

"வெறு வெளியாகிப் பேரொளியாகி
விளங்கும்ஓர் அருவுருவாகி
அறையும் பல்லுயிருமாகி முக்குணமாகி
அலகிலா உலகமைத்தளித்த இறைவன்" [78]

எனும் பகுதியில் 'இறைவனை வஞ்ச வெளியாகவும், பேரொளியாகவும் அருவாகவும் உருவாகவும் பல்லுயிராகவும் ஆகி முக்குணங்களாகி உலகங்களைப் படைத்தளிக்கின்றான்' எனப் பாடித் தத்துவ நுட்பங்களைப் புலப்படுத்துகின்றார்.

"புரைதரச் சிறந்த வாம்பலின் முளரி
பூத்ததை மாவதைத் ததுபோல்
இருவினை வாயு நாடிதோத்ராதி
இராகவாக் காதி சத்ததி
விதிதரு மவத்தைக் கரணமைங் கோசமெய்ஞ்
ஞானவா லறிவினல் சுட்டுக்
கரையிலா னந்தக் கதியிடத் தமர்ந்த
முஹம்மதை என்று காண்குவனே!" [79]

எனும் பாடலில் குற்றமறச் சிறந்து மலர்ந்த ஆம்பலையும், தாமரையையும் எருமை அழிப்பது போல் இரு தீவினைகளும் பிராணன் அபாணன் முதலிய பத்துவித வாயுபந்தங்களையும், இடைபிங்கலை

78. முதுமொழிமாலை 38
79. „ „ 66

சுழிமுனை முதலிய பத்துவகை நாடிகளையும் மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிய ஐம்பொறிகளையும், அவா மயக்கங்களாகிய ராகங்களையும் வாக்கிந்திரியம் முதலிய வாக்காதி ஐந்தையும் சாரம், செந்நீர் முதலிய ஏழுவகை சத்தாதிகளையும், விரிந்து செல்லும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் ஆகிய அவத்தைகளையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்கள் நான்கையும், அன்னமயகோசம், பிராணமய கோசம் முதலிய ஐங்கோசங்களையும் மெய்ஞ்ஞானமெனும் வாலறிவால் சுட்டு எல்லையில்லாப் பேரின்பக் கதியிடத்து அமர்ந்த முகம்மதை (ஸல்) என்று காண்குவனே என்று கூறு வதில் புலவரின் தத்துவப் புலமை பளிச்சிடுகின்றது.

இந்நூலில் வட சொற்கள் மிகுந்துள்ளன. சீறாவில் காணப் படும் இயற்கைப் புனைவும் கற்பனை வளமும் இதில் பெறமுடிய வில்லை. காரணம் இது நபிகள் நாயகம் அவர்களைக் காணும் வேட்கையால் எழுந்த உணர்ச்சிப் பெருக்கின் வடிவமாகும். நபிகள் நாயகம் அவர்களைக் குறிக்கும் இனிய தொடர்கள் அவர் களுக்குரிய நாமாவளியாகக் காணப்படுகின்றன.

இந்நூல் தோன்றிய காரணம்

'வள்ளல் சீதக்காதி உமறுப் புலவரை சதக்கத்துல்லா அப்பாவிடம் அழைத்துச் சென்று நாயக வாழ்வைக் காப்பியமாக இயற்றுதற்கு உரைதர வேண்டியபோது புலவரின் புறத்தோற்றம் கண்டு வெகுண்டு மறுத்துவிட்டார். இதனால் வருந்திய புலவர் பள்ளியில் சென்று உள்ளம் வருந்தித் தொழுது உருகிப் பாடி னார்கள். 88-வது பாடலில் முகம்மது நபியைக் கண்களால் என்று காண்குவனே என்று பாடிக் கண்ணயர்ந்து விட்டார். கருணை நபி புலவர் கனவில் காட்சி தந்தார்கள். அப்பாவும் நாயகம் அவர்களைக் கண்டார். உரை கிடைத்தது. பாட முற்பட்டார்' என்று உமறுப் புலவர் குறித்த செவிவழிச் செய்தி கூறுகிறது. ஆனால் இதற்கு அகச்சான்று ஏதும் கிடைக்கவில்லை.

> "பூவினிற் சிறந்த மக்கமா புரத்தில்"

எனத் தொடங்கும் பாடலில்,

> "பாவினிற் சிறந்த பாவகம் புனைந்த
> பையலுக் கருள்தரும் முகிலை

நாவினிற் சிறந்த நபி மஹுமுதை
நலனுற வென்றுகாண் குவனே!'' [80]

எனும் பகுதியில் ஏற்கனவே தாம் பாடல்கள் பாடியிருப்பதைக் குறிப்பிடுகின்ருர். இதுகொண்டு பார்க்குமிடத்து இந்நூலுக்கு முன் சீருப் புராணம் இயற்றப்பட்டிருக்கலாமோ என எண்ணத் தூண்டுகின்றது. இதன்கண்ணுள்ள 88 பாடல்களும் எழுசீர் ஆசிரிய விருத்தங்களால் அமைந்துள்ளன.

உமறுப் புலவர் இயற்றியதாகக் கூறப்படும் வேறு இரு நூல் களில் சீதக்காதி கோவை கிடைக்கவில்லை. செய்தக்காதிறு பெயரில் திருமண வாழ்த்து எனும் நூல் கிடைத்துள்ளது. எட்டையபுரம் உமறுகத்தாப் புலவர் இயற்றியது என்று நூல் முகப்பில் காணப்படுகின்றது. ஆனல் இதில் வரும் பாடல்களில் பயின்று வரும் நடை சீருப் புராணத்திலோ, முதுமொழி மாலை யிலோ அமைந்துள்ளதைப் போலில்லை. அம்மானை வகைச் செய்யுளில் எளிய நடையில் அமைந்துள்ளது. ஒருவேளை புலவரின் முதல் படைப்பாக இருக்கலாம்.

---

80. முதுமொழிமாலை 83

இணைப்புகள்

இணைப்பு—ஒன்று: வினு விடைகள்

முதல் நாள் கருத்தரங்கு—9-2-1974

கம்பர்

[கட்டுரையாளர்: திரு. கு. இராசவேலு அவர்கள்]

அவையோர் எழுப்பிய வினுக்கள்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

1. கம்பன் இராமகாதை பாடியதின் நோக்கங்கள் யாவை?
2. கம்பனின் வடமொழிப் புலமை எத்தன்மைத்து?
3. வான்மீகி இராமாயணத்திற்கும் கம்ப இராமாயணத் திற்கும் உள்ள தலையாய வேறுபாடுகள் யாவை?
4. உலக மாக்கவிகளோடு ஒப்பிடும்போது கம்பன் சிறப்பு யாது?
5. கம்பன் படைப்பில் காணப்படும் கவிதைப் பண்புகளுள் சிறந்தது யாது?
6. கம்பன் தன் காப்பியத்திற்குத் தமிழ்நாட்டுக் கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளாமை ஏன்?
7. நாவலாசிரியராகிய தாங்கள் காப்பியங்கட்கும் நாவல்கட் கும் உள்ள ஒருமைப்பாட்டைக் கம்பன் துணைகொண்டு விளக்கியுதவவும்.

அரு. சங்கரலிங்கம்

1. தன்னை மணந்து கொள்ள வேண்டுமெனக் கேட்கும் காமவல்லி (சூர்ப்பணகை)யிடம் பிறன மனை நோக்காப் பேராளனுன இராமன், தான் மணமானவன் என்று எடுத்த எடுப்பிலேயே கூறுமல் "பார்ப்பனப் பெண்ணுகிய உன்னைச் சத்திரிய மகனுன நான் எங்ஙன் மணக்க முடியும்" என்று கேட்பது இராமனின் பாத்திரப்படைப்பில் குறை தெரிவதாக இல்லையா?
2. எக்காரணம்பற்றிக் கம்பநாடர் இவ்வுரையை இராமன் வாய்மொழியாக வெளிப்படுத்துகினுரா?
3. பிரமனும் நாரதனும் புராணப் பாத்திரங்கள். ஆனுல் வான்மீகரோ மண்ணில வாழ்நத மனிதர். முன்னவர் கூறப் பின்னவர் யாததத்தாகக கூறபபடும் நமபற்கரிய கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொணடதுபோன்று கூறினீாகளே, இது சரியான கருத்துத்தானு?

இரண்டாம் நாள் கருத்தரங்கு—10-2-1974

வில்லிபுத்தூரர்

[கட்டுரையாளர் : *டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள்*]

அவையோர் எழுப்பிய வினக்களும்

ஆசிரியரின் விடைகளும்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

1. இராமாயண மூலக்கதைக்கும் பாரத மூலக்கதைக்கும் உரிய காலங்கள் யாவை ?

கி. மு. 1200 சுற்றி.

2. சீதையின் கற்பு தமிழர் பண்பாட்டிற்கு ஏற்புடையது என்றாலும் திரௌபதியின் கற்பு தமிழர் பண்பாட்டிற்கு ஏற்புடையதாகுமா ?

அதனை மேற்கொள்ளவோ ஆராயவோ தேவை யில்லை.

3. 'கம்பருக்குப் புரவலர் பலர்' என்று தாங்கள் கூறியதாக நினைவு. அது சரியாயின் அக்கருத்தை ஆதாரங்களுடன் விளக்கியுதவ இயலுமா ?

பிரதாபருத்திரன், பாண்டியன், சோழன், ஏகம்பவாணன்.

4. வில்லி போலிப் புலவர்களின் காதுகளை அறுத்ததாக வழங்கும் கதை நம்பத்தக்கதா ? ஆம், எனின் அது சிறந்த பண்பாடு ஆகுமா ?

இருக்கலாம், மொழிப் பாதுகாப்புப் போராட்டம்.

5. பழந்தமிழ் நூல்களுள் இராமாயணம், மகாபாரதம் இரண்டுள் எது பற்றிய குறிப்புகள் அதிகம் ?

பாரதம் பற்றி.

6. பாரதக் கதையின் தலையாக நோக்கு, நீதி யாது ?
அக்காலச் சமூக அறங்கூறல்.

7. இராமாயணம், மகாபாரதம் போன்ற பெருங்கதைகளை — பெருங்காப்பியங்களைத் தமிழர்கள் உருவாக்காதது ஏன் ?

மகாபாரதம் தமிழ்ப் படுத்தினர். காவியங்கள், கொங்குவேள் மாக்கதை எழுதினர்.

8. வியாச பாரதம் முழுவதும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதா ?

கதைக்கூறு முழுவதும் ஆகியுள்ளது.

9. கீதை—குறள் இரண்டில் எது சிறந்தது—உயர்ந்தது—வாழ்க்கைக்கு உறுதுணையாவது ?

குறள்.

10. கண்ணனைச் சகாதேவன் கட்டியது அன்பாலா ? யோக சக்தியாலா ?

அன்பு—பக்தியால்.

11. கம்பராமாயணத்துக்குப் பற்பல திறனய்வு நூல்கள் வெளி வந்திருப்பது போல் வில்லிபாரதத்திற்கு ஏன் வரவில்லை?

கம்பனுக்கு இணையில்லை வில்லி.

12. 'இராமாயணம் சத்தியப் பெருமை சாற்ற — பாரதம் பொய்யான பெருமை சாற்ற' என்ற பழமொழி ஒன்று உள்ளதா ?

தருமன் போரில் பொய் சொன்னதால் இருக்கலாம்.

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. 'அரவான்' பண்டிகை என்று சில இடங்களில் (கோவைப் பகுதியில்) கொண்டாடப் பெறுகிறது. 'தரும ராஜாக்' கோவில் உள்ள ஊர்களில் இவ்விழா அங்குக் கொண்டாடப் பெறுகிறது. அப்பகுதியில் இவ் விழாவினைக் 'கூத்தாண்டை நோன்பு' என்று அழைக் கின்றனர். இத்தகைய பாரதத் தொடர்பான விழா வேறு எங்கேனும் நடைபெறுகின்றதா என்பதை அறிய அவா.

தெ. ஆர்க்காட்டில் 'குவாகம்' முதலிய பலபல விடங்களில்.

திரு. வ. ஜெயதேவன்

1. சங்க இலக்கியங்களில் பாரதக் கதை பற்றிய குறிப்புகள் எங்ஙனம் இடம் பெற்றுள்ளன ?

உவமையாக, கலித்தொகை முதலியவற்றில்.

2. இராம நாடகக் கீர்த்தனை போன்று பாமரர்களும் சுவை கொள்ளத்தக்க வகையில் பாரதக் கதை படைக்கப் பட்டுள்ளதா ?

கீர்த்தனையாக இல்லை. ஏற்றப்பாடல், அல்லியரசாணி மாலை போல உண்டு.

3. குறளை வில்லி கையாண்டதைப் போல வில்லியைக் கையாண்ட படைப்புகள் உள்ளனவா ?

நல்லாப்பிள்ளை அப்படியே கையாண்டார்.

4. பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வில்லியின் தாக்கம் எவ்வாறு உள்ளது ?

தன்னைத் தோற்று என்னைத் தோற்றதை என்ற கேள்வி.

5. பிற்காப்பியங்களில் பாரதக் கதையின் தாக்கம் எவ்வாறு உள்ளது ?

சிலப்பதிகாரத்தில் குறிப்பு வருகிறது.

திரு. சு. சண்முகசுந்தரம்

1. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடிமாலை, புலந்திரன் களவு போன்ற நாட்டுப்புறக் கதைப் பாடல்களின் ஆரம்பகால வடிவங்களில் இருந்துதான் பாரதக் கதை முழுமை பெற்றது என்றும், அதற்கு வியாசர், வில்லி போன்ற பெரும்புலவர்கள் காவிய வடிவம் கொடுத்தார்கள் என்றும் நிலவுகின்ற கருத்துக்குத் தங்களின் விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

வில்லிக்கு வியாச, பால பாரதங்கள். வியாசர் பாரத காலத்தவர். பாரதக் கதைப் பாத்திரம் .

திரு. க. ப. அறவாணன்

1. கண்ணகி பிறந்த நாட்டில் ஐவரின் மனைவியான திரௌபதியைத் தமிழர் எச்சூழலில் எவ்வாறு ஒப்புக் கொண்டு ஊர்தொறும் கோயில எழுப்பினர் ?

பல்லவர் பாரதக்கதைக்கு ஆக்கம் தந்தனர்.

2. 'அனைத்திந்திய ஆரியத் தேசியத்தின்' நோக்கில் முருகன் முதலானவர்கள் சுப்பிரமணியர் ஆனது போல பாண்டியன் சித்திரங்கதை வரலாறு பாரதத்தில் இடம் பெற்றதா ?

பாண்டிய உறவு உண்மையாகலாம்.

3. கண்ணன்—என்ற பெயரை யார் முதலில் தமிழில் வழங்கினுர்கள் ?

தொகை நூல்களில் பார்க்க.

4. 'பருவம்' என்ற இலக்கியப் பகுப்பு, வேறு தமிழ் நூல் களில் உளதா ?

தெரியவில்லை. வியாசர் பகுப்பு.

5. 'தென்னன் பொருப்பிலே' — என வருகிற பாரதப் பாயிரப் பாடல் — சுந்தரம்பிள்ளை அவர்களின் தமிழ் வாழ்த்துக்கு முற்பட்ட தமிழ் வாழ்த்து என்பது என் எண்ணம். தங்கட்கு உடன்பாடுதானு ?

உடன்பாடே. தமிழ்விடு தூது கூட வுள்ளது.

திரு. பொ. ஜெயராஜ்

1. இலக்கியம், கடந்த காலத்தின் கன்னி, நிகழ்காலத்தின் மனைவி, வருங்காலத் தாய் என்பர் சான்றோர். வில்லி பாரதம் கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறு கின்றது. ஆனல் தற்காலத்துப் பிரச்சனைகளான வேலை வாய்ப்பு, பொருளாதாரச் சிக்கல், பரிந்துரை, அழுத்தம் போன்றவற்றைப் பற்றி ஒரு வரி கூட இல்லை. வருங் காலத்து, தொழில்துறை உலகம் பற்றி ஒரு வரியும்

இல்லை. இவ்வாறு கடந்த காலத்திற்கு மட்டும் பொருந்தி, நிகழ்கால, வருங்காலத்திற்கு எந்தக் கருத்தும் கூறாத வில்லிபாரதம் இலக்கியம் என்று கூற முடியுமா ?

நிறைய உள்ளன ! ஒருத்தியை ஒவ்வொரு வகையில் பலர் பகிரும் நாகரிகந்தானே உலகில் வருகிறது ! பொருள்—பங்காளி இனப்போராட்டங்கள் இன்றும் உள்ளனவே.

2. இதிகாசம், திராட்சாபாகம் — தமிழ்ச் சொல் இல்லையா ? கொடிமுந்திரி பாகம்.

3. சமரச சன்மார்க்கத்தை வற்புறுத்தும் இக்காலத்தில், சைவ வைணவம் பற்றிக் கூறும் ஓர் இலக்கியம் சீரிய இலக்கியமாகக் கருதப்படுமா ? என்றால் கருத இயலவில்லை.

அக்கால இருசமயச் சமரசம் இன்று பல சமயத்திற்கும் பொருநதும்.

4. இருமாதரைச் சிந்தையாலும் தொடாத பண்புதான் தேவை. திரௌபதி ஐவரை மணககிறாள். இது தமிழ்ப் பண்பாட்டிற்கு முரண்பட்டது அல்லவா ?

பிறர் பண்பை ஒப்பிட்டுப் பார்க்கத் தேவையில்லை.

5. 'சீ சீ சிறியர் செய்கை செய்தான்' என்று பாரதியால் இகழப்பட்டது போன்று சூதாட்டத்தை மையமாக வைத்துக் கதை செல்லுகிறது. இது ஒரு 'குற்றவியல்' இலக்கியம் எனக் கருதுகிறேன். இளைஞர் உள்ளத்தைச் சீரழிக்காதா ? இது பற்றித் தங்கள் கருத்து என்ன ?

இன்றும் சூதாட்டம் குதிரைப்பந்தயம் குறைந்த பாடில்லை. கதை மையம் எதனையும் கெடுத்துவிடாது.

மூன்றும் நாள் கருத்தரங்கு—11.2.74

ஒட்டக்கூத்தர்

[கட்டுரையாளர் : *டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்*]

அவையோர் எழுப்பிய வினாக்களும்

ஆசிரியரின் விடைகளும்

டாக்டர் ந. சஞ்சீவி

1. மலரி என்பது திருவெறும்பியூரே என்ற கருத்துக்கு ஆதாரமாயுள்ள கல்வெட்டு வாசகம் யாது?

"இப்புலவர் பிறந்தது மலரி என்னும் ஊர். இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் இககாலததில் திருவரம்பூா என்று வழங்கிவரும் திருஎறும்பியூரே என்பது அங்குள்ள கோயிற் கலவெட்டால் உறுதி எய்துகிறது" (கலைக்களஞ்சியம் - ஒட்டக்கூத்தர் - திரு. டி. வி. சதாசிவ பண்டாரததார் - ப. 654).

கல்வெட்டு வாசகம் தரப்படவில்லை.

2. செங்குந்தர் என்ற சொற்குப் பொருள் யாது? இதை நிறுவுவதற்குரிய சான்றுகள் யாவை?

'செங்குந்தர் எனுஞ் சொல் குந்தத்திற்கு உரியவர் என்று பொருள்படும். குந்தம் எனினும் ஈட்டி எனினும ஒன்றே. முதற்கண் எழுந்த ஈட்டியெழுபது என்னும் நூல் இம்மரபினர்ககுச் செஙகுந்தர் என்னும் பெயர் உண்டாயினதறகு உண்டான உண்மையை விளக்கிக் கூறுகின்றது" (பேராசிரியர் கா. நமச்சிவாயர்-செங்குந்தர் பிரபந்தத் திரட்டு - பக். 7).

3. ஒட்டக்கூத்தர் பற்றி இதுவரை வந்துள்ள திறனாய்வு நூல்கள் யாவை?

1. திரு. சி. கே. நாராயணசாமி முதலியார் என்பவர் "கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் வரலாறு" (1928) எழுதியுள்ளார்.

2. மஸகருடீன் எழுதிய கவிராட்சசன், கலைமகள் வெளியீடு-முதற் பதிப்பு, 1952.

3. திரு. ச. கு. கணபதி ஐயர் எழுதியுள்ள 'ஒட்டக்கூத்தர்' (1961) இதுவும் கலைமகள் வெளியீடே.

4. ஒட்டக்கூத்தர் நூல்களில் காணப்படும் புதிய சொல் வழக்குகள், பொருள் வழக்குகள் யாவை?

இவை ஒரு பெரிய பட்டியல் ஆகும். தக்கயாகப் பரணியைப் பொறுத்தவரையில், ஐயர் அவர்கள் பதிப்பின் முன்னுரையில் ஒட்டக்கூத்தர் கையாண்ட புதிய சொல் வழக்குகளின் பட்டியலைக் காணலாம்.

5. ஒட்டக்கூத்தர் என்ற பெயருக்குரிய காரணங்கள் யாவை?

கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளேன்.

6. தமிழிலக்கிய வரலாற்றில் ஒட்டக்கூத்தரின் தனிப் பெருமைகள் யாவை?

இதற்குரிய விடையினையும் என் கட்டுரையின் இறுதியில் தனித்ததோர் துணைத் தலைப்பின் கீழ்க் காணலாம்.

7. ஒட்டக்கூத்தர் சிலை எங்கேனும் உள்ளதா?

படம் பலவிடங்களில் உளது; சிலை எனக்குத் தெரிந்தவரையில் இல்லை.

8. உலா இலக்கியங்களைப் பாலுணர்ச்சி பரப்பும் இலக்கியங்கள் எனலாமா?

கூடாது. மகளிர் உடல் வளர்ச்சியோடு உள்ள வளர்ச்சியும் எவ்வெவ்வாறு ஒவ்வொரு பருவத்திலும் வேறுபடுகின்றன என்பதைத் தெரிவிக்கும் பாலறிவு நூல் எனலாம்.

9. உலா இலக்கிய வகையின் உள்நோக்கம் யாது?

புலவர் தம்முடைய புலமைச் சிறப்பை வெளிப்படுத்துவது. அதே நேரத்தில் படிப்போர் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது. எழுபருவ மகளிரின் வருணனைகளும், விளையாட்டுகளும் படிக்கப் படிக்கச் சொற்சுவையும் பொருட்சுவையும் பயப்பனவாகும்.

10. ஒட்டக்கூத்தர் நூல்களால் தமிழக வரலாற்றுக்கு மூலமான சான்றுகள் கிடைக்கின்றனவா?

கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர் டி. வி. சதாசிவ பண்டா ரத்தார் அவர்களின் பிற்காலச் சோழர் வரலாறு எனும் நூலில் இதற்கு விரிவான விடை உளது. என் கட்டுரையிலும் ஓரளவு கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

11. செங்குந்த மரபினரில் ஒரு பிரிவார் வீர சைவர் ஆனது எப்போது ?

'நிதம் அந்தி சந்தி சிவசிந்தனை மறவா தவ ராவரிச் செங் குந்தரே' என்னும் அடி, செங்குந்தர் குலத்தின் சிவபக்திச சிறப் பினைச் செப்பும். சிவப்பிரகாசரின் காலததில் வீர சைவம் பெரிதும் பரவியது. அப்பொழுது செங்குந்தர் பலர் வீர சைவராயிருக்கக் கூடும்.

12. சிறந்த சைவர்களாகிய செங்குந்தரில் ஒரு பிரிவினர் புலால் உணணத தொடஙகியது எப்போது ?

காலத்தின் கோலம் எவ்வெப்பொழுது நிகழும் எனக் கூற இயலாது. 'ஒரு பிரிவினர்' எனற தொடர் ஏறறுககொள்ளத் தக்கதனறு. 'சிலர்' எனறோ 'பலா' என்றோ ஒருவாறு சொலலலாம். அவரவர் பழகும் சூழலால் பழக்கவழககஙகள வந்து அமைகினறன. நனனிலைககண தனனை நிறுப்பவனும, நிலைகலக்கிக கீழிடுவானும், தனனையே தலையாகச் செய்பவனும் தானே அனறோ?

13. படைவீரராய் விளங்கியவர் எனக் கருதப்படும் செஙகுநதர் பெருவாரியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டது எப்போது? ஏன ?

'தெரிஞ்ச கைக்கோளர்' எனச் சோழர் கல்வெட்டு குறிப்பிடும் செங்குந்தர் போரற்ற அமைதிக் காலத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 'காஞ்சிபுரத்திற்குச் சென்றால் காலாட்டிச் சாப்பிடலாம்' என்னும் மொழி, காஞ்சியில நெசவுத் தொழில் மிகுந்திருந்ததனைக் காட்டும. வழிவழியாகக் காஞ்சிபுரத்தில் செங்குந்தர் மிகுதியாக வசிததுவநதனர்; இன்றும் பிள்ளையார் பாளையம் எனும் காஞ்சியின ஒரு பகுதியான ஊரில செங்குந்தரே முழுக்க முழுக்க வாழுகின்றனர் எனலாம். இஙகும நெசவே மிகுதி. வீரபத்திரக் கடவுள் தக்கனமீது படையெடுததுச் சென்றபோது, காஞ்சிபுரத்துள்ள மாமரத்துத் தளிர்களைச் சூடிச் சென்றார் என்று ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில குறிப்பிட்டுளளார். இதனால் ஒட்டக்கூததருக்குக் காஞ்சிபுரததின்பாலிருந்த பற்றுதல் புலப்படும்.

'செய்யுந் தொழிலில் நெய்யுந் தொழிலே சிறந்தது' என்பதும், தமிழ் படிககத் தனித்ததொரு வாய்ப்பினை இத்தொழில் நல்கும் என்பதுமாகும். தறிக்குழியில் இருந்து கைநெசவு செய்து கொண்டே, வாய் தமிழ்ப் பாடல்களைப் பாடுவதில் ஈடுபட்டிருக்கும் நிகழ்ச்சியினை இன்றும் காணலாம்.

14. ஒட்டக்கூத்தர் காலம் கம்பர் காலம் இல்லை என்பார் கூறும் சான்றுகள் யாவை?

"கூத்தர் வயதால் மிக முதிர்ந்த காலத்தில் கம்பர் மிக இளைஞராயிருந்தவர்" என்று 'தமிழ் இலக்கிய வரலாறு 13, 14, 15ஆம் நூற்றுண்டு' எனும் நூலில் திரு. டி. வி. சதாசிவ பண்டாரததார் கூறியுள்ளார. (பக. 14).

மேலும் இவர் ஒட்டக்கூத்தர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் முதல இடைப் பகுதிகளில் வாழ்ந்தவர் என்பர்.

மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் கம்பர் வாழ்ந்தார் என்பர்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் கம்பர் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூறறுண்டின் பிற்பகுதி எனத் தம் 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்னும் நூலிற் குறிப்பிடுகின்ருர். ஆனல் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. அவர்கள் கம்பர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டு என்பர். ஏழெட்டு ஆணடுகளுக்குமுன் இநதிய அரசாஙகம் வெளியிட்ட கம்பர் அஞ்சல தலையில் கம்பர் காலம் 9ஆம் நூற்ருண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது.

15. விலை மகளிரால் விரும்பப்படும் ஒருவனைத் தலைவனுகப் படைப்பது தக்கதா ?

சமுதாயச் சூழலையும் காலச் சூழலையும் ஒட்டி நூல்கள் எழுகினறன. இவ்வழககுப் புலவர் பாடப் படைததுக்கொண்ட வழககேயெனலாம். பரதவையர் பெருக்கம் சில சமுதாயத்தில் அச் சமுதாயததின் செல்வ வளத்தைக் காட்டும். ஒரு நூலினை ஆராய அநதக காலச் சூழ்நிலையினையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

16. விலைமகளிருக்கு விளம்பரமாக உலாக்கள் அமைவது ஏன் ?

விலைமகளிர் சமுதாயம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது; இனி என்றும் இருக்கும். நன்மையும் தீமையும் எங்கும் இணைந்தே இருப்பது உறுதி. இவை களையப்பட அறநூல்களும் காவியங்களும் பாடல்களும் எழுந்த வண்ணமே உள்ளன. ஆனால் மனிதனின் உணர்வும் தேவையும் இதனை வாழவைத்துக்கொண்டே இருக்கின்றன.

17. ஒட்டக்கூத்தர் நூல்களால் அவர்தம் தனியாளுமை பற்றித் தெரிவது யாது ?

இருமொழிப் புலமை (வடமொழி - தென்மொழி) அன்று பெரிதும் போற்றப்பட்டதால் கூத்தர்தம் நூல்களில் வடசொற் பிரயோகங்கள் காணலாம். வருணனைத் திறமும், கற்பனை நலமும், புலமைச் சிறப்பும் இவர்தம் தனி ஆளுமை எனக் கொள்ளத் தக்க வகையில் தனியிடம் பெறுகின்றன.

18. ஒட்டக்கூத்தர் நூல்களால் விளங்கும் சமூக வரலாற்றுச் செய்திகள் யாவை?

அவர் நூல்களால் அறியலாகும் சமூக வரலாறு இனி எழுதப் படவேண்டும். விரிவான கட்டுரைக்கு இடங் கொடுப்பது அது.

19. ஒட்டக்கூத்தர் பாடல்களில் புதுவதாகக் காணப்படும் இலக்கண நுட்பங்கள் யாவை ?

ஐயர் அவர்களின் தக்கயாகப் பரணி முன்னுரை காண்க. இது குறித்தும் தனியே இனி ஆராய்ந்து காண வேண்டும்.

திரு. வ. செயதேவன்

1. சங்க காலம் செல்வச் செழுமை வாய்ந்த காலம் எனக் குறிப்பிட்டீர்கள். ஆனால் பெருஞ்சித்திரனார் போன்றவர்களின் பாடல்கள் அங்ஙனம் துணியத் தடையாக உள்ளனவே.

வளமையும் வறுமையும் என்றும் எப்போதும் அடுத்தடுத்து இருக்கவே செய்யும். பெரும்பான்மை நோக்கியே முடிவெடுக்க வேண்டும். அப்படி நோக்கினால் சங்ககாலம் இலக்கியத்திலன்றி மக்கள் வாழ்விலும் பொற்காலமே.

2. 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என ஒரு தொடர் எப்போது ஏன் ஏற்பட்டது?

இரண்டாம் இராசராச சோழனுடைய தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது, அரச குடும்பத்துடன் நெடுங்காலமாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததன் காரணமாக உரிமை பாராட்டித் தேவியைச் சாந்தப்படுதத, 'கரத்தும் சிரத்தும்' எனத் தொடங்கும் பாடலைப் பாடினர். ஊடற்கோப மிகுதியினுல் கதவிற்கு ஒரு தாழ்பபாள் போட்டிருநத தேவி, இப் பாட்டைக் கேட்டு இரண்டு தாழ்ப்பாளும் போட்டாள் என்பதாம்.

3. 'பாடற்பெரும்பரணி தேடற்கருங்கவி கவிச்சக்கரவர்த்தி' எனக் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் செயங்கொண்டாரைப் பாராட்டும் ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணிககும் கலிங்கத்துப் பரணிக்கும் சந்தம், அணிகள் போனறவற்றில் அடிப்படையில் ஒருமைபபாடு உள்ளதா?

இல்லை. கலிங்கத்துப்பாணி நடை, தெள்ளிய ஆற்ருெட்டம் வாய்ந்தது; தக்கயாகப் பரணி நடை மிடுககானது; சந்தவின்பம் மிககது, கலிங்கத்துப்பரணி; கடுமையான சொறபிரயோகமும் வடமொழித் தொடரும் அமைந்த மதயானை நடை தககயாகப்பரணி நடை.

4. ஒட்டக்கூத்தர் பரிசிலாகப் பெற்ற அரிசிலாற்றங்கரையில் உள்ள கூத்தனூரில் இன்றும் விளங்கும் கலைமகள் கோவில ஒட்டக்கூததராலேயே கட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது. இதுபற்றிய தஙகள் கருத்தறிய விழைவு.

ஒட்டக்கூத்தரால் கட்டப்பட்ட கோயிலே இன்றும் நன்னிலையில் இருப்பதாக ஐயா அவர்களும், அருணுசலம் ஐயா அவர்களும் கூறுவர். ஐயரும் ஐயாவும் கூறிவிட்டபோது ஐயததிற்கிடமேது?

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. இராமாயணத்தின் தொடர்பாக இவரைப் பற்றி வழங்கும் செய்தி எந்த அளவிற்கு உண்மையாகும்?

உண்மையில்லை.

2. கம்பராமாயணத்தின் ஏழாம் காண்டமாகிய 'உத்தர காண்டம் ஒட்டக்கூத்தா இயற்றியது என்று கூறும் கூற்று எந்த அளவிற்குப் பொருநதும்?

விடையினை என் கட்டுரையில் கூறியுள்ளேன்.

3. பிள்ளைத் தமிழுக்கு முன்னோடி ஒட்டக்கூத்தரா ?

பெரியாழ்வார் பாடிய தனித்தனிப் பாடல்கள் பிள்ளைத் தமிழுக்கு 'விதது' என்றால் விளைவு ஒட்டக்கூத்தரின் 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழே' யாகும்.

4. ஒட்டக்கூத்தரின் படைப்புகளிலேயே தலையாயது என்று எதனைக் கூறலாம் ?

மூவருலாவினைக் கூறலாம் ; அடுத்து, தக்கயாகப்பரணி.

திரு. பொ. ஜெயராஜ்

1. "உலா, பிரபந்தம், பரணி, பிள்ளைத்தமிழ் போன்றவை உண்மையான மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கவில்லை. காலச் சூழ்நிலையோடு ஒட்டிப் படைக்கப்படவில்லை. எனவே, அவை சிறப்பிழந்தன" என்று "கவிதையும் வாழ்க்கையும" கூறுகினறது. இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன ?

'A Book is the product of the century' என்பர். காலச் சூழலுக்கு ஏற்பவும் நூல தோன்றும்; காலத்தை வென்று வாழும் நூலும் தோன்றும்.

உலா, பிரபந்தம், பரணி, பிள்ளைத்தமிழ் முதலியன அவையவை எழுந்த காலத்தில் வாழ்நத மக்களின் உணர்வுககு விருந்து நல்கின. 'தேவையே படைப்புக்குக் காரணமாகும்' எனபர் பொருளியலார். மக்கள் தேவையை நிறைவு செய்தன இந்நூல்கள் எனலாம். அக்காலச் சூழ்நிலையை யொட்டி இவை படைக்கப்பட்டன. இந்தக் காலச் சூழ்நிலைககு இவை ஏற்றனவல்ல; எனவே வழக்கு வீழ்ந்தன. ஆயினும் இந்நூல்களில் அமைந்துள்ள கவிதைச் சிறப்பும், கற்பனை நலமும் நெஞ்சை அள்ளுவனவாகும்.

2. இலக்கியம் மூன்று காலத்திற்கும் பொருந்தி வர வேண்டும். ஒட்டக்கூத்தர் நூல்களில் உள்ள

கருத்துக்களை எந்த அறிஞர்களும் பிற்காலத்தில் தம் நூல்களில் எடுத்தாளவில்லை. எனவே கூத்த ருடையவை 'இலக்கியம்' என்னும் தகுதியை இழந்து விட்டன. இது ஒரு நூல்தான்—இலக்கியம் அல்ல எனக் கருதுகிறேன். இதைப்பற்றித் தங்களின் கருத்து.

இலக்கியம் உணர்ச்சி (Emotion), கற்பனை (Imagination), வடிவம் (Form), கருத்து—உள்ளீடு (Content) என நாற்கூறுகளை உள்ளடக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்த நான்கும் ஒட்டக் கூத்தர் நூல்களில் நன்கமைந்திருக்கக் காணலாம். எனவே இலக்கியத் தகுதியை இன்றளவும் கூத்தர் நூல்கள் இழக்கவில்லை என்பேன்.

3. பேதைப் பருவ மூவருலாவும் பேய்க்கதை பரணியும் இருபதாம் நூற்றாண்டுக்கு அளிக்கும் செய்தி என்ன ?

காணும் கண்களுக்கு ஏற்ப, எண்ணும் எண்ணங்களுக்கு ஏற்பவே கருத்துகளும் உருவாகும். அழகான மலர்களைப் பார்க்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நினைவு வரல் இயல்பு. அல்லி மலர் பூக்கடை வணிகனுக்கும், பயிர் நூல் (Botany) படிக்கும் இளைஞனுக்கும், கட்டிளங் காளையான காதலனுக்கும், தாயுமானவர் போன்ற துறவியர்க்கும், பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்க்கும் வெவ்வேறு மன உணர்ச்சிகளை எழுப்புவது இயற்கை. நமக்கு உயிர்க்காட்சி சாலை (Zoo) மட்டுமன்றிப் பொருட்காட்சி சாலை (Museum) யும் வேண்டும்.

இந்நூல்கள் எழுந்ததன் அடிப்படையே வேறு. இன்றும் மூவருலா சோழர்கால வரலாற்றுச் செய்திகளையும், தக்கயாகப் பரணி மதுரையில் சமணரை வென்று சைவம் தழைக்கச் செய்த திருஞானசம்பந்தரையும் காட்டும். வடலூர் இராமலிங்கர் முருகப் பெருமானைப் பாடும்போது,

சைவந்தழைக்க வந்தாண்டி — அந்தச்
சம்பந்தப்பேர் கொண்டு அழைத்தாண்டி

என்று பாடுவர். இருபதாம் நூற்றாண்டுக்கு இவ்விரு நூல்களும் அளிக்கும் செய்திகள் இவையே.

4. மரபுப் பின்னணி பற்றி விளக்கமாகக் கூறினீர்கள். அப் பண்புகள் செங்குந்தர்கள் அனைவருக்கும் பொருந்தினால் ஆயிரக் கணக்கான ஒட்டக்கூத்தர்கள் அம்மரபிலே தோன்ற வேண்டும். அப்படித் தோன்றாததேன்?

இன்றும் தமிழ்ப்பற்று மிக்க இனமாகச் செங்குந்தர் இனம் விளங்குகின்றது. தமிழ்நாட்டுத் தமிழாசிரியர்களில் ஒரு கணிசமான விழுக்காடு, செங்குந்தர் இனத்தைச் சேர்ந்தவர்கள் உளர். இந்நூற்றாண்டில் பாரதியாரையடுத்துக் கவிப்புலமை நடாத்திய பாவேந்தர் பாரதிதாசன் செங்குந்தர் இனத்தைச் சேர்ந்தவரே என்பதனைப் பணிவுடன் நினைவூட்டக் கடமைப் பட்டுள்ளேன். 'கைக்கோளன் இல்லாத ஊரில் கவி பாடு' என்பது பழமொழி. இன்றும் இவ்வினத்தில் இளங்கவிஞர் பலர் சிறக்க வாழ்ந்து கொண்டுள்ளனர். கவிபாடும் புலமை இவ்வினத்திற்கு இயல்பில் உண்டு என்பது வெளிப்படை.

நான்காம் நாள் கருத்தரங்கு—12-2-1974

செயங்கொண்டார்

[கட்டுரையாளர் : திரு. க. ப. அறவாணன்]

அவையோர் எழுப்பிய வினாக்கள்

டாக்டர் ந. சஞ்சீவி

1. முதல் பரணி இலக்கியம் எது?
2. செயங்கொண்டார் செய்த வேறு நூல்கள் யாவை?
3. செயங்கொண்டாரின் மூலத்தைப் பற்றிய சான்றுகள் யாவை?
4. கலிங்கத்துப்பரணியில் காணப்படும் தனிச்சிறப்பு வாய்ந்த இலக்கிய/இலககண இயல்புகள் யாவை?
5. கலிங்கத்துப்பரணியில் காணப்படும் சங்க நூல்—திருக்குறள் செல்வாககு யாது?
6. கடைத்திறப்புக்கும் திருப்பள்ளி யெழுச்சிக்கும் தொடர்புண்டா?
7. இடைக்காலத் தமிழில் கலிங்கத்துப்பரணி போல வரலாற்று வளம் நிறைந்த வேறு நூல்கள் யாவை?
8. கலிங்கத்துப்பரணி உள்ளிட்ட பல்வேறு இலக்கியங் களுமே இன்றைய திரைப்படங்கட்கு முன்னேடியாக நம் சமுதாயத்தில் பாலுணர்ச்சியைப் பரப்பியுள்ளன என்று எண்ணலாமா?
9. 'பாலைநிலம்' தமிழ்நாட்டில் இல்லையென்பது தங்கள் கருத்தா? அவ்வாறாயின் தொல்காப்பியம் முதலாகப் பழந் தமிழ் நூல்களுள் இடம் பெறுவானேன?
10. புவியியலில் 'குளிர்ப் பாலைவனம்' என்ற ஒருவகை நிலம் விளக்கப்படுகிறது அல்லவா?
11. ஒட்டகம் தொல்காப்பியர் காலத்திலேயே அரிதாக வழங்கி மரபியலில் காட்டப்படும் நிலை பெற்றது என்றும் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் — பிற்காலத்தவர் —

இந்தியாவின் வடபால் நிரம்பி இருந்த ஒட்டகம் பற்றி மேலும் அறிந்து பாலைக்குப் பயன்படுத்தினர் எனக் கொள்ளலாமா?

12. இளங்கோவடிகள் காலத்தில் இருந்த நிலைமாறி, கலிங் கத்துப்பரணி காலத்தில் மொழிவழி இன உணர்ச்சி (சிறப்பாகத் தெலுங்கு — தமிழ் வேறுபாட்டுணர்ச்சி) வளர்ந்திருக்குமா?

13. தமிழ்நாட்டில் பேய் வழிபாடு உண்டா? அதன் வரலாறு யாது?

14. கலிங்கத்துப்பரணியால் மட்டுமே விளக்கம் பெறும் வரலாற்றுச் செய்திகள் யாவை?

15. கலிங்கத்துப்பரணி போல, தமிழர் வீரம்-வெற்றி போற்றும் வேறு பரணிகள் தோன்றாமைக்குக் காரணங்கள் யாவை?

16. கலிங்கத்துப்பரணியில் இருக்கும் இலக்கியச் சுவைகளுள் எது மிகுதியானது/சிறந்தது ?

17. கலிங்கத்துப்பரணியில் கிடைக்கும் குறிப்பிடத்தக்க மொழியியல் குறிப்புகள் யாவை?

18. கலிங்கத்துப்பரணியில் வட்டார வழக்குச் சொற்கள் உண்டா?

19. சிலப்பதிகாரம் போலவே கலிங்கத்துப்பரணியையும் ஒரு முத்தமிழ்க் காப்பியம் எனலாமா?

20. செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியைச் செய்ததன் தலையாய நோக்கம் யாது ?

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. 'பரணி' குறித்துப் பேசும் முதல் இலக்கண நூல் எது?

2. தொல்காப்பியர் காலத்துக் கூறப்படாத பரணி இடைக் காலத்தே எதன் தாக்கத்தால் தோன்றியிருக்கக் கூடும்?

3. பரணியின் போர்ச் செய்திகள் மிக அருவருப்பாக இல்லையா?

4. உடற்குழம்பு, குடற்குழம்பு, பல் அடுப்பு முதலியன 'பயங்கரக் கற்பனை' அல்லவா? இத்தகைய கற்பனை பிற மொழி இலக்கியங்களில் உண்டா?

5. பரணி போன்ற 96 வகையான சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குரிய காரணம் யாது? சமுதாயச் சூழலா? அல்லது எந்தச் சக்தியின் உந்துதல் அப் புலவர்களை அங்ஙனம் பாடத் தூண்டியிருக்கும்?

6. போர்ச் சூழலைப் பாடிய பரணி இலக்கியம் காலப் போக்கில் (மோகவதை, அஞ்ஞானவதை போன்று) தத்துவத்தைப் பற்றிப் பாடியதற்கும் உண்டான வரலாற்றுத் திருப்புமுனை உண்டா? யாதாயிருக்கலாம்?

7. செயங்கொண்டார் 'தோல்விகண்டார்' பெயரையே வைத்து இலக்கியம் படைத்தது ஏன்?

8. குழந்தையை 'ஒக்கலில்' வைப்பது என்பது 'ஒருக்களித்து வைத்தல்' என்பதன் வடிவமாய் இருக்குமோ?

9. கடைதிறப்பு நூலின் முன்னர் இருப்பது சரிதானா?

கு. மோகனராசு

1. வரலாற்றினைப் பாட முனைந்த புலவர் அறிவியல் நோக்கிற்கு ஒவ்வாத 'பேய்'களைக் குறிப்பிட்டிருப்பது ஏன்? பேய்கள் என்பது சங்க இலக்கியங்களில் ஒருவகை மனித இனத்தைக் குறிப்பதுபோல் தோற்றமளிக்கிறது. இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

2. தற்காலப் பகுதியில் பாடப்பட்டுள்ள சீனத்துப்பரணி, வங்கத்துப் பரணி என்னும் இரண்டும் கலிங்கத்துப் பரணியிலிருந்து எவ்வகையிலேனும் வேறுபட்டுள்ளன வாகத் தோன்றுகின்றனவா?

திரு. வ. ஜெயதேவன்

1. பரணி என்னும் பெயர், நட்சத்திரம் பற்றியே எழுந்திருக்குமென்றால் அஞ்ஞானவதைப் பரணி, மோகவதைப் பரணி என வழங்கப்படும் பரணிகளுக்குப் பொருந்துமா?

2. கலிங்கத்துப்பரணியில், 'மாயக் காப்பியம்' (Fairy tale) என்னும் துறையின் கூறுகளின் தாக்கம் எவ்வாறு உள்ளது?

3. கலிங்கத்துப்பரணி 'வரலாற்றுப் புனைவு' (Historic Romance) வகையில் அடங்குமா?

4. பரணி இலக்கியப் படிமுறை வளர்ச்சியில் கலிங்கத்துப் பரணியின் இடம்?

5. எத்தனையோ வகை சிற்றிலக்கியங்கள் இருக்க, இருபதாம் நூற்றாண்டில் பரணிவகை இலக்கியங்கள் அரும்பயாது காரணம்?

6. கலிங்கத்துப்பரணியில் வரம்பு மிகுந்த கற்பனை மிகுதியாக இடம் பெறக் காரணமென்ன?

7. கலிங்கத்துப்பரணியில் நாடகக் கூறுகள் உள்ளாங்கு இசைக் கூறுகள் உளவா?

8. நெடுநல்வாடையின் நாடகக் கூறுகளுக்கும் கலிங்கத்துப் பரணி நாடகக் கூறுகளுக்கும் ஒருமைப்பாடு உள்ளதா?

திரு. பொ. ஜெயராஜ்

. இது ஒரு சொல்லாராய்ச்சி ஆய்வு,

செயங்கொண்டார் கடன் வாங்கவில்லை என்றீர்கள்.

(அ) செயம் - பெயர் வடமொழிக் கடன்

(ஆ) காளி - வங்கக் கடன்

(இ) ஒட்டகம் - வடநாட்டுக் கடன்

(ஈ) வேத சமயம் - தமிழர் சமயமன்று, சமயக் கடன்

(உ) கவிதை - சொல் - வடமொழிக் கடன்

இத்தனை கடன்கள் வாங்கிய செயங்கொண்டாரை ஏன் 'கடன் கொண்டான்' என்று கூறக்கூடாது?

2. கடன் கொண்ட நெஞ்சம்போல் கலங்கும் இந்நாட்டு மக்களுக்கு, செயங்கொண்டார் அளிக்கும் புதுமையான செய்தி என்ன? பிணமயம், நிணமயம், பேய் மயம் தான் 20ஆம் நூற்றாண்டுக்கு அளிக்கும் செய்தியா?

3 பிறநாட்டு இலக்கியங்களோடு இணைத்துக் கூறலாம் என்றீர்கள். "ஓய்ந்திருக்கும் காலததில் சாய்ந்திருந்து ஆய்ந்து ஆய்ந்து படிக்கலாம். காலமெல்லாம் சுவைக்கும் அளவுக்கு இதில் உள்ள சிறப்புத் தன்மை என்ன?'' எனவே செயங்கொண்டார் நூலை - இல்லை இக்கடன் கொண்டார் நூலைக் குமுதம், ஆனந்தவிகடன் போன்ற வார இதழ்களுக்கு ஒபபிடலாம் என்பது என் கருத்து. இதைப்பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

ஐந்தாம் நாள் கருத்தரங்கு—13-2-1974

சித்தர்கள்

[கட்டுரையாளர் : திரு. இரா. மாணிக்கவாசகம்

அவையோர் எழுப்பிய வினாக்களும் ஆசிரியரின் விடைகளும்

டாக்டர் ந. சஞ்சீவி

1. சித்தர் என்ற சொல் முதன்முதல் தமிழில் வழக்குப் பெற்றது எப்போது?

இதுபற்றி எனது கட்டுரையில் குறித்துள்ளேன்.

2. சித்தர் பாடல்களை நாத்திக வாதத்திற்குப் பயன் படுத்தலாமா?

பயன்படுத்தலாம். ஆனால் சித்தர்களை நாத்திகவாதிகள் என்று கூறிவிட முடியாது. அவர்கள் ஆன்மீக உணர்வு ஓங்கப் பெற்றவர்கள் (spiritually elevated).

3. சித்தர் நெறி யாது?

தன்னையறியும் நெறியே சித்தர் நெறி என்பது என் கருத்து.

4. தமிழ்நாட்டுச் சித்தர்கள்போல் பாரதநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சித்தர்கள் உண்டா? அயல்நாடுகளிலும் சித்தர்கள் உண்டா? இவர்கட்கு இடையே வேறுபாடுகள் உண்டா?

தன்னையறிந்து தன்னிறைவு பெற்ற சித்தர்கள் உலகெங்கும் இருக்கக்கூடும். அவர்கள் தாங்கி இருக்கும் தூலஉடலின் வண்ணத் தாலும் வடிவத்தாலுமே வேறுபாடு உண்டே தவிர வேறு வேறுபாடு இருக்க இயலாது எனக் கருதுகிறேன்.

5. சித்தர் நெறி என்று ஒன்று தனியாக உண்டாவது ஏன்?

உலகில் எத்தனையோ நெறிகள் தோன்றுகின்றன. ஒன்றே சித்தர் நெறி!

6. சித்தர்களுள் போலிகள் உண்டா? அவர்களை வேறு பிரித்தறிவது எப்படி?

உறுதியாக (போலிகள்) இருக்க இயலாது. துறவிகளுள் போலிகள் உண்டு. அவர்கள் வேடதாரிகள். சிலர் எவ்விதச் சக்தியும் இன்றி வெறும் துறவுவேடம மட்டும் பூண்டுகொண்டு உலகியல் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர். அணுவளவும் எவ்விதப் பற்றையும் துறக்காத துறவுக்கோல் உலகியல்வாதிகளை எல்லாச் சமயங்களிலும் காணலாம். சில துறவு வேடதாரிகள், மை வித்தை, ஆவிகளைக் கட்டுப்படுத்தல், மெஸ்மரிஸம் போன்ற வித்தைகளைக் கற்றுக் கொண்டு மக்களை மிக எளிதாக ஏமாற்றிச் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். இவ்விதப் போலித் துறவிகளால் மக்கட் கூட்டத்திற்கோ, ஆன்மீகத்துறைக்கோ எள்ளளவும் பயனில்லை. சித்தர்கள் எல்லையில்லா ஆற்றலைத் தேக்கி வைத்திருப்பவர்கள். விளம்பரத்திற்காகவோ, பணத்திற்காகவோ, சுகபோக வாழ்விற் காகவோ, வெளிப்படுத்திக் காட்டார். ககன குளிகையைப் பயன் படுத்தும் சித்தர்களும், ரசவாதம் செய்யும் சித்தர்களும் பித்தர்களைப் போல் (தோற்றம்) நடையுடையில் பாவனையில் இருப்பவர்களைப் பார்த்துள்ளேன். இவர்களை இனம் கண்டுகொள்வது என்பது அரிது. பார்வையில் படுவதற்கே நல்வினை ஆற்றியிருத்தல் வேண்டும். எனவே அவர்களில் போலி இருத்தற்கில்லை. சித்தர் என்ற பெயரோடு பெருதத விளம்பரம் தேடிக்கொண்டு, காசு பணம் சேர்க்கிருர் என்று யாரையாவது கண்டால் கொஞ்சமும் தயங்காமல் அவர்களைப் போலிச்சித்தன் 'வேடதாரி', 'வித்தைக்காரன்', 'சமயப் புரட்டன்' போன்ற அடை கொடுத்து அழைக்கலாம்.

உண்மைச் சித்தரையும் வேடதாரியையும் மிக எளிதாக இனம் கண்டுகொள்ளலாம். சிதத்ரின் கண்கள் மிகக் கூர்மையான பார் வையையும், ஒளியையும் உடையனவாக இருக்கும். பெரும்பாலும் நேர்ப் பார்வையைத் தவிர்ப்பவர்களாக இருப்பர். தெளிவும் அருளும் ஒழுகும் பார்வையினராய் இருப்பர். விழியை நேரடியாகச் சந்திகக முடியா அளவிற்கு ஒளி இருக்கும். தேகம் மாசு மறுவற்று இருககும். வியர்வை ஒழுககோ அதனுல் ஏற்படும் நாற்றமோ கொஞ்சமும் இராது. மாருக மெல்லிய இனிய மணம் வீசும். இத்தன்மைத்து என்று கூறமுடியா மணம் அது! இவை சில. இதற்குமேல் கூறுவ தற்கு உத்தரவு இல்லை.

போலித் துறவிகள் முகம் கருத்து இருக்கும். தெளிவற்ற, கெட்ட எண்ணங்களைத் தேக்கி ஒளி இழந்த விழிகளை உடையவர். மனவலிமை உடைய ஒருவன் இத்தகைய வேடதாரியின் விழிகளைச் சற்று (ஒருமித்த மனத்தோடு) உற்று நோக்குவானானால் அவனது முகம் விகாரப்படும்.

வள்ளுவரின் 'தேவர் அனையர் கயவர்' என்ற குறளை இங்கு நினைவு கூர்வது நன்று.

7. சித்தர் பாடல்களைப்போல வேறு மொழிகளிலும் இலக்கியங்கள் உண்டா?

எந்த நாட்டிலும் சித்தர்கள் தோன்றலாம். உலகமொழிகள் பலவற்றிலும் தமிழ்ச் சித்தர்கள் பாடல்களைப்போலவே, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை உடைய, தன்னையறியும் வழிகூறும் நூல்கள் இருத்தல் இயல்பே.

8. சித்தர் பாடல்களைப்போல வடமொழியில் பாடல்கள் - நூல்கள் உண்டா?

முன் கேள்வியின் விடையே இதற்கும் கொள்க.

9. சித்தர் பாடல்களை வகை தொகை செய்தால் விளங்கும் அடிப்படை உண்மைகள் யாவை?

சித்தர்கள் - தூய்மையான மனிதர்கள் அல்லது தெய்வநிலை அடைந்தவர்கள்.

10. சித்தர்கள் தம் பாடல்களில் கருத்துகளை 'மூடிமறைத்து'க் கூறுவது ஏன்?

இத்தகையார்க்கு இத்தகையனதாம் கூறவேண்டும் என்பது உலக நியதி. பள்ளியில் படிக்கத் தொடங்கும் சிறுவர்களிடம் முதுகலைப் பாடத்தைக் கற்றுக்கொடுக்க நினைத்தால், நினைப்பவனுக்கும் பயனில்லை; கேட்பவருக்கும் பயனில்லை. மாறாக அரைகுறை அறிவினால் விபரீதம் விளையும். அதுபோலக் குறிப்பிட்ட அளவு மனப்பக்குவம் பெறாத 'உலகியல்வாதி'களிடம் முழுமை பெற்ற சித்தர்கள் சில உண்மைகளைச் சொன்னால் அவர்கள் அவ்வுண்மையைக் கேட்டு எள்ளி நகையாடலாம். எடுத்துக்காட்டாக, ககனகுளிகை என ஒன்று உண்டு, அதனை வாயில் எச்சில்படாத

இடத்தில் அடக்கிக் கொள்வர்; கண்ணிமைக்கும் நேரத்தில் விரும்பும் இடம் செல்வர் என்ருல் இந்த அறிவியல் நூற்ருண்டில் 'கதை விடுகின்றீர' என்று எள்ளி நகையாடுவர். அல்லது மெய்ப்பிக்க வேண்டும் என்று வாதாடுவர். இதேபோலத்தான் ரசவாதமும். மூலிகையின் பயனும் அப்படித்தான். சில மாந்திரீக மூலிகைகள் உள்ளன. அவற்றின் ஆற்றலை எந்த அறிவியல் அறிஞராலும் ஆராய முடியாது. வியப்பான, விந்தையான ஆற்றல் உடையன. இவற்றின் உண்மை தெளிவு படுத்தக் கூடாதது ஆகும். செய்யக் கூடாதன செய்வதால் கெடும் என வள்ளுவர் கூறுவது போல, சொல்லக்கூடாதன சொல்வதால் கெடும் என்பது உறுதி. குழூஉக் குறியால் இரசவாதம். மருத்துவம், மாந்திரீகம் முதலியவற்றைக் குறிததுள்ளமைக்கு இதுவே காரணம் எனக் கருதுகிறேன். மககட் சமுதாயத்தில சாதி, மதம், உருவ வழிபாடு, கொளகைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள் முதலியவனவே மனிதனைப் பிரிப்பன என்பதை அறிந்து அவற்றை நீக்குதல் மூலம் மனித இனம் ஒரு குடும்பம் என்ற எண்ணம் பெறுதல் கூடும் என்ற விழுமிய நோககோடு தொண்டாறறிய சித்தர்கள குழூஉக்குறிகளையும் பயன்படுத்தாமல் தமக்குத் தெரிந்த அனைத்துக கலைகளையும் மறையாகவே வைத்திருககலாம். ஆனல் அவ்வாறு செய்யாமல் மூடி மறைத்துக் கூறியுள்ளதால் பக்குவபபட்டவர் பயன் பெறட்டும் என்ற உயாநோக்கம் புலனுகும்.

11. இந்து சமயத்தில் பிறநெறிகட்கும் சித்தர் நெறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

சித்தர் நெறி வேறு; சமயநெறி வேறு. சித்தர் நெறி சமய நெறிகளுள் அடஙகாது. சமயம் என்ருலே ஒரு குறிப்பிட்ட வண்ண வடிவு உடைய இறைவனை வணஙகும நெறி என்று பொதுவாசப் பொருள் கொள்கிறேம். எனவே சமயம என்பது ஒரு சிறிய வட்டம் போன்றது. சமய நெறியினர் சமயக் கட்டுப்பாட்டிற்குள் தம்மை அடிமைப்படுத்திக கொள்வர். இது இக்காலக் கட்சிக் கட்டுப்பாடு போல்வதாகும். தம்முடைய அறிவையும் சிந்தனை ஆற்றலையும் மூடிவைத்துவிட்டுக கட்சித தலைவரின் புகழைப் பாடுதல, அவரது ஆணைககு அடஙகி நடததல், அஞ்சுதல், கட்சியின் சட்டதிட்டஙகளுககுள் தம்மைப் புதைத்துக் கொள்ளுதல் போன்றவை இககாலக் கடசியின இயல்பு. சமயம் இதைப் போல்வதே.

சித்தர்கள் எந்த வட்டத்திற்குள்ளும் தம்மை அடிமைப்படுத்திக் கொள்ளாதவர்கள். இந்து சமயமாயினும் வேறு எந்தச் சமய மாயினும் இது பொருந்தும்.

12. தங்கள் திருமந்திர ஆராய்ச்சியில் தாங்கள் கண்ட சிறந்த முடிவுகள் யாவை ?

எனது திருமந்திர ஆய்வுநூல் விரைவில் வெளிவர இருக் கின்றது.

13. சித்தர்களை அறிவியல் அடிப்படையில் நிறுவும் முயற்சி நம் நாட்டிலோ பிற நாட்டிலோ நடந்துள்ளதா ?

எனக்குத் தெரிந்தவரையில இல்லை. அது இயலாது என்பது என் கருத்து.

14. பதினெட்டு என்ற எண்ணில் ஏதேனும் சிறப்புகள் உண்டா ?

சிறப்பு இருத்தல் வேண்டும். இதுபற்றி ஆராய்ந்து வரு கின்றேன.

15. சித்தர்களுள் எவரும் இல்லற வாழ்க்கை மேற்கொள்ள வில்லையா ?

இல்லறத்தில் இருந்து சித்தரானோர் பலர். சித்தரானபின் இல்லறம் நடத்தியவரைப் பார்ததது இல்லை.

16. இல்லற வாழ்க்கை சித்தர் நெறிக்கு இடையூறானதா ?

அந்நிலை அடைந்தபின்னரே அறிய முடியும்.

17. சித்தர்கள் மெய்ப்பொருளியல் அல்லாமல் மற்ற இயல் களும் சிறக்க எவ்வகைத தொண்டுகள் ஆற்றியுள்ளனர்?

மருத்துவம், மந்திரம், வானசாததிரம், கணிதம், சமுதாய சீர்திருத்தம், தந்திரசாததிரம முதலிய பல்வேறு துறைகளில் பெரிதும தொண்டு ஆற்றியுள்ளனா.

18. ஒன்றும் கல்லாத 'பாமரர்' களிலும் கூட சில அசா தாரண ஆற்றலகள் (மணணை எடுததுக் கொடுத்தால் சர்ககரை அல்லது திருநீறு ஆதல்) இருக்கின்றனவே ! அது பற்றிய தஙகள் விளககம் யாது ?

தாங்கள் குறிப்பிட்டுள்ள செயல்கள் சாதாரணமானவையே அசாதாரணம் அல்ல. இச்செயல்களைச் செய்யும் ஆற்றலைப் பல்வேறு வழியில் பெறமுடியும். மனக்கட்டுப்பாட்டினுல் கணகட்டி வித்தையால் செய்யலாம். குறிப்பிட்ட முறைப்படி தயாரிக்கப் படும் 'மை'யின் துணையால் செய்யலாம். சில ஆவிகளை (Spirits) அடிமைப்படுத்தி அவற்றின் துணையால் செய்யலாம். இத்தகைய வித்தைகளைச் செய்யக் கல்வியறிவு கொஞ்சமும் தேவையில்லையே ? உண்மையில் சித்தர் நிலைபெறவும் கல்வி தேவையில்லையே !

19. Mysticism, Esterics இவற்றிற்கிடையே வேறுபாடுகள் உண்டா ?

ஆங்கில அகராதிகளில் குறிக்கப்படும் பொருள்களின்படி இரண்டு நிலையும் ஒன்றே என்றே எண்ணத் தோன்றுகின்றது.

20. பெண்களுள் சித்தர்கள் உண்டா ?
இருக்கலாம் ; இருக்கக்கூடும்.

21. இப்போதும் சித்தர்களை எங்கே காணலாம் ?

பெரும்பாலும் மலைப்பகுதிகளிலேதான் காணப்படுகின்றனர். எப்பொழுதாவது நகர்ப்புறங்களில் தென்படுவதுண்டு. இவர்களை இனம் கண்டுகொள்வது அரிது.

22. சித்தர் கருத்துப்படி உயிர், மனம் பற்றிய வரையறைகள் யாவை ?

இவற்றை குருமுகமாக அறிதல்வேண்டும் என்பர்.

23. 'மரணமிலாப் பெருவாழ்வு' பற்றித் தங்கள் கருத்து யாது?

இது பெறக்கூடியதே. இராமலிங்கப் பெருமானுர் கூறியுள்ள இல்லற வாழ்வானுககு ஞாயங்கள் என்பதைப் பினபற்றினுலேயே நம் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதைப் பார்க்கலாம்.

இவ்வுடல் அழிவதைப் பார்க்கின்ருேம். அழிவது இவ்வுடலின் இயல்பா இல்லையா என்பதை நாம் சிந்திப்பதில்லை. அழிவது இயல் பாயின் இதற்குப் பொய் என்று பெயரிட்டிருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் 'மெய்' என்று குறிக்கின்ருேம். இதனை மங்கல வழக்கு என்று கருதுதல் கூடும (காராட்டை வெள்ளாடு என்பது போலவும், நச்சுப்பாம்பை நல்லபாம்பு என்பது போலவும் என்க).

எனது நூலறிவாலும் அனுபவ அறிவாலும் அறிந்தவரையில் இது உண்மையில் 'மெய்யே'. நாம் இதனை உணராது பொய்யாக்கி விடுகிறோம். 'மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்' எனவரும் இராமலிங்க அடிகளாரின் பாடலும், 'தன்னையறியத் தனக்கொரு கேடில்லை' எனவரும் திருமூலர் பாடலும் இன்னும் ஒத்தகருத்துடைய சித்தர் பாடல்களும் இதனைத் தெளிவுபடுத்தும்.

ஹைடிரஜனும் (Hydrogen) ஆக்ஸிஜனும் (Oxygen) ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் (Proportion) சேர்ந்தால் தாம் வாயு வடிவம் இழந்து நீர்வடிவம் பெறுகின்றன. சாதாரண அறிவுடையவர்கள் நீரை, இரண்டு வாயுக்களின் சேர்க்கையின் விளைவு என்றால் எளிதில் நம்பமாட்டார்கள். இயற்கையில் எந்தப் பொருளும் சில பொருள்களின் கூட்டு அமைப்பைப் பெற்றே விளங்குகின்றது. இப் பொது விதிக்குக் கட்டுப்பட்டதே நமது உடம்பும் ஆகும். அறிவியல் முறையை அறிந்தவர்களால் நீரில் இருந்து வாயுக்களைப் பிரிக்கவும், வாயுவினின்று நீரைத் தோற்றுவிக்கவும் கூடும். இதே போன்று இவ்வுடம்பின் இயல்பினை அறிந்தவர்கள் தன்னை அறிந்தவர்கள். இதனைக் கூட்டவும் சேர்க்கவும் அறிந்திருப்பர் என்பதில் வியப்பில்லையே. இராமலிங்கரும் 'தன்னையறிந்தின்ப முறவெண்ணிலாவே — ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே' எனத் தன்னையறிய வேண்டும் அவாவைப் பாடுகின்றார்.

திருமூலரும் 'உடம்பார் அழியில் உயிரால் அழிவர்' எனக் குறிக்கின்றார். இங்ஙனம் வரும் சித்தர்கள் பாடல்கள் மூலமும் அவர்களுடன் பழகி வருவதால் பெறும் அனுபவம் மூலமும் 'மரண மிலாப் பெருவாழ்வு' கூடும் என்பதே எனது கருத்து.

இதுபற்றி மேலும் ஆராய்ந்து வருகிறேன். தக்க பருவம் எய்திய பின்னர் எனது கருத்தை அறிஞர் மத்தியில் வைப்பேன்.

24. தங்கட்கு இப்போது சித்து ஏதேனும் வருமோ? இப்போது இல்லையாயினும் எப்போதேனும் சித்தர் நெறி கைவரப் பெறும் என்று தாங்கள் கருதுகிறீர்களா?

சித்து என்பது ஆன்மீக நெறியில் நிற்பார் பெறும் மிகச் சாதாரண ஆற்றல். மன ஒருமைப்பாட்டு முறைமை ஒன்றாலேயே மிக எளிதாய்ப் பெறலாம். சாதாரண மக்களாலே செய்ய முடியாத செயல்களைச் செய்வதையே சித்து எனக் கருதுகிறோம். முன்னர்

கூறியவாறு மை, மந்திரம் போன்ற துணைக்கருவியால் செய்வதும் சித்து எனவே கருதுகிறேம. இந்த துணைக் கருவி கொண்டு செய்வது வித்தை! இதை எவரும் செயயலாம். மனவலிமை யாலும், தினமும் ஐந்து பொறிகளாலும் வீணுக்கும் ஆற்றலை எல்லாம் இயன்றவரை சேர்த்து வைப்பதாலும் செய்யும் விந்தையான செயலைச் சித்து எனலாம். இங்ஙனச் சாதனையால் (தியானத்தால்) பெறுதல் கூடும். எனவே யார் சாதனையைத் தொடர்ந்து செய்தாலும் சில வியப்பூட்டும் ஆற்றலைப் பெறுவர் என்பது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

25. சித்தர் பற்றி இதுவரை நிகழ்ந்துள்ள ஆராய்ச்சியின் வளர்ச்சி யாது?

சித்தர்களைப் பற்றிப் புரிந்து கொண்டவர்கள் அவர்களைப் பற்றி முயன்று தேடிச் செய்திகளைச் சேகரிக்கும ஆவல் பெறுவர். ஆனால் அவர்களைச் சந்திக்கும் பேறு பெற்று சில 'மறை' பொருள் பற்றித் தெரிநது கொண்ட பினனர் அவறறை வெளியிட முடியா நிலையைப் பெறுவர். இதிலே புரட்சி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருநதவன நான. ஆனால் எனது பட்டறிவால் சிததர்கள் காரணம் இலலாமல் குழூஉக் குறியால் கூறவிலலை என்பதை உணர்ந்தேன். மறை, வேதம், எழுதாக்கிளவி என்பனவற்றின் பொருளையும் உணர்நதேன்.

எடுத்துக்காட்டாக யந்திரம் என்பது வரையும் சக்கரம். மந்திரம் எனபது உள்ளே எழுதும் எழுத்துக்கள். தந்திரம் என்பது அவ்வெழுத்துககளுக்கு உயிரூட்டும முறைமை. இவற்றில் தந்திரம் ஒன்றினை எவரும் சொல்லார். சொல்லித் தந்தாலும் உறுதிமொழி பெற்றே சொல்லிநதநவர். எனவே சித்தர் பற்றி ஆராயலாம். ஆனால் அவ்வாராய்ச்சி முழுமை பெற்ற நிலையில் இருக்காது என்றே கருதுகிறேன். பொதுவான, மேற்போக்கான தததுவங்களையும் கொள்கைகளையும் வேண்டுமானால் ஆராயலாம்.

26. சித்தர்கட்குச் சோதிடம், மாந்திரிகம் ஆகியவற்றில் நமபிக்கை உண்டா?

இவற்றைத் தோற்றுவித்தவர்களே அவர்கள்தானே!

27. அகப்பூசை ஒன்றே போதாதா?

இதைத்தான் சித்தர்கள் செயவது. ஒரு குறிப்பிட்ட நிலை பெற்றவுடன் எதுவும் இலலாது இருப்பதும் உண்டு.

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. சங்ககாலத்தில் சித்திகள் கைவரப்பெற்ற சித்தர்கள் இருந்தனரா?

எனது கட்டுரையிலேயே இதுபற்றிக் குறித்துள்ளேன்.

2. 'நிலந்தொட்டுப்புகார்; வானமேறுர்; விளங்கிரு முந்நீர் காலிற் செல்லார்' எனக் குறுந்தொகை (130) கூறு கிறதே இது பற்றித் தங்கள் கருத்தினை அறிய அவா.

இதனையும் கட்டுரையில் குறித்துள்ளேன்.

3. சித்தர்கள் தங்கள் கொள்கையை மறைவாக வைத்துக் கொள்ளுதற்குக் குழூஉக் குறியினைப் படைத்துக் கொண்டனரே. ஏன்?

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் பத்தாவது வினாவிற்கான விடையைக் காண்க.

4. ஜைனர், பௌத்தருள்ளும் சித்தர்கள் இருந்தனரா?

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் நான்காவது வினாவிற் கான விடையே இதற்கும் பொருந்தும்.

5. அனுபூதி ஞானம் பெற்றவர்களை ஆங்கிலத்தில் என்கிறார்கள். ம் சித்தர்களும் ஒரே வழிபாட்டு முறையினைப் பின்பற்றினர் எனலாமா? அல்லது அவர்களுக்கும் இவர்களுக்கும் இயல்பில் என்ன வேறுபாடு உண்டு?

ஆங்கிலத்தில் (Mysticism & Mystic) மிஸ்டிசிஸம் அல்லது மிஸ்டிக்ஸ் என்ற சொற்களுக்குத் தரும் விளக்கம் சித்துக்கும் சித்தருக்கும் பொருந்துவதாகவே உள்ளது. இறைமை பெற்றவர் யாவராயினும் வேறுபாடு காணுதல் முடியாது.

6. குணங்குடி மஸ்தான் கமால்முனி போன்றவர்கள் தமிழ்ச் சித்தர்கள வரிசையில் எத்தகைய இடம் பெறுகின்றனர்?

'சித்தர் பாடல்கள்' என்ற தலைப்பில் இவர்கள் இயற்றிய பாடல்கள் காணப்படுகின்றன. அவ்வளவே! மஸ்தான் சாகிப்பைத் தாயுமானுரின் மாற்றுரு என்பாரும் உண்டு.

7. 'கூண்டோடு கைலாயம் போதல்', 'சாவாது வாழ்தல்' முதலியன இயலுமா? இருபதாம் நூற்றாண்டு ஏற்குமாறு எங்ஙனம் விளக்கலாம்?

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் இருபத்துமூன்றாவது வினாவிற்கான விடையே இதற்கும் பொருந்தும்.

8. திருமூலரின் மாணவர் காலங்கநாதர். இவருடைய சீடர் போகர்—பெரிய மருத்துவர். மருந்துச் செடிகளுக்காக ரோமாபுரி வரை சென்றார் என்று கூறுகிறார்களே! இதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதேனும் உண்டா?

வரலாற்றுச் சான்று இருப்பதற்கு வாய்ப்பு இல்லை எனக் கருதுகின்றேன். சித்தர்கள் வாழ்க்கையே தெளிவான வரலாறு காண முடியா நிலையில் அல்லவா இன்னமும் உள்ளனர்.

9. சித்திகள் கைவரப்பெற்ற சித்தர்கள் இக்காலத்தும் உள்ளனரா?

எக்காலத்தும் (விளம்பரம் அற்று) இருப்பர் என்பது எனது கருத்து.

10. சித்தர்களும் யோகிகளும் பெரும்பாலும் தாழ்ந்த வகுப்பினர் என்பர். வடநாட்டிலுள்ள 'நாதமார்க்கம் சார்ந்த 87 சித்தர்களும்' அப்படியே! இதற்கு என்ன காரணம்? சமுதாயச் சூழலா?

அப்படி இருக்கவேண்டும் என்பது பொதுவிதியாகக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டின் பழைய சித்தர்களைப் பற்றித் தெளிவாக யாரைப் பற்றியுமே நமக்குத் தெரியாதே. தற்போது வரும் நூல்களில் சித்தர்கள் சாதி முதலியன குறிக்கப்படுகின்றன. அவை அத்துணையும் உறுதியாக உண்மையன்று! யாராலும் எவ்விதச் சான்றும் காட்டமுடியாது (ஓரிருவருக்குக் காட்டுதல் கூடும்).

11. சாத்திரக் குப்பையிலும் கோத்திரக் கோளாறிலும் ஈடுபடாது அவற்றினை எள்ளி இகழ்ந்து சித்தர்களே பகுத்தறிவுப பாதைக்கு வழி வகுத்தனர் எனலாமா?

உறுதியாக — உரக்கச் சொல்லலாம்.

12. பிரமமுனி, ரோமமுனி, மச்சமுனி, கமால்முனி, கோரக்கர், கைலாயக கம்பளிச்சட்டை முனிநாயனர், புண்ணுக்கீசர், கர்மமுனி பெயர்களிலெல்லாம் தமிழ்ச் சொல்லே இல்லையே!

சித்தர்களைப் பற்றிய பெயர் ஆராய்ச்சி எனக்கு உடன்பாடன்று. இந்த உயிர் ஏற்று இயங்கும் உடலைக் குறிக்க எந்தப் பெயர் இருந்தால் என்ன? மேலும் இது போன்ற பெயர்களை அவர்களே வைத்துக் கொள்வது இல்லையே (தற்போது இருக்கும் போலித் துறவிகள் வேண்டுமானல் தமக்குத் தாமே பெயர்சூட்டிக் கொள்ளலாம்). யாரோ ஒருவர் அல்லது சமுதாயம் வைப்பதுதானே. சுரைககாய் சாமியார், மிளகாய்ச் சாமியார் போன்ற பல பேர்களை இந்த நூற்ருண்டில் சந்தித்தோம். இப் பெயர்களை அவர்களே வைத்துக் கொண்டனரா? பக்தர் கூட்டம் அல்லவா வைத்தது? எனவே தாங்கள் குறித்த பெயர்கள் சித்தர்களுக்கு யாரோ கொடுத்த பெயர்கள்.

13. சித்தர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிவியல் வழி ஆய இயலுமா?

முடியாது என்பது என் கருத்து. எங்காவது யாராவது ஆராய்ந்து கொண்டிருத்தல் கூடும்.

14. அண்மையில் வட இந்தியாவில் மருத்துவர் ஒருவர் யோகியின் சமாதி நிலையை ஆய்ந்தார். பல நாட்களாக இருதயம் துடிக்காமல் இருந்தது என்று அப் பதிலே கூறுகிறதே? மருத்துவராலும் விளக்க இயலவில்லையாம்.

தாங்கள் குறிக்கும் நிகழ்ச்சி சித்தின்பாற்பட்டதாகவும் இருக்கலாம். வித்தையின் பாற்பட்டதாகவும் இருக்கலாம்.

15. 'சித்தர்களைப் பற்றி மேனுட்டார் எவரேனும் ஆய்ந்துள்ளனரா?

பலர் ஆராய்ந்துள்ளனர். சிலர் பற்றிய குறிப்பைக் கீழே தந்துள்ளேன்.

Spurgeon F. E., Mysticism in English Literature—Cambridge University Press, London, 1927.

Herman, H. — The Meaning and value of mysticism, James clraks & Co.; London, 1925.

Otto, Rudolje — The Mysticism East and West, Macmillan Company Ltd., London, 1932.

Younghusband — Sir Francis. Modern mystics. John Murray Abbemanle St. London, 1935.

Hywel Hughes, Thomas — The Philosophic basis of mysticism T & T Clerk Edinburk, 1937.

Ingl, W. R, Christian Mysticism Mathuen & Co. Ltd., London, 1948.

16. சித்தர்களைச் சமயப் புரட்சியாளர் எனலாமா ?

கூறலாம்.

17. தமிழிலக்கியத்திற்குச் சித்தர்கள் வழங்கிய தலையாய தனிக் கொடை எது ?

அவர்கள் பாடல்கள்தாம். இலக்கிய வரலாற்றில் ஆழ்வார்கள் நாயன்மார்கள் பெறும் இடத்தைப்போலவே இவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

18. மாந்திரீகங்கள் கைவரப் பெற்ற பெண்கள் இருப்பது போல் சித்துநிலை கைவரப்பெற்ற பெண்டிரும் தமிழகத்திலோ அல்லது பிற இடங்களிலோ உண்டா ?

சித்துவல்ல பெண்களைச் சந்திக்கும் வாய்ப்பை நான் இதுவரை பெறவில்லை. இதனால் அத்தகையோர் இல்லை எனக் கூறமாட்டேன்.

19. அச்சந்தரும் அற்புதஙகளையும், சித்துகளையும் காட்டி மக்களைப் பயமுறுததும் நிலை சித்தர்கட்கு வேண்டுமா ?

பணம் பறிக்கும் மந்திரவாதிகளையும், மெய்ஞ்ஞானிகளையும் ஒன்றென எண்ணியுள்ளீர் எனக் கருதுகின்றேன்.

20. இல்லற வாழ்வில் இருந்து கொண்டே சிலர் சித்து நிலையினைச் செய்கின்றனரே செய்யலாமா அதனால்தான் தவறு ஏதேனும் ஏற்படாதா ?

என்னுடைய அனுபவத்தில் சித்தர்கள் குடும்ப வாழ்வில் இருப்பதைக் கண்டதில்லை. அவ்வாறு இருப்பினும் விரைவில் தனிமரமாக ஆகிவிடுவதையும் காண்கிறேன். எனவே குடும்பத்தில் இருந்துகொண்டு சிதது விளையாடுவோரெல்லாம் சித்தரா அல்லது வித்தைக்காரரா என ஐயுற வேண்டியுள்ளது.

திரு. வ. ஜெயதேவன்

1. சிதம்பர இரேவண சித்தர் (கி.பி. 1594) என்னும் பெயரில் நிகண்டாசிரியர் ஒருவர் விளங்கினர். இவருக்கும் சித்துகளுக்கும் ஏதேனும் தொடர்புண்டா ?

அப்படி ஒன்றும் குறிப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

2. புட்டபர்த்தி சாயிபாபா என்பவர் இலிங்கம் கக்குவதாயும், மூடிய கையுள்ளே கடிகாரங்களை வரவழைப்பதாயும் சொல்லப்படுகின்றனவே அவையெல்லாம் சாத்திய மானவையா ?

மிக எளிதான செயல்கள். இவற்றைச் சித்து என்பதைக் காட்டிலும் வித்தை என்பது பொருந்தும்.

3. இறந்தவர்களின் ஆவியை யார் உடலிலும் ஏற்றி (மீடியத்தின் மூலம்) பேச வைக்க முடியுமென மதுரை மடாலயத் தலைவர் ஒருவர் ஒரு நூலே எழுதியுள்ளார். இலங்கையில் ஒரு குழந்தையின் மேல் பேரறிஞர் அண்ணாவின் ஆவியை ஏற்றிப் பேசவைத்து அப்பேச்சு நாடாப்பதிவுப் பொறியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறதே ! இதுவும் சித்து தானா ?

சித்து அன்று. எண்ண அலைகளோடு தொடர்பு கொள்வது. இதுபற்றி விரிவாக ஆராய்ந்து வருகின்றேன்.

4. மீடியத்தின் வியப்பூட்டும் பதில்களைத் தாங்கி ஒரு பத்திரிகையில் செய்திகள் வந்தனவே இவற்றிற்கும் சித்துகளுக்கும் தொடர்புண்டா ?

முன்கேள்வியின் பதிலே இதற்கும் பொருந்தும்.

5. சித்து, சித்தர் என்னும் சொல் முதன்முதலில் தமிழில் எந்த நூற்றுண்டில் வழங்கப்பட்டது ?

இதுபற்றி என் கட்டுரையில் கூறியுள்ளேன்.

6. சித்தார்த்தன் என்னும் சொல்லுக்கும் சித்துக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடுமா ?

சிந்திக்க வேண்டியதுதான்.

7. இராமலிங்க அடிகளாரின் வரலாற்றில் சில அற்புத நிகழ்ச்சிகள் சுட்டப்பெறுகின்றன :

1. உடலில் ஒளி ஊடுருவிச் சென்று விடுவதால் அவரை நிழற்படமெடுகக முயன்று முடியாமல் போனதாகச் சொல்லப்படுகிறது.
2. அங்கங்களை வேறு வேருகத் துண்டுதுண்டாகத் தனியே கிடத்தித் துயினறதாகச் சொல்லப்படுகிறது.
3. ஒரே சமயத்தில் தன்னைப்போலவே பல உருவங்களை எடுத்தாரெனவும் உரைக்கப்படுகிறது. இவையெல்லாம் சித்துகளால் இயலுமா ?

இயன்றதால்தானே இவ்வாறெல்லாம் செய்தார் எனக் கூறுகின்ருர்கள்.

8. மெஸ்மரிஸம், ஹிப்ஞடிஸம் போன்ற துறைகளுக்கும் சித்துகளுக்கும் தொடர்பு உண்டா ?

இரண்டும் மனப்பயிற்சியை ஒட்டியதே. ஆனல் தன்மையில் வேறுபாடு உடையன.

9. பேய்பிடித்தல், செய்வினை செய்தல், பில்லி சூனியம் வைத்தல் என்றெல்லாம் சொல்லப்படுவன சித்துகளா ?

சித்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. அவித்தா சாதனைகள் எனப்படும்.

10. தமிழ்ச் சித்தர்களுக்கும் வடநாட்டுச் சித்தர்களுக்கும் மேலைநாட்டுச் சித்தர்களுக்கும் இடையே உள்ள ஒருமைப்பாடும் முரண்பாடும் அறிய விழைவு.

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் நான்காவது கேள்விக்கான விடையே இதற்கும் பொருந்தும்.

11. மந்திர எழுத்துக்களின் வரிவடிவம் பற்றி அரிய விழைவு.

வரிவடிவத்தில் சிறப்பு இல்லை. அது உயிரற்ற உடம்பு போன்றது. உயிரூட்டிய வரிவடிவமே (மந்திர எழுத்துக்களே) எல்லையில்லா ஆற்றலைப் பெற்றது. அணுவைப் போல ஆற்றலை உடைய இறைச் சக்தி எனலாம்.

12. தமிழ்ச் சித்தர்களின் மந்திர எழுத்துக்களால் விளக்கப் படும் பொருண்மையை விளக்கி அகராதி தயாரித்தல் இயலுமா?

மறை, வேதம் இவற்றின் பொருள் போய்விடுமே !

13. நாத்திகர்கள் சித்தர்களாக ஆக முடியுமா?

முடியாது.

14. இல்லறத்தார் சித்தர்களாக ஆக முடியுமா?

பெரும் முயற்சி தேவை.

15. மேலைநாட்டுச் சித்தர்களும் மந்திர எழுத்துக்களைப் பயன் படுத்தினரா?

ஆராய வேண்டியது.

16. சித்தர்களுள் பெண்பாலர் உளரா?

திரு. இ. சுந்தரமூர்த்தியின் பதினெட்டாவது வினுவிற்கான விடையே இதற்கும் பொருந்தும்.

17. இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் அம்மாநில மொழி பேசும் சித்தர்கள் இப்போது உளரா?

இருக்கலாம்.

18. சித்தர்களிடம் மாதுளம்பழம் கேட்பதுபோல், வித்தை (Magic) புரிவோரிடம் 'அருகம்புல்' கேட்பது இன்னும் கிராமப் பகுதிக்ளில் உள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நன்றி.

19. பிறமொழிச் சித்தர்களிடமும் மாதுளம்பழம் கேட்க முடியுமா?

யாராக இருந்தாலும் கேட்கலாம். வித்தைக்குக் கட்டுப் படாதது மாதுளை.

திரு. வீ. ஞானசிகாமணி

1. சித்தர்கள் தோன்றுவதற்கெனத் தனிப்பட்ட காலச் சூழல் ஏதும் உண்டா?

அப்படி எதுவும் சொல்ல முடியாது.

2. 'சித்தர்களின் பாடல்களில் மதங்களில் ஒன்றை உயர்த்திப் பிறவற்றைத் தாழ்த்திப் பாடும் பண்பும் காணப்படவில்லை. கடவுள் பெயரால் நடக்கும் தேர்த் திருவிழாக்களையும் உருவ விளக்கத்தையும் சித்தர்கள் கண்டித்துப் பாடியிருக்கின்றனர். தமிழ் மக்கள் சிலரின் சிந்தனை புது வழியிற் செல்வதனைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன' —சித்தர் பாடல்கள் பற்றிய இக்கூற்று பற்றித் தங்கள் கருத்து என்ன?

இதுபற்றி எனது கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

திரு. கொ. மோ. ஜனார்த்தனம்

1. சித்தர்கள் ஜாதி முறையைக் கண்டித்ததுபோல் அன்றைய தமிழகப் பொருளாதார அமைப்பில் உள்ள நிலச் சுவான்தார் முறையையும் தீண்டாமையையும் கண்டித்தமைக்கு ஏதேனும் குறிப்பு உள்ளதா?

உறுதியாக இருக்கும்.

2. 'சித்திகள்' என்பது Psycho-physical characteristics என்பதுதான். அதில் ஒன்றும் பெரிய 'ஞான இயல்புகள்' (Spiritual attributes) இல்லை என்பது சித்தர்கள் கருத்தாக இருப்பதற்குச் சான்றுகள் தர முடியுமா?

தங்கள் கருத்து தவறு என்பது என் எண்ணம். சித்துநிலை என்பது ஆன்மீக வளர்ச்சியே (Spiritually elevated stage) எனக் கருதுகிறேன்.

3. 'சத்தியசாயிபாபா' 'பன்றிமலை சுவாமிகள்'—இத்தகைய நவீன சித்தர்களுக்கும் ஞானத் தேட்டத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? பிணி நீக்குதல், பொருளாதாரத் தொல்லைகளை நீக்குதல், இவையெல்லாம் சமுதாய நிகழ்ச்சிகள் (Social and Material deeds) தானே? இதை மேற்கொள்ளச் சித்தர்களது 'ஞான வளர்ச்சியை' மதிப்பிடுவது தவறுதானே.

(அ) தாங்கள் காட்டியுள்ள நபர்களின் செயல்களுக்கும் ஞானத்திற்கும் தொடர்பு இல்லை என்பது எனது கருத்து;

(ஆ) ஒருவகையான வியாபாரம்;

(இ) தவறுதான்.

திரு. ந. இராசகோபாலன்

1. தமிழ் நாட்டில் சித்தர்கள் இருப்பதைப் போல, வட நாட்டிலும் சித்தர்கள் இருந்தார்களா? 'ஆம்' எனில் அவர்களைப் பற்றி ஏதேனும் அறிவிக்க இயலுமா?

எனது கட்டுரையில் குறித்துள்ளேன்.

2. பதினெண் சித்தர்கள், பைந்தமிழில் பாக்களைப் பாடியிருக்க, 'அட்டமாசித்தி' போன்று வடசொல் ஆட்சி, இத்துறையில் அதிகமாக இருப்பதற்கு என்ன காரணம்?

இதுபற்றி ஆராய்ந்து வருகிறேன். வடமொழி (Sanskrit) சித்தர்களது குழூஉக்குறி மொழி என்னும் கொள்கையைச் சிலர் துணையோடு ஆராய்கின்றேன்.

3. Paul Brunten எழுதிய Search in Secred India என்ற நூலில் தான் சித்து கைவந்த பலரைச் சந்தித்ததாக அறிவித்துள்ளார். அவருள் ஒருவர், ஒரு குருவியின் தலையைத் திருகிச் சாகடித்து மீண்டும் உயிர் அளித்தார் என்று குறிப்பிடுகிறார். இது எந்த அளவில் ஏற்புடைத்து?

அளவிலா ஆற்றலை உடைய சித்தர்களால் இயலுவதே.

திரு. கோ. கண்ணன்

1. சிவபெருமான் சித்தன் என்றும், சிவபெருமானை வணங்குபவர் சித்தர் என்றும் கொள்ள இயலாது. ஏனெனில்,

   வாலி வணங்கிய இடம் வாலீசுவரம் என்றும்
   இராமன் வணங்கிய இடம் இராமேசுவரம் என்றும்

   கூறப்பட்டது போல சித்தன் வணங்கிய இடம் சித்தீசுவரம் (சித்தேசுவரர்).

இது உங்களுடைய கருத்து.

2. பதினெட்டு என்பது எண்ணிக்கை என்று கொள்ளலாம், பதினெட்டு வகைச் சித்தர் என்று கொள்ள இயலுமா? சாத்திரங்கள் 32-ல் அறிவியல் (Science) சம்பந்தப்பட்டது 18 என்றால், 18 வகை அறிவியலோடு இதனை நினைக்க முடியுமா? தமிழகத்தின் முதல் அறிவியலாராக

(Scientists) சித்தர்களே நினைத்தால் இக்கோணம் ஆய்விற்குரியது.

உண்மைதான்.

3. ஆனந்தக் கும்மி தனி யாப்பல்ல. ஆனந்தம் — பொருள் பற்றியது எனலாமா?

இதுபற்றித் தெளிவாகக் கட்டுரையில் குறித்துள்ளேன்.

திரு. சி. மாரிமுத்து

1. அறிஞர், ஞானியர், சித்தர் என்பவர்களுக்குள் வேறுபாடு என்ன? முத்தியடைவது என்பது சித்தியடைவது என்பதைக் குறிக்குமா? இரண்டுக்கும் வெவ்வேறு நிலையா? அப்படியானல் விளக்கந் தருமாறு வேண்டப் படுகின்றது.

(அ) அறிவுடையார் அறிஞர்; ஞானமுடையார் ஞானியர்; சித்தம் செம்மையுடையார் சித்தர்.

(ஆ) குறிக்கலாம். சித்தியடைதல் என்பதற்குப் பெறுதல் (achieve) என்றும் ஒரு பொருள் உண்டே.

2. சித்தம், உள்ளம், மனம், நெஞ்சம் முதலிய சொற்கள் குறிப்பிடும் இடம் நம் உடலில் எங்கு இருக்கிறது என்பதைச் சித்தர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்களா? இருந்தால் ஒவ்வொன்றிற்கும் உள்ள வேறுபாடு சித்தர் நூல்களில் குறிப்பிடப் பட்டிருக்கின்றதா?

தரமான கேள்வி! இதுபற்றி இனி ஆராய்வேன்.

3. சத் சித் ஆனந்தம் என்ற சொல்லில் உள்ள 'சித்' எதைக் குறிக்கின்றது?

பேரறிவு என்னும் பொருளுடையது.

திரு. பெ. சுப்பிரமணியன்

1. சிவனே வணங்குபவர்கள் சித்தர்கள் என்று பொருட் பட்டால் கிராமதேவர், 'யகோபுச் சித்தர்' என்று மகம் மதிய சமயத்தைச் சார்ந்தவராகச் சொல்லப்படுகிருர்; 'ஞானசரம்' தாக்கலைப் பீர் முகம்மது அவர்களால் எழுதப்

பட்டது. மகம்மதியராக இருப்பவர் அல்லது மற்றவர்கள் எதனை முதலாகக் கொண்டு வழிபடுவர்?

இப்படியும் இருக்கலாம் என்று குறித்துள்ளேன். மேலும் பிற் காலத்தில் சிவனைச் சமயத்திற்குள் சிக்க வைத்துவிட்டோம். சிவன் சித்தர்கள் தலைவன்.

2. சித்தர்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உறுப்புக்களின் மூலம் மருந்து செய்தலைப் பற்றிச் சொல்லுவதால், இவர்கள் உணவுப் பழக்கத்தில் சைவம், அசைவம் இரண்டையும் கொண்டிருந்தனர் என்பது உண்மைதானே!

உணவுப்பழக்கத்தில் சைவர்களாக இருப்பதையே பார்க் கிறேன்.

திரு. பொ. ஜெயராஜ்

1. இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கியம் (பேராசிரியர் எழில் முதல்வர்) என்னும் புத்தக முன்னுரையில் திரு. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதுகின்றுர். "அங்கங்கே ஆசிரியர் கையாளும் சில வடசொற்கள் தமிழ்ச் செவியைக் கடிக்கின்றன." கட்டுரையாளர் பல வடசொற்களைக் கையாண்டார். 1. துரியம் 2. சித்து 3. ஆன்மீகம் 4. பரம்பொருள் 5. சரியை 6. கிரியை .... இவ்வாறு நீண்ட பட்டியல் உண்டு. "பிறமொழிச் சொற்களை அளவின்றிக் கையாள்வது தனி மனிதனின் மொழிச் சோம்பலைக் குறிக்கும்" (கேரள ஆய்வு நூல்). தங்களின் வட மொழிப் பற்றிற்குக் காரணம் என்ன?

எம்மொழியும் ஒன்றே என்னும் மிக விரிந்த பொது நோக்காகவும் இருக்கலாம். திரு. நா. இராசகோபாலனுடைய இரண்டாவது வினுவிற்குரிய விடையும் காண்க.

2. 'சகரக் கிளவி' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு முரண்பாடான 'சித்தர்' என்னும் பெயருடைய இவர் களுக்கும் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

தாங்கள் தொல்காப்பியத்தைத் (தொல். எழுத்து-நூற்பா. 62) தெளிவாகப் படிக்காமல் வினவை எழுப்பியுள்ளீர் எனக் கருது கிறேன்.

3. 'வாழ்வனைத்துமே யோகம்' என்று பூரண யோக குறிக்கோள் வெளியிட்ட அரவிந்தரைப் பற்றி ஒரு வரி கூடக் குறிப்பிடவில்லையே. சித்தரை உற்று நோக்கிய நீங்கள் ஏன் அரவிந்தரோடு ஒப்பு நோக்கவில்லை. இது பல்கலைக்கழக கோட்பாடான 'உற்று நோக்கு' 'ஒப்பு நோக்கு' என்பதற்கு முரண்பாடு அல்லவா?

ஒப்பு நோக்கவேண்டும் என்ற எண்ணம் முன்பு எழவில்லை. இனி எழலாம்.

4. 'பிள்ளைகளுக்கு இளக்காரம் கொடுக்காதே' என்பது சித்தர் கருத்து எனக் கூறினீர்கள். இக்கருத்து ரூசோ, ஜான்லாக், காமினியஸ் போன்ற கல்வி நெறிச் சிந்தனை யாளர் கருத்துக்கு முற்றிலும் முரண்பட்டதாயிற்றே. இதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

முரண்பாடு இருந்தால் என்ன?

ஆறும் நாள் கருத்தரங்கு—14-2-1974

பவணந்தியார்

[கட்டுரையாளர் : பேராசிரியர் மா. நன்னன்]

அவையோர் எழுப்பிய வினாக்களும் ஆசிரியரின் விடைகளும்

டாக்டர் ந. சஞ்சீவி

1. இலக்கணம், மொழியியல் இரண்டிற்கும் உரிய வேறுபாடுகள் யாவை?

மொழியியல் பற்றிக் கூறும் உரிமை எனக்கில்லை. ஆயினும் ஒன்று கூறுவேன்: அஃதாவது தமிழிலக்கணம் பொருளுணர்வை அடிப்படையாகக் கொண்டது; மொழியியல் அத்தகையதன்று.

2. பேச்சு மொழியே உண்மையான மொழி என்பது பற்றித் தங்கள் கருத்து யாது?

மொழியப்படுவதே மொழி என்பது உண்மையாதலின் பேச்சு மொழியே உண்மையான மொழி என்பதிலையமின்று. ஆயினும் அது முற்றிலும் செம்மையானதாய் இருக்க முடியாது என்பதையும் ஈண்டு மறக்க முடியாது.

3. புணரியல் விதிகள் யாவும் இன்று தேவையா? இல்லை என்றால் எவ்வெவ் விதிகளை நெகிழ விடலாம் என்று நினைக்கிறீர்கள்?

அவை யாவும் தேவையில்லை. குற்றியலுகரம் போன்ற பல விதிகள் இப்போதே கழிந்து வருகின்றன. பல்கலைக்கழகம் கழிந்த பழையனவும் புகுந்த புதியனவும் பற்றி ஆய்ந்து முடிவு செய்தல் நலம் என்னும் கருத்துடையேன்.

4. நன்னூல் பற்றிய ஆராய்ச்சியின் வளர்ச்சி யாது?

இன்றைய தேவைக்கேற்ப வளர வேண்டும்.

5. தமிழ் இலக்கண வரலாற்றில் நன்னூலுக்கு உரிய இடம் யாது?

என் முன்னுரையில் இதற்கு விடையுள்ளது.

6. ற வுக்குப் பழமையாக ட ஒலி உண்டு என்ற கருத்து சரியா?

சரியன்று ; காரணம் பொருள் வேறுபாடே.

7. ஒரே மொழியில் பல்வேறு பொருள்கள் தரும் ஒரே சொல் இருக்க முடியாதா? இவ்வகையில் சேனாவரையர் கருத்து சரியா?

சொல் பொருள் உணர்த்துவது ஆதலின் ஒருசொல் ஒரு பொருளைத்தான் உணர்த்த முடியும். வேறு பொருளை உணர்த்தினால் அது வேறு சொல் எனவே படும். ஒலி ஒற்றுமை குறித்து வேறு பொருளுணர்த்துவனவற்றை ஒரு சொல் என்று கொண்டால் மோர் என்னும் தமிழ்ச் சொல்லையும் More என்னும் ஆங்கிலச் சொல்லையும் ஒன்றாகக் கொள்வதும் சரியாகலாம்.

8. இப்பொழுது நம் கல்லூரிகளில் உள்ள இலக்கணக் கல்வி முறையில் எத்தகைய மாற்றங்களைத் தாங்கள் விரும்புகிறீர்கள்?

இப்போது சிறப்புத் தமிழ்க் கல்வி பெறுவோர் தவிர பிறர்க்கு இலக்கணக் கல்வியே தமிழிலில்லை எனலாம். இன்றைய பேச்சுக்கும் எழுத்துக்கும் இன்றியமையாத நடைமுறை இலக்கணம் சேர்க்கப்பட வேண்டுமென்பதும் அதனை மாணவர் போற்றிக் கற்கு முறையில் அதற்குப் பயனுள்ள சிறப்பிடம் நல்க வேண்டுமென்பதும் என் கருத்தாகும். ஆனால் சிறப்பாகத் தமிழைக் கற்போர்க்கே இலக்கணம் தனிச் சிறப்பிடம் பெறாதபோது பொதுத்தமிழ் பயில்வோரின் நிலை குறித்துப் பேசுவது பயன் தருமா ?

9. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தங்கள் கருத்து யாது?

அ, இ, உ, எ, ஒ ; க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன, ஃ, ா, என்னும் இருபத்தைந்து வரிவடிவங்களைக் கொண்டே பொறிகளின் உதவியால் எழுதும் இக்காலத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியும். இது ஏற்றுக் கொள்ளப்பட்டால் எழுதுகோல் பிடித்து எழுதும் நிலையே ஏற்படாது. கையடக்கமான தட்டச்சுக்களையே எல்லாரும் எப்போதும் பயன்படுத்தலாம் என்பது என் கருத்து. இதனைச் செம்மையாக ஆராய்ந்து நடைமுறைப் படுத்தல் நலம்.

10. ஒலியியல் பற்றித் தமிழ் இலக்கண நூல்கள் தெரிவிக்கும் கருத்துகள் போதுமானவையா?

ஒலிக்கும் முறை மாறியுள்ள இக்காலத்திற்கு அவை போது மானவையல்ல.

திரு. இ. சுந்தர மூர்த்தி

1. எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுவோர் உயிரையும் மெய்யினையுமே வைத்துக் கொள்ளலாம். உயிர் மெய் எழுத்துக்கள் தேவையில்லை என்னும் கருத்தினைக் கொண்டுள்ளார்கள். இம்முயற்சியினைக் காலம் ஏற்றுக் கொள்ளுமா? தங்கள் கருததினை அறிய அவா.

என் கருத்து முன் உரைக்கப்பட்டது. இம்முயற்சியினை இக் காலம் ஏற்றுக் கொள்வதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். கனிந்து வரும் எதிர்காலம் இதனை ஏற்றுப் பயன் கொள்ளாது விடாது.

2. நன்னூல் எங்தெந்த நூல்களினின்றும் செய்திகளைத் தொகுத்திருக்கக் கூடும்?

பெரும்பாலும் தொல்காப்பியக் கருத்துக்களையே அது தொகுத் துள்ளது. சிறுபான்மை உரையாசிரியர்களின் கருத்துக்கள், வட நூற் கருத்துக்களமைந்த வேறு சில நூல்களையும் தழுவி யிருக்கலாம்.

3. பவணந்தி மாமுனி நற்பதி தொண்டை மண்டலத்திலுள்ள தாகத் தொண்டை மண்டல சதகமும், பவணந்தி மாமுனி தோன்றி வளர்ந்தது கொங்கு மண்டலத்திலுள்ள குறும்பு நாட்டுச் சனகாபுரம் என்று கொங்கு மண்டல சதகமும் கூறுகின்றன. இவற்றுள் எது உண்மையாயிருக்கக் கூடும்?

இரு மண்டலத்தாரும் விரும்பும் மேன்மையுடையது பவணந்தியின் ஊர் என்பதே உண்மை.

4. தமிழ் இலக்கண உலகில் பவணந்தியாரின் 'தனித்த இயல்புகள்' பற்றி அறிய அவா.

தொகை, சுருக்கம், எளிமை இவையே அவரின் தனித்த இயல்புகளாக இருக்கக் கூடும்.

திரு. வ. ஜெயதேவன்

1. தமிழகராதியியலுக்குப் பவணந்தி முனிவரின் பங்கு என்ன?

இடை உரி இயல்களும் பிற சில நூற்பாக்களும் தமிழகராதி யியலுக்குப் பயன்படுவனதாம்.

2. குறளுக்குப் பரிமேலழகர் உரையைச் சிறப்பாகக் குறிப்பது போல் நன்னூலுக்கு யாருடைய உரையைச் சிறப்பாகக் குறிக்கலாம்?

சிவஞான முனிவர் உரையையே குறிக்கலாம்.

3. வேற்றுெலிச் சொற்களைப் பவணந்தி வழித் தமிழ்ப் படுத்தினுல் அது இக் காலத்திற்குப் பொருந்துமா?

தமிழிலில்லாப் பிற ஒலிகளை அவ்வழியில் தமிழ்ப்படுத்துவதே எக்காலத்திற்கும் பொருத்தமானது.

4. இக் காலத்திற்குப் பொருந்தாத இலக்கண விதிகளாக நன்னூலில் உள்ளவற்றை அறிய ஆவல்.

"பழையன கழிதல் வழுவல" என்று அவரே கூறியுள்ளார். ஆகவே கழிந்தன அவர் நூலிலும் உள. இது கருத்து வேறுபாட்டுக் குரியது. ஆதலின் வல்லுநர் குழு ஒன்றே இதனை முடிவு செய்தல் நலம்.

திரு. கொ. மோ. ஜனர்த்தனம்

1. பவணந்தியார் 'ஏழை'க்குக் கல்வி புகட்டுதல் சிறப் பாகாது எனக் கூறியது எதனுல்?

பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பதனுல். அதனுற்ருன் இன்றைய அரசு மாணவனுக்கு ஏழ்மை இல்லாமல் உணவு முதலியன வழங்குகிறது. ஏழை என்பதற்கு வேறு பொருளும் உண்டே.

2. ‘தற்பவம்’ ‘தற்சமம்’ இக்கருத்துகள் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு (வடசொற்கிளவி) முரண்பட்டு இருக்கக் காரணம் என்ன?

முரண்பாடின்று; வேறுபாடே உண்டு. அதற்குக் காரணம் கால வேறுபாடே.

திரு. பொ. ஜெயராஜ்

1. இலக்கிய ஆய்வைச் சுவைப்பது போல் — புரிவது போல் இலக்கண ஆய்வைச் சுவைக்க முடியவில்லை. புரிய முடியவில்லை. இலக்கணத்தைப் படிப்பதும் இன்றைய தமிழ் இலக்கிய மாணவர்களுக்குப் பெரும் தலைவலியாக உள்ளது. பள்ளி மாணவனுக்குக் கணிதம் போல்—தமிழ் இலக்கிய மாணவனுக்கு நன்னூல் அமைந்துள்ளது. இது ஒவ்வொரு மாணவனின் பிரச்சனை. இந்தத் தலை வலியைப் போக்கப் பகுத்தறிவாளர் நல்கும் மருந்து என்ன?

இலக்கிய ஆய்வையும் சுவைக்காதவர்களும் அதனைப் புரிந்து கொள்ளாதவர்களும் பலர் இருக்கிறார்கள். ஒன்றைச் சுவைப்பதும் அதனைப் புரிந்து கொள்வதும் ஒருவர் அதில் காட்டும் ஆர்வத்தையும் மேற்கொள்ளும் ஊக்கம், முயற்சி முதலியவற்றையும் பொறுத்தது. இலக்கியம் உணர்வு பற்றியது, இலக்கணம் அறிவு பற்றியது. உணர்ச்சி பலருக்கும் இருக்கும்; அறிவு பலருக்கும் இருக்காதோ? அதனாற்றான் பலர் இலக்கணத்தை விரும்புவதில்லையோ? இன்றைய மாணவர் சிலருக்குப் படிப்பதே தலைவலியாயிருக்கிறது. ஆகவே இலக்கணந்தான் தலைவலி என்று சொல்ல முடியாது. முறையறிந்து பயிற்றினல் நன்மாணவனுக்கு அது சுவை அளிக்கும். பள்ளி மாணவனுக்குக் கணக்கு இன்றியமையாதது போல் இலக்கிய மாணவனுக்கு இலக்கணம் இன்றியமையாததே. பகுத்தறிவாளராக ஆவதே எல்லாத் தலைவலிகளையும் பிற நோய்களையும் போக்கும் ஒரே மருந்து.

2. இலக்கண ஆய்வுகள் வரைபடம், சார்ட்டுகள், ஸ்லைடுகள் உதவியின்றிக் கேட்பது ‘வேம்பின் பைங்காய்’ தின்பது போன்றது. பொறிஇயல் ஆய்வுகளில் பயன்படுத்தப் படும் வரைபடங்கள் ஈண்டும் பயன்படுத்தப்பட வேண்டும்

என்பது என் கருத்து. இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

வாயினால் மட்டுமே உணவு கொண்டு வளர முடியாதவர்களுக்கு ஊசி முதலியன மூலமாகவும் ஊட்டம் தருவது போன்றதே அத் துணைக் கருவிகளின் உதவி. காதோடன்றிக் கண்ணும் பயன் படுத்தப்படுவதால் அது சிறந்த முறையே.

3. தங்களின் நகைச்சுவை மட்டுமே மனதில் நிற்கிறது.

தங்களின் முதல் வினாவின் ஒரு பகுதிக்கு இது மறுப்பளிக்க வல்ல விடையாக இருக்கிறது. தங்களுக்கும் என் இலக்கண ஆய்வு சுவை தந்தது, நான் பெற்ற பெரு வெற்றி மட்டுமின்றி இலக்கணத்தின் வெற்றியுமாகும் அது.

ஏழாம் நாள் கருத்தரங்கு—15-2-1974

நிகண்டுகள்

[கட்டுரையாளர் : திரு. கு. சுந்தரமூர்த்தி]

அவையோர் எழுப்பிய வினாக்கள்

டாக்டர் ந. சஞ்சீவி

1. 'நிகண்டு' என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல் இல்லாதது ஏன்?
2. தமிழ் நிகண்டுகட்கு நிகராக வடமொழியில் உள்ளவை எவை? இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?
3. நிகண்டு முறை வடமொழியிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதியா?
4. நிகண்டுகள் தொகுப்புக்கு மேற்கொள்ளப்பட்ட நெறி முறைகள் யாவை?
5. இதில் காலந்தொறும் ஏற்பட்ட மாறுதல்கள்—வளர்ச்சிகள் யாவை?
6. பதினெட்டாம் நூற்றாண்டு முடிய உள்ள நூல்களில் எவ்வளவு சொற்கள் உள்ளன?
7. நிகண்டுகட்டு இனித் தேவை உண்டா? காரணங்கள் கூறுக.
8. எவ்வெவ் வகையான புது அகராதிகள் தேவை?
9. நிகண்டுகளில் திசைச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் முதலியன உள்ளனவா?
10. நிகண்டுகளை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டு கிறார்களா?
11. நிகண்டுகளைப் புகழும் பாடல்கள் உண்டா?
12. நிகண்டுகளில் இலக்கியச் சுவைக்கு இடமுண்டா?
13. நிகண்டுகளால் விளங்கும் இலக்கண நுட்பங்கள் உண்டா?

14. பதினெட்டாம் நூற்றுண்டு வரை வந்த நிகண்டுகட்கும் பத்தொன்பதாம் நூற்றுண்டு நிகண்டுகட்டும் ஏதேனும் வேறுபாடுகள் உண்டா?

15. நிகண்டுகளால் மொழி வரலாறு மட்டுமன்றி வேறு வரலாறுகளும் புலனுகின்றனவா?

திரு. வ. ஜெயதேவன்

1. பிற சமயத்தாரைக் காட்டிலும் நிகண்டுத் துறையில் சமணர்கள் மிகுதியாக ஈடுபட்டமைக்குச் சிறப்பாக ஏதேனும் காரணங்கள் உண்டா?

2. வடமொழி நிகண்டுகளுக்கும் தமிழ் நிகண்டுகளுக்கும் அடிப்படையில் உள்ள ஒருமைப்பாடுகள், முரண்பாடுகள் யாவை?

3. மேலைநாடுகளில் அகராதிகள் தோன்றுவதற்கு முன்னர் யாப்பிலே அமைந்த நிகண்டுகளைப் போன்ற படைப்புகள் உண்டா?

4. தொல்காப்பியர் உயிரியல், மரபியல், இடையியல் ஆகிய இயல்கள் தவிரப் பிற இயல்களிலும் ஆங்காங்கே பொருண்மை சுட்டுவதேன்?

5. மிகவும் அரிய சொற்களுக்குப் பொருள் சுட்டும் உரியியலில் தீர்தல், தீர்த்தல் போன்ற எளிய சொற்களுக்கும் தொல்காப்பியர் பொருண்மை சுட்டுவதேன்?

6. நிகண்டுகள் பெயர்ச்சொற்களுக்குப் பொருள் விளக்குவது போல் வினைச்சொற் விகற்பங்களுக்குப் பொருள் விளக்காமல் அமைந்ததேன்?

7. நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனுர் என்பவரின் பெயர் பற்றிய தங்கள் கருத்தறிய அவா.

8. அகராதி நிகண்டுதான் உலகத்திலேயே முதன் முதலில் அகரநிரலில் அமைந்த படைப்பு எனக் கருதப்படுவது பற்றிய தங்கள் கருத்தறிய விழைவு.

9. திவாகர நிகண்டு தொடங்கி ஔவை நிகண்டு ஈருக மொத்தம் 16 நிகண்டுகள்தாம் உள்ளனவா?

10. தங்கள் கட்டுரையில் இடம்பெற்ற 16 நிகண்டுகளுள் தம்முள் எவை எவை எவ்வகையில் வேறுபடுகின்றன? எவ்வகையில் ஒன்றுபடுகின்றன?

11. வடமொழி வேத நிருக்தத்தில் வரும் 'நிகண்டு' என்னும் பகுதி அப்பெயர் பெறக் காரணமென்ன?

12. நிகண்டு என்பது எந்த வேரினின்றும் பிறந்த சொல்?

13. தொல்காப்பியமே போல் வீரசோழியம் நேமிநாதம் போன்ற இலக்கண நூல்கள் அகராதியியலுக்குக் காணிக்கை செலுத்தியுள்ளனவா? செலுத்தியிருப்பின் அவற்றின் சிறப்பியல்புகள் யாவை?

14. நிகண்டு என்பதைத் தமிழ்ச்சொல் எனக் கொண்டால் அச்சொல்லை எப்படி விளக்கலாம்?

15. நிகண்டு கற்று இலக்கணம் கற்ற பின்னரே இலக்கியம் கற்கும் மரபு எப்போது ஏற்பட்டிருக்கக் கூடும்?

16. நிகண்டுகள் தோன்ருத காலத்தில் நிலவிய இலக்கியங்களில் வரும் சொற்களெல்லாம் மக்களுக்கு எளிமையாகப் புரிந்திருக்குமென எண்ணுகிறீர்களா?

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. நிகண்டுச் செய்திகளால் தமிழக இலக்கிய, சமுதாய மொழி வரலாறுகளை அறியவியலுமா?

2. 'நிகண்டு' என்பது தமிழ்ச் சொல்லா? அதன் பொருள் யாது?

3. தமிழில் தோன்றிய முதல் நிகண்டிற்கும் இறுதி நிகண்டிற்கும் இடையேயுள்ள மொழி வளர்ச்சி பற்றி அறிய அவா.

4. சொற்களின் ஒலியமைப்பு பற்றி அறிய நிகண்டுகள் உதவுமா?

5. நிகண்டுகள் அல்லது அகராதி வகைகளை உலகுக்கு முதன்முதலில் வழங்கியவர் தமிழர் தாமா?

6. பரிமேலழகர் அகராதியியலுக்கு வழங்கிய தனிக்கூறுகள் எவை?

7. உரிச்சொல் பனுவல் என்றே பவணந்தி, மயிலைநாதர் முதலியோர் வழங்கினர். ஆனால் தமிழகத்தில் இச்சொல் வழக்கிழந்து எவ்வாறு 'நிகண்டு' என்னும் சொல் புகுந்தது.

8. நிகண்டுப் பெயர்கள் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களைத் தழுவியனவாக உள்ளனவே ஏன்?

திரு. கு. மோகனராசு

1. 'நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டன்' என்பதில் நிகண்டன் என்பது பௌத்த வாத வகைகளுள் ஒன்றான நிகண்ட வாதத்தில் சிறந்தமையைச் சுட்டும் என்பர். இதுபற்றிய தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

2. உரிச்சொல் பனுவல், நிகண்டு என்னும் இவற்றிற்கு இடையே ஏதேனும் நுட்ப வேறுபாடுகள் உளவா ?

3. உரிசசொல், உரிச்சொல் பனுவல் என்ற பெயர்கள் மறைநது, நிகணடு என்ற பெயரே வழக்கிற்றாக வநததற்கு ஏதேனும் காரணம் அல்லது காரணங்கள் உணடா?

4. தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிகண்டுகளுக்கு உரிய இடம் யாது?

5. நிகண்டுகளின் தோற்றத்திற்குத் தொல்காப்பியம் எவ் வெவ்வகையில் துணை புரிந்துள்ளது ?

6. தொல்காப்பியத்திற்குப்பின் சொற்களஞ்சிய அளவில் 8-ம் நூற்றாண்டிற்குள் ஏதேனும் நூல்கள் தோன்றியுள் ளனவா ? இலலையாயின் அதற்கான கார்ணஙகள் யாது என விளகக வேண்டுகிறேன்.

7. சேந்தன் திவாகரத்தில் விலங்குகளின் பெயர்த் தொகு தியில் பறவைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பது எவ்வகையில் பொருந்தும்?

8. உலக மொழிகளிலேயே அகர நிரலில் எழுந்த முதல் நூல் 1594-ல் எழுந்த இரேவண சித்தரின் 'அகராதி நிகண்டு' என்ற கருத்தினைப் புலவர் சுந்தரஞ் சண்முகனுர் கூற, 1450-ல் இங்கிலாந்தில் அகர நிரலில் அகராதிகள் எழுந்துள்ளன என்ற கருத்தை டாக்டர் எஸ். எம். காத்ரே அவர்கள் கூறியுள்ளார். இதுபற்றிய தங்கள் கருத்து யாது என அறிய விரும்புகின்றேன்.

திரு. தா. மு. சுப்பிரமணியன்

1. திருமகள் ஆடிய கூத்து பாவை என்றீர்கள். திருப்பாவை என்ருல் திருமகள் ஆடிய கூத்து எனறு பொருள் கொள்ள இடமிருக்கிறது அவ்வாருகும்போது ஆண்டாள் பாடிய சங்கத் தமிழ் மாலைக்குத் திருபபாவை என்ற பெயர் வழங்கல் பொருந்துவதா? விளக்க வேண்டுகிறேன்.

2. குறுந்தொகையில் 'கள்வன்' என்ற சொல் 'நடுநின்றவன்' என்ற பொருளைத் தரும் என்பதை நிகண்டு கொண்டு கொள்ளலாம் என்றீர்கள். நிகண்டுகளுக்குக் காலத்தால் முந்தியது குறுந்தொகை. எனவே அச்சொல்லை நிகண்டு தொகுத்தவர்கள் தொகுத்து அப்பொருளைக் குறித்திருக் கலாமல்லவா? விளக்க வேண்டுகிறேன்.

திரு. கொ. மோ. ஜனர்த்தனம்

1. பாம்பன் குமரகுருபர சுவாமிகள் 'சேந்தன் செந்தமிழ்' பற்றிய குறிப்பு ஏதேனும் கூற முடியுமா?

திரு. பொ. ஜெயராஜ்

1. பிற நிகண்டுகளைவிட சூடாமணி நிகண்டு மட்டுமே பலரால் விரும்பிப் படிக்கப்பட்டது - இன்று ஒரு சிலரால் படிக்கப்படுகிறது. பிற நிகண்டுகள் ஒளி குன்றவும், சூடாமணி மட்டும் போற்றப்படவும் காரணங்கள் என்ன?

2. "யாரேனும் கேட்டுக் கொடுப்பது பிச்சை
ஞானமாகக் கொடுப்பது ஐயம்"

எனக் குறிப்பிட்டீர்கள். ஐயம் இட்டு உண் என்பதற்கும், பிச்சை, ஐயம் என்பதற்கும் உள்ள தொடர்பு என்ன?

3. இடைக்கால நிகண்டுகள் மட்டுமே ஈண்டு ஆராயப் பட்டன. இடைக்காலத்திலிருந்து சங்ககாலத்திற்குச் சென்றீர்கள். ஆனால் மங்கிக்கொண்டிருக்கும் இக் காலத்திற்கு வரவில்லையே ஏன்? அதைப்பார்த்துச் செய் தார்கள் - அதைப்பார்த்துச் செய்தார்கள் என்று கூறுவதைவிட இதைப் பார்த்து (நிகண்டுகளைப் பார்த்து) நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

4. தற்காலத்தில் தலையணை தலையணை போன்று பெரிய அகராதிகள் (Dictionaries) வந்துள்ளன. அமெரிக்கா, ரஷியா, இங்கிலாந்து போன்ற இடங்களில் பன்மொழி அகராதிகள் வருகின்றன. மேலும் Index என்றும், வெளியிடுகின்றார்கள். இவற்றிற்கும் நம் நிகணடு களுக்கும் உள்ள தூரம் என்ன! நிகண்டால் பயன் உண்டா?

எட்டாம் நாள் கருத்தரங்கு—16-2-72

இசை நாடக நூல்கள்

[கட்டுரையாளர் : டாக்டர் இரா. குமரவேலன்]

அவையோர் எழுப்பிய வினாக்கள்

டாக்டர் ந. சஞ்சீவி

1. 'முத்தமிழ்' என்று போற்றப்படும் நம் தாய்மொழியில் ஏன் அதிகமாக நாடக நூல்கள் ஏற்படவில்லை ?
2. 'நாடகம்' என்ற சொல் தமிழ்ச்சொல்லா? காரணங்கள் யாவை?
3. Drama என்ற ஆங்கிலச் சொல்லின் வேர் - வேர்ப் பொருள் யாது?
4. மூலமான (கதையிலும்) முதல் நாடக நூல் யாது ?
5. 'தமிழ் நாடக வளர்ச்சி' பற்றிய ஆராய்ச்சியில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் யாது?
6. தமிழிசை இயக்கம்போலத் தமிழ் நாடக இயக்கம் ஒன்று தேவை இல்லையா ?
7. இசைக்கலையின் நோக்கம் யாது?
8. நாடகக் கலையின் நோக்கம் யாது?
9. இசையும் நாடகமும் வானொலியாலும் திரைப்படத்தாலும் வளம் பெற்றுள்ளனவா? வறுமை அடைந்துள்ளனவா?
10. தமிழ்நாடக வரலாற்றில் புரட்சியாளர்கள் என்று போற்றப்படுபவர்கள் உள்ளார்கள்; அவ்வாறு இசையுலகில் போற்றப்படுபவர்கள் உள்ளார்களா ?
11. தமிழிசை, தமிழ் நாடக வரலாற்றின் பொற்காலம் எது என்று தாங்கள் கருதுகிறீர்கள்?
12. தமிழிசை, தமிழ் நாடகப் படைப்பில் பெண்களின் பங்கு யாது?

13. இசை, நாடகத் துறைகளால் ஒழுக்கம் கெடுகிறது என்ற கருத்தின் வன்மை மென்மைகள் யாவை?

14. தமிழ் இசை, நடன நாடகக் கலைகளுக்கும் பிற திராவிட/இந்திய இசை, நடன, நாடகக் கலைகட்கும் இடையே உள்ள ஓற்றுமை/வேற்றுமைகள் ஒப்பு நோக்கி ஆராயப் பட்டுள்ளனவா?

15. வடமொழியில் நாடக நூல்கள் மிகுதியாக இருப்ப தற்குக் காரணங்கள் யாவை?

16. தமிழ்நாட்டுத் தெருக்கூத்துகள் எந்த அளவிற்குக் கலைச் சிறப்புடையன?

17. தமிழ்நாடக வளர்ச்சியில் இசை நாடகங்கட்கு உரிய இடம் யாது?

18. 'நாடகம்' எம்மொழிச்சொல் என்பது பாவாணர் கருத்து?

19. கூத்து, நாடகம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

20. பழந்தமிழ் நாடக நூல்களின் அழிவிற்குக் காரணங்கள் யாவை?

21. நடனம், நாடகம் இரண்டில் எது அதிகமாகப் போற்றப் பட்டது? ஏன்?

22. 18-ஆம் நூற்றுண்டுவரை அறியப்படும் நாடகங்களின் பெயர்கள் யாவை?

23. சுந்தரம் பிள்ளைக்கு முன்பு ஏன் செய்யுள் வடிவில்கூட ஒரு நாடகநூலும் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட வில்லை?

24. இயற்றப்பட்டிருந்தால் ஏன் இப்போது ஒன்றுகூடக் கிடைக்கவில்லை?

25. 'சவரர்கள்' பற்றிப் பெருங்கதையில் உள்ள குறிப்புகள் யாவை?

26. சேக்சுபிரியர் காலத்தில்கூடத் தமிழகத்தில் நாடக நூல்கள் ஏன் அழியாப் புகழுடையனவாய்த் தோன்ற வில்லை?

27. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு போன்ருேர் முயற்சிகளின் பயன்களை 9 முதல் 18 நூற்ருண்டுகளில் எந்த அளவில் காண முடிகிறது?

28. நாடகக் கலைக்குரிய தூய தமிழ்க் கலைச் சொற்களைத் தாங்கள் பட்டியல் செய்துள்ளீர்களா?

29. சமுதாயத்தில் பல பிரிவினர் இருக்க உழவனும், குறத்தியும் மட்டும் பாடற்பொருள்களானது ஏன்?

30. பண்டே 'சேரி வழக்கு' செந்தமிழில் இடம் பெற்றதால் இப்போதும் பேச்சு வழக்குக்கு வாழ்வு தரலாமல்லவா?

31. இன்று கேரளத்தில் வழங்கும் கதகளி, துள்ளல் முதலியன பழந்தமிழ் நாட்டில் இருந்திராதா?

32. 'கருநாடகம் என்பதற்குப் பொருள் யாது?

33. காளிதாசர் தமிழர் என்றே மறைமலையடிகள் கருதும் கருத்து தங்கட்கு உடன்பாடா?

34. சிலப்பதிகார உரையில் மெய்ப்பாடுகள்பற்றிக் கூறப்படும் விளக்கங்கள் நடனத்திற்கா? நாடகத்திற்கா? சான்றுகள் உண்டா?

35. கல்வெட்டுகளில் நாடகம் என்ற சொல் முதன்முதல் எப்போது வந்துள்ளது?

36. தமிழ்நாட்டு ஓவியக் காட்சிகளில் (நடனம் இல்லை) நாடகக் காட்சிகள் ஏதும் உண்டா?

37. சிலப்பதிகாரத்தால் தெரியப்படும் நாடகக்கலை பற்றிய செய்திகள் யாவை? அவற்றின் செல்வாக்கு இடைக் காலத்தில் எந்த அளவிற்கு இருந்தது?

38. தமிழிசைக்கு அருணகிரியாரின் தனிப்பெருங் கொடைகள் யாவை?

39. திருப்புகழின் இசைச் சிறப்புகள் யாவை?

40. நடனம் பயிற்றும் நட்டுவர்கள் குடிகள் குடும்பங்கள் பல தமிழ்நாட்டில் இருக்கும்போது வழிவழி நாடகமாடியவர் குடும்பங்கள் ஏன் இல்லை?

41. நடிகர்கள் கூத்தாடிகள் என்று இழிக்கப்பட்டது ஏன்?

42. இடைக்கால இலக்கியங்களிலோ இலக்கணங்களிலோ உரைகளிலோ (நடனம் இல்லை) நாடகம் குறிக்கப்பட்டுள்ளதா?

43. பரிபாடல் பதிற்றுப்பத்து குறிக்கும் பண்கள் தேவாரத்திற்கு முற்பட்டன அல்லவா? இதுபற்றிப் பேராசிரியர் சாம்பமூர்த்தியின் கருத்து யாது?

44. 'பண்'ணுக்கும் 'தூக்கு'க்கும் உள்ள வேறுபாடு யாது?

45. 'தூக்கு'பற்றி இடைக்காலத்தில் குறிப்புண்டா?

46. தமிழிசை, நாடகத்தின்மீது பிறமொழி இனங்கள் விளைத்த நற்செல்வாக்கு ஒன்றுமே இல்லையா?

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. நாடகம் என்பதற்கு 'நாடு அகம்' நாடு தழுவிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டது என்ற குறிப்பினைச் சிலம்புச் செல்வர் அவர்கள் ஒருமுறை கூறினர். இது பற்றிய தங்கள் கருத்தினை அறிய அவா.

2 தமிழகச் சமுதாய வரலாற்று நிலையை அறிய உதவும் வண்ணம் பழைய நாடக நூல்கள் எவையேனும் கிடைத்துள்ளனவா?

3. ' ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே காரியத்திலே கண்வையடா தாண்டவக்கோனே' என்பதில் வரும் ஆரியக் கூத்து என்பது எது? தமிழ்க் கூத்து வகையில் எவையேனும் ஒன்று அதனோடு பொருந்துமா?

4. ஜைனர்கள் இசை நாடகம் போன்ற கலைகளை விரும்பவில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறதே! அது உண்மை தானா?

5. பரிதிமாற் கலைஞரின் 'நாடகவியல்' நூல் நாடக இலக்கண உலகில் அல்லது இன்றைய நடிப்புலகில் எத்தகைய இடத்தைப் பெற்று விளங்குகிறது?

6. 'பொம்மலாட்டம்' 'வில்லுப்பாட்டு' முதலியன நாடகக் கலை வரலாற்றில் எத்தகைய நிலையைப் பெற்று விளங்குகின்றன?

7. முக்கூடற் பள்ளு போல்வன ஆதிக்கத்தின் கொடுமைகளால் அல்லலுற்ற அடித்தள மக்களின் உணர்ச்சிப் பிழம்பு எனலாமா?

திரு. வ. ஜெயதேவன்

1. மிகத் தொன்மையான தமிழ் நாடகநூல் எது?
2. இசை, நாடக இலக்கண நூல்களாக எவை விளங்குகின்றன? இவற்றுள் தலைசிறந்தவை எவை?
3. மேலை நாட்டு இசை, நாடக நூல்களுக்கும் தமிழ் இசை, நாடக நூல்களுக்கும் உள்ள ஒருமைப்பாடு, முரண்பாடு யாவை?
4. வடமொழி இசை, நாடக நூல்களினின்றும் தமிழ் இசை, நாடக நூல்கள் எங்ஙன் வேறுபடுகின்றன?
5. இடைக்கால இசை, நாடக நூல்கள் சமுதாயத்தில் ஏற்படுத்திய மாறுதல்கள் யாவை?
6. இடைக்கால இசை, நாடக நூல்கள் இத்துறைகளின் முந்தைய நூல்களினின்றும் எவ்வகையில் வேறுபடுகின்றன?
7. இசை, நாடகத் துறைக்கு மகளிர்தம் பங்கு குறித்தறிய விழைவு.
8. இடைக்காலத்தில் கலை கலைக்காக இருந்ததா? மக்களுக்காக இருந்ததா?
9. இசை, நாடகத்துறை பற்றிய செய்திகளை அறிய நிகண்டுகள் எந்த அளவு துணை புரிகின்றன?

திரு. சு. சண்முகசுந்தரம்

1. இக்கால நாடகங்களைப் பார்க்கும்போது இடைக்கால நாடக நிலையை, தரத்தை, தன்மையைப் பற்றிய தங்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.
2. இடைக்காலத்தில் நாட்டுப்புற இசை (Folk music) எத்தன்மையில் விளங்கியது என்று கருதுகிறீர்கள்.
3. தோற்பொம்மைக் கூத்து அல்லது பாவைக் கூத்து என்ற கலை, கலைகளில் பெறும் இடத்தை அறிய விரும்புகிறேன்.

பேராசிரியர் திரு. மா. நன்னன்

1. முத்தமிழில் இயலும், இசையும் வாழ்கிற அளவுக்குக் கூட நாடகம் வாழாது தன் தொன்மைச் சிறப்பை இழந்ததற்குச் சிறப்பான காரணமேதேனுமிருக்க முடியுமா?

2. நூல் வடிவில் இருந்து வளர்ந்த நாடகம், பரம்பரையாக நடிக்கப்பட்டு வந்து ஏடேறுது வளர்ந்த நாடகம் ஆகிய இவ்விருவகையும் அழிந்ததற்குத் தனித்தனிக் காரணங்கள் இருக்கலாமா?

3. கூத்தர் என்னும் பண்டைக்குடி (சாதி) இன்றும் தமிழகத்தில் வாழ்கிறது என்பது உண்மையா?

4. நாடகம் அழிந்தமைக்கு அது பொதுவிலிருந்து விலகிச் சமயத் சாதிச் சார்புடையதாக மாறியமை ஒரு சிறப்புக் காரணம் என்னுங் கருத்து ஏற்புடையதா?

திரு. ச. முருகன்

1. நடிக்கப்படும் நாடகங்கள் — வாய்வழி சொல்லப்படும் (கதாகாலட்சேபம் எனப்படுவது) நாடகங்கள் வில்லுப் பாட்டு போன்றவை அல்லது அவையின் கண் முதலாவது ஒலிசகப்பட்டது போன்றவை என்ற இரு பிரிவை ஆய்வாளர் அமைத்துக் கொண்டிருக்கலாம். சங்க காலத்திற்கும் அதற்குப் பிற்பட்ட காலத்திற்கும் உரிய நாடகங்கள் கிடைத்தில என்பதற்குக் காரணம் அக்கால நாடகங்கள் வாய்வழி நடத்தப்பட்ட கதாகாலட்சேபங்கள் போன்றவையாய் இருந்திருக்கலாமா? அவ்வாறு வாய் வழி வந்தமையாலே காலபோக்கில் அழிந்திருக்கலாமா?

2. பள்ளு நாடகங்கள் எண்ண முடியாதவையாய் இருந்தும் சிலவே கிடைத்திருப்பது அவை எழுதப்படாமல் வாய் மொழியாய் அமைந்திருத்தலே வேண்டும் என்ற காரணத்திலேயா?

திரு. சொ. மோ. ஜனார்த்தனம்

1. கிரேக்க நாட்டிலிருந்துதான் 'நாடகம்' தமிழுக்கு வந்திருக்கிறது என்பது உண்மைதானா? Aeshylus (525-456 BC), Sophocles (495-406 BC), Euriprides (480-406 BC) எல்லாம் தொல்காப்பிய காலத்திற்குச்

சமமான காலத்தில் பூத்து முழுமையடைந்திடவில்லையா? மத்திய ஆசியாவிலிருந்து 'குதிரை' தமிழகத்து வந்த போதும், கிரேக்க நாடகமும் தமிழகத்துக்கு வந்ததா?

திரு. கோ. இரகுபதி

1. ஒட்ட நாடகம் போன்ற நாடகங்கள் மக்கள் நடுவினில் மேடையில் நடிக்கப்பெற்றது, பெறுகிறது. ஆயின் சிலப்பதிகாரம் போன்ற நாடகங்கள் ஏன் மேடைத் தகுதி பெறவில்லை? (சென்ற நூற்றுண்டுவரை)

திரு. பொ. ஜெயராஜ்

1. 'ஆடவர் மனங்கள் எனும் அரங்கின்மீது ஆடினுள்' என்பது ஒரு கவிஞனுடைய கற்பனை. இதற்கும இசை நாடக நூற் செய்திகள என்ற தலைப்பிற்கும் தொடர்பு இல்லை என்று கருதுகிறேன். நாடகம் (Drama) என்பதற்கும் ஒரு கற்பனைக்கும் எப்படி முடிச்சுப் போட்டீர்கள்?

2. இசை நாடகம்பற்றிக் குறிப்பிட்ட நீங்கள் ஏன் உலக இலக்கியஙகளோடு ஒப்பிடடுக கூறவில்லை. பிரான்ஸில் இசை நாடகம் உள்ளதா? அமெரிககாவில் இதன் வளர்ச்சி என்ன? ரஷ்யாவில இதன் மாறுபாடு (modification) என்ன? உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் கூறுவதால் மட்டுமே ஒரு பரந்த சிந்தனையை வளர்க்க முடியும் என்பது என் கருத்து. இதைப்பற்றி என்ன எண்ணுகின்றீர்கள்?

3. பிறர் சொன்ன கருத்துக்களைத் தொகுத்துக் கூறினீர்கள். நீங்கள் என்ன புதிய கருத்தைச் சொல்லுகின்றீர்கள்? கட்டுரையில் உங்களின் புதிய சிந்தனை வீச்சை என்றுல் காண இயலவில்லை. இதை ஒப்புக் கொள்ளுகின்றீகளா? மறுக்கின்றீர்களா?

ஒன்பதாம் நாள் கருத்தரங்கு 17-2-1974

வீரமாமுனிவர்

கட்டுரையாளர்: டாக்டர் வி. மி. ஞானப்பிரகாசம்

அவையோர் எழுப்பிய வினாக்கள்

டாக்டர் ந. சஞ்சீவி

1. வீரமாமுனிவர் 'தைரியநாத சுவாமி' என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார் என்றும், அப்பெயரை 'அக்கால (17ஆம் நூற்றாண்டு) மதுரைச் சங்கத்தார் 'வீரமா முனிவர்' எனத் தமிழால் அழைத்தனர் என்றும், கலைக் களஞ்சியக் கட்டுரை கூறுகிறது. அப்படியானால் 17ஆம் நூற்றாண்டிலேயே தனித்தமிழ் உணர்வு தலைதூக்கி இருந்தது எனக் கொள்ளலாமா?

2. 'கோனான் குப்பத்தில் அவர் தமிழ்நாட்டுப் பெண்மணி போல் தேவதாயார் திருவுருவம் அமைத்து, அவரைப் பெரியநாயகி அம்மையார் எனப் போற்றி அவர் திருவருள் வேண்டித் தேம்பாவணி எனும் பெருங்காப்பியம் யாத்தார்' என்னும் கருத்து சரியா?

3. வீரமாமுனிவரால் தமிழ்மொழி இலக்கியங்கள் பெற்ற புது வளங்கள் யாவை?

4. சதுரகராதியின் தனிச் சிறப்புகள் யாவை?

5. தமிழ் உரைநடைக்குத் தந்தை தத்துவ போதகரா? வீரமா முனிவரா?

6. இத்தாலி மொழியில் வீரமாமுனிவர் பற்றிய நூல் ஏதும் உண்டா?

7. தேம்பாவணியின் மூலநூல் யாது?

8. பெருங்காப்பியம், சிறுகாப்பியங்களில் வீரமாமுனிவர் செய்த புதுமைகள் யாவை?

9. தமிழ் இலக்கணத்திற்கு வீரமாமுனிவரின் புதுக் கொடைகள் யாவை?

10. வீரமாமுனிவர் புகழ்போற்றும் பாடல்கள் உள்ளனவா?

11. வீரமாமுனிவரை அவர் காலத்துப் புலவர்கள் போற்றியமைக்குச் சான்றுகள் உண்டா?

12. தேம்பாவணியைப் பாடியவர் வீரமாமுனிவர் அல்லர் என்பதற்குச் சான்றுகள் உண்டா?

13. வீரமாமுனிவர்பற்றிய ஆராய்ச்சியின் வளர்ச்சி வரலாறு யாது?

14. சதுரகராதியின் தலையாய நோக்கம் யாது?

15. சதுரகராதியில் மொத்தம் எத்தனைச் சொற்கள் உள்ளன?

16. எவ்வளவோ பொருள் வசதி உடைய கிறித்துவ செல்வர்கள்/நிலையங்கள்/இயக்கங்கள் இருந்தும் ஏன் வீரமாமுனிவர் நூற்பதிப்புக்களில் முன்னேற்றம் இல்லை?

17. வீரமாமுனிவரின் ஆண்டிறுதிக் கடிதங்கள் கிடைக்கின்றனவா? வெளியிடப்படுமா?

18. தமிழ்ப் புகழாக வீரமாமுனிவர் கூறியுள்ள சொற்றொடர்கள் யாவை?

19. கிறித்துவ சமயத்தின் தனிச்சிறப்புக் கொள்கைகள் யாவை?

20. பேச்சுத் தமிழைக் 'கொடுந்தமிழ்' என்று வீரமாமுனிவர் கூறுவது தங்கட்கு உடன்பாடா?

21. வீரமாமுனிவர் காமத்துப்பாலை மொழியாக்கம் செய்யாதது ஏன்? அவர் கொண்ட காரணங்கள் தங்கட்கு உடன்பாடா?

22. 'திருவள்ளுவப் பயன்' என்று வீரமாமுனிவர் செய்த ஒரு நூல் Madras Oriental Manuscript Libraryஇல் உள்ளது. அதைப் பார்த்துள்ளீர்களா?

23. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே

—இந்த அடிகளை அல்லது இதுபோன்ற அடிகளை வீரமாமுனிவர் பாடியுள்ளாரா?

திரு. இ சுந்தரமூர்த்தி

1. வீரமாமுனிவர் தமிழகத்திற்கு வருமுன்னர் எவ்வெம் மொழிகளிலும் இலக்கியங்களிலும் வல்லுநராய் இருந் தார?
2. வீரமாமுனிவரின் இலக்கியப் படைப்புகளில் அவருடைய நாட்டுச் சமுதாய வரலாறு, மரபுகள் எவையேனும் காணப்படுகின்றனவா?
3. இத்தாலிய இலக்கியக் கூறுகள் இவருடைய தமிழிலக் கியங்களில் எந்த அளவில் இடம் பெற்றுள்ளன?
4. திருக்குறள் உரையாசிரியர்களைப் பற்றியும் குறிப்பாகப் பரிமேலழகரைப் பற்றியும் வீரமாமுனிவர் குறிபபிடு கின்ருரா என்பது குறித்து அறிய விழைவு.
5. வீரமாமுனிவர் தமிழ் மொழியினை எவரிடமிருந்து கற்றுக் கொண்டார்? இது குறித்து வரலாற்றுக் குறிப்புகள், சான்றுகள் எவையேனும் கிடைத்துள்ளனவா?
6. இன்றைய மொழியியல் துறைக்கு (Linguistics) வீரமா முனிவர் ஏதேனும் விததிட்டுள்ளாரா?
7. வீரமாமுனிவரின் உழைப்பால் தமிழுக்குக் கிடைத்த புதிய சொற்கள் எவையேனும் உண்டா?
8. வீரமாமுனிவர் தமிழ் உலகுக்குப் புதிய இலக்கண அல்லது இலக்கிய மரபுகளை வழங்கியுள்ளாரா?
9. பரமார்த்த குரு கதை எழுதுவதற்கான அடிப்படைச் சூழல் யாது?
10. வீரமாமுனிவரின் கதையினைச் சுப்ரதீபக்கவிராயர் எழு தினர் என்று கூறுதற்கு உண்மையான காரணம் ஏதேனும் உண்டா?
11. வீரமாமுனிவரைப்போல் நந்தமிழகத்தினருக்கோ அல்லது இந்திய நாட்டினின்ருே எவரேனும் வேறுநாடுகளுக்குச் சென்று இத்தகைய பிறமொழித் தொண்டுகள் ஆற் றியது உண்டா?
12. தொன்னூல் விளக்கத்தில் பல புதிய அணிவகைகளை வழங்குவதற்கு வீரமாமுனிவருக்கு எந்த நூல்கள் அடிப்படையாய் அமைந்திருக்கும்?

திரு. வ. ஜெயதேன்

1. கலம்பகம், அந்தாதி, அம்மானை ஆகிய சிற்றிலக்கிய வகைகளைத்தேர்ந்து வீரமாமுனிவர் கவி புனைந்தமைக்குச் சிறப்பாக ஏதேனும் காரணங்கள் உண்டா?
2. வீரமாமுனிவரின் உரைநடையின் தனிச் சிறப்புகள் யாவை?
3. வீரமாமுனிவர் பயந்த இலக்கண நூல்களின் தனித்த இயல்புகள் யாவை?
4. தேம்பாவணி காப்பிய உலகில் பெறும் இடம் பற்றி அறிய அவா.
5. தமிழ், தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளை அறிந்த வீரமாமுனிவர் தமிழுக்கு மட்டுமே சிறப்பாகத் தொண்டு புரிய முனைந்ததேன்?
6. சிறுகதையுலகில் பரமார்த்த குரு கதை, வாமன் கதை முதலியன பெறும் இடம் யாது?
7. இன்றைக்கு எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்க்கும் தமிழர்கள் வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத் தங்களை ஒப்புக்கொண்டதேன்?
8. தைரியநாத சுவாமி எனவும் வீரமாமுனிவர் எனவும் பெஸ்கி அவர்கள் வழஙகப்பட்டமை ஏன?
9. வீர ஆரியன், வேதியன் என்றும் வீரமாமுனிவர் தம்மை அழைததுக் கொள்வது ஏன்?
10. சதுர் அகராதியின் சிறப்புக் கூறுகள் யாவை?
11. சதுர் அகராதி தவிர தமிழ்—இலத்தீன், இலத்தீன்—தமிழ், தமிழ்—பிரெஞ்சு, தமிழ்—ஆங்கிலம், போர்ச்சு கீசியம் — இலத்தீன—தமிழ், வட்டார வழக்குத் தமிழகராதி போனற அகராதிகளும் வீரமாமுனிவர் இயற்றியுளளதாகச் சொல்லப்படுகிறதே இதுபற்றிய தங்கள் கருத்தறிய ஆவல்.
12. 'கடக்களிறடக்குதல்' போன்ற காப்பியப் பொதுச் செய்தி தேம்பாவணியிலும் இடம் பெற்றுள்ளதா?

13. பிற கிறித்தவப் படைப்பெழுத்தாளர்களின் நடைக்கும் வீரமாமுனிவரின் நடைக்கும் உள்ள ஒருமைப்பாடு—முரண்பாடு யாவை?

14. கிறித்தவர்கள் தம் எழுத்து நடை இம் மண்ணோடு ஒட்டாதது போல் தோன்றுவதால்தான் அவர்களுடைய உயரிய படைப்புகள் எல்லாம் மக்கள் மன்றத்தில் நிலைத்து நிற்காமல் வீழ்ந்துவிட்டன எனக் கருதப் படுவது பற்றித் தங்கள் கருத்துக்களை அறிய விழைவு.

15. கத்தோலிக்கப் பிராடஸ்டன்ஸ் போராட்டங்கள் கிறித்தவத் தமிழ் இலக்கியங்களில் எவ்வகையில் எதிரொலிக்கப்பட்டுள?

திரு. கு. மோகனராசு

1. 'தொன்னூல் விளக்கம்' என வீரமாமுனிவர் அவர்கள் யாத்த நூலினைக் 'குட்டித் தொல்காப்பியம்' என வழங்கு வதற்கு ஏதேனும் 'நுட்ப'க் காரணம் இருத்தல் கூடுமோ என அறிய விரும்புகின்றேன்.

2. கம்பர் வடமொழிக் காப்பியத்தைத் தமிழ் மொழியில், தமிழ் மரபிறகு ஏற்ப யாத்தது போல், வீரமாமுனிவரும் தம் காபபியத்தை—தேம்பாவணியை யாததுள்ளார். இம்முறைக்குக் கம்பரே வழிகாட்டியாக இருந்திருக் கலாம என்று எண்ணுகின்றேன். இக்கருத்து, சரிதானா என அறிய விரும்புகிறேன்.

3. வீரமாமுனிவர் அவர்களின் அடிப்படை நோக்கம் கிறிததவக் கொள்கைகளைப் பரப்புவது மட்டுமா, வேறேதேனும் உண்டா?

4. எச். ஏ. கிருட்டிணப் பிள்ளையவர்கள் இயற்றிய 'ரட்சண்ய யாத்திரிகம்' போல் 'தேம்பாவணி' வெற்றிபெற முடிய வில்லை எனக் கருதுகினறேன். அதற்கு அடிப்படையான காரணம் ஏதேனும உண்டா?

5. தமக்கு ஆசானாக விளங்கிய சுப்பிர தீபக் கவிராயரை வீரமாமுனிவர் தம் நூல்களில் எங்கேனும் போற்றி யுள்ளாரா?

6. தமிழில் — எழுத்தளவில் ஏதேனும் சீர்திருத்தம் செய்ய வேண்டியது தேவை—கட்டாயம் என எண்ணுகிறீர்களா —அப்படியானுல் எவ்வகையில்?

7. முனிவர் அவர்கள் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்ய அடிப்படையான காரணம் ஏதேனும் இருந்திருக்கக் கூடுமோ?

8. தமிழ் மரபில் இவர் செய்த மாற்றம் ஏதேனும் அறியக் கிடக்கின்றதா?

9. முனிவர்தம் இலக்கியங்களால் — இலக்கணங்களால் அறியப்படும் அக்கால, மக்கள்—வாழ்வியல்—பண்பாடு முறைகளில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன யாவை?

திரு. சு. சண்முகசுந்தரம்

1. பரமார்த்த குரு கதைகளில் நாட்டுப்புறத் தன்மை மிகுந்துள்ளதா, இலக்கியப் புறத்தன்மை மிகுந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன். உரைநடை இலக்கியத்தில் பரமார்த்த குரு கதைகள் பெறும் இடத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

2. சமயத் தொண்டு அல்லது தமிழ்மொழித் தொண்டு என்ற முறையில் நோக்கும்போது வீரமாமுனிவரின் தொண்டு எந்த நிலையை அதிகமாகச் சார்ந்துள்ளது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

3. கிறித்துவத்தின் தமிழ்த் தொண்டில் வீரமாமுனிவர்க்கு இணையானவர்கள் அல்லது விஞ்சியவர்கள் எவரேனும் உளரா? உளரென்ருல் விளக்கம் பெற விரும்புகிறேன.

திரு. த. தமிழ்த்தென்றல்

1. கனவு தோன்றுவதற்குரிய காரணியம் வீரமாமுனிவருக்கு முன் தமிழ் இலககியங்களில் குறிக்கப் பெறவில்லை. வீரமாமுனிவரே சொல்லுகின்ருர் என்று பண்டாரகர் ஞானப்பிரகாசம் கூற்றை மறுப்பதாக வள்ளுவர் கனவு நிலை உரைத்தல் என்ற அதிகாரத்தில்,

" நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர் "

என்று தலைவி வாயிலாகக் கனவு தோன்றும் காரணியம் குறிக்கப் பட்டுள்ளதே.

2. நிகண்டு துணைக்கொண்டு சதுரகராதி தொகுக்கப் பட்டதாகச் சென்னைப் பல்கலைக்கழகம் கூறியதைப் பொறுக்க மனமில்லாத பண்டாரகர் ஞானப்பிரகாசம், மதுரைப் பல்கலைக்கழக அகராதித் தொகுப்புக்கு சதுர கராதி துணை புரிந்துள்ளமைக்குக் காட்டு தந்து நிறை வுறுவது எங்ஙனம்?

திரு. பொ. ஜெயராஜ்

1. வீரமாமுனிவர் இயற்றிய சிறுகதைத் தொகுப்புக்கும் வ. வே. சு. ஐயர் எழுதிய சிறுகதைத் தொகுப்புக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? வ. வே. சு. ஐயரின் கதைகள் மட்டும் தனிச்சிறப்பு பெறக் காரணம் என்ன?

2. வீரமாமுனிவரின் நூல்கள் பல பரந்த மனப்பான்மையில் எழுந்தனவா?

3. தேம்பாவணியின் கருப்பொருளை ஜெருசலேமில் இருந்து பெற்றார். ஆனால் தமிழ்நாட்டுக் களம், தமிழ் நாட்டு நிலை அமைப்பு பற்றித் தேம்பாவணியில் கூறப்படுவதால் அது சிறப்புப் பெற முடியவில்லை என்பர் சிலர். இக்கருத்தின் வன்மை மென்மை பற்றி உங்கள் கருத்து எனன?

4. பகவத் கீதையின் கருத்துக்களைத் திருக்குரான் கருததுக்களை வீரமாமுனிவர் எந்த நூலிலாவது எடுத் தாண்டுள்ளாரா?

பத்தாம் நாள் கருத்தரங்கு—18-2-1974

உமறுப்புலவர்

கட்டுரையாளர் : பேராசிரியர் சி. நயினூர் முகம்மது

அவையோர் எழுப்பிய வினுக்களும் ஆசிரியரின் விடைகளும்

டாக்டர் ந. சஞ்சீவி

1. இஸ்லாமிய நெறியில் அடிப்படை மெய்ப்பொருளியல் கொள்கைகள் யாவை?

இறைவன் ஒருவன். உருவமற்றவன். உலகங்களையும் உயிர்களையும் படைததுப் பாதுகாத்துப் புரககின்ருன். துடைப்பவனும் அவனே. பிறப்பிறப்பற்றவன் - தேவையற்றவன். தூயவன். இம்மையில் மனிதர்கள் நன்னெறி நடந்து நலனகள் புரிந்தால் மறுமையில் சொாக்க இன்பம் துய்ப்பர். தீ நெறி நடந்தால் நரகில் வேதனைப்படுவர். மக்கட்கு நன்னெறி காட்டும் பொருட்டு நபிகள் இறைவனல் அனுப்பப் பெற்றனர். இவ்வாறு வந்தவருள் இறுதி நபியே முகம்மது நபி.

2. இஸ்லாமிய நெறி முதல் முதல் இந்தியாவில்/தமிழகத்தில் எப்போது எவரால் நுழைந்தது?

இஸ்லாமிய நெறி முதல்முதல் இந்தியாவில் தென்னுட்டில் மேற்குக் கடற்கரை, கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலேயே பரவத் தொடங்கியது. இப்பகுதிகளில் வாணிபம் செய்யும் பொருட்டு வந்த அறபு நாட்டு முஸ்லிம்கள் வழியும் மெய்ஞ்ஞானிகள் வழியும் வந்தது. தமிழ்நாட்டில் கோவலம் என்னும் ஊரில் நபிகள் நாயகம் அவர்களின் தோழராகிய தமீம் அன்சாரி (ரலி) வந்து தங்கி இஸ்லாமிய நெறி விளக்கம் செய்து இறந்துள்ளார். அவர்களின் அடக்கத் தலம் இன்றும் அங்குள்ளது. திருச்சி நத்தர்வலி போன்ற மெய்ஞ்ஞான நாதரும் இஸ்லாம் பரவுமாறு செய்துள்ளனர். கி. பி. 7ஆம் நூற்ருண்டிலேயே பரவத் தொடங்கிவிட்டது.

3. இந்திய மொழிகளுக்குள்ளேயே முதல் இஸ்லாமிய நூல் எது?

பலமொழி வரலாறுகளைப் படித்தறிந்து கூறவேண்டியது.

4. சீறாப்புராணம் 'சிறுகாப்பியம்' என்று கலைக்களஞ்சியக் கட்டுரை செப்புகிறது. இக்கருத்து தங்கட்கு உடன் பாடா?

இல்லை. சீறாப்புராணம் பெருங்காப்பியத்திற்குரிய அமைதிகள் பெற்றுப் பிறங்குகின்றது.

5. சீறாப்புராணத்தில் உள்ள தமிழ்த் தாக்குதல்கள் யாவை?

சீறாப்புராணத்தில் நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு அப்படியே கூறப்படவில்லை. வரலாற்றுச் செய்திகளைக் கருவாகக் கொண்டு தமிழ்க காப்பிய மரபுகளுக்கேற்பப் புனைந்து பாடியுள்ளார். பாலை சூழ்ந்த அறபு நாட்டைப் பாடவந்த புலவர் சோலை சூழ்ந்த தென்பாண்டி நாட்டைத் தீட்டி மகிழ்கின்றார். தமிழ் நாட்டுப் பயிர்களும் உயிர்களும் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களும் போற்றப்படுகின்றன. நபிகள் நாயகம் அவர்களின் பிறப்பிடமான மக்கமாநகர் மதுரை மாநகரமாகக் காட்சி தருகிறது.

6. உமறுப்புலவர் எந்தெந்த அயல்மொழிச் சொற்களை எந்தெந்த வகையில் பயன்படுத்தியுள்ளார் என்பதுபற்றி மொழியியல் ஆய்வு ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

இன்னும் முறையாகச் செய்யப்படவில்லை. அவ்வப்போது உரையாசிரியரும் கட்டுரையாசிரியரும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாய்வினைத் தொடங்கியுள்ளோம்.

7. உமறுப்புலவர் கருத்தில் உலா இலக்கியங்களில் வரும் பெண்கள் கற்புடை மகளிரா? பரத்தையரா?

ஏனைய உலா இலக்கியங்களிலும் பிற தமிழ் இலக்கியங்களிலும் இம்மகளிர் எவ்வாறு கொள்ளப்படுகின்றனரோ அவ்வாறே உமறுப் புலவரும் கொண்டுள்ளார். பிற ஆடவரைக் கண்டுருகும் இம்மகளிர் பரத்தையர்தான் என்பது மரபு. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை ஆகிய பருவ மகளிரை மாநிலத்து உயிர்களாகவும், பேரிளம் பெண்ணை வானவராகவும் கொண்டு இவ் வுயிர்கள் காப்பியத் தலைவரை விரும்புவதாகக் கொள்வது சிறப் புடைத்தாகும்.

8. 'இஸ்லாமியக் கோட்பாடுகளைச் செவ்வனே எடுத்துக் கூறவே உமறுப்புலவர் தமது சீறாப்புராணத்தில் அரபுச்

சொற்களையும் அரபுப் பெயர்களையும் பயன்படுத்தி யுள்ளார்'. கலைக்களஞ்சியக் கட்டுரையில் காணப்படும் இக்கருத்து சரியா? ஆம் என்றால் இஸ்லாமியக் கோட்பா டுகளைத் தூய தமிழில் சொல்லவே முடியாதா?

கலைக்களஞ்சியக் கட்டுரையில் கூறப்படுவது சரியே. இஸ்லா மியக் கோட்பாடுகளைத் தூய தமிழில் சொல்வது அவ்வளவு எளிமையன்று. சைவ, வைணவ, சமண, பௌத்த சமயக் கோட்பா டுகளை விளக்குவதற்கு வடமொழியின் துணை தேவைப்படுவது ஈண்டு நோக்கற்பாலது.

9. சீறாப்புராணத்தில் புதுவகை யாப்பு/அணிகள் உண்டா? புதிய கற்பனைகள் உணடா?

சீறாவில் புதுவகை யாப்போ அணிகளோ இல்லை. ஆனால் புதுவகைக் கற்பனைகள் நிரம்ப உண்டு.

10. உமறுப்புலவர் உரைகளிலேயே உள்ளங்கவரும் பாடல் அல்லது அடிகள் யாது?

உள்ளத்தையள்ளும் பாடல்களும் தொடர்களும் பலப்பல உள. சிலவற்றைக் கட்டுரையில் காண்க.

11. சீறாப்புராணத்திற்கு மூலநூல் யாது?

சீறாவிற்கு மூலநூல் என்று ஒன்று இல்லை. பல நூல்களி லிருந்து செய்திகளைத் திரட்டி, செய்கு சதக்கத்துல்லா அப்பாவும் கண்ணாட்டியப்பாவும் தரப் புலவர் பாடினார் என்று கூறுவர் ஒரு சாரார். பல நூல்களிலிருந்தும் அறிஞரிடமிருந்தும் அறிந்த செய் திகளைக்கொண்டு காப்பியம் இயற்றினார் என்பாரும் உளர்.

12. உமறுப்புலவர் பெயரால் தமிழ்நாட்டில் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளனவா?

தமிழ்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. மலேசியாவில் உண்டு.

13. உமறுப்புலவர் புகழ் போற்றும் பாடல்கள் உள்ளனவா?
பல உள்ளன. கட்டுரையில் காண்க.

14. உமறுப்புலவர் தமிழைச் சிறப்பிக்கும் தொடர்கள் யாவை

உமறுப்புலவர் தமிழ்மொழிபற்றிச் சிறு குறிப்பும் தராமல் பெரு நூல் செய்த வள்ளுவர் வழியினைப் போற்றுவார்போலக் காணப்படுகின்றார். எனினும் அவர் மொழியனைத்தும் தமிழின் இனிமையினையும் இயல்பினையும் இயம்பி விடுகின்றன. தமிழ் குறித்த புலவர்தம் தொடர்களில் சில வருமாறு:

‘மிக்க செந்தமிழ்’......‘வடித்த செந்தமிழ்’ (சீறு)
‘முந்து தமிழ்க் கீர்த்தி’ ‘தேடும் புகழ்க்கவிதை
செந்தமிழோர்க் கீந்துதவும்’... (திருமண வாழ்த்து)

15. உமறுப்புலவரின் நூல்களையும் பிற இஸ்லாமிய இலக்கியங்களையும் நன்முறையில் பதிப்பிக்கும் முயற்சிகள் உள்ளனவா?

இஸ்லாமிய இலக்கியங்களை இனிய முறையில் பதிப்பிக்கும் முயற்சிகளை இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் மேற்கொண்டுள்ளது. சீறப்புராணத்திற்கு விளககவுரை செய்து வருகிறது. செம்மையான ஆய்வுப் பதிப்பாகச் சீறப்புராணம் விரைவில் வெளியிடப்பெறும் முயற்சி நடைபெற்று வருகிறது.

16. உமறுப்புலவர் 'திரு அவதாரப் படலம்' பாடியுள்ளார். அவதாரம் இஸ்லாமிய நெறிககு உடன்பாடா?

உமறுப்புலவர் 'நபி அவதாரப் படலம்' பாடியுள்ளதுண்மையே. கடவுள் அவதாரத்தில் இஸ்லாமிய நெறிக்கு உடன்பாடில்லை. பெரியோரின் பிறப்பையும் அவதாரம் என்று கூறுவதுண்டு. இப்பொருளிலேயே புலவர் அவதாரம் எனும் சொல்லை ஆண்டுள்ளார்.

17. இஸ்லாமிய நெறியில் வீடு பேறுண்டா?

உலகில் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து உழல்வதினின்றும் விடுதலை பெறுவது வீட்டுப் பேறென்பர். ஆனால் இஸ்லாத்தில் ‘மனிதராகப் பிறந்தார் இறப்பர். அவரவர்தம் செயல்களுககேற்ப சொர்க்கமோ நரகமோ எய்துவர்’ என்பது அடிப்படையாகும். இவ்வுலகில் பிறக்கும் மனிதர் மீண்டு உலகில் பிறவாத நிலை எய்துவது இஸ்லாத்தில் உண்டு.

18. சீறப்புராணம்/இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சியின் வளர்ச்சி யாது?

அண்மையில்தான் தொடங்கியுள்ளது. 1973 மே திங்களில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் அனைத்துலக அடிப்படையில்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்கு இரு நாட்கள் நடை பெற்றது. சீறாப்புராணம் பற்றியும் பிற இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

19. பர்சியன் அரபிக் மொழிகளில் தமிழின் செல்வாக்கு உண்டா?

இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. இ. சுந்தரமூர்த்தி

1. உமறுப்புலவரை அவர் காலத்திய புலவர் எவரேனும் பாராட்டிப் பாடியுள்ளனரா?

ஆம். சீதக்காதி நொண்டி நாடகத்தில் உமறுப்புலவர் பாராட்டிப் பாடப்பட்டுள்ளார்.

2. சீறாப்புராணத்தில் திருக்குறளின் செல்வாக்கு எந்த அளவில் இடம் பெற்றுள்ளது?

பேரளவில் இடம் பெற்றுளளது. இதுகுறித்துக் கட்டுரையில் காண்க.

3. சீறாப்புராணத்தில் கமக்காரர்கள் கதிரவனையும் தத்தம் குலதெய்வததையும் வணங்கினர். இக்கருத்து இஸ்லாமிய ஏக தெய்வக் கொளகைக்கு முரணபாடா அல்லது உடன்பாடா என அறிய விழைகிறேன.

நபிகள் நாயகம் பிறப்பதற்கு முன்னால் உள்ள அறபு நாட்டின் வளங் கூறும்போது கமககாரர்கள கதிரவனையும் தம் குலதெய்வத்தையும் வணங்குவதாகக கூறுகிறார். நபிகள் நாயகம் நாறபதாம் வயதில்தான தூதுததுவம் பெற்று இஸ்லாமிய நெறியினை அறபு நாட்டில் பரவும்படி செய்தார்கள. ஆதலின் இஃது இஸ்லாமிய ஏகத்துவத்திற்கு முரணபாடன்று.

4. தமிழிலக்கியக் காப்பியங்களில் சீறாப்புராணம் பெறுமிடம் யாது?

பெருங்காப்பியமாகப் பிறங்கும் பேரிலக்கியமாகும்.

5. இலங்கையில் உள்ள தமிழ் முஸ்லிம்கள் இந்நூலைத் தம் சமய வாழ்வுக்கு மிக முக்கியமான நூலாகக் கொண்டு போற்றிப் படித்து வருவதைப் போலவே நம் தமிழ்நாட்டு முஸ்லிம்களும இதனைப் போற்றி வருகின்றனரா?

இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் தமிழ் முஸ்லிம்கள்தான். அவர்களின் சமய வாழ்வுக்கு மிக முககியமான வேத நூல், திருக் குர்ஆன் தான். அவர்கள் தமிழிலக்கியங்களில் சீறாவை மிகவும் போற்றி வருகிறார்கள். காரணம், அந்நாட்டுக் கல்வித் திட்டத்தில் இஸ்லாமிய இலககியங்களுக்குத் தக்க இடமுண்டு. பயிலும்போதே சீறாவின் செழுங்கவிச் சுவையில் இஸ்லாமிய இளைஞர் ஈடுபட்டு வருகின்றனர். இச்சுவை தொடர்ந்து வளர்ந்து வாழ்வில் மலர்ந்து வருகிறது. ஆனால் நமது பாடத் திட்டத்தில் இஸ்லாமிய இலக்கியங் களுக்குச் சிறப்பாகச் சீறாவிற்கு உரிய இடமே தருவதில்லை. ஆதலின் சீறாவில நம் நாட்டு முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்பின்றிப் போய்விடுகிறது.

6. தமிழ் இலக்கிய மரபுகளன்றி ஏதேனும் புதிய மரபுகளையும் உமறுப புலவர் தம் காப்பியத்தில படைததுள்ளாரா?

சில புதிய மரபுகளைப் பின்பற்றியுள்ளார். கட்டுரையில் காண்க.

7. இக்காலத்திலேனும் சீறாப்புராணம் போன்ற காப்பியங்களை இயன்றவரை பிறமொழிச் சொற்கள் கலவாது படைக்க இயலாதா?

இயன்ற வரை தூய தமிழில் படைத்தல் கூடும். காட்டாக: ‘நாயக வெண்பா’, ‘நபியே எங்கள் நாயகமே’, ‘நெஞ்சில் நிறைந்த நபி’ போன்ற நூல்கள் இவ்வகையின.

8. கதீஜா பிராட்டியைக் கண்ணுற்றுக் காதல் கொண்டு வருந்திய பாடல்கள் நம் பழநதமிழ் அகப்பொருள் மரபுகளைப் பின்பற்றித்தான எழுதப்பட்டனவா என்பதனை அறிய அவா.

ஆம். நம் பழந்தமிழ் மரபுகளை ஒட்டி இயற்றப்பட்டன.

9. கம்ப இராமாயணத்தைத் தவிர வேறு தமிழ்க் காப்பியங் களின் செல்வாக்கு காணபபடுகினறதா?

ஆம். ‘சீவக சிந்தாமணி’, ‘பெரிய புராணம்’ முதலிய காப்பி யங்களின் செல்வாக்கும் ஓரளவு காணப்படுகின்றது.

திரு. வ. ஜெயதேவன்

1. உமறுப்புலவர் தோன்றிய காலச்சூழல் அவர் படைப்புக்குப் பிற்புலமாக எங்ஙன் அமைந்தது?

புராணம் எனும் சொல் தமிழ் இலக்கியங்களுக்கு அமைவது அக்காலப் பெருவழக்காக இருந்தது ஆதலின் தம் நூலிற்கும் சீருப்புராணம் எனப் பெயரிட்டுள்ளார். அறபுச் சொற்களை அதிகமாக ஆளுவது அக்காலத் தமிழ் முஸ்லிம்களின் வழக்கமாக இருந்தது. உமறுப் புலவரும் அறபுச் சொற்களை ஆளுகிருர். அக்காலப் பழக்க வழக்கங்களையும் தம் நூலில் ஆளுகிருர்.

2. இஸ்லாமியப் புலவர்களிடையே உமறுப் புலவர் வகிக்கும் இடம் யாது?

முஸ்லிம் கம்பனுகத் திகழ்கிருர்.

3. உமறுப்புலவர் என்பது இயற்பெயரா? இப்பெயர் உணர்த்தும் பொருள் யாது?

புலமை பெற்றுப் பிறங்கியதால் புலவர் என்றழைக்கப் பெற்ருர். இவரது இயற்பெயர் 'உமறு கத்தாப்' என்பதாகக் கருத்து. காலப் போக்கில் உமறு என்று மட்டும் வழங்கியிருக்க வேண்டும் எனத் தெரிய வருகிறது. இ∴து இஸ்லாத்திற்கு வலிவும் பொலிவும் தந்த புகழ் பெற்ற இரண்டாம் கலிபா உமறு கத்தாபின் நினைவாக வைக்கப்பெற்றது எனலாம்.

4. கடிகை முத்துப் புலவர், வாலைவாருதிப் புலவர் ஆகியோரின் படைப்புக்களாக எவையேனும் உண்டா?

வாலை வாருதி பாடிய நூல் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனுல் கடிகை முத்துப்புலவர் பாடிய நூல்கள் பல உள. அவை வருமாறு: சமுத்திர விலாசம், சிவகிரி வரகுண ராம பாண்டிய வன்னியனுர் திக்குவிசயம், திருப்புடைமருதூரந்தாதி, மதன வித்தார மாலை, தலைவிதிவசம், காமரச மஞ்சரி.

5. உமறுப்புலவர் கடிகைமுத்து குறித்து ஏதேனும் எழுதியுள்ளாரா?

எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

6. தமிழ்க் கருவுடைய தலைசிறந்த அரபி நூல் எது?

சூபி ஞானத்திலும் தமிழ்ச்சித்தர் தத்துவத்திலும் திளைத்த மஸ்தான் சாகிப் இயற்றிய அறபுப் பாடல்களைக் கொண்ட நூல்.

7. சீறுப்புராணம் தமிழறிந்த முகமதியர்களிடையேகூடப் பெருஞ் செல்வாக்குப் பெருமலிருப்பது ஏன்?

'முகமதியர்' என்றழைப்பது சரியன்று. முகம்மது (சல்) இஸ்லாத்தின் இறுதி நபியாவார்கள். இவர்களுக்கு முன்தோன்றிய நபிகளையும் முஸ்லிம்கள் போற்றுவதால் முஸ்லிம்கள் என்றழைப்பதே முறையாகும். இவ்வினவிற்கு விடை முன்னரே தரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதலாகப் படித்த முஸ்லிம்களிடையே சீறு பரவி வருகிறது.

8. உமறுப்புலவர் தவிர வேறு யாரேனும் நபிகளின் வரலாற்றைக் கவிதையில் வடித்துள்ளார்களா?

ஆம். சேகனுப்புலவர், பனி அகமது மரக்காயர், காசிம் புலவர் போன்ற பல புலவர்கள் நபிகளின் வாழ்வைக் கவிதைகளில் வடித்தளித்துள்ளனர்.

9. அரபுச் சொற்களுக்கு எளிய இனிய தமிழ் வடிவங்களைப் படைக்கும் மொழியாக்கச் செல்வராக உமறுப்புலவரை எண்ண இடமுண்டா?

உண்டு.

10. அரபுக் கவிதைகளின் சாயல்கள் சீறுப்புராணத்தில் உண்டா? சான்றுகள் தரவியலுமா?

வருந்துகிறேன். அறபுக் கவிதைகளில் எனக்குப் போதிய பயிற்சி இல்லை.

11. உமறுப்புலவரின் படைப்பாக உரைநடை நூல்கள் எவையேனும் உளவா?

இல்லை.

12. சீறுப்புராண மொழியியலில் சிறப்பாகக் குறிக்கத் தக்கவை யாவை?

தமிழ் முஸ்லிம்களின் வழக்குகள், அறபுச் சொற்கள், தென் பாண்டி நாட்டு வழக்குகள் முதலியன குறிப்பிடத்தக்கன.

திரு. கு. மோகனராசு

1. கிறித்தவ இலக்கியப் படைப்பாளர்கள் தம் படைப்புக்களில், பல்வேறிடங்களில், சமயக் கருத்துக்களை விளக்கும் சொற்களைக்கூட தமிழ்நெறியுற மொழிபெயர்த்து வழங்கியிருக்க, இசுலாமிய இலக்கியப் படைப்பாளர்கள் அவ்வாறு செய்யாமைக்கு எவையேனும் காரணங்கள் உண்டா?

முஸ்லிம் இலக்கியப் படைப்பாளரும் பலவிடங்களில் தமிழ்ச் சொற்களையே அமைத்துள்ளனர். சிலவிடங்களில் அறபுச் சொற்களை ஆளுகின்றனர். இதற்குரிய காரணங்களைக் கட்டுரையில் தந்துள்ளேன்.

2. சீதக்காதி (சையத்காதர்) என்பதன் பொருள் யாது?

செய் கப்துல் காதிர் என்பதன் மரூஉ சீதக்காதியாகும். சீதக்காதியின் இயற்பெயர் சையத் காதர் அன்று.

பொருள் :

செய்கு - தலைவர்
அப்துல் காதிறு - வல்லோனின் (அல்லாவின்) அடிமை.

3. சீறுப்புராணம் இசுலாமியச் சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கோடு மட்டுமே தோன்றியதா? வேறு ஏதேனும் நுட்பமான அடிப்படைக் காரணம் உண்டா?

இசுலாமியக் கருத்துக்களை இலக்கியச் சுவையுடன் தருவது தான் தலையாய நோக்கம்.

4. சீறுப்புராணத்தில் தமிழரின் நானிலப் பாகுபாடும், அங்கு வாழும் மக்களின் பண்பாடுகளும் வெளிப்படப் பாடியுள்ளார் ஆசிரியர். அரபுநாட்டுக் கதையைத் தமிழ்நாட்டு வருணனை, பண்பாடுகள் இணையப் பாடியது சரியா?

நல்ல கேள்விதான். உமறுப்புலவர் ஒரு பெருங் கவிஞர். வரலாற்றுசிரியரல்லர். திருத்தக்க தேவரும், கம்பரும் தங்களின் காப்பிய நாயகரின் நாடுகளைப் பாடுங்கால் தமிழ்நாட்டுக் காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றனர். இதனை நோக்கும்போது உமறுப் புலவரின் நானில வர்ணனையில் தவறிருப்பதாகத் தோன்றவில்லை. ஐந்திணை வருணனை தமிழ்க் காப்பியங்களுக்கு வேண்டிய அமைதியாகும். தமிழ்க்காப்பிய மரபினைப் போற்றுவது முறைதானே.

5. உமறுப்புலவர் தம் நூலில் அரபியப் பழமொழிகளைக் கையாண்டுள்ளாரா? எந்த அளவில் கையாண்டுள்ளார்?

அறபு மொழியில் புலமை பெற்றேனல்லேன். பொறுத்தருள்க.

6. இலங்கையிலுள்ள இசுலாமியர் சீறுப்புராணத்தைத் தம் சமய வாழ்விற்கு முக்கியமான நூலாகக் கொண்டு போற்ற தமிழ்நாட்டிலுள்ள இசுலாமியர்கள் அந்நூலை அவ்வளவாகப் போற்றாமைக்கு ஏதேனும் காரணம் உண்டா?

இதுபோன்ற வினவிற்கு முன்னரே விடையளிக்கப்பட்டுள்ளது.

7. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ் இலக்கியத்தில் ஏதேனும் புதிய இலக்கிய மரபிற்கு அல்லது அந்த முறைக்கு அடிகோலியுள்ளனரா?

ஆம். நொண்டி நாடகம், படைப்போர், நாமா, மஸ்அலா, கிஸ்ஸா, முனாஜாத் முதலிய புதிய இலக்கிய மரபுகளை தமிழ் மொழிக்குத் தந்துள்ளனர். 'தொங்கல்' எனும் ஒருவகை விருத்த யாப்பும் இஸ்லாமிய இலக்கியங்களில் காணப்படுகின்றது. இது மட்டுமல்லாமல் அறபுப் பாட்டிசைக்கேற்பப் பாடல்களும் இயற்றியுள்ளனர்.

8. மஸ்தான் சாகிப் பாடல்கள் சாதாரண மக்கள் நெஞ்சிலும் உரிய இடத்தைப் பெற, உமறுப்புலவரின் பாடல்கள் அந்நிலையை அடையாமைக்குரிய காரணங்கள் யாவை?

காரணம், எளிய சொற்கள் புரியும் நடை இசையமைதி முதலியன மஸ்தான் சாகிப் பாடல்களில் அமைந்து பாமரரையும் கவர்ந்து விடுகின்றன. ஆனால் சீறுப்புராணத்தில் சொல்வளமும் பொருள் நலமும் நடைவளமும் பொங்கிப் பெருகி வருகின்றன. படித்தவர்களுக்கே புரியக்கூடியன.

திரு. வீ. ஞானசிகாமணி

சீறுப்புராணம் ஓர் இசுலாமியக் காப்பியம். இரட்சண்ய யாத்திரிகம் ஒரு கிறித்துவக் காப்பியம். இவ்விரு காப்பியங்களும் புதுப்பொருளைத் தமிழ் மரபுக் கவிதையில் பாடியுள்ளதைக் காட்டுகின்றன. இவ்விரு புலவர்களும் தமிழில் காப்பியம் செய்யக் கையாண்ட உத்திகள்

யாவை? இவ் வுத்திகளில் காணப்படும் ஒற்றுமை வேற் றுமைகள் யாவை?

சீருப்புராணம் நபிகள்நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முறையாகக் கவிநயத்துடன் விரித்துச் சொல்லுகிறது. ஜான் புன்யனின் Pilmgrim's Progress என்பதன் மொழிபெயர்ப்பு சொல்லுகிறது. இரட்சண்ய யாத்திரிகம் காப்பியத் தலைவரை மையமாக வைத்து நன்னெறி காட்டுகின்றது. இரு நூல்களும் இருசமயங்களின் கொள்கைகளைக் கூறுகின்றன. தமிழ்ச்சுவை விருந்தாக அமைந்துள்ளன.

திரு. அ. நாகலிங்கம்

1. உமறுப்புலவர் தம் சீருப்புராணத்திற்கு மூலக் கருவை அராபிய படைப்புக்களிலிருந்து கொண்டாரா? அன்றித் தமிழ்க் காப்பியங்களைக் கண்டு அதைப் பின்பற்றிக் கருத்தைத் தாமே உருவாக்கிக் காப்பியத்தை இயற்றினுரா?

சான்ருேரளித்த செய்திகளைக் கொண்டு தமிழ்க் காப்பிய மரபுக் கேற்பக் காப்பியம் செய்தார்.

2. உமறுப்புலவர் சீருப்புராணம் தவிர வேறு எவற்றை யேனும் இயற்றியுள்ளாரா? தங்கள் கட்டுரையில் சீருப் புராணமே குறிக்கப்பட்டுள்ளது.

வேறு நூல்களும் இயற்றியுள்ளார். கட்டுரையின் முன்னுரை யிலேயே குறிப்பிட்டுள்ளேன். பிற்பகுதியில் அந்நூல்கள் பற்றி விளக்கியுள்ளேன். கட்டுரையில் காண்க.

3. சீருப்புராணம் முதன்முதல் எப்போது அச்சில் வெளி வந்தது? இதுவரை எத்தனை பதிப்புக்கள் வெளிவந் துள்ளன?

கி.பி. 1919க்கு முன்னர் ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. இது வரை முழுமையாக மூன்று பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. விலாதத்துக் காண்டம் மட்டும் ஒரு பதிப்பாக வந்துள்ளது. படலங் களாகச் சில பதிப்புகள் வந்துள்ளன.

4. தமிழில் பாடிய உமறுப்புலவர் தமிழைத் தனது காவியத்தி லாவது தனிப்பாடலிலாவது பாடியிருக்கிருரா என்றறிய விரும்புகிறேன்.

இதற்குரிய விடை முன்னரே தரப்பட்டுள்ளது.

5. காப்பிய நிலைகளில் சீறாப்புராணம் எந்த இடத்தைப் பெறுகிறது?

பெருங்காப்பியமாகப் பிறங்குகிறது.

6. அராபியச் சொற்கள் காப்பியச் சுவையைக் குறைக் கிறதா? அதிகரிக்கச் செய்கிறதா?

அறபுச் சொற்களின் பொருள் புரியாதபோது சுவைக்குத் தடங்கல் ஏற்படுகின்றது. பொருள் புரிந்தபோது சுவை அதிகரிக் கின்றது.

புலவர் ஆ. கந்தசாமி

1: 'எருமைக் குளம்புகளுக்கிடையே உள்ள முத்து பாம்பின் வாய்ப்பட்ட நிலவு போல் இருந்தது' என உமறுப்புலவர் பாடியுள்ளதாகக் கூறியுள்ளீர்கள். புலவருக்குப் பாம்பு நிலவை விழுங்கும் கதை உடன்பாடா? இஸ்லாம் மதத்தின் அடிப்படையை இது பாதிக்காதா?

தமிழ்ப் புலவர்கள் வழிவழியாக எடுத்தாளும் ஒன்று இது. ஆதலின் உமறுப்புலவரும் உவமைக்காகத் தமிழ் மரபு வழி நின்று இதனைக் கூறுகிறார். இக்கதை இஸ்லாத்திற்கு உடன்பாடன்று.

2. சீதக்காதியின் நொண்டி நாடகம், முதுமொழி முதலியன உமறுப்புலவர் பாடியனவாக முன்னுரையில் கூறிய தாங்கள் பின்னர் பிறர் பாராட்டியுள்ளமையைக் குறிப் பிடும் போது "சந்த முத்தமிழ்" எனப் புலவரைப் புகழ்ந்து நொண்டி நாடகம் பேசுகிறது என்றீர்கள். இது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. அருள் கூர்ந்து எளிய என் சிந்தையில் தோன்றிய இவ்வையத்தைப் போக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

என் முன்னுரையை நன்றாகக் கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது. 'சீதக்காதி நொண்டி நாடகம் இவர் பாடியதென் பாரும் உளர்' என்றே கூறியுள்ளேன். இதனை அன்றென்று கட்டுரையில் மறுத்துள்ளேன். ஆதலின் முரண்பாட்டிற்கிடமேது மில்லை.

திரு. க. ப. அறவாணன்

தொல்காப்பியம் காட்டும் பாலை—சங்கப்புலவர் காட்டும் பாலை—கருப்பொருள்கள் பாவலர் உமறு காட்டும் பாலையினின்று எவ்வாறு வேறுபடுகின்றன?

ஒட்டகம் உமறுப்புலவர் பாலையில் காணப்படுகின்றது. மற்றபடி இணைந்து போகின்றன.

திரு. சு. ஞானசேகரன்

1. 'உமறுப்புலவர்—சில சிந்தனைகள்' என்ற கட்டுரையை வாசித்த பேராசிரியர் அவர்கள் 'அல்லாஹ்' என்ற சொல்லின் முழுப்பொருளையும் எந்த மொழியிலும் கூற முடியாது எனக் குறிப்பிட்டார். கூறமுடியுமா அன்றி முடியாதா என்பது அதன் முழுப்பொருளையும் அறிந்தால் தான் கூற முடியும். எனவே, 'அல்லாஹ்' என்ற சொல்லின் பொருளைக் கூறுமாறு பேராசிரியர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இஃது இயற்பெயராகும். எண்ணற்ற காரணப்பெயர்களைக் கொண்டு குறிப்பிடப்படும் அளவிலா அறிவும் ஆற்றலும் தூய்மையும் பரிபூரணமாக இருப்பவனைக் குறிக்கும். இறைவனைத் தவிர எதற்கும் இப்பெயர் தரப்படவில்லை. ஒருவன், தனித்தவன், எனும் பொருளையும் தரவல்லது. இதற்குப் பால் பாகுபாடில்லை. ஆதலின் இதனை ஒரு சொல்லால் வேறு மொழியில் பெயர்த்துச் சொல்வது அருமையாகும்.

2. சீறாப்புராணத்தில் சிறப்புப் பொருந்திய பழமொழிகள் எவையேனும் கையாளப் பட்டிருக்கின்றனவா என்பதையும் கூறுமாறு வேண்டுகின்றேன்.

பல பழமொழிகள் சீறாப்புராணத்தில் கையாளப்பட்டுள்ளன.

திரு. வான்முகில்

முஸ்லிம் இளைஞன் ஒருவன் பல ஊர்களில் சீறாப்புராணச் சொற்பொழிவு நிகழ்த்தியதாக அண்மையில் ஒரு வார ஏட்டில் கதையொன்று படித்தேன். இது உண்மையா? கம்பராமாயணச் சொற்பொழிவு போலச் சீறாப்புராணச் சொற்பொழிவு நிகழ்த்தும் பழக்கம் உண்டா?

கதை படித்ததாகச் சொல்லி அது உண்மையா என்று கேட்கிறீர்களே! முகையதீன் புலவர் எனும் முதிர்ந்த புலவர் சீருச் சொற்பொழிவுகள் நடத்தி வந்தார். சீருப்புராணச் சொற்பொழிவுகள் நடப்பதுண்டு. கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நடத்துவதற்கு இருக்கும் அமைப்புக்களோ, ரசிகர் திருக்கூட்டமோ சொற்பொழிவாளர்களோ சீருவிற்கு இல்லை.

திரு. அ. லெ. நடராஜன்

1. இஸ்லாத்தில் அவதாரத்திற்கு இடமுண்டா?

இல்லை.

2. இஸ்லாத்தில் மார்க்கம் தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வீடு பேற்றுக்கு இடம் உண்டா?

இதற்குரிய விடை முன்னரே கூறப்பட்டுள்ளது.

பேராசிரியர் மா. நன்னன்

வினா: உமறுப்புலவரின் தந்தை சேது முதலியார் என்று கூறப்படுவதால் அவர் காலந்தான் அக்குடும்பம் முகமதிய மதத்திற்கு மாறிய காலமாக இருக்க முடியுமோ?

விடை: உமறுப்புலவரின் தந்தையின் பெயர் சேது முதலியார் அன்று. சேகு முதலியார். இது செய்கு முகமதலியார் என்னும் பெயரின் மரூஉ வாகும். இவர் அறபு நாட்டிலிருந்து வந்து அத்தர் வாணிபம் செய்து வந்தவரின் வழித்தோன்றல் என்பதை கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டுள்ளேன்.

திரு. பொ. ஜெயராஜ்

1. கம்பர் ஆரம்ப நிலையில் 100 பாடல்களை எழுதினர். அரங்கேற்றம் செய்யும்போது அவையோர் எதிர்த்தனர். 'இறைக்காப்பியத்தில் மனிதனைப் பற்றிய பாராட்டுக்கள் அதிகம் இடம்பெறக் கூடாது' எனப் புலவர் எதிர்த்தனர். 'நூற்றுக்கு ஒருவர் சடையப்ப வள்ளலைப் போன்றிருப்பார்கள் என்று கருதினேன். நீங்கள் பத்துக்கு ஒருவர் எனக் கூறுகின்றீர்கள். எனவே நான் 10 பாடல்களாக்குகிறேன்' என்று கல்வியிற் சிறந்த கம்பர் கூறினர். எனவே சீருப்புராணத்தில் 22 பாடல்கள் வருவது ஏற்புடைத்தா?

கம்பரின் நன்றிப் பெருக்கைக் கட்டுப்படுத்திய புலவர் சமுதாயத்தால், உமறுப்புலவரின் நன்றிப் பெருக்கைக் கட்டுப்படுத்த இயலாது போயிற்று போலும். சுவையான பாடல்கள் பத்துககு மேல் கிடைத்தால் விட்டு விடலாமா?

2. சீருப்புராணத்தை விட மஸ்தான் சாகிப் பாடல் சிறப்புப் பெறக் காரணம் என்ன?

சீருப்புராணப் பாடல் சிறப்பில் குறைந்து விடவில்லை. வேண்டுமானுல் மஸ்தான் சாகிபு பர்டல் மக்களிடம் பெரிதும் பரவியுள்ளது என்று வைத்துக் கொள்ளலாம். இதற்குரிய காரணத்தை ஏற்கனவே விளக்கியுள்ளேன்.

3. உமறுப்புலவர் பாடல்களில் பகவத் கீதை கருத்துக்கள் உள்ளனவா?

சான்ருேர் ஒரேமாதிரி சிந்திப்பர் என்பர். இரு பெருநூல்களிலும் பல கருத்துக்கள் பொதுவாகக் காணப்படுகின்றன.

பேருரையார்

1. இஸ்லாமிய மரபுக்கு ஏற்றதா புராணம் என்னும் சொல்?

புனிதமான வரலாறு என்பது புராணம் என்னும் சொற்பொருளாகும். இப்பொருள் கொண்டு நோக்கின் இச்சொல் இஸ்லாத்திற்கு மாறுபட்டதன்று.

2. பரங்கிப்பேட்டை அபுல்காசிம் வழித்தோன்றல் 'ஒலிசாகிபு' கையெழுத்துப் பிரதியின் முழுப்பகுதியும் சீருப் புராணத்தில் அச்சாகி உள்ளதா?

ஆம்.

3. 'பஞ்சணை பொருந்தா(ர்) இருவிழி துயிலார்' என்னும் செய்யுள் புனித இஸ்லாம் முறைக்கு ஏற்புடைத்ததா?

இதில் தவறென்றுமில்லையே. வேண்டுமானுல் வரலாற்றில் இப்படியில்லையே என்று கூறலாம். இதுபற்றிக் கட்டுரையில் காண்க.

4. சீருப்புராணம் இயற்றப்பட்ட சீரிய கருத்தென்ன?

செந்தமிழ்க் கவிதையில் செம்மல் நபிகளாரின் சீரிய வாழ்வினை வடித்தளிப்பதே.

5. புலவர் உமர் இடம் காணப்பட்ட தோற்றம் இஸ்லாமியத் தோற்றம் அல்லவென்றும் ஒரு இந்துவைப் போல் தலைப் பாகை, முறுக்கு மீசையுடன் காணப்பட்டதாக ஒரு செய்தி. உண்மையா? அப்படி இருந்திருக்குமேயானால் அதன் காரணத்தை விளக்க முடியுமா?

இப்படி ஒரு செய்தி வழங்கி வருகிறது. இது உண்மையாக இருக்கலாம். எட்டயபுரத்து அவைத்தலைமைப் புலவராகத் திகழ்ந்ததால் அவைக்களப் புலவருக்குரிய மரபுகளை ஆடையணி களிலும் போற்றியிருக்கலாம்.

6. சீறாப்புராணம் நாகூர் தர்க்காவில் அரங்கேற்றம் ஆகாமல் போனதின் காரணம் யாது?

நாகூர் தர்க்காதான் நூலரங்கேற்றத்திற்குரிய களம் என்ப தில்லையே. ஆதரித்த வள்ளலாரின் ஊரில் அரங்கேற்றம் நடப்பது இயற்கை.

7. 'முதுமொழி மாலை', 'திருமண வாழ்த்து' இவையிரண்டும் உமறுப்புலவரால் இயற்றப்பட்டனவா?

'முதுமொழி மாலை' உமறுப்புலவரால் இயற்றப்பட்டதே. ஆனால் 'திருமண வாழ்த்தி'ல் பயினறுவரும் நடையும் சொல்லும் பொருளும் நோக்கும்போது 'சீறாப்புராணம்', 'முதுமொழி மாலை' ஆகியவற்றில் காணப்படும் வளமும் நலமும் பொருந்தியனவாக இல்லை. ஒருவேளை இந்நூல உமறுப்புலவரின் முதல் முயற்சியாக இருக்கலாம்.

8. சீதக்காதி அவர்கள் இல்லாதிருந்தால் சீறாப்புராணம் தமிழகத்திற்குக் கிடைத்திருக்குமா?

கிடைத்திருக்கலாம். காரணம் சீதக்காதி பற்றி நூலில் ஒரு குறிப்பும் இல்லை. ஆனால் அபுல்காசிம் குறிதது 22 பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

9. உமறுப்புலவர் காலத்தே தென்பாண்டி நாட்டில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அதனைக் குறித்து ஏதாவது பாடல் பாடியுள்ளாரா?

இல்லை.

இணைப்பு—இரண்டு: கருத்தரங்க விவரக் குறிப்பு

'உண்மைத்திறம் ஊக்கும் உயர்கல்வி'

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும்

மூன்றாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு

(9—2—74 முதல் 18—2—74 வரை)

கருத்தரங்கப் பொதுப் பொருள் :

இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள் II

(9 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை)

தொடக்குநரும் நூல் வெளியீட்டாளரும் :

தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு

(துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்.)

தலைவர் :

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

(முதல்வர், சாந்தலிங்க சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர்)

வெளியிடப்பெறும் நூல்கள் :

1. **பல்கலைப் பழந்தமிழ்.**
   (முதலாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கக் கட்டுரைகள்)
2. **இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்**
   (இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கக் கட்டுரைகள்)
3. **தமிழாய்வு—தொகுதி 2**

9-2-74 ஆம் நாள் தொடக்க விழாவும், தொடர்ந்து பத்து நாள் கருத்தரங்குகளும் நடைபெறும்.

இடம்: *அறை எண் எப். 50,* நூற்றாண்டு *விழாக் கட்டடம்*

காலம்: *மாலை 3.00 மணி*

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே.........'

அனைவரும் வருக ! **ஆய்வுப்பயன் பெறுக !**

உற்று நோக்குவோம்!

'பலசொல்லக் காமுறுவர்
சிலசொல்லல் தேற்ரு

	நாள்	தலைவர்	கட்டுரையாளர்
1.	9—2—74 சனி	தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்	திரு. கு. இராசவேலு
2.	10—2—74 ஞாயிறு	பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர்	டாக்டர் மு. கோவிந்தசாமி
3.	11—2—74 திங்கள்	பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன்	டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
4.	12—2—74 செவ்வாய்	சிலம்புச் செல்வர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம்	திரு. க. ப. அறவாணன்
5.	13—2—74 புதன்	திரு. கீ. இராமலிங்கனுர்	திரு. இரா. மாணிக்க வாசகம்
6.	14—2—74 வியாழன்	பேராசிரியர் டாக்டர் இரா. சீனிவாசன்	பேராசிரியர் திரு. மா. நன்னன்
7.	15—2—74 வெள்ளி	பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை	பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி
8.	16—2—74 சனி	கவிஞர் திரு. எஸ். டி. சுந்தரம்	டாக்டர் இரா. குமரவேலன்
9.	17—2—74 ஞாயிறு	திருமதி மேரிகொர்னீலியசு	தவத்திரு டாக்டர் வி. மி. ஞானப்பிரகாசம்
10.	18—2—74 திங்கள்	மாண்புமிகு எம். எம் இஸ்மாயில்	பேராசிரியர் சி. நயினுர் முகம்மது

குறிப்பு : கருத்தரங்குகள் (முதல் நாள் தவிர) நாளும் மாலை 5-15 முதல்
ஒரு மணி நேரம் ஆய்வுக் கட்டுரை படிக்க ;
ஒரு மணி நேரம் ஆய்வு செய்ய ;
ஒரு மணி நேரம் முன்னுரை, முடிவுரை, வரவேற்புரை, நன்றி

'இனிய உளவாக
கனியிருப்பக் காய்

ஆய்வு செய்வோம்!

ஒப்பு நோக்குவோம் !

மன்றயா சற்ற
தவர். '

— திருக்குறள் 649.

பொருள்	வரவேற்பாளர்	நன்றியாளர்
கம்பர்	டாக்டர் ந. சஞ்சீவி	திரு. சு. சண்முகசுந்தரம்
வில்லிபுத்தூரார்	திரு. மு. சண்முகம்பிள்ளை	திரு. சி. நா. குமாரசாமி
ஒட்டக்கூத்தர்	திரு. இ. சுந்தரமூர்த்தி	திரு. அ. நாகலிங்கம்
செயங்கொண்டார்	திரு. வ. செயதேவன்	திரு. மா. செல்வராசன்
சித்தர்கள்	திரு. கு. மோகனராசு	திரு. வீ. ஞானசிகாமணி
புவனந்தியார்	திரு. மா. செல்வராசன்	திரு. கு. மோகனராசு
தமிழ் நிகண்டுகள்	திரு. வீ. ஞானசிகாமணி	திரு. வ. செயதேவன்
இசை நாடக நூல்கள்	திரு. அ. நாகலிங்கம்	திரு. இ. சுந்தரமூர்த்தி
வீரமாமுனிவர்	திரு. சி. நா. குமாரசாமி	திரு. மு. சண்முகம்பிள்ளை
உமறுப் புலவர்	திரு. சு. சண்முகசுந்தரம்	டாக்டர் ந. சஞ்சீவி

8-15 வரை கருத்தரங்குகளை ஒட்டிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும், தமிழ் நாட்டுத் தொல்பொருள் துறை யாரும் நடத்தும் நூற்காட்சி — கண்காட்சி இடம் பெறும்.

யுரை நவில;

இன்னுத கூறல்
கவர்ந் தற்று. '

— திருக்குறள் 100.

ஒய்வு செய்யோம் !

மூன்றும் பொதுநிலைப் பத்து

(9-2-1974 —

வ.எண்.	நாள்	பொருள்	தலைவர்
1.	9—2—1974	கம்பர்	தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
2.	10—2—1974	வில்லிபுத்தூரார்	பேராசிரியர் அ. கி. பரந்தாமனார்
3.	11—2—1974	ஒட்டக்கூத்தர்	பேராசிரியர் அ. கி. பரந்தாமனார்
4.	12—2—1974	செயங்கொண்டார்	சிலம்புச் செல்வர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம்
5.	13—2—1974	சித்தர்கள்	திரு. கீ. இராமலிங்கனார்
6.	14—2—1974	பவணந்தியார்	பேராசிரியர் டாக்டர் இரா. சீனிவாசன்
7.	15—2—1974	தமிழ் நிகண்டுகள்	பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை
8.	16—2—1974	இசை நாடக நூல்கள்	கவிஞர் எஸ். டி. சுந்தரம்
9.	17—2—1974	வீரமாமுனிவர்	திருமதி மேரி கொர்னீலியசு
10.	18—2—1974	உமறுப்புலவர்	மாண்புமிகு எம். எம். இஸ்மாயில்

நாள் கருத்தரங்கு — 1974

18-2-1974)

கட்டுரையாளர்	சிறப்புக் குறிப்புரை ஆற்றியோர்	அவையோரின் எண்ணிக்கை
திரு. கு. இராசவேலு	1 திரு. அ. கு. ஆதித்தர்	65
	2 திரு. வீ. ஞான சிகாமணி	
	3 டாக்டர் எஸ். என். கணேசன்	48
டாக்டர் மு. கோவிந்தசாமி	1 திரு. மேஜர் அ. கிருஷ்ணமூர்த்தி	
	2 திரு. க. பெருமாள்	
டாக்டர் சி. பால சுப்பிரமணியன்	1 புலவர் சாந்தசுந்தரனார்	73
	2 திரு. மேஜர் அ. கிருஷ்ணமூர்த்தி	
திரு. க. ப. அறவாணன்	1 திரு. இரா. நாகசாமி	96
	2 திரு. மு. அருணாசலம்	
திரு. இரா. மாணிக்க வாசகம்	1 திரு. கவிஞர் தமிழழகன்	72
	2 திரு. மு. அருணாசலம்பிள்ளை	
	3 திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை	
	4 திரு. தேவ நடராசன்	
	5 மாண்புமிகு நடுவர் மகராசன்	
பேராசிரியர் திரு. மா. நன்னன்	1 திரு. மு. சண்முகம் பிள்ளை	73
	2 திருமதி ஜெ இராசலட்சுமி	
	3 திரு. க. ப அறவாணன்	
பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி	1 திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு	45
	2 திரு. கி. நாச்சிமுத்து	
	3 திரு. வ. செயதேவன்	
டாகடர் இரா. குமரவேலன்	1 பேராசிரியர் ந பிச்சமுத்து	90
	2 திருமதி. டாக்டர் தி. லீலாவதி	
	3 டாக்டர் ஔவை நடராசன்	
தவத்திரு டாக்டர் வி. மீ. ஞானப்பிரகாசம்	1 டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்	42
	2 டாக்டர் இராசமாணிக்கம்	
	3 டாக்டர் ந. சஞ்சீவி	
பேராசிரிர் திரு. நயினார் முகமது	1 திரு. முகம்மது யூசுப் மோகன்	
	2 திரு. நா. பாண்டுரங்கன்	
	3 திரு. செ. ஷாகுல் ஹமீது	

வாழிய செந்தமிழ்!

'ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.'

—திருக்குறள் 139

'இமயவர்கள் மோலி இணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறும்நின்ற தையல்—சிமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை எண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.'

—தண்டியலங்காரம்
29, உரைமேற்கோள்

'நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென்று அறியல் வேண்டும்.'

—சிலப்பதிகாரம்: 1,10 : 237-8

வாழ்க நற்றமிழ்!

இணைப்பு—மூன்று : தலைமையுரை

15-2-74 அன்று நிகழ்ந்த

நிகண்டுகள் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கில் நிகழ்த்திய தலைமையுரை

'நிகண்டு' என்பது ஒரு பொருள் குறித்த சொற்களின் தொகுதியையும், பல பொருள் குறித்த ஒரு சொற்களின் தொகுதியையும் பாவிலமைத்துக் கூறும் நூல் என்பது 'இறையனார் களவியல்' என்னும் அகப்பொருள் விளக்க நூலின் முதல் நூற்பாவின் உரையிற் காணும் விளக்கம்.

மொழிப்பொருள் முற்ற உணர்தற்குக் கருவியாக அமைவதே நிகண்டெனக் கருதலாம். எல்லாம் உணர்ந்தவனைப்போலப் பேசுபவனை 'நிகண்டு பேசுவான்' என வழங்குவது தமிழ் வழக்கு. சமண வாதியருள் ஒரு சாராரை 'நிகண்ட வாதியர்' என வழங்கும் நூல் வழக்கும் உண்டு

"நிகண்ட வாதியை நீயுரை விளம்பென" மணிமேகலையிற் காணும் இவ்வடி அதனை உணர்த்தும். (மணிமேகலை, 27 ஆம் காதை, அடி 162);

'நிகண்டு' என்னும் சொல், 'உண்மை' உனவும் பொருள்படும் என்பதை 'நிகண்டாயிருத்தல்' என ஒரு சாரார் வழங்கும் வழக்கினால் உணரலாம்.

திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு, கயாகர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, பல்பொருட் சூடாமணி நிகண்டு, பொதிகை நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, நாமதீப நிகண்டு, வேதகிரியார் நிகண்டு, நாநார்த்த தீபிகை, விரிவு நிகண்டு, பாரதி தீபம் உள்ளிட்ட நிகண்டுகள் பல தமிழறிஞர் பலரால் தொகுக்கப்பட்டுத் தமிழ் கூறும் நல்லுலகிற் பலராற் பாடம் செய்யப்பட்டு கவிஞர் பலரை 'நடையகராதிகள்' என வழங்குவதற்குக் கருவியாய் அமைத்தமையை அறியலாம்.

நிகண்டுகளை ஏடு பெயர்த்தெழுதி அச்சேற்றுவதில் புகுந்த சொற்பிழைகள் தடுக்கவியலாதன எனக் கருதலாம். சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டலபுருடர் 'தேனீ' எனப் பொருள் படும் 'சரகம்' என்னும் சொல்லை - ஏட்டில் கால் என வழங்கும் (ர)

குறிக்கும், இடையின ரகரத்திற்கும் வேறுபாடறிய இயலாமையால் 'சாகம்' என மனப்பாடம் செய்து தாமியற்றிய நிகண்டில்

'சாகஞ்சா கினிவெள் ளாடு தேக்கெனுந் தருவுமாமே'
எனப் புகுத்தி விட்டார்.

சரகம்—தேனீ (பிங்கலந்தை), சாகம்—தேனீ (சூடாமணி) என இருசொற்களுக்கும் ஒரே பொருள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியில் இடம் பெற்றுவிட்டது.

மொழிப் பொருளுணர்தற்குக் கருவி நூல்களாயமைந்த பழைய நிகண்டுகளை இயற்றிய ஆசிரியர்களுக்கு 'நல்லோர்' என்னும் பட்டத்தை வழங்கியுள்ளார் 'பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னும் நாமத்து இருந்தவத்தோர்'.

'பிங்கலர் முதலாம் நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' என்பது பவணந்தியார் கூற்று (நன். உரிச். 18).

அந்நல்லோர் நமக்கு வழங்கிய அரும்பொருளாகிய நிகண்டுகளில் பதிப்பித்தவர்களாலும் ஏடெழுதியவர்களாலும் நேர்ந்த பிழைகளை ஆய்ந்தறிந்து களைந்து அச்சேற்றிப் போற்றுதல் நமது கடன்.

அயல் மொழியினர் தமிழ் பயின்று மொழிப்பொருள் உணர்த்த வகுத்த அகராதிகளுக்கெல்லாம் அன்னையாய்த் திகழ்ந்தவை பண்டைய நிகண்டுகளே என்பதிற் பழுதில்லை.

அகராதி அமைப்பு முறை, வருக்க மோனையைப் பின்பற்றி இயற்றப்பட்ட ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் நீதி நூல்களிலேயே முகிழ்த்திருப்பதைக் காணலாம். அம்முறையைப் பின்பற்றி எழுந்ததே அகராதி நிகண்டு எனக் கொள்ளலாம்.

பயனுள்ள பததுநாட் கருத்தரங்கில் நிகண்டும் இடம் பெறச் செய்தமை பாராட்டிற்கு உரியது. பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைமையை வாழ்த்துகிறேன்.

நிகண்டு பற்றிய ஆய்வுக் கட்டுரையைச் செவ்விய முறையில் அமைத்துத் தமிழ் நெஞ்சமெல்லாம் தனியின்பம் நுகர உரை நிகழ்த்திய அறிஞரவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சென்னை,
15—2—74 **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.**

இணைப்பு—நான்கு: *சிறப்புக் குறிப்புரைகள்*

முதல் நாள் கருத்தரங்கு—9.2.74

பொருள்; கம்பர்

சிறப்புக் குறிப்புரை: கவிஞர் அ. கு. ஆதித்தர்

யான் அறிந்த அளவில் கம்பர் உலகப் பெரும்புலவர். ஏனைய புலவர்களிடத்தில் ஒவ்வோரிடத்தில் நறுமணங் கமழும். கம்பர் காவியம் உருவத்தில் பெரியது ஆயினும் தொட்ட இடம் கைப்பட்ட இடம் எல்லாம் மணக்கிறது. இத்தகைய நுண்ணியச் செறிவு யாண்டும் காண்டற்கு இல்லை.

யான் கதையைக் கவனிப்பதில்லை. அவர் காட்டும் பண்பாடு, நாகரிகம் அதற்கேற்ற மொழிநயம் இவற்றில் கருத்தைச் செலுத்துவது என் இயல்பு. ஒன்றிரண்டு உரைக்கின்றேன். சீதை மணப் பந்தலுள் வந்திருக்கிருள். உலக வழக்கில் மணப்பெண்ணைக் கண்டவுடன் கூட்டத்தார் கண், காது, மூக்கு, முகம், நடை, உடை, முடி, அடி பற்றிப் பலவாறு பேசுவர். ஆனல் சீதையைக் கண்ட கம்பர் காட்டிய கூட்டத்தார் தலைமேல் கைதூக்கித் தெய்வந் தொழுத வண்ணமாயிருந்தனர். அவர்கள் உள்ளத்தில் சீதையின் உரு தெய்வ சிந்தனையைத் தூண்டிற்று. எத்துணை உயர்ந்த கருத்து 'நைவள மிழற்று மொழி'' என்ற பாடல். கீழ்த்தரமான எண்ணம் சிறிதும் இல்லாமல் நமக்கெல்லாம் உயர்ந்த பெருநெறி உணர்த்துகின்ருர் கம்பர்.

புதிதாகக் காணும் ஒருவரை இனம் அறிந்து கொள்ள ''நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? உங்கள் பெயரைச் சொல்லுங்கள்'! என்று நாம் இராணுவத் தமிழில் பேசுகிருேம். இராணுவத் தமிழ் என்பது ஆணவ நடை. கம்பர் மிகமிக நாகரிகமாக நெளிவு குழைவோடு பேசக் கற்பிக்கின்ருர். இராமனைவிட்டுப் பிரியும் அனுமான் சுக்ரீவனிடத்தில் செய்தி அறிவிப்பதற்கு ''நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?'' என்று கேளாமல் ''யார் எனச் சொல்வேன் கொல்லோ எம் குலத் தலைவர்க்கு'' என்று விநயமாகப் பண்பாட்டு முறையோடு கேட்கிருன். அந்நெறியில் நாமும்

"தங்களைப் பற்றி யானும் சற்றே தெரிந்து கொள்ளலாமா" என்று கூறலாம். ஆங்கிலேயர் இத்தகைய பண்பாட்டை எத்துணை ஓம்பு கின்றனர். சொற்கள் நெறிப்பட, உள்ளம் நெறிப்பட்டு ஒழுக்கம் நெறிப்படும்.

ஒருநாள் இரவு யான் டாக்டர் சஞ்சீவி அவர்கள் மனைக்குச் சென்று, அன்னார் அங்கு இல்லாமையால் திரும்ப முயன்றேன். அப்பொழுது அவர் மகள் "அப்பா வந்தால், யார் வந்ததாக யான் கூற வேண்டும்" என்றனள். ஒரு பகலில் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வுக் கூடத்துக்குச் சென்று முன்கூறிய முறையி லேயே திரும்பினேன். அப்போது அங்கிருந்த சங்கரன் என்னும் இளைஞர் "ஐயா வந்தால் யான் தங்களை எவ்வாறு அறிவிப்பது" என்று கேட்டார். 70 ஆண்டு காலத்தில் பண்பட்ட பேச்சு இருவர் வாயிலதான் கேட்க முடிந்தது.

சேக்சுப்பியர் நாடகங்களில் வீரச்சுவை மிக்கது 'சூலிய சீசர்'. ஆயினும் கம்பர் காட்டும் வீரச்சுவை அதனினும் பல்வகையில் விஞ்சி நிற்கிறது. முதல் நாள் போரில் ஆயுதமிழந்து நிற்கிற இராவணனைப் பார்த்து "இன்று போய் நாளை வா" என்ற வீரத்துக்கு இணை ஏது? தன்னுடன் வீரமாகப் போர் செய்த இலக்குவனை "இவன் மனுசன்! காட்டில் கரனை வதைத்த இராமனும் இநதிரன் கோட்டத்தை இடக்கிய என் மகனும் யானும் அன்றி வேறு யார் உனககு நேர்!?" என்று பாராட்டிய வீரததுக்கு ஈடு உண்டோ? "இறப்பு பொது, அதற்கு அஞ்சேல், பொருது புகழ் எய்து" என்ற வீரததைப் போற்றிய சொறகளுககு ஒப்பு ஏது? இவ்வாறு உள்ள பல துறைப் பெரு வாக்குகளையும் கற்று வாழ்க்கையைத் திருத்த வேண்டும்; நெஞ்சம் நிறைவு காணல் வேண்டும். இதற்குமேல் காலம் இடந் தராது. நன்றி. அமர்கிறேன்.

நான்காம் நாள் கருத்தரங்கு—12-2-74

பொருள் : செயங்கொண்டார்

சிறப்புக் குறிப்புரை : திரு. மு. அருணாசலம்

திரு. அறவாணன் கலிங்கத்துப்பரணியை ஆராய்ந்து பல புதுக் கருத்துக்களை இதுவரை சொல்லக் கேட்டோம். அவை யாவும் சுவையுடையன. ஆராய்ந்து கொள்ளத்தக்கன. அவற்றோடு பின்வரும் கருத்துக்களும் சிந்தித்தற்குரியன.

கலிங்கத்துப்பரணிக்கு இக்காலத்தில் ஏற்றம் ஏற்பட்டிருப்பது, அதன் பகுதிகள் சில கல்லூரிப் பாடமாக அமைந்திருந்தமையால் அல்ல. சமீப காலத்தில் கல்வெட்டு ஆராய்ச்சிச் செய்திகள் அதிகம் தெரிய வந்துள்ளன. இதன் பயனாகச் சோழ அரசர் பரம்பரை பற்றிய ஆராய்ச்சியில் அறிஞர் கவனம் சென்றிருக்கிறது. செயங்கொண்டார், சோழர் தம் இராச பாரம்பரியத்தைக் குலோத் துங்கன் பிறப்பையொட்டி விரித்துக் கூறுகின்றமையால், அதனிடம் ஈடுபாடு பெருகியுள்ளது.

தமிழில் கவிச் சக்கரவர்த்தி எனப்படுவோர் மூவர். கம்பர், செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர். மூவரும் சோழ நாட்டினர், இங்கேயே வாழ்ந்தவர்; பினனிருவரும் சோழர் ஆதரவு பெற்றோர். இதையொட்டி செயங்கொண்டாரிடத்து நமக்கு ஈடுபாடு பெருகும். தவிர, ஒரு சிறு பிரபந்தமாகிய பரணிபாடிக் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தைப் பெற்றமை இச்சிறு நூலிடத்து மக்களுக்குள்ள ஈடுபாட்டை நன்கு விளக்குகின்றது.

பரணி மூன்று வகை. முதலாவது, உண்மையாகவே நடந்த போரைக் கூறுவது; கலிங்கத்துப்பரணியும் இதற்கு முன் இருந் தனவாக நாம் அறியும் கொப்பத்துப் பரணியும், கூடல் சங்கமத்துப் பரணியும் இவ்வகை. இரண்டாவது புராணப் போரைச் சொல்லும் பரணி; இதற்கு எடுத்துக்காட்டு தக்கயாகப்பரணி, இரணிய வதைப் பரணி. மூன்றுவது வகை, கருத்துப் போரைக் குறிப்பிடுவது; எடுத்துக்காட்டுகள் மோகவதைப் பரணி, அஞ்ஞானவதைப் பரணி, பாசவதைப் பரணி; இவை சமயத்துறை.

பன்னிரு பாட்டியல் எழுநூறு யானைகளைக் கொன்றவன் பரணி பெறத்தக்கான் என்று கூறுகிறது. பிற்காலத்தில் இலக்கண விளக்கம் இதைப் பெருக்கி ஆயிரம் யானை என்கிறது.

பன்னிரு பாட்டியல் கூறும் பிரபந்த இலக்கணங்களை ஆராய்ந்தால் அந்நூலின் கருத்துக்கள் யாவும் வருங்காலத்தில் பிரபந்தங்கள் இன்ன நெறியில் அமைய வேண்டும் என்று இலக்கணம் வகுப்பனவாக இருப்பதை அறியலாம். அதில் கூறப் பட்ட எல்லாப் பிரபந்தங்களும் முன்னமே இருந்தன என்று கொள் வதற்கு ஆதாரமில்லை. 8 ஆம் நூற்றுண்டில் தமிழ் இலக் கணத்தில் ஒரு பெருங்கிளர்ச்சி எழுந்தது என்றும், அப்போது தோன்றிய நூல்கள் பல இறந்து போக எஞ்சிய நூற்பாப் பகுதிகளை மட்டும் பன்னிரு பாட்டியல் திரட்டித் தருகிறது என்றும் கருத வேண்டும்.

கடை திறப்பு என்பது திருப்பள்ளியெழுச்சி போல, வெற்றி பெற்று வரும் வீரர்களைப் போற்றும் பொருட்டு மகளிர் எல்லோரும் எழுந்து வரும்படி சில மகளிர் சென்று எழுப்புவதாக அமைந் துள்ளது.

கலிங்கத்துப்பரணியால் விளைந்த பெரும் பயன் நாட்டுப்பற்று. இப்பரணிப் பாட்டால் சோழ நாட்டு மக்கள் மனதில் நாட்டுப்பற்று விளைந்து பின்னர் சில நூற்றுண்டுக்காலம் சோழப் பேரரசு நிலை பெறச் செய்திருக்கிறது.

பேய்களைப் பற்றிய குறிப்பில் மிக்க பயங்கரமும், அவலமும், இழிப்பும் காணப்படுவது உண்மை. ஆனல் இவற்றை வருணிக்கும் கவிச்சுவை காரணமாக இன்ப உணர்ச்சி எழுகிறது. இது கவிதையால் விளைகிற இன்பம்; இதுவே ரசம் என்பது.

ஐந்தாம் நாள் கருத்தரங்கு—13-2-74

பொருள் : சித்தர்கள்

சிறப்புக் குறிப்புரை : திரு. மு. அருணசலம்

சித்தர் என்ருல் சிவஞானி ; சிவஞானம் கைவந்தவர். தமிழ்த் திருமுறைகளில் சித்தர் பத்தர் என்ற தொடர் அடிக்கடி வருவதுண்டு. 'பத்தர் சித்தர் பலரேத்தும் பரமா' என்பது ஒரு தேவாரப் பாடல். தமிழ்நாட்டில் சித்தர் மரபு மிகவும் பழமையானது. பதினெண் சித்தர் என்பது ஒரு தொகை. இதற்கு விளக்கமில்லை. முதல் முதல் சென்ற நூற்ருண்டில் சரவண முத்துப்பிள்ளை என்பவர் பதினெண் சித்தர் ஞானக் கோவை அச்சிட்டு வெளியிட்டார். இதனுள் பல சித்தர் பாடல்களும், பல வைத்திய சித்தர் பாடல்களும், போலிச் சித்தர் பாடல்களும், அல்லாத பாடல்களும், 19ம் நூற்ருண்டில் தோன்றிய சில உரைநடைப் பகுதிகளும் கலந்து அச்சிடப் பட்டுள்ளன. இதைத் திருத்தமான ஒரு சித்தர் பாடற் கோவை என்று சொல்ல இயலாது. சித்தராக நாம் கருதத்தக்கவர்கள் பட்டினத்தார், பத்திரகிரியார், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கடுவெளிச் சித்தர், குதம்பைச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், அழுகுணிச் சித்தர், காளச் சித்தர், ஏணுதிச் சித்தர், சிவ வாக்கியர் எனபோர். விநாயகர் அகவலும் ஞானக் குறளும் பாடிய ஔவையாரும் ஒரு சித்தர் என்று கருதவேண்டும்.

சம்பந்தர் ஆகியோருக்கு முற்பட்ட காலத்தவராகிய திருமூலரையும் சித்தர் என்று கருதும் வழக்கமுண்டு. ஆனுல் அவருடைய திருமந்திரப் பாடல்கள் சைவத் திருமுறைகளில் ஒரு திருமுறையாக தொகுக்கப்பெற்றுள்ளமையால் அவரை ஒரு சித்தராகக் கொள்வதில்லை. மேலும், ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியுள்ள திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர் ஆகியோரையும் சித்தர் என்று சிலர் கருதுவதுண்டு. இது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. சித்தர் அனைவரும் சிவ வழிபாடுடையவர்கள்.

சித்தர் ஞானம் கைவந்தவர்கள் மட்டுமல்லாமல், யோக நெறியிலும் நின்றவர்கள் ஆவர். யோக நெறி பதஞ்சலி வகுத்தது என்று சொல்வதுண்டு. ஆனுல் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில், தமிழ் யோக சூத்திரங்களை எடுத்துத் தருகிருர். அதுமட்டுமல்லாமல், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் என்பவற்றிற்கு அந்தச் சூத்திரங்கள வளிநிலை, தொகை நிலை, பொறைநிலை, நினைதல் என்ற தமிழ்ப் பெயர்களையும் சொல்லுகின்றன. இவற்றைப் பார்க்கும்போது, இந்த யோக முறை பதஞ்சலி

மரபின்படி அல்லாமல், தமிழிலும் தனியே மருவியிருந்தது என்று தெரிகிறது.

சித்தர் பொதுவாக உருவ வழிபாட்டைக் கண்டித்தவர்கள் என்ற கருத்து நிலவுகிறது. இக்கருத்து முழுமையும் சரியாகாது. உள்ளத்துள் உள்ள இறைவனை உணராத வரையில் புறத்தே செய்கின்ற வழிபாடு பயனுடையதன்று என்பதே இதன் பொருள். சிவ வாக்கியர் பாடுகின்ற பாடல்களில் இந்தக் கருத்தை நாம் நன்ருகக் காணலாம். மற்றபடி சிவபெருமானுடைய திருவுருவத்தின் தன்மையாகிய நீலகண்டம், ஏற்று வாகனம, உமாபாகம், திருவைந் தெழுத்து முதலியவற்றை அவர் வற்புறுத்திச் சொல்லுகிருர். ஆதலால் அவர் உருவ வழிபாட்டை மறந்தவர் என்று கொள்வது பொருந்தாது. சித்தர் போலிச் சடங்குகளைக் கண்டிப்பவர்கள். பிறப்பினுல் தான் சாதி என்ற கொள்கையை அடியோடு மறுப்பவர்கள். சிவஞானிகள் அட்டமாசித்திகளை அற்பம் என்று தள்ளியவர்கள். சைவர்கள் பூசையில் உருவம் வைத்திருந்த போதிலுங்கூட, வழிபாடு உருவத்துக்கல்ல. உருவங் கடந்து அப்பாலுள்ள பரம்பொருளுக்கே செய்யப் பெறுகிறது.

சிறப்புக் குறிப்புரை: பெரும்புலவர் திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

'அணிமா, மகிமா, கலிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துதம், வசித்துவம்' என்பன எண்வகைச் சித்திகள் என வழங்கப்படும். இவற்றில் வல்லவரைச் சித்தர் என வழங்குவர். எண்வகைச் சித்திகள் யோக ஆற்றலாற் பெறும் பேருகும்.

தலைசிறந்த சித்தர் பதினெண்மரைப் 'பதினெண் சித்தர்' என வழங்கியது தமிழ் கூறும் நல்லுலகம் :

1.	திருமூலர்	10.	கோரக்கர்
2.	இராமதேவர்	11.	கொங்கணர்
3.	கும்பமுனிவர்	12.	பதஞ்சலியார்
4.	இடைக்காடர்	13.	நந்தி தேவர்
5.	தன்வந்திரியார்	14.	மோதகுரு
6.	வான்மீகியார்	15.	பாம்பாட்டியார்
7.	கமலமுனிவர்	16.	சட்டை முனிவர்
8.	போகநாதர்	17.	சுந்தரானந்ததேவர்
9.	மச்சமுனிவர்	18.	குதம்பைச் சித்தர்

இவர்களேயன்றி, யோக ஆற்றல் பெற்றவர் பலரும் சித்தர் எனவே வழங்கப்படுகின்றனர்.

சித்தர்களைப்பற்றிய செவிவழிச் செய்திகளையன்றி, ஆராய்ந்து உண்மைகளை வெளியிட்ட வரலாற்று நூல்கள் இதுகாறும் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

பட்டினத்தடிகளார் சித்தர்களை 'உண்மை ஞானம் தெளிந்தவர்' எனப் பாராட்டுகின்றார்.

"பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெலாம்
நாய்போ லருந்தி நரிபோல் உழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்கும் தாழ்மைசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீண்மை ஞானந் தெளிந்தவரே"

என்பது அடிகளார் அருளிச்செய்த பாடல்.

தமிழில் வெளிவந்துள்ள சித்தர் ஞானக்கோவையை ஒல்லும் வகை ஆய்ந்து, நல்ல பதிப்பென வல்லவர் பாராட்டும் பதிப்பை வெளியிடும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது பெறலரும் பேறெனக் கருதுகிறேன். அப் பதிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தபோது, "யானா நடாத்துகின்றேன்" என்று எனக்கே நகை விளைக்கும் சில ஆன்ம சோதனைகள் எனக்கு நேர்ந்ததுண்டு. அச் சோதனைகளே என்னை வழி நடத்தி வருகின்றன என யான் நம்புகிறேன்.

தற்செயலாக, எனக்குக் கிட்டிய Blavatsky அம்மையார் எழுதிய The recent என்னும் அரிய ஆங்கில நூலைப் படித்ததால் உண்டான அனுபவமும், எமர்சன் என்னும் அயல்நாட்டு அறிஞர் கூறும்

"There is many thing wrought unknown"

என்னும் ஞானமொழியும் என் அனுபவங்களை வலியுறுத்தின.

சித்தர் ஞானக்கோவை, கூடப்பொருள் பொதிந்த ஞானப் பேழை; யோகிகளையன்றி மற்றவர்களுக்குத் திறற இயலாத பெட்டகம். அப் பெட்டகத்தை நமக்கு அறிமுகப்படுத்தும் வகையி லமைந்த இக் கருத்தரங்கை யான் பாராட்டுகின்றேன். கட்டுரை யாளரை வாழ்த்துகின்றேன்.

ஆறும் நாள் கருத்தரங்கு—14-2-74

பொருள்: பவணந்தியார்

சிறப்புக் குறிப்புரை: திரு. மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர், திருக்குறட்பகுதி, சென்னைப் பல்கலைக் கழகம்.

'பவணந்தியார்' என்னும் இன்றைய பேச்சில் கட்டுரையாளர் பேராசிரியர் நன்னன் அவர்கள் பவணந்தியாருடைய வரலாற்றில் ஆழ்ந்து செல்லவில்லை. அவர் வாழ்ந்த காலச் சூழலைக் காண முற்படவில்லை. நமக்குப் பயன்படுவது ஆசிரியர் ஆக்கித் தந்த அரிய தமிழிலக்கணமாகிய நன்னூலே எனனும் கருத்தால் நூற் பொருளையே பேச்சின் கருப்பொருளாகக் கொண்டு உரையாற்ற முற்பட்டுள்ளார். நூலின் அடிப்படையில் ஆசிரியர் திறம் காண்பது சீரிய முறையும் ஆகும்.

நன்னூல் ஒரு காலத்தில் ஐந்திலக்கணமும் கூறும் நூலாயிருந் திருத்தல் கூடும் என்பதனை இந்நூலின் பாயிரக் குறிப்பையும், நூலகத்துள்ள புறனடை முதலிய சில பகுதிகளின் போக்கையும் கொண்டு கட்டுரையாளர் துணிகிறார். 'தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலசுகியம் ஆரணசாரம்...பரகாலின் பனுவலகளே' எனத் திருமஙகைமன்னன் வாக்கினைப் போற்றும் தனியனும் இதற்கு ஒருபுறச் சான்ருகக் கொள்வதுண்டு.

பின்னுள் இலக்கண நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகர் தாம் செய்த இலககண விளக்கம் என்னும் நூலுள் எழுத்து, சொல் பற்றிய பகுதிகளில் நன்னூல் சூத்திரங்களை எடுத்து அப்படியே அமைத்துக் கொண்டிருக்கிறார். இதுபோன்றே பொருள் பற்றிய பகுதியில் இந் நன்னூற் சூத்திரங்கள் உளவா என்பது அந்நூல் முற்றும் கிட்டாதவரையில் ஒன்றும் சொல்வதற்கு இலலை. இவ்வாருகவும், முழுமையாய்ப் பவணந்தியார் ஐந்திலக்கணமும் செய்யவில்லை. எழுத்து சொல் இலக்கணங்களையே இயற்றினர் என்று அறுதியிட்டு விடவும் இயலாது. எனவே, இஃது இன்னும் தீர்க்கப்படாத ஓர் ஐயமாகவே இருந்து வருகிறது என்னலாம்.

இப்பொழுது கிட்டியுள்ள நன்னூற் பகுதிகளில்கூடக் கட்டுரை யாளர் முழுமையும் எடுத்துக் கொள்ளவில்லை. எழுத்ததிகாரத்தில் உள்ள வினவெழுத்து, சார்பெழுத்துக்கள் பற்றியே சிறப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆ, எ, ஓ என்னும் மூன்று வின வெழுத்தே என்று தொல்காப்பியர் கூறப் பவணந்தியார் ஐந்து

கொண்டதும் தொல்காப்பியருக்கு உடன்பாடே என்பதை உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தி வகையில் அமைந்துள்ள இடங்கள் காட்டித் தெளிவுபடுத்தியுள்ளார். இவருடைய பேச்சின் பெரும்பகுதியும் தொல்காப்பிய நன்னூல் ஒப்பாய்வாகவே அமைந் துள்ளது.

சார்பெழுத்துக்கள் என்னும்போது அவை தனி எழுத்தாமாறு இல்லை; மொழிவழி வரும் ஓசை விகற்பங்களே அவை. இவற்றிற்குத் தொல்காப்பியர் மொழி மரபில் விளக்கம் தருவதும் சிந்தித்தற் குரியது. இன்னும் இச் சார்பெழுத்துகள் புணர்ச்சி வகையின் வேறுபடுவதும் பாடல்களிலே ஓசையமைதியில் ஒன்றித்து நிற்றலும் கருதி இவை தனியெழுத்தொலிகளாகப் பேசப்பட்டுள்ளன.

சொல்லை அடிப்படையாக வைத்துத்தான் தனியெழுத்தொலிக் கூறுகளைக கணித்தல் ஏற்புடைத்தாகும். ஒரு சொல்லின் முதலில் வரும் எழுத்து இறுதியில் முடியும் எழுத்து இடையில் நிற்கும் ஒலிக்கூட்டம இவையெல்லாம்கூட எழுத்தொலிநிலை பற்றியனவே. மொழியிடையில் இயைபுற்று நிற்கும் எழுத்தொலிகளை உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயககம் என இருவகைப் படுததினர். இங்ஙனமாக ஒலிநிலைகள் தமிழ்ச் சொற்களை இனங் கண்டு கொள்வதற்குத் துணைபுரிகின்றன. இவ்வாறே சார்பெழுத்து என்பதும் மொழிகளில பயின்றுவரும் ஒரு பாகுபாடே என்பதும் தனி எழுத்துருவம் இதற்கு இல்லை என்பதும் புலப்படும்.

> *'சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்*
> *தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்'*

எனப் புணரியலின் தொடக்கத்தில் தொல்காப்பியர் தரும் செய்தியும் இதனைத் தெளிவுபடுத்தும்.

ஆறும்நாள் கருத்தரங்கு — 14-2-74

பொருள் : பவணந்தியார்

சிறப்புரை : திருமதி. ஜெ. இராசலக்குமி
தமிழ்த் துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

பேராசிரியர் நன்னன் அவர்கள் உரை மிகச் சிறப்பாக இருந்தது. நன்னூலை நல்ல முறையில் நகைச்சுவையோடு விளக்க அவரால்தான் முடியும். நன்னூலைப் பற்றித் தனியே ஆராய்ந்து கூறுது, அதனைத் தொல்காப்பியத்தோடு இணைத்துக் காட்டிய முறை மிக நல்ல முயற்சி.

கட்டுரையை ஒட்டிய சில செய்திகளைக் காணலாம்.

1. தொல்காப்பியம் 946 நூற்பாக்களில் எழுத்தையும் சொல்லையும் ஆராய்ந்துள்ளது. நன்னூல் 407 நூற்பாக்களில் சுருக்கமாகவும் எளிமையாகவும் அதனை ஆராய்ந்துள்ளது. நூற்பாக்களின் தொகை நோக்கி, சுருக்கத்தை நன்னூலில் காண்கிறோம். சில நூற்பாக்கள் (சான்றுக — றவ்வொடுகரவும்மை நிகழ்பல்லவும் — நன்.145) உரையுடன் சான்றுகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே, பிரித்துப் பொருள் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. அது சுருக்கத்தின் விளைவேயாம்.

2 தொல்காப்பியம் ஆ, ஏ, ஓ மூன்றும் வினவெழுத்து என்று குறிக்கும். நன்னூல் எ, யா இரண்டையும் இணைத்து ஐந்தாகக் காட்டும். தொல்காப்பியம் யாவர், யாது, எவன் என்ற சொற்களைத் தருவதைக் கொண்டு, அவற்றையும் கொள்ள இடமுண்டு. தொல்காப்பியம், காலக்கிளவி, வியங்கோள் விகுதி போன்றவைகளைக் குறிக்கவில்லை. மூன்றும் வேற்றுமைஉருபாக முதலில் தொகுத்துக் கூறுமிடத்து 'ஒடு' என்பதையே தந்துள்ளது. பின்னர் வேற்றுமை மயங்கியலில் ஆன் உருபும் குறிக்கப்படுகிறது. இவ்வாறே சில செய்திகள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், நூற்பாக்களின் துணைகொண்டு கருத்துக்களை வாங்கிக் கொள்கிறோம். அவ்வாறே வினு எழுத்துக்களாக, தொல்காப்பியம், எகரத்தையும் யகரத்தையும் கொண்டதாகக் கருத இடமுண்டு.

3. ஆய்தம் இலக்கண ஆசிரியர் கற்பனை என்று கூறக் காரணம், ல, ள, வ முதலியவை புணர்ச்சியில் திரியுமிடத்து, ஆய்த வொலி தோன்றுவதேயாகும். இதுபோன்ற நிலை மற்றைய ஒலிகளுக்கு இல்லை. இன்றைய மொழியியல் முறைப்படி, இதனை

மாற்றொலியனாகக் (Allophone) கொள்ளலாம். இதனைத் தொல் காப்பியம் முப்பாற்புள்ளி என்று குறிக்கும். சில இலக்கணப் புலவர்கள் முப்பாற்புள்ளி என்பதை, குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பவற்றோடும் கொண்டு, சார்பெழுத்துக்கள் எல்லாம் புள்ளி பெற்றன என்பர்.

4. நன்னூலார் வேற்றுமைகளைப் பற்றிச் சொல்லும் இடத்தில் ஒரு சிக்கல் காணப்படுகிறது. திராவிட மொழிகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் ஒரே வேற்றுமை உருபுதான் உண்டு. ஒருமையில் பெயருடன் சாரியை இணைந்தோ இணையாமலோ வேற்றுமை உருபு இணையும் (மரம் + அத்து + ஐ) பன்மையில் பெயருடன் பன்மை உருபு இணைந்து, பின்னர் வேற்றுமை உருபு சேரும் (மரம் + கள் + ஐ). இம்முறையே மிகச் சிறப்பாக அமைந்துள்ளது என அறிஞர் கால்டுவெல் பாராட்டுகிறார். மற்ற மொழிகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு உருபுகள் வருவதுண்டு. நன்னூல் 6ஆம் வேற்றுமை உருபுகளைக் கூறுமிடத்து ஒருமைக்கு அது, ஆது என்பனவும், பன்மைக்கு அகரமும் உருபாகும் என்கிறது. "ஆறனொருமைக்கு அதுவுமாதுவும் பன்மைக்கு அவ்வுமுருபாம்" (நன். 300). இது தமிழ் வேற்றுமை அமைப்பு முறைக்கு முரண்பட்டு வந்துள்ளது.

5. நன்னூல் உரியியல், தொல்காப்பியத்திலிருந்து மிகுதியும் வேறுபட்டுள்ளது. உரிமை என்ற சொல்லை இருவரும் வெவ்வேறு வகையில் கொண்டுள்ளனர். தொல்காப்பியர் இசை குறிப்பு பண்பு இவற்றிற்கு உரிமை பூண்டு வருதல் உரிச்சொல் இலக்கணம் என்கிறார். நன்னூலார் பொருட்கு உரிமை பூண்டு செய்யுட்கு உரியனவாய் வருதல் என்கிறார். அதனால் பொருள் குணம் பற்றி விரிவாக இவ்வியலில் ஆராய்ந்துள்ளார். இக் கருத்துக்கள் தொல் காப்பியம் பொருளதிகாரம் மரபியலில் இடம் பெறுகின்றன.

6. நன்னூலார் 'தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும்' என்று கூறுமிடத்து, பகுதி என்பது மொழியியலார் கூறும் பொருளசை (Morpheme) என்பதை ஒத்துள்ளது. அவரது 'பதவியல்' புதிய கண்ணோட்டத்தில் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

———

ஏழாம் நாள் கருத்தரங்கு — 15-2-74

பொருள்: தமிழ் நிகண்டுகள்

சிறப்புக் குறிப்புரை: டாக்டர் கி. நாச்சிமுத்து, விரிவுரையாளர்,

கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

நிகண்டு என்பது வடமொழியில் வேதத்தில் வரும் அரிய பழஞ் சொற்களின் தொகுதியாகக் காணப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதேபோலத் தமிழ் நிகண்டுகளும் இயற்சொல், திசைச் சொல், திரிசொல், வடசொல் ஆகிய சொற்களில அரிய வழக்குகளை மட்டும் - பழைய இலக்கியப் படிப்புக்கு மிக வேண்டுவனவற்றை மட்டும் தொகுத்துக் கூறுகின்றனவா ? அல்லது சமகால முற்கால இலக்கியம் வழக்கு ஆகியவற்றிலிருந்த எல்லாச் சொற்களையும் தொகுத்துக்கூற முயன்றிருக்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது.

தொல்காப்பியத்திலேயே (உரியியல், மரபியல்) தமிழ் நிகண்டு களின் தோற்றத்தைக் காண்பதாக இருநதால், தொடக்க காலத்தில் இலக்கியப் படிப்புக்கு உரிய – அரிய வழக்குச் சொற்களின் தொகுதியாகவே இந்நிகண்டுகள் தோன்றியிருககலாம் எனத் தோன்றுகிறது. (பிற்கால நிகண்டுகளும் உரிச்சொல் பனுவல் எனத் தம்மை அழைத்துக் கொள்கினறன என்பது கருதத் தக்கது). அதனால்தான் சாதாரண வழககிலிருந்து கல்வெட்டு வழக்காறு களாகக் காணப்படும் சொற்கள் பல நிகண்டுகளில் காணப்பட வில்லை போலும். பழைய இலக்கியப் பயிற்சி மீண்டும் தலைதூக்கி மிகுதியாகப் பயிலப்பட்ட காலத்தில் பல நிகண்டுகளும் தோன்றி யிருப்பது இக்கருத்துக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைகிறது. செய்யுட் கணிகலனுய உரிச்சொற்களைத் தொகுத்துரைப்பதாகப் பிங்கலந்தை சிறப்புப் பாயிரம் கூறுவது இங்கு நினைவூட்டத்தக்கது. ஆனுல் காலப்போக்கில் இவற்றின் நோக்கம், அமைப்பு ஆகியன விரிவடைந்திருக்கலாம்.

நிகண்டுகளின் நோக்கம், அமைப்பு ஆகியவற்றின் தோற்றம் வளர்ச்சிகளில் நிகழ்ந்த மாற்றங்களை அறிய, நிகண்டுகளில் வரும் சொற்கள், அவற்றிற்குச் சமகால, முற்கால இலக்கியம், கல்வெட்டு, வழக்கு ஆகியவைகளில் எவ்வளவு தூரம் வழக்கிலிருந்தன என்பதைப் புள்ளி விவர ரீதியாகக் கணக்கெடுத்துப் பார்த்தால் அறிய முடியும்.

இதற்கு நமக்கு இப்போது பழங்கால இலக்கியம் கல்வெட்டு ஆகியவற்றிற்குச் சொல்லடைவுகள் காணப்படுகின்றன. அவைக ளைப் பயன்படுத்தி நிகண்டுகளிலும் இச் சொல்லடைவுகளிலும் புள்ளி விவர ஆய்வு மேற்கொண்டால் இதைப்பற்றி முடிவு செய்ய இயலும்.

எங்கள் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சங்க இலக்கியங்களான புறம், அகம், குறுந்தொகை, நற்றிணை, கலித் தொகை, பரிபாடல், பதிற்றுப்பதது, பத்துப்பாட்டு ஆகியவற் றிறகும், திருக்குறள், சிலம்பு, மேகலை, பெரிய புராணம், கம்ப ராமாயணம், முத்தொள்ளாயிரம், கலிஙகத்துப்பரணி, அற்புதத் திருவந்தாதி, முக்கூடற்பள்ளு, தமிழ்விடுதூது, மீனுட்சி அம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம், திருபபுகழ் (50 பாடல்கள்), பராபரக்கண்ணி, இரட்சணிய யாத்திரிகம், ஞானஉலா, இரவிக் குட்டிப் பிள்ளைப போர், இராமலிங்கர் பாடல்கள (சில), பாரதியின் கண்ணன் பாட்டு, கவிமணியின் மருமககள் வழி மான்மியம், புதுமைப் பிததன் கவிதைகள் ஆகிய பிற இலக்கியங்கடகும், பரமார்த்த குரு கதை, ஜெயகாநதனின் யாருககாக அழுதான் போன்ற உரைநடை நூல்களுக்கும், தொல்காப்பியம், நனனூல், வீரசோழியம், இறையனுர் களவியல, தண்டியலங்காரம, யாபபருங் கலக்காரிகை, நேமிநாதம், இலககண விளக்கம், பிரயோக விவேகம், தொன்னூல் விளககம் ஆகிய இலக்கண நூல்கட்கும், 7—9 நூற் ருண்டுத் தமிழ்க் கலவெட்டுக்களுக்கும் சொலலடைவுகள் காணப் படுகின்றன. இவைகளைப் பயனபடுத்தி மேற்கண்ட நிகண்டுகள் பற்றி ஆய்வு செய்தல் விரும்பத்தக்கது.

பழங்காலத்திலேயே தமிழ்ச் சொற்களின் பொருள் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதற்கு மலையாள இலக்கண மாகிய லீலா திலகததில சான்று இருக்கிறது.

வயிறு என்ற சொல் வைரி என்ற வடசொல்லிலிருந்து வந்தது; ஏனெனில் வயிறு மனிதனுக்கு விரோதி.

பாம்பு. பாப என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்; ஏனெனில் பாம்பு பிறரைக் கொல்வதால் பாபி ஆகிறது.

சோறு, சோர என்பதிலிருந்து வந்தது - உணவு, இரத்தமாக மாறுவதால்.

இவ்வாறு கூறப்படும் சொற்பொருள் விளக்கம் அன்றே கண்டிக்கப்பட்டது என்பதற்கும் லீலா திலகத்திலேயே சான்றும்

காணப்படுகிறது (பார்க்க: லீலா திலகம் தமிழ்ப் பெயர்ப்பு மா. இளையபெருமாள் (1971) பக். 47 எப்எப்).

பொதுவாகத் தற்கால அகராதிகளில் சிறப்புப் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் ஆகியவற்றைச் சேர்ப்பதில்லை. அவைகள் சிறப்புப் பெயரகராதிகளாக (Specified Glossaries) தனியாக வெளியிடப்படு கின்றன. நம் பழைய நிகண்டுகள் சொல் தொகுதியொடு, பெயர்த் தொகுதிகளையும் கூறுகின்றன. காவிரி, கங்கை, வைகை, மதுரை போன்றவற்றின் வேறு பெயர்களை இந் நிகண்டுகள் தொகுத்துக் கூறுவதைப் பார்க்கலாம். ஆனால் அக்காலத்திலும் சிறப்புப் பெயர் அகராதிகள் தனியாக நிலவினவா என்பது ஐயத்திற்குரியது.

திருப்பதிக்கோவை (சம்பந்தர்), சேத்திரக்கோவை, திருப்பதிக் கோவை (அப்பர்), ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை (சுந்தரர்); க்ஷேத்திர வெண்பா (ஐயடிகள் காடவர் கோன்), திருப்பதிக்கோவை (உமாபதி சிவம்), ஆகியவைகளைச் சிறப்புப் பெயர் நிகண்டுகள் அல்லது அகராதி என்று கூறமுடியாவிட்டாலும் அத் தேவையை அவைகள் பூர்த்தி செய்தன என்று கூறலாம்.

தற்காலத்தில் தமிழில் சிறப்புப் பெயர் அகராதிகள் தோன்றுமை குறிப்பிடத்தக்கது. நம் பழைய இலக்கியம், கல்வெட்டுக்கள் மற்றும் தற்காலத்தில் வழக்கிலிருக்கும் ஆட்பெயர், ஊர்ப்பெயர்கள் அடங்கிய அகராதிகள் தயாரித்து வெளியிடப்பெறல் வேண்டும். அவ்வகை ஆராய்ச்சியைக் காலம் செல்லுமுன் தொடங்கி முடித்தல் பல்லாற்றானும் வேண்டப்படுவதாகும்.

சிறப்புக் குறிப்புரை: *திரு. வ. ஜெயதேவன், பி.எஸ்சி , எம்.ஏ.,*
சான்றிதழ் - மொழியியல்,
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

'நிகண்டு' என்னும் சொல் எப்படி வந்தது என்பது ஆராயத் தக்கது. இதுகுறித்துப் பின்வரும் கருத்துகள் நிலவுகின்றன: (1) வடமொழி வேதத்தின் ஆறு அங்கங்களுள் ஒன்றான நிருக்தத்தில் சொற்பொருள் விளக்கம் செய்யப் பெற்றுள்ள பகுதிக்கு நிகண்டு என்று பெயர்; இந் நிகண்டு என்னும் பெயரே சொற்பொருள் விளக்கும் துறை நூல்களுக்கும் பின்னர் வழங்கப்படலாயிற்று. (2) நிகண்டு என்னும் வடசொல்லுக்குத் தொகுதி, கூட்டம் என்பன பொருள். சொற்களின் தொகுதி - கூட்டம் உடைய நூல் நிகண்டு எனலாயிற்று. (3) நிகண்டு என்பது தமிழ்ச்சொல்; உண்மை என்பது இதன் பொருள். சொற்களின் உண்மைப்

பொருளைக் கூறுவது நிகண்டு; 'நிகழ்ந்தது' என்பதுவே 'நிகண்டு' என மருவிற்று. (4) நீண்டது என்பதே நிகண்டு என மருவி யிருக்கக்கூடும். நீளம் என்பதை நிகளம் என்றும் நீண்டது என்பதை நிகண்டது என்றும் பேச்சுவழக்கில் வழங்கக் காணலாம். நிகளம் என ஒருசார் செய்யுள் வழக்கும் உண்டு. சொற்களின் பட்டியல் நீளமாகத் தரப்பட்டிருத்தலின் - அதாவது நிகண்டு (நீண்டு) கொண்டு போதலின் நிகண்டு என்ருயிற்று. இக் கருத்துகளுள் ஏற்புடையனவற்றைச் சுட்டுதல் அறிஞர்தம் கடனும்.

நிகண்டு தவிர உரிச்சொல், உரிச்சொற் பனுவல், கூட்டம், தொகுதி போன்ற சொற்களாலும் வழங்கப்பட்டுள்ளன.

> "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லின் ஆகும் என்மனுர் புலவர்" (தொல். பெயரியல் 2.)

என்ப தொல்காப்பியர். பொருண்மை தெரிதல் (சொற்களின் பொருள் அறிதல்), சொன்மை தெரிதல் (சொற்களின் இலக்கணம் அறிதல்) ஆகிய இரண்டும் சொல்லின் இயல்பு ஆகும். எனவேதான் நிகண்டு கற்றுப் பின்னர் இலக்கணம் கற்கவேணடும் என்னும் மரபு ஏற்பட்டது. சொல்லின் பொருண்மையும் சொன்மையும் அறிந்த பின்னரே சொற்களிஞல் செய்யப்படும் இலக்கியத்தைப் பயின்றனர் பண்டைத் தமிழர்கள்.

தொல்காப்பியமே தமிழகராதியியலுக்கு அடிகோலிய ஆதி நூல். நிகண்டுகளின் முப்பெருந் தொகுதிகளாகிய ஒருபொருள் பல்பெயர்த் தொகுதி, ஒருசொல், பல்பொருட் பெயர்த் தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி ஆகியவை தொல்காப் பியத்தினின்றே எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிஞர்கள் நன்கறிவர்.

தொல்காப்பியத்திற்கும் சேந்தன் திவாகரத்திற்கும் இடையே ஒரு பெரும் இடைவெளி இலங்கக் காணலாம். இக்கால இடை வெளியில் நிகண்டுகள் எழவே இல்லையா? அல்லது எழுந்த நிகண்டுகள் அழிந்துபட்டனவா? என்பது ஆய்தற்குரியது.

கிட்டிய நிகண்டுகளுள் மிகவும் மூத்தது சேந்தன் திவாகரமே. இந்நூல் சேந்தனல் புரக்கப்பட்ட திவாகர முனிவரால் படைக்கப் பட்டது என்றும் இதனலேயே இப்பெயர் பெற்றது என்றும் கூறுப. ஆயின், இந்நூலின் பன்னிரு தொகுதிகளின் ஈற்றிலும் இடம் பெற்றுள்ள பாடல்களை நோக்குமிடத்து சேந்தனே இந்நூல்

ஆசிரியன் என எண்ணத் தோன்றுகிறது. பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் 1938-ல் சென்னைப் பல்கலைக்கழகக் கீழைக்கலையிதழ் பகுதி 1-இல் சேந்தன் திவாகரம் பற்றி ஆங்கிலத்தில் ஓர் அரிய கட்டுரை படைத்துள்ளார். "சேந்தன் திவாகரம், சேந்தன் தெரி சொற்றிவாகரம், சேந்தன் ஆய்ந்த திவாகரம்; சேந்தன் தெரிந்த திவாகரம், சேந்தன் இயல்வுற்ற திவாகரம், சேந்தன் பயில்வுற்ற திவாகரம், சேந்தன் பகர்வுற்ற திவாகரம், சேந்தன் பன்னிய (அ) பகர்சொல் திவாகரம்", என வரும் தொடர்களும் "வடநூற் கரசன் தென்றமிழ்க் கவிஞன், கவியரங்கேறு முபயகவிப் புலவன்" "கற்ற நாவினன் கேட்ட செவியினன், முற்றுமுணர்ந்த மூதறிவாளன்" 'செந்தமிழ்ச் சேந்தன்' என வரும் தொடர்களும் சேந்தனின் புலமையையும் இந்நூலைப் படைத்த தகுதியையும் பறை சாற்றுவன.

"Divakaram is a fine name for a lexicon. It implies that the work sheds a clear light (Sun light) on the meanings of words", எனப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் குறிப்பது கருதத் தகுவதாகும். இதுபோல் நாநார்த்த தீபிகை, நாமதீபம் எனத் தமிழறிஞர்கள் தம் படைப்புகளுக்குப் பெயரிட்டுள்ளதை ஒப்புநோக்கி மகிழலாம். மேலைநாடுகளிலும் 'Dictionary' என்னும் சொல் எழுவதற்கு முன்னர் Ortus Vocabulorum (சொற்களின் தோட்டம்) Albearie (சொற்களின் தேன்கூடு), World of words (சொல்லுலகம்) போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆகவே சேந்தன் தாம் படைத்த நூலுக்குச் சேந்தன் திவாகரம் எனப் பெயரிட்டிருக்கக் கூடும் எனத் துணியலாம்.

" செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவன் தன்பெயர் நிறீஇ
யுரிச்சொற் கிளவி விரிக்குங் காலை "

எனப் பிங்கலந்தையின் பாயிரம் குறிக்கிறது. இப்பாயிரத்தைக் கொண்டு திவாகரனின் மைந்தர் பிங்கல முனிவர் எனக் கூறும். ஆனல் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார், திருவருளால் கதிரவன் பயந்த பிங்கல முனிவன் எனக் கொள்வதே பொருந்தும் எனக் குறிக்கிறார்.

"It seems to me from all this that Divakarar, the author of the Divakaram, and the relation postulated between him and Pingalar, are both figments of imagination. The real author of the Divakaram was Sendan" என்பர் நீலகண்ட சாத்திரியார். இது குறித்து மேலும் ஆராய்வது இன்றியமையாததாகும்.

சேந்தனின் ஊர் அம்பலா? அம்பரா என்பது ஆராய்தற்குரியது. அபிதான சிந்தாமணி, தமிழ்ப் பேரகராதி அம்பர் எனக் குறிக்க, பல பதிப்புகளில் அம்பல் எனக் குறிக்கப்பட்டுளது.

அகராதியியலில் அகரநிரல் வளர்ச்சி வரலாற்றை ஆராய்வது மிகவும் இன்றியமையாதது. தொல்காப்பியர்,

> *'எழுத்தெனப் படுவ*
> *அகர முதல னகர இறுவாய்'*

என அகர நிரலைச் சுட்டியுள்ளார். எனினும் தொல்காப்பியத்தில் பொருண்மை சுட்டப்பட்டுள்ள உரியியல் போன்ற இயல்களில் இவ்வகரநிரலைக் கண்ணுற முடியவில்லை. எனினும் உயிர் மயங்கியலில் அகர ஈறு முதலாக ஔகார ஈறு ஈருக ஒருவாறு அகர நிரலைக் காண முடிகிறது.

முதன்முதலில் கி. பி. 1594 இல் சிதம்பர இரேவண சித்தர் படைத்த அகராதி நிகண்டுதான் முதலெழுத்தளவில் அகரநிரல் பெற்றுத் திகழ்கிறது. இந்நிகண்டுகள் அகரநிரல் அமைப்பு தென் படுவதற்குப் பின்வருவன காரணங்களாகலாம்.

(1) மனப்பாடம் செய்யும் போக்கினின்றும் குறிப்பு நோக்கீட்டிற்குத் திரும்புகிற முயற்சி.

(2) வருக்கக் கோவை முதலிய முதலெழுத்தளவில் அகரநிரலையுடைய இலக்கியச் செய்யுள்களின் தூண்டுகோள்.

(3) வடமொழி நிகண்டுகளின் செல்வாக்கு.

(4) இயல்பாகவே இவ்வாசிரியருக்குப் புதுமைகள் செய்யவேண்டும் என்னும் ஆர்வம் இருந்திருக்கக் கூடும். ஆதலால்தான் போலும் இந்நிகண்டுகள் பொருள் தொகையடிப்படையில் சொற்களைப் பகுத்தும், முதலெழுத்தளவில் அகர நிரலில் அமைத்தும் உள்ளார் எனலாம்.

அகராதி நிகண்டையொட்டிப் பல்பொருள் சூளாமணி நிகண்டும் கைலாச நிகண்டு சூடாமணியின் 50 வது பிரிவாகிய ஓரெழுத்து ஒரு மொழியும் முதலெழுத்தளவில் அகரநிரலில் அமைந்த நிகண்டுகளாகும். முதலெழுத்துவரை நின்ற அகரநிரல் பொதிகை

நிகண்டில் முதலிரண்டெழுத்துகளுக்கு விரிந்தது. அகராதி மோனைக்ககராதியெதுகையிலும் முதலிரண்டெழுத்து வரை விரிந்த அகரநிரலைக் கண்ணுறலாம். இதற்கிடையே மேனாட்டார் உறவும் அச்சியந்திரங்கள்—தாள்கள் அறிமுகமும் வாய்க்கவே முழுமை பெற்ற அகரநிரல் தமிழில் கனிந்தது.

நிகண்டுகளுக்கெல்லாம் அடைவு தயாரித்து காலந்தோறும் அவை வளர்ந்து வந்த நிலையை ஆராய்தல் அறிஞர்தம் கடனாகும். நிகண்டுகள் சமுதாயத்தின் கண்ணாடிகளாகும்; நிகண்டுகள் பெருங்களஞ்சியங்களாகும். இத்துறை, அறிஞர்தம் தீண்டாமைக் குள்ளாகி நிற்பது வருந்தத்தக்கது. இத்துறை, அறிஞர்தம் சிந்தனைக்கரம் பட்டுத் துலங்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

———

எட்டாம் நாள் கருத்தரங்கு: 16-2-74

பொருள்: இசை நாடக நூல்கள்

சிறப்புக் குறிப்புரை: டாக்டர் தி. லீலாவதி,

தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி, வடசென்னை.

நாடகக் கூறுபாடுகள் (Dramatic elements) வேறு. நாடகம் அமைத்தல் வேறு. தமிழில் மனோன்மணீய காலத்திற்கு முன்பு வரை நாம் இலக்கியங்களில் காண்பது நாடகக் கூறுபாடுகளே. இசை, மெய்ப்பாடுகள் தோன்ற மானிட உணர்ச்சிகளுக்கு இடம் அளித்த தமிழ் இலக்கியங்களில் நாடகக் கூறுபாடுகள் அமைந்ததில் வியப்பில்லை. சங்க இலக்கிய அகத்துறைப் பாடல் களிலும் கூட இந்நாடகத் தன்மையைத் தான் காணுகின்றோம்.

கல்வெட்டுகளில் மான்யங்கள் அளித்த குறிப்புகளிலிருந்தும் கூட நாம் அறிவது நாட்டிய மகளிர்க்கு அவர்கள் ஆடற்றிறத்தைப் போற்றி வளர்க்கவே உதவினர் எனக் காண்கிறோம். முக்கூடற் பள்ளு, குறவஞ்சியும் நாட்டிய நாடகங்கள் என்ற அமைப்பிலேயே அடங்குகின்றன. எனவே, நாடக வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் இடைக்காலம் முடிய, நாடக அமைப்பிற்குட்பட்ட உயர் நாடகங்கள் உருவாக்கப்படவில்லை என்ற உண்மையைத் தெளிதல் வேண்டும். காலந்தோறும் தனிநிலைப் பாடல்கள், காப்பியங்கள், இலக்கணங்கள் என்று பெரும் இலக்கியப் படைப்புக்களை இயற்றமிழ்ப் படைப்புக் களாக வெளியிட்ட தமிழகம் ஏனோ, சிறந்த, தரமான, படிக்க, நடிக்க இனிய நாடகச் செல்வங்களை அளிக்கத் தவறியது. சமுதாயப் போக்குகளை சுட்டிக் காட்டிக் கடைநிலை மனிதனையும் சிந்திக்கவைக்கும் திறனுடையதாக நாடகக் கலையைப் பயன்படுத் தாததும் ஏனோ? இனி உருவாக்கும் தமிழ் நாடகங்களில் நாம் அமைப்பு முறையில் சிறந்த கருத்துச் செலுத்துதல் வேண்டும். அற உணர்வுகளை வெளிக்காட்டவல்ல, காலத்தை வெல்லும் படைப்பிலக்கியங்கள் உருவாதல் வேண்டும்.

பத்தாம் நாள் கருத்தரங்கு: 18-2-74

பொருள்: உமறுப் புலவர்

சிறப்புக் குறிப்புரை: திரு. முகம்மது யூசுப்கோகன்

அரபி, பெர்சியன், உருதுத்துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக் கழகம்

OMER PULAVAR

1642—1704

Omer Pulavar was born in 1642 A. D. and died at the age of sixty two in 1704 A. D. just three years before the death of Emperor Aurangazeb in 1707 A. D. Omer Pulavar's ancestors came from Egypt, not as conquerers, but to seek refuge in the extreme South India from the persecusion of their rulers in Egypt, on account of the Controversy of "Creation of Quran".

They settled down at Kayalpatnam and Kilakarai and near by places. Their desendants, in course of time, adopted Tamil as their mother tongue but continued to take interest in the development and spread of Arabic language and literature. They had immence and implicit faith in the saintly persons who came from Turkistan and North India and settled down in the South. Shaikh Nathar Wali came along with his followers from Turkistan somewhere in the tenth century A. D. and settled down at Trichirapalli and is buried there. Later on Shaikh Shahul Hameed Miran Abdul Qadir set out from Manakpur in North India. He studied mysticism under the well known mystic Shaikh Mohammed Ghouse of Gawalior (970 A. H. — 1561 A. D.) who directed him to go to the South and preach peace and piety among the people. He travelled throughout India and settled down at Nagore and died in 978 A. H. 1569 A. D.)

The message of the mystics is based on two principles (1) Peace with all (2) No harm or injury to others; as one of the Persian poets says:

Mabash dar paye Azar-o-har che Khwahi kun
Ke dar Shariat-e-ma ghair azin gunahay naist.

" Do not be after harming any body and do whatever you like other than harming others. Because there no sin in our *Shariat* (Islamic law) other than harming others ".

Omer Pulavar was the product of this kind of society. He was the contemporary of Shaikh Sadaqatullah Appa (1632-1704), a great theologian, Jurist, Philosopher and a poet in Arabic; in whose name Sadaqatullah Appa college has now been established at Melapalayam. Sadaqatullah Appa was not only known in India for his erudite scholarship and literary merits. His fame spread to the Arad countries. He went to Arabia and delivered lectures on Islamic jurisprudance in the sanctuary of *Ka'ba* at Mecca. He has composed very nice and long poems in Chaste Arabic in the praise of the prophet and the saints.

The emperor Aurangazeb offered him in 1109 A. H. — 1697 A, D. the poet of chief justice for the extreme South India. But he declined the offer. This laudable post was given to his son Shaikh Mohammed who served as chief justice for twenty one years from 1109 A.H. 1667 A.D. to 1130 A.H. — 1718 A.D. until he died at Melapalayam and he is buried there.

Omer Pulavar met shaikh Sadaqallullah Appa and sought his help in collecting necessary information about the life and achievements, of the prophet of Islam. As he was having gold rings in his hands, not permitted for the Muslims by the Islamic Shariat, and in dress he looked like a Hindu, Sadaqatullah Appa did not pay much attention towards him. The same night Shaikh Sadaqatullah Appa saw in his dream the prophet who reproached him saying that he should not judge the character of a few stanzas in Tamil in praise of the prophet and recited them before Sadaqatullah Appah, who was very much pleased with him and appreciated his verses as they were very sweet and attractive. Sadaqatullah Appa directed his famous student and desciple Shaik Mohammed Tibi (died at Porto novo somewhere in 1146 A.H. - 1722 A.D.) who furnished him necessary information from the authentic Arabic works

like Mawahibal-Ladunniya by Qastulani (1448-1517). He composed "Sivapuranam" containing the life events of the prophet of Islam from his birth at Mecca in 571 to his death at Madina in 632 A.D. It is divided into three parts (1) Wiladat (birth) (2) Nubuwat (prophethood) and (3) Hijrat (migration). This is the first biography of the prophet in Tamil; and that too in Chaste' Tamil verse. We are all extremely obliged to Omer Pulavar for making the information regarding the life and achievements of the prophet, available to the Tamil knowing people in South India. It is gratifying to note that the Tamil Department is taking keen interest in popularising Sirapuranam among Tamil speaking people of the South. Sometime ago late Dr. Mohammed Hussain Nainar, the former, Head of the Department of Arabic, Persian and Urdu, has written a commentary on this popular work, which deserves publication. We all will be thankful to Dr. Sanjeevi and his colleagues in the Tamil Department if this work is taken up for editing and publishing it from the University of Madras. The Arabic names have not been properly spelled in Sivapuranam. Proper spelling of the names may be added as notes whereever necessary, after consulting the authentic works in Arabic about the life of the prophet.

இணைப்பு—ஐந்து : கருத்தரங்கத் தலைவர்களின் தன்வரலாற்றுக் குறிப்புகள்

(1)

1. பெயர் : ... தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்.

2. பிறந்த ஊர் : ... கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், காட்டம்-முதலைபாளையம்.

3. பிறந்த நாள் : ... 01—9—1926.

4. பெற்றோர்கள்— முன்னோர்கள் பற்றிய சிறப்புச் செய்திகள் ... தந்தையார் முப்பதாண்டுகள் எல்லை தாண்டா விரதம் பூண்டு, தவநெறியை மேற்கொண்டு திருமடம் ஒன்றும் அமைத்துக்கொண்டு வாழ்ந்ததோடு, தமது வட்டாரத்தில் சமயநெறியையும் வளர்த்து வந்தவர். தமது ஊரில் உயர் நிலைப்பள்ளி ஒன்று தொடங்க உறு துணை புரிந்தவர்.

திருவிழாக்கள், சமயக் கூட்டங்கள் நடாத்துவதற்குத் துணைபுரிந்தவர்.

5. படித்த கல்வி நிலையம் : ... மயிலம் பொம்மபுராதீனத்தைச் சேர்ந்த செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் பெறப் படித்தவர்.

6. கல்வித் தகுதிகள் : ... சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் பட்டம்.

7. ஆசிரியப் பணிகள் : ... கோவையை யடுத்த பேரூரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்து 1953 முதல் பணியாற்றி முதல்வராகவும், தாளாளராகவும் இருந்து வருகின்றார்.

8. வகித்த, வகித்து வரும் பதவிகள்:... பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் தலைவர்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் செயற் குழு உறுப்பினர்.

தமிழ்நாடு மாநில அருணெறி மன்றத்தின் துணைத்தலைவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மாமன்ற ஆட்சிக்குழு (சிண்டிகேட்) உறுப்பினர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் (இளங்கலை பொது)ப்பாடத் திட்டக்குழு உறுப்பினர்.

9. குறிக்கத்தக்க பிற சிறப்புக்கள்:... தமிழும், சமயமும், தழைத்தோங்கக் கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமய நிறுவனங்களை நிறுவியவர். திருக் கோயில்களில் தமிழ் அருச்சனை தழைத் தோங்கக் கால்கோள் விழா நடத் தியவர். தமிழ்ப் பயிற்சி மொழித் திட் டம் கோவைக் கல்லூரிகளில் 1960ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக வந்த பொழுது கல்வியாளர் இடையேயும், மாணவரிடையேயும் பெருந் தொண் டாற்றியவர். தமிழ்த் திருக்குட நன் னீராட்டு விழா நாடு முழுவதும் நடை பெற வழிவகுத்து நடத்துபவர்.

2

பேராசிரியர், பைந்தமிழ்ப் பாவலர்

அ. கி. பரந்தாமனார், எம்.ஏ.

அ. கி. பரந்தாமனார் சென்னை நகரில் 15-7-1902ல் பிறந்தார். தந்தையார் அல்லிக்குழி கிருஷ்ணசாமி முதலியார்; தாயார் சிவக்கியானம் அம்மையார். தந்தையார் வாணிகம் நடத்தி வந்தவர். தாய்வழிப் பாட்டனாராகிய செங்கீர்க்குப்பம் சங்கியப்ப முதலியார் வீட்டில் வளர்ந்து வந்தார். சங்கியப்ப முதலியார் புரசையில் அக் காலத்தில் சிறந்த புகழோடு விளங்கிய அஷ்டாவதானம் சபாபதி முதலியார் மாணவர்; கவிபாடும் ஆற்றல் பெற்றவர்.

"ஏரார் திருச்சென்னை ஏகம்ப நாதன்மேற்
சீரார் தமிழ்ப்பதிகஞ் செப்பநெஞ்சே—பேரார்
கருப்பு வினையகனைக் காய்ந்தார் தருமோர்
மருப்பு விநாயகனை வாழ்த்து"

என்னும் செய்யுளைக் காப்புச் செய்யுளாய்க் கொண்டு சென்னை ஏகாம்பரேசுவரர்மீது ஏகாம்பரேசுவரர் பதிகம் பாடிய இன்தமிழ்ப் புலவர். அன்றியும் ஆங்கிலத்திலும் போதிய அறிவு பெற்றிருந் தனர். ஆதலின், சென்னைக் கோட்டையிலிருந்த படை மறவர் ஓய்வுகால ஊதியப் பணியகத்தில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தார். இவர் கடமை, கட்டுப்பாடு, இறைபற்று மிக்கவராய் விளங்கினர். சிறுவயதில் பரந்தாமனர் இவரிடம் இருந்ததால் இவருக்குத் தமிழ்ப்பற்று இயல்பாகத் தோன்றிற்று.

சென்னை வேப்பேரியில் இருக்குந் திருப்பவுல் உயர்நிலைப் பள்ளியில் (St. Paul's High School, Vepery, Ms). பயின்றர்; இப் பள்ளியில் மணி. திருநாவுக்கரசு முதலியார், கா. ரா. நமச்சிவாய முதலியார், ச. த. சற்குணர், பி.ஏ. ஆகியவர்கள் தமிழாசிரியர் களாய் இருந்தார்கள். இவர்களிடம் பள்ளியில் தமிழ் பயிலும் வாய்ப்பு நேர்ந்தது. கா.ரா. நமச்சிவாயர் கல்லூரிப் பணி ஏற்கச் சென்றதும், உயர்நிலை வகுப்பில் பேராசிரியர் ச. த. சற்குணரிடம் பயின்றர்; தனியாகவும் தமிழ் கற்று வந்தார்.

பச்சையப்பன் கல்லூரியில் படித்த நான்கு ஆண்டுகளிலும் மேசூர் கந்தசாமி முதலியாரிடமும் மணி. திருநாவுக்கரசரிடமும் தமிழ்ப்பாடம் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது.

சிதம்பரத்தில் பண்டிதப் பயிற்சியில் சேர்ந்து படித்தபோது பரந்தாமனர் புகழ்பெற்ற பூவராகம் பிள்ளையிடம் இலக்கணம் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது.

பரந்தாமனர் இளங்கலைப் படிப்பில் தமிழ் இலக்கியமும், தென் னிந்திய வரலாறும், விருப்பப் பாடமாக எடுத்துப் பயின்றர்; முதுகலைத் தேர்விலும் இதே பாடங்களை எடுத்து முதல் வகுப்பில் தேறினர்.

தாம் படித்த திருப்பவுல் பள்ளியில் 23½ ஆண்டுகள் தமிழாசிரி யராய்ப் பணிபுரிந்தார்; எம்.ஏ. தேர்வில் தேறியதும் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் சேர்ந்து அங்கே 65 வயது வரையில் 17 ஆண்டுகள் பணி புரிந்தார். ஒரே பள்ளியில் 23 ஆண்டுகளும்

ஒரே கல்லூரியில் 17 ஆண்டுகளும் இவர் பணிபுரிந்தது குறிப்பிடத் தக்கது.

மதுரையில் இருக்கும் திருவள்ளுவர் கழகம் இவரது மணி விழாவைச் சிறப்பாக நடத்திப் பாராட்டியது. அப்போது மதுரை எழுத்தாளர் மன்றம் இவருக்குப் பைந்தமிழ்ப் பாவலர் என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. இவர் மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவராய் இருந்தார்; சென்னைத் திருவள்ளுவர் கழகத் தலைவராயும் இருந்தார். இவர் இப்போது தமிழ்நாட்டுப் பாட நிறுவனத்தில் வல்லுநர் குழுவில் ஒருவராக இருந்து வருகிறார்.

இயற்றிய நூல்கள்: செய்யுள் நூல் (செய்யுள் மொழி பெயர்ப்பு)

1. மறுமலர்ச்சிக் கவிதைகள்
2. எங்கள் தோட்டம் (சிறுவர் பாடல்கள்)
   (இது நடுவண அரசின் பரிசு பெற்றது)
3. காமக்களிமகன் கோமஸ் (மில்டன் கோமஸ்)

இலக்கணம்: 1. நல்ல தமிழ் எழுதவேண்டுமா?
2. கவிஞராக

வரலாறு: 1. மதுரை நாயக்கர் வாலாறு

கட்டுரை நூல்கள்:

1. திருக்குறளும் புதுமைக் கருத்துகளும்
2. தமிழிலக்கியம் கற்க
3. பன்னிரு கட்டுரைகள்
4. பேச்சாளராக
5. வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்
6. வாழ்க்கைக் கலை
7. விஞ்ஞான அறிவு வளர்ச்சி அல்லது மானிடன் செய்த மாண்புறு செயல்.

3

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்

(தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்)

1906-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ஆம் நாள் ஆயிரம் விளக்கிலுள்ள சால்வான் குப்பத்தில் பிறந்தார். ஆயினும், இவர் குடும்பத்தின் பதி மயிலாப்பூர். தந்தையார் பெயர் திரு. பொன்னு சாமி கிராமணியார்; தாயார் பெயர் திருமதி சிவகாமி அம்மாள். பள்ளியில் 2-ஆம் வகுப்புவரைதான் படித்தார். அச்சு கோர்க்கும் தொழிலாளியாகப் பணியாற்றிக்கொண்டு தாமாகவே கல்வி கற்கத் தொடங்கினர். இவர், 1925-ல் காங்கிரசில் சேர்ந்தார். விடுதலைப் போராட்டத்தின்போது ஆங்கிலேயரால் 6 முறை சிறையிலடைக்கப் பட்டார். 1942-ல் ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள அமராவதி சிறையில் வைக்கப்பட்டார். 9 ஆண்டுக் காலம் சென்னை மாவட்டக் காங்கிரஸ் குழுவின் செயலாளராக இருந்தார்; 1946-ல் தமிழரசுக் கழகத்தை நிறுவி, தொடர்ந்து அதன் தலைவராக இருந்து வருகிருர்.

1952 முதல் 1954 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்தார்; சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுத் தலைவராகவும் இருந்தார். 1952 முதல் 1954 வரையிலும், 1970 முதல் 1974 வரையிலும் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராக இருந்தார். சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் பேரவைகளில் அங்கம் வகித்தார். சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலும் உறுப்பினராகத் தமிழ்நாடு ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை, தியாகராயநகர் தொகுதியில் தமிழரசுக் கழக வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பின ராக இருந்தார். 29-4-1972 முதல் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை யில் துணைத் தலைவராக இருந்து வருகிருர்.

'தமிழ் முரசு', 'கிராமணி குலம்', 'தமிழன் குரல்' ஆகிய புகழ்பெற்ற தமிழ்ப் பத்திரிகைகளை ஏற்படுத்தி அவற்றின் ஆசிரிய ராக இருந்தார். புகழ்பெற்ற பத்திரிகையாளரும் தலைசிறந்த எழுத் தாளரும் ஆவார்; 1950-ல் "செங்கோல்" என்ற வார ஏட்டினைத் தொடங்கி அதன் ஆசிரியராக இருந்து வருகிருர். அரசியல்,

இலக்கியம், பண்பாடு, சமூக சீர்திருத்தங்கள் ஆகியவை பற்றி ஏறக்குறைய 70 நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார். இளங்கோ வடிகளின் தமிழ்ப் பெருங்காப்பியமான 'சிலப்பதிகாரத்தில்' அவருக்கிருந்த தெள்ளிய அறிவின் காரணமாக அவர் "சிலம்புச் செல்வர்" என அனைவராலும் அழைக்கப்படுகிறார்; தமிழ்நாட்டின் மிகப் பெருங்கவிஞரும் ஞானியுமான இராமலிங்க அடிகளார் பற்றித் தமிழில் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற ஆராய்ச்சி நூல் எழுதியமைக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றார். 1972 மார்ச் திங்களில் இந்தியக் குடியரசுத் தலைவரிடமிருந்து "பத்மஸ்ரீ" விருது பெற்றார். மலேசியா, பர்மா, ஸ்ரீ லங்கா சோவியத் நாடுகள், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில்' விரிவாகச் சுற்றுப் பயணம் சென்றார்.

மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட்டபோது, தமிழகத்தின் வடக் கெல்லை, தெற்கெல்லைக்காகப் போராடி, இருமுறை சிறை புகுந்து, திருத்தணி, குமரி மாவட்டம், செங்கோட்டை ஆகிய பகுதிகளை மீட்க வழி வகுத்தார். சென்னை நகரம் தமிழகத்திலேயே நிலைத் திருக்கவும் போராடி வெற்றி கண்டார்.

பெரும்புலவர்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பெயர் :	...	மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை
பிறந்த நாள் :	....	31—8—1896
பிறந்த ஊர் :	....	சென்னை மேட்டுப்பாளையம்
பெற்றார் :	...	மே. வீராசாமிப் பிள்ளை, பாக்கியத்தம்மாள்.
படித்த கல்வி நிலையங்கள்	...	1. சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாதிரிப் பள்ளி. 2. கலா நிலையம் உயர்நிலைப்பள்ளி (இரவு) புரசைவாக்கம், சென்னை; 3. சென்னை இளைஞர் இரவுப்பள்ளி (10ஆம் வகுப்புவரை) 4. கலாநிலையம் இரவுக் கல்லூரி (பழைய புகுமுக வகுப்பு) 5. தனித்தமிழ்ப் பயிற்சி (முன்னாள் பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியாரவர்களிடம்)
பெற்ற பட்டங்கள்	...	வித்துவான் (சென்னைப் பல்கலைக் கழகம்), சிந்தாமணிச் செல்வர் (வழங்கியவர் திரு. வி. க.), மகாவித்துவான் (மணிவிழாவில் கச்சியம்பதித் தமிழ்ப் பேரறிஞர்கள் வழங்கியது), பைந்தமிழ்க் களஞ்சியம் (வழங்கியவர், முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள்)

ஆற்றிய தொண்டுகள் ...

1. தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை (ஈராண்டு)
2. தலைமைத் தமிழாசிரியர், லுத்தரன் மிசியோன், பெப்ரீசியசு உயர்நிலைப் பள்ளி, புரசைப்பாக்கம் (18 ஆண்டுகள்).
3. தமிழ் விரிவுரையாளர், குருக்குழுக் கல்லூரி, கிள்ளியூர், சென்னை. (3 ஆண்டுகள்)
4. இவர் பயிற்றுவித்து வித்துவான் பட்டம் பெற்றவர் இருபத்தெழுவர் (பெண்டிர் எழுவர்)

எழுதிய நூல்கள் ...

உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளிகளுக்குரிய பாடநூல்கள் பற்பல. கட்டுரைகள் சில.

ஆய்ந்து பதிப்பித்த நூல்கள் ...

1. தொல். சொல். நச்சினார்க்கினியர் உரை - பிற்சேர்க்கைகளுடன்.
2. இறையனார் களவியலுரை - பிற்சேர்க்கைகளுடன்.
3. தஞ்சை வாணன் கோவை-விளக்கக் குறிப்புரையுடன்.
4. வீரசோழியம் உரையுடன்.
5. நன்னூற் காண்டிகை இராமானுச கவிராயர் உரையுடன்.
6. அரிச்சந்திர புராணச் சுருக்கம் - விளக்கக் குறிப்புரையுடன்.
7. சித்தர் ஞானக்கோவை.
8. குசேலோபாக்கியானம் - விளக்கக் குறிப்புரையுடன்.

9. யாப்பருங்கலக் காரிகை - பிற் சேர்க்கைகளுடன்.

10. யாப்பருங்கல விருத்தி - பிற் சேர்க்கைகளுடன்.

11. அட்டப்பிரபந்தம் - குறிப்புரையுடன்

12. திருமுருகாற்றுப்படை - விளக்கக் குறிப்புரையுடன்.

13. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

14. பஞ்ச தந்திரப் பாடல், பஞ்சதந்திரம் உரைநடை.

தொகுப்பு நூல் ... இளைஞர் தமிழ்க்கையகராதி

பி. கு.: இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வெளியீடுகளிற் சிலவற்றையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனப் பாட நூல்களும் தமிழ்ப்பாட நூல்களையும் பதிப்பிக்கும் பொறுப்பேற்று ஒல்லும் வகையிற் தொண்டாற்றி வருகின்றார்.

இணைப்பு—ஆறு : கருத்தரங்கக் கட்டுரையாளர்களின் தன்வாழ்க்கைக் குறிப்புகள்

1

1. பெயர் : ... கு. இராசவேலு

2. பிறப்பு : ... 20-6-1920

3. தந்தையார் : ... இர. குருசாமி முதலியார்

தாயார் : ... குழந்தையம்மாள்

4. கல்வி பெற்ற நிலையங்கள் : ...

1. ஸ்ரீ லட்சுமிநரசிம்ம தொடக்கப் பள்ளி. (இப்பள்ளி இவருடைய குடும்பத்தாரால் 1900 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது.)

2. லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளி, சேலம்.

இந்து மகாஜன உயர்நிலைப்பள்ளி, ஈரோடு

3. கல்லூரி : பச்சையப்பர் கல்லூரி, சென்னை.

6. பணி விவரம்: ...

ஆறு ஆண்டுகள் தமிழாசிரியப் பணி, 1950 - 56.

செய்தி விளம்பரத்துறை உதவி நெறியாளர், தமிழ்நாடு அரசு 1956 - 64.

மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர் 1964 முதல்.

7. எழுதிய நூல்கள் : ...

1. '1942'
2. காதல் தூங்குகிறது
3. தங்கச் சுரங்கம்
4. வான வீதி

5. சாலை ஓரம்
6. காந்தமுள்
7. இளவேனில்
8. அழகு ஆடுகிறது
9. மகிழம்பூ
10. வள்ளல் பாரி
11. கொடைவளம்
12. வான்குயில் முதலான பல நூல்கள்; பல ஆய்வுக் கட்டுரைகள்.

8. சிறப்புக் குறிப்புகள் : ... இந்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர். 1942 இல் அலிப்புரம் சிறையில் இருந்தவர்.

2

டாக்டர் மு. கோவிந்தசாமி

தென்னுற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் பிறந்தவர். இலக்கிய வரலாற்றுத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் ஆய்வு நிகழ்த்தி வருகின்ருர்.

'இலக்கிய காலம்', 'இலக்கியத் தோற்றம்', 'பாரதி கவித் திறன்', 'பாரதிதாசன் கவிததிறன்', 'ஔவையும் நக்கீரரும்' முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழக அரசின் பரிசு பெற்ற 'தமிழ் இலக்கிய வரலாறு—இலக்கியத்தோற்றம்' என்ற நூல் கி. பி. முதல் நூற்ருண்டு தொடங்கி 20 ஆம் நூற்ருண்டுவரை நூற்ருண்டு வரிசையில் எழுதப் பெற்ற முழுமையான தமிழ் இலக்கிய வரலாருகும். இது வரை இலககிய வரலாறுகளில் இடம் பெருத சுமார் 100-க்கு மேற்பட்ட இலக்கியங்களின் வரலாறுகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

(3)

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

பெற்றோர் ... சின்னசாமி, மங்கையர்க்கரசி.

பிறந்த நாள் ... 10—5—1935.

பிறந்த ஊர் ... செஞ்சி, தென் ஆற்காடு மாவட்டம்.

கல்வித்

தகுதிகள் ... எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

ஆசிரியப் பணிகள் ... 1957, ஆகஸ்டு 5ஆம் நாள் முதல் 1958, ஜனவரி 23ஆம் நாள் வரையில் சென்னை, விவேகானந்தர் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுசிரியர். 24-1-1958 முதல் 30-6-1960 வரை சென்னை, பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுசிரியர். 1-7-1960 முதல் 12-10-1966 வரை அக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர்; 13-10-1966 முதல் 31-8-1972 வரை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரை யாளர்; 1-9-1972 முதல் தமிழ்த் துணைப் பேராசிரியர்.

ஆராய்ச்சிப் பணிகள் ... பச்சையப்பர் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டே டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் மேற்பார் வையின்கீழ்க் 'குறுந்தொகை' குறித்து ஆராய்ந்து 1963ஆம் ஆண்டில் எம்.லிட், பட்டம் பெற்றமை. பின்னர், 'சேரநாட்டு இலக்கியங்கள்' குறித்து ஆராய்ந்து, 1970ஆம் ஆண்டு பிஎச்.டி. பட்டமும் பெற்றுள்ளமை.

பெற்ற சிறப்புகள் ... 1972ஆம் ஆண்டில் குன்றக்குடி—திருவண்ணுமலை ஆதீனம் 'புலவரேறு' பட்டம் அளித்தது; 1974ஆம் ஆண்டில் தமிழ்நாடு நல்வழி நிலையம் 'செஞ்சொற் புலவர்' பட்டம் வழங்கியது.

தற்போதைய பணி ... சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாலை நேரத் தமிழ் முதுகலை வகுப்பு மாணவர்க்கு, "தமிழ் இலக்கியக் கொள்கைகள்" என்னும் சிறப்புப் பாடத்தினைப் பயிற்றுவித்தல்; தமிழ்ச் சான்றிதழ், பெருஞ் சான்றிதழ் வகுப்பு எடுத்தல். "பெருங் கதை" குறித்து ஆராய்ச்சி செய்து வருதல்.

எழுதியுள்ள நூல்கள் ...
1. தமிழ் இலக்கிய வரலாறு (1959)
2. உருவும் திருவும் (1965)
3. கட்டுரை வளம் (1965)
4. மனோன்மணியம் - பதிப்பு (1966)
5. காரும் தேரும் (1966)
6. வாழையடி வாழை (1966)
7. முருகன் காட்சி (1966)
8. இலக்கிய அணிகள் (1972)

பல்வேறு இதழ்கள், மலர்களுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகின்றமை.

குறிப்பிடத் தக்க செய்தி ...தமிழ் நாடு மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களுக்குத் தமிழ் பயிற்றுவித்து வருவது.

(4)

பெயர் ... *க. ப. அறவாணன்.*

பிறந்த நாள் ... 9—8—1941.

பிறந்த ஊர் ... கடலங்குடி, தஞ்சை மாவட்டம்.

பெற்றோர்கள் - முன்னோர்கள் பற்றிய சிறப்பு ... திருவாவடுதுறை ஆதீன சமயப் பரப்புநர் திருமிகு. சித்தாந்தப் புலவர் வித்துவான் இ. பகவதிப் பெருமாள் பிள்ளை மருகர். துணைவியார் ப. தாயம்மாள். எம்.ஏ. பச்சையப்பன் மகளிர் கல்லூரி, துணைப் பேராசிரியர்.

படித்த கல்வி நிலையங்கள் ... ஜார்ஜ் உயர்நிலைப்பள்ளி - விஷ்ணுபுரம், தஞ்சை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் – சிதம்பரம் கேரளப் பல்கலைக் கழகம் - திருவனந்தபுரம்.

பெற்ற பட்டங்கள் ... புலவர், பி. ஓ. எல்., எம்.ஏ. மொழியியல், வரலாறு, பேச்சு ஆங்கிலம், கல்வெட்டு - சான்றிதழ்கள்.

வகித்த/ வகிக்கும் பதவிகள் ... பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரி முதல்வர் (முன்னாள்); துணைத்தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை (இந்நாள்).

பொதுத் தொண்டு பற்றியன ... அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சர்வோதயச் சிந்தனை மன்றத் தலைவன் (1963), அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர் மன்றச் செயலாளன் (1964), 1965 இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவரணித் தலைவன் (1965), கேரளப் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வு அரங்கச் (Tamil Research Forum) செயலன் (1967), சென்னை ஆராய்ச்சிப் பேரவை அமைப்பாளன்; செயலாளன். சென்னைத் தமிழ்ப் பண்பாட்டு மன்றச் (Academy of Tamil Culture) செயலாளன், (1974)

எழுதிய நூல்கள் ....

1. Research Papers on Tamilogy
2. An Introduction to Tamil Research
3. புரட்சிப் பொறிகள்

4. அவள், அவன், அது
5. காலப் போக்கும் கல்லூரிப் போக்கும்
6. ஒளி பரவட்டும்
7. ஆய்வுக் கொத்து (பதிப்பு)
8. இளவேனில் (பதிப்பு)

எழுதிய கட்டுரைகள் ... ஏறத்தாழ நூறு. தமிழ் மொழியியல், இலக்கணம், வரலாறு, திறனாய்வு தொடர்பானவை. இந்தியப் பல்கலைக்கழகத தமிழாசிரியர் மன்ற ஐந்து கருத் தரஙகுகளிலும், சென்னையில் 1968இல் உலகத் தமிழ்க கருததரங்கிலும் ஆய்வுரை படித்தவன். தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையார் 19,0க்குப் பிறகு நடத்திய அனைத்துக் கருத் தரங்குகளிலும் எழுத்துரை நல்கியவன்.

வேறு பிற ... 'நன்னூலும் அதன் உரைகளும்' எனும் தலைப்பில் எம்.லிட். பட்டத்திற்குரிய ஆய்வு சென்னைப் பல்கலைக் கழக வழி கொடுக்கப்பட்டிருக்கிறது.

120 பக்க அளவில் 'தொல்காப்பியக் களஞ் சியம்' என்ற நூல் எழுதப்பெற்றுத் தமிழக அரசு தமிழ் வளர்சசித்துறை வழியாக வெளிவரக் கொடுக்கப்பட்டிருககிறது.

5

1. பெயர் ... இரா. மாணிக்கவாசகம்.
2. பிறந்த நாள் ... 14-10-1943
3. பிறந்த ஊர் ... சென்னை.
4. பெற்றோர்—
முன்னோர் சிறப்பு... தந்தையின் தந்தை (பாட்டனார்) புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை, பெரும்புலவராய் விளங்கியவர். தமிழரசி குறவஞ்சி, இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ், மனோவசிய மாலை முதலிய நூல்களை எழுதியவர். அவர் தமையனார் பண்டித அ. கந்த சாமி பிள்ளை. இலக்கண நிறைகடல் என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர். தந்தையார் வரத. இராமலிங்கம். இவர் வேளாண்மைத் துறையில் துணை இயக்குநராகப் பணியாற்றினார். எனினும் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர். தாய் வழியில் திரு. பாலகிருஷ்ண பிள்ளை பாட்டனார் ஆவர். இவர் இந்து அறநிலையத்துறையில் (H R. & C.E.) ஆணையாளராகப் பணியாற்றியவர். திருவருட்பாவில் நீண்ட ஆண்டுகள் மூழ்கி இருந்து, 12 நூல்களாகத் திருந்திய பதிப்பாக வெளியிட்டார்.
5. படித்த கல்வி
நிலையங்கள் ... புகுமுக வகுப்பு—கலைக்கல்லூரி, சென்னை. 1958-59.
... இளங்கலை, முதுகலை—பச்சையப்பன் கல்லூரி, சென்னை. 1959-64.

6. பெற்ற பட்டங்கள் ... எம்.ஏ. — 1964
எம்.லிட். — 1967 — திருவருட்பா ஆராய்ச்சி.
பிஎச்.டி. — திருமந்திர ஆராய்ச்சி.

7. வகிக்கும் பதவி ... தமிழ்த்துணைப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

8. பொதுத்தொண்டு பற்றிய சேதி ... விளம்பரம் அற்ற சமுதாயத்தொண்டு.

9. எழுதிய கட்டுரைகள் ... பதினைந்திற்கும் மேற்பட்ட பல ஆய்வுக் கட்டுரைகள்.

10. நூல் ... அகத்தியர், திருமந்திரம் — ஆராய்ச்சி நூல்கள் அச்சுக்கு வரவிருக்கின்றன.

11. வேறு சேதிகள் ... சித்தர்களோடு தொடர்பு கொள்வதிலும், அவர்கள் நூல்களைப் படிப்பதிலும் பெரிதும் ஆர்வம் உண்டு. 1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு 'தமிழ் நாட்டுச் சித்தர்கள்' எனும் தலைப்பில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை படித்தார்.

6

பேராசிரியர் மா. நன்னன்

தென்ளுற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திற்கும் சிதம்பரத்திற்கும் இடையில் உள்ள காவனூர் என்னுஞ் சிற்றூரில் சைவக் குடியில் மாணிக்கம், மீனுட்சி என்னும் மாண்புடைப் பெற்ருேர்க்கு 15-5-1925 இல் மகனுய்ப் பிறந்து, பிறந்த ஊரிற் படிக்கும் வாய்ப்பின்மையான் முவ்வேறூர்களில் பள்ளிக்கல்வியை முடித்துப் பின், 1941-45 ஆண்டுகளில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பிற் கற்றுத் தேர்ந்து, அப்போதங்குப் பயின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வமைச்சர் பேராசிரியராகியோரின் கூட்டுறவால் சைவத்தினின்றும் விடுபட்டுப் பகுத்தறிவியக்கத்திற் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கி, 1945 முதல் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இலப்பைக் குடிக்காடு, தென்ளுற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமுட்டம் ஆகிய ஊர்களின் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றியபின் கோவை, வேலூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசின் உயர்நிலைப் பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி, கலைக் கல்லூரி ஆகியவற்றிலும் பணியாற்றித் தாமே முயன்று தமிழாசிரியப் பயிற்சியும், தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்று இப்போது தொல்காப்பியத்திலாராய்ச்சியும் செய்யத் தொடங்கியுள்ள இவர் தொடக்க வகுப்புக்கள், உயர்நிலை வகுப்புக்கள், ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, கல்லூரி வகுப்புக்கள், கல்லூரிப் பட்ட வகுப்புக்கள், பட்ட மேல் வகுப்புக்கள் ஆகிய கல்வித் துறையின் எல்லா வகுப்புக்களிலும் பணியாற்றியிருப்பதோடு சொற்பொழிவு சிறிதளவு எழுத்து ஆகியவற்ருல் தமிழ்த் தொண்டும் பகுத்தறிவுத் தொண்டும் செய்து வருகிருர்.

(7)

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம் ஏ.,

இவர் திருச்சிராப்பள்ளி மாவட்ட, முசிரி வட்டத்தைச் சேர்ந்த தோளூர்ப்பட்டியில் பிறந்தவர். தந்தையார் அரு. குப்புசாமி முதலியார் என்பார். தாயார் நாகரெத்தினத்தம்மையார். 14-4-1930ல் பிறந்தவர்.

1945 முதல் 1950 வரை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் முறையே பயின்று 1950-ல் தமிழ்ப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். 26-6-1950 முதல் 31-3-73 வரை தாம் பயின்ற செந்தமிழ்க் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகவும், 1-4-73 முதல் அக் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி வருபவர்.

1954-ல் மதுரைத் தமிழ்ச்சங்கப் 'பண்டிதப்' பட்டமும், 1968-ல் சைவ சித்தாந்த சமரச 'அவைப்புலவர்' பட்டமும், 1967-ல் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த சாத்திரப் போட்டியில் முதன்மை பெற்று ரூ. 1000/- பரிசு பெற்றதைப் பாராட்டி மதுரை யாதீனத்தாரால் '*சித்தாந்த நன்மணி*' என்ற பட்டமும், தொல்காப்பிய உரைகளை விளக்கத்துடன் பதிப்பித்திருப்பதைப் பாராட்டித் தொண்டைமண்டலத்தாதீனத்தாரால் 'தொல்காப்பியச் செல்வர்' என்ற பட்டமும் கிடைக்கப் பெற்றவர். 1972-ல் சென்னைப் பல்கலைக் கழகத்து முதுகலைப் (எம்.ஏ.) பட்டமும் பெற்றவர்.

கல்வி நிலையங்கள், பேரவைகள் திருக்கோயில்கள் முதலிய பல இடங்களிலும் இலக்கண, இலக்கிய, சாத்திர தோத்திர நூல்களைத் தொடர்ச் சொற்பொழிவாகவும் அவ்வப்பொழுது தனித்தனிச் சொற்பொழிவுகளாகவும் நிகழ்த்தி வருபவர். பல்வேறு மலர்களுக்குக் கட்டுரைகள் எழுதியிருப்பதோடு பல சிறந்த தமிழ் நூல்களையும் தாம் சொந்தமாகவும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாகவும் பதிப்பித்துள்ளார்.

பதிப்பித்திருக்கும் நூல்கள் :

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை - விளக்கமுடன்
2. ,, - ,, - நச்சினார்க்கினியர் உரை விளக்கமுடன்
3. ,, -சொல்லதிகாரம் - இளம்பூரணர் உரை - விளக்கமுடன்
4. ,, - ,, – நச்சினார்க்கினியர் ,,
5. ,, – ,, - தெய்வச்சிலையார் ,,
6. ,, - ,, - சேனாவரையர் ,,
7. ,, - ,, - கல்லாடர் ,,
8. ,, - செய்யுளியல் – நச்சினார்க்கினியர் ,,
9. தண்டியலங்காரம் - பழையவுரை - விளக்கத்துடன்.
10. முத்து வீரியம் - விளக்கத்துடன்.
11. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் – விளக்கவுரையுடன்.
12. திருநாவுக்கரசர் தேவாரம் - 6ம் திருமுறை முதற் பத்துப் பதிகங்கள் - விளக்கவுரையுடன்.

(8)

1. பெயர் ... டாக்டர் இரா. குமரவேலன்
2. பிறந்த நாள் ... 19—10—1933
3. பிறந்த ஊர் ... சென்னை.
4. பெற்றோர் - முன்னோர் ... தந்தை திரு. அ. இராசபூபதி, பி ஏ., எல்.டி., டி.எஸ்.எஸ்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக நூலகத் துறையில் பணிபுரிந்தவர். நூலக அறிஞர் திரு. அ. திருமலை முத்துசாமி முதலானவர்களுக்கு ஆசிரியரும் வழிகாட்டியுமாவர். தற்போது ஓய்வு பெற்றவர்.

தாய் ... திருமதி இரா. பாலகுசாம்பாள் அம்மையார்

மாமனுர் ... பேராசிரியர் உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

5. படித்த கல்வி நிலையங்கள் ... இந்து உயர் பள்ளி, சென்னை-5 எஸ்.எஸ். எல்.சி. வரை

2. அரசினர் கலைக்கல்லூரி, சென்னை-2, இண்டர்

3. பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30, பி ஏ. ஆனர்ஸ்

4. பல்கலைக்கழகம், சென்னை-5, எம்.லிட்., டிப். பிரஞ்சு, டிப். செர்மன்

6. பெற்ற பட்டங்கள் ... எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., டிப். பிரஞ்சு, டிப். செர்மன்.

7. பதவி ... துணைத் தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

8. பொதுத் தொண்டு ... சென்னை திருவள்ளுவர் மன்றம், சிந்தனை யாளர் கூடம், மாணவர் மன்றம் ஆகியவற்றில் பொறுப்பு வகித்தவன்.

9. எழுதிய நூல்கள் ... 'பூங்குன்றன் கவிதைகள்' - வெளிவந்தது
'கம்பராமாயணத்தில் பரதன்' - எம்.லிட். ஆய்வு
'தமிழ் நாடக இலக்கியம்,-பி.எச்டி- ஆய்வு
கட்டுரைகள் - பல ஏடுகளில் வந்துள்ளன.

10. வேறு செய்திகள் ... கல்வெட்டில் பயிற்சி; கவியரங்கம்; சொற்பொழிவு; பட்டிமன்றம் தொடர்புகள் முதலியன.

(9)

1. பெயர் ... வி. மி. ஞானப்பிரகாசம், சே.ச.

2. பிறந்த நாள் ... 9—12—1922.

3. பிறந்த ஊர் ... இராசகெம்பீரம்.

4. பெற்றோர்கள் ...
முன்னோர்கள்
பற்றிய சிறப்புச்
செய்திகள்.

5. படித்த கல்வி
நிலையங்கள் ... புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சி.
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

6. பெற்ற
பட்டங்கள் ... எம்.ஏ., பிஎச் டி.

7. வகித்த/வகிக்கும்
பதவிகள் ... தமிழ்த்துறைத் தலைவர், தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

8. பொதுத்தொண்டு
பற்றிய செய்திகள்:

9. எழுதிய நூல்கள்/
கட்டுரைகள் ... பல கட்டுரைகள்.

10. வேறு குறிக்கத்
தக்க செய்திகள்.

10

1. **பெயர் :** சி. நயினர் முகமது.

2. **பிறந்த நாள் :** 9-11-1928.

3. **பிறந்த ஊர் :** ஆத்தூர் (மதுரை மாவட்டம்).

4. **பெற்ரோர்—முன்ஞேர் பற்றிய சிறப்புச் செய்திகள் ;**
தந்தையும் அவர்தம் தந்தையும் நாட்டாண்மைக்காரராக இருந்து பொதுத் தொண்டு புரிந்துள்ளனர்.

5. **படித்த கல்வி நிலையங்கள் :**
   (அ) ஆத்தூர் கழகத் தொடக்கப்பள்ளி — அருபி மதரஸா.

   (ஆ) திண்டுக்கல் நகராட்சி உயர்நிலைப்பள்ளி — புனித மரியாள் உயர்நிலைப்பள்ளி.

   (இ) திருச்சிராப்பள்ளித் தேசீயக் கல்லூரி — மதுரை அமெரிக்கன் கல்லூரி.

6. (அ) சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. பட்டம். பறம்பு மலையில் நடைபெற்ற பாரிவிழாவில் 'பெரும் புலவர்' பட்டம்.

7. **வகித்த பதவிகள் :**
   (அ) ஆத்தூர் இக்பால் இளைஞர் மன்றத் தலைவர்; திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி முஸ்லிம் மாணவர் சம்மேளனங்களின் செயலர், துணைத்தலைவர்

   (ஆ) மதுரை அமெரிக்கன் கல்லூரித் திருவள்ளுவர் கழகத்தின் அமைச்சர்.

   (இ) திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் துணையமைச்சர்.

   (ஈ) திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்லூரித் தமிழாசிரியர் மன்றத்தின் தலைவர்.

   (உ) சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு, கல்லூரி ஆய்வுக்குழுக்களின் உறுப்பினர்.

வகிக்கும் பதவிகள் :

(அ) ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர்.

(ஆ) சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம், சென்னைப் பொதுப்பணிக் குழு முதலியவற்றின் தேர்வுக்குழுக்களின் உறுப்பினர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் அமைப்பாளர்.

ஆத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர்.
திருச்சிராப்பள்ளித் தமிழ்ப் பெருமன்றத்தின் தலைவர்.
தமிழகப் புலவர் குழுவின் துணைச் செயலர்.

8. **பொதுத்தொண்டு பற்றிய செய்திகள் :**

ஆத்தூர் தமிழ்ச் சங்கம், இக்பால் இளைஞர் மன்றம், திருச்சிராப்பள்ளித் தமிழ்ப்பெரு மன்றம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் முதலிய அமைப்புகளைத் தோற்றுவித்தும் மேலே கண்ட அமைப்புகளில் பொறுப்புக்கள் ஏற்றும் இலக்கியப் பணிகள் பல ஆற்றி வந்துள்ளேன். தமிழகப் புலவர் குழுவில் திங்கள் கூட்டங்களும் விழாக்களும் நடைபெறச் செய்வதுடன் புலவர் தேர்வு வகுப்புக்கள் நடப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து வருகிறேன். வானொலியிலும் இலக்கிய மேடைகளிலும் சொற்பொழிவுகள் ஆற்றி வருகிறேன். இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தி வருகின்றேன்.

9. (அ) **எழுதிய நூல் :** 'மக்கள் மன்றம்'.

(ஆ) **எழுதிய கட்டுரைகள் :**

சிறையிருந்த செல்வி, சதாவதானம், செய்குத் தம்பிப பாவலர், சீறாப்புராண ஆராய்ச்சி, மஸ்தான் சாகிபி நெறி, அறபுத் தமிழ் முதலிய ஐம்பது கட்டுரைகள்.

10. *வேறு குறிக்கத் தக்க செய்திகள் :*

சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் உலகத் தமிழ் மாநாடு, அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு முதலியவற்றில் கலந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்துள்ளேன். சொற்பொழிவுகள் நிகழ்ந்த ஈழத்திற்கு நான்கு முறைகள் சென்றுள்ளேன்; மலேசியாவிற்கும் சென்றுள்ளேன்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்குகள் நடத்தி புதைபொருளாக இருந்து வந்த இஸ்லாமிய இலக்கியச் செல்வங்களை மக்கள் மன்றத்திற்கு வரச் செய்துள்ளேன்.

விழாப் படங்கள்

கருத்தரங்கத் தலைவர்கள்

கருத்தரங்கு நடைபெற்ற பல்கலைக்கழகக் கட்டட முகப்புத் தோற்றம்.

கருத்தரங்கத் தொடக்க நாளன்று (9—2—74)
பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் வரவேற்புரையாற்றுகின்றார்.

'கம்பர்' கருத்தரங்கில்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமையுரையாற்றுகின்றார்



திரு கு. இராசவேலு அவர்கள்
'கம்பர்' பற்றி ஆய்வுக் கட்டுரை படிக்கின்றார்



கருத்தரங்கப் பேரவையினர் — டாக்டர் கே. கே. பிள்ளை, பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், பேராசிரியர் மா. கி. தசரதன், சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர், பேராசிரியர் பெ. திரு. ஞானசம்பந்தம் முதலானோர்.

கருத்தரங்க நூற்காட்சி.



கருத்தரங்க நூற்காட்சி.

'வில்லிபுத்தூரர்' கருத்தரங்கிற்குப்
பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் தலைமை தாங்குகிறார்.



'ஒட்டக்கூத்தர்' கருத்தரங்கிற்குப்
பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன் தலைமை தாங்குகிறார்.

'செயங்கொண்டார்' கருத்தரங்கிற்கு
மாண்புமிகு சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள்
தலைமை தாங்குகிறார்.

'சித்தர்கள்' கருத்தரங்கிற்கு ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனர் அவர்கள் தலைமை தாங்குகிறர்.



'பவணந்தியார்' கருத்தரங்கிற்கு
டாக்டர் இரா. சீனிவாசன் அவர்கள் தலைமை தாங்குகிறர்.



'தமிழ் நிகண்டுகள்' கருத்தரங்கில் பெரும்புலவர்
மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.

'தமிழ் இசை நாடக நூல்கள்' கருத்தரங்கில்
கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.

'வீரமாமுனிவர்' கருத்தரங்கில்
திருமதி. மேரி கொர்னீலியசு அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறுர்.

'உமறுப்புலவர்' கருத்தரங்கில் உயர்நீதிமன்ற நடுவர்,
மாண்புமிகு எம். எம். இஸ்மாயில் அவர்கள் தலைமையுரை ஆற்றுகின்ருர்

கருத்தரங்கக் கட்டுரையாளர்கள்



திரு. கு. இராசவேலு



டாக்டர் மு. கோவிந்தசாமி



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்



திரு. க. ப. அறவாணன்



திரு. இரா, மாணிக்கவாசகம்

பேராசிரியர் திரு மா நன்னன்



பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி

டாக்டர் இரா. குமரவேலன்



தவத்திரு டாக்டர்
வி. மி. ஞானப்பிரகாசம்

பேராசிரியர் சி. நயினர் முகம்மது